# சந்திரமதி

(சமூக நாவல்)

தஞ்சைப் பல்கலைக்கழகத்
தமிழன்னை விருதுபெற்ற

**கலைமாமணி விக்கிரமன்**

விக்கிரமன் பதிப்பகம்
2, ஜயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.

27897
4289006

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | சந்திரமதி |
| ஆசிரியர் | : | கலைமாமணி விக்கிரமன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 1998. |
| பதிப்பு விவரம் | : | முதற்பதிப்பு ஆகஸ்ட் 1998 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 11.3 Kg. வெள்ளைத் தாள் |
| நூல் அளவு | : | கிரௌன் சைஸ் (12.5 x 18.5 செ.மீ.) |
| அச்சு எழுத்து | : | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | 374 + 16 |
| நூலின் விலை | : | ரூ. 72.00 |
| நூல் கட்டுமானம் | : | தையல் |
| லேசர் முறையில் அச்சுக் கோத்தவர்கள் | : | கவிராஜ் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ், கோடம்பாக்கம், சென்னை-24. |
| அச்சிட்டோர் | : | மணி ஆப்செட், சென்னை-600 005. |
| வெளியிட்டோர் | : | விக்கிரமன் பதிப்பகம், சென்னை-600 033. |




## சிறுகதை எழுத்தாளர் திரு. பெ. ராஜகோபால் (ராஜ்) கருத்துரை

கற்பனைகள் காரண காரியத்துடன் அமைய வேண்டும்.

ஆனால் நிகழ்வுகளுக்கு அந்த நியதியோ நிர்ப்பந்தமோ கிடையாது.

ஆகவே தான் நிகழ்வுகள் கதை உருவமும் எழுத்து வடிவமும் பெறும்போது உண்மைக் கதைகள் என அழைக்கப் படுகின்றன.

'சந்திரமதி' அப்படியொரு கதை.

இக்கதைக்கு ஆசிரியர் ஏன் இப்படியொரு பெயர் கொடுத் தார் என்று சிந்திக்கும்போது, அவருடைய கற்பனை வளமும், வரலாற்றுக் கதாபாத்திரங்களுக்கும் கூட நியாயம் வழங்கப்பட வேண்டும் என்ற அவருடைய ஆதங்கமும், அபிலாஷையும், சீர்நோக்குப் பார்வையும் நிதர்சனமாகின்றன.

இந்தப் புதினத்தைப் படிக்கும்போது கணவன் அரிச்சந்திர னின் நேர்மையால் கொள்கைப் பற்றினால் மௌனமாக வாடி வதங்கி, அல்லல்பட்டு அவதியுறும் சந்திரமதியை நினைக்காம லிருக்க முடியவில்லை.

அந்தச் சந்திரமதியைக் கருத்திலேற்றி, அவள்பால் இரக்கம் கொண்டு அவளுக்குப் புரட்சி உடை அணிவித்து பாரதியின் புதுமைப் பெண்ணாக்கி யிருக்கிறார் ஆசிரியர்.

ஒரு சாதாரண மில் தொழிலாளியின் மகள், கல்யாண அரங்கிலே ஒரு சதுரங்கக் காயாக ஆக இருப்பவள் எப்படி மாற்றம் கொள்கிறாள்? எவ்வளவு சாதுரியத்துடன் மனோ திடத்துடன் இடர்களை எதிர்கொண்டு தன்னை விரும்பிய வனையே சேர்ந்து சமூகத்தின் வஞ்சகங்களை முறியடிக்கப் போராடுகிறாள்?

இப்புதினத்தின் இரு சிறந்த பாத்திரப் படைப்புகள் - ஒன்று சந்திரமதி, மற்றொன்று மேகலா.

மேகலா சந்திரமதியின் தோழி. அவள் சந்திரமதி தன் காதலனைப் போய்ச் சேரவும், அவள் நல்வாழ்வு காணவும் பல எதிர்ப்புகளையும் மீறிச் சந்திரமதிக்குப் பல உதவிகள் புரிகிறாள். "உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது" என்றான் கவிஞன். ஆமாம், "அது வாஸ்தவம்தான்" என்கிறார் கதாசிரியர் மேகலா மூலம்.

இக்கதையில் வரும் பெண்களெல்லாம் போராட்ட நாயகிகள். காதலன் கரம் பிடித்து நல் இல்லறம் காண அவனை நல்வழிப்படுத்தப் போராடுகிறாள் சந்திரமதி. அவளுக்கு உதவ அவளுடைய ஆருயிர்த் தோழி மேகலா பல போராட்டங்களைச் சந்திக்கிறாள். தன் மகள் தகுதியவற்றவனை மணக்கலாகாது எனப் போராடுகிறாள் சந்திரமதியின் தாய். மேகலாவின் தாயோ, தன் தோழி சந்திரமதிக்காக அலைந்து திரிந்து மெழுகுவர்த்தியாக உருகிப்போய்விடப் போகிறாளே எனப் போராடுகிறாள்.

பெண்களெல்லாம் போராட்ட வீராங்கனைகளாக விளங்கும் இப்புதினத்தில் வரும் ஆண்கள்? அவர்களைப் பற்றி விவரித்து இப் புதினத்தைப் படிக்க இருப்போரின் சுவையை நான் குறைக்க விரும்பவில்லை.

அப்படியென்றால் இதுவரை விவரித்தனவெல்லாம் என்ன நியாயம் என்று கேட்டால், அதற்குப் பதிலாக கதாசிரியர் புதினத்தில் எழுதியுள்ள சில வரிகளைச் சுட்டிக்காட்டி நான் தப்பிவிட முடியும்.

புதினத்தில் ஒரு பகுதி -

சந்திரமதிக்காக அவள் காதலன் எழுதிய கடிதம் மேகலாவின் கையில்.



அப்போது ஆசிரியரின் ரஸமான கற்பனையைக் காதலன் அசை போடுகிறான்.

"அவளுக்கு எழுதிய கடிதத்தைப் பாதிவழியில் மேகலா பிரித்துப் படித்தால்? ஸ்வீட் பாக்கெட்டைத் திறந்து, அதிலிருந்து சிறு விள்ளலை எடுத்துச் சுவைப்பது போல் சுவைத்துப் போகட்டுமே! இனிப்புப் பொட்டலத்திலிருந்து சிறு விள்ளல் எடுத்தால் கூடத் தெரிந்து விடும், காதல் கடிதத்திலிருந்து அப்படி இல்லை. படிக்கட்டும், படித்துப் பார்த்து, சிலிர்த்துப் போகட்டும்!"

என்ன கற்பனை நயம்?

சந்திரமதி - இது தமிழ்ச் சினிமாப்போல் வெறும் காதல் கதை அன்று. இதிலே பல சமுதாய சமகாலப் பிரச்னைகள் பல பாத்திரங்களின் வாழ்க்கைகளுடன் பின்னிப் பிணைந்து அவர்களை வேகமாகச் செயல்பட விடாமல் செய்கின்றன.

இது, கலை, இலக்கியம், விளையாட்டுகள் எல்லாவற்றிலும் அரசியல் கோலோச்சும் காலம். இக்கதையிலும் சமகாலப் பிரச்னைகளின் பின்னணியில் அரசியல் இழை பலமாக ஓடுகிறது. அதை வெளிப்படுத்தும் ஆசிரியர் கதையின் ஓட்டம் அது எந்த விதத்திலும் பாதிக்காமல் பார்த்துக் கொள்கிறார். அப்பிரச்னைகளை விவரிக்கும்போது தன் மனக் குமுறல்களை, எண்ணச் சிதறல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் ஆசிரியர், 'முன்னேற்றம், முற்போக்கு' என்று அரற்றும் மனிதர்கள் எப்படிப்பட்ட போலிகள் என்று அவர்களின் முகத்திரையைக் கிழித்து அடையாளம் காட்டுகிறார்.

சந்திரமதி - தமிழ்ப் படைப்பிலக்கிய நங்கைக்கு ஆசிரியர் சூட்டும் நல்லதோர் அணிகலன். ●

ஸ்ரீ

# எண்ணம்

'பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா' என்றார் மகாகவி பாரதியார். பெண்களும் வாழ வேண்டும்: பெண்மையும் வாழ வேண்டும். அதற்கென்ன வழி? ஆண் ஆதிக்கம் ஒரு காரணமாக இருக்குமோ? ஆண் ஆதிக்கத்திற்கு அடி பணிவதற்கு இசைவதனால் பெண்ணும் ஒரு காரணமாக இருக்கலாமோ?

'பெண்ணாகப் பிறந்து விட்டால் மிகப் பீழை இருக்குதடி' என்று நிஜத்தைப் பாரதியார் கூறியுள்ளார். தொல்லை, துன்பங்கள் பெண்கள் பிறக்கும்போதே உடன் பிறந்து விடுகின்றன. அதை எப்படித் தடுப்பது?

நிமிர்ந்த நன்னடையுடன் ஒரு பெண் வாழ முயன்றாலும் அவள் எங்கோ ஓரிடத்தில் ஆண்கள் வலையில் சிக்கி விடுகிறாள். தெரிந்தோ தெரியாமலோ அவளுக்குத் தொல்லைகள், துன்பங்கள் தொடர்கின்றன.

மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டும் என்று, மிகவும் புனிதமான பிறவி பெண் பிறவி என்று, போற்றிப் புகழ்ந்தாலும், கடவுள் தத்துவத்தில் பெண் தெய்வம் உயர்ந்தது: சக்தி வாய்ந்தது என்று எல்லாரும் நம்பினாலும், பெண்களுக்கென்று ஏற்படும் தொல்லை, துயர், இடர்ப்பாடுகள் நீங்க வழியொன்றும் இல்லையே!

இதிகாசப் பெண்களான சீதை, அகல்யை, பாஞ்சாலி, காவியப் பெண்ணாகிய கண்ணகி, வரலாற்றுப் பெண்மணி மீனாட்சி - அரசி முதல் இந்திரா காந்தி வரை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத் தொல்லை, துயரம் ஏற்பட்டதைப் படித்திருக் கிறோம். அன்னை கஸ்தூரிபா படாத பாடா?





காதல் காப்பியங்கள் பெண்களை உயர்த்தினாலும் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை - ஆண்களால் ஏற்படும் இடர்களை, நீக்க வழியொன்றும் அவற்றிலிருந்து காண முடியவில்லை. காப்பியங்கள், புதினங்கள், சிறுகதைகளில் காதல் புனிதப்படுத்தப் படுகின்றன. ஆனால் விளைவு?

'சந்திரமதி' என்ற சமூகப் புதினத்தை நான் வேறு புனை பெயரில் எழுதினேன். 'நான்' எழுதுகிறேன் என்றால் முகஸ்துதிக்காக, நவீனத்தில் உள்ள குறைபாடுகளை மறைத்துப் புகழலாம் என்பதற்காக 'விசித்திரச்சித்தன்' என்ற பெயரில் எழுதினேன். வரவேற்பைக் கூர்ந்து கவனித்தேன். 'சந்திரமதி' கதைப் பாத்திரத்தின் மீது அனுதாபங் கொண்டவர்கள் அதிகம். 'தமிழ்' என்ற பெயருடைய கதைத் தலைவனைக் கடைசிக் கட்டத்தில் இப்படி மாற்றியிருக்கக்கூடாது: சந்திரமதி அவனுக்குக் கொடுத்த தண்டனை அதிகம் என்று பலர் கூறினர். காதலனுக்கு இப்படி ஒரு தண்டனையா என்றனர். இப்படி ஒரு நல்லவனாக இருந்தவனை ஏன் மாற்றிவிட்டீர்கள்? என்று கேட்டவருமிருந்தனர்.

கதையை அப்படி முடிப்பதைத் தவிர வேறு எந்தவிதமும் எனக்குத் தோன்றவில்லை. ஏன் மாற்றினேன்? நானா மாற்றினேன்? கதைப் பாத்திரப் போக்கு அப்படி.

வரலாற்றுக் கதாசிரியர் என்ற 'ஐ.எஸ்.டி' முத்திரை எனக்குக் குத்தப்பட்டாலும் என் உள்ளம் இன்றைய சமூகத்தைச் சுற்றியே அலைகிறது. என் தாய், சகோதரி, மனைவி, தோழி ஆகியோர் துயரப்படும்போது என் கண்ணில் நீர் வடிவது இயற்கை.

இந்தப் புதினத்தைப் பற்றிய கருத்தைச் சக எழுத்தாளர் சிலரிடமிருந்து அறிய விரும்பினேன்.

நாடக ஆசிரியர் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன், சிறுகதை எழுத்தாளர் திரு. ராஜ் (ஏ.வி. ராஜகோபால்), கவிஞர் பகவானந்த

தாசன், கட்டுரையாளர், பாரதி பணிச்செல்வர் திரு. நீலவன், ஓவியர் சிவகுமார் ஆகிய இப்படி சக எழுத்தாளர்களிடம் 'சந்திரமதி' நாவலைப் படித்துக் கருத்து எழுதச் சொன்னேன். அவர்களைப் படிக்க வைக்க வேண்டுமென்பதே என் முதன்மை நோக்கம். விரைவில் கருத்தை எழுதி வழங்கினார்கள்.

மேலட்டையை திரு. ஜி.கே.மூர்த்தி சிறப்பாக வரைந்துள்ளார். ஒருமுறைக்கு இருமுறை 'மெய்ப்பை'ப் பார்த்துத் தந்தவர்கள், திரு. கு. சண்முகசுந்தரம், கவிமாமணி நா.சீ. வரதராஜன். அவர்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

'சந்திரமதி'யில் வரும் கதைப் பாத்திரங்களை நீங்கள் எங்கோ சந்தித்தோ, அவர்களைப் பற்றிக் கேட்டறிந்தோ இருப்பதுபோல் தோன்றுகிறதா? உலகில் அப்படித்தான் நடக்கிறது என்று சொல்கிறீர்களா?

ஆம் என்றால் இப்புதினம் வெற்றியே!

- கலைமாமணி விக்கிரமன்



# பதிப்புரை

கலைமாமணி விக்கிரமன் அவர்கள் 55 ஆண்டுகளாக எழுதிவருபவர். 'அமுதசுரபி' இலக்கிய இதழில் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராகப் பணியாற்றி வருபவர். அனைத்திந்திய எழுத்தாளர்கள் சங்கத் தலைவர். பல்வேறு சமூக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டவர். அவர் எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்தவரல்லர். தமிழும், நாடும், மக்களும் உயரவேண்டும் என்ற பெருநோக்கு கொண்டவர்.

வரலாற்றுப் புதினங்கள் 32க்கு மேல் எழுதிய அவருடைய முதல் புதினம் 'இதயபீடம்' எனும் சமூக நாவலே. சமூகத்தின் பல்வேறு கோணங்களைக் கூர்ந்து நோக்கித் தன் கதையில் அவர்களைக் கதைமாந்தர்களாக மாற்றி அளிக்கும் ஆற்றல் மிக்க படைப்பாளர்.

'பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா' என்ற மகாகவியின் இலட்சியப்பிடிப்பு, ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக வாழவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டவர்.

'சந்திரமதி' - சமூகப் புதினத்தில் பெண்மையின் உயர்வைக் காண்கிறோம். காதலுக்காக எவ்வளவோ தியாகம் செய்யத் தயாராயிருக்கும் பெண் குலப் பிரதிநிதியான சந்திரமதி பாத்திரத்தின் சிறப்பைக் காண்கிறோம்.

ஆசிரியரின் இலக்கிய வேகம் இந்தப் புதினத்தில் ததும்பி நிற்கக் காண்கிறோம். தமிழ் வாசகர் உலகம் விக்கிரமனின் இந்தச் சமூக நாவலையும் பெரிதும் வரவேற்கும் என நம்புகிறோம்.

- பதிப்பகத்தார்.



27897
428006

# சந்திரமதி

## ஒன்று

பூட்டிக் கிடந்த கடையின் விசாலமான படிக்கட்டின் ஓரமாக உட்கார்ந்து கொண்டு பீடியைப் பற்ற வைத்துச் சுவாரஸ்யமாக இழுத்துப் புகையை விட்டுக் கொண்டிருந்தான் பக்கிரி.

இருள் அப்போதுதான் விலகி வெளிச்சம் மெல்லப் பரவத் தொடங்கியிருந்தது. சந்தடி மிகுந்த அந்தத் தெருவில், வாகனங்களின் இரைச்சல் இன்னும் தொடங்கவில்லை.

ஓரிரு லாரிகள் மிக அவசரமாகக் கரும் புகையைக் கக்கி சுற்றுப்புறத்திற்கு மாசு விளைவித்தபடி பறந்து கொண்டிருந்தன. காய்கறி மூட்டையை ஏற்றிச் செல்லும் டெம்போவின் மீது காய்கறி விற்கும் 'சின்ன முதலாளிகள்' உட்கார்ந்து பாதித் தூக்கத்தில் ஆடி விழுந்து கொண்டிருக்க, டெம்போ ஓடிக் கொண்டிருந்தது.

சாலையின் எதிர்ப்பக்கம் டீக் கடை ரேடியோவிலிருந்து ஓர் இந்திப் பாட்டு அலறிக் கொண்டிருந்தது. 'டொக், டொக்' என்று டீ அடிக்கும் ஓசை அந்தக் கடையிலிருந்து விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

கடைசி 'இழுப்பை' முடித்துக் கொண்டு பீடியை வீசி விட்டு இருமியவாறு சுற்றும் முற்றும் பார்த்தான் பக்கிரி. 'ஒரு சிங்கிள் டீ குடித்தால் நன்றாயிருக்கும்.'

ஹூம்! நன்றாயிருக்காது என்று யார் சொன்னார்கள்? வீட்டிலிருந்தால் இந்த நேரத்துக்கு 'தே கண் முழி – டீ குடிச்சுட்டுத் தூங்கு' என்று சந்திரமதி உலுக்குவாள், செல்லமான அந்தக் குரலையும் மீறி உறக்க தேவதையின் அணைப்பிலிருந்து விடுபட முடியாமல் பக்கிரி தவிப்பான்.

லோட்டாவை எடுத்துக் கொண்டு அவனுக்காக காக்கா கடைக்குப் போய் சந்திரமதி டீ வாங்கி வந்திருப்பாள். அந்தப் பத்தடிக் குச்சுக்குள் அவன் போர்வையால் தலை முதல் கால் வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு சுருண்டு படுத்திருப்பான்.

அவனும் அவளும் அப்படி நெருக்கடியாகக் காலை நீட்டக்கூட முடியாமல் படுக்க வேண்டிய அவசியமில்லை. உம்; எல்லாம் கால வித்தியாசம்தான்!

அவன் இரண்டு மணி இரவு 'ஷிப்டு' முடித்து அந்த ஓட்டை சைக்கிளை மிதித்து வருவதற்குள் அரைமணி நேரமாகிவிடும். சந்திரமதி குடிசைக்கு வெளியே மண் திண்ணையில் அவனுக்காக முழங்காலில் தலையைப் புதைத்துக் கொண்டு தூங்கி வழிந்தவாறு காத்திருப்பாள்.

"இந்த ராவு ஷிப்ட் இல்லாம பகல் ஷிப்ட் கொடுக்க மாட்டாரா மேஸ்திரி?" அவளுடைய வழக்கமான பல்லவி.

"கேட்டுட்டுத்தானிருக்கேன். அவரைக் கொஞ்சம் கவனிக்கணும். அப்போ மாத்திக் கொடுப்பாரு!"

"கவனிக்கணுமா?" என்று சிரித்து ஓரக்கண்ணால் சந்திரமதி பார்த்தாள்.

சைக்கிளை அருகே உள்ள திண்ணை மீது சாய்த்துவிட்டு அவன் உள்ளே சென்றான்.



அவனுக்காக கிண்ணியில் கொஞ்சம் சோறு வைத்திருப்பாள். 'இன்னா ஊறுகாதானா? நெத்திலி ஒண்ணுமில்லையா?' என்று முணுமுணுப்பான். பிறகு, அவன் படுப்பான். அவளிடமிருந்து பதிலை எதிர்பார்க்காமல் அவன் காலை நீட்டிப் படுக்க முயல்வான். அவன் அருகே அவள் வருவதற்குள் குறட்டை ஒலி சுருதி கூட்டிவிடும்.

'இதே பொழைப்புதான். தினம் இரண்டு மணிக்கு வருவது. காலையில் எட்டு மணி வரை தூங்குவது. பிறகு வெளியே வந்து அவனுக்காகக் காத்திருக்கும் நண்பர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டு சைக்கிள் கடைக்குச் செல்வது. வீதியை அளப்பது போல் சுற்றுவது. நற்பணி மன்றத்துக்குச் சென்று, செய்தித் தாளை ஒரு முறை புரட்டுவது, ஊர்வம்பை உரக்கப் பேசுவது. – திரும்பி வரும்போது பகல் இரண்டு – மூன்று மணியாகிவிடும்!'

சந்திரமதிக்கு அந்தப் 'பிழைப்பு' ஆறுமாதமாகப் பழகி விட்டது. அந்த வாழ்க்கைக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டுவிட்டாள்.

அவளுடைய தந்தை வேலுவும் அந்த மில்லில் தான் வேலையாக இருந்தார். முப்பது வருட சர்வீஸ். பதினான்கு ரூபாய்க்குப் போய்ச் சேர்ந்ததாகச் சொல்வார். இப்போது எண்ணூறு ரூபாய். அந்தக் குறைந்த வருமானத்தை வைத்துக்கொண்டு மூன்று – நான்கு குழந்தைகளையும் அவர் மிகவும் கஷ்டப்பட்டுக் காப்பாற்றிக் கொண்டு வந்தார். மில் முதலாளிகள் தங்கள் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளில் மகத்தானது என்று விளம்பரப்படுத்திக் கொள்ளும் 'குவார்ட்டர்ஸ்' எனப்படும் புறாக்கூண்டு ஒன்றைக் கொடுத்திருக்கிறார்களோ, பிழைத்தாரோ! அவர் மனைவி பாப்பாத்தியின் கடும் உழைப்பு அந்தக் குடும்ப வண்டி அச்சாணி முறியாமல் நகர்வதற்குக் காரணம்.

அவருக்கு ஏதேதோ கனவு. வறுமை இருப்பதால் கனவு வரக்கூடாதா? சொந்த வீடு. கிராமத்தில் ஒரு காணி நிலம். மகனை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். பெண்ணுக்கு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்துக் கல்யாணத்தைச் செய்து வைக்க வேண்டும்.

வீட்டு வாசலில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு அவர் கனவு காண்பார். திட்டமிடுவார். அவர் மனைவியும் அவருடைய கனவுகளுக்கு 'உம்' கொட்டுவாள்.

தன் மனைவியுடன் மனம்விட்டுப் பேசுவது அவருக்குப் பிடிக்கும். அவர்கள் பேசி முடிப்பதற்குள் பிள்ளை - பெண்கள் குறட்டைவிட்டுத் தூங்கத் தொடங்கி விடுவார்கள். பிறகுதான் இருவரும் உள்ளே செல்வார்கள். ஒரு படுக்கை அறை - ஒரு சின்ன 'ஹால்' எனப்படும், 'ரிசப்ஷன் அறை!' சிறிய சமையல் அறை. பிறகு, திறந்த வெளியுடன் கூடிய புழக்கடை. 'காம்பவுண்ட்' சுவர். வீட்டைப் பாதுகாக்கும் மங்களூர் ஓடு வேய்ந்த கூரை!

பாப்பாத்தி! - எவ்வளவோ தடவை வாழ்நாளில் பல தடவை அவர் தன் துணைவியைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்: "பாப்பாத்தி'ன்னு உனக்கு யார் பேரு வெச்சாங்க? அதென்ன பாப்பாத்தின்னா ஒசத்தியா?"

அவளுக்கே தெரியாது. அது ஒரு சாதிப்பெயர் என்று அவள் நினைக்கவில்லை.

"ஏன் வெச்சாங்கன்னு எங்க பாட்டியைத் தான் கேக்கணும். பச்சையம்மா - சிவப்பி - கருப்பாயி - மாதிரின்னு நினைச்சுக்குங்க" என்று கூறி அந்தப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுவாள்.

"நீ பேரை மாத்திக்க - சாதிப் பேரெல்லாம் வச்சிண்டு. பார்வதின்னு இனி கூப்பிடப் போறேன்."

"அதுகிடக்கட்டுங்க பேரு மாத்தறதுதானா இப்ப முக்கியம்? என்ன வேணும்னா கூப்பிடுங்க. மகளுக்குத்



தான் சந்திரமதின்னு நல்ல பேரா வச்சிருக்கமே. சந்திரமதியை நல்ல இடமாப்பார்த்துக் கட்டிக் கொடுத்துடணும். நீங்க ஏதாச்சும் மனசுலே திட்டம் வச்சிட்டிருக்கிங்களா?" என்று கேட்ட அவன் மனைவி, அவரிடமிருந்து என்ன பதில் வருகிறதென்று அவர் முகத்தை மங்கிய நிலா வெளிச்சத்தில் உற்றுப் பார்ப்பாள்.

அவர் எங்கோ யோசிப்பது போல் இருந்து விட்டு, தலையை ஆட்டி, "நான் குறி வைச்சிருக்கேன். அது தப்பாமல் இருந்தால் எல்லாம் நல்லபடியா முடியும்" என்று பேச்சைச் சிறிது நிறுத்துவார். வெற்றிலையை உமிழ்ந்து விட்டு வருவார். கொப்பளிக்கச் செம்பில் தண்ணீர் இருக்கும். வெற்றிலை போட்டுக் குதப்ப வேண்டியது, வாயைக் கொப்பளிக்க வேண்டியது. மறுபடியும் சுண்ணாம்பு தடவி வெற்றிலை...

"பெரியபாளையத்து அம்மா கிருபையிலே எல்லாம் நல்லபடியா முடியும். நீங்க எந்த வரனை மனசில நினைச்சிட்டிருக்கிங்க?"

"எங்க சூப்பர்வைசரின் இரண்டாவது மகன். பார்க்க நல்லாயிருக்கான். அடுத்த வருஷம் மெடிக்கல் காலேஜ் இடம் புடிக்கணும்."

"ரொம்பப் பெரிய இடமாச் சொல்றீங்களே?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. நம்ப சந்திரமதியை எப்படியாவது தம் மகனுக்குக் கல்யாணம் கட்டி வைக்கணுங்கறது அவர் ஆசை. அவரும் இரண்டு வருஷத்திலே ரிடையர் ஆகப் போறாரு. ஒரே ஒரு கண்டிஷன் போடறாரு."

"என்னா கண்டிஷன்? நகை நட்டெல்லாம் நிறையப் போடணுமா?" பாப்பாத்தி என்றழைக்கப்படும் பார்வதி நெற்றியைச் சுருக்கிக் கொண்டாள். அவருடைய கால்விரலைச் செல்லமாகச் சொடுக்கினாள்...

“அதெல்லாம் இல்லே. புள்ளையின் மெடிகல் காலேஜ் படிப்புச் செலவை நாம பாத்துக்கனுமாம். கல்யாணச் செலவெல்லாம் அவரு பாத்துப்பாராம். எப்படியாவது ஒரு சிட்டுக்கு இப்ப புடிச்சே ட்ரை பண்ணி வைக்கச் சொல்றாரு. ரொம்ப ஐஸ் வைக்கறாரு. நான் முயற்சி பண்ணினா முடியுமாம்!”

பார்வதி காவிப் பல்லைக் காட்டிச் சிரித்தாள். “நீங்க என்னா மினிஸ்டரா மெடிக்கல் சிட் வாங்க?”

“போடி பைத்தியம்! நான் இந்த வட்டச் செயலாளரு இல்லையா? எனக்கு ஒரு கோட்டா உண்டாம்!”

“ஓ! அப்படி வர்றாரா உங்க மேஸ்திரி? என்னா சொல்லி யிருக்கிங்க?”

“பாக்கலாம்னு. உடனே பிடியைக் கொடுத்துடலாமா?”

இப்படிச் சொன்னாரே தவிர, அந்தக் கணத்திலிருந்து மெடிக்கல் சிட்டை வாங்க அடித்தளங்கள் போடத் தொடங்கினார். ‘கல்யாணத்தை எந்த மண்டபத்தில் வைத்துக் கொள்வது; யார் கச்சேரியை வைத்துக் கொள்வது; லைட் மியூசிக்கா; பட்டிமன்றமா?’ என்றெல்லாம் திட்டமிடலானார்.

‘ஏங்க?.. பேண்டு வாத்தியம் வைக்கனுங்க; மாப்பிள்ளை அழைப்புக்கு!”

“மாப்பிள்ளை அழைப்பா? அதெல்லாம் நம்ம வழக்கமில்லையே!”

“முதலியார் வீட்டுக் கல்யாணத்திலே மாப்பிள்ளை அழைப்பைப் பெரிய ஊர்வலம் மாதிரி நடத்தினாங்களே பாத்திங்களா?”

“வாண வேடிக்கை. டப்பாங்குத்து ஆட்டம். மேள வாத்தியம்னு முதலியாரு தூள் கிளப்பினாரு. நம்மகிட்ட பிளாக் மணியா இருக்கு?”



“வாணவேடிக்கை. ஆட்டம்-பாட்டம் வேண்டாங்க. நல்ல பேண்டு வாத்தியம்?”

பார்வதியும் - வேலுவும் - மகள் சந்திரமதியின் கல்யாணத்தைப் பற்றிக் கோட்டை கட்டலானார்கள்.

ஆனால், சந்திரமதியின் கனவும் கற்பனையும் வேறுவிதமாக இருந்தன. அப்பாவும் அம்மாவும் தன் கல்யாணத்தைப் பற்றிக் கோட்டை கட்டுவதை அவள் சில தடவை கேட்டிருக்கிறாள். கேட்கவேண்டும் என்று ஆவலில் கேட்கவில்லை.

அவளுக்குக் கல்யாண ஆசை உள்ளத்தில் துளிர்விட்டது. தன் இலட்சியக் கணவனைப் பற்றி அவள் கனவு காணத் தொடங்கினாள்.

அவளுடன் படிக்கும் மேகலாவுடன் அவள் இப்போது பேசுவது கல்யாணத்தைப் பற்றியும் - வருங்காலக் கணவரைப் பற்றியும்தான்!

“இல்லைப்பா, எங்க வீட்டுலே பாதர் - மதர் சொல்லிட்டாங்க. நான் ரொம்ப சின்னப் பொண்ணாம். மேலே படிச்சு இருபத்தஞ்சு இருபத்தாறு வயசுலேதான் மாப்பிள்ளை பார்ப்பாங்களாம்!” மேகலா சொல்லவும்.

சந்திரமதி சிரித்தாள்.

“இப்போ உனக்கு என்ன வயசு?”

“வயசைப் பத்தி என்ன? எனக்குக் கல்யாண நினைப்பே வரவில்லை. புருசன் என்கிற பந்தத்தால் பிணைக்கப்பட்டு, அம்மாவைப் பிரிந்து இருப்பதா? எனக்கு அதிலெல்லாம் ஆசை இல்லைப்பா!”

மேகலாவின் பதில் சந்திரமதியின் உற்சாகத்தைக் குறைத்தது. மேகலா அவளை உற்றுப் பார்த்தாள்.

“என்னப்பா? கல்யாண ஆசையா? ஏதாவது லவ்வா? எனக்குத் தெரியாம யாரை லவ் பண்றே? எங்கே

போனாலும் நீயும் நானும் ஒண்ணாத்தானே போறோம்? எனக்குத் தெரியாமே யாரு நிழல் போல உன்னைப் பின் தொடருவது?"

சந்திரமதி பதிலேதும் சொல்லவில்லை. மேகலாவிடம் அவள் மறைத்து வைத்த செய்தி எதுவுமில்லை. உடலில் ஏற்பட்ட மாற்றத்தை மறைக்க முடியாது. ஆனால் – அவள் உள்ளத்தில் ஏற்பட்ட திடீர் மாறுதலை அவள் மேகலாவிடம் சொல்லவில்லை.

பக்கிரியை அவள் ஒரு சைக்கிள் கடையில் சந்தித்ததிலிருந்து, அவள் மனத்தை அவன் களவாடியிருக்க வேண்டும்!

## இரண்டு

அந்த நெடுஞ்சாலையில், போக்கு வரத்துச் சந்தடி மெல்லமெல்ல அதிகமாகி வந்தது. அவன் உட்கார்ந்திருந்த கடைப் படிக்கட்டுகளைப் பெருக்குவதற்கு வேலைக்காரி சின்னப் பொண்ணு வந்துவிட்டாள்.

பெயர்தான் சின்னப் பொண்ணு. வயது அவளுக்கே தெரியாது. எழுபதைத் தாண்டியிருக்கலாம். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு அந்தச் சாலையில் டிராம் ஓடிக் கொண்டிருந்ததை அவள் நினைவுபடுத்திச் சொல்கிறாள். கரி பஸ்ஸைப் பற்றிச் சொல்கிறாள்.

"நல்லமழை. ஒருநாள் ராவு திடீர்னு பெரிய சப்தம். ஜப்பான்காரன் குண்டு போட்டுட்டு ஓடிப் போயிட்டான்" என்று அவள் வர்ணிக்கும்போது பழைய கதையைச் சுவையுடன் கேட்டு ரசிப்பவர்கள், அவள் வயதைப் பற்றி மெல்லக் கேட்பார்கள்.



"வயசைப் பத்தி இப்போ நெனைச்சு என்ன பண்றது? ஆண்டவன் சீட்டை என்னைக்குக் கிழிக்கப் போறானோ? இத்தனை வயசுன்னு எப்பவோ முடிவு செஞ்சிருக்காரு. உம்; விட்டுத் தள்ளு" என்று சொல்லிக் கொண்டே போனவள் மறுபடியும் திரும்பிவந்து, "ஜப்பான்காரன் குண்டுபோட்ட போது எனக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தை பொறந்திடுச்சு" என்பாள்.

அவளுக்குக் கல்யாணம் ஆனபோது என்ன வயது; ஒரு குழந்தை பிறந்த போது என்ன வயது; ஜப்பானியர் குண்டு போட்டது எந்த ஆண்டில்? அதைக் கூட்டிக் கழித்து சின்னப் பொண்ணின் வயசை ஆராய ஒரு குழுவை நியமிக்க வேண்டும்!

வயது எழுபதோ – எழுபத்தைந்தோ எண்பதோ சின்னப்பொண்ணு உழைச்சுப் பிழைக்கிறாள். அங்கே வரிசையாக உள்ள கடை வாசல்களைப் பெருக்கித் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டு முடிக்கும் போது, ஒவ்வொரு கடையாகத் திறந்து விடுவார்கள்.

"எம்ப்பா தம்பி! இங்கே உக்காந்து பீடி புடிச்சு எச்சில் துப்பறியே, உனக்கே நல்லாருக்கா? லட்சுமி வரணும்னு நான் கடைவாசலைக் கழுவிக் கோலம் போட வந்தா உன் எச்சிலை யாரு கழுவறது?" – சின்னப்பொண்ணு பக்கிரியைப் பார்த்து முணுமுணுத்துக் கொண்டே தன் வேலையில் முனைந்தாள்.

ஆமாம் அவன் இரண்டு – மூன்று பீடிகளைப் பிடித்து பாதி பாதியாக வீசியிருக்கிறான். அவனுக்கே சிரிப்பு வந்தது. இந்தப் பழக்கம் எப்படி வந்தது? எப்போதாவது சிகரெட் பிடிப்பான். அதுவும் சந்திரமதியைச் சந்தித்த பிறகு சிகரெட் பிடிப்பதை நிறுத்தி விட்டான்.

"உன்கிட்டே எனக்கு எல்லாம் பிடித்திருக்கு. ஆனா?..." என்று ஒரு சமா போடுறாளே அடுத்து என்ன சொல்லப் போறாளோ..?"

ஒருவேளை பெயரைப் பிடிக்கலைன்னு சொல்லிவிடப் போறாளோ?

அவன் என்ன செய்வான்? பக்கிரி என்ற திருநாமத்தைச் சூட்டியவள் அவனுடைய தாய்.

மறுமலர்ச்சி நண்பர்கள் மன்றத்திற்கு அவன் ஞாயிறு காலையில் நடக்கும் கூட்டங்களுக்குச் செல்வான். 'மகிழ்நன், இளங்கிள்ளி, சொல்வேந்தன், மலர்ச் செல்வன்' என்ற பெயருடன் அங்கே பலர் திப்பொறி பறக்கப் பேசுவார்கள்.

கல்வியில் பின் தங்கியவர்களுக்கும் முதியவர்களுக்கும் கல்வி கற்றுத் தர இரவுப் பள்ளிக்கூடம் நடத்துவதற்காக அந்தச் சிறு கட்டடத்தில் படிப்பகம் தொடங்கப்பட்டது. பள்ளி வகுப்பறையில் சரியாக மனத்தில் பாடத்தைப் பதித்துக் கொள்ள முடியாத இளைஞர்களுக்குப் பயிற்றுவிக்க ஒருவர் முன்வந்தார். அவரை 'அண்ணா அண்ணா' என்று இளைஞர்கள் அன்புடன் அழைத்தனர்.

பக்கிரிக்கு அவரிடம் மதிப்பு அதிகமாகியது. கல்வி அறிவில்லாதவனுக்கு இந்த உலகத்தில் இடமில்லை என்று அவர் அவ்வப்போது சொல்வது பக்கிரியின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. எப்படியாவது படித்துப் பெரிய பெரிய பட்டங்களைப் பெற வேண்டும் என்ற உறுதி அவனுக்கு ஏற்பட்டது.

காலையில் அவனை சைக்கிள் கடை ஒன்றில் வேலை செய்ய, அவன் தாய் அமர்த்தினாள். இரவில் படிப்பதற்கு அந்தப் படிப்பகத்திற்கு வந்து விடுவான். படிப்பகத்தைப் பெருக்குவது, தண்ணீர் கொண்டு வைப்பது போல், சிறு பணிகளைச் செய்வது ஹரிக்கேன் விளக்கைத் துடைத்து ஏற்ற வைத்து, மற்றவர்களுடன் சேர்ந்து படிக்கலானான். அண்ணாவின் குரலுக்கு ஏன் கேட்டு, உதவியாக இருப்பான்.



காலை முதல் மாலை வரை நொடிப் பொழுதும் வீணாக்காமல் சுறுசுறுப்பாக அவன் இயங்கி வந்ததால், உடல் ஆரோக்கியம் சீராக அமைந்தது. தோற்றப் பொலிவும் கூடியது. அரும்பு மீசை மேலும், கருகருவென வளர்ந்தது.

மீசையை எப்படி வைத்துக் கொள்வது என்ற ஆராய்ச்சியில் இறங்க வேண்டிய சூழ்நிலை அவனுக்கு ஏற்பட்டது. புதிய இளைஞர்கள் நண்பர்களாய்ச் சேர்ந்தனர். படிப்பதற்கு மின்சார விளக்கு வந்தது. படிப்பகத்தை மேலும் செப்பனிட்டு, மின் விளக்கு போட்டு உதவ செல்வாக்குள்ளவர் ஒருவர் முன்வந்தார். அவர் அந்தப் பகுதியில் புதிதாகக் குடியேறியவர். ஆள் உயரமாகவும், கம்பீரமாகவும் இருந்தார். புதிய பணக்காரர் என்ற பெயர் அவர் நெற்றியில் ஒட்டப்பட்டிருந்தது.

காலை-மாலை நாளேடுகள் வாங்க அவர் உதவி செய்தார். படிப்பகப் பெயர்ப் பலகை அருகே 'இளைஞர் முன்னேற்ற மன்றம்' என்ற பெயர்ப்பலகை மாட்டப்பட்டது.

"இளைஞர்களுக்குப் பேச்சுப் பயிற்சி தேவை; அதற்கு வேண்டிய உதவி செய்யத் தயார்" என்று உற்சாகமாகப் பேசினார் 'தலைவர்' என்று அவரை அழைக்கத் தொடங்கினார்கள். அமைதியாகக் கல்வித் தொண்டு செய்து கொண்டிருந்த 'அண்ணனின்' செல்வாக்குக் குறையத் தொடங்கியது.

பக்கிரிக்குத் 'தலைவர்' போக்குப் பிடிக்கவில்லை. காலையில் ஏழு மணிக்கெல்லாம் மன்றத்தைத் திறக்க வேண்டும் என்று தலைவர் வற்புறுத்தினார். ஆறு மணிக்குள் எல்லாச் செய்தி நாளிதழ்களும் வந்து விடுகின்றன. அவற்றைப் படிக்க வசதியாக மன்றத்தைத் திறக்க வேண்டும் என்று தலைவர் கட்டளையிடத் தொடங்கினார்.

இரண்டு நாள்கள் பக்கிரி அந்தப் பணியைச் செய்தான். மூன்றாவது நாள் சற்றுத் தாமதமாக மன்றத்தைத் திறந்தபோது, மன்றத்தின் வெளியே நின்ற – 'ஓசி'யில் செய்தித் தாள் படிக்க வந்தவர்கள், 'ஏன் தாமதம்' என்று கேள்வி கேட்கத் தொடங்கினர்.

பக்கிரி அன்புக்குக் கட்டுப்படுவான்; ஆணவத்திற்குத் தலை வணங்க மாட்டான். காலையில் ஐந்து மணிக்கு எழுந்து குளித்து விட்டு திருநீறு பூசி, பிள்ளையார் படத்திற்கு முன்பு நின்று தோத்திரம் சொல்லிவிட்டுப் பிறகு தந்தையின் படத்திற்கு வணக்கம் செய்வான். புறப்பட்டு விடுவான்.

"பக்கிரி! மறக்காமே காபி குடிச்சுட்டுப்போ. பசியோட இருக்காதே" என்று அவனது தாய் அன்புடன் சொல்லி அனுப்புவாள்.

அந்தக் குடிசை வீட்டில் பிள்ளையார் படத்திற்கு அருகே அவன் தந்தையின் படம் இருக்கும். அந்தப் படத்தைப் பார்க்கும் போதெல்லாம் பக்கிரியின் அம்மா கண்கலங்குவாள். 'அப்பாவின் ஜாடையை அச்சாகக் கொண்டிருக்கிறான் பக்கிரி' என்பதில் அவளுக்குப் பெருமை. அவர் விட்டுச் சென்ற ஒரே ஒரு சொத்து அவன்தானே! அவரைப் போலவே தலையை வாரிக் கொள்வான். இன்னும் கொஞ்சம் மீசை வளர்ந்தால் அச்சாக அவரேதான்.

'இவனாவது நன்றாகப் படித்து, முன்னேறி, குடிசை வீட்டை விட்டு, கல் வீட்டில் குடியேறி – சோற்றுக்கும், துணிக்கும் பஞ்சமில்லாமல் காப்பாற்ற வேண்டும். அதற்கு சாமியாகிவிட்ட கணவரும், அந்தப் பிள்ளையாரப்பனும் தான் அருள் செய்யவேண்டும்' என்று நாள்தோறும் பிரார்த்திப்பாள்.

பள்ளியில் சேர்த்து படிக்க வைக்க வசதியில்லை. இரவுப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கலாம் என்று அண்ணன் சொன்ன யோசனையை ஏற்றாள்.



'தனிப்பட்ட முறையில் எட்டாவது வகுப்புத் தேர்வு எழுதலாம் என்று உங்க அண்ணன் சொல்லுதுடா. ஒழுங்காகப் பரீட்சை எழுது. அதற்குள் பிள்ளையாரப்பன் கண்ணைத் தொறந்துடுவான்" என்று பக்கிரிக்குத் தாய் யோசனை கூறினாள். படிப்புடன் ஒரு கைத்தொழிலும் கற்றால் நல்லது என்று அந்தச் சிறு வயதில் அவனை எந்தத் தொழில் கற்க அனுப்பலாம் என்று சிந்தித்தாள். தையற்கடை – ஓட்டல் மெக்கானிக் ஷாப் – பலசரக்குக் கடை – அவளுக்கு எதுவும் பிடிக்கவில்லை.

அருகே உள்ள மெக்கானிக் கடையில் சிறுவர்கள் வேலை செய்வதைப் பார்த்திருக்கிறாள். எண்ணெய்ப் பிசுக்கு ஏறிய அரை நிஜாருடன், கரி பூசிய முகத்துடன் அவர்கள் இரவு பகலாக டொக் – டொக்கென்று தகரத்தைத் தட்டுவது அவளுக்குப் பிடிக்கவில்லை. மேலும், அந்த மெக்கானிக் ஷெட்டில் வேலை செய்யும் சிறுவர்களை முதலாளி தலையில் குட்டுவதும் கன்னத்தில் அறைவதும் வேலை வாங்குவதும் டீ வாங்கி வர அவ்வப்போது அனுப்புவதும் அவளுக்கு அதிர்ச்சியை அளித்தது.

"என் பக்கிரியை சீ – என்றுகூட நான் சொன்னதில்லை. அந்த மெக்கானிக், தன் ஷெட்டில் வேலை செய்பவர்களைப் பச்சை பச்சையாகத் திட்டுகிறானே? வயிற்றுக்கில்லாமல்தானே அவர்கள் அம்மாக்கள் அவர்களை அங்கே வேலை செய்ய விட்டிருக்கிறார்கள்? வாயில் எந்த வார்த்தை என்று கூட யோசிக்காமல் அம்மாவையும் அக்காவையும் அடிக்கடி அந்த மெக்கானிக் இழுக்கிறானே?" என்று பக்கத்து வீட்டுக்காரியிடம் அவள் சொல்லி வேதனைப்படுவாள்.

"வார்த்தையாலே மட்டுமா அம்மாவையும் – அக்காவையும் அந்த மெக்கானிக் இழுப்பான்? நிஜமாகவே பசங்களின் அம்மா – அக்காவையும் தன் இஷ்டத்துக்கு

அழைப்பாரு மோசமானவரு. அந்த ஆளிடம் வேலை கத்துக்கறதை விட எங்காவது பஸ் ஸ்டாண்டில் பிச்சை எடுக்கலாம்" என்று பக்கத்து வீட்டுக்காரி கூறியது கேட்டு, பக்கிரியின் தாய் மெக்கானிக் கடையில் வேலைக்குச் சேர்க்கும் எண்ணத்தை மறந்து விட்டாள்.

"எனக்கு மட்டும் உடல் நலம் சரியாக இருந்தால், என் பக்கிரியை வேலைக்கு அனுப்ப நினைப்பேனா?" – கவலையுடன்தான் சொல்வாள். பக்கிரியை என்ன தொழில் கற்றுக் கொள்ளச் செய்வது என்று சிந்தித்தவளுக்குப் புதிதாகத் தொடங்கப்பட்ட பாலன் மிதி வண்டி நிலையம் கண்ணில் பட்டது. அங்கே சேர்த்துவிட்டாள்.

பக்கிரிக்கும் சைக்கிள் கடை வேலை மிகவும் பிடித்து விட்டது. உற்சாகமாக வேலை செய்யலானான். வாடகைக்குச் சைக்கிள் கொடுப்பதில் தொடங்கி பாகம் பாகமாகக் கழற்றி 'ஓவர் ஆல்' செய்வது வரை கற்றுக் கொள்ளத் தொடங்கினான்.

சைக்கிள் கடைப் பாலனுக்குப் பக்கிரியை மிகவும் பிடித்துவிட்டது. சிறிய மிதிவண்டி நிலையத்திலிருந்து சைக்கிள் விற்பனை நிலையம் தொடங்குவது வரையில் உள்ள அனைத்து எதிர்காலத் திட்டங்களுக்கும் பக்கிரி உதவியாக இருப்பான் என்று பாலன் எண்ணினார்.

படிப்பகத்தில் மன்றம் தொடங்குவது பாலனுக்குப் பிடிக்கவில்லை. ஏழு மணிக்குக் கடை திறக்காமல், பக்கிரி மன்றத்தைத் திறக்கச் செல்வது பாலனுக்குச் சம்மத மில்லை.

'தலைவரின்' உள்நோக்கம் பாலனுக்குப் புரிந்திருந்தது. தன் கட்சியைப் பரப்ப அந்த மன்றத்தையும் இளைஞர்களையும் பயன்படுத்தத் திட்டமிடுகிறார் என்பது அவருக்கு உறுதியாக விளங்கிவிட்டது.

"கடையைத் திறக்காமல் உனக்கு மன்றத்தில் என்ன வேலை?" என்று ஒருநாள் பக்கிரியைப் பாலன் கேட்டார்.



"ஆமாம் ஐயா! நான் அப்படித்தான் நினைத்தேன். தலைவரு ஏதாவது சொல்வாரேன்னு.." என்று பயத்துடன் கூறிய பக்கிரியைப் பார்த்து... "தலைவரா, யாருடா தலைவர்? நான் பார்த்துக் கொள்கிறேன். மன்றம் பக்கம் போகாதே" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

பாலனுக்கும் தலைவருக்குமிடையே மனக்கசப்பு தொடங்கியது.

காலையில் பக்கிரி நடந்து போன சம்பவங்களை அசை போட்டுக் கொண்டே, அன்றைய பொழுதை எப்படிக் கழிப்பது என்று திட்டமிட்டான்.

ஹூம் அதுவரை பழைய இனிய நினைவுகளை அவனால் மறக்க முடியவில்லை. அந்தச் சைக்கிள் கடையில்தான் சந்திரமதியை அவன் சந்தித்தான். சைக்கிள் முன் சக்கரத்திற்குப் பஞ்சர் போட அவள் வந்தபோது –

சந்திரமதியை அவன் மற்ற வாடிக்கையாளர்களைப் போலவே நினைத்தான்.

பாவாடை, தாவணியில் – பிறகு புடைவையில் – இரட்டைப் பின்னல் – ஒற்றைப் பின்னலாக மாறி பவுடர் மணம் கமழ அவள் வரும்போதுதான் அவன் மனத்தில் சஞ்சலம் ஏற்பட்டது.

மேகலாவும் சந்திரமதியும் சிறது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். அவர்கள் கல்வி கற்கும் உயர்நிலைப் பள்ளி விசாலமான தோட்டத்தின் நடுவே அமைந்திருந்தது. கிறித்துவப் பாதிரிமார்கள் முன் யோசனையுடன் பெரிய இடத்தை அந்த நாளிலேயே 'வளைத்துப்' போட்டிருந்தனர். பெண்கள் கல்விக்கு ஊக்கம் கொடுக்க அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டது, கிறித்துவ சமயம் இந்துக்களிடையே பரவலாக வேரூன்ற வழிவகுத்தது.

மாணவிகள், உணவு இடைவேளையில் அந்தத் தோட்டத்தில் உலவுவார்கள். ஓடிப் பிடித்து

விளையாடுவார்கள். தாங்கள் கொண்டு வந்திருந்த உணவுப் பாத்திரத்திலிருந்து உணவை மெல்லச் சாப்பிடும்போது அரட்டையும் - சிரிப்பும் அவர்களிடையே நிறைந்திருக்கும்.

மேகலாவும் - சந்திரமதியும் எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள். பதிவேட்டில் அகர வரிசையில் பெயர் எழுதப்பட்டிருந்ததால் வகுப்பறையில் வெவ்வேறு இருக்கைகளில் உட்காரும் நிலை ஏற்பட்டாலும், வகுப்பு முடிந்தவுடன் அவர்கள் ஒன்று சேர்ந்து விடுவார்கள்.

நேரம் போவது தெரியாமல் பேச, 'அப்படி என்னதான் இருக்கும்' என்று மேகலாவின் தாய் பொய்க் கோபத்துடன் சிரித்தவாறு அவர்களைக் கேட்பாள்.

சந்திரமதி சில நாள்களாகத் தன்னுடன் சரியாகப் பேசுவதில்லை என்ற கவலை மேகலாவுக்கு இருந்தது.

அன்று - மதிய உணவுவேளையில் தோட்டத்தில் சந்திரமதியிடம் கேட்டாள்.

சந்திரமதி மனம் திறந்து தன் காதலைப் பற்றித் தெரிவித்தவுடன், மேகலா திடுக்கிட்டாள்!

## மூன்று

மேகலாவும் - சந்திரமதியும் உயிருக்குயிரான தோழிகள். சந்திரமதிக்கு ஏற்பட்ட புதிய நட்பைப்பற்றி மேகலா தெரிந்து கொண்டபோது, அவளுக்கு வியப்பாக இருந்தது. இதுவரையில் அவள் தன் காதலைப் பற்றிச் சொல்லாதது, அதிர்ச்சியாகவும் இருந்தது.



வகுப்பறையிலிருந்து வெளிவந்த பிறகு அவர்கள் இருவர் மட்டுமே சேர்ந்து செல்வார்கள். பள்ளியைச் சுற்றியுள்ள தோட்டத்தில், உணவு வேளையில் அவர்கள் மட்டுமே அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். பள்ளிக்கு வந்து போக, இருவருக்கும் சைக்கிள் இருக்கிறது. சந்திரமதி தான் முதலில் சைக்கிள் வாங்கினாள். 'லேடீஸ்' சைக்கிள். தன் மகள் பேருந்தில் இடிபட்டு நசுங்கிச் செல்லக் கூடாதென்பதற்காகவே, சந்திரமதியின் தந்தை வேலு சைக்கிள் வாங்கிக் கொடுத்தார்.

செகண்ட் ஹாண்ட் - பழைய சைக்கிள் - வாங்கினால் போதும் என்று பார்வதி சொன்னாலும், வேலு பிடிவாதமாகப் புதிய சைக்கிளை வாங்கினார்.

"பழைய சைக்கிளை வாங்கி பெயின்ட் எல்லாம் அடித்து, தேய்ந்த பாகங்களைப் புதுப்பித்து அதைப் புதிதுபோல் செய்து, அவ்வப்போது எதிர்பாராத ரிப்பேருக்குச் செலவு செய்து... உம்... அதற்குப் பதிலா, ஒரே தடவை முதலீடு செய்து புது சைக்கிள் வாங்கறதுதான் சரி" என்று.... தன் பொருளாதார ஞானத்தை அழுத்தமாக வெளிப்படுத்துவார் வேலு.

"நீங்க சொல்றதையும் நான் ஏத்துக்கறேன். ஆனா, மறுபடியும் கடன் வாங்கணுமேன்னுதான் கவலை. சொசைட்டியிலேதானே லோன் போடணும்? லோன் சும்மாவா தராங்க? மாசாமாசம் வட்டியோட பிடிச்சுக்க மாட்டாங்களா?" என்று தன் கவலையைப் பார்வதி வெளிப்படுத்துவாள். 'கடனே கூடாது' என்பது அவள் கட்சி. குடும்பத்தை நடத்திச் செல்வதில் மிகக் கண்டிப்பாக பார்வதி இருப்பது வேலுவுக்குத் தெரியும்.

"பார்வதி சாமர்த்தியமா இல்லைன்னா, இந்தக் குடும்பக் கப்பல் எப்பவோ கவிழ்ந்திருக்கும்" என்று மனைவியைப் பற்றிப் புகழ்வதில் வேலுவுக்குத் தனிப் பெருமை.

"லோன் என்றாலே என் மனைவிக்குக் கோபம் வரும். நியாயம்தானே? எனக்குத் தெரிந்து அய்யரு ஒருத்தரு. 'ரொம்ப சாமர்த்தியமா அய்யர் குடும்பம் நடத்தறார்'னு அவரை எல்லாரும் புகழ்வாங்க. அவரு குழந்தைகளைப் நல்லாப் படிக்க வச்சாரு. எப்பவுமே அவரு வீட்டிலே விருந்தாளிங்க வந்து போயிட்டிருப்பாங்க. வீட்டு அம்மாவுக்கு எந்தக் கொறைவும் வரக்கூடாதுன்னு அய்யரு செலவு செய்வாரு. பணம் எப்படி வருது, போவுதுன்னு அம்மா கேட்டுக்க மாட்டாங்க. பார்வைக்கு, அய்யரு ரொம்பக் கண்டிப்புக்காரரு. ஆனா, வெளியிலே, நல்ல பேரு. கஷ்டம்னு அவருகிட்ட ஒருத்தரு போனா, உதவி பெறாம வரமாட்டாங்க.

"ஒரு நாளைக்கு அய்யரு திடீர்னு கண்ணை மூடிட்டாரு. சர்வீஸ் இன்னும் இருக்கு. பிராவிடண்ட் பண்டு, கிராஜுவிடி அப்படி இப்படின்னு நிறைய வரும்னு எல்லாரும் நினைச்சாங்க, என்னென்ன உண்டோ அதிலேருந்து பணம் நிறைய வரும்னு எதிர்பார்த்தாங்க. ஆனா, பிராவிடண்ட் பண்டு லோனு, சொசைட்டி லோனு, அட்வான்ஸு – ஆபீஸ்லே என்னென்ன உண்டோ இப்படி எங்கெங்கெல்லாம் கடன் வாங்க முடியுமோ அங்கெல்லாம் கழுத்து முட்டுற வரைக்கும் வாங்கியிருந்தார். சேமிப்புப் பணம் வரக்கூடிய இடங்களிலிருந்து சல்லிக்காசு வர்றதுக்கு வழியில்லை. இன்ஷூரன்ஸ் பாலிசிக்குப் பல வருட காலமாப் பிரிமியமே கட்டலை. அந்த வீட்டு அம்மா ஆடிப் போயிட்டாங்க. அழக்கூட அந்த அம்மாவால முடியலை. வெளி உலகமே தெரியாமே இருந்துட்டாங்க. குடும்பமே தத்தளிச்சுப் போச்சு!..."

தன் மனைவி பார்வதியின் குடும்ப நிர்வாகத்தைப் பாராட்டுவதற்கு இந்தச் சம்பவத்தை வேலு விவரித்தார். இதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தவருக்குத் தெரியுமோ – தெரியாதோ? கேட்டுக் கொண்டிருந்தவர்,



"அப்புறம் அந்தக் குடும்பம் என்ன ஆச்சு?" என்று கதையின் முடிவைச் சொல்லுமாறு ஆவலுடன் கேட்டுக் கொண்டவரிடம் "அவங்க குடும்பத்தைப் பத்தி நமக்கென்ன கவலை? நம்ப வூட்லே இப்படி ஆயிடக் கூடாதுன்னு பார்வதி ரொம்ப எச்சரிக்கையா இருப்பா." என்றார்.

வேலு கூறியதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தவர் சிரித்துச் சொன்னார்.. "உங்க வூட்லே ஏங்க அப்படி நடக்கப் போவுது?"

ஆமாம்; வேலு தவறாக ஏதும் செய்யமாட்டார் என்பதும், பார்வதி கணவனுக்கேற்ற மனைவி என்பதும் ஊர் அறிந்த விஷயம். தங்கள் பெண் செல்வங்கள் மூவரையும் – ஒரே மகனையும் எப்படியெல்லாம் உயர்வாக வளர்க்க வேண்டும் என்பதற்குத் திடமான கொள்கை அவருக்கிருக்கிறது.

சந்திரமதி பெரியவள். அதற்கு அடுத்தவள் அவளைவிட மூன்று வயது சிறியவள் பன்னீர் செல்வம். கடைசிப் பெண் நிறைமதி.

ஒவ்வொருவருடைய போக்கையும் கூர்ந்து கவனித்து வளர்த்து வந்தார் வேலு. பார்வதியும் அதற்குத் துணையாயிருந்தாள்.

சந்திரமதியைப் பற்றிய கனவுகள் வேலுவுக்கு அதிகமாயிருந்தன.

தன் பெண்ணை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பதில் வேலு, பார்வதியிடையே கருத்து வேற்றுமை இல்லை. அவள் கேட்டதை வாங்கித் தருவது – பள்ளி செல்லச் சைக்கிள் வாங்கித் தருவது – இரட்டை சடை போட்டுக் கொள்ள அனுமதிப்பது ஆகியவை பற்றி மற்றவர்கள் குறை கூறும்போது – வேலு மிகவும் அழுத்தமாக தன் எண்ணத்தைப் பிரதிபலிப்பார்.

"ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்குச் சம உரிமை - ஏன் இன்னும் ஒருபடி அதிகமாக உரிமை-கொடுக்க வேண்டும்? பெரியார் - காந்தி எல்லாம் என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா?" என்று பேசத் தொடங்கி விடுவார்.

திடீரென்று வீட்டு பாஷை பேசாமல் தூய தமிழில் சொற்பொழிவாற்றும் விதத்தில் அழகாகப் பேசத் தொடங்கிவிடுவார். தமிழ்-தமிழர்-தமிழ்நாடு என்ற பேச்சு வரும்போது அவர் உணர்ச்சி வசப்படுவார்.

"இவனிடம் வாய் கொடுத்து நாம் மீள முடியாது. இவன் கட்சிக்காரன் - வட்டச் செயலாளர். அப்படித்தான் பேசுவான்" என்று முணுமுணுத்துக் கொண்டு போய் விடுவார்கள் - கேள்வி கேட்டவர்கள்.

மேகலாவின் வீட்டில் அவ்வளவு உரிமை இல்லை. என்றாலும், அவள் உயிர்தோழி சந்திரமதி என்னென்ன செய்கிறாளோ - அதை மேகலாவும் செய்து கொள்ள அனுமதிப்பார்கள்.

"நம் இருவரைப் பற்றித்தான் நம்ம மிஸ்கூடப் பேசிக் கொள்கிறார்கள். 'நீங்க உறவினர்களா?' என்று தமிழ் மிஸ் கேட்டாங்க" என்று மேகலா ஒருநாள் சிரித்தவாறே சந்திரமதியிடம் சொன்னாள்.

"நீ என்ன சொன்னே?"

"சொந்தக்காரர்களுக்கும் அப்பால்; அவர்களுக்கும் மேலே என்றேன்" - அவள் சொன்னதும் இருவருமே கலகலவென்று சிரித்தார்கள்.

உறவுக்கும் மேலே - அப்படித்தான் தங்கள் நட்பு என்று மேகலா நினைத்துக் கொண்டிருந்தாள். தங்களுக்குள் எதையும் அவர்கள் மறைவாக வைத்துக் கொள்வதில்லை. ஆனால், சில நாள்களாக, சந்திரமதி எதையோ மறைக்கிறாள் என்பதை மேகலா புரிந்து கொண்டாள்.



அவள் படிக்கும் புத்தகங்களின் தரத்தில் மாறுதல் ஏற்பட்டது.

"லைப்ரரியிலே என்னப்பா புத்தகம் எடுத்தே? தமிழா? ஆங்கிலமா?"

"இங்கிலீஷ். ஹெரால்ட் ராபின்ஸ்."

"என்ன, சொல்றே? நமக்கெல்லாம் அது புரியுமாப்பா?"

"டிரை பண்ணணும்.."

"சந்திரமதி! உன் பேச்சிலே கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கிலச் சொற்கள் அதிகம் கலக்கின்றன. உன் அப்பா இதைக் கவனித்தாரா?"

சந்திரமதி பதில் சொல்லவில்லை. மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் அவள் ஏதோ மறைக்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ள மேகலாவால் முடியவில்லை.

"எங்க வூட்டுலே, அந்த மாதிரிப் புத்தகமெல்லாம் கொண்டு வந்தா என் அண்ணன் என்னோட முழியைத் தோண்டிடும்."

இருவரும் சிறிது நேரம் மௌனமாக நடந்தனர். தன் காதல் நிலையை மேகலாவிடம் மறைக்க வேண்டும் என்று சந்திரமதி நினைக்கவில்லை. எப்படிச் சொல்வது, எப்படித் தொடங்குவது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

பக்கிரி வேலை செய்யும் 'பாலன் மிதிவண்டி நிலையம்' வழியேதான் சந்திரமதி சைக்கிளில் செல்வாள். புதிய சைக்கிள் வாங்கியவுடன் வேலு, அந்தச் சைக்கிளையும் - சந்திரமதியையும் பாலனிடம் அழைத்துச் சென்றார்.

"உங்க பொண்ணா ஐயா?" என்று பாலன், சைக்கிள் ஒன்றைத் துடைத்துக் கொண்டே திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

"என்ன, பாலன்! மறந்துட்டீங்களா? நம்ம தலைவரு பொறந்த நாள் விழாவில் பரிசு வாங்கிச்சே என் மூத்த மகள் நினைவில்லையா?"

பாலன், சந்திரமதியை ஒருமுறை திரும்பி தலை முதல் கால் வரை பார்த்து, புருவத்தை உயர்த்தி, "அட நம்ம சந்திரமதி - விழா நடந்து நாலு வருசம் ஆகியிருக்குங்களா?" என்று தன்னுடைய வியப்பைப் புலப்படுத்தினான்.

"ஆண்டுகள் ஓடும். மாறுதல் தானே வரும்!" என்றுகூறி வேலு மெல்லச் சிரித்தார்.

"பெண் பிள்ளைங்க வளர்ச்சி ரொம்ப சிக்கிரம்" என்று சொல்லி, வேலு வாங்கிய புதிய சைக்கிளை ஒருமுறை சோதித்துப் பார்த்து, "வண்டி பேரு பீமன். பீமனைப் போல் நல்ல ஸ்ட்ராங்குங்க" என்று கூறி மீண்டும் நகைத்தார்.

வேலு தொடர்ந்தார்: "இந்த வண்டி நம்ம ஊருதா? வடநாட்டு வண்டியா? அல்லது ஃபாரின் தயாரிப்பா?"

"உலகத்திலேயே நம்ம நாட்டு சைக்கிளுக்குத்தான் வரவேற்பு. இந்த சைக்கிள் வடநாட்டிலேயே தயார் பண்றது தான்."

"முன்பெல்லாம் நம்ம ஊர்ல சைக்கிள் செய்து, மேல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யறாங்கன்னு கேள்விப்பட்டேனே? நமக்கு ரொம்பவும் பெருமையா இருந்ததே என்ன ஆயிற்று?"

"ஆமாங்க - வெளிநாட்டிலே நம்ம சைக்கிளுக்கு ரொம்ப கிராக்கி. ஆனா உள்ளூர்லே விலை அதிகம். நம்ம ஊர் மார்க்கெட்டைப் புடிக்காமே அயல்நாட்டு மார்க்கெட்டைப் புடிக்கறதுக்குப் பாடு. படறாங்க!"

"அது ஒரு விதத்தில் சரிதான். நம்ம தமிழ்நாட்டு சைக்கிள் உலகத்து நாடுகளுக்கெல்லாம் போறதுன்னு பெருமைப்படலாமே!"

"ஆனா, நம்ம தலைவர் சொல்றது போல ஒரு டூத்பேஸ்ட், ஃபேன், ஒரு சோப்பு தமிழ்நாட்டிலே



தயாரிக்கிறோமா? ஏதோ ஒன்னேனெ ஒன்னு கன்னேனெ கன்னுன்னு ஒரு கார் தயாரிசசாங்க. அதையும் மூடிட்டாங்க."

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது சந்திரமதி நெளிந்தாள். பொறுமை இழந்தாள். புது சைக்கிளில் உடனே மேகலா வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று பரபரத்தாள்.

"அப்பா, நேரமாகுது." கைக் கடிகாரத்தைப் பார்த்தவாறு மெல்லக் குரல் கொடுத்தாள்.

பாலன் புரிந்து கொண்டார். "புது சைக்கிளைத் தன் தோழிகளுக்கெல்லாம் பாப்பா காட்ட வேண்டாமா?" என்று கூறிச் சிரித்த பாலன், உள் பக்கம் திரும்பி, 'பக்கிரி' என்று குரல் கொடுத்தார்.

சந்திரமதி திரும்பிப் பார்த்தாள். பக்கிரி கையில் எலுமிச்சம் பழத்துடன் - குங்குமத்துடன் வந்தான். அதுதான், இருவர் விழிகளின் முதல் சந்திப்பு!

சந்திப்பு - சைக்கிளுக்கு அவ்வப்போது காற்றடிக்க வரும்போது, பல நாள்களில் பக்கிரி சைக்கிள் கடையில் இருக்க மாட்டான். இன்னொரு சின்னப்பயல் 'அக்கா - அக்கா' என்று குழையக் குழைய அழைத்து, காற்றடித்து, சைக்கிளைத் துடைத்துவிட்டுப் பல்லிளிப்பான். காற்றடிக்கப் பத்து பைசா! பல்லிளித்ததற்கு இருபது பைசா! சந்திரமதி கொடுத்துவிட்டுச் சிரித்தவாறு போவாள். சிறிது தொலைவு சென்ற பிறகு ஒருமுறை மீண்டும் மிதிவண்டி நிலையத்தைத் திரும்பிப் பார்ப்பாள்.

முதல் பார்வைக்குப் பிறகு முதல் சந்திப்பு சந்திரமதி சைக்கிளைத் தள்ளிக் கொண்டு பாலன் மிதிவண்டி நிலையத்திற்கு வந்தாள்.

இரட்டைப் பின்னல் - சல்வார் கமீஸில் அழகுத் தேவதையாகக் காட்சியளித்த சந்திரமதியின் தோற்றத்தைக் கண்டு அசந்து போனான் பக்கிரி.

"ஏன் தள்ளிக் கொண்டு வருகிறீர்கள்?" என்று பார்வையாலேயே பேசினான் பக்கிரி.

"வீட்டிலிருந்து புறப்பட்டேன். வரும்போது பாதி வழியிலேயே காற்று இறங்கி விட்டது" சந்திரமதி, பக்கிரியை நேருக்கு நேர் பார்க்காமல் பேசினாள். குப்பென்று வியர்த்தது.

ஏன் அப்படி?

கைக்குட்டையை எடுத்து முகம் கழுத்து ஆகியவற்றைத் துடைத்துக் கொண்டாள். பக்கிரி தன்னை ஒருமுறை பார்த்துவிட்டு காற்றடிக்கும் மின்சார மோட்டாரை இயக்குகிறான் என்பதையும் தெரிந்து கொண்டாள்.

பிறகு அந்த சைக்கிளுக்கு நாள்தோறும் ஏதாவது வந்துவிடும்.

"கொஞ்சம் ஃபிரீ வீலைச் சரி செய்யுங்க."

"ஸ்டாண்ட் போடறதிலே சிறு ட்ரபிள்."

"இதோ பாருங்க. மணி சரியா அடிக்க மாட்டேங்குது"

பக்கிரி மெல்லச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கறீங்க?" சந்திரமதிதான் முதலில் கேட்டாள்

"ஒரு பாட்டு நினைவுக்கு வந்தது, சிரித்தேன்."

"என்ன பாட்டு? நீங்க பாடுவீங்களா?"

"ஓரம் போ.. ஓரம் போ... ருக்குமணி வண்டி வருது. பாட்டைப் பாட வேண்டியது தானே? சந்திரமதி வண்டி வருது, வண்டி வருதுன்னு பாடிக் கொண்டே போனா, பெல் எதற்கு?"

சந்திரமதிக்குப் பொய்க் கோபம் பூத்தது. தொடர்ந்து ஒரு புன்னகை.



"நல்லாப் பாடுவீங்க போலிருக்கே? ருக்குமணி வண்டி வருது பாட்டை வானொலியில் ஒலிபரப்பக் கூடாதுன்னு அப்ப இருந்த இயக்குநர் உத்தரவிட்டு விட்டாராம். அதிலென்ன ஆபாசம் இருக்கு?"

"எவ்வளவோ பாடல்களில் இரட்டை அர்த்தம் இருக்கு. நீங்க சினிமா பார்ப்பீங்களா?"

இப்படியே பக்கிரி - சந்திரமதி பேச்சு தினமும் வளர்ந்தது.

ஒருநாள் - பள்ளிக்கூடம் போகும் வழியில் பக்கிரி எதிர்ப்பட்டான். அவனைப் பார்த்தவுடன், சந்திரமதி சைக்கிளிலிருந்து கீழே இறங்கினாள்.

## நான்கு

சிறிது நேரம் பக்கிரி, மூடப்பட்ட கடை வாசலில், நின்றான். அவன் பிடித்துப் போட்ட பீடித் துண்டுகளை, சின்னப்பொண்ணு பெருக்கித் தள்ளி, மழைநீர்க் கால்வாயில் ஒதுக்குவதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

சந்திரமதிக்குப் பிடிக்கவில்லை என்று சிகரெட் பிடிப்பதை நிறுத்தினான். இந்த ஆறேழு மாதங்களில்தான் மீண்டும் புகைக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான். சிகரெட் இல்லை, பீடிதான். பீடிதான் கிடைத்தது.

'லட்சுமி வரணும்னு நான் கடைவாசலைக் கழுவிக் கோலம் போட வந்தேன்'னு ஒரு வேலைக்காரி சொல்லும் அளவுக்கு நம் நிலைமை ஆகிவிட்டதே' என்று வருந்தினான்.

பீடி பிடிப்பதால், சிறிது நேரம் பசியைத் தள்ளி வைக்கலாம். சிந்தித்து முடிவு செய்ய அந்தச் சில கணங்கள் உதவுகின்றன. பீடியின் நுனியில் சாம்பலுடன் கலந்து இருக்கும் 'தித்துளிகள்' சிந்தனையைக் கூர்மைப்படுத்துவதாக அவன் நம்பினான். காலை ஆறு மணிக்கு, அவன் இதுபோல் வெளி உலகத்தை எந்தக் காலத்தில் பார்த்திருக்கிறான்?

சந்திரமதி அவனை உலுக்கி, டீ குடிக்கச் சொன்னபிறகு. இன்னொரு 'ரவுண்டு' தூங்குவான்.

வெளியே, சைக்கிள் மணி ஓசை கேட்டவுடன். சந்திரமதி மீண்டும் அவனை உலுக்கி "இதபாருங்க அவரு பேரு மறந்திடிச்சு. தொங்கு மீசைக்காரரு வந்துட்டாரு. அவ்வளவு தான். ஊரு சுத்தக் கிளம்பிடுவீங்க." என்று அலுத்துக் கொள்வாள். பாவம். சந்திரமதி! அவள் சொல்வது உண்மைதான்.

"இதோ வரேன் சின்னதுரை" என்று குரல் கொடுத்துவிட்டு, நொடியில் முகம் கழுவி, பல் துலக்கி லுங்கியைச் சரிசெய்து ஜிப்பாவை மாட்டிக் கொண்டு, கையால் தலை முடியை ஒரு தடவை கோதிவிட்டுக் கொண்டு, வெளியே பாய்வான் பக்கிரி.

'தன்னை நம்பி வந்திருக்கும் சந்திரமதியுடன் சிறிது பேசுவோம்' என்று கூட நினைக்கமாட்டான்.

"அப்படி என்னதான் பேச்சு இருக்குதோ? இந்தக் கட்சி வேலை, ஊர் விவகாரம் வேணாமுங்க" என்று அவள் மெல்லச் சொல்லுவாள்; அழுத்திச் சொல்வாள். அதட்டிச் சொல்லியிருந்தால், ஒரு வேளை அவன் அவள் சொல்லைக் கேட்டிருப்பானோ என்னவோ?....

அவனிடம் அவள் ஒருநாள் கூட கோபமாகப் பேசியதில்லை; வருத்தமாகப் பேசியதில்லை. தன் ஏமாற்றத்தை வெளியே புலப்படுத்திக் கொண்டு ஒரு கடுசொல் கூறியதில்லை.



எவ்வளவு அன்பாக வளர்ந்த பெண் அவள்! பாலன் மிதி வண்டி நிலையத்திற்கு அவள் வருவதிலிருந்து ஏற்பட்ட பழக்கம் - மிக நெருக்கமாகியது. ஒருநாள் சைக்கிள் கடைக்கு அவள் வராவிட்டால் கூட, ஒரு யுகம் கழிந்து பிரளயமே ஏற்பட்டு விட்டது போல் தோன்றும்.

அவள் படிக்கும் உயர்நிலைப் பள்ளி வாசலில் காத்து நிற்பான். பள்ளி விட்டதுமே, விதவிதமான வண்ண உடைகள் அணிந்த மாணவிகள் வெளியே வருவார்கள். அங்கே அவன் தவம் புரிவதை யாராவது பார்த்துக் கேட்டால், என்ன சொல்வான்?

அப்படியும் நேர்ந்து விட்டது.

"என்ன தலைவா! நம்ப பேட்டைக்கு?" என்று அவன் தோளைத் தொட்டதும் பக்கிரி திரும்பிப் பார்த்தான். ஒரு கணம் திடுக்கிட்டான்! - செங்கண்ணன் நின்று கொண்டிருந்தான்.

படிப்பகத்தில் அவனுடன் சேர்ந்து படித்துப் பாதியில் எங்கோ காணாமல் போய், பிறகு இளைஞர் சீர்திருத்த மன்றம் பிரபலமடையத் தொடங்கியவுடன் அதில் கம்பீரமாக வந்தமர்ந்தவன் செங்கண்ணன்.

மன்றத்தைக் கைப்பற்றிய புதிய பணக்காரர் - மருதவாணன் இளைஞர்களைக் கவர்ந்தார். அவர் சொல் கேட்கும் 'தொண்டர்'களில் செங்கண்ணன் ஒருவன். வாரம் ஒரு கூட்டம் நடைபெறும் போது, செங்கண்ணன் குரல்தான் அந்தக் கூட்டத்தில் ஒலிக்கும். சமூகத்தையும், சமயத்தையும் பிற்போக்குக் கொள்கைகளையும் சாடும் அவன் பேச்சுகள் அழுத்தந்திருத்தமாக இருக்கும். பக்கிரியும் சில சமயங்களில் விவாத அரங்குகளில் கலந்து கொள்வான். மெய்யாகவே, நாடு, சமூக முன்னேற்றம், அந்த மன்றத்தின் நோக்கமாக இல்லை என்பதை மிக எளிதில் புரிந்து கொண்ட பக்கிரி, மெல்ல மெல்ல மன்ற

நடவடிக்கைகளிலிருந்து கழன்று கொள்ளத் தொடங்கினான். சூழ்நிலையும் அதற்கேற்ப அமைந்தது. அதற்கு மற்றும் இரண்டு காரணங்கள்: ஒன்று - மிதிவண்டி நிலையத்தில் சந்திரமதியைச் சந்தித்தது மற்றொன்று - பாலன் மிதிவண்டி நிலையம் உரிமையாளர் பாலனுக்கும் - மன்றத் தலைவர் மருதவாணனுக்கும் ஏற்பட்ட உட்பூசல்.

பாலன் - மருதவாணன் இருவரின் இலக்கும் ஒன்றுதான்! அவர்கள் இருவரின் தலைவர்களும் ஒருவரே. அவர்கள் பயணப்படும் பாதையும் ஒன்றே! இங்கர்சால் - லெனின் - கார்ல்மார்க்ஸ் புத்தர் - பெரியார் என்று அவர்கள் சொல்லுக்குச் சொல் புகழ்வதும் ஒருவரையே! ஆனால், உள்ளுக்குள் இருவருக்கும் வெளிப்படுத்த முடியாத பொறாமை; மேலுக்குப் புன்னகை. “அண்ணே வணக்கம்” என்ற போலிக் குரல். பாலன் உட்குரல்: “நேற்று வந்தவன். புதிய பணக்காரன். இவன் எப்படிப் பணம் சேர்த்தான் என்பது எனக்குத் தெரியாதா? இளைஞர்களைத் தன் பக்கம் சேர்க்க அவன் செய்யும் தந்திரங்களுள் ஒன்றுதான், படிப்பகத்தை ‘மன்றமாக’ மாற்றியது. தம்பி பக்கிரி மட்டும் இல்லாமலிருந்தால், படிப்பகக் கட்டடம் உருவாகி யிருக்குமா? இங்கே குடிசை போட்டுக் கொள்ள முதலில் பலத்த எதிர்ப்பு. புறம்போக்கு நிலம் என்பதை நான் அறிந்து, ஆள்களைப் பிடித்து, இரவுப் பள்ளிக்கூடம்னு ஆரம்பிச்சேன். பக்கிரி அப்போ சின்னப் பையன். வேலை கத்துக்க என் கடைல கொண்டு விட்டாங்க, அவன் அம்மா. தங்கமான பையன். இரவில் பாடம் படித்து தனியே தேர்வு எழுதத் தன்னைத் தயார் செய்து கொள்ளப் படிக்கத் தொடங்கினான். படிப்பகத்தைப் பெருக்குவது - குடிநீர் கொண்டு வைப்பது காலையில் வீசிப் போட்டுவிட்டுப் போகும் காலை நாளிதழ்களை எடுத்து ஒழுங்காக வைப்பது; பிறகு கடையைத் திறந்து, அங்கேயும் பெருக்கி - துடைத்து



வாடகைச் சைக்கிள்களை ஒழுங்காக எடுத்து வைப்பது அப்பப்பா! அவனில்லாவிட்டால் நான் ஏது?’

பாலன் தனக்குள்ளே சொல்லிக் கொள்வது மட்டுமில்லை. அந்தரங்கமான தன் நண்பர்களிடமும் சொல்லிக் கொள்வார். அவருடைய இதய ஒலி மருதவாணன் காதுகளுக்கும் எட்டாமலிருக்குமோ? மருதவாணன் இதயக் குரலும் ஒலித்தது.

‘இந்தப் பேட்டையின் பழம் பெருச்சாளி பாலன். இவ்வளவு வருஷமா இருக்கானே? இயக்க வளர்ச்சிக்கு என்ன செய்தான்? பசங்களுக்குப் படிப்பு சொல்லித் தர ஏற்பாடு செய்தானா? ராப் பள்ளியிலே தொடர்ந்து படிச்சவங்க எத்தனை பேர்? இளைஞர்களைக் கவர்ந்து இழுக்க சொற்போர்ப் பயிற்சி நடத்தணும். வாராவாரம் கூட்டம் போடணும். தலைவர் பொறந்த நாள் விழாக்கள் நடத்தணும். இளைஞர்கள் தான் இயக்கத்தின் வருங்காலத் தூண்கள். அதை விட்டுட்டு, சைக்கிள் கடை வச்சுக்கிட்டு, நாளெல்லாம் பத்திரிகை படிச்சுட்டு கடையிலே உட்கார்ந்து விவாதம் பண்ணிட்டா போதுமா? ஆனா அவருக்குக் கிடைத்த அதிர்ஷ்டம். அந்தப் பையன் பக்கிரி! அவன் மட்டும் நம்ம பக்கம் வந்துட்டா், ஒரு வருடத்திலே இந்தப் பேட்டையை நம்ம இயக்கக் கோட்டையாக மாத்திடுவேன்!’

ஆனால், பக்கிரி தன் முதலாளியைத் தான் ஆதரித்தான். எதனாலோ மருதவாணனைத் தொடக்கக் காலத்திலிருந்தே அவனுக்குப் பிடிக்கவில்லை.

மருதவாணன், பாலன் கடைக்கு வரும்போது அவனும் அருகிலிருந்து பேச்சில் கலந்து கொள்வான். இருவரும் கடை வாசலில் உட்கார்ந்து நேரம் போவது தெரியாமல் பேசுவார்கள். சிறிது சிறிதாக அவர்கள் பேச்சில் பக்கிரி கலந்து கொள்வது குறைந்தது. சந்திரமதி ஏதாவது ஒரு காரணத்திற்காக அங்கே வருவாள். அவள் சைக்கிளுக்குச் ‘சேவை’ செய்வதில் பக்கிரி கவனம் செலுத்துவான்.

மருதவாணன் - பாலன் ஆதிபத்தியப் போட்டி உள்ளுக்குள்ளேயே புகைவது மெல்ல மெல்ல அவர்கள் நடவடிக்கைகளிலேயே தெரியத் தொடங்கியது.

உட்கார்ந்து பேசுபவர்கள் - நின்று கொண்டு பேசத் தொடங்கினார்கள். பிறகு மருதவாணன் வந்தால், பாலன் உட்கார்ந்தே வரவேற்பதும் - பேசுவதுமாக நிலைமை மாறியது.

சந்திரமதி வரும்போது, சில நாள்கள் பக்கிரியை வேறு ஏதாவது ஒரு வேலை கொடுத்து பாலன் அனுப்பி விடுவார். வேண்டுமென்றே அவர் அப்படிச் செய்வதில்லை. சூழ்நிலை அப்படி அமைந்துவிடும்.

பக்கிரியை ஒருநாள் பார்க்கவில்லை என்றாலும், சந்திரமதிக்கு அன்றையப் பொழுது சோர்வாக அமையும். பக்கிரியின் மனநிலையைச் சொல்ல வேண்டுமா?

ஒரு வாரமாகவே சந்திரமதியைப் பார்க்க முடியாததால், சந்திரமதி படிக்கும் பள்ளிக்கூட வாசலுக்கே வந்து, பேருந்து நிற்குமிடத்தில் தவம் புரியத் தொடங்குவான். அவளைப் பார்க்க முடியாது. அல்லது அவனுடைய தோழி மேகலாவுடன் சைக்கிளில் வேகமாகச் சென்று விடுவாள்.

எப்படியும் சந்திரமதியைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அன்று பக்கிரி பள்ளி அருகே சுற்றிச் சுற்றிச் வந்தான். செங்கண்ணன் தன் தோளைத் தொட்டு விசாரித்தது அவனுக்கு எரிச்சலை அளித்தது.

போலியாகச் சிரித்து, ஏதோ சமாதானம் கூறி அங்கிருந்து கழன்று கொண்ட பக்கிரிக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம்! எதிரே சந்திரமதி சைக்கிளில் வந்து கொண்டிருந்தாள்.

அவள் சைக்கிளை விட்டு இறங்கி அவனுடன் நடுவீதியில் பேசுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.



## ஐந்து

வேலு வழக்கம்போல் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருடைய சிந்தனை யெல்லாம் அமைச்சரைப் போய்ப் பார்த்து 'மெடிக்கல் சிட்' கேட்டுப் பெறுவது எப்படி என்பதிலேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அன்று காலையில் மில் சூப்பர்வைசர் வேலுவை அழைத்துப் பேசினார்.

"வேலுவை அடிக்கடி சூப்பர் வைசர் அழைக்கிறாரே? என்ன சமாச்சாரம்?" என்று தொழிலாளர்கள் பேசிக் கொள்வார்கள்.

"அதுவா? வேலு வட்டச் செயலாளரு இல்லையா? நம்ம யூனியன் விஷயமா பேச்சு இருக்கும்" என்று மற்றொரு தொழிலாளி தன் யூகத்தை வெளிப்படுத்துவான்.

"ஆமா; யூனியன்தான் தூங்குதே! ஒரு பக்கம் முதலாளிங்க கையாளுங்க. இன்னொரு பக்கம் அரசாங்க ஜால்ராக்கள் இவங்க ரெண்டு பேருக்கும் நம்ம லீடரு துணை போறாரு. ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுக்கப் போறதா எத்தனையோ தடவை சொல்லிட்டாரு. எல்லாரும் கங்காணிப் பசங்க. அவங்க அவங்க சொந்த முன்னேற்றத்துக்குத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவாங்க. இப்ப வேலு எதுக்கு சூப்பர்வைசர் கிட்டப் போறான் தெரியுமா?"

"நான்தான் சொன்னேனே யூனியன் விஷயமா இருக்கும்னு. எனக்கு மட்டும் உள் விவகாரம் தெரியுமா?"

கண்டது கேட்டது நினைத்தது கற்பனை என்று அவர்கள் பேச்சு வளர்ந்து கொண்டே போயிற்று. 'ஸ்டிரைக் செய்தா போனசு கூடுதலா கிடைக்கும்; மற்ற சலுகைகள்

கிடைக்கும். தொழிலாளர் நலம் ஓங்க வேலை நிறுத்தம் ஒரு கருவி என்ற எண்ணம் அவர்களிடையே வளர்ந் திருந்தது.

ஆனால் தன் மகன் கல்யாண விஷயமாகப் பேசுவதற்குத்தான் வேலுவைச் சூப்பர்வைசர் அழைத்தார் என்பது மற்றவர்க்குத் தெரியாது. காரியம் முடியும்வரை வெளியே யாருக்கும் சொல்ல வேண்டாம் என்று சூப்பர்வைசர் கேட்டுக் கொண்டார்.

வேலு குடும்பத்துடன் எப்படியும் கல்யாணத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று ஆவலுடன் அவர் இருந்தார். அவர் மகனுக்குச் சந்திரமதியின் அழகில் மயக்கம்! சூப்பர் வைசர் வீட்டுச் சம்பந்தம் கிடைக்கவேண்டும் என்று மெடிகல் சீட்டிற்காக வேலு முயன்று கொண்டிருந்தார். வட்டச் செயலாளரான தனக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தார். அமைச்சரிடம் கேட்டால், உடனே நடந்து விடும். இது ஒரு பெரிய காரியமா? என்ற உறுதியுடன் இருந்த வேலு அமைச்சரைப் பார்ப்பது மிகவும் எளிது என்றும் நினைத்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் விடுப்பு எடுத்துக் கொண்டு அமைச்சர் வீட்டிற்கு ஆட்டோவில் புறப்பட்டார். கூட ஒருவரையும் அழைத்துக் கொள்ளவில்லை. பட்டுக்கரை வேட்டி – மேலே பளபளப்பான பட்டுக் கலர்ஷர்ட் – சிவப்பு நிறச் சால்வை – சகிதம் பந்தாவாக அவர் புறப்படும் போது பார்வதிக்குச் சிரிப்பு வந்தது.

“அசல் மினிஸ்டரு மாதிரியே இருக்கீங்க!” – என்று அவள் சொல்லிச் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

“ஏண்டி, மாதிரின்னு சொல்றே? நானும் மினிஸ்டரு ஆயிட முடியாதா? தகுதிதான் இல்லையா? ஆரம்ப காலத்திலே நம்ம பேட்டையிலே கொடி மரங்கூட நடமுடியாது தெரியுமா? ஐயா, எப்படி உழைச்சிருக்



காருன்னு மாவட்டத் தலைவரைக் கேளு!” என்று வேலு பார்வதியைத் திரும்பிப் பார்த்து, ஒரு தடவை கண்ணாடியைப் பார்த்துச் சிறு சொற்பொழிவாற்றி விட்டுப் புறப்பட்டார்.

ஒரு மணி நேரத்திற்கெல்லாம் திரும்பி விட்டார். வரும்போது மூன்று நான்கு தொண்டர்களுடன் வந்தார்.

“போன காரியம் என்னங்க ஆச்சு?” என்று பார்வதி அப்பொழுது கேட்கவில்லை. தன் கணவர் முகம் வாடியிருந்ததைக் கவனித்தாள்.

அவருடன் வந்தவர்கள், கட்சித் தொடர்பானவர்கள் என்பதை மட்டும் பார்வதி தெரிந்து கொண்டாள். அமைச்சரைப் பார்க்கச் சென்ற போது உடுத்திச் சென்ற பட்டுவேட்டி புது சொக்காயைக் கழற்றி வைத்த கணவரைப் பார்த்து, “ஏங்க, எல்லாத்தையும் அவுத்துப் போடறீங்க?” என்று யதார்த்தமாகக் கேட்டாள். ‘எல்லாத்தையும் எங்க அவுக்கறேன்?” குறும்புச் சிரிப்புடன் பார்வதியைப் பார்த்துக் கண்சிமிட்டி விட்டு, “எல்லா வேஷங்களையும் இனி கலைச்சுட வேண்டியதுதான்” என்று கூறிவிட்டுத் தொண்டர்களைப் பார்க்கப் போன தன் கணவரின் திடீர் விரக்தியை அறிந்து கொள்ள முடியாமல் திகைத்தாள் பார்வதி.

அவருடன் ஆட்டோவில் வந்து வெளியே காத்திருக்கும் கட்சிக்காரர்களிடம் அவர் எதையோ காரசாரமாகப் பேசுவதிலிருந்து, தன் கணவர் போன காரியம் பலிக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்டாள்.

“முத்தமிழ் விழா – முப்பெரும் விழா அதைப் பற்றி எல்லாம் என் கிட்டே பேசாதிங்க. நம்ப பேட்டைக்குப் புதிய தலைவர் அதாம்பா மருதவாணர்னு ஒருத்தர் முளைச்சிருக்காரே அவரைக் கேளுங்க! அவரிடம் நிறையப் பணமிருக்கு; பலமுமிருக்கறதாச் சொல்றாங்க” – என்று வேலு சொல்லும்போது தொண்டர்களுக்கு அதிர்ச்சி.

மௌனமாயிருந்த அவர்களைப் பார்த்து, "இதுவரை நம்ம பேட்டையில் கட்சிக்காரங்க ஒற்றுமையாயிருந்தாங்க. இப்பொழுது சைக்கிள் கடை பாலன் கட்சி – மருதவாணர் கட்சி என்று கட்சிக்குள்ளே குத்து வெட்டு; கட்சி இரண்டாகப் பிரிந்திருக்கிறது" என்றார் அவர்.

"இரண்டு பேரும் தங்கள் பலத்தைக் காட்டுவதிலும் தங்கள் பக்கம் ஆளுங்களைச் சேர்ப்பதிலும் முனைஞ்சிருக்காங்க" என்று சிற்றமுடன் பேசினார்.

தொண்டர்கள் சிறிது நேரம் மௌனமாயிருந்தார்கள். அவர்கள் மௌனம் – வேலுவின் எரிச்சலை இன்னும் வளர்த்தது.

"இவ்வளவு நாள் அந்த மருதவாணன் எங்கே இருந்தார்? – என்ன செய்து கொண்டிருந்தார்? – நம்ம கட்சி ஆட்சியைப் பிடித்துவிட்டது என்றவுடன் முன்னால் வந்து நின்று விட்டார். இரவுப் பள்ளிக்கூடத்தை மாற்றி, மன்றமாக்கிவிட்டார். பாலனுக்குப் போட்டியாக வேலை செய்கிறார். கட்சிக்குள்ளே கட்சியா? வட்டச் செயலாளர் பதவியை அடைய இப்பொழுதிலிருந்தே திட்டமிடுகிறார் என்று தோன்றுகிறது."

வேலு முகத்தைத் துடைத்துக் கொண்டார். அவருடைய சிற்றத்தைக் கவனித்த தொண்டர் ஒருவர். "உங்க பதவிக்கா? அவரா?" என்று கூறிக் கடகடவென்று சிரித்து. "ஐயா, உங்களைப்போல ஈடுபாட்டுடன் பணிபுரிய இனி ஒருத்தர் பிறக்கணும்" என்றான்.

"உங்களுக்குத் தெரிகிறது. அது அமைச்சர் எம்.எல்.ஏ.க்களுக்குத் தெரியவில்லையே? இன்று காலை அமைச்சர் வீட்டிற்குச் சென்றேன். நீண்ட நேரம் காத்திருந்தேன். என்னைப் போன்று பலர் வந்தவாறிருந்தனர். காத்திருப்பவர்கள் எண்ணிக்கை கூடி வந்தது. வந்தவர்களுள் நான் ஒருவனே உரிமை மிக்கவன்



என்ற பெருமிதம் எனக்கு. என்னைத்தான் முதலில் கூப்பிடுவார் என்று எண்ணினேன். அமைதியாக இருந்த வரவேற்பு அறையில் திடீரென்று ஒரு பரபரப்பு. அமைச்சர் அவசரமாகப் புறப்பட்டுப் போய்விட்டதாக நேர்முக உதவியாளர் தெரிவித்தார். நான் திடுக்கிட்டேன். திகைத்தேன். 'நான் வந்திருப்பதாகச் சொன்னீர்களா?' என்று அவரிடம் கேட்டேன். 'சொன்னேன்!– அவசர வேலை புறப்பட்டுப் போய்விட்டார்' என்றார். 'இந்தப் பக்கமாகத்தானே போக வேண்டும்?' என்று கேட்டேன். 'இன்னொரு வழி இருக்கிறது, சார்!' என்று சொல்லி விட்டு 'என்னைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் வேறொருவரிடம் பேசத் தொடங்கிவிட்டார்.' என்று கோபக்குரலில் பேச்சைத் தொடர்ந்தவர். 'உனக்குத் தெரியுமா தம்பி? இந்த அமைச்சர் வெற்றி பெற நான் எவ்வளவு உழைத்திருக்கிறேன் தெரியுமா? ஆலையில் அளவுக்கு மேல் விடுப்பு எடுத்தேன். எங்க ஆலையில் அப்போது கெடுபிடி அதிகம். மாற்றுக் கட்சி ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது. என் தொழிலில் நான் நிபுணன். அதனால் என் மீது எந்தவிதக் குற்றச்சாட்டும் சுமத்த முடியாது என்றாலும் ஆளுங்கட்சியை எதிர்த்துத் தேர்தலில் வேலை செய்தேன் என்பதனால் சம்பளத்தைப் பிடித்து விட்டார்கள். ஹூம், போகட்டும்; நாங்கள் வென்றுவிட்டோம். அந்த மகிழ்ச்சி எனக்கு." என்று குரலைத் தணித்துக் கொண்டு பேச்சை முடித்தார். தன் தோழர்களுடன் பேசும்போது அவர் நல்ல தமிழில் பேசுவார். அதனால் அவருக்கே கோபம் குறைந்துவிடும்.

"சரி, நேரம் ஆகுது. நீங்க போங்க. எனக்கு அவசரமாக வெளியே போக வேண்டும்" என்று விடை கொடுத்தார்.

தயங்கி நின்ற அவர்களைப் பார்த்து, "முப்பெரும் விழா தானே! மிகச் சிறப்பாகச் செய்துவிடலாம். இதே அமைச்சரை அழைத்து, நடத்தி விடலாம்; விடுவேனா

அவரை?" என்றார் உற்சாகத்துடன். தொடர்ந்து: "மருதவாணன் பாலன் இருவரையும் சமாதானப்படுத்தி ஒற்றுமைப்படுத்தாவிட்டால் நம்ம கட்சிக்குத்தான் பலக்குறைவு" என்றார்.

ஒரு தொண்டர் அவர் அருகே மிகவும் நெருங்கி மெல்லிய குரலில், "அவங்க இரண்டு பேருக்கும் உள்ள தகராறு பக்கிரி என்ற பையனைப் பற்றியது ஐயா! பாலனிடமிருந்து பக்கிரியைத் தன் பக்கம் இழுக்கப் பார்க்கிறார் மருதவாணர். இதைத் தெரிந்த பாலன் மருதவாணரைக் கடுமையாகப் பேசிவிட்டார். மன்றம் இருக்குமிடம் மருதவாணருக்குச் சொந்தமில்லை என்றும், உடனே காலி செய்ய ஏற்பாடு செய்து விடுவேன் என்றும் பாலன் கண்டிப்பாகக் கூறியிருக்கிறார்" என்றான்.

"மருதவாணரின் முன்னேற்றம் பாலனுக்குப் பிடிக்கவில்லை. அது தான் தகராறுக்குக் காரணம்" என்றான் மற்றொரு தொண்டன்.

"பக்கிரியா? யார் அது? பாலன் கடையிலே இருப்பானே அவனா? எனக்குச் சிறுவயது முதல் தெரியுமே? நல்ல புள்ளையாச்சே" என்று வேலு பக்கிரிக்கு நற்சான்று வழங்கினார்.

"நல்லவனாயிருக்கறதனாலே வந்த சங்கடம்தாங்க. அத்துடன் கெட்டிக்காரனுங்க. மருதவாண்ன் தன் வலக்கரமாக அவனை வைத்துக் கொள்ள விரும்புகிறார். பாலனோ, பக்கிரியை இழக்க விரும்பவில்லை."

வேலு சிறிது நேரம் மௌனமாயிருந்தார்.

"பக்கிரி இல்லாவிட்டால் இன்னோர் இளைஞன் இயக்கத்திற்குக் கிடைக்காமல் போவானா? இதற்காக ஒருவரோடொருவர் ஏன் தகராறு செய்து கொள்ள வேண்டும்?"



பேச்சைச் சற்று நிறுத்திய வேலு "சரி, சரி, இந்தச் சின்னதுக் கெல்லாம் பூசல் ஏற்பட்டால் நம்முடைய பெரிய இலட்சியம் என்ன ஆவது? இதைப் பற்றிப் பிறகு பேசுகிறேன். எனக்கு அவசரமாக சொந்த வேலை இருக்கிறது" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு உள்ளே வந்தார்.

"பார்வதி! நான் வர நேரமாகும். எனக்காகக் காத்திருக்காதே!" என்று சொல்லிப் புறப்பட்டார். 'மெடிகல் ஸீட்' வாங்கித் தந்து, 'சூப்பர்வைசர்' மகனைத் தன் மகளுக்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். மில் வேலையில் செல்வாக்குடன் இருக்கும் போதே மகள் கல்யாணத்தை நடத்தி விட வேண்டும் என்பதில் அவர் மிகவும் வேகம் காட்டினார்.

இந்தப் பெரிய இடத்தில் நாம் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டுமானால் மாப்பிள்ளையை டாக்டர் படிப்பு படிக்க வைக்க வேண்டும். சிறப்பான முறையில் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும். தன் கணவர் பணத்திற்கு எங்கே போவார்? நம் சக்திக்கு மீறிச் செலவு செய்ய ஆசைப்படுகிறாரே? அகலக் கால் வைக்கிறாரே இவர் என்ற கவலை, பார்வதிக்கு அந்தக் கணம் முதல் ஏற்பட்டது.

அந்தக் கவலையுடன் வேறோர் அதிர்ச்சியும் சேர்ந்தது.

வழக்கம்போல் ஐந்து மணிக்கு வீடு வந்துவிடும் சந்திரமதி அன்று மணி ஆறாகியும் வீட்டிற்கு வரவில்லை.

உள்ளுக்கும் வாசலுக்குமாக பார்வதி கவலையுடனும் எதிர்பார்ப்புடனும் அலைந்ததுதான் மிச்சம். மகள் வரவில்லையே என்று யாரைப் போய்க் கேட்பாள். நாள்தோறும் சைக்கிளில் போகிறாள். சாலை விபத்து அதிகம். என் மகளுக்கு ஏதாவது நேர்ந்திருக்குமோ என்ற பயம் அவள் நெஞ்சை அழுத்தியது. என்னென்னவோ

கற்பனைகள் உதித்தன. விளக்கை ஏற்ற வேண்டும் என்ற நினைவில்லாமல் வாசல் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அப்போது சந்திரமதியின் தோழி மேகலா அங்கே வந்து கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தவுடன் பார்வதிக்கு சிறிது நிம்மதி ஏற்பட்டது.

'இவள் மட்டும் வருகிறாளே?- சந்திரமதிஎங்கே?' நினைக்கும்போது வயிற்றை என்னவோ செய்தது.

"மேகலா! சந்திரமதி எங்கே?" என்று பரபரப்புடன் கேட்டாள் பார்வதி.

"அதைத்தான் நானும் கேட்க வந்தேன். ஆன்ட்டி" என்று மேகலா கவலையுடன் கூறினாள்.

"சில நாள்களாகவே சந்திரமதி, பள்ளி விட்டவுடன் என்னுடன் வருவதில்லை. வீட்டில் ஏதோ வேலை இருக்கிறது என்று தனியே போய் விடுகிறாள். அவளை மூன்று நாள்களாகப் பார்க்காததால் இன்று வீட்டிற்குத் தேடி வந்தேன்" என்றாள் மேகலா.

பார்வதி, மேகலாவைக் கூர்ந்து நோக்கினாள்: "நீயும் அவளும் இணை பிரியாதவர்களாயிற்றே? வாய்க்கு நூறு தடவை உன்னைப் புகழ்வாளே? உனக்குத் தெரியாமல் அவள் எங்கே செல்கிறாள்?" என்று மேகலாவைக் கேட்கும் போது துக்கம் தொண்டையை அடைத்தது.

'இப்பொழுதெல்லாம் கல்யாணம், காதல் என்று பேசுகிறாளே! யாரிடமாவது காதல் கொண்டு காதலனைச் சந்திக்கப் போயிருப் பாளோ? - வீட்டிற்குத் தெரியாத செய்தியைப் போட்டு உடைத்து விட்டோமோ?-' ஐயோ!- மேகலாவுக்குச் குபீரென வியர்த்தது.



# ஆறு

சந்திரமதிக்குத் துணிவு அதிகமா? - பக்கிரிக்கு அதிகமா? இருவருக்கும் ஒரே மாதிரியான வேகம்; ஒரே மாதிரியான பயம். அதனால் அவர்கள் இருவரும் தங்கள் எண்ணத்தை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியாமல் தவித்தார்கள். கூண்டுக்குள் சிக்கிய பறவை, வெளியே வரத் துடிப்பது போல், இறக்கையைப் படபடவென்று அடித்துக் கொண்டு கூண்டுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து மோதிக் கொள்வது போல், அவர்கள் மனச்சுடர் அலை பாய்ந்து தவித்தது.

விழிகள் பேசிக் கொண்டன. அவள் விடும் பெருமூச்சு, அவனைத் தாக்கியது. பெண்களுக்கு ஏற்படும் காதல் எதிரொலிகள், ஆண்களுக்கு ஏற்படுவதில்லை. வேகம், பரபரப்பு, தாபம் ஆகிய உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ளும் தன்மை ஆண்களுக்கு வருவதில்லை.

முதல் பார்வையிலேயே சந்திரமதி பக்கிரியின் நெஞ்சுள் பிரவேசித்து விட்டாள். ஏன் அப்படி என்று அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை. சைக்கிளை விட்டு சந்திரமதி இறங்கினாள். மெல்லிய புன்முறுவலை அவள் தூதாக அனுப்பினாள்.

"பள்ளிக்கூட நேரம் முடிந்து விட்டதா?" அவன்தான் கேட்டான்.

அதற்குச் சந்திரமதி நேர் பதிலைக் கூறவில்லை.

"எங்கே இவ்வளவு தூரம் வந்து விட்டீர்கள்?" என்று கண் இமைகள் பட்டாம்பூச்சிபோல் சிறகடிக்கக் கேட்டாள்.

சிரிபபு ஒன்றைத்தான் மறுமொழியாக அவனால் கூற முடிந்தது. வெண் பற்கள் பளிச்சிடும் அந்தச் சிரிப்புத்தான்,

சந்திரமதி அவனிடம் தன் மனத்தைப் பறிகொடுக்கச் செய்தது என்று சொல்லலாம்.

ஆமாம்; இவ்வளவு தூரம் ஏன் வந்தோம்? எதற்கு வந்தோம்? அவனுக்கே புரியவில்லை. அவளுக்கும் தெரியாதா?

சந்திரமதியைப் பார்க்காமல் அவனால் ஒரு நாள்கூட இருக்க முடியவில்லை. காலையில் எவ்வளவோ இளமங்கையர் வீதியில் நடமாடுவதை அவன் பார்த்திருக்கிறான்; பார்க்கிறான். பாலன் மிதிவண்டி நிலையம் அடுத்து உள்ள வாடகை நூல் நிலையத்திற்கு அதிகமாகப் பெண்கள் வருவார்கள். பத்து முதல் பன்னிரண்டு மணிக்குள் இளம் பெண்கள் வருவார்கள். ஒவ்வொரு புத்தகமாக எடுத்துப் பார்த்துவிட்டு, 'அந்தப் புத்தகம் இருக்கிறதா; இந்த நாவல் இருக்கிறதா' என்று கேட்டு நூல் வரிசைகளைக் கலைத்து, ஒரு மணி நேரம் அங்கே சிரித்துப் பேசி வம்பளந்துவிட்டு, ஒரே ஒரு புத்தகத்துடன் புறப்பட்டுச் செல்வார்கள்.

வாடகை நூல் நிலையத்தை நடத்தும் கண்ணாயிரம், வரும் பெண்களுடன் சிரித்துப் பேசுவது பக்கிரிக்குப் பிடிக்காது. வாடகை நூல் நிலையத்திற்கு அதிகமாகப் பெண்கள் வருகிறார்கள். பொழுதுபோக ஏதாவது புத்தகம் எடுத்துப் படிக்க வருகிறார்கள். விதவிதமான அலங்காரம் மலிவான சென்டின் நெடி – தலையில் ஒரு நந்தவனம் விழிகளை அங்குமிங்கும் ஓடவிட்டு அடிக்கடி திரும்பிப் பார்க்கும் குணம்! பக்கிரி முகத்தைத் திருப்பிக் கொள்வான்.

கண்ணாயிரத்திடம் தன் வெறுப்பை வெளிப் படையாகத் தெரிவித்திருக்கிறான்.

"காலையில் எழுந்தவுடனேயே. இப்படி சிவிசிங்காரிச்சு, பொட்டு இட்டு, மோசமா ஆடை அலங்காரம் செய்து வராங்களே? – எப்பவும் வீட்டில் இதே மேக்கப்புடன் இருப்பாங்களா?" என்று ஒரு தடவை கேட்டிருக்கிறான்.



கண்ணாயிரம் சிரிப்பான். பகபகவென, பல்லெல்லாம் தெரியச் சிரிப்பான். அவன் சிரித்தால், அசிங்கமாயிருக்கும். இரண்டு மூன்று வரிசை என்று கோணலாக இருக்கும். தன் கபடமில்லாத சிரிப்பில் மயங்கி வாடகை நூலகத்தில் உறுப்பினர்களாகச் சில பெண்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்று அவன் சொல்லும்போது, பக்கிரிக்கு எரிச்சலாக இருக்கும். கையில் இருக்கும் 'ஸ்பானரால்' ஓங்கி அவன் மண்டையில் அடிக்க நினைப்பான்.

'கண்ணகி பிறந்த நாட்டில் இப்படியும் பெண்கள் இருக்கிறார்களே! தமிழ்ப் பண்பாடு எப்படியெல்லாம் சீரழிந்து வருகிறது! அதற்கு நீயும் துணை போகிறாயே?" என்று கண்ணாயிரத்தைப் பார்த்து வெளிப்படையாகவே ஒரு நாள் கேட்டிருக்கிறான்.

கண்ணாயிரத்திற்குக் கோபம் இலேசில் வராது. பக்கிரி சொன்னவுடன் அவன் சீறினான்.

"அது என்ன தமிழ்ப் பண்பாடு? கொஞ்சம் விளக்குங்கள், .தலைவரே!" என்றான்.

பக்கிரியை அவன் 'தலைவா தலைவா' என்றே அழைப்பான்.

"அதென்ன 'தலைவா, தலைவா' என்று எல்லாரையும் அழைக்கிறாய்? நான் தலைவனல்லன், தொண்டன்தான்!" என்று பலமுறை மறுத்திருக்கிறான் பக்கிரி.

"தலைவா! நீ ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளா விட்டாலும் நீ தலைவன்தான்,இல்லாவிட்டால் உனக்கு இவ்வளவு டிமாண்ட் இருக்குமா? இரண்டு தலைவர்களும் உனக்காக மனத்தாங்கல் கொள்வார்களா?"

"என்ன அய்யா அப்படி என் மேல் இரண்டு பெரியவர்களுக்கும் ஆவல்?"

"அதுவா? – நான் பிறகு சொல்கிறேன். உன் முகராசி. உன் முகத்துக்கே இங்கே டிமாண்ட்; நீ மட்டும், சைக்கிள்

கடையை விட்டுட்டு, லெண்டிங் லைப்ரரிக்கு வர்றதாச் சொல்லு. அவ்வளவு தான்; மாசம் ஆயிரம் பேர் புத்தகம் எடுக்க வருவார்கள்! வியாபாரம் படு ஜோராயிருக்கும். இன்னிக்குச் சொல்லு; நான் சும்மா ஃபிகர்களை, கலர்களைப் பாத்துண்டு ஜாலியா, குந்திண்டிருக்கேன். என்ன தலைவா, சொல்லு..."

பக்கிரி வெறுப்புடன் அவனைப் பார்த்தான். 'இவனைப் போன்றவர்களால் தமிழ்ப் பண்பாடே கெட்டுவிடுகிறது. இதற்காகத்தான் வாடகை நூல் நிலையம் நடத்துகிறானா?' என்று முணுமுணுத்தான்.

"என்ன தலைவா, முணுமுணுக்கறே...?"

"ஆமாம், உன்னைப் போன்றவர்களால் தமிழ்ப் பண்பாட்டிற்கே இழுக்கு!"

"அது என்ன இழுக்கோ, முழுக்கோ! நான் கேட்டதற்குப் பதில் சொல்லு? தமிழ்ப் பண்பாடு என்றால் என்ன? உலகத்திலில்லாத பண்பாடு, இங்கு தமிழனுக்கு மட்டும் என்ன வாழுதாம்?"

பக்கிரி நிமிர்ந்து உட்கார்ந்தான்.அவன் இதுவரையில் படிப்பகத்தில் படித்த புத்தகத்திலிருந்து கற்றுணர்ந்ததைச் சொற்பொழிவாக உதிர்த்தான்.

வீரம், கொடை, அன்பு எல்லாவற்றையும் விளக்கி, கற்பு நெறியைப் பற்றிச் சொன்னான்: "கற்புக்கு ஒரு காப்பியம் சிலப்பதிகாரம், தமிழில்தான் இருக்கிறது தெரியுமா?" என்று முடித்தான்.

கண்ணாயிரம் தன் சிரிப்பு முத்திரையுடன், "அதெல்லாம் சரிதான் பக்கிரி; வீரம், கொடை, அன்பு எல்லாமே முன்பு இருந்ததைப் போலவேதான் இருக்கிறது. கற்பு - அப்படி இப்படின்னு கதைக்கிறியே? - முன் காலத்தில் மட்டும் கற்பு ஒழுக்கம் ரொம்ப வாழ்ந்துதோ? நானும் இந்த வாடகை நூல் நிலையத்தில் படித்தேன்.



ஒருத்தனுக்கு ஒருத்தி என்று அந்தக் காலத்திலே இருந்ததா? பரத்தையென்று ஒரு பிரிவு ஏன் இருந்தது? அவங்களும் பெண்ணுங்கதானே? அவங்களாலே ஆண்கள் ஒழுக்கம் கெட்டதா - இல்லையா; சொல்லு! கண்ணகி பத்திப் பேசறியே? - மாதவி ஏன் இருந்தா? இப்ப இருக்கிறது மாதிரித்தான் அப்பவும் இருந்தது. பக்கிரி! நானும் பழைய இலக்கியங்களைப் படிச்சிருக்கேன். இப்ப இருக்கிற மாதிரி புத்தகங்கள் அப்ப இல்லை - என்னமோ, பண்பாடு, ஒழுக்கம் இப்போதான் கெட்டுப் போச்சுன்னு சொல்லாதே. இன்னொரு தபா! இளம் வயசுன்னா அப்படி, இப்படி இருக்கத்தான் செய்யும்" - என்று சொல்லி பக்கிரியை வென்றுவிட்டதாக எண்ணி அடையாளச் சிரிப்பைப் பலமாக உதிர்த்தான்!

இவர்கள் பேசுவதை, நூலகத்திற்கு வந்தவர்கள் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருப்பதைக் கவனித்தான். அதற்குமேல் அவனிடம் பேச்சுக் கொடுக்க விரும்பவில்லை.

லெண்டிங் லைப்ரரிக்கு வருகிற பெண்களோடு, சந்திரமதியை ஒப்பிட்டால், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் என்று சொல்லலாம். சந்திரமதி, சைக்கிளில் வந்து இறங்குவதும், சிறுசிறு ரிப்பேர் செய்து கொள்வது, காற்றடிப்பது, பஞ்சர் ஒட்டுவது போன்ற சமயங்களில் கவனம் சிதறாதபடி மிக அடக்கமாக நிற்கும் முறையும், அவனைக் கவர்ந்தன. அவள் அழகை வர்ணிக்க அவனால் முடியவில்லை. ஒரு வித்தியாசமான மலர். மங்கைக்குள்ளே ஒரு மாணிக்கம் என்று எண்ணினான். அவனுள்ளத்தில் அவள் அமர்ந்ததற்கு அது முக்கியக் காரணம். ஓரிரு முறை அவளுடன் சிறிது பேசியிருக்கிறான். இதழ்கள் பிரியாப் புன்னகை மூலம் உள்ளத்து உணர்ச்சியை வெளிக் காட்டியிருக்கிறான். அவளைச் சில நாள்களாகக் காணாததால், பக்கிரி அவளைத் தேடி, பள்ளிக்கூடத்தருகே வந்தான்.

பள்ளிக்கூடம் அருகே அவளைச் சந்தித்த பக்கிரிக்குச் சில கணங்கள் என்ன பேசுவது என்றே தோன்றவில்லை. வார்த்தைகள் எங்கோ ஓடி ஒளிந்திருந்தன. வெளிவர நாணமுற்றன.

"இங்கேயே நின்று பேச வேண்டாம். நாம் நடந்து கொண்டே பேசுவோம்" என்று சொன்னாள் சந்திரமதி.

மெல்ல அவள் பேசியது, சுருதியை மீட்டியது போல் இருந்தது.

"நடந்து கொண்டே என்றால், சைக்கிளையும் சேர்த்துத்தானே?" என்றான் பக்கிரி.

சந்திரமதி களுக்கென்று சிரித்தாள். "சைக்கிளை இப்படியே விட்டுவிட்டு, நாம் மட்டும் நடக்க முடியுமா?"

"எவ்வளவு தூரம் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நாம் நடப்பது?"

"சரி, நீங்களோ, நானோ மாற்றி மாற்றித் தூக்கிக்கொண்டு நடக்கலாமே!"

"எனக்கு ஒரு யோசனை - நான் மிதிக்கிறேன்; நீ பின்புறம் இருக்கையில் உட்காரு..."

"ஓ! அதனால்தான் மிதி வண்டி என்று பெயரா? உங்களைக் கேட்க நினைப்பேன். தமிழில் மிகவும் பற்றுடையவராயிற்றே சைக்கிளுக்கு நேர் தமிழ் வார்த்தை மிதிவண்டியா? பை - சைக்கிள் என்றுதான் அதன் பெயர். மிதிவண்டி என்ற எப்போதும் தூய தமிழில் பேசுவீர்களே, இப்போது சைக்கிள் என்று பேசுகிறீர்களே! ஈருருளி என்று சொல்லலாம் என்று என் மிஸ் சொன்னார்கள்" என்று கூறி மெல்லச் சிரித்தாள்.

"மிஸ்ஸிடம் சைக்கிளைப்பற்றிப் பேச்சு ஏன் வந்தது? என் நினைவு வந்ததா?"

சந்திரமதி மெல்ல நகைத்தாள்.



"எங்க வீட்டுக்குப் பக்கத்திலே ஒருத்தர் இருந்தார் அவர் துவிச் சக்கர வண்டி என்று சொல்லுவார்!"

"துவிச் சக்கரம் என்றால்?"

"துவி என்றால் இரண்டு; 'பை' என்றாலும் இரண்டு என்றுதான் பொருள். ஈருருளி!"

"ஓ! இவ்வளவு தூரம் ஆராய்ச்சியா?"

"ஆமாம்; உங்களைப் பார்த்ததிலிருந்து மிதிவண்டி என்கிறீர்கள்; மிதிக்காவிட்டால் அதற்கு மோட்டார் இணைத்தால்?"

சிறிது தூரம் சைக்கிளை, சந்திரமதி தள்ளிவர, சைக்கிளின் மறுபக்கமும், அவளருகேயுமாக மாறி மாறி நடந்துவந்தான் பக்கிரி. சிறிது நேரம் பேசவில்லை.

"பள்ளிக்கூடம் விட்டவுடன் நேரே வீட்டிற்குத்தான் போவேன். மேகலாவும் என்னுடன் வருவாள். அவளில்லாமல் நான் தனியே வருவது இதுதான் முதல் தடவை!" சந்திரமதியின் பேச்சில் அவசரம் மட்டுமன்று, அந்நியோன்யமும் தெரிந்தன.

"மேகலா உன் உறவினர் பெண்ணா? ஒரு நாள்கூட மிதிவண்டி நிலையத்தில் அவங்களை நான் பார்க்க வில்லையே? உன்னைப்போல் அழகாக இருப்பாளா?" பக்கிரி, சந்திரமதியின் பக்கம் திரும்பிக் கேட்டான்.

"மேகலா என் உயிர்த்தோழி, நானும் அவளும் சிறுவயதிலிருந்து ஒன்றாகவே படித்து வருகிறோம். அவளையும் என்னையும் பிரித்துப் பார்க்க முடியாது. என்னைவிட அவள் அழகு. இரண்டு மூன்று நாள்களாக நான் அவளைச் சந்திக்கவில்லை."

"இன்றுதான் நீ என்னைச் சந்தித்தாய். நீ சந்தித்தாய் என்பதைவிட நான் தான் உன்னைச் சந்திக்க தினந்தோறும் அலைந்தேன். ஆமாம், இரண்டு நாள்களாக எங்கே போயிருந்தாய்?

“அப்படியா? எனக்கும் உங்களைப் பார்க்காமல் என்னவோ போலிருந்தது. அம்மாவுடன் கடைக்குப் போக வேண்டியிருந்தது. எனக்கு நகை செய்யக் கொடுத்தார்கள். நான், காலையில் ஒரு நாள் உங்கள் மிதிவண்டி நிலையம் பக்கம் வந்தேன்.”

“அப்படியா? நான் எங்கே போய் விட்டேன்?” – பக்கிரி யோசித்தான்.

சந்திரமதியைத் தேடி, அந்தக் கல்வி நிலையம் பக்கம் அன்று பகலிலிருந்து சுற்றிச் சுற்றி வந்ததால், பக்கிரிக்குக் களைப்பாக இருந்தது. பகல் உணவும் சாப்பிடவில்லை. நடந்து கொண்டே பேசுவதைவிட, எங்காவது உட்கார்ந்து பேசலாம் என்று தோன்றியது.

“சந்திரமதி...” என்றழைத்தான் பக்கிரி. அடிக்கடி அந்தப் பெயரைச் சொல்லிப் பார்ப்பதில் அவனுக்குப் புத்துணர்வு!

“ஹூம்... என்ன?” சந்திரமதி உதட்டின் கோடியில் புன்முறுவல் பூத்தபடி, மெல்லக் கேட்டாள்! – அது காதல் மொழியின் அரிச்சுவடி.

“நாள்தோறும் பள்ளிக்கூடம் விட்டவுடன், நேரே வீட்டிற்குச் சென்று விடுவாயா?”

“ஆமாம்; வீட்டிற்குப் போனவுடன் ஒரு டம்ளர் காபி சாப்பிட்டால்தான், எனக்குப் புதுத் தெம்பு உண்டாகும்.”

“டிபன் ஏதும் இருக்காதா? உனக்குப் பசிக்காதா?”

“மாலையில் டிபன் செய்வதில்லை. ஏழு மணிக் கெல்லாம் சாப்பிட்டு விடுவோம். காலையில் அம்மா பலகாரம் செய்வாங்க... அந்த வேலை முடிந்தவுடன் சோறாக்க வேண்டும். அப்பா மதியம் பகல் உணவுக்கு வருவார். அவரை அனுப்பிவிட்டு, அம்மா சற்று கண்ணயர்வாள். மாலையில் டிபன் பண்ண முடியுமா? வேலைப்பளு ஒரு பக்கமிருக்கட்டும். கட்டுபடியாகுமா? பொருளாதாரம் இடம் கொடுக்காது. எங்கப்பா



வருமானத்தில், செட்டாக எங்கம்மா செலவு செய்து வருவதால்தான், குடும்பத்தைக் கடனில்லாமல் ஓட்ட முடிகிறது. சிறுகச் சிறுக என் கல்யாணத்திற்காகப் பணம் சேர்க்கிறார் அப்பா!” இப்படிச் சொல்லி அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

“சரி, எங்காவது ஓர் ஓட்டலுக்குச் சென்று உட்கார்ந்து பேசலாமா?”

“ஓட்டலா? சிற்றுண்டி விடுதியா? ஓட்டல் என்று எப்படிப் பெயர் வந்தது. ரெஸ்டாரன்ட், கிளப் எனப் பல பெயர்கள் எல்லாவற்றிற்கும் சிற்றுண்டி விடுதி உணவு விடுதி என்றே அழைக்கிறோம். தமிழ் எப்படி வளரும்?”

“தமிழ் வளர்ச்சியைப் பற்றி அடிக்கடி சிந்திக்கிறாயா?”

“எல்லாம் உங்களைப் பார்த்த பிறகுதான்!” என்று கூறிச் சிரித்த சந்திரமதி தன் முகக்குறிப்பை மாற்றிக் கொண்டு, “ஐயோ, தனியா ஓட்டலுக்குப் போய் எனக்குப் பழக்கமில்லை. மேகலாவுடன் இரண்டு மூன்று தடவை, சினிமா பார்த்துவிட்டுத் திரும்பி வரும்போது ஓர் ஓட்டலுக்குள் நுழைந்து ஒரு வெட்டு வெட்டியிருக்கிறோம்.”

“ஓ, அடிக்கடி சினிமாவுக்குப் போவியா? நாளைக்கு நாம சினிமாவுக்குப் போகலாமா?” என்றவுடன் சந்திரமதி தோளைக் குலுக்கிக் கொண்டு, “ஐயோ, அம்மாவுக்குத் தெரிந்தால் வெட்டிப் போட்டுடுவாள்” என்றாள்.

“சரி, சினிமாவுக்கு வேண்டாம். இன்று மேகலாவுடன் வருவதாக நினைத்துக் கொள். ஒரு வெட்டு வெட்டலாம். எனக்கு நல்ல பசி! பகல் சாப்பாடே நான் சாப்பிடவில்லை.”

“ஐயோ... ஏன் அப்படி?”

“உனக்காகத்தான்!”

“எனக்காகவா?”

27897
4289006

"இன்று உன்னை எப்படியாவது சந்தித்துவிட வேண்டும் என்ற வேகத்தினால்"

"ஓ! உண்ணாவிரதமா?" சந்திரமதி சிரித்தாள்.

"இல்லை - சத்தியாக்கிரகமே செய்து விட எண்ணினேன்."

ஒரு சிற்றுண்டி விடுதிக்குள் இருவரும் நுழைந்தார்கள். 'ஃபேமிலி' என்ற பெயருடன் கூடிய தனி இடத்திற்குள் நுழைந்தார்கள். சற்று வெளிச்சம் குறைவான அந்த இடத்தில், முன்பே ஒரு மூலையில் இளஞ்சிட்டுகள் மிக நெருக்கமாக உட்கார்ந்து கலகலப்பான சிரிப்புடன், ஒன்றுமே சாப்பிடாமல், பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் எதிரே இரண்டு கப் ஐஸ்கிரீம்!

சந்திரமதிக்குக் கொஞ்சம் துணிவு ஏற்பட்டது.

"இந்த ஒட்டலுக்கு வந்திருக்கிறாயா?" பக்கிரி கிசுகிசுத்தான்.

"இல்லை - மூன் தியேட்டர் எதிரே ஒரு ரெஸ்டாரண்ட். அங்குதான் நானும் மேகலாவும் இரண்டு மூன்று தடவை போயிருக்கிறோம்."

அவர்கள் இருவரும் ஒரு மூலையைப் பார்த்து உட்கார்ந்தார்கள்.

"என் இப்படி இந்த இடம் அரை வெளிச்சத்துடன் இருக்கிறது?" சந்திரமதி கேட்டாள்.

பக்கிரி சிரித்தான். அவளுக்குத் தெரியாமல், "அதோ பார். அதற்காகத்தான்" என்றான்.

சந்திரமதி திரும்பிப் பார்த்தாள். எதிர் மூலையில் அமர்ந்திருந்த இளஞ்சிட்டுகள், இவர்கள் திரும்பிப் பார்க்கும் போதுதான் மிக நெருக்கமாக... அவன் அவளை அணைத்து முகத்துக்கருகே.....

சந்திரமதிக்குக் 'குப்'பென்று வியர்த்தது.



"நாம் இங்கிருந்து போய்விடுவோம்!" என்று பரபரத்தாள் சந்திரமதி.

"அவர்களைப் போல் நடந்து கொள்வதற்காக நான் உன்னை இங்கே அழைத்துவரவில்லை சந்திரமதி! நான் அப்படிப்பட்டவனும் அல்லன்!"

"அது எனக்குத் தெரிந்ததால்தான் நான் உங்களுடன் பழகத் துணிந்தேன்."

"உன்னுடன் மனம்விட்டுப் பேச வேண்டும். என் இதயத்தைத் திறந்து காட்ட வேண்டும் என்று துடித்தேன். இன்றுதான்..." அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே சர்வர் அங்கே வந்து 'மெனு' அட்டையை நீட்டினார். வழக்கம்போல், அங்கே வந்து நெருக்கமாக அமர்ந்து பேசுபவர்களைப் பார்ப்பது போல ஒரு முறை நோட்டம் விட்டார்;

"நீ என்ன சாப்பிடுகிறாய், சந்திரமதி?" பக்கிரி கேட்டான்.

"ஒன்றும் வேண்டாம். காபி மட்டும் சொல்லுங்கள். பாவம், உங்களுக்குப் பசி. நீங்கள் சாப்பிடுங்கள்!" என்றாள்.

"உன்னுடன் பேசியவுடனேயே பசி பறந்துவிட்டது" என்று கூறி இரண்டு ஐஸ்கிரீமுக்குச் சொன்னான் பக்கிரி.

அவள் மறுக்கவில்லை. சந்திரமதிக்கு ஐஸ்கிரீம் மிகவும் பிடிக்கும்.

அவள் ஐஸ்கிரீமைச் சுவைத்துச் சாப்பிடும்போது, அவள் ஸ்பூன் நுனியால், ருசித்துச் சாப்பிடும் அழகை ரசித்துக் கொண்டிருந்தான் பக்கிரி. அந்தக் குளுகுளு அறையிலும் சந்திரமதிக்கு வியர்வைத் துளிகள் நெற்றியில் அரும்பியிருந்தன. தன் கைக் குட்டையால், வியர்வையைத் துடைத்தாள். "பயமா, சந்திரமதி? இப்படி வியர்க்கிறதே!" என்றான். சந்திரமதி ஒன்றும் பேசவில்லை.

"நாம் போவோம்" என்று எழுந்தாள்.

"நான் மறந்தே போனேன்... இன்று வீட்டிற்குச் சீக்கிரம் வருவதாகச் சொல்லியிருந்தேன். மறந்துவிட்டேன். மேகலா இன்றும் என்னைக் காணாமல் என்னைத் தேடுவாள்!" சந்திரமதிக்குக் கவலையும் பயமும் சேர்ந்தன.

வெளியே வந்த பிறகு "நான் வருகிறேன். பிறகு சந்திக்கிறேன்" என்று கூறி பக்கிரியின் பதிலுக்குக் காத்திராமல் சைக்கிளில் ஏறிப் பறந்தாள் சந்திரமதி.

## ஏழு

சிற்றுண்டி விடுதியில் சந்திரமதியுடன் பேசிக் கொண்டிருந்த அந்த சில நிமிடங்கள், பக்கிரியின் நெஞ்சில் நீங்கா நிகழ்ச்சியாகப் பதிந்தன. கணப்பொழுதில் அவள் முடிவு செய்து, சிற்றுண்டி விடுதியிலிருந்து சிட்டு போல் பறந்து விட்டதுதான் அவனைத் திகைக்கச் செய்தது.

முற்பகல் முழுமையும் சாப்பிடாததால் ஏற்பட்டிருந்த களைப்பு, அவளைச் சந்தித்த நிமிடங்கள் வரை புலப்படாமல் மறைந்திருந்தது. மேஜையில் நேருக்கு நேர் அமர்ந்து அவள் ஐஸ்க்ரீம் சாப்பிடும் அழகை ரசித்துக் கொண்டிருந்தது அவன் பசி நினைவையே மறக்கச் செய்தது. பள்ளிக்கூட வாசலிலிருந்து நடந்து வந்தபோது அவளுடன் என்ன பேசி வந்தோம் என்பது கூட அவனுக்கு நினைவில்லை.

அவள் அருகே வந்தபோது அவள் பூசியிருந்த பவுடரின் மெல்லிய மணம் வியர்வையுடன் கலந்து அவனைக் கிறங்க அடித்தது. அழகிய இளம் பெண்ணுடன் இவ்வளவு நெருக்கத்தில் இருந்தது கிடையாது. வாடகை நூல் நிலையத்துக்கு வரும் சில பெண்கள் சைக்கிள் கடைக்கருகே



வந்து சிறிது நேரம் நிற்பது வழக்கம். அவர்களுடைய பார்வையும் செயற்கை அலங்காரமும் அவனுக்கு எரிச்சலை யூட்டியிருக்கின்றன. அவர்கள் பக்கமே திரும்பிப் பார்க்கப் பிடிப்பதில்லை. சைக்கிள் 'ப்ரீவீலை'த் துடைத்துக் கொண்டோ, 'ப்ரேக்'கைச் சரி செய்துகொண்டோ, வாடகை சைக்கிள் எடுத்துச் செல்பவர்கள் எடுத்துச் செல்லும் நேரத்தைக் குறித்துக் கொண்டோ கவனத்தைச் சிதற அடிக்காமல் இருப்பான்.

அவனுடைய இந்தப் போக்கிற்காக 'சாமியார்' என்று பட்டங் கொடுத்துக் கண்ணாயிரம் கண் சிமிட்டிப் பேசுவதை பக்கிரி ரசிப்பது கிடையாது.

"உன் போக்கு சரியில்லை கண்ணாயிரம்! சில பெண்கள் பல்லிளிக்கிறார்கள் என்றால், நீயும் அந்தச் சபலத்திற்கு அடிமையாகிவிடக்கூடாது!" என்று அறிவுரை கூறும் பக்கிரியின் மனத்தில் சந்திரமதியைச் சந்தித்ததி லிருந்து எப்படிச் சலனம் ஏற்பட்டது? அவனுக்கே விளங்கவில்லை.

மெய்க் காதல் எப்படித் தோன்றும், எப்படி வளரும் என்பதற்குத் தன் நிலையே சாட்சி என்று நினைத்துக் கொண்டான். காதல் என்பது புனிதமானது என்பதையும் புத்தகங்களிலிருந்து படித்துப் புரிந்து கொண்டிருக்கிறான். காதலுக்கும் – காமத்திற்கும் வித்தியாசமும் – பொருளும் அவனுக்குத் தெரிந்திருக்கின்றன.

யோசித்து யோசித்துப் பார்க்கிறான். சந்திரமதி அவன் நெஞ்சுக்குள் எப்போது எப்படிப் புகுந்தாள்? சைக்கிள் கடைக்கு அவள் வந்து இறங்கும் அழகும், சைக்கிளுக்குக் காற்றடிப்பது, சிறு சிறு ரிப்பேர்களைச் சுட்டிக் காட்டி அவற்றைச் சரி செய்யச் சொல்வது போன்ற நிகழ்ச்சிகள்தாம் அவளுக்கும் – அவனுக்கும் நேசம் ஏற்படச் செய்தனவா?

அவன் மெல்லச் சிரித்துக் கொண்டான். அடுத்தபடி அவளைப் போன்று பல இளமங்கையர் அங்கு வருகிறார்கள். சிரித்துப் பேசுகிறார்கள். சைக்கிளைக் கொடுக்கும் போதும், எடுக்கும் போதும் அவர்களுடைய கரமோ, உடலோ அவனிடம் நெருங்கி மோதியிருக்கின்றன. அறியாமல் அவன் அவர்கள் மேல் இடித்தபோது, 'ஸாரி' என்று அவர்கள் சொல்லிச் சிரித்தபோது ஏற்படாத புதிய அனுபவம் சந்திரமதியிடம் எப்படி ஏற்பட்டது? அதுதான் காதலோ? 'காதல் ஏற்படுவதில்லை, செய்யப்படுவதில்லை. இயற்கையாகப் பிறப்பது' என்று யாரோ ஓர் அறிஞர் எழுதியதை இப்போது நினைவு படுத்திக் கொண்டான்.

அதன் விளைவுதான், சந்திரமதியைக் காணாததால் அவன் மனத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அவளைக் காண வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. சந்திக்காத நாள்கள் நெஞ்சத்தில் வெறுமை ஏற்பட்டது போன்ற கலக்கத்தை விளைவித்தன. அவள் நினைவுகள் நெஞ்சில் குறுக்கிட்டு எந்தப் பணியையும் செய்யவிடாமல் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் தோற்றத்தை ஏற்படுத்தின.

கடை எதிரே பழைய அம்பாசிடர் கார் வந்து உறுமிக் கொண்டு நின்றது. காரிலிருந்து, "எங்கேப்பா உங்க கடை முதலாளி?" என்று, கட்சியின் முக்கியப் பிரமுகர் இடிவேந்தன் குரல் கொடுத்தபோது கூட அவனுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற உணர்வு ஏற்படவில்லை.

"பக்கிரி! உன்னைத்தான், என்ன யோசனை?"

"பாலன் எங்கேப்பா? செயல் வீரர்கள் கூட்டத்தை நடத்த வேண்டும். அதைப் பற்றிப் பேச வேண்டும். இரண்டு தடவை தகவல் அனுப்பியும் அவரிடமிருந்து தகவல் வரவில்லை. அதனால்தான் நானே நேரே வந்து விட்டேன்!" என்றார் இடிவேந்தன். அவர் கட்சியின் தூண்களில் ஒருவர்.



அவர், அந்தக் கட்சியின் முன்னணிப் பேச்சாளர்களுள் ஒருவர். அனல் கக்குவது போல் பேசக் கூடியவர். அவர் மைக்கைப் பிடித்துப் பேசத் தொடங்கினால், 'என்னை விட்டுடுங்க ஐயா, என்னை விட்டுடுங்க ஐயா' என்று மைக்கே சில நேரம் கெஞ்சும். எதிர்க் கட்சிக்காரர்களை வசைமாரி பொழிவதில் அவருக்கு இணை அவரே! தேர்தல் சமயங்களில் அவருடைய தயவை நாடி ஒவ்வொரு வேட்பாளரும் அவரைக் கெஞ்சாத குறைதான்.

எத்தனை காலம் மற்றவர்களுக்காக மேடை ஏறிப் பேசிக் கைதட்டல் வாங்குவது? சோடாவும் நூறு ரூபாயும் ஒரு துண்டும் வாங்கிக் காலத்தை ஓட்டுவது?

இந்த முறை அவர் அரசியலில் முக்கியப் பதவி பெறத் திட்டமிட்டார். தன்னை ஆதரிக்கக் கோஷ்டி சேர்க்கத் தொடங்கினார்.

பாலன் அடக்கமாகக் கட்சித் தொண்டாற்றும் இலட்சியவாதி. அவருடைய வார்த்தைக்கு மதிப்பு அதிகம். நாணயமானவர் என்ற பெயர் உண்டு. மேடை ஏறிப் பேசாவிட்டாலும் அவர் பேசினால் அது எடுபடும்.

கார் வந்து நின்றதையோ, இடிவேந்தன் காரிலிருந்தே அவன் பெயர் சொல்லி அழைத்ததையோ பக்கிரி கவனிக்கவில்லை. அவனுக்குச் சுற்றுப்புற நினைவே இல்லை.

சந்திரமதியின் நினைவாகக் கற்பனையில் ஆழ்ந்திருந்தான்.

அந்தச் சிற்றுண்டி விடுதியில் அவளை ரசித்தானே தவிர, பேச நினைத்ததை அவன் பேசவில்லை. என்னென்னவோ பேச வேண்டும் என்று கற்பனை செய்திருந்தான். சைக்கிளைத் தள்ளிக் கொண்டே வந்தபோது பேசியது தான். அங்கே தனிமையில் அவள் விழிகள் பேசின.

ஐஸ்கிரீமைச் சாப்பிட்டு முடித்தவுடன் நளினமாக கைக்குட்டையால் உதடுகளைத் துடைத்துக் கொண்ட அவள் திடீரென எழுந்தாள். 'என்னைத் தேடுவார்கள்; நான் வருகிறேன். பிறகு சந்திக்கிறேன்' என்று சொல்லிவிட்டு நின்று கையசைக்காமல் விரைந்தாளே? ஏன் என்ன காரணம்?

'வீட்டிற்குச் சீக்கிரம் வந்து விடுகிறேன் என்று சொல்லியிருந்தேன். மறந்தே போனேன்' என்று அவள் சொல்லும்போது குரலில் பயம் நிறைந்திருந்தது.

'இன்னும் என்னைக் காணாமல் மேகலா தேடுவாள்' என்று சந்திரமதி சொல்லும்போது தோழி மேகலாவிடம் அவள் வைத்துள்ள மரியாதை தெரிந்தது. வீட்டிற்கும், மேகலாவிற்கும் அவள் பயப்படுகிறாள்; பயம் என்று சொல்லக்கூடாது. மரியாதை தருகிறாள்.

ஆனால், என்னை அவள் நேசிக்கிறாள் என்பதிலும் சந்தேகமில்லை. நான் கூப்பிட்டவுடன் சிற்றுண்டி விடுதிக்கு வந்து விட்டாள். ஏதாவது பேசியிருக்கலாம்.

சுற்றி வளைக்காமல் அவளிடம் கேட்டிருக்கலாம் – 'என்னைக் காதலிக்கிறாயா?' என்று.

இன்னும் பேசியிருக்கலாம் – 'உன்னைப் பார்க்காமல் என்னால் ஒரு கணம் கூட இருக்க முடியவில்லை.'

அதற்கு அவள் என்ன பதில் சொல்லியிருப்பாள்? ஆண்களைப் போல் பெண்கள் மனத்திலிருப்பதைக் கொட்டிவிட மாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

'இதையெல்லாம் எங்கே கற்றாய்?' பக்கிரி தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். 'சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை' என்று பாரதியார் எழுதியதைப் படித்திருக்கிறான். படிப்பகத்தில் அவன் படித்தவை இப்பொழுது நினைவுக்கு வருகின்றன. வாழ்க்கை அனுபவம் எனும் பள்ளியில் இன்னும் கற்றுக்



கொள்ள வேண்டும். பெண்கள் இதயத்தை இன்னும் புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் அவசரப்பட்டு விட்டோமா? சந்திரமதி மீது காதல் கொண்டது தவறா? காதல், கல்யாணம் இதற்கெல்லாம் இன்னும் இரண்டு வருடங்கள் காத்திருக்கலாம். அம்மா இருந்திருந்தால், எனக்கு யோசனை சொல்லியிருப்பாள். ஒரே ஓர் ஆதரவான அம்மா இறந்த ஒரு வருடத்திற்குள் மன்மதக் கலையைக் கற்க முயல்வது தவறா? அன்பும் ஆதரவும் அரவணைப்பும் வேண்டும் என்பதற்காக அவளைக் காதலித்தது தவறா? பக்கிரி தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

சந்திரமதியைச் சந்தித்த அன்று இரவு அவனுக்குத் தூக்கம் சரியாய் வரவில்லை. காலையில் எழும்போது நேரமாகிவிட்டது. குளித்துவிட்டு நேரே மிதிவண்டி நிலையத்திற்கு வந்துவிட்டான்.

எதிர்காலத் திட்டங்கள், கவலைகள் அவன் மனத்தைக் குழப்பின. வேலை ஓடவில்லை. வழக்கம்போல் சந்திரமதி பள்ளி செல்ல வருவாள். அவள் என்ன பேசுவாள்; நாம் என்ன பேசவேண்டும் என்ற கற்பனைக் கனவில் மிதந்து கொண்டிருந்தான். நேற்று ஏன் அவசரமாகப் புறப்பட்டுச் சென்று விட்டாய் என்று கேட்கவேண்டும் என்று நினைத்தான். 'நீ செல்லும்போது என் இதயத்தையும் எடுத்துச் சென்று விட்டாய்' என்று வசனம் பேச ஒத்திகை செய்து கொண்டான். உதவிக்கு இருக்கும் சிறு பையன் இன்னும் வேலைக்கு வரவில்லை. சுறுசுறுப்பாக எழுந்து கடைப் பணிகள் எதையும் அவனால் செய்ய முடியவில்லை. சோம்பலில்லை; சோர்வுமில்லை. பிறகு....?

"சாமியார், மோனத் தவம் செய்கிறாரோ?" என்று கண்ணாயிரம் கண் சிமிட்டிக் கேட்டதுகூட சரியாகக் காதில் விழவில்லை.

முதலாளி பாலன் வரவில்லை; பையனும் வரவில்லை. இந்தச் சமயம் சந்திரமதி வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். மனம்விட்டுப் பேசலாம்.

அவள் வரும் திக்கை நோக்கிப் பார்வையைச் செலுத்தினான்.

காற்றடிக்க வந்தவர்களிடம் காற்றடிக்கும் இயந்திரம் பழுதாகியிருக்கிறது என்று சொல்லி அனுப்பி விட்டான். வாடகைச் சைக்கிள் கேட்டவர்களுக்குச் சரிவரப் பதில் சொல்லவில்லை.

கட்சிக்காரர்கள் ஓரிருவர் வந்து பேச்சுக் கொடுத்தபோது சரிவரப் பேசவில்லை.

'என்ன தலைவலியா?' என்று அவர்கள் கேட்டபோது 'ஆமாம்' என்று தலையசைத்தான்.

இடிவேந்தன் வந்து கேட்டபோதும் அதே நிலைதான். அவர் காரிலிருந்து இறங்கி அருகே வந்து பேசியபோதுதான், பதறி எழுந்தான், பக்கிரி.

"முதலாளி நேற்றும் வரவில்லை. இன்றும் ஏனோ காணவில்லை" என்று பதில் சொல்வதற்குள் தடுமாறினான். இந்தச் சமயம் பார்த்து சந்திரமதி வந்து விட்டால், என்ன செய்வது? அவரைச் சீக்கிரம் அந்த இடத்திலிருந்து அனுப்பிவிட வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தான்.

"என்ன பக்கிரி, செயல் வீரர்கள் கூட்டம் இருப்பது உனக்குத் தெரியும்தானே? நீ வந்து விடு. சில திட்டங்கள் போட வேண்டும். ரகசியமாக வைத்திருக்கிறேன். பாலன் வந்த பிறகு கலந்து பேசி விட்டுத்தான் கூட்டத்தில் அறிவிக்க வேண்டும். பாலன் வந்தவுடன் சொல்கிறாயா? என்னை உடனே வந்து பார்க்கச் சொல்லு; மறக்காமல் சொல்லு!" அவர் காரில் ஏறிக்கொண்டே பேசினார்.



இரகசியத் திட்டம் என்பது என்னவாயிருக்கும்? வட்டச் செயலாளர் பதவிக்கா? மாநிலச் செயலாளர் பதவிக்கா? சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கு அவர் ஆசைப்படுகிறார். மேலிடத்தில் ஆதரவு பெற வேண்டும். அதற்கு ஆள்களைத் திரட்டுகிறார். பாலன் முக்கிய புள்ளி. அவர் உதவி - யோசனை வேண்டும்.

சந்திரமதி வரவில்லை. அவள் வரும் நேரம் கடந்து விட்டது. பகல் இரண்டு மணி. பசியின் கோரப்பிடியை அவனால் தாங்க முடியவில்லை.

பக்கிரி நிலைகொள்ளாமல் தவித்தான். யாரைக் கேட்பது? அவள் வீட்டு முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாதது எவ்வளவு மடத்தனம்.

அவள் தந்தையுடன் புதிய சைக்கிள் வாங்கி வந்து அதைச் சரிபார்க்கச் சொன்னது; பிறகு, அந்த மிதிவண்டிக்கு டைனமோ, இருக்கை, புதுவித ஒலி எழுப்பும் மணி போன்ற சிறுசிறு கருவிகளைப் பொருத்தியது உட்பட சைக்கிளைப் புதுமைப்படுத்துமாறு, சந்திரமதியின் தந்தை வேண்டிக் கொண்டபோது, அவர்கள் முகவரியைக் குறித்து வைத்திருந்த புத்தகத்தைத் தேடலானான் பக்கிரி. முழுமையும் தேடி முடிக்கவில்லை. பாலன் வியர்க்க விறுவிறுக்க சைக்கிளில் வந்திறங்கினார்.

எப்போதும் புன்முறுவலுடன் அமைதியாக இருக்கும் அவர் முகத்தில் கவலை நிறைந்திருந்தது. வெயிலில் வந்ததால் முகம் கன்றிப் போயிருந்தது. அவர் எதுவும் பேசவில்லை.

வீதியில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. வண்டி நிறையவே மூட்டைகளை ஏற்றிக் கொண்டு ஒருவர் இழுத்துச் சென்றார். பின்னாலிருந்து ஒருவர் வண்டியைத் தள்ளிச் சென்றார். புழுதியை வாரி இறைத்து விரைந்து சென்றது ஒரு லாரி. வீதிப் புழுதியெல்லாம் சாலையின் இருபுறமும் உள்ள கடைகளுக்குள் தஞ்சம் அடைந்தன.

"சே..." என்று படிந்த புழுதியைத் தட்டிவிட்டு, பக்கிரியைப் பார்த்து, 'பக்கத்துக் கடையிலிருந்து ஜில்லுன்னு கூல்டிரிங்க் வாங்கி வா' என்றார்.

எப்போதாவதுதான் அவர் அதுபோன்ற பணியை ஏவுவார். சிறு வயதாயிருந்தபோது பக்கிரியைப் பார்த்து 'காபி வாங்கி வா, வெத்திலை பாக்கு வாங்கி வா' என்று ஏவுவார். பக்கிரி வளர்ந்து விட்ட பிறகு அவனுக்கு இளைஞர் வட்டாரத்தில் மதிப்பு ஏற்பட்ட பிறகு, மதிவாணனை எதிர்க்கும் மனப்பாங்குடையவன் அவன்தான் என்ற அவன் பலம் அறிந்த பிறகு, பக்கிரியை மரியாதையுடன் நடத்தத் தொடங்கினார்.

பக்கிரி, குளிர்பானம் வாங்கச் சென்றபோது தொலைவில் சந்திரமதி வருவதைக் கண்டுவிட்டான். அவள் நடந்து வருகிறாள். சைக்கிள் எங்கே? முதல் நாள் அவள் வீட்டில் நடந்தவை அவன் அறிய முடியாதே.

சிற்றுண்டி விடுதியில் இருந்து, வீட்டிற்கு விரைந்த சந்திரமதிக்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது.

அவள் தாய் பார்வதியின் முகத்தில் கடுமையிருப்பதை உணர்ந்து கொண்டாள். சந்திரமதி உள்ளே நுழையும்போதே அவள் தங்கை, "ஸ்கூல் விட்டு நேரே வராம எங்கேக்கா போயிட்டே? மேகலா அக்கா வந்தது. அம்மாகிட்ட என்னென்னவோ சொன்னாள்? இப்பல்லாம் நீ அவளைப் பார்ப்பதில்லையாமே?" என்று தகவலை முன்பாகவே தெரிவித்ததனால் அவள் உடல் ஒருமுறை குலுங்கியது.

"சிற்றுண்டி சாலைக்குப் பக்கிரியுடன் சென்று வந்தது அம்மாவுக்குத் தெரிந்திருக்குமா?" என்று நினைக்கும்போது நெஞ்சை அடைத்தது.

அவள் தாய் பார்வதி, சந்திரமதியைத் திரும்பியும் பார்க்காமல், ஒரு வார்த்தை கூடப் பேசாமல் முகத்தைத்



திருப்பிக் கொண்டு மௌனமாக இருந்ததைக் கண்ட சந்திரமதிக்குப் பயம் மேலிட்டது. பயத்தால் அவள் கண்கள் கலங்கின.

"அம்மா" என்று அலறி, தன் முகத்தை அவள் மார்பில் புதைத்துக் குலுங்கிக் குலுங்கி விம்மினாள்.

## எட்டு

"சந்திரமதி" என்று அவன் கூப்பிட்டான். சந்திரமதி திரும்பிப் பார்த்தாள். அவள் விழிகளுக்கடியில் கருவட்டம். இரவெல்லாம் அழுதிருக்க வேண்டும். முகம் சற்று வீங்கியிருந்தது.

குளிர்பானக் கடையருகே பக்கிரியைச் சந்தித்ததில் அவளுக்கு மகிழ்ச்சிதான்.

"இந்த வெயிலில் எங்கே போகிறாய்?" என்று கேட்டான் பக்கிரி. "சைக்கிள் எங்கே? பள்ளிக்கூடம் போகவில்லையா?"

சந்திரமதி தாவணித் தலைப்பால் நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

"இங்கேயே பார்த்துவிட்டேன். அதிக நேரம் நின்று பேச முடியாது. இன்று பள்ளிக்கூடம் போகவில்லை. தொடர்ந்து பள்ளிக்கு அனுப்புவார்களா என்பது சந்தேகமே" என்றாள் பரபரப்புடன் சந்திரமதி.

"என்ன?" என்று அதிர்ச்சியுடன் கேட்டான். "என்ன ஆச்சு?"

பக்கிரி என்று கூப்பிடாமல் அவனைச் செல்லப் பெயரிட்டு 'கண்ணா' என்றழைப்பது அவள் வழக்கம்.

"கண்ணா, என்னை மறந்துவிடக் கூடிய நிலை வந்துவிடலாம்" - சந்திரமதியின் குரலில் சோகம் இழையோடியது.

"வீட்டிற்குத் தெரியாமல் வந்திருக்கிறேன். ஒரு விருந்தாளி வந்திருக்கிறார். சாப்பாட்டிற்கு வாழை இலை வேண்டும். வீட்டில் தங்கை தம்பி இல்லை. ஓடிப்போய் நுனி இலை இரண்டு அம்மா வாங்கி வரச் சொன்னதால் வந்தேன்."

"வாழை இலை வாங்கும் கடை வரையில் பேசிக்கொண்டே செல்வோம்" என்றான் பக்கிரி.

'ஒரு நாளில் - இருபத்திநான்கு மணி நேரத்தில் மாற்றமா? அதிர்ச்சியா? சந்திரமதிக்கு என்ன நேர்ந்துவிட்டது?...'

"என் உயிர்த் தோழிதான் மேகலா. அவளை நான் சந்திக்கவில்லை. என்னைத் தேடி நேற்று வந்திருக்கிறாள். நானில்லை. சிற்றுண்டி விடுதிக்குச் சென்றபோதே எனக்குத் தெரியும். உங்களைப் பார்த்துவிட்டு நான் வீட்டிற்கு வந்தேன். வீடே அமைதியாக இருந்தது. வீட்டிற்குள் நுழைவதற்கு முன்பே பார்த்து என் தங்கை நடந்ததைச் சொல்லிவிட்டாள். என் அம்மாவிடமோ, மேகலாவிடமோ நான் எதையும் மறைத்ததில்லை. எங்கேடீ போயிருந்தே என்று என் அம்மா கடுமையாகக் கேட்டிருந்தால்கூட நான் பொறுத்துக் கொண்டிருப்பேன். பளார் என்று அறைந்திருந்தால் சகித்துக் கொண்டிருப்பேன். வீட்டில் அமைதி. அம்மாவின் பயங்கர மௌனம். என்னைச் சாட்டை கொண்டு அடித்தது. அம்மாவின் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதேன்."

சந்திரமதியின் கண்கள் கலங்கின. வாழை இலை வாங்கியாகி விட்டது.



"பேசிக் கொண்டே இருந்தால் நேரமாகி விடும். அம்மாவின் சந்தேகம் அதிகமாகிவிடும். நான் வருகிறேன்" என்றாள்.

பதில் ஒன்றும் சொல்லத் தெரியாமல் திக்பிரமை பிடித்தவன் போல் பக்கிரி நின்றான்.

"கண்ணா! மறுபடியும் உங்களைப் பார்க்க வருவேன். வருத்தப்படாமல் போங்க" - என்று அவள் ஆறுதல் கூறினாள்.

குளிர்பானம் வாங்காமல் திரும்பி வந்த பக்கிரியைப் பார்த்துச் சீறினார் பாலன்.

பக்கிரியை இதுவரை கடிந்து கொள்ளாதவர் அவனைப் பார்த்துச் சீறினார்.

"அங்கே யாரோ பொண்ணோடு அரட்டை அடித்துவிட்டுத் திரும்பி வருகிறாயோ? தாகம்னுதானே உன்னை அனுப்பினேன்? வாங்கி வருவது பிடிக்கலைன்னா சொல்லியிருக்கலாம். வரவர உன் போக்கே எனக்குப் பிடிக்கவில்லை."

அப்பொழுதுதான், பக்கிரி தன் தவற்றை உணர்ந்தான். மீண்டும் கடைப் பக்கம் ஓடினான். குளிர்பானம் வாங்கி வந்தான். ஆனால், முதலாளி பேசிய வார்த்தை அவனைக் குத்தியது.

"என் போக்குப் பிடிக்கவில்லையாமே?" சொற்கள் அவனை வதைத்தன.

"உனக்கு என்ன ஆச்சு? பெரிய தலைவர்னு உனக்கு நினைப்பு வந்துவிட்டது. கடையைச் சரிவரக் கவனிப்பதில்லை. ஒரு வாரமா வியாபாரம் படுத்து விட்டது. காற்றடிக்கும் இயந்திரம் பழுதாகி விட்டதுன்னு சொல்றியாமே? புது நண்பர்கள் எல்லாம் கிடைக்கறாங்க. ஹூம்..." என்று படபடவென்று பேசினார் பாலன்.

பக்கிரி பதில் பேசாது தலை குனிந்து நின்றான்.

"இடி வேந்தன் வந்தாரா? என்ன சொன்னார்? அவர் வந்தார் என்றால் வீட்டிற்கு ஆளனுப்புவதுதானே? நான் வந்ததும் அதைச் சொல்ல வேண்டும் என்று உனக்குத் தோன்றவில்லையே?" பாலன் பேச்சில் கடுமை இருந்தது.

பாலனுக்குப் பசி நேரம். அன்று கடுமையான அலைச்சல். மருதவாணனிடம் தகராறு. பக்கிரி மீது சந்தேகம்.

"உனக்குத் தெரியுமா? இடி வேந்தனுக்கும் மருதவாணனுக்கும் போட்டாபோட்டி. என்னை இருவரும் அவர்கள் பக்கம் ஆதரவு கேட்டு இழுக்கப் பார்க்கறாங்க. உன்னை மருதவாணன் கைக்குள் போட்டுக்கப் பார்க்கிறார். அதனால் நீ இரகசியமாப் பேச பேட்டை விட்டுப் பேட்டை போயிருக்கே... உன்னைப் பேரம் பேசற அவங்க வலையிலே விழப் பார்க்கறே. உன்னை இழுக்க யார் யாரோ எப்படி எப்படியோ முயற்சி பண்றாங்க. மில் யூனியன் லீடர் தன் பொண்ணைக் கூட்டிக் கொடுத்து உன்னை இழுக்கப் போறாரு. அதனால நீ அந்தப் பொண்ணு பின்னாடி சுத்தறே..."

பாலன் பசியும், ஆத்திரமும், கோபமும் ஒன்று சேரப் பொரிந்து தள்ளினார்.

பக்கிரி ஒன்றும் புரியாமல் நின்றான். பாலன் என்ன சொல்கிறார்? எதை மனத்தில வைத்துக் கொண்டு சொல்கிறார்? மருதவாணன் என்னைத் தன் பக்கம் இழுக்கப் பார்க்கிறாரா?

மில் யூனியன் தலைவர் மகளுடன் நான் சுற்றுகிறேனா? யார் அந்தப் பெண்? பக்கிரிக்குப் புரியவில்லை.

"யாரைச் சொல்கிறார், முதலாளி?" – அவரை நிமிர்ந்து நோக்கினான்.

"அதென்னங்க பொண்ணு – கிண்ணுன்னு புதுசா பேசறீங்க?– எனக்கு அதெல்லாம் புரியாதுங்க" – பக்கிரி துணிவுடன் கேட்டான்.



"பக்கிரி! அரை டிரௌசர் போட்டுட்டிருந்த வயசிலேருந்து எனக்கு உன்னைத் தெரியும்டா. மீசை முளைத்த உடனே மாறிட்டே. நம்ம கடைக்கு வருமே அந்தப் பெண்ணோட நீ சுத்தறியா இல்லையா? இப்ப கொஞ்ச நேரம் முன்பு, கூல்டிரிங்க் கடையிலே நின்னு பேசிட்டிருந்தியா இல்லையா? என்னிடம் எதையும் மறைக்க முடியாது தம்பி!" என்று பேச்சை வீசி விட்டு, கடையை விட்டு இறங்கி நடந்தார்.

பக்கிரி, சைக்கிள் ஸீட் மீது கையை ஊன்றி ஒன்றும் புரியாமல் சற்று நேரம் நின்றான்.

'சைக்கிள் கடைக்கு வரும் சந்திரமதியின் தந்தை யூனியன் லீடரா? எனக்குத் தெரியாதே? சந்திரமதியுடன் நான் சுற்றுகிறேனா? என்ன அபாண்டப் பேச்சு? யூனியன் லீடர் தன் பெண்ணைப் பழக விட்டு என்னைத் தன் பக்கம் இழுக்கப் பார்க்கிறாரா? புதிய செய்தியாய் இருக்கே!'

அந்தத் துயரமான நிகழ்ச்சியிலும் அவனுக்குள் சிரிப்பு வந்தது. 'சந்திரமதியை அவள் தந்தை எனக்குக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறாரா? ஆகா – அப்படியும் நடந்து விட்டால் நான் யாரை வேண்டுமானாலும் ஆதரிக்கத் தயார்!'

பாலன் பொய் சொல்ல மாட்டார். அரசியல் சதுரங்கக் காய்கள் நகர்த்தப்பட இருக்கின்றன. எந்தத் தலை வெட்டப்படுமோ? தன்னை வைத்துக் கொண்டு தாயம் போடத் தொடங்கி விட்டார்களா?

பசி களைப்பு மனச் சோர்வு அவன் விழிகளைச் சுழற்றி இழுத்தன. அப்படியே அருகிலிருந்த மர ஸ்டூலில் அமர்ந்து தூணில் சாய்ந்தான்.

"ஐயா, ஐயா" என்று யாரோ அவனைத் தட்டி எழுப்பினார்கள்.

கடைக்காரப் பையன் நின்று கொண்டிருந்தான்.

"அதோ, அங்கே அக்கா நிக்குது – உங்களைக் கூப்பிடுது" என்று அவன் குரல் கொடுத்தான்.

வாடகை நூல் நிலையம் அருகே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். மேகலா என்று அவனுக்குத் தெரியாது.

அருகே சென்றான். அவள் மெல்லச் சிரித்தாள். அதில் பயமும் இருந்தது.

"அண்ணா" என்று அவள் அழைத்தாள். பிறகு, "ஸாரி; ரெஸ்ட் எடுத்துண்டிருந்திங்க போலிருக்கு. உங்களை டிஸ்டர்ப் செய்துட்டேன்" என்றாள்.

இவளை எங்கோ ஒருமுறை பார்த்திருக்கிறேன். ஆ – நினைவு வந்துவிட்டது.

"நீங்க மேகலாதானே?" என்று கேட்டான். பசிக் களைப்பில் வரும் கொட்டாவியைக் கையால் மறைத்துக் கொண்டான்.

"உங்களோட கொஞ்சம் பேசணும். நான் யார்னு தெரிஞ்சிட்டீங்க இல்லே?" – மேகலா குரலுக்கும் – சந்திரமதி குரலுக்கும் வித்தியாசமிருந்தது. கொஞ்சம் 'இச்சுக்' கலந்திருந்தது.

"மேகலா. சந்திரமதியின் தோழி."

"எஸ். பெஸ்ட் ஃபிரண்ட்."

பக்கிரிக்கு எரிச்சலாக இருந்தது. எவ்வளவு ஆங்கிலச் சொற்கள். சந்திரமதி நல்ல தமிழில் அழகாகப் பேசுகிறாள். அவளுடைய உயிர்த் தோழிக்கு ஆங்கில மோகம்.

"உங்ககிட்ட அவசரமா பேசணும். சந்திரமதி சொல்லியனுப்பினாள்; ஒட்டலுக்குப் போய்ப் பேசுவோமா?"

பக்கிரி அவள் விழிகளை உற்று நோக்கினான்.

"ஆமாம் அண்ணா! சந்திரமதியே அனுப்பினாள். என்னால் அவளுக்கு ஒரு தொல்லை ஏற்பட்டது. அதற்குப்



பிராயச்சித்தமாக நான் அவளுக்கு நல்லது செய்தாக வேண்டும்."

சரியென்று தோன்றியது பக்கிரிக்கு. "இதோ பணம் எடுத்துட்டு வரேன்" என்று கடைக்குள் நுழைய முற்பட்டவனை, "வேண்டாம்; வேண்டாம். ஐ ஹேவ் எனஃப் மணி" என்றாள்.

நேற்று சந்திரமதியுடன் உட்கார்ந்து சாப்பிட்டான். அப்பொழுது இருவரும் ஒன்றும் பேசவில்லை.

இன்று மேகலா, நிறையப் பேசினாள். பூரி, தோசை, வடை என்று பக்கிரி சாப்பிட்டுக் கொண்டே அவள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். மேகலா ஒன்றும் சாப்பிடவில்லை. ஒப்புக்காக ஒரு காபி மட்டும்.

சந்திரமதி நிறையச் செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறாள் என்ற மகிழ்ச்சியில் அவன் பசியாறச் சாப்பிட்டான்.

"சந்திரமதிக்கு உங்கள் மீது லவ் என்று பிறகுதான் எனக்குத் தெரியும். ஆனா, அவ அதை என்னிடமிருந்து மறைக்காம, முதலிலேயே உண்மையைச் சொல்லியிருக்கலாம். அவளைப் பார்க்காமல் ஒரு நாள் கூட நான் இருக்க முடியாது. அப்படி ஒரு நெருங்கிய நட்பு. ஒரு வாரமா அவளைப் பார்க்க முடியவில்லை என்றவுடன் – எனக்குக் கோபமும் ஆத்திரமும் ஏற்பட்டன. அவளைத் தேடி வீட்டிற்குப் போய் விட்டேன். அங்கே தான் நான் தவறு செய்து விட்டேன். அவள் உண்மையை அம்மாவிடம் ஒப்புக் கொண்டு விட்டாள்" என்றாள்.

பக்கிரி திடுக்கிட்டான்.

"எங்கள் காதலைத் தன் அம்மாவிடம் சொல்லி விட்டாளா?" என்று கேட்டான்.

"ஆல் தி திங்க்ஸ் சொல்லலை. உங்களுடன் ஒட்டலுக்குப் போனதை மட்டும் சொன்னாள். பொய் அங்கே

தொடங்கிவிட்டது. அவள் சைக்கிளை ரிப்பேர் செய்யும் கடைக்காரர் என்று உங்களைச் சொல்லி, மற்றொரு பிரண்டுடன் அவள் சென்றபோது உங்களைச் சந்தித்ததாகவும் அதனால் அன்று வர நேரமாகி விட்டது என்றும் பெரிய பொய் சொன்னாள். அதனால், இன்று அவளுக்கு ஹவுஸ் அரெஸ்ட். அவளுக்குக் கல்யாண ஏற்பாடு நடைபெறுகிறது.'' மேகலா சற்று நிறுத்தி, பக்கிரியை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

பக்கிரியின் முகத்தில் அதிர்ச்சி ஏற்பட்டது தெரிந்தது.

``கல்யாணமா?'' என்று அவன் கேட்டான்.

மேகலா அவன் மனத்தட்டில் டங்கென்று கல்லைப் போட்டுவிட்டாள். இலேசான வலி. விரிசல் ஏற்படவில்லை.

``பாருங்க அண்ணா! அவளுடைய அப்பா பெரிய இடத்திலே மாப்பிள்ளை பார்க்கிறார். அந்தப் பையனுக்கும் சந்திரமதியைப் பிடித்துவிட்டது. 'மணந்தால் சந்திரமதியைத்தான் மணப்பேன்' என்று பிடிவாதம் பிடிக்கிறான். இன்று பெரிய பிரஸண்டேஷனுடன் சந்திரமதியின் வீட்டிற்கு வந்திருக்கிறான். அவள் அம்மா பார்வதி பின்புறம் குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தாள். பரிசுப் பொருளுடன் வந்திருப்பவன் தன்னை மணப்பதற்காகத் தவம் செய்பவன் என்பது அவளுக்குத் தெரியாது. அவனை வரவேற்று, நாற்காலியில் உட்காரச் சொன்னாள். ஃபேனைப் போட்டாள். அவன் தன் கையிலிருந்த பரிசுப் பொருளை அவளிடம் நீட்டி, ``உனக்குப் பர்த்டே பிரசன்ட்'' என்று கூறி அசடு வழிந்திருக்கிறான்.

சந்திரமதிக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுக்கு அன்று பிறந்த நாளில்லை. வந்தவரும் யார் என்று தெரியவில்லை.



``எனக்குப் பிறந்த நாளா?'' வியப்புடன் அவனைப் பார்த்துக் கேட்டாள். நீங்கள் யார் என்ற கேள்விக் குறி புருவத்தை உயர்த்தியதில் தெரிந்தது.

``உனக்கு இல்லை. எனக்கு. என் பிறந்த நாள் மிக நல்ல நாளாக அமைய வேண்டும். உனக்கு என் முதல் பரிசு. என்னையே உனக்குத் தருவதற்கு முதல் அச்சாரம்!'' என்றவுடன், சந்திரமதி அதிர்ந்தாள். அதிர்ச்சியில் கையில் வைத்திருந்த பரிசுப் பொருள் கீழே நழுவி விழுந்தது. பரிசுப் பொருள் பாக்கெட்டின் உள்ளே சுவர்க் கடிகாரம் இருந்திருக்க வேண்டும். 'சில்'லென்று அது உடைந்த ஓசை கேட்டது.

இந்தச் சம்பவத்தை மேகலா சொல்லிக் கொண்டே இருக்க, சிலையானான் பக்கிரி.

## ஒன்பது

மேகலா சொல்லிக் கொண்டே போனாள். பக்கிரி விழியைத் திறந்தவாறு, மந்திரத்தால் கட்டுண்டவன் போல் கேட்டுக் கொண்டிருந்தான்.

'இவ்வளவு செய்திகளையும் என்னிடம் சொல்ல வேண்டும் என்று இவளுக்கே தோன்றியதா? அல்லது சந்திரமதி சொல்லி அனுப்பினாளா?'

முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லாமல் பக்கிரி கேட்டுக் கொண்டிருந்தான். தாகமாயிருந்தது.

மேகலா சொல்வதை நிறுத்தினாள். அவனையே பார்த்தாள்.

"என்ன ஸார்! அப்படி வெறித்துப் பார்க்கிறீர்கள்? நீங்கள் கவிஞரா? மோன நிலையில் எங்கோ கனவுலகில் சஞ்சரிக்கிறீர்களா? உங்கள் சந்திரமதி என்னைத் தூது அனுப்பியிருக்கிறாள் ஸார்" என்று அவள் கூறியவுடன், பக்கிரி கலக்கம் நீங்கி அவளை ஏறிட்டுப் பார்ப்பதிலிருந்து விலகித் திரும்பிச் சாலையை நோக்கினான்.

மேகலா சற்று மெல்லிய குரலில், "காதலுக்குத் தூது வந்திருக்கிறேன். தலைவியிடம் தலைவன் தோழியைத் தூது அனுப்புவதாகச் சொல்லுவார்கள். நான் தலைவியிடமிருந்து தலைவனிடம் வந்திருக்கிறேன். சந்திரமதிக்குக் கட்டுக் காவல் அதிகமாகி விட்டது. அவள் இனிமேல் வெளியே வருவாளா என்பது சந்தேகமே..." என்றாள்.

"படிப்பு - பள்ளிக்கூடம்?" பக்கிரி அதிர்ச்சியுடன் கேட்டான்.

"சந்திரமதி, இரண்டு தவறுகள் செய்துவிட்டாள், மூன்று தவறுகள் என்று சொல்லலாம். சொல்லட்டுமா?" என்று அவனிடம் மிக நெருக்கமாக வந்து, "தவறுகள் மூன்று: அவள் உங்களைக் காதலித்தது. காதலை என்னிடம் சொல்லாமல் மறைத்தது. மூன்றாவது அவளுக்கு என்று நிச்சயம் செய்த மாப்பிள்ளையை அலட்சியம் செய்து அனுப்பியது" என்று விரல் விட்டாள்.

மேகலா சொல்லிவிட்டுக் குறும்புத்தனமாகச் சிரித்தாள். பக்கிரியின் முகம் மாறியது கண்டு, "ஸார்! நான் சந்திரமதியைக் கேலி செய்வது போல் உங்களையும் செய்தேன். உயிருக்குயிரான தோழியான அவள் தன் அந்தரங்கத்தை முதலில் என்னிடம் சொல்லியிருக்க வேண்டும். பிறகு, சொல்லிவிட்டு வருந்தினாள். 'உன் காதலரை எனக்குக் காட்டுகிறாயா?' என்று நான் கேட்ட போது, முதலில் வெட்கப்பட்டு தொலைவிலிருந்து அவள் உங்களைக் காட்டினாள். 'உன் செலக்ஷன் ஸூப்பர்ப்பா'



என்றேன். 'நீயும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பற்றி என் கருத்தைக் கேளு' என்று அவள் என்னைச் சீண்டினாள்" என்று கூறி பக்கிரியைப் பார்த்தாள்.

"நிஜமாகவே சந்திரமதிக்கு என்னைப் பிடித்திருக்கிறதா?" என்று பக்கிரி அவளிடமிருந்து உண்மையை வரவழைக்க முயன்றான்.

"ஸார்! உங்கள் பெயர் எனக்குப் பிடிக்கவில்லை. அவளுக்கும் முதலில் பிடிக்கவில்லை. ஆனால், 'பெயரில் என்ன இருக்குப்பா?' என்று தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள். நீங்கள் ஒரு ஜென்டில்மேன். ஹோட்டலில் நீங்கள் ரொம்ப டீசண்டாக நடந்து கொண்டீர்களாம்."

பக்கிரி சிலிர்த்துப் போனான்.

"என் உயிர்த் தோழி சந்திரமதியைப் போன்ற பெண் கிடைக்கமாட்டாள் ஸார்! சரி ஒரு நல்ல தமிழ்ப் பெயராக வைத்துக் கொள்ளுங்களேன். நீங்கள் நல்ல தமிழ் பேசுவீர்களாம். அவளுக்கு ஏற்றவர் நீங்கள். அவளுக்கும், அவள் தந்தைக்கும் தமிழ் என்றால் உயிர்.

"ஸார்! தனக்குப் பார்த்து வைத்த மாப்பிள்ளையைக் கண்டால், அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆனால், அவள் தந்தையும், தாயும் அந்த மாப்பிள்ளைக்குத்தான் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று உறுதியாக இருக்கிறார்களாம்."

"ஏன் அப்படி?"

"ஏன் அப்படி என்பதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று: அவர்கள் பார்த்திருக்கும் மாப்பிள்ளை பெரிய இடத்துப் பிள்ளை. இரண்டு: நீங்கள் பெண் கேட்டு வரவில்லை."

பக்கிரி திடுக்கிட்டான். 'சந்திரமதி மீது நான் கொண்ட காதல், அவளுக்கு ஓரளவு புரியவே பல நாள்கள் ஆகும் என்று நினைத்தேன். அவள் தகுதிக்கு நான் ஏற்றவனா

என்று கூட நான் நினைத்தது உண்டு. ஆனால், சந்திரமதி என் மீது இவ்வளவு ஆழமான காதல் கொண்டிருக்கிறாள் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. நாம் என்ன செய்யலாம்? நமக்கு யோசனை சொல்பவர்கள் யார்? மனத்திலிருப்பதை வெளியே சொல்லவும் கூட நம்பிக்கையானவர்கள் இல்லையே! நண்பர்கள் என்று எல்லாரையும் ஒப்புக் கொள்ள முடியாது. அறிமுகமானவர்கள்; ரயில் சிநேகிதர்கள் போல் அவ்வப்போது பார்த்துப் புன்னகை செய்பவர்கள்; அரட்டை அடிக்கக் கூடுபவர்கள்; ஏதாவது பலனை எதிர்பார்த்து அன்புடனிருப்பவர்கள் என்று நண்பர்களை வகைப்படுத்தினால், மனத்திலுள்ளதைச் சொல்லி யோசனை கேட்கும்படியாக ஒருவருமில்லையே! சந்திரமதிக்கு மேகலா கிடைத்தது போல் நமக்கு ஒரு நண்பன் கிடைக்கக் கூடாதா?"

பக்கிரி சிந்தித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து மேகலா அவன் செவிகளில் விழும்படி, "ஸார்! நேரமாகிறது நான் போகிறேன். நான் மாலையில் அவளைச் சந்திப்பேன். ஆதரவான வார்த்தைகள் சொல்லுங்கள் ஸார்! நீங்கள் சொல்வதை அப்படியே அவளிடம் தெரிவிக்கிறேன். அவளுக்குப் பிரியமில்லாதவனை அவள் மாலையிடுவதைத் தடுக்க முடியாதா?" என்று கேட்டாள்.

பக்கிரியின் மேனி சிலிர்த்தது. அவளை மணக்கத் துடிப்பவன் பெரிய இடத்துப் பிள்ளை என்றாளே!

"மாப்பிள்ளை யார்? உனக்குத் தெரியுமா?"

"சந்திரமதியின் தந்தை, வேலு வேலை செய்யும் மில்லில் பெரிய அதிகாரியாம். அவருடைய பையன். அவருக்கு இந்தச் சென்னையில் மூன்று வீடுகள். கிராமத்தில், நிறைய நில புலன்கள்; பாங்க் பாலன்ஸ் பல லட்சம். அவருக்கு வட்டியின் மூலம் வரும் தொகையும் மிக அதிகம். அவர் மில்லில் வேலை செய்யவே வேண்டாம்.



இருந்தாலும், மில்லில் அவர் வேலை செய்வதால்தான் அவருக்குச் செல்வாக்கு அதிகம்."

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?"

"சந்திரமதி தங்கள் குடும்பத்தைப் பற்றி ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லுவாள். அவள் தாயும் தந்தையும் அந்த வரனை எப்படியாவது முடிக்க விரும்புகிறார்கள். மாப்பிள்ளைக்கு மெடிக்கல் காலேஜில் ஒரு ஸீட் வாங்கித் தந்தால் போதுமாம். சந்திரமதியின் தந்தையால் சுலபமாக முடியுமாம்."

"எப்படி முடியுமாம்?"

"அவர் கட்சியில் முக்கியப் புள்ளியாயிற்றே. போனெடுத்துப் பேசினால் போதும்; எல்லாம் நடந்து விடும்."

"இவ்வளவு பெரிய செல்வர் வேலு வீட்டுப் பெண்ணை மணப்பதற்கு என்ன காரணம்?"

மேகலா சிரித்தாள். "நீங்கள் சந்திரமதி மீது காதல் கொள்ள என்ன காரணம்?"

பக்கிரி சிரித்தான்.

அடுத்திருந்த வாடகை நூல் நிலையம், பகல் உணவு இடைவேளைக்குப் பிறகு திறந்து விட்டார்கள். சாப்பாட்டிற்குப் போன மிதி வண்டி நிலையப் பொடிப்பயல் வீட்டிலிருந்து திரும்பி விட்டான்.

"அண்ணாச்சி, பசிக்கவில்லையா? நான் போய் ஒருமணி நேரமாகியிருக்குமே? இன்னுமா, இவங்களோட பேசிட்டிருக்கிங்க?" என்றான் பொடிப் பயல்.

மேகலாவைப் பார்த்த அவன் பார்வையில் விஷமமிருந்தது.

"சரி, சகோதரி! நான் யோசித்து வைக்கிறேன். மாலை இந்தப் பக்கம் வரமுடியுமா?" பக்கிரி கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு கேட்டான்.

"ஓ... அவசியம் வருகிறேன். நல்ல சேதி சொல்லுங்கள். உங்களுக்கு வேண்டிய ஹெல்ப்பெல்லாம் நான் செய்யத் தயார். நான் சொன்னால் எங்கள் வீட்டில் மறுப்பு கூற மாட்டார்கள்" என்று கூறிவிட்டு, "எஸ் வருகிறேன். பை பை குட் ரிஸல்ட்" என்று கூறிவிட்டு, இரட்டைச் சடையை முன் பக்கத்திலிருந்து பின்பக்கம் தள்ளிவிட்டுப் புறப்பட்டாள். சிறிது தூரம் சென்றவள், "ஓர் உதவி செய்ய முடியுமா? நான் இந்தப் பக்கம் வரமாட்டேன்; தயவு செய்து பிளாசா அருகே நின்று கொண்டிருக்க முடியுமா?" என்றாள். தலையசைத்தான் பக்கிரி.

பையனை அனுப்பி மசால் தோசையும் காபியும் வாங்கி வரச் சொல்லிச் சாப்பிட்டுவிட்டு ஒரு குயர் வெள்ளைத்தாள் வாங்கிவரச் செய்தான்.

எழுதினான்; எழுதினான். அப்படி எழுதினான். பேச்சாற்றலை விட எழுத்தாற்றல் அவனுக்கு இன்னும் சிறப்பாக வரும் போல் தோன்றியது.

'அவளுக்கு எழுதிய கடிதத்தைப் பாதி வழியில் மேகலா பிரித்துப் படித்தால்? ஸ்வீட் பாக்கெட்டைத் திறந்து, அதிலிருந்து சிறு விள்ளலை எடுத்துச் சுவைப்பது போல் சுவைத்துப் போகட்டுமே! இனிப்புப் பொட்டலத்திலிருந்து சிறு விள்ளல் எடுத்தால் கூடத் தெரிந்துவிடும். காதல் கடிதத்திலிருந்து அப்படி இல்லை. படிக்கட்டும்; படித்துப் பார்த்துச் சிலிர்த்துப் போகட்டும்!'

ஒருமுறை தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். உள்ளத்திலுள்ளதை எப்படியெல்லாம் வர்ணித்திருக்கிறான்!

'புராண காலச் சந்திரமதிக்கு அரிச்சந்திரன் பல தொல்லைகள் கொடுத்துவிட்டான். நான் அப்படித் தர மாட்டேன். அழியாத மாங்கல்யம் அணிவிப்பேன். நாமிருவரும் வாழப் போகும் பூமி புதுமையானது. இலட்சிய வாழ்க்கை நடத்துவோம்.



'என் அருமைச் சந்திரா! நீயும் நானும் எந்தத் தடைகளையும் எதிர்த்து நிற்போம். புதிய சமுதாயம் படைத்திட நாம் போராடுவோம். அந்தப் போராட்டத்தில் நீ எனக்குத் துணையாக நிற்பாயா?

'என் பெயர் உனக்குப் பிடிக்கவில்லை என்றால் உனக்காகப் பெயரை மாற்றிக் கொள்கிறேன். உன் பெற்றோர் உன்னைப் படிக்க வைக்கிறார்கள். என்னைக் காதலிப்பதால் உன் கல்விக்கு இடையூறு வந்துவிடக் கூடாது.

'எனக்குத்தான் அந்த அதிர்ஷ்டம் இல்லை. பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைக்க முடியவில்லையே என்று என் அம்மா கண்ணீர் விட்டிருக்கிறாள். ஆனால், நான் நிறையப் படித்து வருகிறேன். பள்ளிக் கல்வியைவிட எனக்கு எல்லாக் கலைகளிலும் அறிவு வளர்ந்து வருகிறது. படிக்காதவன் மனைவி என்ற பெயர் உனக்கு வரவே வராது.

'இந்த மிதி வண்டி நிலையத்திலேயே நான் காற்றடித்துக் கொண்டு, சக்கர வண்டிகளைச் சரி பார்த்துக் கொண்டு இருப்பேன் என்று நினைத்து விடாதே. வாழ்க்கைச் சக்கரம் சீராகச் சுழலச் செய்வேன்.

'எனக்கென்று சில இலட்சியங்கள் உள்ளன. புதுமைப் பெண் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று கனவு காண்பவன் நான். முற்போக்கு எண்ணங்களுக்குச் சொந்தக்காரியாக நீ இருப்பாய் என்பது எனக்குத் தெரியும்.

'உலக மகளிர் பலரைப் பற்றிப் படித்திருக்கிறேன். நம் நாட்டுப் பெண்மணிகளைப் பற்றியும் நான் படித்திருக்கிறேன். மிதிவண்டி நிலையத்தில் உட்கார்ந்து கொண்டு நான் பெண்களின் நடை உடைபாவனைகளைக் கூர்ந்து நோக்கியிருக்கிறேன்.

'அவர்களிடமிருந்து என் சந்திரமதி முற்றிலும் மாறுபட்டவள் என்பது எனக்குத் தெரியும். மிதிவண்டி

வாங்குவதற்கு முன்னால் நீ இந்த வழியே செல்லும்போதே உன்னைப் பார்த்திருக்கிறேன். நீ அப்போதே என் உள்ளத்தில் புகுந்திருக்க வேண்டும்.

'என் இதய பீடம் உனக்காகவே அமைக்கப் பட்டது என்பதை உணர்கிறேன். ஆகா! காதலுக்குத்தான் எவ்வளவு வேகம்! அது காற்றினும் கடிய வேகம் கொண்டது. மழையை விடக் குளிர்ந்தது. காதல் கனல் உள்ளத்துள் புகுந்துவிட்டது. அதனால், ஏற்படும் விளைவுகளுக்கு எல்லையில்லை.'

எவ்வளவு நேரம் எழுதியிருப்பானோ? அவன் இதய ஒலி வரிவடிவமாக வெள்ளைக் காகிதத்தில் பதிந்தது.

ப்ளாசா அருகே முடிவுடன் மேகலா வரச் சொன்னது. அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது.

பக்கிரி தான் எழுதிய கடித வரிகளின் ஒவ்வோர் எழுத்தையும் தானே ரசித்து அனுபவித்தான்.

'ஏ, பக்கிரி! நீ அதிர்ஷ்டசாலியடா! உன் கிறுக்கலை, காதலின் போதை வார்த்தைகளை உன் அருமைக் காதலி படித்துப் பரவசம் அடையப் போகிறாளடா!...''

அதோ, மேகலா வந்து கொண்டிருக்கிறாள்.

சிறிது நேரம் முன் வரை இந்த நான்கு பக்கங்களும் வெள்ளைக் காகிதம். இப்போது காதல் காவியத்தை அவை தம்மீது படிய வைத்துக் கொண்டன.

அஜந்தா சித்திரங்கள் தீட்டப்பட்ட பாறைகளைப் போல் இந்தக் காகிதங்கள் என் இதய ஒலியைப் பதிய வைத்துக் கொண்டிருக்கின்றன.

மேகலா அவனை வியப்புடன் பார்த்தாள். "ஸார்! எவ்வளவு நேரம் ப்ளாஸா அருகே காத்திருப்பது? இதே இடத்திலா இவ்வளவு நேரமாக உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று விழிகளை அகல விரித்துக் கேட்டாள்.



"இங்கேயே கற்சிலையாக மாற வேண்டுமென்றாலும் நான் தயார்." அவன் சிரித்தான்.

"சந்திரமதிக்கு நான் என்ன கூறுவது? பிடிக்காதவனுக்குத் தாலி கட்டுவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? பாவம், அவள் உங்களை நம்பியிருக்கிறாள். ஒரு வார்த்தை சொல்லுங்கள். ஓடிப்போய் அவளிடம் சொல்கிறேன்" மேகலா நாடக வசனம் போல் பேசினாள்.

"ஒரு வார்த்தை என்ன, ஓராயிரம் வார்த்தை சொல்கிறேன். இதோ, என் இதய ஒலியைப் பதிய வைத்த ஒலி நாடா!" பக்கிரி தன் கையிலிருந்த கடிதக் கவரை அவள் கையில் கொடுத்தான்.

## பத்து

மேகலாவிடம் கடிதத்தைக் கொடுத்த பிறகு, பக்கிரிக்கு மனப்பாரம் குறைந்துவிட்டது போன்ற உணர்ச்சி.

அவன் செய்வதைப் பக்கத்து வாடகை நூலகத்துப் பையன் பார்த்துக் கொண்டிருப்பதை அவன் கவனிக்கவில்லை.

டீ சாப்பிட வேண்டும் என்று தோன்றியது. கடைப் பையன் சைக்கிளுக்குக் காற்றடித்துக் கொண்டிருந்தான். டீ வாங்கி வர அவனை ஏவ விரும்பவில்லை.

எதிரே உள்ள நாயர் டீ ஸ்டாலுக்குப் புறப்பட்டான்.

"தலைவர் இன்னிக்கெல்லாம் ரொம்ப பிஸி போலிருக்கிறது!" என்று கேட்டு வாடகை நூலக அதிபர் கண்ணாயிரம் காவிப் பல்லைக் காட்டினான்.

"வாங்கண்ணே, டீ சாப்பிட்டுட்டு வரலாம்" என்று பக்கிரி அவனை அழைக்கும் போது, அவன் மனத்தில் குதூகலப் பறவை சிறகடித்தது.

டீ சாப்பிட பக்கிரியே அழைக்கிறான் என்றால் பெரிய மழைதான் அன்று வரப் போகிறது.

வானத்தை அண்ணாந்து பார்த்தான். "மழை வரப் போறதாத் தெரியலையே?" என்றான் கண்ணாயிரம் பெரிதாகச் சிரித்து.

"மழையா. இப்ப ஏன்?" பக்கிரி புரியாதவனாகக் கேட்டான்.

"தலைவர் டீ சாப்பிட அழைத்து விட்டார்; அதனால் வானம் பொத்து மழை பெய்யும்! ஆகாகா!" என்று சிரித்தான் கண்ணாயிரம். "நான் தான் பில் கொடுப்பேன். நாயர் கடை வேண்டாம். பிளாஸா ரெஸ்ட்டாரண்ட் போவோம்" என்று அழைத்தான்.

"வேண்டாம்; வேண்டாம். முதலாளி வந்துவிடுவார்" என்றான் பக்கிரி. "இரண்டு நாள்களாக முதலாளி ஏனோ கர்புர்ரென்று இருக்கிறார்" என்று சொல்லிவிட்டு, "எங்கள் முதலாளியின் போக்கு சில வாரங்களாகவே மாறி வருகிறது!" என்றான் பக்கிரி.

"ஓ! நீ கூட அதைக் கவனித்து விட்டாயா? இப்ப பாலன் ஒரு பெரிய அரசியல் புள்ளி. நம்ம பேட்டையிலே பதவிப் போராட்டம் தொடங்கிவிட்டது. அதன் விளைவுதான் பாலனின் மாற்றமும்."

"பதவிப் போராட்டமா? சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கா? மாநகராட்சித் தேர்தல் நடக்கப் போகிறதா?"

கண்ணாயிரம் மீண்டும் பலமாகச் சிரித்துவிட்டு, "மாநகராட்சியா? அதை மறந்து ஒரு தலைமுறையாகி விட்டதே. சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கும் போட்டியில்லை. அதை விடப் பலமான பதவி – வட்டச் செயலாளர் பதவிக்குத்தான் கடும்போட்டி."



பக்கிரி மௌனமாக நடந்தான். சிற்றுண்டி விடுதிக்குள் நுழைந்தாகி விட்டது. அரசியலில் தனக்கென்று அசைக்க முடியாத கொள்கை உடையவன் பக்கிரி. தான் பணியாற்றும் மிதிவண்டிக் கடை முதலாளி பாலனின் அரசியல் கொள்கைகள் அவனுக்குப் பிடிக்கும். இயற்கையாகத் தனக்குள்ள கொள்கையை மேலும் செம்மையாக உருவாக்குபவர் பாலன் என்று உறுதியாக நம்பினான். மிதி வண்டி நிலையம் வளர்ந்து வந்தது – பாலனும் வளர்ந்தார். பக்கிரியும் வளர்ந்தான். அவன் தாய் இறந்த பிறகு பாலனின் அன்பும் ஆதரவும் அவனுக்கு அதிகமாய்க் கிடைத்தன.

குரலைத் தாழ்த்தி, "பக்கிரி! அரசியல் விஷயம் இருக்கவே இருக்கிறது. எப்போதும் அதே நினைவு – பேச்சு. தலைவா! உன்னைப் பாராட்டத்தான் இங்கே அழைத்து வந்தேன். அதோ ஸர்வர்! – என்ன சாப்பிடுகிறாய்?" என்று உற்சாகமாகக் கேட்டான். குதப்பிய வெற்றிலையைத் துப்பி வாயைக் கொப்பளித்து வர, எழுந்து சென்றான் கண்ணாயிரம்.

"தலைவா! காலைக்கு இப்போ ரொம்ப உற்சாகமாயிருக்கே. அந்தப் பொண்ணுகிட்ட ரொம்ப நேரம் பேசினே. கடிதம் ஒண்ணு கொடுத்தே. யாருப்பா குட்டி? துறுதுறுன்னு ஜோரா இருக்கு?" என்றான்.

பக்கிரிக்கு எரிச்சல் ஏற்பட்டது. வாடகை நூல் நிலையத்திற்கு வரும் பெண்களுள் சிலரிடம், பல்லிளித்துப் பழகிப் போன இவன், பேச வரும் எல்லாப் பெண்களையுமே தவறான கண்ணோட்டத்தில் பார்க்கிறான். ஆனால், தன் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருகிறானா?

"தலைவா! சாமியாராயிருந்த நீ மாமியாரைத் தேடப் போவது எனக்குச் சந்தோஷம்தான். 'காதல் செய்வீர் உலகத்திரே' என்றார் பாரதியார். நீ படித்ததில்லையா?

நீ பாரதியாரை ஏன் படிக்கப் போறே? அவரு அய்யராச்சே" என்று சொன்னவனை, இடைமறித்து, "இதோ பாரு! நீ என்னைப் பற்றித் தவறாக மதிப்பீடு செய்கிறாய். அய்யரு கவிஞர்னு எப்போதாவது பிரித்துப் பேசியிருக்கிறேனா? பாவேந்தரே பாரதியாரைக் குறை சொல்பவரை ஒப்புக் கொள்ளாமல் சீறுவார், நம் நாட்டில்தான் எழுத்தில் கூட ஜாதி பாக்கறாங்க."

"சரி, சரி தலைவா! கோவிச்சுக்காதே! எனக்கு உன் மேலே எப்போதும் மதிப்பு, மரியாதை, அக்கறை உண்டு. உன் நடவடிக்கைகளை நான் கண்காணிப்பேன். அதனாலே கேட்டேன். ஆனால் நீ ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உன்னைச் சுற்றி ஒரு வலை பின்னப்படுகிறது. அதைப் பற்றி எச்சரிக்கவே உன்னை இங்கே அழைத்தேன்" என்றான்.

"வலையா?" - பக்கிரி திகைத்தான். 'ஒருவருக்கும் தீங்கொன்றும் நினைக்காத எனக்குப் பகைவரா?' அவன் புருவம் சுருக்கினான்.

"ஆமாம் பக்கிரி! உன்னை எச்சரிப்பதற்காகத்தான், இங்கே அழைத்தேன். ரொம்ப பிஸியான மாலை நேரம். கஸ்டமர்கள் குணம் உனக்குத்தான் தெரியுமே நம்ம கஸ்டமர்கள் புலர் இப்ப புத்தகம் எடுக்க வருவாங்க. சரி உன்னிடம் பேசிட்டுப் போச்சே. அதன் அட்ரஸ் என்ன?" என்று கேட்டான், கண் சிமிட்டியவாறு.

பக்கிரிக்கு எரிச்சலாக வந்தது. தன் மீது பரிவு காட்டுகிறான். அதே சமயம், தன் சுய புத்தியையும் காட்டுகிறான். எனக்கு வலை வீசப்படுகிறதாமே? சதி ஏதாவது நடக்கிறதா? முழுச் செய்தியையும் சொல்லாமல் நிறுத்தி விட்டானே! அவனிடம் எப்படிக் கேட்பது? அவன் போகிற வழியில் விட்டுப் பிடிக்க வேண்டும் என்று எண்ணினான்.



"நீ கொடுத்து வச்சவம்ப்பா - நீ நினைச்சா எத்தனையோ பெண்கள்" என்று பக்கிரி தொடங்கியதும் கண்ணாயிரம் திகை த்தான். பக்கிரியா பேசுவது?

"சாமியாரே - நீ 'ஆளு' உள்ளேன்னு எனக்குத் தெரியும். காவி உடை கட்டினாத்தான் அசல் சாமியார்னு நினைச்சேன். ஆனா, இந்தக் கால சாமியார்னு வேஷம் போடறவங்களை விட, காவியுடை கட்டாத உன்னைப் போன்ற சாமியார் பரவாயில்லைன்னு நினைச்சேன். உனக்கு நல்ல ராசி. உன்னைத் தேடிப் பொண்ணுங்க வராங்க. ஆனா ஜாக்ரதையா இருக்கணும். நான் கேள்விப்பட்டேன்..." என்று கூறி நிறுத்தினான்.

"என்ன கேள்விப் பட்டே?" பக்கிரி பரபரக்கக் கேட்டான். "நீ டாவு கட்டற பொண்ணை மறந்துடணும்" என்றான் கண்ணாயிரம்.

பக்கிரி பிரமிப்புடன் அவனைப் பார்த்தான்.

"ஆமாம் பக்கிரி! எனக்கு எல்லாம் தெரியும். காதல் கடிதம் எழுதித் தூது அனுப்பினியே, அந்தப் பொண்ணுக்குப் பெரிய இடத்துலே நிச்சயம் செய்யறாங்க. வேலுவின் பொண்ணுன்னு உனக்குத் தெரியாதா? வேலு எவ்வளவு பாபுலர் ஆளு? அத்துடன் அவரு வட்டச் செயலாளர்லேர்ந்து மாநிலச் செயலாளர் ஆகப் போறாரு. ஒரு வேளை சட்டமன்ற உறுப்பினராக ஆகலாம். அமைச்சராக்கூட ஆகலாம். அவருடன் நீ மோதாதேப்பா."

காதல் யாத்திரையில் முதல் முட்டுக் கட்டை. பக்கிரி நிதானமாகக் கேட்டான்.

"நானும்தான் வேலு பதவி வகிக்கும் கட்சியில் இருக்கிறேன். வேலுவும் - எங்க முதலாளியும் நல்ல நண்பர்கள். நான் அவர் பெண்ணைக் காதலிப்பதை அறிந்தால், இரட்டிப்புச் சந்தோஷப்படுவார்" என்று கூறித் தன் மனத்திலுள்ள பாரத்தை மெல்லக் குறைத்துக் கொள்ள முயன்றான்.

"அங்கேதான் தப்புக் கணக்குப் போட்டுட்டே. வேலுவின் திட்டங்களே வேறு. நீ அதில் குறுக்கிட்டால் அம்பேல்தான். அதனால் தான் சொன்னேன், நீ ஜாக்ரதையா இரு. அல்லது வேலுவின் மகளை மறந்து விடு."

கடைப்பையன் ஓடிவந்தான். "முதலாளி உன்னைக் கூப்பிடுறாரு" என்றான் மூச்சிரைக்க.

பக்கிரி, பாலன் எதிரே போய் நின்ற போது, அவர் முகத்தில் இதுவரையில் பக்கிரி பார்த்திராத கடுகடுப்பு; கோபம்; ஆத்திரம்.

"என்ன தலைவா! எங்கே இவ்வளவு நேரம்? கடையைப் பார்த்துக்காம ஊர் சுத்துறே? சொல்லிடு – 'பாலா, நான் அரசியலில் குதிச்சுட்டேன். உங்களுக்கு – உனக்குன்னு ஏக வசனத்தில் நீ என்னைச் சொன்னாக்கூட ஆச்சர்யப்பட மாட்டேன். தலைவா! ஒண்ணு கடையைப் பார்த்துக்க – அல்லது பொண்ணு பின்னாடி சுத்தி அலை. அல்லது அரசியலில் குதித்துவிடு' என்று சீறினார். கேட்டுக் கொண்டே தன் மிதி வண்டி நிலையத்திற்கு அருகே, வெளியே நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

பக்கிரி மரமேனத் திகைத்து நின்றான். 'தலைவா' என்று அவர் என்னை அழைக்கிறார். அந்த ஒரு சுடு சொல் போதுமே என் மீது அவருக்குள்ள ஆத்திரத்தை வெளிப்படுத்த? ஏதோ, சூழ்ச்சி நடக்கிறது. முதலாளி எதையோ மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

பக்கிரி கை கட்டிக்கொண்டு, "என்ன முதலாளி! என்னென்னவோ பெரிய வார்த்தைகளைப் பேசறீங்க? என்ன நடந்ததுன்னு இப்படி நெருப்பை வீசறீங்க?" என்றான்.

குரலில் பணிவு இருந்தது; என்றாலும், துணிவும் இருந்தது.



பாலன் கோபக் குன்றேறி நின்றார். ஆனால், சட்டென்று அடக்கிக் கொண்டு, "உன் நடவடிக்கை தெரியாதுன்னு நினைக்கிறாயா? என் எதிரியின் பெண்ணை நீ காதலிக்கிறாய்," என்றார்.

'வேலு எப்போது பாலனின் எதிரியானார்? பாலனும் வேலுவும் நெருங்கிய நண்பர்கள் என்றல்லவா எண்ணினேன்.'

"ஐயா, வேலு எப்போது உங்கள் எதிரியானார்?"

"நிஜமாவே தெரியாமத்தான் கேட்கிறியா? வேலு எனக்கு எதிராக வேலை செய்கிறார். என்னிடமிருந்து உன்னைப் பிரிக்க, தன் பெண்ணை அனுப்பி மயக்கி விட்டார். நீ அவள் பின்னால் சுற்றுகிறாய். ஒண்ணு, நீ என் கடையில் இருந்து வழக்கம் போல் என்னை ஆதரி. அல்லது அவளைக் காதலித்து எனக்கு எதிரா வேலை செய்" என்று படபடவென்று பொழிந்தார்.

பக்கிரி திகைத்துப் போய் பாலனையே வைத்த கண் மாறாமல் பார்த்து நின்றான்.

"இன்று நன்றாக யோசித்து வை. நாளைக்கு முடிவு சொல்" என்று கூறிவிட்டுக் கடையை விட்டுப் போய் விட்டார்.

ஆனால், அவன் நினைப்பது போல் நடக்காமல், காலமும் செயலும் வேகமாக மாறி மாறி நடந்தன.

**மே**கலா அந்தக் கடிதத்தை எடுத்துப் போகும் போது ஒரு தெரு முனையில் ஓர் இருண்ட இடத்தில் சைக்கிளில் ஒருவன் அவள் அருகே இறங்கி, "ஏ, பாப்பா, குட்டித் தெரு எது?" என்று கேட்டான். அவளை உராய்ந்தாற் போல் நின்றான்.

மேகலா திடுக்கிட்டுச் சற்று விலகி, "மிஸ்டர்! முதலில் மேனர்ஸ்ஸைக் கத்துக்க. சற்றுத் தள்ளி நின்னு பேசு. குட்டியுமில்லை; புட்டியுமில்லை" என்றாள்.

அவன் வில்லன் சிரிப்பு சிரிக்காமல், கோணல் சிரிப்பு சிரித்து, "பாப்பா! கோவிச்சுக்கிறியே! உன் மேலே சைக்கிள் மோதிடும்னு சட்டென்று பிரேக் போட்டேன். மேஸ்திரி என்பது தொழில் பெயர். சாதிப் பெயர்னு நினைச்சுட்டாங்க. மேஸ்திரியை எடுத்துட்டாங்க. நாயக்கமார் தெருவில் நாயக்கரை எடுத்துட்டா மார் தெருதானே!" என்று பெரிய நகைச்சுவையைச் சொன்னது போல் சிரித்தான். "அதுசரி, கையில் என்ன கவரு பாப்பா?" என்று கேட்டுக் கொண்டே அந்தக் கவரைப் பறித்துக் கொண்டான். கண் இமைக்கும் நேரத்தில் அங்கிருந்து சைக்கிளில் ஏறி மறைந்தான்.

மேகலா என்ன செய்வது என்றறியாமல் திகைத்து நின்றாள்.

மறுநாள் மாலை நேரம்; பக்கிரி கடையில் உட்கார்ந்து கொண்டு மாலையில் வெளியான நாளிதழைப் படித்துக் கொண்டிருந்த போது நான்கைந்து பேர் கையில் உருட்டுத் தடியுடன் ஓடி வந்து, "இவனை அடியுங்கடா – உதையுங்கடா, தாக்குங்கடா –" என்று கூறி பக்கிரியைச் சூழ்ந்து கொண்டார்கள்.

## பதினொன்று

அந்தப் பேட்டையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பாலன் மிதிவண்டி நிலையம் தாக்கப்பட்டுச் சூறையாடப்பட்டது என்ற செய்தி பரவியது. தன்னைத் திடீரென்று சூழ்ந்து கொண்டு சிலர் தாக்கியபோது, ஒருகணம் திகைத்த பக்கிரி, நொடியில் தன்னைத் தற்காத்துத் திருப்பித் தாக்க முற்பட்டான். தாக்க



வந்தவர்களிடமிருந்த கருவியைப் பறித்து அவனும் சிலம்பம் விளையாடத் தொடங்கினான்.

எதிர்பாராமல் ஏற்பட்ட இந்த ரகளையால், வீதியிலுள்ளவர்கள் பயந்து, அலறிச் சிதறுண்டு ஓடினர். அருகே இருந்த வாடகை நூல் நிலையத்திலிருந்த பெண்கள் அலறியவாறு ஓடினர். ஓடும் வேகத்தில் நூல்கள் சிதறி வெளியே வீழ்ந்தன.

"என் நூல் நிலையத்தைத் தாக்குகிறார்களே, ஐயோ!" என்று கண்ணாயிரம் வெளியே வந்து கூவினான். அருகே இருந்த குளிர்பானக் கடை, சில்லறைப் பொருள் விற்கும் கடை மளிகைக் கடைகள் மளமளவென்று மூடப்பட்டன.

அரைமணி நேர அமளிக்குப் பிறகு காவல் துறையிலிருந்து ஒரு ஜீப் வந்தது.

பக்கிரி முழங்காலிலும், தோள்பட்டையிலும் மண்டையிலும் அடிபட்டு வீழ்ந்து கிடந்தான். அவனை உடனே ஆசுபத்திரிக்கு எடுத்துச் செல்ல முதலுதவி வண்டிக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

"பக்கிரியை அடித்தவர்கள் யார்?" என்ற கேள்வி அங்கே பரவலாக எழுந்தது. செய்தி கேட்டுப் பதறி அங்கே ஓடி வந்த பாலன் வாடகை வண்டியை ஏற்பாடு செய்து, தனியார் ஆசுபத்திரிக்குப் பக்கிரியை அழைத்துச் சென்று சேர்த்தார்.

"ஒரு பாவமும் அறியாத புள்ளை. அதை அடித்தவன் நல்லாயிருப்பானா?" – தாய்க்குலத்தின் குரல் ஒன்று கேட்டது. அந்தத் தாய் நடுநிலைமை உடையவள். அரசியலோ, கட்சி உள் பூசலோ அறியாதவள். மிதிவண்டி நிலையம் அருகே பூ விற்பவள்.

காலணி தைக்கும் தொழிலாளி ஒருவர் பாலனிடம் "என்னங்க காரணம்?" என்று கேட்டார்.

மிகவும் சோர்வுடன் கலங்கிப் போய் உட்கார்ந்திருந்த பாலன், அவரின் கேள்விக்கு உடனே பதில் சொல்லவில்லை.

அவரிடம் வளர்ந்தவன் பக்கிரி. அவன் தாய், அவனைத் தன்னிடம் ஒப்படைத்த அந்த நாளை நினைத்துப் பார்த்தார்.

அவனுக்கு யார் விரோதிகள்? அவர் சிந்திக்கலானார்.

'சமீப காலமாக அவன் போக்கு சரியில்லை என்பது எனக்குத் தெரியும். எனக்கு எதிராக இயங்குபவர்களுக்கு விலை போவதாக எனக்குச் சந்தேகம். அதைப் பற்றி நேற்றுத்தானே அவனைக் கடுமையாகக் கேட்டேன்?' என்று தனக்குத்தானே பேசிக் கொண்டார்.

கண்ணாயிரம் அவர் அருகே நெருங்கி "அண்ணே! ஏதாவது தடயம் கிடைத்ததா?" என்று மெதுவாகக் கேட்டான்.

கவலை நிறைந்த முகத்தை - இல்லை என்பதற்கு அடையாளமாக அசைத்தார் பாலன்.

கண்ணாயிரம் அவர் காதருகே மெல்லப் பேசினான்:

"அண்ணே! முற்றும் துறந்த முனிவர்களைக்கூட பெண் சபலம் அடிமைப்படுத்தி விடுகிறது. சமீப காலமாக பக்கிரிக்கு அப்படி ஒரு பெண் சிநேகம்" என்றான்.

"நானும் கேள்விப்பட்டேன்" பாலன் விரக்தியுடன் பேசினார்.

அதற்குள் பாலனின் நண்பர்கள் அங்குக் கூடினர்.

"தலைவா! நம்ம கடைக்குக் குறி வைத்தார்கள். ஆனால், பாவம் பக்கிரி பலியானான்" என்றான் வந்தவர்களுள் ஒருவன்.

'பலி' என்ற வார்த்தையைக் கேட்டவுடன் பாலன் பதறிப் போனார். "என்ன, என்ன? - பக்கிரிக்கு என்ன ஆச்சு?"



என்றார். பலியானான் என்று சாதாரணமாகச் சொன்ன வார்த்தை அவரைத் திடுக்கிடச் செய்தது.

"பக்கிரிக்கு ஒண்ணுமில்லைங்க. நீங்கதான் பணம் காசு பார்க்காமே சிகிச்சைக்கு ஏற்பாடு செய்திருக்கிங்களே? புழைச்சுப்புடுவான். தலைவா! குற்றம் செய்தவர்களை நீங்க சும்மா விடக்கூடாது. உங்களுக்கு வச்ச குறி தலைவா!" என்று தூபம் போட்டார் ஒரு தொண்டர்.

"நம்ம கட்சிக்காரன்னும் பார்க்காதிங்க. போலீசுலே சொல்லிப் போடுங்க..."

**ப**க்கிரி சிகிச்சை பெறும் ஆசுபத்திரியில் ஸ்பெஷல் வார்டில், ஒருவரும் அவனைச் சந்திக்க அனுமதிக்கப் படவில்லை.

பக்கிரி எழுதிய கடிதத்தை மேகலா எடுத்துச் சென்றபோது, சந்து முனையில் ஒருவன் அவளிடமிருந்து கடிதத்தைப் பறித்துக் கொண்டு ஓடியவுடன், அவளுக்கு அதிர்ச்சி நீங்கச் சிறிது நேரம் பிடித்தது.

கூச்சல் போடத் தோன்றவில்லை. என்னவென்று சத்தமிடுவாள்? சந்திரமதியைச் சந்தித்தால் என்னவென்று சொல்வாள். தனக்காக அவள் காத்திருப்பாளே!

சந்திரமதியும் - பக்கிரியும் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள். அவர்கள் காதல் உண்மையானது என்பதை மேகலா உணர்ந்து கொண்டாள். சந்திரமதிக்கு வேறோர் இடத்தில் திருமண ஏற்பாடு செய்கிறார்கள் என்பதையும் அவள் அறிவாள்.

சந்திரமதியைச் சந்திக்க அவள் வீட்டிற்குப் போகாமல், மறுநாள் காலையில் சந்திக்கலாம் என்றுகூட எண்ணினாள். அவள் வீட்டிற்குப் போகவும் பயமாக இருந்தது. போகாமல் இருந்தால் சந்திரமதியால் தாங்க முடியாது என்றும் தோன்றியது.

முகவாட்டத்துடன் சந்திரமதியைப் பார்க்கச் சென்றாள். சந்திரமதி வீட்டிற்குள்ளிருந்தாள். வெளி அறையில் சந்திரமதியின் சகோதரி படித்துக் கொண்டிருந்தாள். படுக்கையறையில் சந்திரமதி புத்தகத்தைப் படிப்பது போல் பாவனை செய்தபடியே மேகலாவின் வருகையை எதிர்பார்த்திருந்தாள். பார்வதி வாயிற் படிக்கட்டில் உட்கார்ந்து ஏதோ சிந்தனையிலாழ்ந்திருந்தாள்.

மேகலாவைப் பார்த்தவுடன் பார்வதி, 'இந்த நேரத்திற்கு வந்த காரணம் என்ன' என்று கேட்காமல் புருவத்தைச் சுருக்கி, அதே சமயம் முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டிக் கொள்ளாமல், "என்ன மேகலா! வீட்டிலிருந்து வருகிறாயா? அல்லது வீட்டிற்குப் போகிறாயா?" என்று கேட்டாள். "விளக்கு வைச்ச பிறகு தனியா போகாதேடா கண்ணு" என்று பரிவையும் காட்டினாள்.

"நேற்று நான் ஸ்கூல் போகவில்லை. நோட்ஸ் கொடுத்திருப்பார்கள். வாங்கிப் போக வந்தேன்" என்றாள் மேகலா. இதைச் சொல்வதற்குள் அவள் தவித்த தவிப்பு.

"சந்திரமதி கூடத்தான் போகவில்லை" என்றாள் பார்வதி.

அப்பொழுதுதான், மேகலா பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்பதை உணர்ந்தாள்.

"ஆமாம் மறந்தே போச்சு அம்மா!" என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

அவளும் 'அம்மா' என்றேதான் அழைப்பது வழக்கம்.

"இன்னிக்கு நீ கூட ஸ்கூலுக்குப் போகவில்லை போலிருக்கு! உன் சிநேகிதி போகாமல் போனா நீயும் போகக் கூடாதுன்னு ஏதாவது ஒப்பந்தமா?" என்று கூறி மெல்லச் சிரித்தாள்.

"ஆனால், நடுவில் சந்திரமதியைத் தனியே விட்டுவிட்டாய்" என்று நறுக்கென்று சொன்னாள். பிறகு



"உள்ளே இருக்கா போய்ப் பாரு" என்று சொல்லிவிட்டு, பார்வதி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

சந்திரமதி பரபரப்புடன் எழுந்து கதவருகே வந்து மேகலாவின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அம்மாவும் அவளுடன் வந்து விடப் போகிறாளே என்று எட்டிப் பார்த்தாள்.

சந்திரமதியைப் பார்த்தவுடன் மேகலாவுக்கு அழுகை பொங்கியது.

"எதற்கு அழுகிறாய்? அம்மா பார்த்துவிடப் போகிறாள். கண்ணைத் துடைத்துக் கொள்" என்று மெல்லிய குரலில் பேசிய சந்திரமதி, அவளை உட்காரச் சொல்லிவிட்டு, "இரு, குடிக்கத் தண்ணீர் கொண்டு வருகிறேன்" என்று சமையல் அறைக்குப் போனாள்.

தண்ணீரைக் குடித்த பிறகுதான் மேகலாவுக்குத் தெம்பு வந்தது. நடந்தவற்றை ஒன்றுவிடாமல் சொல்லத் தொடங்கினாள். பக்கிரி கொடுத்தனுப்பிய கடிதத்தைச் சைக்கிளில் வந்து ஒருவன் பறித்துக் கொண்டு போய்விட்டான் என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லாமல், பக்கிரியைச் சந்தித்தது, மீண்டும் அவனிடம் சென்றது, அவன் கொடுத்த கடிதத்தைக் கொண்டு வந்தது வரையில் விரிவாகச் சொன்னாள்.

"அவர் கடிதம் கொடுத்தாரா?" சந்திரமதி மகிழ்ச்சியுடன் மேகலாவின் கரத்தைப் பிடித்துக் குலுக்கி, தன் கன்னத்துடன் ஒட்ட வைத்துக் கொண்டாள்.

"கடிதமா? – ஒரு காவியமே எழுதியிருப்பார் போலிருக்கிறது" என்ற கூறிய மேகலாவைப் பார்த்து, "எங்கே அது!" என்று ஆவலும் பரபரப்பும் நிறைந்த குரலில் கேட்டாள்.

"... மெதுவாப் பேசடி. உங்கம்மா நாம பேசறதை ஒட்டுக் கேட்கப் போறா" என்று எச்சரித்த மேகலா – "சந்திரமதி!

நான் சொல்வதைக் கேட்டுக் கொள். மனசைத் தேற்றிக் கொள்" என்றாள்.

சந்திரமதி திடுக்கிடவில்லை. மேகலா தன்னைச் சிறிது நேரம் தவிக்க வைத்து வேடிக்கை பார்க்கச் சுற்றி வளைத்துப் பேசுகிறாள் என்று நினைத்தாள்.

"நான் என் மனத்தை எப்போதோ தேற்றிக் கொண்டு விட்டேன். ஒரு கணம்கூட அவரைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. அந்தக் கடிதத்தை - காவியத்தைக் கொடடி - என்னைத் தவிக்க விடுவது உனக்கு வேடிக்கையா?" என்று கூறி கடிதத்தை எங்கே வைத்திருக்கிறாள் என்று அறியத் துடித்தாள்.

"என்னை மன்னிச்சுடு சந்திரமதி" என்று கூறி, வரும் வழியில் ஏற்பட்ட சம்பவத்தை விவரித்தாள். துக்கத்தை அவளால் அடக்க முடியவில்லை. தேம்பித் தேம்பி அழுதாள்.

சந்திரமதி திக்பிரமையுடன் நின்றாள். பிறகு தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு, "மேகலா! அழாதே. உன்னை ஒன்றும் செய்யாமல் கடிதத்தை அவன் பறித்துப் போனானே, அதுவே கடவுள் செயல்." என்றாள்.

மேகலாவின் விசும்பல் நிற்கவில்லை. தான் சமாதானமடைவதுடன், மேகலாவின் துயரத்தைத் துடைத்து அவளைச் சமாதானப்படுத்தும்படி நேர்ந்துவிட்டது.

"ஏய் அழாதேடி, அம்மா வந்து விடப் போகிறாள். கடிதத்தில் என்ன எழுதியிருந்தார் என்றாவது தெரியுமா? என்னை ஏற்றுக் கொள்கிறாரா? இல்லையா? அதையாவது சொல்லடி!" சந்திரமதி தன் கரத்தால் அவள் கண்களைத் துடைத்தாள்.

மேகலா, தன் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, "அந்தக் கடிதத்தைப் படிக்க எனக்கு



ஆசைதான். மற்றவருக்கு வரும் கடிதங்களைப் படிக்கக் கூடாது என்ற கொள்கை. அதுவும் காதல் கடிதத்தைப் படித்து, மயங்கி ஒருவேளை எனக்கு அவரிடம் காதல் ஏற்பட்டு விட்டால்!.." என்று சொன்னபோது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"ஆனால், அவர் உன்னிடம் உயிரையே வைத்திருக்கிறார் என்று தெரிகிறது. நான் மறுபடியும் நாளைக் காலையில் அவரிடம் சென்று நடந்ததைச் சொல்லி, அதே போன்று ஆசையைக் கொட்டிக் கொட்டி மீண்டும் எழுதச் சொல்லிவிட்டு வருகிறேன். அதுவரையில் பொறுத்திரு" என்றாள்.

சந்திரமதிக்குச் சிரிப்பு வந்தது.

"மேகலா! மன்னித்துவிடு. உனக்கு மிகவும் தொல்லை தந்துவிட்டேன். அவரை நீ சந்தித்துத்தானாக வேண்டும். மறுபடியும் அவர் என்னைச் சந்திக்க இடம் நேரம் நாள் குறித்துக் கேட்டு வர வேண்டும். நீ செய்யும் இந்த உதவியை நான் என் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டேன்" என்றாள் சந்திரமதி. மேகலா, சரியென்று தலையசைத்தாள்.

வெளியே யாரோ உரத்த குரலில் பேசுவது கேட்டது. சந்திரமதியின் தந்தை உள்ளே நுழைந்தபடி -

"அந்த சைக்கிள் கடைப் பையனை யாரோ அடித்துப் போட்டுட்டாங்களாம். பலத்த காயத்துடன் அந்தப் புள்ளையை ஆசுபத்திரியில் சேர்த்திருக்கிறார்களாம்" என்றார்.

"யார் அடித்தார்களாம்? ஏன் அடித்தார்களாம்?" சந்திரமதியும், மேகலாவும் ஒரே சமயத்தில் ஒரே குரலில் கேட்டார்கள்.

"கட்சி விரோதம் என்கிறார்கள். பெண் விவகாரம் என்றும் சொல்கிறார்கள்" என்றார் அவர்.

இதைக் கேட்டு, 'ஆ' - என்று மேகலாவும், சந்திரமதியும் ஒரே நேரத்தில் கூவினார்கள்.

## பன்னிரண்டு

தனியார் மருத்துவ மனையில் பகல் நேரம். நோயாளியைப் பார்க்க வருபவர்கள் குறைவாக இருந்தார்கள். வெளியே வெயில் சுள்ளென்று அடித்துக் கொண்டிருந்தது. மருத்துவமனை வெளிவாயில் காவல்காரர் தன் மனைவி கொண்டு வந்ததை ஒரு மூலையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

மேகலா தயங்கியபடியே அவர் அருகே சென்று, பக்கிரி படுத்திருக்கும் அறையைப் பற்றி வினவினாள்.

"ஓ! அவருக்குச் சொந்தக்காரர் யாரும் வரல்லையேன்னு கவலைப்பட்டேன். நாலாம் நம்பர் அறை. அவருக்கு வாய்க்கு ருசியா ஏதாச்சும் வாங்கிக் கொடு பாப்பா!" என்று சொல்லிக் கொண்டே, மனைவி கலந்து கொடுத்த குழம்பு உருண்டையை வாயில் திணித்துக் கொண்டார்.

அறை திறந்திருந்தது. பக்கிரி கட்டிலில் சாய்ந்து படுத்திருப்பது தெரிந்தது. இதுபோல் தனியே மருத்துவமனைக்கு வந்து நோயாளியைச் சந்தித்து அவளுக்குப் பழக்கம் கிடையாது. அவளுக்கு இயற்கையிலேயே உள்ளத் துணிவு அதிகம். வெளியே காட்டிக் கொள்ள மாட்டாள்.

கதவை மெல்லத் தட்டினாள். பக்கிரி விழிகளைப் பாதி மூடியிருந்தான். திறந்து பார்த்தான்.

அதே பெண், தன்னிடமிருந்து காதல் தூது சென்றவள்.



அக் கடிதம் சந்திரமதியின் தந்தைக்குத் தெரிந்து ஆள் வைத்துத் தாக்கியிருக்கலாம்.

காலையில் கண்ணாயிரம் வந்தான். படிக்கச் சில புத்தகங்கள் கொடுத்துச் சென்றான்.

தாயுமானவர் பாடல்கள்; பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு.' ஆபிரகாம் லிங்கன் எழுதிய 'துணிவோடு இருங்கள்;' வைரமுத்துவின் கவிதை, விக்கிரமனின் 'பகைவனின் காதலி' - ஜெயரதன் மொழி பெயர்த்த 'நேருவின் 'கண்டு கொணர்ந்த இந்தியா' புத்தகங்களை ஒவ்வொன்றாகப் பார்த்து எடுத்து வைத்தான்.

இன்னொரு புத்தகம் - 'காதலிப்பது எப்படி?' அதைக் கையிலெடுத்து, கண்ணாயிரத்தை ஒருமுறை பார்த்தான். இருவரும் மெல்லிய புன்னகையைப் பரிமாறிக் கொண்டனர்.

"தலைவா! இப்போ வலி எப்படி இருக்கிறது? திடீரென்று உன்னை அடிக்க அந்தக் கூலிப் பசங்க வந்தபோது நான் நூல் நிலையத்திற்குள் இருந்தேன். புத்தகம் எடுக்க வந்த பெண்மணியின் அலறல் கேட்டது. வெளியே ஓடி வந்தேன். நான்கு பேர் இருப்பார்களா! எண்ணவில்லை. தலைவா, சும்மா சொல்லக் கூடாது, சமயத்தில் உன் பலத்தைக் காட்டி விட்டாய். அவர்களில் ஒருத்தனிடமிருந்து கட்டையைப் பிடுங்கித் திருப்பித் தாக்கினாய் பாரு! ஆ! வீரத் தமிழன் என்பதை நிலை நாட்டினாய்.

"டேய் யாரடா ரவுடிப் பசங்க, தலைவனை அடிக்கிறது! பொட்டைப் பசங்க. ஒருத்தனை இவ்வளவு பேர் தாக்கினா எப்படி? தலைவனோட ஒண்டிக்கு ஒண்டி வாங்கடா" என்று சத்தம் போட்டுக் கொண்டே ஓடி வந்தேன். என் குரலைக் கேட்டதும் - கூலிப் பசங்க நிமிஷத்திலே ஓடி ஒளிஞ்சிட்டாங்க. தலைவா, கொஞ்சம் இருந்தால் பின் மண்டையிலே உனக்கும் பலத்த அடி விழுந்திருக்கும். இரத்தம் கொட்டிய இடத்தில் உடனே கைக்குட்டையை

எடுத்துக் கட்டினேன். 'போலீஸ் போலீஸ்' – என்று யாரோ கத்தினார்கள். சமயத்திலே நம்ப பப்ளிக் பூத் போன் வேலை செய்யாதே. சும்மா சொல்லக் கூடாது. பாலன் எங்கிருந்தோ ஓடி வந்தார்..." என்று மூச்சு விடாமல் பேசினான்.

பக்கிரிக்குத் தாகமாயிருந்தது. அருகே டீப்பாயில் இருந்த குடிநீரை எடுக்க முயன்றான். சுளீர் என்ற வலி.

"இருப்பா! – நான் எடுத்துத் தருகிறேன். அடடா – சோறு துன்னியா? பகலுக்கு என்ன கொடுக்கறாங்க? ரொம்ப காஸ்ட்லி ஆசுபத்திரி இது. செலவெல்லாம் யார் சுமக்கப் போறாங்க?" – என்று பேசிவிட்டு குனிந்து பக்கிரி காதருகே, "தலைவா யார் தூண்டிவிட்டு இந்தத் தாக்குதல் நடந்திருக்குன்னு நினைக்கிறே?" என்று கேட்டான்.

இரண்டு நாள்களாகப் பக்கிரியும் அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். 'நாம் ஒருவருக்கும் திங்கு செய்யவில்லையே?'

அவன் தாய் அடிக்கடி சொல்வார்கள் – "போன பிறவியில் நாம் செய்த காரியங்களுக்குப் பலனை இந்தப் பிறவியில் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். அதனாலே, இந்தப் பிறவியிலாவது நல்லதைச் செய்யணும். நல்லதை நினைக்கணும். நல்லதைப் பேசணும்."

அவன் அப்போது சிறுவன். அம்மா சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டான். ஆனால், அவன் மனத்துக்குள், 'போன பிறவியிலே செய்த பாவத்துக்கு இந்தப் பிறவியில் கஷ்டப்படறோம். ஏழையா இருக்கிறோம். வசதியில்லாத வாழ்க்கையை வாழ வைக்கிறாரு. சரியான இடம்; சாப்பாடு துணி இல்லாதபோது மறுபடியும் தவறு செய்யாம எப்படி இருக்க முடியும்? தண்டனைக்குக் கால வரம்பு உண்டா? பொய் பேசாம – ஏமாத்தாம – திருடாம எப்படி இருக்க முடியும்? மறுபடியும் இந்தப் பிறவியில் செய்த காரியங்களுக்கு அடுத்த பிறவியில் தண்டனை



பெறணும்னா? எப்பதான் பணக்காரர் மாதிரி நல்ல வாழ்க்கை நடத்த முடியும்?' என்று கேட்டுக் கொள்வான்.

அம்மாவிடமே ஒருநாள் கேட்டுவிட்டான். அம்மா அவனை அன்புடன் அணைத்துக் கொண்டு – "கொஞ்சம் நல்லது செய்தாலே போதும். நல்லதே செய்ய வேண்டாம். கெடுதல் செய்யாம இருந்தா போதும். ஏமாத்தாமே – மத்தவங்க பொருளுக்கு ஆசைப்படாம அபகரிக்காம பொய்ச்சாட்சி சொல்லாம இருந்தா போதும்" என்று சொல்லி, "பக்கிரி! பெரியவங்க எழுதினதைப் படி, எங்க அம்மா எனக்கு தாயுமானவர் – வள்ளலார் – மாணிக்கவாசகர் பாடல்களைச் சொல்லித் தந்திருக்காங்க. ராகம் போட்டுப் பாடச் சொல்லுவாங்க. அவங்களும் பாடுவாங்க.

'ஒருமையுடன் நினது திரு
மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்' –

என்று உருக்கமாகப் பாடுவாங்க. அந்தப் பாடலில் இன்னும் ஓர் இடம் –

'உள்ளொன்று வைத்துப்
புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்'

-னு பாடும்போது மனத்துக்குள் அந்த நல்ல அறிவுரை படிந்துவிடும்.

நாம் யாருடன் பழகுகிறோமோ, அவர்கள் நல்லவர்களா கெட்டவர்களான்னு பார்க்க வேண்டும்."

அம்மா பேசுவதை, அவர்கள் சொல்வதைப் பக்கிரி கவனமாகக் கேட்டுக் கொண்டிருப்பான். மறுபடியும் சந்தேகம் வரும்; கேட்பான்.

"ஏம்மா, நல்லவங்களோட பழகறதை ஏற்படுத்திக் கொடுப்பதும் கடவுள்தானேம்மா? – அவரு

கெட்டவங்களோட நம்மை ஏம்மா சேர வைக்க வேண்டும்?" என்று கேட்டான்.

"ஆமாம், நம்ம பாவ புண்யம்தான் அதற்குக் காரணம்."

"எனக்குப் புரியலைம்மா. பாவம் செய்தா தண்டனை. தண்டனை பெற்றவன் மறுபடியும் பாவம் செய்றான். மறுபடியும் தண்டனை. எப்போம்மா, நல்லது செய்ய முடியும்? கடவுள் தானேம்மா நம்மை நல்லது செய்ய வைக்கணும்?"

அந்தச் சிறுவயதில், பகுத்தறிந்து உணர முடியாப் பருவத்தில் அவன் இப்படியெல்லாம் அம்மாவைக் கேட்டிருக்கிறான். அம்மாவும் சளைக்காமல், "பக்கிரி! துன்பம், சோதனை வரும்போது அதை எதிர்த்துத் தைர்யமாச் சமாளித்து நல்லது செய்ய வேண்டும். பெரியவங்க சொல்றபடி கேட்கவேண்டும். இப்ப நாம இருக்கிறோம். அப்பா போயிட்ட பிறகு எப்படியோ கஷ்டப்பட்டு நான் உன்னை வளர்க்கிறேன். பாதி வயித்துக்குத் தான் வருமானம். பிச்சை எடுக்காம அரை வயிறு சாப்பிடறதுக்கும் நம்ம புண்ணியம்தான் காரணம். மத்தவங்களைப் போல் சௌகரியமா இருக்கணும்னு திருடி பொய் பேசி,ஏமாத்திப் பணம் சம்பாதிச்சு நல்லா வாழ, முடியாதா? வாழணும்னு ஆசை ஏற்படும். அந்த ஆசையை அடக்கி, பல்லைக் கடிச்சுட்டு நல்லவங்களா நடந்தா, அடுத்த பிறவின்னு ஒண்ணு இருக்கறதை நம்பி நடந்தா, அடுத்த பிறவியிலே சுகமா - சௌக்யமா இருக்கலாம். நம்மைப் பொறுத்தவரை, நாம் தர்ம நியாயமா ஒழுக்கத்தோட நடந்துக்கணும். நீ பிற்காலத்திலே நல்லா வருவேன்னு சாமியார் ஒருத்தர் சொல்லியிருக்காரு. பெரிய படிப்பெல்லாம் படிக்க வைக்க முடியலே. ஆனா நல்ல இடத்துலே உன்னைக் கொண்டு சேர்த்துட்டேன். பாலன் ஐயா நல்லவரு - உன்னை முன்னேத்திடுவாரு." என்றெல்லாம் நிறையச் சொல்லியிருக்கிறார்கள்.



அம்மா சொன்னபடி முன்னேற்றப் பாதையில் பக்கிரி சென்று கொண்டிருந்தது உண்மையே. ஆனால், இப்படி ஓர் ஆபத்தா? தாக்குதலைத் தடுத்துத் தாக்கியிராவிடில் அடித்தே கொன்று போட்டிருப்பார்கள். 'கருத்து வேற்றுமையை எதிர்க்கப் பலாத்காரமா? கருத்து மோதலை நேருக்கு நேர் விவாதிக்கச் சக்தியில்லாதவர்கள்.' மீண்டும் விழிகளை மூடிக் கொண்டான். அவனால் எந்த முடிவுக்கும் வர இயலவில்லை. கண்ணைத் திறந்த போது, பாலனும் இன்னும் இருவரும் அவன் அருகே வந்து நின்றிருந்தார்கள். பாலன் வந்தவுடன் கண்ணாயிரம் மெல்ல நழுவினான். சாத்துக்குடி, ஹார்லிக்ஸ், பிஸ்கட்கள் என ஒரு பையில் பாலன் வாங்கி வந்திருந்தார்.

பாலன் கலங்கியிருந்தார். பக்கிரியின் கரங்களை வாஞ்சையுடன் எடுத்து வைத்துக் கொண்டார்.

"பக்கிரி! ஒன்றுக்கும் கவலைப்படாதே. நானிருக்கிறேன். உன்னைத் தாக்கியவர்கள் யார் என்று எனக்குத் தெரியும். அவர்களைக் கண்டுபிடித்து விடுவேன். யார் எவ்வளவு பணம் தந்தாலும் நீ மாறிவிடக் கூடாது" என்று அழுத்தமாகவும் அன்பாகவும் கூறினார்.

"இன்னும் ஒரு வாரத்தில் வட்டச் செயலாளர் தேர்தல். அதற்குள் நீ சுகமாகி விட வேண்டும். இங்கே ஒருவரையும் சந்தித்துப் பேசாதே. என்ன வேண்டுமானாலும் வெட்கப்படாமல் கேள். நான் மறுபடியும் வருகிறேன்" - என்று கூறி விடைபெற்றுக் கொண்டார்.

அவர் வெளியே வரும்போது மருத்துவ மனையில் பக்கிரி சிகிச்சைக்கு உண்டான பில் நீட்டப்பட்டது. பத்தாயிரம் ரூபாய்!

பாலன் அதிர்ந்து போனார். பில்லை மடித்து எடுத்துக் கொண்டு சென்றார். அவர் போனவுடன் ஒதுங்கி மறைந்திருந்த கண்ணாயிரம் உள்ளே நுழைந்தான். பக்கிரி களைப்பு மிகுதியால் உறங்கிக் கொண்டிருந்ததைப்

பார்த்துவிட்டுப் போய்விட்டான். அவர்கள் போன பிறகு மேகலா வந்தாள்.

மேகலா வந்ததில் பக்கிரிக்குப் புதுத் தெம்பு ஏற்பட்டது. மேகலா நடந்தவற்றை விவரித்தாள்.

மேகலா சொல்லச் சொல்ல, பக்கிரிக்கு அதிர்ச்சி - மகிழ்ச்சி எல்லாம் சேர்ந்து ஏற்பட்டன. கடிதத்தைப் பறித்துப் போனவர்கள் யாராயிருக்கும் என்று சிந்திக்கலானான்.

(ஒருவேளை, அந்தக் கடிதம் சந்திரமதியின் தந்தையின் கையில் கிடைத்திருந்தால், என்னைத் தீர்த்துக் கட்ட அடியாளை வைத்திருக்கலாம்...அல்லவா?)

சரி; அந்தக் கடிதத்தை நான் எழுதியிருப்பேன் என்று அந்தச் சைக்கிளில் வந்தவனுக்கு எப்படித் தெரியும்? என்னை யார் அடித்திருப்பார்கள்! பாலன் மீதே கண்ணாயிரம் சந்தேகப்படுகிறான். பக்கிரி குழம்பினான்.

சந்திரமதி தன்னிடம் வைத்திருக்கும் அழிக்க முடியாத காதலை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். அவன் உடலில் ஏற்பட்டுள்ள காயங்கள் எல்லாம் மறைந்து விட்டன போன்று உணர்ச்சி.

"தங்கச்சி" என்ற மேகலாவை விளித்தான்.

"சந்திரமதியை நான் உடனே பார்த்தாக வேண்டும்" என்று சொல்லும்போது அவனுக்குப் பரபரப்பு மிகுந்தது.

"அதைச் சொல்லவே வந்தேன். சந்திரமதியை நான் அழைத்து வருகிறேன். கவலைப்படாமல் இருங்கள். ஆனால், சந்திரமதிக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகப் போகிறது. அதைத் தடுத்து நிறுத்த நீங்கள் திட்டமொன்று யோசித்து வையுங்கள்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள் மேகலா.



## பதின்மூன்று

27897
4289006

மருத்துவமனை மிக மிக அமைதியாக இருந்தது. வெளியே சாலையிலும் போக்குவரத்துச் சத்தம் குறைந்தே காணப்பட்டது. காற்றின் அசைவு கூட அதிகமில்லை என்பது அருகிலுள்ள மரங்கள் அசையாததிலிருந்து தெரிந்தது.

பக்கிரி இருக்கும் அறை எண்ணைத் தேடிக் கொண்டு சென்றாள் சந்திரமதி. நெற்றியிலும் கழுத்திலும் வியர்த்திருந்தது. மருத்துவமனையில் பக்கிரியைத் தனியே சந்திக்கச் செல்லும் அளவிற்குத் துணிவு எப்படி வந்தது என்று அவளுக்கே வியப்பாய் இருந்தது.

கதவு மூடப்பட்டிருந்தது. மெல்லத் தட்டினாள். உள்ளே இருந்து 'யார்?' என்ற குரல் கேட்டது - பக்கிரியின் குரல்தான்.

கதவைத் திறந்தாள். கட்டில் அருகே உள்ள நாற்காலியில், பக்கிரி உட்கார்ந்திருந்தான். பக்கிரியை அந்த நிலையில் பார்த்தவுடன் சந்திரமதிக்கு அழுகை பொங்கியது.

இருவரும் பார்த்துக் கொண்டனர். ஒரு நிமிட மௌனம். அந்த மௌனம் ஆயிரம் செய்திகளைத் தெரிவித்துக் கொண்டது. மெல்லிய விசும்பல் ஒலி சந்திரமதியிடமிருந்து கேட்டது.

நெற்றியையும், கழுத்தையும் துடைத்துக் கொண்டே சந்திரமதி மெல்ல அவனருகே சென்றாள்.

பக்கிரிக்கு ஏற்பட்ட வியப்புக்கு அளவில்லை.

'சந்திரமதி!வா' என்று கூடச் சொல்லாமல் சிலை போல் அவன் இருந்தான். அதற்கு என்ன காரணம்?

அவன் படித்த இலக்கியங்களில் அது போன்ற எதிர்பாராத சந்திப்புகளின் போது பேச்சுக்கு வேலையே இல்லை என்பதை அறிந்தவன்தான். வாய்ச் சொல்லால் எந்தப் பயனும் ஏற்படாதென்பதையும் அவன் அறிவான்.

கைப்பையில் கொண்டு வந்திருந்த ஆரஞ்சுப் பழங்களை எடுத்து, ஸ்டூலின் மீது வைத்தாள் சந்திரமதி.

"ஜூஸாகப் பிழிந்து தரட்டுமா? உரித்துச் சுளையாகத் தரட்டுமா?" என்று சந்திரமதி கேட்டாள்.

ஒரு பழத்தை வேகமாக உரிக்கத் தொடங்கினாள். ஒவ்வொரு சுளையாக எடுத்து அவனிடம் நீட்டினாள். பக்கிரி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏதோ முற் பிறவியில் நெருங்கியிருந்த உணர்வு. விட்ட குறை வந்து தொட்டாச்சு. இனி, விதியின் எழுத்தைக் கிழிக்க வேண்டும். ஒரு பகல் பழகியதால் உயிரையும் ஈயக் கூடிய மனப் பக்குவத்துடன் துணிவுடன் இந்த மங்கை நல்லாள் வந்திருக்கிறாளே.

சந்திரமதியின் வீட்டில் ஏற்பட்டிருக்கும் கடும் எதிர்ப்பைப் பற்றி,தோழி மேகலா சொல்லியிருக்கிறாள். சந்திரமதியின் தந்தை அரசியலில் மிக முக்கியமானவர். தொழிற் சங்கவாதி. அத்துடன் இப்போது ஒரு கட்சியில் மிகத் தீவிரப் பங்கு வகிக்கிறார். அவர் தன் மகளை, பிரபல மில் அதிகாரியின் மகனுக்குத் திருமணம் செய்விக்க விரும்புகிறார். சந்திரமதியோ தந்தையின் விருப்பத்திற்கு நேர்மாறாக என்னைக் காதலிக்கிறாள். எனக்குச் சந்திரமதியின் மீது எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது? காதலாக அது மலர்ந்தது எப்படி?

பக்கிரி அவளைப் பார்த்துப் புன்முறுவல் புரிந்தான். "அழுகிறாயா? சந்திரமதி?" என்று கேட்டான்.

'இல்லை' என்று சந்திரமதி தலையை அசைத்தாள். அசைப்பதே ஓர் அழகாக இருந்தது.



"நல்ல வேளையாக நான் பிழைத்து விட்டேன். தோள்பட்டையில் தான் சிறிது வலி இருக்கிறது. எக்ஸ்ரே எடுத்திருக்கிறார்கள். நாளை முடிவு தெரிந்தவுடன், மருத்துவமனையிலிருந்து விடுதலையாகி விடலாம்" என்று சொன்னான்.

"விடுதலையா – இங்கே இருப்பது சிறைச்சாலை போல் தோன்றுகிறதா?" என்று கேட்டு விட்டு, தன் விழிகளை முன்றானையால் துடைத்துக் கொண்டாள். தன் கையிலிருந்த ஆரஞ்சு சுளையில் ஒன்றை எடுத்து அவன் வாயினருகே கொண்டு சென்றாள்.

பக்கிரி சிரித்தான். மிக நெருங்கி வந்து நின்றபோது அவன் சிரித்தவுடன், சந்திரமதி மெல்லத் தன் சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். அவள் முகம் நாணத்தால் சிவந்தது.

சந்திரமதியிடமிருந்து மற்றொரு சுளையைக் கையில் வாங்கிக்கொண்டு, "சந்திரமதி, உன் இதழ் அழகை எப்படி வர்ணிக்கலாம் என நினைத்தேன். இப்போது இந்த ஆரஞ்சுப் பழத்தின் மஞ்சள் சிவப்புச் சுளை கூட உன் இதழ் அழகுக்கு நிகராகாது என்று தோன்றுகிறது" என்று சொன்னான்.

சந்திரமதியின் முகம் மேலும் சிவந்தது.

"சரி சரி. என்னைப் பார்த்துக் கொண்டே இருப்பது போதும். நீங்கள் நல்ல பேச்சாளர் என்று நான் அறிவேன். நல்ல கவிஞர் என்பதை உங்கள் வர்ணனையிலிருந்து அறிந்தேன்" என்றாள் சந்திரமதி. அவளிடமிருந்த சிறிதளவு அச்சமும், கூச்சமும் மெல்ல நகர்ந்தன.

"இவ்வளவு அருகில் உன்னைச் சந்திப்பதென்றால், உன்னுடனேயே இருப்பதென்றால் இன்னும் எவ்வளவு நாள்கள் வேண்டுமானாலும் நான் மருத்துவமனையில் இருக்கத் தயார்."

சந்திரமதியும் – பக்கிரியும் சேர்ந்து சிரித்தனர்.

“என்னால்தான் தங்களுக்கு இந்தத் தண்டனை என்று சொல்கிறாள், மேகலா. அப்படியா? என்னைக் காதலிக்கக் கூடாதென்று பாலன் சொல்கிறாராமே?” என்று சந்திரமதி மெல்லக் கேட்டாள். ஆரஞ்சு உரித்துக் கொடுத்து முடித்த, அவள் விரல்களை பக்கிரி எப்போது பற்றினான்? பக்கிரியின் கை விரல்களும், சந்திரமதியின் காந்தள் விரல்களும் ஒன்றோடொன்று பேசிக் கொண்டன. மெல்ல மெல்லக் கோத்துப் பின்னிக் கொண்டன.

“எனக்கே ஆச்சர்யமாயிருக்கிறது. எனக்கு விரோதிகளே கிடையாது. என்னை யார் தாக்கச் சதி செய்திருப்பார்கள்? ஒவ்வொருவரும் ஒரு காரணம் சொல்கிறார்கள். பாலனின் அரசியல் எதிரி மதிவாணன்தான் ஆள் வைத்து அடித்திருப்பார் என்று சொல்கிறார்கள். ஆனால் எனக்கு அப்படித் தோன்றவில்லை. சரி அதுபோகட்டும்; உனக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறதாமே. வாழ்த்துகள். மாப்பிள்ளை என்ன செய்கிறார்? அவருக்கு மெடிக்கல் காலேஜில் இடம் பெற உன் அப்பா மிகவும் முயற்சிகள் செய்கிறாராம். கிடைக்காது போல் தோன்றுவதால் அமைச்சரிடமே கோபங் கொண்டு விட்டாராம். நல்ல இடம். உன்னைச் சந்தித்துப்பேச அந்த மாப்பிள்ளை உன் வீட்டிற்கு வந்தா ராம். நீ அலட்சியப்படுத்தி விட்டாயாம். சந்திரமதி! நீ நன்றாகச் சிந்தித்து, உன் வருங்காலத்தை நினைத்து உன் கணவரைத் தேர்ந்தெடு. காதல் – பாசம் என்றெல்லாம் நினைக்காதே” என்றான்.

சந்திரமதி அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். “இந்த உபதேசம் சொல்வதற்காகவா என்னைச் சந்திக்க விரும்பினீர்கள்? என் மனத்தைப் புரிந்து கொண்ட நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?”

பக்கிரி அவள் கரத்தை மிக உரிமையுடன் தன் கரத்தில் பிணைத்துக் கொண்டு, “சீச்சீ, விளையாட்டிற்காகச்



சொன்னேன். உனக்கு என் இதய உணர்ச்சியைக் கொட்டிக் கடிதம் ஒன்று எழுதினேன். அதைப் படித்திருந்தால் என்னை முழுவதும் புரிந்து கொண்டிருப்பாய். உன் தோழி மேகலா அதை எடுத்து வரும்போது, யாரோ ஒருவன் ஓடி வந்து அந்தக் கடிதத்தைப் பறித்துக் கொண்டு போய்விட்டானாம். என்னால் உனக்குப் பல தொல்லைகள் வரலாம். வாழ்க்கையில் நான் இன்னும் கால் ஊன்றிக் கொள்ளவில்லை. இதுவரையில் குறுகிய வட்டத்திலேயே இருந்து விட்டேன். காதல் – கல்யாணம் என்று நினைக்காமல் இருந்த நான் உன்னைப் பார்த்தவுடன் மனம் மாறினேன். இயற்கை அளிக்கும் இந்தக் கட்டளையை யார் மீற முடியும்? அதனால்தான் நான் இப்போது சொல்கிறேன். என்னை மறந்து விடு என்று” என்றான்!

பக்கிரியின் இந்த வார்த்தைகளில் உள்ள உண்மை நிலையைப் புரிந்து கொண்ட சந்திரமதி, மெல்லச் சிரித்து, –“உங்களை என்ன சொல்லி அழைப்பது என்றே தெரியவில்லை. பழைய பாணியில் அன்பே என்று அழைக்கலாமா? அத்தான் என்று கூப்பிடட்டுமா?” என்று கூறிய போது, “பக்கிரி என்றே அழைக்கலாம்” என்றான். சந்திரமதி சிரித்தாள். அவனும் சேர்ந்து சிரித்தான்.

“என்ன கூறி அழைப்பது என்பதைப் பிறகு முடிவு செய்து கொள்வோம். நான் திடமாக முடிவு செய்து விட்டேன். உங்கள் அந்தஸ்து, செல்வம் எல்லாவற்றையும் விட உங்கள் உள்ளம்தான் மிக உயர்ந்தது என்பதைப் புரிந்து கொண்டேன். நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிறது. உங்களை ஆள் வைத்து அடித்தவன் யாராயிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன் தெரியுமா? என்னை மணக்க வெறிபிடித்திருப்பவன், என்னிடம் அவமானப்பட்டவன். நீங்கள் எழுதிய காதல் கடிதத்தைப் பறித்துச் சென்றவன் அவனிடம் கொடுத்திருப்பான். ஒருவேளை என் தந்தை மெடிக்கல் ஸீட் பெற்று, அவனை

நான் மணந்தாலும் எங்கள் மண வாழ்வு அமைதியாக இருக்காது. சந்தேகம் அவன் மனத்தில் எப்போதும் குடி கொண்டிருக்கும். அந்தத் திருமணத்தை ஒருபோதும் நான் ஏற்க மாட்டேன். உங்களிடம் என் உறுதியான முடிவைக் கூறிவிட்டுச் செல்லவே வந்தேன். இதற்குள் என் தாயார் பள்ளிக்கூடத்திற்கு ஆள் அனுப்பி நான் இருக்கிறேனா என்று பார்க்கத் துப்பறிந்திருப்பார்கள். உங்களைத் தேடி நான் போயிருக்கக் கூடும் என்பதை அறிந்து அவர்கள் இங்கே தேடி வருவதற்குள் நான் வீட்டிற்குப் போய் விடுகிறேன்" என்றாள்.

பக்கிரி அவள் பேசுவதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். உண்மையான அவள் காதல் அவனுக்குப் புரிந்தது. சற்று உணர்ச்சி வயப்பட்டவனாக எழுந்து நின்று, "சந்திரமதி – எந்தக் காலத்திலும் உன்னை நான் மறக்க மாட்டேன். பிரியமாட்டேன். எனக்கு நீ உனக்கு நான் என்று ஆகிவிட்டது. உழைத்து முன்னேறத் துணிந்து விட்டேன். அரசியல் வலையில் என்னைச் சிக்க வைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. அதனால் என்னை ஒழிக்கவும் நினைக்கிறார்கள். என்னை அவர்கள் கோஷ்டியில் சேர்த்துக் கொள்வதால் அவர்களுக்கு என்ன பலம், என்ன பலன் என்று தெரியவில்லை. அதனால்தான் அரசியல் கட்சிச் சூழலிலிருந்து விடுபடப் போகிறேன். உன்னை மணக்க எந்தவித எதிர்ப்பு வந்தாலும் அதைச் சமாளிக்கும் துணிவு இப்போது ஏற்பட்டு விட்டது" என்றான்.

பக்கிரி பேசியதைக் கேட்ட சந்திரமதிக்குப் புதுத் தெம்பு பிறந்தது.

"நான் ஒன்று சொல்கிறேன் கேட்கிறீர்களா?" சந்திரமதி தன் விழிகளைச் சுழல விட்டவாறு கேட்டாள்.

"ஓ!... ஒன்று என்ன, ஓராயிரம் கேட்கிறேன். வாழ்நாள் முழுவதும் நீ சொல்வதைக் கேட்டுத்தானே நடக்கப்



போகிறேன்?" என்ற பக்கிரி அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று ஆவலோடு எதிர்பார்த்தான்.

"நீங்கள் எங்க வீட்டிற்கு வந்து, என் அப்பாவிடம் முறையாகப் பெண் கேட்க வேண்டும்" என்றாள் சந்திரமதி.

பக்கிரி திடுக்கிட்டான்.

## பதினான்கு

காலை எழுந்ததிலிருந்து சுறுசுறுப்பாக இயங்கி வரும் பக்கிரிக்கு, மருத்துவமனைக் கட்டிலில் படுத்திருப்பது முள் படுக்கையிலிருப்பது போல் தோன்றியது. இதுவரையில், அனுபவித்தறியாத ஃபோம் மெத்தைப் படுக்கை. மேலே இதமாகக் காற்றளிக்கும் மின் விசிறி. தூய்மையான அறை. வெள்ளைச் சீருடை அணிந்து, பூட்ஸ் ஓசை மெல்லக் கேட்க அளவான புன்னகையுடன் அடிக்கடி அவனைப் பார்த்துச் செல்லும் செவிலியர். வேளைக்குச் சாப்பாடு. ஆரஞ்சுப் பழம், பால் ரொட்டி! பரிவுடன் உடலைப் பரிசோதிக்கும் இளம் டாக்டர், பெரிய டாக்டர் – இப்படியாக அவனுக்குப புதிய அனுபவத்தை அளித்தாலும், ஒரே இடத்தில கட்டிப போட்டிருப்பது போன்ற உணர்வு அவனைத் தவிக்க வைத்தது.

சந்திரமதி அவனைப் பார்த்துச் சென்ற பிறகு மனத்தில் பல போராட்டங்கள். சந்திரமதியின் தூய காதலை எண்ணி எண்ணி வியந்தான். வயது, அனுபவம் எல்லாவற்றையும் மீறியது காதல், மன்மதக் கலை என்பது சொல்லித் தெரிவதில்லையே!

கொடுக்கப்பட்ட புத்தகங்களைப் படித்து விட்டதால் செய்திப் பத்திரிகை – குறிப்பிட்ட செய்திப் பத்திரிகை

கிடைக்காதது பெரும் ஏமாற்றமாக இருந்தது. அவன் படிக்கும் பத்திரிகையில் கட்சிச் செய்திகளைத் தவிர உலகச் செய்திகளே இல்லை.

பாரதியின் பாடல்கள் நினைவுக்கு வந்தன. செல்வர், ஏழை, உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் என்றெல்லாம் 'காதல்' பார்ப்பதில்லை.

'காதலின் ஆட்சிக்கு எல்லையில்லை. கட்டுப்பாடில்லை. இதுவரையில் பெற்றோருக்கு அடங்கியிருந்த ஒரு பெண் அவர்கள் சொற்படி நடந்த ஒரு பெண் – அவர்களே எல்லாம் என்று நினைத்துக் கொண்டிருந்த ஒரு பெண் ஏதோ ஒரு நாள் என்னைச் சந்தித்தபோது பார்த்த பார்வையிலிருந்து, தன் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டாளே' – பக்கிரி சிந்தித்தான்.

வீட்டிற்கு வந்து முறையாகப் பெண் கேட்பது நியாயம் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறாள். வேறு யாரோ ஒரு வரனுக்கு நிச்சயம் செய்திருப்பது தனக்குப் பிடிக்கவில்லை என்பதைப் புலப்படுத்தியிருக்கிறாள். நாம் மேகலா மூலம் அனுப்பிய கடிதத்தை அவள் பார்க்காத – படிக்காத நிலையிலும், நம்மீது காதல் கொண்டு விட்டாள். தூய காதலுக்கு இதைவிட இலக்கணம் வேறு தேவையா? நாமும் நம் பாட்டுக்குத் தூய மனத்துடன் இயங்க வேண்டும். சிந்தித்தவாறே விழிகளை மூடியபடி உட்கார்ந்திருந்தான் பக்கிரி.

அவன் உள் மனம் கேட்டது: 'பக்கிரி! காதல் செய்ய உனக்கு என்ன தகுதியிருக்கிறது? அவளுடைய பெற்றோர் எதிர்த்தால் உன் நிலை என்ன? நன்றாகச் சிந்தித்து முடிவுக்கு வா. அவளுடைய அழகும் உடலும் உன்னைக் கவர்ந்தனவா? அல்லது புரிந்து கொள்ள முடியாத இதய உணர்வு உன்னை ஆட்படுத்தியதா?'

பக்கிரி சிந்தித்தான். 'எப்போதுமே காதலில் சோதனையையும் ஏற்கத்தான் வேண்டும். என்ன செய்யலாம்?



சந்திரமதியை மறந்து விடலாமா? எனக்கு இப்போதுள்ள சூழ்நிலையில் கண்ணுக்குப் புலப்படாத எதிரிகள் இருக்கும் நிலையில், இந்தக் காதல் தேவைதானா? எனக்கு என்ன தகுதி இருக்கிறது? நிரந்தர வருவாயுண்டா? முழுமையாக ஒரு தொழில் தெரியுமா?' அவன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

'அலை ஓய்ந்து குளிப்பது இயலாது. எனக்கென ஓர் அந்தஸ்து ஏற்பட்டு, தக்க வருமானம் கிடைத்த பிறகு காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா? எனக்கு யார் இருக்கிறார்கள் யோசனை கூற? பெற்ற தாயிருந்தால், ஒருவேளை இப்போது எனக்குத் தக்க வழிகாட்டியிருக்கலாம். தாய் இல்லாத போது சந்திரமதி வந்திருக்கிறாள். அவள் என்னை வழி நடத்திச் செல்வாள் என்று உறுதியாக நினைக்கிறேன். என்னிடம் திறமை இருக்கிறது. உழைக்கும் திறனிருக்கிறது. நம்பிக்கை இருக்கிறது. எடுத்து வைத்த அடியை விட்டுப் பின்வாங்கக் கூடாது.

சந்திரமதியின் தந்தையும் ஓர் அரசியல் கட்சிக்காரரே. அவரும் நானும் ஒரே கட்சியில்தான் உறுப்பினர்கள். இன்னும் சொல்லப் போனால் நான் உறுப்பினரல்லன். பாலன் தான் உறுப்பினர். அவர் கடையில் வேலை செய்வதால் என்னையும் தீவிரமாகக் கட்சி ஊழியன் என்று எல்லாரும் நினைக்கிறார்கள். சந்திரமதி சொன்னதுபோல் அவள் தந்தையிடம் சென்று பேசலாம். என்ன பேசுவது ஏது பேசுவது, என்று அவன் சிந்திக்கலானான்.

யாரோ வரும் ஓசை கேட்டது. மதிவாணன் உதவியாளன். மெல்ல வந்து நின்றான். அவன் கண்கள் கலங்கியிருந்தன. நடிப்பா, உண்மையா என்று கண்டறிய முடியவில்லை.

பக்கிரி தலையசைத்து அவனை வரவேற்றான். பக்கிரியின் கரங்களைப் பற்றிக் கொண்டு மிக வருத்தப் படுவதாகத்தன் நிலையைப் புலப்படுத்திக் கொண்டான்.

“நேற்று மாலைதான் தெரியும் தலைவா! உன்னை இப்படித் தாக்கியிருக்கிறார்களே! நான் சத்தியமாகச் சொல்கிறேன். கேட்டதும் என் உடல் நடுங்கியது. இரவு சாப்பிடவில்லை. தூங்கவில்லை. தலைவர் உடனே விசாரித்து வருமாறு கட்டளையிட்டார். எந்த நர்ஸிங் ஹோமில் சேர்த்திருக்கிறார்கள் என்று கேட்டுப் பல இடங்களில் சுற்றினேன். என்னால் முடியாவிட்டால் வேறு யாரால் முடியும்? கண்டு பிடித்து விட்டேன்.

“பழம் – ஹார்லிக்ஸ் வாங்கி வர எண்ணினேன். நாளை வரும் போது வாங்கி வருகிறேன் தோழா! உன்மீது கை வைத்தது யார்? நான் கேள்விப்பட்டேன். எங்கள் ஆள்களே உன்னை அடித்து விட்டார்கள் என்ற செய்தி கேட்டுத் துடிதுடித்துப் போனேன். மதிவாணனிடம் ஓடினேன். ‘தலைவா இப்படிச் செய்யலாமா? நம் ஆதரவாளனை இப்படிச் செய்திருக்கலாமா?’ என்று கதறினேன்.

“தலைவர் ஆடிப்போய்விட்டார். உன் மீது தலைவருக்கு மதிப்பதிகம். தவறு எப்படியோ நடந்து விட்டது. பாலனைக் குறி வைத்தோம். குறி தவறிவிட்டது. மற்றொன்று: தலைவர் மதிவாணன் அனுப்பினார். செலவுக்கு உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமோ கொடுத்து விட்டு வரச் சொன்னார். மதிவாணனுடன் பழகினால்தான் அவர் உயர்ந்த குணம்தெரியும்.” என்று கூறி ஜிப் பையைத் திறந்து கத்தையாக ரூபாய் நோட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டான்.

பக்கிரி மெல்லச் சிரித்தான். “எனக்கு விரோதிகளே யாருமில்லை. என்னை ஏன் அடித்தார்கள்? பாலனுக்கும் எனக்கும் வித்தியாசம் தெரியாதா?”



பலமாகச் சிரித்துவிட்டு, “பக்கிரி! உனக்கு உலக அனுபவம் போதாது. அரசியலில் நீடித்த நண்பனும் இல்லை; நிரந்தர விரோதியுமில்லை. பாலனின் ஆள் நீ என்ற கோபம் தலைவர் மதிவாணனுக்கு உண்டு. ஆனால் உன்னைத் தாக்க அவர் காரணமில்லை” என்று கூறி, பக்கிரியின் செவிக்கருகே சென்று மெல்லிய குரலில், “எனக்கு ஒரு காரணம் தோன்றுகிறது. உன்னை அடித்தவர்கள் யார் என்று நான் யூகிக்கிறேன்... தோழா, நீ ஒரு பெண்ணைக் காதலிக்கிறாயா?” என்று கேட்டான்.

பக்கிரி மெல்லச் சிரித்தான்.

“மில் தொழிலாளர் தலைவர் பெண்ணைத்தானே?” என்று கேட்டான்.

“உனக்குத்தான் தெரிந்திருக்கிறதே, பின் என்னை ஏன் கேட்கிறாய்?” என்றான் பக்கிரி.

“மில் தலைவர் மகளால் வந்த பிரச்னை. தன் மகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயம் செய்திருந்தார். அந்த மாப்பிள்ளை, உன் காதல் லீலையை அறிந்து விட்டானாம். தான் மணக்கவிருந்த பெண்ணை நீ காதலிப்பதை அறிந்து உன்னை ஒழிக்கத் திட்டமிட்டான்.

“அந்தப் பெண்ணின் தந்தை தன் மகள் உன்னை விரும்புவதாகத் தெரிந்து கொண்டார். நீ இருந்தால் அவருக்கு இடர்ப்பாடு என்றெண்ணி உன்னை ஒழித்து விட அவரும் காரணமாயிருந்திருக்கலாம்.

“தோழா! நான் உன்னைச் சந்திக்க வந்த காரணத்தைச் சொல்கிறேன். இனி நீ பாலனை நம்பிப் பலனில்லை. மதிவாணன் உன்னைச் சந்திக்க விரும்புகிறார். அவரால் உனக்கு நல்ல எதிர்காலம் உண்டு. உம் என்று சொல்லு. நான் தலைவரை இங்கே அழைத்து வருகிறேன். இந்தத் தனியார் ஆசுபத்திரியில் சிகிச்சைக்கு நிறையச் செலவாகியிருக்குமே. அந்தச் செலவை மதிவாணரையே

ஏற்றுக் கொள்ளச் சொல்கிறேன். உம் என்று மட்டும் சொல்லு'' என்றான்.

பக்கிரி அவனைப் பார்த்துச் சிரித்தான்.

''என்னை ஒழித்துக் கட்டுவதில் யாருக்கு என்ன ஆதாயம் என்று தெரியவில்லை. என்னை ஏனோ பெரிய மனிதராக்கப் பார்க்கிறார்கள். சரி; போகட்டும். அடிபட்டு விழுந்தவுடன் என்னை மருத்துவ மனையில் சேர்த்தவரே என் முதலாளி பாலன்தான். மருத்துவமனைச் செலவையும் அவரே ஏற்றிருக்கிறார்'' என்றான்.

''தலைவா, ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக்கொள்ளா விட்டாலும் நீ பெரிய மனிதன்தான். பாலனை நீ நம்புகிறாய். அவர் ஒரு வேடதாரி. உன்னைத் தாக்கத் திட்டமிட்டவர்களுள் அவரும் ஒருவர்.''

பக்கிரி அதிர்ச்சியடைந்தான். ''என்ன சொல்லிக் குழப்புகிறாய்? மில் தொழிற் சங்கத் தலைவர் என்றாய். இப்போது பாலன் என்கிறாய். நீ இங்கிருந்து போய்விடு. என்னைக் கொஞ்ச நேரம் அமைதியாக இருக்க விடு... போய்விடு... போயவிடு...'' என்றான்.

அவன் தயங்கி நின்றான். அந்தச் சமயம் மேகலா உள்ளே வந்தவுடன், ஒரு மாதிரியாக அவளைப் பார்த்தவாறே தலையை ஆட்டிக் கொண்டு சென்றான்.

''நான் பள்ளிக்கூடம் போகும் வழியில் இங்கே வந்தேன். சந்திரமதி தான் நேற்றுச் சொன்னதை உங்களுக்கு நினைவுப் படுத்துமாறு என்னை அனுப்பினாள். இன்று பகல் வீட்டிற்கு வருமாறு சொன்னாள்'' என்றாள் மேகலா.

அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே டாக்டர்கள் வந்தனர். அவனைப் பரிசோதித்தனர்.

''மிஸ்டர் பக்கிரி! கடவுள் அருளால் காயங்கள் ஆறிவிட்டன. நீங்கள் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்குப் போகலாம். எச்சரிக்கையாக இருங்கள். இன்னும் ஒரு மாதம்



முழு ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார். பிறகு அவன் காதுகளில் மட்டும் விழும்படியாக, ''மிஸ்டர் பக்கிரி! நீங்கள் திறமைசாலி என்று கேள்விப்பட்டேன். அரசியலை விட்டுவிட்டு வேறு நல்ல தொழிலாகப் பார்த்து வேலை செய்யப் போய்விடுங்கள்!'' என்றார்.

மேகலா கேட்டுக் கொண்டே இருந்தாள். அவள் பக்கம் திரும்பி ''உங்கள் பிரதர் தானே இவர்? நீங்கள் அட்வைஸ் பண்ணுங்க'' என்று கூறிவிட்டு சிறு விஷமப் புன்னகையுடன் சென்றார்.

பக்கிரியைப் பார்த்து மேகலா மெல்லச் சிரித்தவாறு ''அண்ணா! பூரண ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அரசியலை விட்டு விடுங்கள். சந்திரமதியும் நானும் சேர்ந்து திட்டமொன்று வகுத்திருக்கிறோம். நாளைக்கு வீட்டிற்கு வாருங்கள். அவள் சொல்வாள். அவசரம்!...'' என்றாள்.

## பதினைந்து

வெயிலோன் சற்றுக் கடுமையைக் குறைத்துக் கொண்டிருந்தான். கடல் காற்று மூன்று - மூன்றரை மணிக்கே வீசத் தொடங்கியதுதான் காரணம்.

பக்கிரி சந்திரமதியின் வீட்டு முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, அவள் வீட்டு வாசலில் தயங்கியபடியே நின்றான். கதவு சாத்தியிருந்தது. வேப்ப மரத்தில் ஒரு காகம் உட்கார்ந்து கரைந்தது.

மில் தொழிலாளர்களுக்காக வரிசையாகக் கட்டப்பட்ட பழைய வீடானாலும், வீட்டின் முன்புறம் உள்ள சிறு இடத்தில் முருங்கை மரம் வளர்ந்திருந்தது. தொங்கிக் கொண்டிருந்த மெல்லிய முருங்கைக் காய்கள் காற்றில்

அசைந்தாடிக் கொண்டிருந்தன. மதில் மீதிருந்த ஒரு பூனை எட்டிப் பார்த்துவிட்டு, வேறு வேலையாகப் பக்கத்து வீட்டிற்குத் தாவியது.

பக்கிரி தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். மேகலா சொன்னாள் என்பதற்காக, சந்திரமதி வீட்டிற்கு வந்திருக்கிறான். பெண் கேட்க வந்திருக்கிறான். என்ன நேருமோ?

சந்திரமதி மிகத் துணிவுள்ளவள். அந்தத் துணிவு, ஆழமான தூய காதலின் விளைவால் ஏற்பட்டதாக இருக்கலாம். கல்வி, தகுதி, செல்வம், சாதி – எல்லாவற்றையும் மீறி காதல் அவளை ஆட்டிப் படைத்தது.

'ஸார்' என்று மெல்லக் குரல் கொடுத்தான். சந்திரமதியின் தந்தை வேலு அந்த வேளையில் வீட்டில்தான் இருப்பார்என்று மேகலா ஏற்கெனவே தெரிவித்திருந்தாள். அவர் இல்லாதபோது அங்கு செல்வது சரியில்லையே!

ஆனால், சந்திரமதி வீட்டில் இருப்பாள் என்று உறுதி சொல்ல முடியாது. தேர்வு சமயமாதலால் பள்ளிக்குச் சென்றிருப்பாள். அவளுக்கு ஆயிரம் புத்திமதி சொல்லி அவள் தாய் பார்வதி அனுப்பியிருப்பாள். பள்ளியிலிருந்து புறப்படும் நேரம், வீட்டிற்கு வந்துசேர ஆகும் நேரம் எல்லாவற்றையும் கணக்கிட்டு அவள் வருகைக்காகக் காத்திருப்பாள். சின்னப் பையனைப் பள்ளிக்கூட வாசலுக்கு ரகசியமாக அனுப்பிக் கண்காணிப்பாள். எவ்வளவு நாள்களுக்கு இத்தனை கட்டுக்காவல்?

பெரிய மனுஷியான பெண்ணை வீட்டில் வைத்திருப்பது, பெற்றோருக்கு அடி வயிற்றில் நெருப்பைக் கட்டியிருப்பதுபோல் என்று பெரியவர்கள் தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்!

'மெடிகல் ஸீட் எப்போது வாங்குவது – சந்திரமதியை அந்த வரனுக்கு எப்போது கல்யாணம் செய்து கொடுப்பது? நடக்கும் காரியமா?' பார்வதி பல தடவை பெருமூச்சு விட்டிருக்கிறாள்.



கல்யாணம் நிச்சயம் செய்யும் முன்பே சூப்பர்வைசர் மகன் வீட்டிற்கு வந்ததும், பரிசு தர முயன்றதும், சந்திரமதி அதை வீசி எறிந்து அவனை அவமரியாதை செய்ததும் நினைத்துப் பார்த்துப் பார்வதி மிகவும் கலங்கிப் போனாள். சந்திரமதிக்கு வேறொருவன் மீது ஆசை ஏற்பட்டு விட்டது. அவனுடன் சுற்றுகிறாள் என்பதை அறிந்த பிறகு விரைவில் சந்திரமதிக்குக் கல்யாணம் செய்து முடித்துவிட வேண்டும் என்ற கவலையில் மூழ்கினாள். கணவருடன் பேசும் போதெல்லாம், சந்திரமதியின் திருமணத்தைக் குறிப்பிடத் தயங்குவதில்லை; தவறுவதில்லை.

"இதோ பார்! மெடிக்கல் ஸீட் வாங்கியே திருவேன். இப்ப கட்சியே என்னைச் சுற்றிச் சுற்றி வருகிறது. மெடிக்கல் ஸீட் இல்லாவிட்டால்கூட சந்திரமதியைத் தன் மகனுக்கு சூப்பர்வைசர் மணம் செய்து வைக்கத் தயார். அதெல்லாம் கட்சி இரகசியம். உனக்குச் சொன்னால் விளங்காது. ஆனால், இந்தப் பெண் மாப்பிள்ளைப் பையனை அலட்சியப்படுத்துகிறாளே? சந்திரமதி இப்படிச் செய்வாள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை" என்று வேலு சொல்லும்போது அதில் திகைப்பு – கோபம் – ஏமாற்றம் – நம்பிக்கை எல்லாம் கலந்திருக்கும்.

பார்வதி பதில் பேசாமல், தலை குனிந்திருப்பாள். என்ன சொல்வதென்றே தெரியாமல் மௌனமாக இருப்பாள். கண்ணீரை ஒருவருக்கும் தெரியாமல் துடைத்துக் கொள்வாள்.

"பெண்ணை நாம் நன்றாகத்தான் வளர்த்தோம். கட்டுப்பாடுடனும் அதே சமயம் செல்லமாகவும்தான் வளர்த்தோம். சந்திரமதியின் இதுபோன்ற போக்கிற்கு நாம் இருவருமே பொறுப்பாளி. 'பெண்ணை வளர்க்கத்

தெரியவில்லை' என்று உன்னைக் குறை சொல்ல மாட்டேன். பொண்ணு பஸ்ஸில் போனால் இடிபடுவாளே என்று சைக்கிள் வாங்கிக் கொடுத்தேன். அது ஒன்றுதான் நான் செய்த தவறு" என்று புலம்புவதுபோல் வேலு பேசுவதைக் கேட்க, பார்வதிக்கே துக்கம் தாங்காது.

கல்யாணம் செய்து கொள்ளப் போகிற மாப்பிள்ளைப் பையன் வீட்டிற்கு வந்ததும், தனக்குப் பிறந்த நாள் என்று கூறிப் பரிசுப் பொருளை அவன் கொடுத்ததும், சந்திரமதி அந்தப் பரிசுப் பொருளை அலட்சியமாக வீசியதையும், பார்வதி வேலுவிடம் கூறினாள்.

பல்லிடுக்கில் சிக்கிய பாக்குத் தூளைக் குத்தியபடி "நீ வீட்டில் இல்லையா?"

"குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தேன். மாப்பிள்ளைப் பையன் உள்ளே போனவுடன் சந்திரமதி, மிகவும் மரியாதையுடன்தான் நாற்காலி போட்டு, ஃபேனைச் சுழலவிட்டாள். திடீரென்று 'சில் சில்' என்று கண்ணாடி உடையும் ஓசை. ஓடி வந்து பார்த்தேன். அழகான பிரேம் போட்ட கண்ணாடியில் வரையப் பட்ட படம் ஒன்று பரிசாக வாங்கியிருந்தான். அப்போதான் மாப்பிள்ளையை நன்றாகப் பார்த்தேன்."

"நடந்ததைச் சொல்லு."

"சந்திரமதி திக்பிரமை பிடித்தவள் போல், அறையில் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்தாள். மாப்பிள்ளைப் பையன் வேகமாக வெளியே சென்று கொண்டிருந்தான். 'ஸாரி மாமி – நான் திடுதிடுப்பென்று வந்திருக்கக் கூடாது. உங்க பொண்ணு ரொம்ப நல்ல கேரக்டர். என்ன இருந்தாலும் நான் அந்நியன்தானே? திடுதிடுப் பென்று உள்ளே வந்து பரிசுப் பொருளைத் தந்திருக்கக் கூடாது. நான் வருகிறேன்' என்று பெருந்தன்மையுடன் கூறிவிட்டுப் போய்விட்டான்."



வேலு அதிர்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தவர், "சூப்பர்வைசருக்குத் தெரிந்தால் என்ன ஆவது? ஆனால், அவர் இதுவரை ஒரு வார்த்தைகூட என்னைக் கேட்கவில்லை. பிள்ளையைப் போல அவனோட அப்பாவும் ஜென்டில்மேன்! – நீ சந்திரமதியைக் கேட்டாயா?"

"கேட்டேன். அவள் திருப்பி ஒரு கேள்வி கேட்டாள். 'யாரைக் கேட்டு இந்தப் பையனை நிச்சயம் செய்தீர்கள்? மேலும், கொஞ்சமும் பண்பே தெரியாதவனாயிருப்பான் போலிருக்கிறதே? அவனுக்குப் பிறந்த நாளாம்... தன்னையே எனக்குத் தரப் போகிறானாம். என்ன வார்த்தை அம்மா! எப்படி அம்மா இப்படி ஓர் ஆண்பிள்ளையை நீங்கள் வீட்டிற்குள் அனுமதித்து, இப்படிப் பேசச் சொன்னீர்கள்?' என்று சீறினாள். சந்திரமதியின் சுயரூபம் அப்போதுதான் தெரிந்தது. 'எனக்கு அவனைப் பிடிக்கவில்லை. வழுக்கை விழுந்து ஏற்கெனவே கல்யாணமானவன் போல் இருக்கும் அவனையா நான் மணக்க வேண்டும்? முடியாது அம்மா!" என்று கூறி விசும்பினாள்."

சிறிது நேரம் வேலுவும் – பார்வதியும் பேசாமல் நின்றார்கள். பிறகுதான் சந்திரமதி வேறு ஒருவனைக் காதலிப்பதைப் பற்றிய முழு விவரமும் அறிந்தார்கள்.

"ஏங்க – யாருங்க அந்தப் பையனை அடிச்சுப் போட்டாங்க? சந்திரமதியை மணக்க விரும்பிய அந்தப் பையனா?" என்று பார்வதி கேட்டாள்.

தலையை மேலும் கீழுமாக அசைத்தார் வேலு. "நானே அவனுக்கு ஒரு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். யாரோ முந்திக் கொண்டு விட்டார்கள். சைக்கிள் கடையில் இருப்பவன் நல்ல பையன்தான். கட்சிக்கு உழைக்கிறான். ஆனால், அவன் சந்திரமதியை மயக்கிவிடுவான் என்று நான் நினைக்கவில்லை" என்று மெதுவாகத்தான் பேசினார்.

"சந்திரமதி நம் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள் போலிருக்கிறது. நாம் வெளியே போய்ப் பேசுவோம்" என்று வேலு வெளியே வந்தார்.

"ஏங்க - நல்ல அடியா?"

"தெரியாது."

"கை-கால் முறிச்சுடறதுதானே?"

வேலு இதற்குப் பதில் சொல்லவில்லை. ஏதோ சிந்தனையிலாழ்ந்திருந்தார். பிறகு, பார்வதியைப் பார்த்து "உன் பெண் என்ன சொல்கிறாள்?" என்று கேட்டார்.

"அவள் ஒன்றுமே பேசுவதில்லை. எதையோ பறிகொடுத்தவள் போல், இருக்கிறாள். காலை எழுந்தவுடனே குளித்துவிட்டு, பரீட்சைக்காகப் படிக்கிறாள். சாப்பிடுகிறாள். பள்ளிக்கூடம் போகிறாள். இப்ப நான் ரொம்ப கண்டிப்பாக இருக்கிறேன்" என்று கூறி, மிகவும் சன்னமான குரலில், "அந்த சைக்கிள் கடைப் பையன் - பக்கிரியோ - சிக்கிரியோ - அடிபட்டதைக் கேள்விப்பட்டதிலிருந்து அவள் சோகத்திலிருக்கிறாள்" என்றாள்.

வேலு மனைவியை, நிமிர்ந்து பார்த்தார், "நீ கொஞ்ச நாள் கண்டிப்பைக் குறைத்து அன்பாகப் பேசுவதுபோல் பேச வேண்டும். சூப்பர்வைசர் பையனுக்குள்ள அந்தஸ்து, செல்வ நிலைமை, படிப்பு பற்றியெல்லாம் விரிவாக விவரிக்க வேண்டும். அந்தப் பையன் பக்கிரி ஓர் அநாதை - நிரந்தர வேலை இல்லை. படிப்புமில்லை; அவனைக் கல்யாணம் செய்து கொண்டால், வாழ்நாளில் மிகவும் துன்பப்பட வேண்டும் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கு மேல், எனக்கு விரோதமாகக் கட்சியில் இயங்குபவரை அவன் ஆதரிக்கிறான் 'அப்பாவை எதிர்ப்பவரை ஆதரிப்பவன் மீது அன்பாயிருப்பது அப்பா, அம்மாவுக்குச் செய்யும் துரோகமில்லையா?' என்று அமைதியாக விளக்க வேண்டும். மனம் மாறி விடுவாள்.



என்ன? நான் சொல்வது போல் நீ அன்பும் பாசமும் பொழிவது போல் நடிக்க வேண்டும். சரிதானா?" என்று கூறினார்.

தன் கணவர் வேலு சொல்லிக் கொடுத்து நடத்திய ஒத்திகையை விட, அதிகமாகவே பாசத்தைப் பொழிந்தாள், பார்வதி. ஆனால் சந்திரமதி மனம் மாறவில்லை.

"ஏங்க, எனக்குப் பெண்ணாகப் பிறந்த அவளுக்கு எங்கிருந்து இவ்வளவு துணிச்சல் வந்தது? காதலாம் கத்தரிக்காயாம். எங்க காலத்திலே காதலாவது - மண்ணாங்கட்டியாவது? எனக்கு என்னங்க தெரியும்? ஓர் ஆம்பளையைப் பார்த்து நிமிர்ந்து பேசினா எங்கப்பா வெட்டிப் போட்டுடுவாரு. நாம ரொம்பச் செல்லம் கொடுத்துட்டோம்னு தோணுது. பாருங்க - அந்தப் பையன் பக்கிரி அடிபட்டது, ஆசுபத்திரியில் இருப்பது எல்லாம் ஒண்ணுவிடாம சொல்கிறாள். எப்படிங்க அவளுக்குத் தெரியுது? என்னங்க செய்யறது? இப்படியே விடக் கூடாதுங்க" என்று பார்வதி பயத்துடனும் கவலையுடனும் பேசினாள்.

வேலு சிந்தித்தார். 'குஞ்சுப் பறவைக்கு இறக்கை முளைத்து விட்டது. நாம்தான் கவனமாக இருக்க வேண்டும்.'

"அவ ரொம்ப உறுதியாயிருக்காங்க. அந்தப் பையனைப் பற்றி ரொம்பவும் புகழ்கிறாள். அந்தப் பையன் பக்கிரி அப்படியொன்றும் உங்களுக்கு விரோதியுடன் சேரவில்லையாம். அவனுக்கு நல்ல எதிர்காலம் இருக்காம். அறிவாளியாம். சூப்பர்வைசர் வரனுடன் ஒப்பிட்டால் ஆயிரம் மடங்கு சைக்கிள் கடைப் பையன் உசத்தியாம். அழகில், அறிவில், குணத்தில் மிகமிக உயர்வாம். யாருங்க இப்படியெல்லாம் அவளுக்குப் பேசக் கற்றுக் கொடுத்தது? புத்தகம், பத்திரிகை நம்ப வீட்டிற்கு வரக் கூடாதுன்னு கட்டுப்பாடாயிருக்கோமே - ஓ! சினிமா, சினிமாவுக்கு

அழைத்துப் போயிருக்கக் கூடாது. தனியே பள்ளிக்கூடம் போக அனுப்பியிருக்கக் கூடாது?" ஒப்பாரி வைப்பது போல் பார்வதியின் குரல்.

"மேகலாவுடன்தான் சேர்ந்து போனாள். மேகலா கெட்டா போயிட்டாள்? அவள் சொல்லித்தானே இவள் வண்டவாளம் வெளியே வந்தது. என்ன செய்யலாம் யோசனை சொல்லு" வேலு மெதுவாகக் கேட்டார்.

"ஏங்க – அந்தப் பையனாவே பெண் கேட்டு இங்கு வரப் போகிறானாம் – சந்திரமதி சொல்கிறாள்." என்று பார்வதி சொன்னவுடன், வேலு அதிர்ந்தார்.

"இங்கேயா, நம்ம வீட்டிற்கா? இவனுக்கு எப்படித் தெரியும்?"

குரலில் அழுத்தம் தெரிந்தது.

"தலைக்கு மேலே வெள்ளம் போகாம தடுக்கணுங்க. அந்த சைக்கிள் கடைப் பையனிடம் பேசி, சந்திரமதியை மறந்துவிடுமாறு கேட்டுப் பார்ப்போம். அவன் காலைப் பிடித்துக் கெஞ்சுவது என்றாலும் நான் தயார். நம்ம குடும்ப மானம் போகாமலிருக்கணுமேங்க" என்று கூறும்போது பார்வதிக்கு அழுகையே வந்தது.

"ஆசுபத்திரிக்குப் போய்ப் பார்க்கிறேன். அவன் ஒத்துவராவிடில், சந்திரமதியை மறக்காவிடில் அவனைத் தீர்த்துக் கட்டி விடுகிறேன்" என்று உறுதியுடன் பேசினார் வேலு. அந்த சமயத்தில் தான் –

**ப**க்கிரி – சந்திரமதியின் வீட்டு வாசலுக்கு வந்து கதவை மெல்லத் தட்டி 'ஸார்' என்றான்.

வேலு கதவைத் திறந்தார். யார் என்று கேட்க நினைத்தவருக்கு, பக்கிரியை அடையாளம் தெரிந்து விட்டது.

"சீ, நாயே, போடா வெளியே" என்று கூவவேண்டும் போல் தோன்றியது. அருகே இருந்த சவுக்குக் கட்டையை



எடுத்து மண்டையில் அடிக்க வேண்டும் போலவும் தோன்றியது, அடக்கிக் கொண்டார்.

"யார்?" என்று குரல் கொடுத்தார் வேலு. 'வா' வென்று கூப்பிடவில்லை.

சந்திரமதி அன்று வீட்டிலேயே இருந்தாள். தந்தையின் குரல் கேட்டு எட்டிப் பார்த்தாள்.

பக்கிரிக்கு இன்ப அதிர்ச்சி! வெளியே வந்தாள். கண்களாலேயே வரவேற்றாள் சந்திரமதி.

உள்ளே திரும்பி, பார்வதியைப் பார்த்துக் குரல் கொடுத்து, "பார்வதி! யார் வந்திருக்கிறார்கள் பார்" என்றார்.

பார்வதி பக்கிரியைப் பார்த்ததிலலை.

நல்ல களையான முகத்துடன் கம்பீரமாக – ஆனால் பணிவு நிறைந்தவனாக – அழகிய தோற்றத்துடன் நிற்பவனைப் பார்த்து ஒருகணம் திகைத்து, பிறகு, மேல் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு, "யாருங்க?" என்று கேட்டாள்.

"இவன்தான் உன் மகளை மயக்கி மாயப்பொடி போட்ட பக்கிரி!" என்று கூறிய வேலுவின் குரலில் அழுத்தம், சீற்றம், எரிச்சல் அனைத்தும் இருந்தன.

## பதினாறு

**ப**க்கிரி செய்வதறியாது, சொல்வதறியாது, வேலுவின் எதிரே குற்றவாளி போல் நின்று கொண்டிருந்தான். துணிவுடன்தான் சந்திரமதியின் வீட்டிற்குள் வந்தான்.

வரவேற்பில் எந்தவித வித்தியாசமும் முதலில் தெரியவில்லை. வீட்டின் உள்ளே சந்திரமதி இருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டான். அவள் ஒரே ஒரு தடவை எட்டிப்பார்த்து விட்டுச் சென்றாள். பார்வையால் ஏதோ சைகை செய்தது போலிருந்தது. சிறிது நம்பிக்கை ஏற்பட்டது.

சந்திரமதியின் தாய் பார்வதி காளிதேவிபோல் காட்சியளித்தாள்.

"நீதான் பக்கிரியா? பேரைப்பாரு பேரை! என் பெண்தானாடா உனக்குக் கிடைத்தாள் மயக்குவதற்கு?" பார்வதி இப்படிக் கத்தியதைக் கேட்டு வேலுவே ஒரு கணம் திடுக்கிட்டார். பார்வதிக்குக் கோபம் உச்ச நிலையை அடையும் என்பதை அவர் அறிவார்.

"டேய், கல்யாணம் நிச்சயமாயிருக்கிற பொண்ணுடா. உனக்கு என் பெண்தான் கிடைத்தாளா காதலிக்க? சைக்கிள் கடையிலே உட்கார்ந்து கொண்டு ரோடிலே வருகிற போகிறவங்க வேற யாரும் கிடைக்கலையா?- படுபாவி!" பார்வதியின் குரல் ஏழு ஊர்களுக்குக் கேட்டது போல் பயங்கரமாக ஒலித்தது.

"பார்வதி" என்று வேலு உரத்துக் கூவி மனைவியை அடக்க முயன்றார்.

"நாலு வீட்டிற்குத் தெரியறமாதிரி ஏன் கூவுறே?" வேலு மனைவியைச் சமாதானப்படுத்த முயன்றார்.

"ஆமாம்; நாலு பேருக்குத் தெரியாமல் போகப் போறதோ? என்னை அடக்கறதைவிட இந்தப் போக்கிரியை அடக்கி ஒடுக்க உங்களுக்குச் சக்தி இல்லையா?

"கிளியாட்டமா பொண்ணை; இந்தக் குரங்குக்கா வளர்த்தேன்? பெரிய இடத்துலே நிச்சயம் செய்து வைத்திருக்கும்போது இப்படிச் செஞ்சுட்டியே...?" பார்வதியின் குரலின் வேகம் குறைந்தது. தழு தழுத்தது;



ஒப்பாரிபோல் மாறியது. கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிற்று.

வேலு, தன் மனைவியின் தோளைப் பிடித்து உள்ளே தள்ளிக் கொண்டு சென்றார். சந்திரமதியைப் பார்த்து, "அம்மா எப்படி ஆடிப் போயிட்டா பார்த்தியா? வீடேறி வருமளவிற்கு அவனுக்கு எப்படித் தைரியம் வந்தது? வெளியே போய் அவனைப் பார்த்து "எங்கேடா வந்தே? போடா வெளியே! என்று சொல்லி விரட்டு!" வேலு பல்லைக் கடித்துக் கொண்டு பெண்ணை அதட்டினார். அதனால் தன் மனைவி சமாதானமாவாள் என்று பார்த்தார்.

சந்திரமதி அதிர்ச்சி அடைந்து நின்றாள். அவள்தான் பக்கிரியை வீட்டிற்கு வருமாறு அழைத்தது. இப்படி நடக்குமென்று அவள் நினைக்கவில்லை, பக்கிரி வந்தவுடன் எப்படியாவது பேசி அம்மாவையும், அப்பாவையும் சமாதானப்படுத்தி விடலாம் என்று நினைத்தாள். தன்மீது மிகவும் அன்பு, ஆசை வைத்திருக்கும் அம்மா எப்படியும் இக்கட்டிலிருந்து தன்னைக் காப்பாற்றி விடுவாள் என்று நினைத்தாள். அம்மாவும், அப்பாவும் மாறி, மாறி, பக்கிரிமீது வசைமாரி பொழிந்து, அவன் குலத்தையும் தொழிலையும் இழிவுபடுத்திப் பேசும் அவமரியாதையை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

வெளியே வந்து, பக்கிரியிடம் மன்னிப்புக் கேட்கலாம் என்று துடிதுடித்தாள். தன்னை அவர் வெறுத்து விடப் போகிறாரே என்று பயந்தாள்.

பக்கிரி நின்று கொண்டிருந்தான். சிலைபோல நின்று கொண்டிருந்தான். சுயமரியாதை உள்ள எவரும் இத்தகைய அவமரியாதையைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். நான்கு பேர் சூழ்ந்துகொண்டு அவனைத் தாக்கிய போது ஏற்பட்ட வலியைவிட இப்போது அவனுக்கு அதிக வலி.

அதோ, சந்திரமதி வருகிறாள்!

"அவரை நாக்கில் நரம்பில்லாமல் ஏன் வசைமாரி பொழிகிறீர்கள்? அவரை நான்தான் வரச் சொன்னேன். அவர் மீது நான் உயிரையே வைத்திருக்கிறேன். அவர் மிக நல்லவர். நீங்கள் பார்த்திருக்கும் மாப்பிள்ளையை விட மிக புத்திசாலி. பட்டப்படிப்பு இல்லையே தவிர பட்டம் வாங்கியவர்களைவிட அறிவாளி. குணத்தில் மிக உயர்ந்தவர்! நான் தவறானவரைத் தேர்ந்தெடுக்கவில்லை. முறையாகப் பெண் கேட்க வீட்டிற்கு நான்தான் வரச் சொன்னேன்.

"ஆஸ்பத்திரியில் போய்ப்பார்த்தேன். வரச் சொன்னேன். இவ்வளவு கொடுமையாக நீங்க நடந்து கொள்வீர்கள் என்று தெரிந்திருந்தால் நான் அவரை இங்கே வரச் செய்திருக்கமாட்டேன். அப்பா, உங்களைப் பண்பாளர் என்று ஊர் உலகம் சொல்கிறது. நீங்கள் இங்கே நடந்து கொள்வது, பேசுவது எல்லாம் முறையானதா? சரியா? எனக்குப் பிடித்தவரைத் தேர்ந்தெடுக்க எனக்கு எந்தவிதமான உரிமையுமில்லையா?.."

சந்திரமதி பேசிக் கொண்டே போனாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. பயத்தால் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அங்கு பக்கிரிக்கு நேர்ந்துள்ள அவமானம் தன்னால் ஏற்பட்டது என்று உணர்ந்ததால் அவள் குன்றிப்போயிருந்தாள்.

'பளீர்.'

அவள் எதிர்பார்க்கவேயில்லை. அவள் விழிகள் இருண்டன. கன்னத்தில் விழுந்த அறை... அம்மா தான் அடித்திருக்கவேண்டும்.

"டேய்! போடா வெளியே! போகிறாயா? அல்லது கழுத்தைப் பிடித்துத் தள்ளட்டுமா? வீட்டிற்குள் திருடவந்ததாகக் கூச்சல் போட்டுத் தர்ம அடி வாங்கவைக்கட்டுமா?" என்று கூறி பக்கிரியை நெருங்கினார் வேலு!



பளீரென்று கிடைத்த அறையால் சுருண்டு விழுந்த சந்திரமதியை நோக்கி விரைய முயன்ற பக்கிரியைத் தடுத்து பலாத்காரமாக இழுத்துக் கொண்டு வெளியே தள்ளிக் கதவை மூடினார் வேலு.

சந்திரமதி அறையினுள்ளே தள்ளப் பட்டாள். வெளியே கதவு தாழிடப் பட்டது.

பக்கிரி அமைதியாக உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தான். மிதிவண்டி நிலையத்திற்குப் போகவில்லை. பாலனைப் பார்க்கவில்லை. தான் தங்கியிருக்கும் அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தான். விளக்கை ஏற்றவில்லை இரண்டு மூன்று முறை பானையிலிருந்து குளிர்ந்த நீரை மொண்டு குடித்தான். தன்னால் சந்திரமதி அடிபட நேர்ந்ததை எண்ணி வருந்தினான்.

'சந்திரமதி எப்படிப் பேசினாள்! என்னமாகப் பேசினாள்? உயர் காதலுக்கு இலக்கணமாகத் திகழும் சந்திரமதியைக் கைவிடக் கூடாது' என்ற திடமான முடிவுக்கு வந்தான் பக்கிரி. அடுத்து என்ன செய்யலாம்? தன் உயிர் நண்பன் நெடுமாறனைத் தேடிப் புறப்பட்டான்.

அதே சமயம் நெடுமாறன் அவனைத்தேடி வந்து கொண்டிருந்தான். "பக்கிரி! உன்னைத் தேடித்தான் வருகிறேன். உனக்குப் பல விரோதிகள் ஒருபக்கம் இருக்கட்டும். என் காதலியை உடனே காப்பாற்ற வேண்டும். அதற்கு யோசனை ஒன்று கூறப்பா!" என்றான் பக்கிரி.

நெடுமாறன் சிரித்தான். "பக்கிரி! சொன்னால் வருத்தப்படாதே. காதல் கீதல் எல்லாம் கொஞ்ச நாளைக்கு மூட்டை கட்டிவைப்பா. இப்போது உனக்கு உயிர்ப் பிரச்னை! பாதுகாப்புத் தேவை. சட்டமன்ற உறுப்பினர்

தேர்தலில் உன்னைத் தன் பக்கம் இழுக்க இரு பிரிவினரும் முயற்சி செய்கிறார்கள். உன் உயிரைப் பறிக்க ஒரு பக்கம் திட்டம் திட்டப்படுகிறது.

“அவற்றிலிருந்து தப்ப நான் யோசனை கூறுகிறேன். நீ காதல் வலையில் சிக்கியிருக்கிறாய். வேலு செல்வாக்கு மிகுந்தவர். மானப் பிரச்னையாக இந்தக் காதல் விவகாரத்தைக் கருதியுள்ளார். வேலுவின் மகளை நீ மறந்துவிட வேண்டியது தான்! இல்லை என்றால் ஆபத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்!”

நெடுமாறனின் யோசனைகளை ஏற்கும் நிலையில் பக்கிரி இல்லை. இரண்டு நாள்களாகச் சரியாகச் சாப்பிடவில்லை. பசி. பயங்கரப் பசி, சிற்றுண்டி விடுதிக்குள் நுழைந்து, குடும்பத்தவர்கள் சாப்பிடும் அறையில் ஒதுக்குப் புறமாக அமர்ந்து சாப்பிட விரும்பினான்.

தோசை, கிச்சடி, குருமா வரவழைத்துவிட்டு, கண்ணை மூடிக் கொண்டு சிந்திக்கலானான்:

யாரோ எதிரே வந்து உட்கார்வது போல் நிழலாடியது. கண்ணைத் திறந்தான்.

மேகலா!..

பக்கிரி பரபரப்படைந்தான். “சகோதரி! உன்னைச் சந்திக்க நினைத்தேன். நீயே வந்துவிட்டாய் நூறு வயது. தேவதையைப்போல்!”

“நானும் உங்களை எங்கெல்லாம் தேடுவது? மிக அவசரம்!... ஓடோடி வந்தேன்; நீங்களும், சந்திரமதியும் இந்த ஊரைவிட்டு இன்று இரவே புறப்படுகிறீர்கள்” என்றாள் மேகலா.

பக்கிரி நிமிர்ந்து உட்கார்ந்தான். அதிர்ச்சியாக இருந்தது.

மேகலா யோசனை கூறினாள்:



“ஸார், மிகவும் கவனமாகக் கேளுங்க; சந்திரமதியை அழைத்துக் கொண்டு அவள் பெற்றோர் திருப்பதிக்குச் செல்லப் போகிறார்கள். அங்கே, அவளுக்குக் கல்யாணம். இரவு பஸ்ஸில் புறப்படுகிறார்கள். சந்திரமதியும் அவர்களுடன் செல்வாள். நீங்களும் அவர்களைப் பின் தொடர வேண்டும். திருத்தணி பேருந்து நிலையத்தில் பஸ் சிறிது நேரம் நிற்கும். சந்திரமதி, டாய்லட்டிற்குப் போவது போல் பஸ்ஸிலிருந்து இறங்குவாள். வேறொரு பஸ்ஸில் ஏறி அமர்ந்து விடுவாள். நீங்களும் உடனே அதே பஸ்ஸில் ஏறி விட வேண்டும். திருப்பதி பஸ் புறப்படும் முன்பே அதற்கு எதிர்த்திசையில் நீங்கள் ஏறியுள்ள பஸ் புறப்பட்டு விடும். இடையில் ரயில் நிலையம் ஒன்றில் இறங்கி திருச்சியோ, மதுரையோ, சேலமோ எங்கேயாவது சென்றுவிடுங்கள்,” மளமளவென்று திட்டங்களை உதிர்த்தாள் மேகலா.

“ஓரிரு உடைகளை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்; அவளுக்கு ஒரு புடைவை, ஜாக்கெட் எல்லாம் நான் சிறிது நேரத்தில் கொண்டு வந்து தருகிறேன். உங்களிடம் பணமில்லை என்பதை நானறிவேன். என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கிறது. உடனே புறப்படுங்கள்!”

மேகலாவின் துணிவும், திட்டமும் பக்கிரியைச் சுறுசுறுப்பாக இயங்க வைத்தன.

எல்லாம் திட்டமிட்டபடியே நடந்தன, கண நேரத்தில். சந்திரமதி வேறு பஸ்ஸில் ஏறி அமர்ந்தாள்! – கூட்டமே இல்லை. உடனே பக்கிரியும் அதே பஸ்ஸில் வருவான் என்று எதிர்பார்த்தாள்.

ஆனால் பக்கிரியைக் காணோம்!

## பதினேழு

“ஒரு கணம் என் இதயமே நின்று விட்டதுபோல் ஆகிவிட்டது” என்று சிணுங்கியபடியே பக்கிரியின் தோள்மீது சாய்ந்தாள், சந்திரமதி. கலங்கியிருந்த அந்த விழிகளில் சற்றுத் தைர்யம் காணப்பட்டது.

துணிவு அவள் இதயத்தில் நிறைந்திருந்ததால், பயத்தை மறந்தாள்.

பேருந்து புறப்பட்ட பிறகு, ஓடி வந்து ஏறியதால், பக்கிரி சகஜ நிலையடைய சில நொடிகள் ஆயின.

அவள், அவன் மீது சாய்ந்த போதுதான் முதன்முதலாக ஒரு பெண்ணின் மெல்லிய ஸ்பரிசம் அவன் மீது பட்டதை உணர்ந்தான். தோள்மீது சாய்ந்த சந்திரமதிக்கும் அப்படித்தான். பயத்தாலும், வெளியே புழுக்கத்தாலும் வியர்த்து விட்டிருந்தது. புடைவைத் தலைப்பால் கழுத்து நெற்றி – கரங்களைத் துடைத்துக் கொண்டாள். பக்கிரியின் நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையைத் துடைத்தாள்.

அவன் தாய்க்குப் பிறகு, அவன் நெற்றி வியர்வையைத் துடைத்த பெண் சந்திரமதிதான்.

“நானே பயந்துவிட்டேன் சந்திரா” என்ற அவன், அவள் காதுகளில் மட்டும் கேட்கும் வகையில் சொன்னான்.

“திருப்பதி பஸ் புறப்பட்டதிலிருந்து உன்னைத் தொடர்ந்து வருகிறேன். உன் தோழி மேகலா திட்டங்களை மிகவும் தெளிவாக வகுத்திருந்தாள். உண்மையில் அவள் மிகத் திறமைசாலி” என்று மேகலாவைப் புகழும் போது சந்திரமதிக்குப் பெருமையாக இருந்தது.

“மிகப் பெரிய பிரச்னையில் இறங்கி விட்டோம். என்ன நேர்ந்தாலும், உங்களை விட்டுப் பிரிவதில்லை என்ற



உறுதியுடன் முடிவெடுத்தேன்” என்று அவன் தோள்மீது நன்றாகச் சாய்ந்து கொண்டு சொன்னாள் சந்திரமதி.

“மெதுவாகப் பேசு. நம்மைச் சிலர் கவனிக்கிறார்கள்” என்றான் பக்கிரி.

“இளம் பெண்ணும், ஆணும் ஒன்றாகச் சென்றால் பார்க்காத கண்கள் உண்டா? பேசாத பேச்சு உண்டா?” சந்திரமதி தத்துவம் பேசினாள்.

‘டிக்கட்... டிக்கட்!’ என்று பேருந்தின் நடத்துனர், கையில் பயணச் சீட்டுகளுடன் வந்து கொண்டிருந்தார்.

“நாம் எங்கே போகிறோம்?” என்று சந்திரமதி கேட்டாள்.

“அதைவிட, இந்தப் பேருந்து எங்கே போகிறது என்று கேள்!” என்று பக்கிரி கூறியபோது இருவரும் சேர்ந்துச் சிரித்தனர்.

முன் இருக்கையில் இருந்தவர்கள் கிருஷ்ணகிரிக்குப் பயணச் சீட்டு வாங்கினார்கள்.

“ஓ! இது கிருஷ்ணகிரி செல்லும் பேருந்து. கிருஷ்ணகிரிக்கு டிக்கட் வாங்கி, அங்கே இறங்கி பங்களூர் சென்று விடுவோம். அங்கே இரவு தங்கி, அமைதியாகப் பேசி முடிவு செய்வோம்” என்றான் பக்கிரி. அதன்படியே பயணச்சீட்டுகளை வாங்கினான்.

வழியில், பேருந்து சற்று நேரம் நின்றபோது இரண்டு வடையும் காபியும் வாங்கி வந்தான். அதை அவள் ஆவலுடன் சாப்பிட்டாள். பசி ஓரளவுக்கு அடங்கியது. சற்று நேரத்தில் பேருந்து செல்லும் வேகத்தில் அவள் கண்ணயர்ந்தாள்.

இப்போது நன்றாகவே அவன் மீது சாய்ந்து கொண்டாள். ‘இனி எனக்கு நீங்கதான் ஆதாரம்’ என்பதுபோல் அவள் உரிமையுடன் சாய்ந்து உறங்கினாள்.

சந்திரமதியை மிக அருகே மிக அருகே, மிக நெருக்கமாக அவன் அப்பொழுது பார்க்கிறான்.

அவள் முக அழகை அங்குலம் அங்குலமாக ரசித்தான். அவளுடைய காந்தள் விரல்களை அவன் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

'நான் செய்வது சரியா? நமக்கென்று என்னதான் பின்னணியிருக்கிறது? நிரந்தர வேலை இருக்கிறதா? உலக ஞானம் இருக்கிறது. ஆனால் அதற்கு அத்தாட்சியான பள்ளிச் சான்று இல்லை.'

கம்பராமாயணம் – சிலப்பதிகாரம் – திருமுருகாற்றுப் படை யினின்று மேற்கோள்களுடன் தெளிவாகப் பேசுவான். ஆனால் புலவர் என்ற சான்று இல்லை. அவன் பெயருக்குப் பின்னால் ஆங்கில எழுத்துகள் ஒன்றுகூட இல்லை.

பெயருக்கு முன்னால்கூட ஆங்கில எழுத்தில்லை.

"என்ன, பக்கிரி – இன்ஷியல் என்ன?' என்று கேட்டால், அவன் மெல்லச் சிரிப்பான்.

"முன் எழுத்து தேவையா?" என்று கேட்பான்.

"அது உன் பாரம்பரியத்தைக் குறிக்கும் எழுத்து... நீ தான்தோன்றியா?" என்ற கேள்வி வரும்.

'நியாயமான கேள்வி. என் பாரம்பரியத்தை – ஒழுக்கத்தை அந்த முன் எழுத்துகள் சான்று கூறும்' என்றான்.

'இனி என் தாயின் பெயரின் முதல் எழுத்தைக் குறிப்பிடுவேன்' என்றான். அவன் இலட்சியத்தை – துணிவை– அனைவரும் பாராட்டுவார்கள்.

'ஆனால், சந்திரமதி நல்ல பாரம்பரியம் மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவள். இயற்கையான அறிவாற்றலுடன் கல்வியும் சேர்ந்திருக்கிறது. நல்லவனாகப் பார்த்து மணம் புரிவிக்க அவள் பெற்றோர் முயன்று கொண்டிருக்கும்



வேளையில் நாம் அந்தக் குடும்பத்தின் அமைதியைக் கெடுப்பது நியாயமா?'

அவன் பலவாறாக எண்ணினான். அடுத்து என்ன செய்யப் போகிறோம் என்று அவனுக்கே தெரியவில்லை.

பேருந்து விரைந்து கொண்டிருந்தது. கடும் வெயில் திடீரெனக் குறைந்து குளிர்ந்த காற்று வீசியது. விழிகளை அவை மெல்லத் தழுவிச் சென்றன. இருக்கையை ஒரு பக்கமும், சந்திரமதியை மறுபக்கமும் பிடித்துக் கொண்டு கண் அயர்ந்தான்.

அவன் செவி அருகே மெல்லிய சிரிப்பொலி. அவன் கன்னத்தை மயிலிறகு போன்ற மென்மை வருடியது.

"கிருஷ்ணகிரி நெருங்குகிறது போலிருக்கிறது" என்றாள் சந்திரமதி. அவன் துயில் கலைந்து எழுந்து தன்னைச் சரி செய்து கொண்டு, உறங்கும் பக்கிரியையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறாள் போலிருக்கிறது!...

'பாவம், நம்மால் இவருக்குத் தொல்லை. இவ்வளவு துணிவு நமக்கு எப்படி வந்தது? பத்தொன்பதாண்டுகளாக உயிருக்குயிராக வளர்த்த பெற்றோரையே கண நேரத்தில் பிரிந்து வந்துவிட்டோமே? வருங்காலத் திட்டம் என்ன? உடனே ஏதாவது ஒரு கோயிலுக்குச் சென்று கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். உடனே பதிவாளர் அலுவலகம் சென்று பதிவு செய்து கொள்ள வேண்டும்!....

கைவசம் மாற்றுப் புடைவை ஒன்றிருக்கிறது. உள்ளாடை வாங்க வேண்டும். இரண்டு மூன்று ஊர்களிலுள்ள சிநேதிகளின் முகவரி கைவசம் இருக்கிறது. அங்கே சென்றால் அவர்கள் மகிழ்வார்கள். இருவரில் ஒருவருக்காவது வேலை கிடைக்காமல் போகுமா?

கிருஷ்ணகிரியில் இரவு தங்க வேண்டும். அல்லது இரவோடிரவாக பெங்களூர் சென்று விடலாம்.' கற்பனைகளில் மிதந்தாள் சந்திரமதி.

“ஊம். சிக்கிரம் இறங்குங்க” என்று நடத்துனர் குரல் கேட்டதும் பக்கிரி திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

சந்திரமதி விழித்துக் கொண்டு தன்னைப் பார்த்துப் புன்முறுவல் புரிவதைப் பார்த்தவுடன், தன்னை அறியாமல் கண்ணயர்ந்தது தவறு தானே என்று வெட்கமுற்றான். ‘அவளுக்கு நான் காவலா? என் இலட்சணம் இவ்வளவுதானா?’

“ரொம்ப நேரம் தூங்கிவிட்டேனா, சந்திரா?” என்று கேட்டு அவள் விழிகளை நேருக்கு நேர் சந்தித்து, “நான் தூங்கியிருக்கக் கூடாது. உனக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டியவன் தூங்கியது தவறு தான்” என்றான்.

“சரி, சரி. பிறகு பேசிக் கொள்வோம். இறங்குங்கள்” என்று சந்திரமதி அவசரப்படுத்தினாள்.

“ஊம்; எம்மாம் நேரம்; சிக்கிரம் இறங்குங்க” என்று நடத்துனர் அவசரப்படுத்தினார். குறுகலான இறங்கும் வழிப் பாதையை அடைத்துக் கொண்டு நின்றிருந்த நடத்துனரிடம், “பங்களூருக்குப் பேருந்து இருக்கிறதா?” என்று கேட்டான் பக்கிரி.

“அங்கே போய்க் கேளுங்க. ஊம் சிக்கிரம் இறங்குங்க” என்று பிடித்துத் தள்ளமாட்டாத குறையாக நடத்துனர் கூறி, சந்திரமதியை அப்படியே தலைமுதல் கால் வரையில் விழுங்கி விடுவது போல் பார்த்து, ஓட்டுனரிடம் “நல்ல கிராக்கி தான் குட்டி!” என்றான். சொன்னதோடல்லாமல், அவள் இறங்கும்போது அவள் மேனியை மெல்ல இடித்தான். அதில் அவனுக்குத் தனி ஆனந்தம்.

சந்திரமதியின் உடலில் கம்பளிப்பூச்சி நடமாடியது போன்ற உணர்ச்சி. அவன் சொற்கள் அவளைக் கோபாவேசம் கொள்ளச் செய்தன.

அவள் திரும்பி நின்றாள். “ஏய், மடையா? உனக்குத் தங்கச்சி இல்லையா?” என்று சீறினாள்.



நடத்துனர் நடுங்கி விட்டான்.

நடத்துனர் ஓட்டுனரைப் பார்க்க, ஓட்டுனர் - பேருந்தை விரைந்து செலுத்தினான்.

“வர, வர பண்பு மிகவும் குறைந்து வருகிறது...” என்று முணுமுணுத்த சந்திரமதியின் அருகே வந்த பக்கிரி, நடந்தவற்றை அறிந்து அதிர்ச்சியடைந்தான்.

பக்கிரி ஒரு கணம் நின்று சிந்தித்தான். “சந்திரமதி! இனி நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். புது உலகில் நுழைந்திருக்கிறோம். கழுகுகளும் - கோட்டான்களும் பருந்துகளும் - ஓநாய்களும் மனித வடிவில் நடமாடுகின்றன. இராவணர்கள் மனிதனுக்குள் புகுந்திருக்கிறார்கள்!” என்றான்.

அந்த நிலையிலும் பக்கிரியின் பேச்சை சந்திரமதி ரசித்தாள்.

“நீ இறங்கிய பிறகு, நான் இறங்கியிருக்க வேண்டும். நாம் எங்காவது ஐந்து நிமிடம் அமர்ந்து பேசி அமைதியாக முடிவெடுப்போம்” என்றான்.

பக்கிரி பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் சந்திரமதி ரசித்தாள். நேசம் மிகுந்தவனாக மட்டும் பக்கிரி அவளுக்குத் தோன்றவில்லை. அவளுடைய வாழ்க்கைக் காவியக் கதாநாயகனாகவே அவள் அவனை இதயத்தில் வரித்துக் கொண்டாள்.

பேருந்து நிலையத்துக்கருகே இருந்த சிற்றுண்டிச் சாலையில், ஒலிநாடா ஒன்று அலறிக் கொண்டிருந்தது. ‘கந்தர் சஷ்டி கவசம்’ மெட்டில் கிழ்த்தரமான கருத்துகளைக் கொண்ட பாடல்.

“வேறு எங்காவது போவோம். இந்தப் பாட்டை ஒலிபரப்பும் இந்த விடுதியின் தரம் எப்படி இருக்கும் என்று யோசித்தீர்களா?” என்று கேட்டாள்.

சற்றுத் தொலைவில் நடுத்தரச் சிற்றுண்டி விடுதி இருந்தது. இருவரும் அங்கு சென்றனர். சந்திரமதிக்கு 'டாய்லட்' இருக்குமிடத்திற்கு உடனே செல்ல வேண்டியிருந்தது.

அந்த ஓட்டலில் 'கல்லா'வில் உட்கார்ந்திருந்தவன் 'டாய்லட்'டிற்குச் செல்ல வழிகாட்டினான். அந்த இடம், ஓட்டலின் பின்புறம் இருந்தது. அந்த இடத்தில் வெளிச்சம் குறைவாக இருந்தது சாப்பிட்ட எச்சில் தட்டுகளை, அழுக்குத் தண்ணீரில் முக்கி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

விடலைச் சர்வர்கள் பீடி பிடித்துக் கொண்டு ஒருவரையொருவர் சீண்டிக் கொண்டிருந்தனர்.

சந்திரமதியைப் பார்த்தவுடன் சமீபத்தில் மீசை அரும்பிய பையன் ஒருவன் குஷியாகப் பொருள் புதைந்த சீழ்க்கை யடித்தான். கீழ்த்தர சினிமாப் பாட்டு ஒன்றைப் பாடினான்.

'டாய்லட்' என்ற பெயருடைய அந்த இடத்துக்குக் கதவு இல்லை. கதவு இருந்த இருண்ட அறையில், ஒரே துர்நாற்றம்.

சந்திரமதிக்கு அழுகையாக வந்தது. வெளியே பக்கிரி காத்துக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடன் அங்கிருந்த விடலைகள் வாலைச் சுருட்டிக் கொண்டனர்.

"சந்திரா! இதுபோன்ற பல நரகங்களை நாம் அனுபவித்தாக வேண்டும்" என்று ஆறுதல் சொன்னான் பக்கிரி.

சிற்றுண்டி மேஜை அருகே அமர்ந்து, காய்ந்த பஜ்ஜியையும், ஜவ்வு போன்ற பூரிக் கிழங்கையும் சாப்பிட்டுக் கொண்டே, அடுத்து நடக்க வேண்டியவற்றைத் திட்டமிடலானார்கள்.



"இந்த நேரம், அம்மாவும் அப்பாவும் அதிர்ந்து போயிருப்பார்கள். நம்மைக் கண்டுபிடிக்க நான்கு திக்கும் ஆள்கள் பறந்திருப்பார்கள்!" என்றாள் சந்திரமதி.

"அவர்கள் கையில் சிக்குமுன்பு, நாம் திருமணத்தை முடித்து விட வேண்டும்!" என்றான் பக்கிரி.

பங்களூர் சென்று இரவு தங்குவதென்றும் அங்கே தன் தோழி இருப்பதாகவும், காலையில் முகவரி தேடி அங்கு செல்வதென்றும் திட்டம் வகுத்தாள் சந்திரமதி.

பங்களூர் பேருந்தில் ஏறி, இரவு பத்து மணிக்குப் பக்கிரியும் சந்திரமதியும் பங்களூர் அடைந்தனர்.

ஒரு விடுதியில் தங்கலாம் என்று முடிவு செய்து, ஒவ்வொரு லாட்ஜாக ஏறி இறங்கினார்கள். கடைசியாக ஒரு லாட்ஜில் இடம் கிடைத்தது.

இவர்கள் இருவரையும் சந்தேகக் கண்ணுடன் பார்த்து இடம் கொடுத்த அந்த லாட்ஜ் முதலாளி, சென்னைக்கு 'ஃபோன்' செய்தான்.

## பதினெட்டு

திருத்தணிகையைத் தாண்டிச் சிறிது தூரம் பேருந்து சென்றவுடனேயே, சந்திரமதியைக் காணாமல் பார்வதி 'ஓ'வென்று கூக்குரலிட்டாள்.

வேலுவும், பார்வதியும் ஒருவரையொருவர் ஒரு கணம் அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டனர். அவர்களுடன் துணையாக இன்னும் ஐந்து பேர் பேருந்தில் வந்தனர். 'காதும் காதும்' வைத்தாற்போல் திருமணத்தைத் திருப்பதியில் நடத்தி விட முடிவு செய்த வேலு, துணைக்கு அடியாட்களை அழைத்துக் கொண்டார்.

சந்திரமதி இப்படிச் செய்வாள் என்று அவர்கள் கனவில்கூட நினைக்கவில்லை. தன் மகள்மீது பார்வதி எள்ளளவும் சந்தேகப்படவில்லை.

திருமணச் செய்தியை மிக ரகசியமாக வைத்திருந்தும், மேகலாவிற்குத் தெரிந்து அவள் சந்திரமதியையும் பக்கிரியையும் எச்சரித்து விட்ட செய்தி அவர்களுக்குத் தெரியாது. மேகலாவை அவர்கள் முழுமையும் நம்பினார்கள். திருமணம் நடந்துவிட்ட பிறகு சந்திரமதி, பக்கிரியை மறந்து விடுவாள் என்றே பார்வதி நினைத்தாள். கல்யாணத்திற்கு முன்பு 'இப்படி'யும் நடப்பதுண்டு என்று அவள் கேள்விப்பட்டிருக்கிறாள்.

ஆனால், வேலு நம்பவில்லை. அவர் உள்ளத்துக்குள் ஏதோ 'சுருக் சுருக்'கென்று குத்திக் கொண்டிருந்தது. அன்றிலிருந்து கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வெளியே அனுப்பியவுடன், அவன் எதிர் நடவடிக்கை எடுப்பான் என்று வேலு நினைத்தார். அதற்கு ஏற்ற முன் எச்சரிக்கை நடவடிக்கையாக பக்கிரி கோஷ்டி சேர்த்துக் கொண்டு, கல்யாணம் நடப்பதைத் தடுத்து விடக் கூடும் என்று அவருடைய உள்ளுணர்வு உணர்த்திக் கொண்டிருந்தது. அதனால், உதவிக்காக நம்பகமான ஐந்து பேரை உடன் அழைத்து வந்தார். திருமண ஏற்பாடுகளைப் பிள்ளை வீட்டார் செய்வதாக ஏற்றுக் கொண்டனர். 'மெடிகல் ஸீட்டும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். சந்திரமதி கிடைத்தால் போதும்' என்ற தாலிகட்டத் துடித்துக் கொண்டிருந்த மாப்பிள்ளை உறுதி கொண்டு, மிக எளிமையாகத் திருமணத்தைத் திருப்பதியில் நடத்திவிட முடிவு செய்தான். கல்யாணம் முடித்து வந்து, சென்னையில் பிரமாதமாக வரவேற்பு வைத்துக் கொள்ளலாம் என்றும் திட்டமிட்டார் வேலு. பக்கிரிக்குச் சந்திரமதி கிடைக்காமல் செய்து பாலன் கோஷ்டியினரின் முகத்தில் கரி பூசவும் திட்டமிட்டார்.



ஆனால், சந்திரமதி ஒரு கணத்தில் காணாமல் போனது, அவர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. திருப்பதிக்குச் செல்லாமல் பேருந்தை வழியில் நிறுத்தி திருத்தணி நகர எல்லையிலேயே அனைவரும் இறங்கினர்.

"அவள் எங்கே போயிருக்கப் போகிறாள்? திருத்தணியிலேயே பதுங்கியிருப்பாள்; இங்கே சந்து பொந்தெல்லாம் தேடுவோம்" என்று சண்டியர் இருவர் புறப்பட்டனர்.

பார்வதி தலையில் கையை வைத்துக் கொண்டு இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள். "மாங்கல்யத்தையும், புதுப்புடைவையையும் அல்லவா சந்திரமதி கையுடன் எடுத்துப் போய்விட்டாள்? ஐயோ" என்று பிலாக்கணம் வைத்தாள் பார்வதி.

திருத்தணிகை விடுதியில் அடுத்து என்ன செய்வதென்று புரியாது அழுது புலம்பிக் கொண்டிருந்த பார்வதிக்குச் சற்று ஆறுதலான தகவல் ஒன்று கிடைத்தது. அடுத்த அறையில் தங்க வந்த தம்பதி, பார்வதியின் வருத்தத்தை அறிந்து தாம் அறிந்தவற்றைக் கூறினர்.

திருத்தணி பேருந்து நிலையத்தில் ஓர் இளம் பெண் ஓடி வந்து அவர்கள் ஏறியிருந்த பேருந்தில் ஏறுவதைத் தான் பார்த்ததாகவும், அந்தப் பேருந்து புறப்படும் நேரத்தில் மற்றோர் இளைஞன், அவசர அவசரமாக ஏறி அவளருகே உட்கார்ந்ததைக் கண்டதாகவும் கூறினார்.

"நாங்க தவறான பஸ்ஸில் ஏறிவிட்டோம். சென்னைக்குப் போவதற்குப் பதில் ஓசூர் பேருந்தில் ஏறிவிட்டோம். அப்போது எங்க பஸ்ஸில் நாங்கள் கண்டதைத்தான் கூறுகிறோம்" என்றனர்.

சிறு தடயம் கிடைத்ததும். வேலு சுறுசுறுப்பானார். பார்வதியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"ஆமாம், ஆமாம். பங்களூரில் சந்திரமதிக்கு மிக நெருங்கிய சிநேகிதி இருக்கிறாள். அங்கு போயிருப்பாள்"

என்றாள் பார்வதி. துக்கம் நொடியில் பறந்தோடிவிட்டது. நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"பங்களூருக்கு நேரே பேருந்து இல்லை. அதனால் ஒசூர் போய், அங்கிருந்து பங்களூர் போயிருப்பான்" என்றார் வேலு.

தேடுவதற்கு எஞ்சியிருந்த இருவரைப் பங்களூருக்குச் செல்ல வாடகை வண்டியில் அனுப்பினார். சென்னை சென்று இன்னும் ஆள்களைச் சேர்த்துக் கொண்டு பங்களூர் செல்லவும் திட்டமிட்டார்.

"இந்தச் சமயம் பணம் காசு பார்க்கக்கூடாது. உடனே வாடகைக் காரில் சென்னை செல்வோம். அங்கு சென்று திட்டமிடுவோம். அந்த ராஸ்கலையும் பிடித்து விடுவோம்" என்று சூளுரைத்தார் வேலு. பக்கிரி இப்போது எதிரில் இருந்தால், ஒரே நரசிம்மாவதாரம்தான்!

பங்களூரில் பக்கிரிக்குக் கிடைத்த விடுதி அறை சுமாரானது தான். அந்த விடுதியும் சந்தேகப் படக்கூடிய இடம்தான்.

அறையில் ஒரே ஒரு கட்டில்தான் இருந்தது. ஆனால் 'டபுள் ரூம்' சார்ஜ்! டாய்லட் கதவைத் திறந்தாள் சந்திரமதி. டாய்லட் சரிவரக் கழுவப்படாததால் துர்நாற்றம் உள்ளேயிருந்து வெளியே விரட்டும் சக்தி பெற்றிருந்தது.

சுண்ணாம்பு அடிக்கப்பட்டுப் பல வருடங்கள் ஆனதால் அறைச் சுவர்களில் பலவிதக் கிறுக்கல்கள்; சாந்துப் பொட்டுகள்; வெற்றிலைச் சாறு உமிழப்பட்ட கறைகள்; தரையில் திக்குச்சித் துண்டுகள், துண்டு சிகரெட்கள், கட்டில் அடியில் காலியான பிராந்தி பாட்டில்கள், அழுக்கான தலையணை. மண் கூஜாவில் தண்ணீர் இல்லை. மங்கலான வெளிச்சம் தரும் மின் 'பல்பு'.

சந்திரமதி அந்த அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தாள். மின்விசிறி 'கட கட' சப்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது.



"என்ன வாடகை?" என்று சந்திரமதி கேட்டாள்.

"நூறு ரூபாயாம். முந்நூறு ரூபாய் அட்வான்ஸாம்."

"சொல்வதுதானே, நாம் நாளைக் காலையில் அறையைக் காலி செய்து விடுவோம் என்று!"

"சொன்னேன். காலி செய்யும் போது மீதித் தொகையைத் தந்து விடுவதாக மானேஜர் கூறினார்."

"எனக்கென்னவோ விடுதி மானேஜர் பார்வை – பேச்சு எல்லாமே ஒரு மாதிரியாகப் படுகிறது."

சந்திரமதி இப்படிக் கூறவும், பக்கிரி மெல்லச் சிரித்து, "ஆமாம்; அந்த விடுதி மானேஜர் நம்மைப் பார்த்துச் சந்தேகப்படுகிறார். 'உங்க ஒய்பா?' என்று அரைகுறை கன்னடமும் – தமிழும் ஆங்கிலமும் கலந்த மொழியில் என்னைக் கேட்டார்" என்றான்.

சந்திரமதி சிரித்தவாறு, "அதற்குப் பதில் நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்ற கேட்டு அவனைப் பார்த்தாள்.

மிருந்த களைப்பு. காலை நீட்டிக் கொண்டு அப்பாடா என்று சாய்ந்தால் போதுமென்று தோன்றியது.

"என்ன சொல்லியிருப்பேன்? 'ஆமாம் ஒய்ப் தான்' என்றேன்" என்றுகூறி, 'சரிதானே?' என்று சந்திரமதியின் கன்னத்தில் மெல்லத் தட்டினான்.

"மனைவி மாதிரி தான்; இனிமேல் தான் பதிவுத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்று சொல்லியிருப்பீர்களோ என்று சந்தேகப்பட்டேன்."

அவள் பேச்சால் ஒரு கணம் அவன் மௌனமானான்.

பிறகு –

"சரி, குடிக்க இந்த மண் கூஜாவில் தண்ணீர் கொண்டு வருகிறேன். அதற்கு முன்பாக ஒரு கேள்வி – கேட்கட்டுமா? கோபிக்கமாட்டாயே? அல்லது என்னைத் தவறாக நினைக்க மாட்டாயே? ஆளை எடை போடக் கூடிய ஆற்றல்

உனக்கு எப்படி வந்தது? உன் வயதுக்கு உன் அறிவாற்றல் அதிகம் என்றே எனக்குப் படுகிறது. அப்பா அம்மாவைப் பிரிந்து, அதிக நாள் பழக்கப்படாத என்னுடன் வரக் கூடிய துணிவு உனக்கு எப்படி வந்தது? இப்போது என்னைக் கேட்டாயே 'மனைவி மாதிரி' இனிமேல்தான் பதிவுத் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்' என்று சொல்லிவிடப் போகிறீர்களோ என்று சந்தேகப்பட்டதாகச் சொன்னாயே, அவ்வாறெல்லாம் பேசக் கூடிய திறமை உனக்கு எப்படி வந்தது?"

சந்திரமதி சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். அவள் முகத்தில் எந்தவித மாறுதலுமில்லை. மெல்லிய புன்னகையுடன் கூறினாள்:

"நான் அறிந்த வரையில் எனக்குத் துணிவு - ஆற்றல் - சாதுர்யப் பேச்சு எல்லாம் உங்களிடமிருந்துதான் வந்தன உங்களைச் சந்தித்த முதல்நாளே ஓர் ஒளி என்னுள் பாய்ந்தது. 'ஜிவ்' வென்ற அந்தச் சக்திக்கு என்ன பெயர் என்று சொல்லத் தெரியவில்லை. அது என்னிடம் ஒரு மாறுதலை ஏற்படுத்தியதை உணர்ந்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். உங்களைப் பார்த்த பிறகு, எல்லாம் நீங்கள்தான் என்பதை உறுதியாக முடிவு செய்து விட்டேன். வாழ்விலும், தாழ்விலும் உங்களுடன் இணைந்தே இருப்பதென்ற உறுதியை எப்போதோ உள்ளத்தில் ஏற்றுவிட்டேன். சரி; இப்பொழுது நீங்கள் எனக்குச் செய்யக்கூடிய ஓர் உதவியை நான் கேட்கலாமா?" என்றாள்.

"உதவியா? - கேள் சந்திரமதி! செய்யக் காத்திருக்கிறேன்" என்று பரபரத்து அவள் கேள்வியை எதிர்நோக்கினான்.

சந்திரமதி மெல்லச் சிரித்தவாறு, "விளக்கை அணைத்து விட்டுக் கதவைத் தாழிடுங்கள், எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. கொஞ்சம் தூங்கினால்தான்



நாளை விடிகாலையில் எழுந்து, என் தோழியின் முகவரியைத் தேடிச் செல்ல சுறுசுறுப்பு வரும். இதுதான் நீங்கள் இப்போது செய்யக்கூடிய உதவி." என்று கூறிச் சிரித்தாள். அவள் சிரிப்பு அவனை மயக்கியது.

பக்கிரியும் மனம் விட்டுச் சிரித்தான். "தண்ணீர் கொண்டு வைத்துவிட்டு, விளக்கை அணைக்கிறேன். அத்துடன் ஒரே ஒரு தலையணைதான் இருக்கிறது. மற்றொன்று கேட்டு வாங்கி வருகிறேன். 'டபுள் ரூம்' என்று ஒரே ஒரு கட்டில்தானா ஏன்? என்று கேட்டு விட்டு வருகிறேன்" என்று கூஜாவுடன் வெளியே போக முயன்றவனை, "வேண்டாம் அதெல்லாம் கேட்காதீர்கள். ஒரே ஓர் இரவுதானே? சமாளித்துக் கொள்வோம்" என்றுகூறி அவனைப் பொருள் நிறைந்த பார்வையுடன் நோக்கினாள்.

பக்கிரிக்குப் புரியவில்லை. அவனுக்கு எல்லாமே புதிதுதான். சந்திரமதிக்கும் புதிதுதானே! ஆனால், அவள் ஆழ்ந்து சிந்தித்துப் பேசுகிறாள். வயதுக்கு மீறிய ஆற்றல்.

இதுநாள் வரை அவளுடன் காதலைப் பற்றிச் சிந்தித்ததில்லை. இளம் பெண்ணுடன் நெருங்கிப் பழகியதில்லை.

சந்திரமதிக்குக் களைப்பும் - உறக்கமும் விழிகளைச் சுழற்றின. கட்டில் அருகே இருந்த நாற்காலியில் சாய்ந்தாள். பக்கிரி வந்து அவளை எழுப்பினான். அவன் மெல்லிய குரலில் பேசினான்.

"சந்திரமதி! நீ நினைத்தது மிகவும் சரி. நான் போகும்போது லாட்ஜ் மேனேஜர் போன் செய்து கொண்டிருக்கிறான். நம்மைப் பற்றித்தான் யாரிடமோ சொல்கிறான் என்று உணர்ந்தேன். இந்தக் கணத்தில் கூட நாம் இங்கிருந்து புறப்பட்டால் நல்லதுதான். ஆனால், இரவு வேளையில் என்ன செய்வது? நடப்பது நடக்கட்டும். நீ தூங்கு" என்றான்.

"கவலைப்படாதீர்கள். என்ன ஆகிவிடும்? நீங்களும் இப்படியே படுத்துக் கொள்ளுங்கள்" என்று கட்டிலைக் காட்டினாள் சந்திரமதி.

பக்கிரி, படுக்கை விரிப்பை எடுத்துக் கீழே விரித்தான். கதவைத் தாழிட்டு விளக்கை அணைத்தான். படுத்தான்.

"கட்டிலில் படுத்தால் தவறா?" என்று கேட்டாள் சந்திரமதி, மெல்லச் சிரிப்பது, பக்கிரிக்குக் கேட்டது.

"இல்லை, இல்லை. நாம் கணவன் மனைவியான பிறகுதான் அருகே படுப்பது மற்றதெல்லாம்..." என்றான்.

"ஒரு பருவப் பெண்ணும், ஆணும் அருகருகே படுக்கக் கூடாதா?"

"மன உறுதி இருந்தால் பழகலாம். படுக்கலாம். ஒரே அறையில் தங்கலாம்."

"ஒரே அறையில் தங்குகிறோம். கணவன் – மனைவி ஆகப் போவது உறுதி. மனஉறுதி நமக்கு இல்லையா?"

சந்திரமதியின் கேள்வி அவனை மடக்கியது. என்றாலும், அவன் பரீட்சையில் இறங்க விரும்பவில்லை. தன்னால் ஒரே அறையில் தங்க முடியும் என்ற உறுதியை மட்டும் நிலை நாட்டினால் போதும் என்று முடிவு செய்தான்.

"மன உறுதி இருக்கிறது. நாம் இந்தக் கணம் வரையில் தோழர்கள். உன் கழுத்தில் தாலி கட்டிய பிறகு கணவன் மனைவிக்கான உறவு – கடமை – எல்லாம்."

"நீங்கள் சொல்வதுபோல் தோழர்கள் ஒரே கட்டிலில் படுப்பதில்லையா?"

"படுக்கலாம். சிலருக்குச் சற்று நிம்மதியாகப் படுக்கப் பிடிக்கும். அதனால்..."

"கணவன் – மனைவியான பிறகு அந்த நிம்மதி தேவையில்லையா?" சந்திரமதி கேட்ட கேள்விக்குப் பக்கிரியால் பதில் சொல்ல முடியவில்லை.



"ஓர் ஆணும் – பெண்ணும் சேர்ந்து படுப்பது மன உறுதியைப் பொறுத்தது."

"இன்று உங்களுக்கு அந்த மன உறுதி இல்லையா?"

சந்திரமதி இப்படிக் கேட்டவுடன் –

பக்கிரி சொன்னான்: "சந்திரமதி! உன்னை முதல் முதல் நான் சந்தித்தவுடன் உன் மேனி அழகு என்னை வசிகரிக்கவில்லை. உன் இதய ஒலிதான் உன் விழிகள் மூலம் பேசியது. அதனால், உன் அருகே படுப்பதால் எந்தத் தவறும் ஏற்படாது" என்று அழுத்தமாகக் கூறினான்.

சந்திரமதியால் அதற்கு மேல் விழித்திருக்க முடிய வில்லை. மெய் மறந்து உறங்கினாள். பக்கிரிக்குத் தூக்கம் வரவில்லை. ஐந்து மணிக்கு எழுந்து விட வேண்டும் என்ற கவலையில் அவன், அரைமணி நேரத்திற்கு ஒருமுறை கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

ஆனால், ஐந்து மணியாகும் போது உறக்கம் அவனை நன்றாக ஆட்கொண்டது.

சென்னையைப் போல் வெளியே சந்தடியில்லை. பங்களூர் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தது.

சந்திரமதி விழித்துக் கொண்டாள். விளக்கைப் போட்டாள். பக்கிரியின் சலனமற்ற முகத்தை – கள்ளமற்ற உள்ளத்தைப் பிரதிபலிக்கும் முகத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இவ்வளவு துணிவும் தைரியமும் தனக்கு எப்படி வந்தது என்ற தன்னையே வியந்து கொண்டாள்.

அறைக் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறக்கலாமா வேண்டாமா என்ற ஐயத்துடன் சிறிது நேரம் நின்றாள். அதனால் அறைக் கதவைத் திறக்கவில்லை. அயர்ந்து தூங்கும் பக்கிரியை எழுப்பலாமா வேண்டாமா என ஒரு கணம் யோசித்தபடி நின்றாள்.

## பத்தொன்பது

கதவு மீண்டும் தட்டப்பட்டது. உள்ளே எரியும் விளக்கிற்கு, வெளியே உள்ள 'ஸ்விட்சை' அணைத்து, மீண்டும் போட்டுக் கவனத்தைத் திருப்பினான், கதவைத் தட்டியவன்–

"சந்திரமதி யாருங்க? போன் வந்திருக்கிறது" என்று அவன் குரல் கொடுத்தான்.

'போனா? என் பெயரைச் சொல்கிறானே?' சந்திரமதி பரபரப்புடன் கதவைத் திறந்தாள்.

அந்த உணவு விடுதியின் வேலைக்காரப் பையன் நின்று கொண்டிருந்தான். கலைந்த கிராப்பு; தூக்கக் கலக்கம்.

"நீங்கதான் சந்திரமதியா? போன் வந்திருக்கு. கீழே வாங்க சீக்கிரம் வாங்க" என்று அவசரப்படுத்தினான் விடுதிப் பையன்.

சந்திரமதி, பக்கிரியை எழுப்ப முயன்றாள். "என்னங்க, என்னங்க எழுந்திருங்க. போன் வந்திருக்காம்" என்றாள். பக்கிரி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். 'உம்' என்ற ஒலியுடன் முனகித் திரும்பிப் படுத்தான்.

"போன் பேசிட்டு வந்து அவரை எழுப்புங்க. உங்களுக்குத்தான் போன்" – விடுதிப் பையன் மீண்டும் அவசரப்படுத்தினான்.

சந்திரமதி, பையனைத் தொடர்ந்து சென்றாள். வெளியே இன்னும் இருள் விலகவில்லை. இலேசாகக் குளிர்.

விடுதியின் மேலாளர் மேஜைமீது போன் இருந்தது. மேலாளர், அருகே இருந்த பெஞ்சில் படுத்திருந்தார்.



சந்திரமதி சேலைத் தலைப்பைச் சரிசெய்து கொண்டு, போனை எடுத்து, "யார் பேசறது?" என்று கேட்டாள்.

சந்திரமதியின் அம்மா பார்வதியின் குரல். ஒரு கணம் திடுக்கிட்டாள். அம்மாதானா? என்று மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டாள்.

மறுமுனையில், அம்மா அழுது கொண்டே பேசுவது கேட்டது.

பங்களூருக்கு வந்துவிட்டதை அம்மா எப்படித் தெரிந்து கொண்டாள்?

மறுமுனையிலிருந்து அம்மா பேசுகிறாள்: "சந்திரமதி – என் கண்ணே! இப்படிச் செய்யலாமா?" என்று விம்முகிறாள். வார்த்தை உடைந்து உடைந்து வருகிறது.

அவள் பேசும்போது அருகே இருந்து யாரோ குறுக்கிடுகிறார்கள். இப்படிப் பேசு என்று சொல்லிக் கொடுப்பது காதில் விழுகிறது.

"அழுவதை அப்புறம் வைத்துக் கொள். நான் சொன்னபடி பேசு" என்று அந்தக் குரல் அதட்டுகிறது. அப்பாவின் குரல்தான் அது, என்பது சந்திரமதிக்குப் புரிந்தது.

"சந்திரமதி! நீ செய்த தவற்றை மறந்து விடுகிறோம். நீ இருக்கும் இடத்திலேயே இரு. இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து உன்னைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்கிறோம். ரொம்பவும் எங்களை அவமானப்படுத்தி விடாதே. நான் சொல்வதைக் கேட்காமல் மறுபடியும் அந்தப் போக்கிரியுடன் ஓடிப் போய்விட்டால் என் பிணத்தைத் தான் நீ பார்ப்பாய். இது சத்தியம்."

மீண்டும் அழும் குரல். டக் கென்று போன் வைக்கப்பட்டது.

சந்திரமதி அறைக்கு விரைந்தாள். பக்கிரியை உலுக்கி எழுப்பி, நடந்தவற்றை விவரித்தாள். அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பயத்தால் அழுகை வந்தது.

"இன்னும் சிறிது நேரத்தில் இங்கே அம்மா வருவதாகச் சொல்கிறாள். நாம் தங்கியிருக்கும் இடம் தெரிந்திருக்கிறது. அவர்கள் மட்டும் வரமாட்டார்கள். அடியாட்களுடன் வருவார்கள்" என்று சந்திரமதி பரபரப்புடன் கூறிக்கொண்டே பக்கிரியை எழுப்பினாள்.

அசதியின் பிடியில் சிக்கியிருந்த பக்கிரி, ஒரு கணம் எங்கிருக்கிறோம்; என்ன நடக்கிறது என்று திகைத்தான். மறுகணம் பரபரப்புடன் இயங்கினான்.

முகத்தைக் கழுவிக் கொண்டாள் சந்திரமதி. 'டாய்லட்'டுக்குச் சென்று மிக வேகமாகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள். பக்கிரிக்கும் சுறுசுறுப்பு பிறந்தது.

"நாம் இங்கேயே இருந்து, அம்மா – அப்பா வந்தவுடன் துணிவுடன் எதிர்ப்போமா?" என்று பக்கிரி கேட்டான். "குற்றவாளி போல் நாம் ஏன் ஓடவேண்டும்? துணிவுடன் எதிர்த்து நிற்போம்" என்று பேச முற்பட்டவனை சந்திரமதி கடுமையாகப் பார்த்து, "உங்களுக்கு இப்படியொரு யோசனை எப்படித் தோன்றுகிறது? என் அப்பா – அம்மா செல்லம் கொடுக்கவா இங்கு வருவார்கள்? அடியாட்கள் ஒரு கண நேரத்தில் உங்களை அடித்து வீசிவிட்டு, என்னைத் தூக்கிப் போட்டுக்கொண்டு போய்விடுவார்கள். பிறகு இந்தப் பிறவியில் நாம் சந்திக்க முடியாது. உங்களை உயிருடன் விட்டு வைப்பார்கள் என்றும் சொல்ல முடியாது. 'உயிர் போனால் பரவாயில்லை. தர்மத்திற்கு – நியாயத்திற்குப் போராடுவோம்' என்று வீர வசனம் பேசாதீர்கள்" என்றாள்.

சந்திரமதி சொல்வது சரியெனத் தோன்றியது. அடுத்த ஐந்தாவது நிமிடம் அவர்கள் அந்த அறையை விட்டு வெளியேறினார்கள்.

"அறையைக் காலி செய்து விட்டோம். மீதிப் பணம் தாருங்கள்" என்று விடுதி மேலாளரிடம் பக்கிரி கேட்டான்.



அவர் சிரித்தார். இங்கும் அங்கும் பார்த்தார். மிக மெல்லிய குரலில் –

"போன் வந்ததே, இவ பேசினாளே?" என்ற சந்திரமதியைப் பார்த்துக் கூறிய, மேலாளரின் பேச்சில் 'இவள் அவள்' என்று தரக்குறைவு தலைதூக்குவதைப் பக்கிரி கவனித்தான்.

"இவன் பார்வையும், பேச்சும் சரியில்லை. வாங்க, நாம் போவோம்" என்றாள் சந்திரமதி.

"ஏய், உனக்குப் போன் வந்ததே? உங்க அம்மா வருவாங்க. இரு இங்கேயே. உங்க அப்பா சொந்தக்காரங்க இங்க இருக்காங்களாம். அவங்க வருவாங்க, இரு" என்று கன்னடம் கலந்த கொச்சைத் தமிழில் பேசிய அவன் பார்வையிலேயே ஏதோ மோசடி இருப்பதைப் புரிந்து கொண்ட சந்திரமதி, "ஏய்! மரியாதையாப் பேசு. மீதி ரூபாயைக் கொடுக்கப் போறியா இல்லையா?" என்றாள். அடுத்த கணம் அவன் சொக்காயைப் பிடித்து விடுவாள் போலிருந்தது.

பக்கிரியும் நிலைமையைப் புரிந்து கொண்டு, "சந்திரமதி! இவனிடம் என்ன பேச்சு? வா, நாம போலீஸ் ஸ்டேஷனில் சென்று புகார் செய்வோம்" என்று கூறி, சந்திரமதியை அழைத்துக் கொண்டு, வேகமாக விடுதியை விட்டு வெளியேறினான்.

விடுதி மேலாளர் உடனே தொலைபேசி எண்ணைச் சுழற்றுவது தெரிந்தது. அவரும் பரபரப்புடன் யாரிடமோ பேசிக் கொண்டிருந்தார்.

விடுதியை விட்டு ஓட்டமும் நடையுமாக விரைந்தவர்கள், தெரு முனையில் சற்று நின்றனர்.

"கொஞ்சம் இருங்கள்; என் தோழியின் முகவரியை விசாரிப்போம்" என்று பையைத் திறந்தாள். அவளுடைய கல்யாணத்திற்காகச் செய்யப்பட்ட மாங்கல்யம் அதில் சுருண்டு கிடந்தது.

"முகவரி, இருந்த பையை எடுத்து வரவில்லை. இதுவேறு பை" என்று அழாத குறையாகச் சொன்னாள் சந்திரமதி.

"முகவரியை என்னிடம் கொடுத்திருக்கிறாய். நல்லவேளையாக, பணம் துணி எல்லாம் என்னிடம் இருக்கின்றன" என்று பக்கிரி கூறியவுடன், சந்திரமதி 'உயிர் வந்தது அப்பாடா' என்று நெஞ்சை அழுத்திக் கொண்டாள்.

அருகே சென்றவரிடம் முகவரியைக் காட்டினாள். அவர் வாங்கிப் பார்த்துவிட்டு, "கொத்திலா!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். போகும் போது சந்திரமதியை விழிகளால் மொய்த்து விட்டுச் சென்றார்.

டிராபிக் போலீஸ்காரர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவரிடம் பக்கிரி முகவரியைக் காட்டினான்.

அவர் ஒருமுறைக்கு இருமுறை காகிதத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டு, 'டமில் டோன்ட் நோ' என்று கூறிச் சிரித்துவிட்டு, "அதோ அந்தக் கடைக்காரர் மதராஸ்காரர்; கேளுங்கோ!" என்று கை காட்டிவிட்டுச் சென்றார்.

கடைக்காரர் முகவரியைப் பார்த்துவிட்டு ஒருமுறை சந்திரமதியையும் பார்த்து "ஜெய் நகர் – அப்பாடி! இந்த இடம் பத்து மைலாவது இருக்கும். அதோ, பஸ் நிற்குமிடம் சென்று பஸ்ஸில் ஏறிச் செல்லுங்கள். ஆட்டோ என்றால் நாற்பது ரூபா கேட்பாங்க. திரும்பி வரும் சார்ஜ் சேர்த்துக் கேட்பாங்க" என்றார்.

நன்றி கூறிவிட்டு, பஸ் நிற்குமிடம் செல்லும் முன்பு சந்திரமதி "ஒரு கப் காபி சாப்பிட்டுப் போவோமா?" என்று கேட்டாள்.

பொழுது நன்றாக விடிந்து விட்டது. சென்னையில் இந்த நேரத்திற்குள் இரண்டு தடவையாவது அவள் காபி சாப்பிட்டிருப்பாள். பக்கிரியும் டீ சாப்பிடுவான். ஆனால், காலையில் ஒரே ஒரு தடவைதான்.



அருகே இருந்த டீக்கடைக்குச் சென்று டீ சாப்பிட்டுவிட்டு, பஸ்ஸில் ஏறினர்.

ஜெய நகருக்குப் பஸ் சென்றது சென்றது... சென்று கொண்டே இருந்தது.

கடைசியாக ஜெயநகர் சேர்ந்ததும் பஸ்ஸிலிருந்து இறங்கி, முகவரியைக் கேட்க அருகேயுள்ள கடைக்குச் சென்றான் பக்கிரி.

அவன் அந்த முகவரிக் காகிதத்தை ஒரு முறைக்கு இருமுறை திருப்பிப் பார்த்து மலையாளத்தில் யாரிடமோ கேட்டான். பிறகு, மலையாளம் கலந்த தமிழில், "ஜெயநகர் இரண்டு பகுதி. எந்தப் பகுதி என்று தெரியவில்லையே" என்று சொல்லிவிட்டார்.

பசி – இப்போது சந்திரமதியை நன்றாகப் பிடித்துக் கொண்டது.

காதல் என்ற மூன்றெழுத்து எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறது என்று நினைத்துக் கொண்டாள். தான் செய்தது, செய்வது, செய்யப் போவது சரிதான் என்று மறுபடியும் உறுதி செய்து கொண்டாள்.

வெயில் 'சுள்' என்று அடித்தது. உயர்குடி மக்கள் வாழும் பகுதியாதலால் காலையில் அதிகமாக மக்கள் நடமாட்டமில்லை.

"தோழியின் வீட்டிற்குச் சென்று சாப்பிடலாம் என்று நினைத்தேன். இப்போது வீட்டைக் கண்டுபிடிப்பதே பெரும்பாடாயிருக்கும் போலிருக்கிறதே?" என்று சந்திரமதி சலித்துக் கொண்டாள்.

நெற்றியிலும், கழுத்திலும் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்த சந்திரமதி, தொலைவில் நான்கைந்து பேர் கையில் கம்புடனும், கத்தியுடனும் ஓடிவருவதைக் கண்டாள்.

"அதோ" என்று பயத்தால் அலறிய சந்திரமதி, "அவர்களை எனக்குத் தெரியும். என்னுடன் திருப்பதி பஸ்ஸில் வந்தவர்கள். நம்மைப் பிடிக்கத்தான் வருகிறார்கள்" என்றாள்.

பக்கிரியும் திரும்பிப் பார்த்துவிட்டு, "வா, வா - அவர்களிடம் அகப்படாமல் ஓடிப் போய்விடுவோம்" என்று கூறினான். அவர்களிடமிருந்து தப்ப, இருவரும் ஓடினார்கள்.

27897
4289006

## இருபது

தங்களைத்தான் அவர்கள் துரத்தி வருகிறார்கள் என்பதை நொடியில் புரிந்து கொண்டு விட்டாள் சந்திரமதி. அவர்களில் ஒருவனை அவளுக்கு நன்றாகத் தெரியும். வீட்டிற்கு வந்து அப்பாவுடன் பேசுவான். திருப்பதிக்குப் போகும் போது அவனையும் தன் தந்தை உடன் அழைத்து வந்ததும் அவளுக்குத் தெரியும்.

சிறிது தயங்கிய பக்கிரியின் கரத்தைப் பலமாகப் பிடித்து, 'யோசிக்க நேரமில்லை. அந்த ரவுடிகள் கையில் சிக்கிக் கொண்டால், உங்களைத்தான் வெட்டிப் போட்டு விடுவார்கள்' என்று அவனை இழுத்துக் கொண்டு ஓடினாள்.

ஒரு தடவை திரும்பிப் பார்த்த பக்கிரி தன் ஓட்டத்தை இன்னும் விரைவுபடுத்தினான்.

அவர்கள் மிகவும் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். சந்திரமதியும் பக்கிரியும் தங்கள் முழுச் சக்தியையும் பயன்படுத்தி ஓடிக் கொண்டிருந்தார்கள்.



தெருவில் போகிறவர்கள் சட்டென நின்றார்கள். 'ஏன் துரத்துகிறார்கள்; ஏன் ஓடுகிறார்கள்' என்று ஒருவருக்கும் புரியவில்லை. சந்தடி குறைவான வீதியாதலால் கூட்டம் அதிகம் கூடவில்லை. தடுத்து நிறுத்தவும் ஒருவரும் முயலவில்லை.

சந்திரமதியோ, பக்கிரியோ 'காப்பாற்றுங்கள்; காப்பாற்றுங்கள்' என்று கூவியிருக்கலாம். கன்னட பூமியில் தமிழில் கூச்சலிட்டால், யாருக்குப் புரியும்? சில வேளைகளில் துரத்துபவர்களுடன் சேர்ந்து பொது மக்களும் துரத்துவதுண்டு. திருடனே 'அதோ, திருடன் அதோ திருடன்' என்று கூக்குரலிட்டுத் திசை திருப்புவது இயற்கை.

மனம் போனபடி ஓடினார்கள். சந்தில் புகுந்து மறுபடியும் பெரிய வீதியில் வந்தார்கள். திடீரென்று தெருவின் மறுமுனையிலும் துரத்துபவர்கள் நிற்பது போல் தோன்றும். திகைத்து நின்று ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயல்வார்கள். அவர்கள் மறைந்து கொண்ட இடம் ஒரு பங்களாவின் காம்பவுண்டு சுவரின் மறைவில் இருந்ததால், துரத்தி வந்தவர்கள் 'இந்தப் பக்கம்தான் ஓடினார்கள்; பிடி விடாதே, அடி, கொல்லு' என்று பயங்கரமாகக் கூச்சலிட்டுக் கொண்டே அந்த இடத்தைக் கடந்த பிறகு, பெருமூச்சு வாங்க மெல்ல வெளியே வந்தனர். பிறகு அந்தக் கும்பல் போன எதிர்த் திசையில் ஓடத் தொடங்கினர். தெருக்கோடிக்குச் சென்ற அவர்கள், சந்திரமதி தெருவின் மறுகோடிக்கு ஓடிச் செல்வதைப் பார்த்துவிட்டு, பயங்கரக் கூச்சலுடன் துரத்தி வந்தார்கள்.

'நாம் தப்பமுடியாது போலிருக்கிறது' என்று ஓடிக்கொண்டே பக்கிரி புலம்பினான்.

'தப்ப முடியாதென்றால், ஏன் ஓடவேண்டும்? நின்று விடுங்கள். நாமே அவர்கள் கரத்தில் சிக்கிவிடுவோம்' என்று எரிச்சலுடன் சந்திரமதி கூறினாள்.

சந்திரமதிக்கு நிஜமாகவே கோபம் என்றுணர்ந்த பக்கிரி இப்போது அவள் கரத்தை அழுத்தமாகப் பிடித்து, 'அதற்காக சொல்லவில்லை சந்திரமதி! உன்னைச் சிக்க வைத்து விட்டு நான் இந்த உலகில் வாழ்ந்து பயன் என்ன?" என்ற கவலையில்தான் சொல்கிறேன்."

'அப்படியென்றால் வேகமாக ஓடுவோம்' என்றாள் சந்திரமதி. அவளிடத்தில் துணிவும் இருந்தது. தப்பிவிட வேண்டும் என்ற பரபரப்பும் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக உண்மைக் காதல் ஓங்கி நின்றது.

அந்தப் பெரிய சாலையில் சற்று அதிகமாகவே பஸ்களும், லாரிகளும் ஓடிக் கொண்டிருந்தன. சாலையைக் கடந்து, மறுபுறம் செல்ல விரும்பிக் கண்ணை மூடிக் கொண்டு ஓடினர். அப்படியும் துரத்துபவர்கள் படுவேகமாகத் தொடர்ந்து வருவது தெரிந்தது.

"சந்திரமதி வா, வா – அதோ காவல்துறையின் 'வேன்' நிற்கிறது. அங்கே சென்று நடப்பதைச் சொல்வோம்" என்றான் பக்கிரி.

'போலீஸ் வேன்' புறப்படும் நிலையில் இருந்தது. பின்புறக் கதவு வழியாகச் சில காவலர்கள் ஏறிக் கொண்டிருந்தனர்.

"எங்களைக் காப்பாற்றுங்கள். என்னைக் கொல்லவும், இவளைக் கெடுக்கவும் ரௌடிகள் துரத்தி வருகிறார்கள்" என்று மூச்சிறைக்க பக்கிரி கூறிக் கொண்டே 'வேனில்' ஏறிவிட்டான். சந்திரமதியையும் கைலாகு கொடுத்து ஏற்றிவிட்டான்.

அந்த வேனில் வந்த காவலர்கள் ஒரு கணம் அதிர்ச்சியடைந்தார்கள். அவர்களுக்குத் தமிழ் தெரியாது. ஒரு காவலருக்கு அரைகுறைத் தமிழ் தெரியும்.



படபடப்புடன் இருந்த சந்திரமதியைப் பார்த்து, "என்னம்மா யார் உங்களைத் துரத்துகிறார்கள்?" என்று கேட்டார்.

"இப்போது விளக்கிச் சொல்ல நேரம் இல்லை. அதோ அவர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள். பிறகு உங்களுக்கு விரிவாகச் சொல்கிறேன்" என்றான் பக்கிரி. அந்த வார்த்தைகளைச் சொல்வதற்கு அவன் மிகவும் திணறினான். மூச்சு வாங்கியது. சந்திரமதி துவண்டு விட்டாள்.

காலை வெயிலில் ஓடி வந்ததால் வியர்வை வெள்ளத்தில் அவர்கள் நனைந்து விட்டனர்.

"அவங்களை, வண்டியிலிருந்து பிடித்துத் தள்ளுங்க. அந்த ஆள் இந்தப் பெண்ணைக் கடத்திக்கிட்டுப் போறான். மெட்ராஸிலிருந்து நாங்க வர்றோம். அவங்களை எங்களிடம் விட்டுடுங்க" என்று கூவினான் அடியாட்களில் ஒருவன்.

காவலர்கள் பார்த்தார்கள். நான்கு பேர் கையில் கம்பு, அரிவாள் கத்தியுடனிருந்தார்கள். ஓடிவரும் அவர்களைத் தொடர்ந்து 'என்ன நடக்கிறது பார்ப்போம்' என்று ஓடி வந்தவர்கள் சிலர் இருந்தார்கள்.

"ஐயா! எங்களை அவர்களிடம் ஒப்படைக்காதிர்கள். என்னைக் கொன்று விடுவார்கள். இவளைத் தூக்கிச் சென்று விடுவார்கள்" என்று பதறினான் பக்கிரி.

"டேய்! பொய்யா சொல்றே? பொண்ணை மெட்ராஸிலிருந்து மயக்கிக் கூட்டியாந்துட்டே! யாருகிட்ட கதைவுடறே? உன்னை வெட்டித்தான் போடுவோம்" என்று கத்தியை ஓங்கினான் ஒருவன்.

நல்லவேளையாக 'வேனில்' உட்புறமாக பக்கிரியும், சந்திரமதியும் இருந்ததால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

“ஏம்பா, டீஸண்டா இருக்கே, ஏன் இந்தப் பொண்ணைத் தள்ளியாந்தே?” என்று தமிழ் தெரிந்த காவலர் கேட்டார்.

“நான் தள்ளிக் கொண்டு வரவில்லை. நான் இவளை உயிருக்குயிராய்க் காதலிக்கிறேன். இந்தப் பெண் விருப்பத்தை மீறி வேறு ஒருவனுக்குக் கல்யாணம் செய்யத் திருட்டுத்தனமாக முடிவு செய்தார் இவள் அப்பா. இவளுக்கு விருப்பம் இல்லாததால், என்னுடன் இவள் வந்துவிட்டாள். நாங்கள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம். இதோ பாருங்கள் தாலி” என்று பக்கிரி பேசும்போது பயமிருந்தாலும், அதில் உண்மையும் துணிவும் இருந்தன.

பக்கிரி சொன்னதைக் கன்னடத்தில் மொழிபெயர்த்தார் தமிழ் தெரிந்த காவலர்.

மொழி பெயர்க்கும் போது கூடுதலாக சில வார்த்தைகள் சேர்த்துச் சொல்லியிருக்க வேண்டும். அதனால் கன்னடக் காவலர்கள் சிரித்தார்கள்.

அவர் கூடுதலாக சொன்னது – “இந்த ஆள் சினிமா வசனம் பேசுகிறான். சினிமாவில் நடப்பது போல் கதாநாயகியைத் திருட்டுக் கல்யாணம் செய்யத் தூக்கி வந்துவிட்டான். வில்லன்கள் துரத்துகிறார்கள். கதாநாயகனுக்கும் வில்லனுக்கும் ஒரு ஃபைட் செய்ய வைப்போமா?”

இதைக் கேட்டுக் கன்னடக் காவலர்கள் சிரித்தார்கள். அதில் ஒருவன் வியர்வையில் நனைந்திருந்த சந்திர மதியின் ஜாக்கட்டையும் வெண்மைப் பகுதியையும் திருட்டுத்தனமாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

‘அரவ ஆளு சரியான பொண்ணைத்தான் இழுத்துக் கொண்டு வந்திருக்கிறான்” என்று ஒரு கன்னடக் காவலர் சொன்னார்.



“ஏம்பா, நாங்க எவ்வளவு நேரமா துரத்திக்கிட்டு வரோம்; நீங்க சிரிச்சுக்கிட்டு இருக்கிங்க? பறவையைத் தப்ப விட்டுவிடப் போறீங்க. எங்களிடம் ஒப்படைங்க. இந்தப் பொண்ணு மெட்ராஸிலே பெரிய இடத்துப் பொண்ணு. இந்த நேரம் மெட்ராஸ் மினிஸ்டர் உங்கள் ஐ.ஜிக்குப் போன் செய்திருப்பார். வண்டியிலிருந்து கிழே தள்ளுங்க. நேரமாவுது.அவங்க அப்பாவும் அம்மாவும் வந்துக்கிட்டிருக்காங்க” என்றான் ஒருவன். அது வேண்டுகோள் போலவும், இருந்தது. அதிகாரம் – பயமுறுத்தல் போலவும் இருந்தது.

‘மினிஸ்டர் – ஐ.ஜி.’ என்ற வார்த்தைகளைக் கேட்டுக் காவலர்கள் திடுக்கிட்டனர்.

“நமக்கு எதுக்கப்பா வம்பு? இவுங்களைக் கிழே இறக்கிவிட்டுட்டு, வண்டியை ஓட்டுப்பா” என்றான் கன்னடக் காவலர்களில் வயதான ஒருவன்.

“நீங்க ஏன் ஸார் இவங்களைப் போலீஸ் பஸ்ஸில் குந்த வெச்சிருக்கிங்க? எங்ககிட்ட கொடுங்க ஸார் நேரமாவுது” என்றான் ஒருவன். அவன் பலவந்தமாக வேனுக்குள் நுழையும் முயற்சியில் ஈடுபட்டான்.

ஒருவன் துணிந்து ஏறிவிட்டான். பக்கிரியின் கரத்தைப் பிடித்து இழுத்தான். சந்திரமதியும் பக்கிரியும் அலறினார்கள்.அவன் எதுவும் செய்யாதிருந்தால், சொல்லாதிருந்தால், ஒருவேளை காவலர்கள் பக்கிரியையும் சந்திரமதியையும் பழி வாங்க வந்தவர்களிடம் ஒப்படைத்திருக்கலாம். அவர்களுக்கு எரிச்சலும், கோபமும் ஏற்பட்டன.

பக்கிரியின் கையைப் பிடித்தவனைக் கை லத்தியில் தட்டி, கன்னடத்தில் கீழ்த்தரமாகத் திட்டி கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வேனில் இருந்து தள்ளி விட்டார் காவலர்.

"ஏய், வேண்டுமானால் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து புகார் செய். இன்ஸ்பெக்டர் அவர்களை உங்களிடம் ஒப்படைத்தால் அழைத்துப் போங்கள். நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. வேனை விட்டுத் தள்ளிப்போ!" என்று கண்டிப்பாகக் கூறினார் அந்தக் காவலர்.

"தவறு செய்தவங்களைக் காப்பாத்தறது போலீஸ் கடமையா? இவங்களிடம் சல்லிக்காசு கிடையாது. இவங்களை இறக்கி விடுங்க. இந்தாங்க ஆயிரம் புடியுங்க! – அட்வான்ஸ்..." என்றான் ஒருவன்.

வயதான காவலர் எரிச்சலுடன் கன்னடத்தில், "லஞ்சம் கொடுத்து எங்களை மயக்கிவிடலாம்னு பாக்கறியா? நாயே, ஏறு வண்டியிலே. உன்னை உள்ளே தள்ளி முட்டிக்கு முட்டி தட்டுகிறோம்" என்று அதட்டிய பிறகு அவன் வேனிலிருந்து இறங்கினான்.

"எந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கு?" என்று கத்திக்கொண்டே வேனைத் தொடர்ந்து அவர்கள் மறுபடியும் கம்பு, கத்தியுடன் பின் தொடர்ந்தார்கள்.

"நமக்கு எதுக்கு வம்பு? ஸ்டேஷன்லே இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைப்போம். அவரு பார்த்துப்பாரு" என்று கூறி காவல் நிலையத்துக்குப் போலீஸ் வேனை ஓட்டினார்கள்.

துரத்தி வந்தவர்கள் ஓர் ஆட்டோவைப் பிடித்துப் பின் தொடர்ந்தார்கள்.

காவல்துறை வண்டி காவல் நிலையம் எதிரே நின்றது.

"உள்ளே போங்க. இன்ஸ்பெக்டரிடம் போய் உங்க சமாசாரத்தைச் சொல்லுங்க. அவர்களும் வந்து சொல்லட்டும். இன்ஸ்பெக்டர் நியாயம் எதுவோ அதைச் செய்வாரு" என்று சந்திரமதியையும், பக்கிரியையும் காவல் நிலையத்திற்குள் போகுமாறு காவலர்கள் கூறினார்கள். அதற்குள் ஆட்டோவும் வந்து விட்டது.

அந்த நான்கு பேரும் ஆட்டோவிலிருந்து குதித்தனர்.



மீண்டும் பக்கிரியும் சந்திரமதியும் இன்ஸ்பெக்டர் மேஜையை நோக்கி ஓடினார்கள்.

"எங்களைக் காப்பாற்றுங்கள்!..." என்று பக்கிரி கூவினான்.

"எங்களைக் கொல்லத் துரத்தி வருகிறார்கள்" என்று சந்திரமதி ஆங்கிலத்தில் கூவினாள்.

இன்ஸ்பெக்டர், இருவரையும் வியப்புடன் நோக்கினார்.

துரத்தி வந்தவர்கள், உள்ளே நுழைந்து விட்டார்கள். பாய்ந்து சென்று, சந்திரமதியை இழுத்துப் போய்விடும் ஆக்ரோஷம் அவர்களிடமிருந்தது. ஆனால் அங்கே எதிர் பாராத ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

## இருபத்தொன்று

"ஏய், யார் டியூட்டி கான்ஸ்டபிள்? இவங்களை வெளியே நிறுத்துங்க" என்று இன்ஸ்பெக்டர் அதட்டினார்.

பக்கிரியையும், சந்திரமதியையும் துரத்தி வந்தவர்கள் வெளியே நிறுத்தப்பட்டனர். வெளியே நிற்கும் ஸென்ட்ரி கன்னடத்தில் ஏதோ கூறினான். அவர்களும் திரும்பவும் ஏதோ கூற, அவன் ஒரு காவலரை அழைத்து, இன்ஸ்பெக்டரிடம் தெரிவிக்குமாறு கன்னடத்தில் பேசினான். சென்ட்ரி பல்லெல்லாம் தெரிய, பக்கிரியையும் சந்திரமதியையும் துரத்தி வந்தவர்களிடம் குழையக் குழையப் பேசத் தொடங்கினான்.

காவலர் இன்ஸ்பெக்டரை அணுகிச் சொல்ல முற்படுவதற்குள் இன்ஸ்பெக்டர், பக்கிரியை ஒருமுறை உற்றுப்பார்த்துவிட்டு, "நீங்கள் பக்கிரிதானே? வாங்க, வாங்க உட்காருங்க" என்று சொல்லி எழுந்து நின்றவுடன்

பக்கிரிக்கு ஒரு கணம் அதிர்ச்சி ஏற்பட்டது. பிறகு வியப்பும் ஏற்பட்டது. சந்திரமதியைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். இன்ஸ்பெக்டரைப் பார்த்தபடி தன் முகவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டான்.

"என்ன பக்கிரி ஸார்? என்னை மறந்து விட்டீர்களா? நீங்கள் வசித்த தெருவில்தான் நான் இருந்தேன். காலையில் எழுந்து படிப்பகம் செல்வீர்கள். மாலையிலே என்னைப் போன்ற இளைஞர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பீர்கள். உங்கள் முயற்சியால்தான் அந்தப் படிப்பகம் நடைபெற்றது. நான் முன்னுக்கு வருவதற்கு அந்தப் படிப்பகமே காரணம். உங்கள் அடக்கமும் உழைப்பும் எனக்கு முன் உதாரணமாக இருந்தன. அந்தப் படிப்பகத்தில் வாரா வாரம் கூட்டங்கள் நடைபெறும். நீங்கள் பேசுவீர்கள். அது ஒரு பொற்காலம். ஒரு மனிதனின் இளமைக் காலம் திரும்பவும் வராது. அதில் துன்பம் இருக்கும்; துயரம் இருக்கும்; வறுமை இருக்கும். எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு மனத்தில் குதூகலத்துடன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடரவேண்டும். சோர்ந்து விடக் கூடாது. உங்களைப் பார்த்து நான் முன்னேறினேன். நீங்கள் பட்ட துன்பமும், துயரமும் எனக்குத் தெரியும். சைக்கிள் கடையில் வேலைக்குச் சேர்ந்தீர்கள். சொந்தக் கடை போல் நடந்து கொண்டீர்கள். ஆனால் அரசியல் கட்சியில் நீங்கள் ஈடுபாடு கொண்டதுதான் பிடிக்கவில்லை. ஆனால் இது அரசியல்வாதிகள் ஆதிக்கம் செலுத்தும் காலம். இந்தப் போலீஸ் உடையுடன் நான் அதெல்லாம் பேசக்கூடாது. அதிகாரிகள் கட்டளைப்படி நடக்க வேண்டும். தமிழ் படித்ததனால் மனச் சாட்சிக்கு மதிப்பு கொடுப்பவன் நான்" என்று கூறிக்கொண்டே இன்னும் நின்று கொண்டிருந்த சந்திரமதியைப் பார்த்து –

"அடடா, மேடம்! நீங்கள் இன்னும் நின்று கொண்டிருக்கிறீர்களே? - ஓ, ஒரே ஒரு நாற்காலிதான்



இருக்கிறதா?" என்று கூறி மற்றொரு நாற்காலி போடச் சொல்லிக் காவலரை ஏவினார்.

அந்தக் காவலர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். "நீ சீக்கிரம் போய் சூடா இரண்டு காபி கொண்டு வா. உங்களுக்கு ஸ்ட்ராங்கா இருக்கணுமா, லைட்டா?" என்று கேட்டுவிட்டு, சந்திரமதியின் பக்கம் திரும்பி, "உங்களுக்கு?" என்று கேட்டவாறு சந்திரமதியை ஒரு முறை அளவெடுத்தார்.

காபி வாங்கி வரக் காவலர் சென்றவுடன் மற்றொரு காவலர் வேகமாக வந்தார். பக்கிரியைத் துரத்தி வந்தவர்கள் வெளியே கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஸார்! என்ன சொன்னாலும் வெளியே இருப்பவர்கள் கேட்க மாட்டேன் என்கிறார்கள். இந்தப் பொம்பளையை இவன், இவ அப்பா அம்மாவுக்குத் தெரியாம கடத்தி வந்துட்டானாம். பத்து இருபது பவுன் நகைகள் இந்தப் பெண்ணிடமிருக்கிறதாம். இவளை ஃபாலோ பண்ணிட்டு வந்தார்களாம். தப்பிச் செல்வதற்காகப் போலீஸ் ஸ்டேஷனுக்குள் இவன் வந்துவிட்டானாம். உங்களிடம் புகார் கொடுக்கக் கடிதம் வைத்திருக்கிறார்களாம்" என்று மூச்சு விடாமல் கன்னடத்தில பேசினான்.

பக்கிரிக்கு அவன் கூறுவது ஒன்றும் புரியவில்லை. காவல்துறை அதிகாரி தனக்கு மிக வேண்டியவராக இருந்துவிட்டதில் அவனுக்குப் பெரும் நிம்மதி. இனி ஒருவரும் ஒன்றும் செய்துவிட முடியாது என்ற துணிவு ஏற்பட்டது. சந்திரமதியின் பக்கம் திரும்பி, "இனிமேல் கவலை இல்லை. ஸாரைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் மறந்துவிட்டாலும் அவர் மறக்கவில்லை, ஸார் இருக்கும் போது நமக்கென்ன கவலை?" என்றான்.

இன்ஸ்பெக்டர் பக்கிரியை நோக்கி, "பக்கிரி ஸார்! என்ன பிரச்னை? அதைக் கேட்காமலேயே நான் பழைய

நினைவுகளைப் பேசிக் கொண்டிருக்கிறேனே?" என்று கேட்டார்.

"நீங்கள் ஸ்டேஷனுக்குள் பரபரப்புடன் ஓடி வந்த போதே நினைத்தேன், ஏதோ இக்கட்டில் சிக்கியிருக்கிறீர்கள் என்று. கவலைப்படாதிர்கள். நடந்தவற்றைச் சொல்லுங்கள். வெளியே ஒரு கும்பலே உங்களைத் துரத்தி வந்திருக்கிறது போல் தோன்றுகிறது !" என்றார் இன்ஸ்பெக்டர்.

பக்கிரி நடந்தவற்றை ஒன்று விடாமல் விவரித்தான். சந்திரமதி சைக்கிள் வாங்கியதில் தொடங்கினான். மிதிவண்டி, மிதிவண்டி என்று அவன் சொல்லும்போது இன்ஸ்பெக்டர் சண்முகசுந்தரம் மெல்ல நகைத்தார்.

"பக்கிரி ஸார்! நான் சொன்னால் கோபிக்கக் கூடாது. இப்ப நீங்க கன்னட நாட்டில் பங்களூரில் இருக்கிறீர்கள். இங்கேயும் மொழிப்பற்று மிக்கவர்கள் உண்டு. தமிழ்நாட்டை விடத் திவிரமாக மொழி வெறி இங்குண்டு. சைக்கிள் எனப்படும் பொதுப் பெயருக்கு ஒவ்வொரு பெயரைச் சொன்னால், என்ன ஆவது? காலால் மிதித்துச் செல்வதால் மிதி வண்டி என்கிறீர்கள். மிதிவண்டிக்கு மோட்டாரை இணைத்து ஓட்டுகிறார்கள். அப்போது பவர் சைக்கிள் என்கிறோம். பவரில் இயக்கினால்..." என்று கூறி, தன் வாதத்திறமையைத் தானே மெச்சிக் கொண்டு 'கடகட' வென்று சிரித்தார்.

பக்கிரி ஏதோ சொல்ல விரும்புவதை உணர்ந்து, இன்ஸ்பெக்டர், "சரி சரி, மொழிப் பிரச்னை விவாதத்தைப் பிறகு வைத்துக் கொள்வோம். இப்போது உங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்னையைத் திர்ப்போம்!" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது தொலைபேசி மணி அடித்தது. காபியும் வந்தது.

இன்ஸ்பெக்டர் ஃபோனில் கன்னடத்தில் பேசுவதை, காபியைச் சாப்பிட்டுக் கொண்டே கவனித்த பக்கிரி,



தன்னைப் பற்றி யாரோ விசாரிக்கிறார்கள் என்பதை உணர்ந்தான். இன்ஸ்பெக்டர் ஃபோனை வைக்கும் போது ஆங்கிலத்தில் உரையாடலை முடித்தார். "எனி ஹவ் ஐ வில் என்கொயர் அண்ட் டு தி நீட்ஃபுல்" என்றார்.

மறு பக்கத்திலிருந்து யாரோ மிக முக்கியமானவர்கள் பேசுகிறார்கள் என்பதும், அவர் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தப் பார்த்தும் அதற்கு இன்ஸ்பெக்டர் இணங்கவில்லை என்பதும் கடைசியாக அவரை ஓரளவிற்குச் சமாதானப்படுத்த, 'விசாரித்து ஆவன செய்வதாக'க் கூறினார் என்பதையும் பக்கிரி அரைகுறையாகப் புரிந்து கொண்டான்.

மறுமுனையிலிருக்கும் செல்வாக்கு மிகுந்தவர் ஏதோ கட்டளையிடுகிறார், அதற்கு இன்ஸ்பெக்டர் மறுக்கிறார் என்பதை சந்திரமதியும் புரிந்து கொண்டான்.

ஃபோனை வைத்துவிட்டு, நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்ட இன்ஸ்பெக்டர், அதிகாரம் செய்தவரை முணுமுணுத்தவாறு திட்டியதையும் கவனித்தான் பக்கிரி.

"நீங்கள் காபி சாப்பிடவில்லையா?" என்று இன்ஸ்பெக்டரைப் பார்த்துப் பக்கிரி கேட்டான்.

"இல்லை; நீங்கள் வருவதற்கு ஐந்து நிமிடம் முன்புதான் சாப்பிட்டேன்" என்று சொல்லிவிட்டு, "பக்கிரி! நிலைமையை மிகவும் சிக்கலாக்க விரும்பவில்லை. நல்ல வேளையாக, நீங்கள் இந்தப் போலீஸ் ஸ்டேஷனில் அடைக்கலம் புகுந்திர்கள். சரியான முடிவு அது. இல்லாவிட்டால், உங்களைத் துரத்தி வந்தவர்கள் பலத்த சிபாரிசு உடையவர்கள்; ரெளடிக் கூட்டத்தினர். மேடத்தை உங்களிடமிருந்து பிரித்துவிட்டு, உங்களையும் வேறொரு போலீஸ் ஸ்டேஷனில் ரிமாண்டில் வைத்திருப்பார்கள். பிறகுதான் உங்களுக்குப் புரியும் போலீஸ்காரன் ராஜ்யம். நானே அந்தத் துறையிலிருந்து கொண்டு நானே குறைகூறக்

கூடாது. ஆனால் வரவர எனக்குச் சில அதிகாரிகள் போக்குப் பிடிக்கவில்லை. காவல்துறை புனிதமான துறை. இந்தப் பெரிய நாட்டில் ஒருநாள் காவல்துறை இயங்காவிடில் என்ன நேரிடும் என்பது உங்களுக்குத் தெரியும். எல்லாக் காவலர்களும் நீதிநூல் படிக்க வேண்டும். திருக்குறள் படிக்க வேண்டும். காந்தியின் நூல்களைக் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும். பக்தி நூல்களைப் படித்துத் தேர்ந்திருக்க வேண்டும். அப்போது தான் மனிதாபிமானம் அதிகமாகும்" என்று சொல்லிவிட்டு பக்கிரியை நோக்கி, "உங்களை ரிமாண்டில் வைத்துவிட்டு மேடத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமாம். உங்க மேடத்தின் பெயர் சந்திரமதிதானே?" என்று கேட்டார்.

பக்கிரி திடுக்கிட்டான். தொலைபேசியில் தங்களைப் பற்றி அவர் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்ததை உறுதிப்படுத்திக் கொண்டான் பக்கிரி. அவனிடம் மெல்லிய நடுக்கம் ஏற்பட்டது. புலியிடமிருந்து தப்பிப் பாம்பிடம் சிக்கிய கதைதானோ?

"பக்கிரி ஸார்!- நீங்கள் கவலைப்படாதிர்கள். வெளியே உங்களைத் துரத்தி வந்தவர்களில் ஓரிருவரை அழைத்து விசாரிக்கிறேன். ஏன் என்றால், செல்வாக்கு மிகுந்தவர் உங்கள் விஷயத்தில் தலையிட்டிருக்கிறார். அவர் சொல்லையும் ஓரளவுக்குக் கேட்க வேண்டும். உங்கள் காதலுக்கு எந்தவிதப் பாதகமும் ஏற்படாமல் செய்ய வேண்டும். அவர்களை அழைக்கிறேன். அவர்கள் என்ன அவதூறு பேசினாலும் மோசமான வார்த்தையை உபயோகித்தாலும் நீங்கள் குறுக்கே பேசாதிர்கள்" என்று கூறி வெளியே இருப்பவர்களில் முக்கியமான இருவரை மட்டும் உள்ளே வரச் சொன்னார்.

அவர்கள் வரும்போதே சந்திரமதியை நோக்கிப் பாய்ந்து வந்தனர். இன்ஸ்பெக்டர் தன் அதிகாரத்தை நிலைநாட்டி, அதட்டி, அவர்கள் சொல்ல வந்ததைச் சொல்லுமாறு பணித்தார்.



அவர்கள் பக்கிரியின்மீது பயங்கரக் குற்றச் சாட்டுகளைச சுமத்தினர். உடனே சந்திரமதியை ஒப்படைக்குமாறு வற்புறுத்தினர்.

இன்ஸ்பெக்டர், மிகவும் அமைதியாக, "இந்தப் பெண்ணின் பெற்றோர் ஏதாவது எழுத்து மூலமாக புகார் தந்திருக்கிறார்களா?" என்று கேட்டார்.

"இல்லை" என்று அவர்கள் கூறினார்கள்.

"அப்படியென்றால் புகார் மனுவை எழுதிக் கொண்டு வாருங்கள்."

"புகார்க் கடிதம் எதற்கு? எம்.எல்.ஏ. போன் செய்தாரே, அது போதாதா?"

"போதாது. இந்தப் பெண்ணிற்கு எம்.எல்.ஏ. என்ன உறவு?"

"இந்தப் பெண்ணின் தகப்பனார் மெட்ராஸில் செல்வாக்கு மிக்கவர். அவர் கட்சிப் பிரமுகர். அவர் கட்சியைச் சேர்ந்தவர் இந்த எம்.எல்.ஏ. உறவு போதுமா? அதனால்?..."

"அதனால்... வாய்ச் சொல்லைக் கொண்டு செய்ய முடியாது. புகார் வேண்டும். அப்பொழுதுதான் நான் இந்த கேஸைப் பதிவு செய்ய முடியும்."

சந்திரமதியை மீட்க வந்தவர்கள் திகைத்தனர்.

அதில் ஒருவன், "சரி ஸார், இன்னும் ஒரு மணி நேரம் வரையில் பொறுத்துக் கொள்ளுங்கள். பெண்ணின் பெற்றோரே இங்கு வந்து விடுவார்கள்" என்றான்.

"வரட்டும் பார்க்கலாம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"அதற்குள் இவன் இவளை மறைத்து வைத்துவிடுவான்."

"நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றார் இன்ஸ்பெக்டர்.

மீண்டும் தொலைபேசி ஒலித்தது. சந்திரமதியின் தந்தை ஃபோனில் பேசினார்.

## இருபத்திரண்டு

பக்கிரி, நடந்தவற்றை ஒன்று விடாமல் இன்ஸ்பெக்டரிடம் விவரித்தான். சந்திரமதிக்கும் துணிவு ஏற்பட்டது. இனித் தங்களை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அவளும் இடையிடையே கலகலப்பாகப் பேசினாள்.

இன்ஸ்பெக்டர், வெளியே இருந்தவர்களை அழைத்தார்.

"யாரோ வரப்போகிறார்கள்; வந்து கொண்டே இருக்கிறார்கள் என்றீர்களே? யார் அவர்? என் நேரத்தை வீணாக்காதீர்கள்" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"இவளுடைய பெற்றோர் வருகிறார்கள். பெற்றோருக்கு இவள் ஒரே பெண்" என்று மிகவும் ஆக்ரோஷமாகப் பேசியவர்களுள் ஒருவன் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிவிட்டு, "அந்தப் பெற்றோரின் அருமை மகளை இந்த இராவணன் தூக்கி வந்துவிட்டான்" என்று பாதி தமிழ், பாதி கன்னடத்தில பேசினான்.

கையிலிருந்த லத்தியால், அழுத்தமாக மேஜை மீது தட்டி, 'ஷட் அப்! வார்த்தையை அளந்து பேசு. இல்லாவிடில், அடித்து விரட்டி விடுவேன். சொல்லவேண்டியவற்றை நியாயமாகக் கேட்க நினைத்தேன். அத்துமீறிப் பேசினால் முட்டியைத் தட்டி விடுவேன்" என்று கடுமையாகப் பேசவும் அவர்கள் அடங்கி ஒருவருக்கொருவர் மெல்லப் பேசிக் கொண்டனர்.

"நான் ஒரே பெண இல்லை. எனக்குத் தங்கை இருக்கிறாள்" என்று சந்திரமதி குறுக்கிட்டாள்.

"அப்படியேதான் இருக்கட்டுமே இன்ஸ்பெக்டர் ஸார்! வயதுக்கு வராத மைனர் பெண்ணை இவன் தட்டிக்



கொண்டு வந்தது குற்றமில்லையா? இந்த ஊர் எம்.எல்.ஏ. உங்களுக்குப் போன் செய்யவில்லையா? அவங்க வார்த்தைக்காவது மதிப்புக் கொடுக்க வேண்டாமா?" என்று குரலைத் தாழ்த்தினான் அவர்களுள் சற்று நடுத்தர வயதுடையவன்.

இன்ஸ்பெக்டர் சந்திரமதியைத் திரும்பிப் பார்த்தார். 'வயதுக்கு வராத பெண்' என்று சொல்லும்போது முதலில் பக்கிரிக்குச் சிரிப்பு வந்தாலும் மைனர் பெண்ணுக்கு அப்படி ஒரு வார்த்தை சொல்கிறான் என்று நினைத்து, சந்திரமதியின் காதில் விழும்படியாக, "நீ இன்னும் பெரிய மனுஷியாகவில்லையா? இவனுக்குத் தெரியுமா?" என்று நகைச்சுவையாகப் பேசினான். சந்திரமதியும் மெல்லச் சிரித்தாள். பிறகு,'மைனர் பெண்ணைக் கடத்தி வந்தால் ஜாமீனில் விடமுடியாத குற்றமாயிற்றே? பல வருடங்கள் தண்டனை உண்டே?' என்று பயந்தான்.

சந்திரமதி சொன்னாள்: "ஸார்! நான் பெரிய மனுஷியா இல்லையா என்று கண்டுபிடிப்பது இவங்களுடைய வேலை இல்லை. நான் விரும்பித்தான் இவருடன் வந்தேன். என்னை யாரும் தடுக்க முடியாது. இவர்களுடன் வீணாகப் பேச வேண்டாம். என் அப்பா அம்மா வருவதாகச் சொல்கிறார்களே, வரட்டும்" என்ற அழுத்தந் திருத்தமாகப் பேசினாள்.

தொலைபேசி மணி அடித்தது. இன்ஸ்பெக்டர் முகமலர்ச்சியுடன் ஃபோனில் பேசினார்.

"இதோ வந்து விடுகிறேன். வரும் போது இரண்டு விருந்தாளிகளை அழைத்து வருகிறேன்" என்று அவர் பேசியது கேட்டு அவர், தன் மனைவியுடன் பேசுகிறார் என்பதைப் புரிந்து கொண்டாள் சந்திரமதி.

"ஸாருக்கு வீட்டிலிருந்து ஃபோனா? மனைவி காத்திருக்கிறாங்க போலிருக்கு" என்று சந்திரமதி மிகவும் பழக்கப்பட்ட உறவினருடன் பேசுவது போல் பேசினாள்.

இன்ஸ்பெக்டர் சிரித்துக் கொண்டே, "அடடே! எப்படி கண்டுபிடிச்சீங்க? இன்னிக்கு எங்க 'மேரேஜ் டே!' அடடா தமிழில் பேசாமல், ஆங்கிலத்தில் பேசிவிட்டேனே. எங்கள் 'திருமண நாள்'. வாங்க, வீட்டிற்குப் போவோம்" என்று அழைத்துவிட்டு எழுந்தார்.

சந்திரமதியும் பக்கிரியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"கவலைப்படவேண்டாம். வீட்டிலே குளித்துவிட்டு, ஓ... மாற்றுடை இல்லையா? கவலைப்படாதிங்க. அதற்கும் ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, 'ஜீப்பை'த் தயார் செய்யச் சொன்னார்.

இன்ஸ்பெக்டர், சந்திரமதியைத் தங்களிடம் ஒப்படைக்காமல் புறப்படுவதைப் பார்த்துப் பதறிப்போன அங்கிருந்த இளைஞன், "என்ன ஸார்? நீங்க புறப்படறீங்க? எங்களுக்கு என்ன வழி? எம்.எல்.ஏ. வார்த்தைக்கு என்ன மதிப்பு? எங்கள் புகாரை ஏற்றுக் கொள்ளுங்கள். எஃப்.ஐ.ஆரில் குறித்துக் கொள்ளுங்கள்" என்று பரபரப்புடன் பேசினான்.

"ஏய்! எனக்குச் சட்டம் சொல்லித் தருகிறாயா? உன் மீது தான் முதலில் வழக்கைப் பதிவு செய்ய வேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர் கோபமாக அவனைப் பார்த்து.

"ஸார்! இவங்களை மிகவும் கஷ்டப்பட்டுத் தேடிப் பிடிச்சோமுங்க. ராவெல்லாம் தூக்கமில்லைங்க. கையுங்களவுமாக உங்ககிட்ட ஒப்படைச்சவங்களைத் தப்ப விட்டீங்க..... சொல்லிப்புட்டோம்: நாளைக்கு வருத்தப்படுவீங்க" என்று சீறினான் அந்த இளைஞன்.

இன்ஸ்பெக்டர் அவனிடம் நெருங்கி, "ஏய்! யாருடா வருத்தப்படப் போறாங்க? ஏ, முந்நூற்று நாப்பத்து மூணு! இவனை லாக்கப்பிலே வை. இவன் தப்பி ஓடிவிடப் போறான்" என்று முந்நூற்று நாற்பத்திமூன்றைப் பார்த்துச் சொன்னார்.



அவர்கள் நடுநடுங்கி விட்டனர். பாதி கன்னடத்திலும் பாதி தமிழிலுமாக, "ஸாரி ஸார்! அவன் சின்னப் பையன், அவனுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் சரியாச் செய்ய நினைக்கிறான். அதனாலே ஏதோ அவசரமாப் பேசிட்டான். எங்களுக்குள்ள கடமையை நாங்க நிறைவேற்ற வேண்டாமா? இந்த விவரம் அறியாப் பொண்ணை அவ அப்பா அம்மாகிட்டே சேர்க்க வேண்டாமா? நகை வேறு இருக்கு ஸார்!" என்று பரிதாபமாகப் பேசினான்.

"இதோ பார்! இவங்க எங்கேயும் ஓடிட மாட்டாங்க. பாவம், ராத்திரியெல்லாம் உங்களுக்குப் பயந்து சரியாத் தூங்கலை. குளித்துச் சாப்பிட்டு, தூங்கிவிட்டு வருவாங்க. நீங்க எல்லாம் சாயங்காலம் வாங்க" என்றார்.

"எங்கே வர்றதுங்க?"

"இங்கேதான். அதற்குள் நீங்க சொன்ன மாதிரி இவங்க அப்பா அம்மா வந்திருப்பாங்க. எல்லாம் பேசி முடிவு செய்திடலாம். போங்க" என்று கூறிவிட்டு, பக்கிரியையும், சந்திரமதியையும் ஜீப்பில் ஏற்றி அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றார்.

இன்ஸ்பெக்டர் ஜீப்பின் முன் ஸீட்டிலும், பக்கிரி சந்திரமதி பின் ஸீட்களிலும் அமர்ந்து சென்றனர்.

இன்ஸ்பெக்டர் வீட்டில் நல்ல வரவேற்பு. அவர் மனைவி சந்திரமதியை அன்புடன் நடத்தினாள். சந்திரமதியைவிட இரண்டு வயது கூட இருக்கலாம். காதல் கல்யாணம். மைசூர் பெண். தமிழ் சிறிதே தெரிந்தது. இன்ஸ்பெக்டர் கன்னடத்தில் நடந்த கதையைச் சொன்னார்.

வேறு வேட்டியும், சொக்காயும், பக்கிரிக்கும், புதுப் புடைவை சந்திரமதிக்கும், அவர்கள் குளித்து விட்டு வருவதற்குள் தயாராக எடுத்து வைத்திருந்தனர்.

விருந்து சாப்பிட்ட பிறகு, மூவரும் அமர்ந்து பேசினர்.

"உங்களுக்கு இனி அந்த ரவுடிகளால் ஆபத்தில்லை. ஆனால், சட்டப் பிரச்னை இருக்கிறது" என்று கூறி, பக்கிரியைப் பார்த்து, "பக்கிரி ஸார்! நானும் உங்களைப் போல்தான் காதல் கல்யாணம் செய்து கொண்டேன். ஆனால், சண்டை சச்சரவு இல்லை. வேற்று மொழி பேசும் பெண் – அவ்வளவுதான். அன்புக்கு மொழி ஏது? உங்கள் பிடியிலுள்ள உங்கள் காதலி இன்னும் மேஜர் ஆகவில்லை. அதுதான் பிரச்னை. அதனால், சிறிது காலம் உங்கள் பெற்றோரிடம் சிக்காமல் இருக்க வேண்டும்" என்றார். சந்திரமதியையும் அவ்வப்போது திரும்பிப் பார்த்துப் பேசினார். மெல்லச் சிரித்தார்.

"ஸார்!" என்று சந்திரமதி, குறுக்கிட்டாள். "என்ன சட்டப் பிரச்னை? நான் மனம் ஒப்பித்தான் இவருடன் வந்தேன். நான் இன்னும் சிறு குழந்தையில்லை. எனக்கு வயது பத்தொன்பது. இதுபோன்ற சங்கடங்கள் வரும் என்று தான் என் டைரியைக் கையுடன் கொண்டு வந்தேன். நல்லவேளை கைப்பை தொலையவில்லை" என்றாள்.

"அம்மா! டைரியை வைத்துக் கொண்டு வயசை நிர்ணயிக்க முடியாது. ஜாதகம் செல்லாது. வேறு ஏஜ் புரூஃப் வேண்டும். ஸாரி – வயதுக்கான சான்று வேண்டும். ஸ்கூல் ஸர்டிஃபிகேட் அல்லது பர்த் ஸர்டிஃபிகேட் வேண்டும். இல்லாவிட்டால் என்னாலும் ஒன்றும் செய்ய முடியாது. உங்கள் பெற்றோர் பார்வையில் படாமல் பதுங்கியிருக்க வேண்டும்" என்றார்.

"ஸார்! அவசரப்பட்டு விட்டீர்கள். நான் என் டைரியைச் சான்றாகக் காட்ட விரும்பவில்லை. டைரிக்குள் பத்திரமாக வைத்து எடுத்து வந்துள்ளேன்" என்று டைரியின் மேல் அட்டைக்குள் மறைவாக வைக்கப்பட்டிருந்த ஒரு காகிதத்தை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் நீட்டினாள். இன்ஸ்பெக்டர் அதை வாங்கி ஒருமுறைக்கு இருமுறை பார்த்தார். விரலவிட்டு ஏதோ எண்ணினார்.



பக்கிரி ஒன்றும் புரியாமல் திகைத்தான். 'தனக்குத் தெரியாமல் டைரியிலிருந்து எதை எடுத்துக் காட்டுகிறாள் இவள்?' என்ற அவன் சந்திரமதியையும், இன்ஸ்பெக்டரையும் மாறி மாறிப் பார்த்தான்.

## இருபத்திமூன்று

சந்திரமதி காட்டிய சான்றிதழைக் கையில் வாங்கிப் பார்த்த காவல் துறைக் கண்காணிப்பாளர், வியப்புடன் சந்திரமதியைப் பார்த்தார்.

பக்கிரியின் பக்கம் திரும்பி "ஸார்! உங்கள் வருங்காலத் துணைவி, உண்மையிலேயே மிக புத்திசாலி. திட்டமிட்டு எதையும் செய்யக் கூடியவள் என்பது தெரிகிறது. அறிவு – ஆற்றல் – துணிவு எல்லாம் நிறைந்தவள். இம்மாதிரி, உண்மையிலேயே எளிதில் பார்க்க முடியாது!" என்று சொன்ன போது, சந்திரமதி நாணத்தால் நெளிந்தாள்.

"ஸார்! ரொம்பப் புகழ்கிறீர்கள்" என்றாள். அவள் நேர் பார்வையைத் தாங்க முடியாத இன்ஸ்பெக்டர், "உன்னைப் புகழ வேண்டிய காரணம் எனக்கில்லை என்பதை நீங்கள் இருவருமே ஒப்புக் கொள்வீர்கள். உள்ளதைச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு, தன் கையிலிருந்த சான்றிதழைப் பக்கிரியிடம் நீட்டி, "பார்த்திர்களா? இது பள்ளிக்கூட ஸர்டிபிகேட். இதில் இவளுடைய பிறந்த வயது குறிக்கப்பட்டுள்ளது. இதன்படி பார்த்தால், இவளுக்கு இருபத்திரண்டு வயது" என்றார்.

இன்ஸ்பெக்டர் எதற்கு வயதைப் பற்றிச் சொல்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளாமல் பார்த்தான் பக்கிரி.

“சந்திரமதியின் வயது எனக்குத் தெரியாது. அவளுடைய சாதி தெரியாது. அவற்றையெல்லாம் கேட்டா காதலிக்க முடியும்? பதினாறு பதினேழு இருக்கும் என நினைத்தேன். பள்ளிக்கூடத்தில் படிப்பவளை நாம் காதலிக்கிறோமே என்று ஒரு சமயம் கவலைப்பட்டதும் உண்டு. ஆனால், வயது - படிப்பு - சாதி மதம் இவற்றையெல்லாம் கேட்டுவிட்டா காதல் இருவரிடையேயும் பிறக்கிறது? சந்திரமதி தன்னுடன் என்ன எடுத்து வந்தாள் என்பதைக் கூட நான் கவனிக்கவில்லை. அவள் என்னை நம்பி, அன்புடன் வந்தாள் என்பதைத்தான் கவனித்தேன்.

'காற்றிலேறி அவ்விண்ணையும் சாடுவோம்;
காதற் பெண்கள் கடைக் கண் பணியிலே!'

என்று பாரதியார் சொல்லியதைப் போல், சந்திரமதி சொல்வதைக் கேட்டு நடந்தேன்” என்று மூச்சு விடாமல் பேசினான்.

இன்ஸ்பெக்டருக்குச் சற்றே எரிச்சலாக இருந்தது. நாம் எதற்காகச் சொல்கிறோம் என்பதையே இவர் புரிந்து கொள்ளவில்லையே? இலக்கியம் படித்து என்ன, பிரமாதமாக மேடையேறிப் பேசித்தான் என்ன பயன்? என்றெண்ணி -

“என்ன ஸார், டியூப் லைட் மாதிரி இருக்கிங்களே? இவ என்ன முன்யோசனையுடன் செயலாற்றியிருக்கிறாள் என்பதை உணரவேண்டும். அதைக்கூட நீங்கள் புரிந்து கொள்ளவில்லையே?” என்றார்.

பக்கிரிக்கு இலேசாகக் கோபம் தோன்றியது. இதுவரையில் சந்திரமதியை மரியாதையுடன் விளித்தவர், இப்போது ஒருமையில் உரிமையுடன் 'நீ', 'அவள்' என்று சொல்ல முயன்றது எரிச்சலை ஊட்டியது. தன்னையும் 'டியூப் லைட்' என்று சொன்னது கோபத்தையும் வருத்தத்தையும் அளித்தன.



பக்கிரியின் முகமாற்றம் கவனித்த இன்ஸ்பெக்டர் சட்டென்று சூழ்நிலையை மாற்ற விரும்பி, “பக்கிரி ஸார்! இந்தச் சான்றிதழ் இல்லாமலிருந்தால் குறைந்தது ஏழு வருடச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும்! வயதுக்கு வராத பெண் என்று சொன்னார்களே? - அதாவது மைனர் பெண்ணைக் கடத்தி வந்த குற்றத்திற்குப் பெரிய தண்டனை உண்டு தெரியுமா? அத்துடன் 'நிறைய நகைகளுடன் சந்திரமதியைக் கடத்தி வந்துவிட்டான்' என்ற புகார் வேறு கொடுத்திருக்கிறார்கள். பள்ளிக்கூடச் சான்றிதழை இவள் கொண்டு வந்ததால், வயது உறுதியாகிவிட்டது. மேலும்...” என்று கூறி சந்திரமதியைப் பார்த்து, “உன் விருப்பப்படிதானே இவரைக் காதலித்தாய், இவருடன் வந்தாய்?” என்று கேட்டார்.

“ஸார்! நீங்கள் எதற்காகக் கேட்கிறீர்கள் என்று எனக்கு நன்றாகப் புரிந்து விட்டது. மைனர் பெண்ணைக் கடத்தி வந்துவிட்டதாகப் புகார் என்பது எனக்குத் தெரியும். கையில் ஸர்டிஃபிகேட் இருந்தால் அது நமக்குப் பலவிதத்திலும் உபயோகமாயிருக்கும் என்பதைத் தெரிந்து வைத்திருந்தேன். எங்காவது வேலைக்குப் போக நேர்ந்தால், அப்போது ஸர்டிஃபிகேட் தேவைப்படும். இப்படி ஓர் இக்கட்டான நிலையில் கோர்ட் வழக்கு என்றால் நிச்சயமாக இது தேவை. நீங்கள் சொல்வது போல் இந்தச் சான்றிதழ் என்னிடம் இல்லாதிருந்தால், தண்டனை வழங்குவார்கள். என்னைப் படாதபாடு படுத்துவார்கள். அப்பா அம்மாவிடம் அனுப்பிவிடுவார்கள். அதைவிட நரகம் வேறெதுவும் வேண்டுமா?”

சந்திரமதி சொன்னபோதுதான், பக்கிரி புரிந்து கொண்டான். உண்மையிலேயே சந்திரமதி மிகுந்த திறமைசாலிதான், அறிவும் ஆற்றலும் உடையவள்தான் என்பதைப் புரிந்து கொண்டான்.

“இவ்வளவு இக்கட்டு இருக்கிறது என்பது எனக்குத் தெரியாமல் போய்விட்டது. உலக அறிவு என்பதே தனி.

வெறும் பழைய இலக்கியம், அரசியல் நூல்கள் படித்தால் போதுமா? ஆகா! உலகம் எவ்வளவு பெரியது, எவ்வுளவு பொல்லாதது?'' என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

"சரி, சரி பக்கிரி ஸார்! கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். மாலை நான்கு மணிக்கு ஸ்டேஷனுக்குப் போக வேண்டும். எம்.எல்.ஏ. வந்து விடுவார்'' என்று கூறிவிட்டு சந்திரமதியைப் பார்த்து, "உன் அம்மாவுக்கு நீ மிகவும் செல்லப் பெண். உன்னைப் பிரிந்திருக்க அவர்கள் எப்படிச் சம்மதிப்பார்கள்?'' என்றார்.

சந்திரமதியின் பக்கம் பார்வையைச் செலுத்தி இன்ஸ்பெக்டர் பேசுவது பக்கிரிக்குப் பிடிக்கவில்லை. அவர் பார்வை கூட சரியாக இல்லாதது போல் தோன்றியது. என்ன செய்வது? இப்போது இவரிடம் பகைத்துக் கொள்ளக் கூடாது. இவர் தயவு வேண்டும் என்று முடிவு செய்தான். தூக்கம் கண்களைச் சுழற்றியது உண்மைதான்.

அவர்களுக்காக தனி அறை அளிக்கப்பட்டது. வசதியான வீடு. காவல்துறைக் கண்காணிப்பாளராக இருந்தாலும், ஒரு சிறு ஜமீன்தார் போல் வாழ்வதைக் கண்டான். அளவுக்கு மீறிய வருமானம் போலும்!

கட்டில், மெத்தை, குளுகுளு அறை. சற்று பயத்துடன் அவர்கள் மெத்தையின் மீது உட்கார்ந்தார்கள். களைப்பு மிகுதியாலும் நல்ல உணவாலும் பக்கிரி படுத்தவுடன் தூங்கிவிட்டான். சந்திரமதி சற்றுத் தள்ளி அவன் அருகேதான் படுத்திருந்தாள். பக்கிரியின் அகன்ற மார்பும், அதிலே அடர்ந்திருந்த முடிகளும், கூர்மையான மூக்கும், விசாலமான நெற்றியும், மூடியிருந்தாலும் அந்த விழிகளின் அழகும் – அவனை அவள் பார்த்துக் கொண்டேயிருந்தாள்!...

திடீரென்று அவன் மார்பின் மீது முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அவளும் உறங்கிவிட்டாள்.

**ப**க்கிரி கண்விழித்த போது, தன் மார்பின் மீது ஒரு குழந்தை போல் படுத்துறங்கும் சந்திரமதியின் உறக்கத்தைக் கலைக்க விரும்பாமல், அப்படியே அவளை ரசித்துக் கொண்டிருந்தான். அவள் கூந்தலைத் தடவினான். அவள் நெற்றி, நாசி, விழிகள் இவற்றை வருடினான். சற்றே கலைந்திருந்த மாராப்பைச் சரி செய்தான்.



கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

சந்திரமதி திடுக்கிட்டு விழித்தாள்.

பக்கிரியின் மார்பின் மீது முகத்தை வைத்துக் கொண்டு தூங்கி விட்டதையும் அவன் தன்னை ஒரு குழந்தைபோல் அணைத்துக் கொண்டிருப்பதையும் அறிந்து திடுக்கிட்டு எழுந்து கட்டிலின் ஓர் ஓரமாக உட்கார்ந்த சந்திரமதி, "எவ்வளவு நேரமாக இப்படித் தூங்குகிறேன். ரொம்பவும் அசதி, எவ்வளவு பெரிய தவற்றைச் செய்துள்ளேன்!'' என்று கூறி மார்புச் சேலையைச் சரி செய்து கொண்டாள்.

"என்ன தவறு செய்துவிட்டாய்? என்னைக் காதலித்து, என்னுடன் வந்தது பற்றிச் சொல்கிறாயா?'' என்று பக்கிரி கேட்டவாறு அவள் கரத்தைப் பிடித்துத் தன் அருகே இழுத்தான்.

"இந்தத் தவற்றைத்தான் சொல்கிறேன். என் கழுத்தில் மாங்கல்யம் ஏறும் வரையில் உங்களைத் தீண்டுவதில்லை என்ற உறுதியுடன் இருந்தேன். என்னை அறியாமல் உங்கள் மார்பின் மீது சாய்ந்து விட்டேன்'' என்று கூறி நீண்ட அவன் கரத்தை விலக்கினாள். பிறகு எழுந்து சுற்றுமுற்றும் பார்த்து அந்த அறையிலிருந்த டாய்லெட்டுக்குச் சென்று முகம் கழுவி வந்த அவள், தன் கைப் பையைத் திறந்தாள். பக்கிரியை அருகே அழைத்தாள்.

**ப**க்கிரி அவள் முகத்தில் ஏற்பட்ட புதுத் தெளிவைக் கண்டான்.

பெருமைக்குப் பதில் பொறாமைதான். அதை அடக்கவும் மாற்றவும் அவன் முயன்றான்.

திருமணம் ஆவதற்கு முன்பு தொடக் கூடக் கூடாது என்ற சந்திரமதியின் உறுதியை அவன் மனத்திற்குள்ளேயே புகழ்ந்தான்.

காதலைத் தொடர்ந்து காமம் வரும் என்பதை அவன் அறிவான். காமத்திற்காகக் காதல் கொள்பவர்களும் இருக்கிறார்கள் என்பதையும் படித்திருக்கிறான். சந்திரமதியைப் பார்த்த முதல் கணத்தில் அவனுக்குக் காமம் எழவில்லை என்பது உறுதி.

ஆனால், இந்த இரண்டு நாள்களில் சந்திரமதியின் மென்மையை உணர விரும்பினான். அவள் தன் மார்பின்மீது குழந்தை போல் துயின்றது அவனுக்குப் புதிய அனுபவத்தை அளித்தது. அவளைத் தலைமுதல் கால்வரை மீட்ட விரும்பினான். ஆனால், உள்மனம் தடுத்து விட்டது.

சந்திரமதி அந்த அறையைச் சுற்றிப் பார்வையைச் சுழலவிட்டாள். நான்கே படங்கள். புத்தர் – காந்தி – இயேசு மற்றொரு படம் பெரியார்.

சந்திரமதி அந்தப் படத்திற்கு எதிரே நின்றாள். பக்கிரியைத் தன் அருகே அழைத்தாள். எதிரே நிற்கச் சொன்னாள். தன் கைப்பையிலிருந்து திருமாங்கல்யத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

கதவு வெளியே இருந்து தட்டப்படும் ஓசை கேட்டுக் கொண்டே இருந்தது.

"இதோ, புனிதச் சரடு. இதை என் கழுத்தில் கட்டுங்கள். இந்த அத்தாட்சி இல்லாவிட்டால் இந்தச் சமூகத்தில் நாம் நடமாட முடியாது!" என்றாள்.

பக்கிரி வியப்புடன் அவளை நோக்கினான். "ஊம்; மங்கலநாணை என் கழுத்தில் அணிவித்து, என்னை வாழ்த்துங்கள். பெரியார் படத்தின் சாட்சியாக நாம் மணக்கிறோம். பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்தவர் பெரியார். அவருக்கு இந்தத் தாலிச் சரட்டில் நம்பிக்கை



இல்லை. ஆனால் இப்போது இந்தச் சமூகத்தில் நாம் துணிவுடன் நிமிர்ந்து நடமாட இது அவசியம்" சந்திரமதி தாலிச்சரட்டை அவனிடம் நீட்டினாள்.

தாலியைக் கையில் பெற்ற பக்கிரி ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

"நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. வாழ்க்கையில் என்றைக்கும் ஒருவரோடொருவர் பிரியாமல் இருப்பதற்காக நாம் உறுதி பூணுவதற்கு யாராவது ஒருவர் சாட்சியாக இருக்க வேண்டும். கோயிலில் சாமி சிலை எதிரே அய்யர் சாட்சியாக மாலை மாற்றிக் கொள்ள வேண்டும். நான் அப்படித்தான் நினைத்தேன். 'பங்களூரில் உள்ள ஒரு கோயிலில், இன்ஸ்பெக்டர் சாட்சியாக நாம் மாலை மாற்றிக் கொள்ளப் போகிறோம், என்று நினைத்தேன். அது வேண்டாம். நம் திருமணம் இப்போதே நடக்கட்டும்!" என்று கூறினாள்.

பக்கிரி, சந்திரமதியின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

சந்திரமதி அவன் பாதத்தைத் தொட்டு வணங்கி, "என்னை வாழ்த்துங்கள்" என்றாள்.

"சந்திரமதி! – இதெல்லாம் என்ன நமக்குள்?"... என்று அவள் இரு தோள்களையும் தொட்டுத் தூக்கினான். தோளின் ஸ்பரிசம் அவனிடம் புதிய சிலிர்ப்பை ஏற்படுத்தியது.

"இப்போது கதவைத் திறப்போம்" என்று கூறி, அறைக் கதவைத் திறந்தாள் சந்திரமதி.

இன்ஸ்பெக்டர் மற்றும் இருவருடன் புன்முறுவல் பூத்தபடி நின்று கொண்டிருந்தார்.

"எவ்வளவு நேரமாகத் தட்டுகிறேன். என்ன 'முதல் பகல்' கொண்டாட்டமா?" என்று கூறி, சந்திரமதியை நோக்கினார். குறும்புத் தனம் அதில் இருந்தது.

## இருபத்தி நான்கு

மிகக் கோபமாக போலீஸ் ஸ்டேஷனுக்குத் தன் உதவியாளர்கள் சூழ நுழைந்த பார்வதி அங்கே இன்ஸ்பெக்டருமில்லை, சந்திரமதியுமில்லை என்பதைத் தெரிந்து கொண்டவுடனேயே அவள் தன்னை அங்கே அழைத்து வந்தவர்களை நோக்கிக் கோபமாகக் கத்தினாள்.

"லாக்கப்பில் வைத்திருக்கிறார்கள், பக்கிரிக்கு நல்ல உதை என்றெல்லாம் சொன்னீர்களே! இங்கே அவர்களைக் காணவில்லையே" என்று கூச்சலிட்டாள்.

ஸ்டேஷன் ரைட்டர் அவளை அதட்டி, "இது போலீஸ் ஸ்டேஷன். இங்கே கூச்சல் போடக்கூடாது" என்றார். அவர்தான் சொன்னார், இன்ஸ்பெக்டர் வீட்டில் சந்திரமதி இருப்பதை. இன்னும் ஒரு படி அதிகமாகவே சொன்னார்: "உங்கள் பெண்ணையும் அவள் காதலனையும் இன்ஸ்பெக்டர் தன் பாதுகாப்பில் வைத்திருக்கிறார். ஒருவேளை அவர்களை ஊரை விட்டே தப்பி ஓடி விடவும் செய்துவிடுவார்."

இதைக் கேட்ட பார்வதி திடுக்கிட்டாள். 'அய்யோ' என்று அலறினாள். 'இப்போதே அந்த இன்ஸ்பெக்டர் வீட்டிற்குச் செல்வோம்' என்று பரபரத்தாள். ஸ்டேஷன் ரைட்டர் பயந்துவிட்டார். 'சந்திரமதி அங்கிருக்கும் செய்தியை, நாம் பார்வதியிடம் சொல்லிவிட்டோமே' என்று பயந்தார். தனக்குக் கெட்ட பெயர் வந்துவிடக்கூடாதென்ற கவலையும் அவருக்கு ஏற்பட்டது.

"இன்ஸ்பெக்டர் தன் வீட்டிற்கு யார் வருவதையும் விரும்ப மாட்டார். நீங்கள் அங்கே போகாதிர்கள்" என்று மெல்லச் சொன்னார்.



"என் பெண்ணைத் தன் வீட்டிற்கு அவர் ஏன் அழைத்துச் செல்ல வேண்டும்? என் பெண்ணைக் காணவில்லை என்று நான் புகார் செய்திருக்கிறேன். பெண் அங்கே இருக்கிறாள் என்று தெரிந்தவுடன் நான் அவளைப் பார்க்கப் போகாமல் எப்படியிருக்க முடியும்?" என்று ஆவேசமாகப் பேசினாள்.

இன்ஸ்பெக்டர் வீட்டிற்குள் பார்வதி நுழையும்போது இன்ஸ்பெக்டர் நடு ஹாலில் உட்கார்ந்திருந்தார். தன்னுடன் வந்தவர்களை வெளியே நிற்கச் சொல்லிவிட்டு தைரியமாக இன்ஸ்பெக்டருக்கு வணக்கம் தெரிவித்துத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

அடுத்த அறையில் இருந்த சந்திரமதிக்குத் தன் தாயின் குரல் கேட்டது. திடுக்கிட்டாள். என்ன செய்வதென்று புரியவில்லை. சற்று முன்புதான் பக்கிரி அவள் கழுத்தில் தாலியைக் கட்டினான். இன்ஸ்பெக்டர் அதைப் பார்த்துத் திடுக்கிட்டதை அவள் அறிவாள். தாலி கட்டிய பிறகு யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்பது அவளுக்குத் தெரியும். அதிலும் ஓர் இன்ஸ்பெக்டர் வீட்டில் கல்யாணம் நடைபெற்றதென்றால் வேறொன்றும் விரோதமாகச் செய்ய முடியாது; பேச முடியாது.

"ஏன் இப்படி அவசரப்பட்டு விட்டீர்கள்? இங்கே பிரபலமான அம்மன் கோயிலிருக்கிறது. நாளைக் காலையில் அம்மன் சந்நிதியில் உங்கள் கல்யாணத்தை நானே முன்நின்று நடத்த முடிவு செய்திருந்தேன். இரண்டு ரோஜாப்பூ மாலைக்கும் சொல்லியிருந்தேன். கல்யாண புடைவையும், வேஷ்டியும் வாங்க ஆள் அனுப்பினேன். கல்யாணம் முடிந்தவுடன் விருந்துக்கும் ஏற்பாடு செய்திருந்தேன்" என்று ஏமாற்றமும் அதனால் ஏற்பட்ட கோபமும் கலந்து பேசினார்.

சந்திரமதி தன் கழுத்தில் இருந்த தாலியை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

"இப்போது மட்டும் என்ன? உங்கள் விருப்பப்படி அம்மன் கோயிலுக்கு நாளைக் காலையில் நாம் செல்வோம். திருமணத்தில் தாலி கட்டுவதுடன் மாலை மாற்றிக் கொள்ளும் நிகழ்ச்சியும் உண்டு. என் மூத்த சகோதரராக உங்களை நான் நினைத்திருக்கிறேன். உங்கள் கரத்தால் புடைவையும், வேஷ்டியும் வாங்கி உடுத்திக் கொள்ளக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என்றாள்.

அவள் பேச்சுத் திறமையைக் கண்டு வியப்படைந்த இன்ஸ்பெக்டர், குறுக்கும் நெடுக்கும் நடந்து, "இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் அம்மா போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்துவிடுவார்களே, அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்வது? பெரிய இடத்துச் சிபாரிசையும் அவள் பெற்றிருக்கிறாள். அந்த எம்.எல்.ஏ. மறுபடியும் போன் செய்தால் நான் என்ன செய்வேன்?" என்று கவலைப்படுபவர் போல் பேசினார்.

"நல்லதாப் போச்சு. நாளைக் காலையில் கோயிலுக்கு என் அம்மாவையும் வரச் சொல்லுங்கள். சாமி எதிரே அம்மாவுக்கு வணக்கம் செலுத்துகிறேன். கல்யாணத்தன்று யாராவது ஒரு பெரியவருக்கு வணக்கம் செலுத்தி ஆசி பெறுவது நியாயம்தானே?" என்று கூறினாள்.

அவள் கிண்டல் செய்வதாக இன்ஸ்பெக்டருக்குத் தோன்றியது.

சந்திரமதி திறமையாகப் பேசுவதும், பேசும்போது தலையை ஆட்டி ஆட்டிப் பேசுவதும் அவரை ஒருகணம் மயங்க வைத்தன. அவள் துணிவும் அதைப் பிரதிபலிக்கும் முகத் தோற்றமும் அவர் மனத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தின. எந்தக் கவலையும் படாத தெளிவான அந்த முகம் அவரை வசிகரித்தது.

"என்ன இன்ஸ்பெக்டர் சார்! மவுனமாகி விட்டீர்கள்?" என்றாள் சந்திரமதி, சிரித்தவாறே உள் பக்கம் திரும்பி,



"அத்தான்! இன்ஸ்பெக்டர் பேசாப் பதுமையாகி விட்டார். உங்கள் நண்பருக்கு நீங்கள்தான் தக்க சமாதானம் சொல்ல வேண்டும்" என்று கூறி பக்கிரியை அழைத்தாள்.

இன்ஸ்பெக்டருடன் சரி சமமாக சந்திரமதி பேசுவது பக்கிரிக்குப் பிடிக்கவில்லை. கட்டிலில் சாய்ந்து கொண்டிருந்தவன் துள்ளி எழுந்து, "அங்கிருந்து நீ பேசுவது என் காதில் விழவில்லை. இங்கே உள்ளே வந்து சொல்வதைச் சொல்லு" என்று அழைத்தான். சந்திரமதி உள்ளே வந்தபோது அவளைப் பாதம் முதல் கேசம் வரை விழுங்கி விடுபவன் போல் பார்த்த பக்கிரி, "சரி, சரி – இப்படி உட்கார். நாம் அடுத்துச் செய்ய வேண்டியதைப் பற்றிப் பேச வேண்டும். எனக்கென்னவோ இங்கேயே தங்கியிருப்பது பிடிக்கவில்லை" என்றான்.

"இங்கேயே தங்கி இருக்குமாறு யார் உங்களை வேண்டிக் கொண்டார்கள்? இரவு இங்கேயே தங்குவதா அல்லது" என்று, அவனைக் கடைக் கண்ணால் பார்த்தவாறு உதட்டில் குறும்புச் சிரிப்புப் பொங்கக் கேட்டாள். அப்போதுதான் வெளியே நடுக்கூடத்தில் தன் தாயின் பேச்சுக் குரல் போல் கேட்கவே அவள் சொன்னாள்: "அய்யோ, அம்மாவின் குரல் போல் இருக்கிறதே!"

மெல்ல எட்டிப் பார்த்தாள். பிறகு பரபரப்புடன் அவன் அருகே வந்து, "அம்மா தான். எப்படியும் என்னை இங்கிருந்து அழைத்துப் போய்விடுவாள். இது இந்த இனஸ்பெக்டரின் சதியாகக் கூட இருக்கலாம்" என்று பயந்து கையைப் பிசைந்து கொண்டாள். வெளிக்கூடத்தில் இன்ஸ்பெக்டரும் பார்வதியும் உரக்கப் பேசுவது தெளிவாகக் கேட்டது.

"இங்கே வீட்டிற்கெல்லாம் வரக்கூடாது. போலீஸ் ஸ்டேஷன் விவகாரம் ஸ்டேஷனிலேயேதான். வீட்டிற்கு வருவதை நான் அனுமதிக்க மாட்டேன். எனக்குப் பிடிக்கவும் பிடிக்காது" என்று சற்றுக் கண்டிப்பாகப் பேசிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

“என் பெண்ணைக் காணவில்லை என்று நான் புகார் கொடுத்திருக்கிறேன். என் பெண் இங்கே இருக்கிறாள். அதனால்தான் ' நான் இங்கே வந்தேன்” பார்வதி அழுத்தந்திருந்தமாகப் பேசினாள். இவ்வளவு துணிவு அம்மாவுக்கு எப்படி ஏற்பட்டதென்று சந்திரமதி அதிசயப்பட்டாள்.

“உங்கள் பெண் இங்கே இருக்கிறாள் என்று யார் சொன்னார்கள்? போலீஸ் ஸ்டேஷனில் போய்க் காத்திருங்கள். போங்கள்.”

“போலீஸ் ஸ்டேஷனிலேதான் இவ்வளவு நேரம் காத்திருந்தேன். அங்குதான் சொன்னார்கள், என் பெண உங்கள் வீட்டில் இருப்பதாக. என் பெண்ணை நான் உடனே பார்க்க வேண்டும். அவளை நான் பின்னப்படாமல் அழைத்துச் செல்லவேண்டும். அவளைப் பார்க்க எனக்கு அனுமதி கொடுங்கள். இரண்டு நாள்களாகத் தவியாய்த் தவிக்கிறேன்: கள்ளம் கபடமறியாத பெண்; சூது வாது அறியாத பெண். வீட்டுப் படியைத் தாண்டாத பெண். சைக்கிள் கடை பக்கிரி – பக்கிரியில்லை அவன் போக்கிரி– என் பெண்ணை மயக்கி அழைத்து வந்துவிட்டான். அந்தப் பக்கிரிக்குத் தண்டனை கொடுக்காமல் வீட்டிலேயே வைத்திருக்கிறீர்களே!” பார்வதி உணர்ச்சி மிகுதியால் குரல் தழுதழுக்கப் பேசினாள்.

இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

“இன்ஸ்பெக்டர் சார்! என்னைப் பார்த்தால் சிரிக்கத் தோன்றுகிறதா? என் கணவர் இங்கு வந்திருந்தால் நீங்கள் இப்படி அவமானப்படுத்திச் சிரிப்பதற்குச் சும்மா விட்டிருக்க மாட்டார். சென்னையில் அவர் பெரிய மனிதர், செல்வாக்கு மிகுந்தவர். இங்கேயும் அவர் செல்வாக்கு கொடிகட்டிப் பறப்பதால்தான் என் பெண்ணை நொடியில் கண்டு பிடித்துவிட்டேன். எங்கே என் பெண்? எங்கே என் அருமை சந்திரமதி? இன்னும் வயது வராத மைனர்



பெண்ணைத் தூக்கி வந்தவனைத் தண்டிக்காமல் என்னைப் பார்த்துச் சிரிக்கிறீர்களா? சிரிப்பு இன்னும் சிறிது நேரத்தில் நெருப்பாகும்” என்று பார்வதி கர்ஜித்தாள்.

இன்ஸ்பெக்டர் இடத்தை விட்டு எழுந்தார். “அம்மணி! ரொம்பவும் பயமுறுத்தாதிர்கள். உங்க புருஷன் உங்க ஊர்ல ராஜாவாய் இருக்கலாம். இங்கே செல்லுபடியாகாது. நீங்கள் நினைப்பதுபோல் உங்கள் பெண கபடமறியாதவளில்லை. படிதாண்டாதவளும் இல்லை. மைனர் பெண்ணுமில்லை. நீங்கள் நினைப்பது போல் அவள் பாப்பா இல்லை. அவளாகத்தான் பக்கிரியை அழைத்து வந்துவிட்டாள்.”

இன்ஸ்பெக்டர் ஏளனமாகப் பேசி வரும்போது, பார்வதி குறுக்கிட்டாள். “என்ன சொன்னீர்கள்? என் பெண அந்தப் போக்கிரியை மயக்கிவிட்டாளா? அபாண்டமாகப் பேசினால் உங்கள் நாக்கு அழுகிவிடும். உங்கள் மீது மான நஷ்ட வழக்குப் போடுவேன். என் பெண்ணை உடனே என்னிடம் ஒப்படைக்கிறீர்களா, இல்லையா? என்னுடன் வந்தவர்களை உள்ளே அழைக்கச் சத்தம் போடட்டுமா?” என்று கோபாவேசமாகப் பேசினாள்.

இன்ஸ்பெக்டர் முகம் சிவந்தது. “ஏய்! யாரங்கே? இந்த அம்மாளை யார் உள்ளே விட்டார்கள்? உடனே வெளியே தள்ளுங்கள்” என்று கூறிக் காவலரை அழைத்தார்.

## இருபத்தைந்து

சந்திரமதியின் தாய் பார்வதி அதிர்ச்சியடைந்தாள். இன்ஸ்பெக்டர் இதுபோல் பேசுவார் என்று அவள் நினைக்கவில்லை. இன்னும் ஒரு கணம் இருந்தால்கூட தன்னை வீட்டை விட்டுத் தள்ளிவிடுவார் போலிருக்கிறதே! என்று அஞ்சினாள்

பார்வதி சாந்தமானாள். குரல் தழுதழுக்க, "இன்ஸ்பெக்டர்! நான் என்ன சொல்லிவிட்டேன் என்று இப்படிப் பேசுகிறீர்கள்? அவமரியாதையாக நடத்துகிறீர்கள். உங்களுக்கும் ஒரு பெண் இருந்து இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்? நினைத்துப் பாருங்கள்" என்று கூறியபோது அவளுக்கு அழுகை பொங்கியது. முன்றானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். தன் அழுகையை அடக்கிக்கொள்ள முயன்றாலும் இயலவில்லை. துக்கம் மேலும் அவள் தொண்டையை அடைக்க, "இன்ஸ்பெக்டர் ஸார்! என் மகளைப் பார்க்க வேண்டும் என்றுதானே நான் தங்களைக் கேட்கிறேன். பெற்ற வயிறு எரிகிறது இன்ஸ்பெக்டர்! என் கணவர் வந்திருந்தால் நான் உங்களுடன் பேசியிருக்கவே மாட்டேன். மூன்றாவது மனுஷனுடன் பேசியே எனக்குப் பழக்கம் இல்லை. நான் பெத்துக் கிளிபோல வளர்த்தேனே – பாவி அவனால் நான் இன்னும் என்ன சீரழிய வேண்டுமோ?"

பார்வதியின் கண்களிலிருந்து தடுக்க முடியாத கண்ணீர்ப் பிரவாகம். அழுகையை அடக்க முயல்வதால் ஒருவிதமாகக் கேவியது.

தன் தாய் இப்படி அழுது சந்திரமதி இதுவரையில் பார்த்ததேயில்லை. அம்மா சொல்வதுபோல், அம்மா வீட்டைவிட்டு வெளியே எங்கும் சென்றதில்லை. வீடு உண்டு கட்டிய கணவர் உண்டு என்றுதான் அவள் இவ்வளவு காலத்தையும் கழித்திருக்கிறாள்.

'அம்மா சொல்வதுபோல், ஒரு மூன்றாவது மனுஷன் எதிரே அம்மா நின்று பேசுவது இதுதான் முதல் தடவை. ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் அம்மாவை ஏன் இப்படி மரியாதைக் குறைவாக நடத்துகிறார்?'

'சென்னையிலிருந்து தனியே இங்கே வந்திருப்பதும், உதவிக்காக அடியாள்களை அழைத்து வந்திருப்பதும் எனக்காகத்தானே?' சந்திரமதி கலங்கினாள்.



"இத பாரும்மா – இங்கே வந்ததே தவறு. உங்களை என்ன சொல்லி விட்டார்கள் என்று அழுகிறீர்கள்? உங்கள் பெண்ணுடன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போங்க. அங்கே பேசிக்கொள்ளுங்கள்" என்று இன்ஸ்பெக்டர் அழுத்தந் திருத்தமாக, கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

"போலீஸ் ஸ்டேஷனுக்கா? நான் அங்கே வரமாட்டேன். இங்கேயே என் மகளுடன் பேசிக் கொள்கிறேன். அவளை ஏன் மறைத்து வைத்திருக்கிறீர்கள்? அவளை என் எதிரே வரச் சொல்லுங்கள். என்னைப் பார்த்தவுடன் அவள் என்னுடன் தாயைப் பார்த்த கன்றைப் போல துள்ளிக் குதித்து வந்து விடுகிறாளா இல்லையா என்பதைப் பாருங்கள்.." என்றாள் பார்வதி கண்களைத் துடைத்துக் கொண்டு.

'ஐயோ, அம்மா மறுபடியும் போலீஸ்ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டுமா? அங்கே நானும் போக வேண்டுமா? அவரும் என்னுடன் வரவேண்டியிருக்குமே? வேண்டாம் வேண்டாம் அவமானம்! நாமே அம்மாவைப் பார்த்துவிடுவோம்' என்று சந்திரமதி நினைத்தாள்.

பக்கிரி அவளுடைய மெல்லிய பூங்கரத்திலுள்ள வளையல்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். மகிழ்ச்சியாக அவளைத்தொட முடியவில்லை. தன்னால்தானே அந்தக் குடும்பத்திற்கு இவ்வளவு அவப்பெயர்? என்று எண்ணும்போது காதல் மீதே எரிச்சல் ஏற்பட்டது.

"என் அம்மா அழுது நான் பார்த்ததில்லை" என்று சந்திரமதி கூறும்போது அவள் கண்கள் கலங்கின.

"அடுத்து என்ன செய்வது?" சந்திரமதி பக்கிரியைப் பார்த்து மெல்லக் கேட்டாள்.

"நான் செய்தது தவறு என்று உணர்கிறேன்" என்றான் பக்கிரி.

அவனைக் கோபமாக நோக்கினாள் சந்திரமதி. கோபத்திலும் செல்லமாக அவன் விலாவில் இடித்து "அதைப் பற்றியா கேட்கிறேன். இப்போது என்ன செய்வது?"

"நாம் இரண்டு பேரும் உன் அம்மாவின் காலில் விழுந்து வணங்குவோமா?" என்றான் பக்கிரி.

வெளியே இன்ஸ்பெக்டர் அழுத்தந்திருத்தமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

"இதற்குமேல் நான் பேசமாட்டேன். எனக்கு வேலை இருக்கிறது. ஸ்டேஷனுக்குப் போங்கள்" என்று உரத்த குரலில் கூறியபோது, சந்திரமதி அந்த அறையினின்று வெளியே ஓடி வந்தாள்.

"அம்மா!" என்று பார்வதியை நோக்கி உணர்ச்சி மிகுதியால் கூவினாள்.

"சந்திரமதி! இங்கேயா இருக்கிறாய்?" என்று பார்வதியும் உணர்ச்சி வயப்பட்டுக் கத்தியவாறு சந்திரமதியை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

இன்ஸ்பெக்டர் சற்றும் இதை எதிர்பார்க்கவில்லை. சந்திரமதியின் தலையைக் கோதியவாறு, முகத்தை வருடியவாறு, "என் கண்ணே! எப்படி மாறியது உன் மனசு? என்னை விட்டு ஓடி வர எப்படித் துணிந்தாய்?" என்று புலம்பினாள்; விம்மினாள்.

இன்ஸ்பெக்டருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வீட்டிலே இந்த விசாரணையை வைத்துக் கொள்ள வேண்டாம் என்றே நினைத்தார். ஆனால், நிலைமை மாறிவிட்டதே, என்ன செய்யலாம்?– அவர் சிந்தித்தவாறு அந்தக் கூடத்தில் குறுக்கும் நெடுக்கும் உலவினார்.

பார்வதி தன் பெண்ணை அணைத்துக் கொள்வதும் முகத்தைத் தடவி முத்தம் கொடுப்பதும், கரங்களைத் தடவுவதுமாகப் பாசமழையை அள்ளிப் பொழிந்து கொண்டிருந்தாள்.



இன்ஸ்பெக்டர் பொறுமையை இழந்தார். "ஊம்; நிறுத்துங்க. போங்க வெளியே" என்று கத்தினார்.

சந்திரமதியின் கரத்தைப் பிடித்துக் கொண்டிருந்த பார்வதி, இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "சரிங்க – போகிறோம். என் பெண்ணை என்னோடு சேர்த்ததற்கு உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை. வரேங்க" என்று இரு கரத்தையும் குவித்துக் கும்பிட்டு சந்திரமதியைப் பார்த்து, "வாடி கண்ணே, நாம் போகலாம். ஏதோ கெட்ட கனவுபோல நினைத்து மறந்து விடுகிறேன்" என்று சந்திரமதியை அழைத்துக் கொண்டு வெளியேற முயன்றாள்.

கூடத்தில் நடப்பதைக் கதவோரமாக நின்று கேட்டுக் கொண்டிருந்த பக்கிரி திடுக்கிட்டான். சந்திரமதியை அழைத்துக் கொண்டு போகிறாளாமே இன்ஸ்பெக்டரும் அனுமதித்து விட்டால் – என்ன ஆவது? பக்கிரி வெளியே ஓடி வந்தான். இன்ஸ்பெக்டரை நோக்கி மிக மரியாதையுடன், "ஸார்! இதென்ன நியாயம்? கட்டிய கணவன் இருக்கும்போது என் அனுமதியில்லாமல் இந்த அம்மா – என் மனைவியை எப்படி அழைத்துச் செல்லலாம்?" என்று கேட்டான். குரலில் பதற்றம், கோபம் நிறைந்திருந்தன.

இன்ஸ்பெக்டர், நிலைக்கதவிற்கருகே நின்று, "ஏம்மா, இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குகிறாயே – அவ்வளவு சுலபமாக உங்க பெண்ணை அழைத்துப் போய்விடமுடியுமா?" என்று கூறி வழி மறித்தார்.

பார்வதி சீறினாள்: "ஆங் – என் பெண்ணை நான் அழைத்துப் போகாமல் வேறு யார் அழைத்துப் போவார்கள்? வழியை விடுங்கள்."

இப்போது பக்கிரி குறுக்கே ஓடிவந்தான்.

"உங்க பெண்ணாக இருக்கலாம் – இனி இவ என் மனைவி – தெரியுமா?" அழுத்தந்திருத்தமான குரல்.

"ஆ! மனைவியா? எப்படிடா அவ உன் மனைவியானா? எப்படா மனைவியானா? திருப்பதியிலே கல்யாணம் முடிக்க அழைத்துப் போனவளை, சொக்குப்பொடி போட்டுத் தூக்கி வந்துட்டே. உன் மேலே புகார் கொடுத்திருக்கோம் உன்னை ஜெயிலிலே தள்ளாம விடமாட்டேன்" என்று பார்வதி ஆக்ரோஷமாகப் பேசினாள்.

"எப்படி மனைவியானாள்? எப்ப மனைவியானாள்? இதோ இன்ஸ்பெக்டரைக் கேளுங்க" என்றான் பக்கிரி சற்று அமைதியாக –

இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டார்.

பார்வதி அவரைப் பார்த்தாள்.

"ஆமாம்மா – சந்திரமதி, பக்கிரியைக் கல்யாணம் செய்து கொண்டுவிட்டார். அதோ உங்க பெண் கழுத்தில் பாருங்க" என்று மெல்லிய சிரிப்புடன் கூறினார் இன்ஸ்பெக்டர்.

சந்திரமதி தன் கழுத்தில் ரவிக்கைக்குள் மறைந்திருந்த தாலியை வெளியே எடுத்துத் தாயின் கண்ணில் படும்படியாய்க் காட்டினாள்.

"எப்படி மனைவியானாள் என்று நீங்க கேட்டீங்களே, இங்க வாங்க" என்று பார்வதியை அறைக்குள் அழைத்துச் சென்றார். சந்திரமதியும் பக்கிரியும் அவரைத் தொடர்ந்தனர்.

பெரியார் படத்தைச் சுட்டிக் காட்டிய இன்ஸ்பெக்டர், "இதோ பெரியார் எதிரே இவர்கள் தாலி கட்டிக் கணவன் மனைவியானார்கள், போதுமா? சாட்சியாக நானும் இருந்தேன்" என்றார்.

பார்வதி சந்திரமதியையும் பக்கிரியையும் மாறி மாறிப் பார்த்தாள். இதுவரை கோபம், ஆத்திரம் ஆகியவற்றை வெகுவாக அடக்கி வைத்திருந்தாள். இப்போது ஏமாற்றமும் சேரவே அவை பெரும் அழுகையாக வெடித்தன.



பார்வதி குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதாள். குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

அதைப் பார்த்த சந்திரமதி அதிர்ச்சியடைந்தாள்.

"அம்மா, அம்மா! அழாதீங்க. என்ன நேர்ந்து விட்டது இப்ப? ஏன் இப்படி அழறீங்க?" என்று தேற்றினாள். தாயைக் கட்டிப்பிடித்துக் கண்ணீரைத் துடைத்தாள்.

"எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்கம்மா.." சந்திரமதி அவள் காலில் விழுந்து கும்பிட்டாள். பக்கிரிக்கும் சைகை செய்தாள். பக்கிரி மறு பேச்சுப் பேசாமல் விழுந்து கும்பிட்டான்.

விழிகளைத் துடைத்துக் கொண்டு, "இன்ஸ்பெக்டர்! என்னதான் உங்களுக்கு அதிகாரமிருந்தாலும் ஒரு மைனர் பெண்ணைக் கடத்திச் சென்று தாலி கட்டியவனை ஆதரிக்கிறீங்களே. என் புருஷனுக்குத் தெரிந்தால் சும்மா விட மாட்டார், தெரியுமா?" என்றாள்.

இன்ஸ்பெக்டர் பெரிதாகச் சிரித்து, "அம்மா! பக்கிரி என் நண்பர். நண்பர் என்பதைவிட அவரால் முன்னுக்கு வந்தவன் நான் என்று சொல்ல வேண்டும். அவருடைய காதல் வெற்றிபெற வேண்டும் என்ற ஆவல் எனக்குண்டு. அதற்காக சட்டத்தை மீறிய செயலில் ஈடுபடமாட்டேன். உங்கள் பெண் மைனரில்லை. மேஜர். அவள் கைப்படவே ஒரு கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறாள். பள்ளிக்கூட ஸர்டிபிகேட்டையும் பார்த்து விட்டேன். நடந்தது நடந்து விட்டது. மகள்மீது நீங்கள் அளவு கடந்த பாசத்தை வைத்திருக்கிறீர்கள். உங்கள் மகள் நல்வாழ்வு வாழ உதவுங்கள். தம்பதியை ஆசிர்வதியுங்கள்" என்றார்.

"என் கணவரும் நானும் என்னென்னவோ கனவு கண்டோம். நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து, நல்ல முறையில் எங்கள் அந்தஸ்துக்குக் குறைவில்லாமல் கல்யாணம் செய்து வைக்கத் திட்டமிட்டோம். இப்படி

நேர்ந்து விட்டதே. படிப்பில்லாத, சைக்கிள் கடைக்காரன் மீது இவள் ஆசைப்பட்டாளே" என்று சொல்லிக் கொண்டு வரும்போது, சந்திரமதி குறுக்கிட்டாள்.

"அம்மா! நான் விரும்பித்தான் இவரைக் கல்யாணம் செய்து கொண்டேன். படிப்பில்லாதவர் என்று இன்னொரு தடவை சொல்லாதிங்க. இவர் திறமை உங்களுக்குத் தெரியாது. என் கணவரின் திறமையை இன்ஸ்பெக்டர் தெரிந்து வைத்திருந்ததால் தான் அவர் மதித்தார். பங்களூரில் ஏற்படவிருந்த ஆபத்திலிருந்தும் தப்பினோம்.

"அடியாள்களை அனுப்பி, என்னை என் கணவரிடமிருந்து பிரித்துத் தூக்கி வருமாறு திட்டமிட்டீர்கள். பங்களூர் வீதியில் கத்தி, கட்டையுடன் நீங்கள் அனுப்பிய போக்கிரிகள் எங்களைத் துரத்தி வந்தார்கள். உயிர்பிழைக்க ஓடி, காவல் நிலையத்தில் தஞ்சம் புகுந்தோம். அங்கே இந்த இன்ஸ்பெக்டர் இல்லாதிருந்தால் எங்கள் கதி? அம்மா! எங்களை ஆசிர்வதித்து – எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். ஒன்றும் பேசாமல் மௌனமாக இருக்கிறீர்களே!

"நீங்கள் விரும்புவதுபோல இவர் எனக்குக் கட்டிய தாலியைக் கழற்றிக் கொடுத்து விட்டு நான் உங்களுடன் வந்துவிட முடியுமா? நியாயமா? தர்மமா? என்னதான் அப்பா திவிரசீர்திருத்தக்காரராயிருந்தாலும், தாலியைக் கழற்றிக் கொடுத்து வருவதை ஆதரிக்க மாட்டார். ஒப்புக் கொள்ள மாட்டார். எங்களை ஆசிர்வதியுங்கள்" என்று கூறி சந்திரமதி, தாயின் காலில் விழுந்து கும்பிட்டாள். மீண்டும் விழுந்து கும்பிட மனமில்லாமல் பக்கிரி கை கட்டியவாறு தலை வணங்கி நின்றான்.



## இருபத்தாறு

பார்வதி பெருமூச்சு விட்டாள். செல்லமாக வளர்த்த மகள், இப்படி அவமானப் படுத்திவிட்டாளே என்று வேதனைப்பட்டாள். புடைவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு குலுங்கக் குலுங்க விம்மினாள்.

"வருகிறேன் ஸார்!" என்று இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கூறிய போது, இன்ஸ்பெக்டருக்கே பரிதாபமாக இருந்தது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, குரல் தழுதழுக்க "வருகிறேன் ஸார்! பங்களூர் வந்து என் பெண்ணைப் பறிகொடுத்தேன். என் பெண்ணை என்னுடன் சேர்க்க வழி இல்லையா? பெரிய இடத்துச் சிபாரிசு எல்லாம் இருப்பதாக, என்னிடம் பணம் பறித்துச் சாப்பிட்டவர்கள் சொன்னார்கள்" என்று கேட்டபோது, இன்ஸ்பெக்டர் பார்வதியைச் சமாதானப் படுத்தும் வகையில், "அம்மா! என்மீது வருத்தப்பட்டுப் பயனில்லை. சட்டப்படி செய்து விட்டேன். சட்டத்துக்கும் மேல் பாச உணர்வு இருக்கிறது. எதற்கும் நானே ஒரு தடவை முயன்று பார்க்கிறேன்" என்று கூறினார்.

சந்திரமதியின் பக்கம் திரும்பி, 'மேடம்' என்று மரியாதையாக அழைத்தார். "உங்கள் தாயாரின் மனவருத்தத்தைக் கவனித்தீர்களா? பெற்ற தாய் மனம் நொந்து போயிருக்கிறார்கள். இப்போதுகூட எதுவும் தாமதமாகவில்லை. நீங்கள் விரும்பினால், அம்மாவுடன் செல்லலாம்" என்றார். கூடத்து அறையிலுள்ள பக்கிரிக்கும் காதில் விழும்படியாகச் சொன்னார்.

சந்திரமதி இன்ஸ்பெக்டரின் முகத்தை நேருக்கு நேர் பார்த்து, "நீங்கள் சொல்லும் உபதேசம் சட்டப் படியா,

அல்லது?.." என்று கேட்டாள். இன்ஸ்பெக்டர் குட்டையைக் குழப்ப முயல்கிறார் என்று அவளுக்குத் தோன்றியது.

இன்ஸ்பெக்டர் மெல்லிய சிரிப்புடன், "கோபிக்காதீர்கள். என் வேலை முடிந்து விட்டது. இருந்தாலும், உங்கள் தாயாரின் சோகம் என்னை அப்படிப் பேச வைத்தது. எனக்கென்ன? உங்கள் பாடு. உங்கள் தாயார் பாடு" என்றார்.

பார்வதிக்கு மீண்டும் கோபம் வந்தது. இன்ஸ்பெக்டரைப் பார்த்து ஆக்ரோஷத்துடன், "அது சரி ஸார், என் பெண்ணை இந்த ஆண் கடைசி வரையில் கண் கலங்காமல் காப்பாத்துவானா? வேலை வெட்டி எதுவும் இல்லாத பயலை நம்பி இவள் போகிறாளே? நாளைக்கு இவன் அடித்துத் துரத்தினால் என்ன செய்வாள்?" என்றாள்.

சந்திரமதி, இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "ஸார்! இவங்கள அடக்கிப் பேசச் சொல்லுங்க. வெட்டிப் பயன்னு கேவலமா பேசச் சொல்லாதிங்க. கஷ்டமோ, நஷ்டமோ நாங்க பார்த்துக்கறோம். இவங்கள இந்த இடத்தை விட்டுப் போகச் சொல்லுங்க" என்று கையை நீட்டி நீட்டிப் பேசினாள்.

இன்ஸ்பெக்டர் முகத்தில் கடுமை ஏற்பட்டது. அவர் பக்கிரியைப் பார்த்து, "ஸார்! இப்படி வெளியே வந்து. உங்க மாமியார் கேட்பதற்குப் பதில் சொல்லுங்க" என்றார்.

"மாமியாரா? நானா? அந்த அந்தஸ்து இந்த ஆளுக்கு ஏன் கொடுக்கணும் இனி நான் யாரோ இவன் யாரோ" என்று கூறிவிட்டு பார்வதி வெளியே செல்ல முற்பட்டாள்.

வாயிற்படியருகே ஒரு கணம் நின்று, "இப்ப நான் சொல்றேன். இவன் உன்னைக் கைவிட - கதறக் கதற அழ நீ என் வீட்டுக் கதவைத் தட்டலைன்னா - என் பெயர் பார்வதி இல்லை" என்றாள்.

"பார்வதி இல்லை - இப்பவே மாத்திக்கலாம்" இப்படிப் பேச சந்திரமதிக்கு எப்படித் துணிவு வந்ததோ?



'காதல்' என்ற மூன்றெழுத்து 'பாசம்' என்ற மூன்றெழுத்தையும் வென்று விட்டது. அதற்கென்ன அவ்வளவு சக்தி!

பார்வதி அம்மாள் போன பிறகு சந்திரமதி, பக்கிரி, இன்ஸ்பெக்டர் மூவரும் சிறிது நேரம் மௌனமாக ஒன்றுமே நடக்காததுபோல் நின்றனர்.

பக்கிரி பேசினான்: "ஸார்! இனியும் இங்கே நாங்கள் இருக்க விரும்பவில்லை. ஒரே ஓர் உதவி மட்டும் செய்யுங்க. சந்திரமதியின் தோழி இந்த ஊரில் எங்கே இருக்கிறாள்? அவள் முகவரியைத் தேடிக் காட்டுமாறு ஒரு காவலரை அனுப்புங்கள். நாங்கள் புறப்படுகிறோம். நீங்கள் செய்த உதவியை வாழ்நாளில் மறக்க மாட்டோம். காவலர் உள்ளத்திலும் நியாயம், கருணை இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டேன். உறுதியாக நான் சொல்கிறேன். சந்திரமதிக்கு எந்தக் குறையும் வராமல் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றுவேன். நன்றாக வாழ்வோம். அப்போது எங்கிருந்தாலும் கடிதம் எழுதுகிறோம். எங்கள் வீட்டிற்கு வந்து விருந்து சாப்பிட்டு விட்டுப் போக வேண்டும்" என்றான்.

பக்கிரியின் இந்தப் பேச்சு இன்ஸ்பெக்டருக்குப் புது நம்பிக்கையை அளித்தது.

"எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உங்களுக்கு இருக்கும் அறிவும் ஆற்றலும் துணையாக இருக்கும். ஆனால், இலக்கியப் பேச்சு மட்டும் சோறு போட்டு விடாது. ஏதாவதொரு வேலை தேடிக்கொள்ள வேண்டும். இப்போது எங்கே போகப் போகிறீர்கள்?" என்று கேட்டு, சந்திரமதியின் தோழியின் வீட்டு முகவரியை வாங்கிப் பார்த்தார்.

அவர் முகத்தைச் சுளித்துக் கொண்டதைச் சந்திரமதி கவனித்தாள். பிறகு, சந்திரமதியைப் பார்த்து, "ஒரு காவலரை அனுப்பி இந்த முகவரியில் உள்ளவர்கள்

இருக்கிறார்களா என்று பார்த்து வரச் சொல்கிறேன். பிறகு, ஜீப்பில் அங்கேகொண்டு விடச்செய்கிறேன். அதுவரையில் இங்கேயே இருங்கள். நான் ஸ்டேஷன் வரையில் போய் வருகிறேன்" என்றார்.

இன்ஸ்பெக்டர் காவல் நிலையம் சென்றிருக்கும்போது முகவரி விசாரிக்கச் சென்ற காவலர் திரும்பி வந்தார். அரைகுறைத் தமிழில், "முகவரியில் உள்ளவர்கள் வீட்டைக் காலி செய்து விட்டுப் போய்விட்டார்கள்" என்றார். பிறகு, "அந்த ஏரியா மோசமான ஏரியா. அங்கே உங்களுக்குச் சிநேகிதி இருக்கிறார்கள் என்ற போதே சந்தேகப்பட்டேன். அங்கே குடித்தனம் செய்பவர்கள் தொடர்ந்து அங்கே இருக்க மாட்டார்கள். நீங்க சொன்னவங்க ஒரு வாரம் முன்னே காலி செய்துட்டுப் போயிட்டார்களாம்" என்றார்.

சந்திரமதியும் - பக்கிரியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

"ஐயோ - அவ அப்படிப்பட்டவ இல்லை. போன மாசம்கூட என்னைப் பார்த்தாளே. கல்யாணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்துவதாகச் சொன்னாள். சந்தோஷமாகக் குடும்பம் நடத்துவதாகப் பெருமையுடன் சொன்னாளே. இந்தக் காவலர் தவறான ஏதாவது முகவரிக்குப் போய் வந்திருப்பார்" என்றாள்.

காவலர் சிரித்தார். "அம்மா! நீங்க சொன்ன தெரு சிவப்பு விளக்குத் தெருன்னு சொல்லலாம். 'பலான' விஷயங்கள் நடக்கும் தெரு. எனக்குத் தெரியாதா? உங்க புருஷனை வேணுமானா அனுப்புங்க. கூட்டிப் போய் தெரியப்படுத்தி வருகிறேன்" என்றார்.

பக்கிரியும் - சந்திரமதியும் மௌனமாக இருந்தனர். அடுத்து என்ன செய்வது என்பதைப் பற்றி அவர்கள் சிந்தித்தார்கள். சந்திரமதி தன் கைப் பையைத் திறந்து எவ்வளவு பணம் இருக்கிறது என்று பார்த்தாள். பக்கிரியிடம்



முன்யோசனையாக மேகலா ரூபாய் கொடுத்திருந்தாள். சந்திரமதி கொடுத்ததுதான்.

"அத்தான்! உங்களை என்ன பெயர் சொல்லி அழைப்பது என்று யோசித்தேன். அத்தான் அத்தான் என்று நாடக பாணியில் அழைப்பது எனக்குப் பிடிக்கவில்லை என்று அவள் சொன்னபோது, "அதுவா? என்னை நீ 'அன்பே' என்று கூப்பிடலாம். 'நாதா' என்று அழைக்கலாம். ஆங்கில முறைப்படி 'டியர்' என்று சொல்லலாம். இனி தமிழ், ஆங்கிலம் என்று பார்த்தால் வாழ முடியாது" என்று கூறி பக்கிரி சிரித்தான். வேதனையிலும் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"ஆ! கண்டுபிடித்துவிட்டேன். 'தமிழ் - தமிழ்' - இனி உங்களைத் 'தமிழ்' என்று அழைக்கப் போகிறேன். என் இனிய தமிழே, ஆருயிர்த் தமிழே, அன்புத் தமிழே - என்று இப்போது ஆசை தீரச் சொல்கிறேன். பிறகு, அந்த அடைமொழியெல்லாம் சொல்லி அழைக்க முடியாது" என்று கூறி அவளும் சிரித்துவிட்டு,

"தமிழ்! நம்மிடம் உள்ள பணத்துக்கு வரவு செலவு கணக்குப் போடுவோம். பிறகு, இங்கிருந்து புறப்பட்டு விடுவோம். இனியும் இங்கே தங்கியிருப்பது மரியாதையாக இராது!" என்றாள்.

இருட்டினால் கூட பங்களூர் அழகாகத்தான் இருக்கிறது. இன்ஸ்பெக்டர் வருவார் என்று எதிர்பார்த்து, கூடத்துச் சோபாவிலேயே இருவரும் உட்கார்ந்திருந்தனர்.

ஒரு கப் டீ சாப்பிட வேண்டும் போலிருந்தது. நினைத்த உடனேயே சமையல்காரன் ஒரு தட்டில் இரண்டு கோப்பை தேநீரைக் கொண்டு வந்து கொடுத்தான். அவன் மலையாளத்தில் பேசினான். இரவுச் சாப்பாட்டுக்கு பூரி வேண்டுமா சப்பாத்தி வேண்டுமா என்று கேட்டான். இவன் கேட்டதிலிருந்து இரவு அங்குதான் தங்க வேண்டியிருக்கும் என்பது புரிந்தது.

"இரண்டுமே எங்களுக்குப் பிடிக்காது; தோசை இட்லி இப்படி ஏதாவது சாப்பிட்டுப் பழக்கம்" என்று சந்திரமதி அவனிடம் சொல்லும் போது, பக்கிரிக்குக் கூச்சமாக இருந்தது. 'இந்தப் பெண்ணிற்கு இவ்வளவு துணிச்சல் எப்படி வந்தது. இவளுடைய முழுக் குணத்தையும் நாம் புரிந்து கொள்ளவில்லை. ஒன்றும் தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல் ஏற்படும் காதல் நிலைக்குமா?' அவனுக்கு ஒரு மூலையில் கவலை ஏற்பட்டது.

மலையாளச் சமையல்காரன் சிரித்தான். "நாளைக் காலையில் தோசை போடறேன். இன்னி இரவுக்கு உடனே இட்லி தோசை செய்ய முடியாது" என்றான்.

"பரவாயில்லை, நீ என்ன கொடுக்கிறாயோ அதைச் சாப்பிடுகிறோம்" என்று அவனுக்குச் சமாதானமாகச் சொன்னாள்.

மணி ஏழு - எட்டு என்று ஓடிக்கொண்டிருந்தது. "உங்கள் நண்பர் இன்ஸ்பெக்டர் ஏன் இன்னும் வர வில்லை? இன்று இரவு இங்குதான் தங்கணுமா?" என்று சந்திரமதி கவலையுடன் கேட்டாள்.

பிறகு அவளே சொன்னாள்: "இன்னிக்காவது நிம்மதியாத் தூங்கலாம். இல்லாவிட்டால் எங்காவது ரயிலிலோ, பஸ்ஸிலோ கூட்ட நெரிசலில் தூக்கமில்லாமல் கழிக்க வேண்டியிருக்கும்."

பக்கிரி பெருமூச்சு விட்டான்.

"தமிழ்! என்ன பெருமூச்சு விடுகிறீர்கள்? கவலை வந்துவிட்டதா?" என்று கூறி, அவன் விழிகளைப் பார்த்தாள்.

"கவலையா?- கவலை என்று சொல்லமுடியாது. சரியான திட்டமில்லாமல் நாம் சென்னையிலிருந்து புறப்பட்டு விட்டோமோ என்று நினைக்கிறேன்."



"இதற்கெல்லாம் திட்டமிட முடியுமா? என் பெற்றோரிடம் சென்று, 'நாங்களிருவரும் பங்களூர் போகப் போகிறோம்' என்று சொல்லியிருக்க முடியுமா? அப்படிச் சொல்லியிருந்தால், உடனே என் அம்மா, 'ஆகா. போய் வாருங்கள். என் செல்வமே! ஒரு நல்ல வேலையாகப் பார்த்துக் கொள்ளுமாறு மாப்பிள்ளையிடம் சொல்லு?" - என்றா ஆசிர்வாதம் செய்திருப்பாள்?" என்று சந்திரமதி சிரிக்காமல் சொன்னபோது பக்கிரி பலமாகச் சிரித்ததுடன், "உனக்குள்ள நகைச்சுவை உணர்வைப் பாராட்டுகிறேன்" என்றான்.

"நகை உணர்வு இல்லாததைப் பாராட்டக் கூடாதா? சரி, கையிலுள்ள ரூபாயைக் கணக்கிட்டீர்கள். எவ்வளவு நாளைக்கு வரும்? எந்த ஊருக்குப் போகிறோம்? அங்கே என்ன செய்யப் போகிறோம் என்பதை முடிவு செய்ய வேண்டாமா? கையிலுள்ள ரூபாயைத் தவிர, ஒரு சங்கிலி தோடு, வளையல் இருக்கின்றன. தேவைப்பட்டால் இந்த மாங்கல்யச் சரடும் இருக்கிறது. ஊருக்குப் பத்து மார்வாடிகள் இருக்கிறார்கள். சமாளித்துக் கொள்ளலாம்" என்றாள்.

அப்போது, தொலைபேசி மணி ஒலித்தது. வாயிலில் நின்றிருந்த காவலன் வேகமாக வந்து எடுத்தான் 'எஸ் ஸார், எஸ் ஸார்' என்று மட்டுமே அவன் பதில் சொன்னான். மறுபக்கம் யார் பேசுகிறார்கள்; என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிவிக்காமலே பேசினான். நடுவே பக்கிரியையும், சந்திரமதியையும் திரும்பிப் பார்த்தான். அந்தப் பேச்சு தங்களைப் பற்றியது என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.

காவலன் அவர்கள் அருகே வந்தான். "ஐயா! மிக அவசரமாக மைசூர் போய்விட்டார். இரவு சாப்பிட்டுவிட்டு சேலத்திற்குப் போகுமாறு சொன்னார். அங்கே ஒரு நண்பருக்கு அவர் கடிதம் கொடுத்திருக்கிறார். அது வருகிறது" என்றார்.

சிறிது நேரத்தில் அவர் கொடுத்தனுப்பிய கடிதம் வந்தது. சேலத்திலுள்ள நண்பருக்குக் கடிதம். உடனே ஒருவேலை பார்த்துத் தருமாறும் தங்குவதற்கு ஓரிடம் உடனே ஏற்பாடு செய்து தருமாறும் எழுதப்பட்டிருந்தது.

அன்றிரவே சந்திரமதியும் – பக்கிரியும் சேலத்திற்குச் செல்லும் பேருந்தில் பயணமானார்கள்.

## இருபத்தேழு

சேலம் – பெரிய நகரமாகிக் கொண்டு வருவதைப் பக்கிரி அறிந்திருக்கவில்லை. சிறிய ஊராக இருக்கும் என்ற எண்ணத்தில் பேருந்து நிலையத்தில் இறங்கியவுடனேயே, களைப்புத் திர டீ சாப்பிட அருகே இருந்த தேநீர்க் கடைக்குப் பக்கிரி சென்றான். பார்க்கச் சிறிதாக இருந்தாலும், வியாபாரம் அங்கே அதிகமாயிருந்தது. சந்திரமதியும் பின்தொடர்ந்தாள். பங்களூரிலிருந்து பேருந்திலேயே அவ்வளவு தொலைவு பயணம் செய்த களைப்பு அவள் உடல் முழுவதும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. எங்காவது லாட்ஜில் ஒய்வெடுத்துக் கொண்டு, குளித்து வேறு உடை அணிந்து, இன்ஸ்பெக்டர் குறிப்பிட்ட முகவரியிலுள்ள நண்பரைக் காணச் செல்வோம் என்று சந்திரமதி கருத்தைத் தெரிவித்தாள்.

“எனக்கும் அதே எண்ணம்தான். என்றாலும் நாம் சந்திக்க வேண்டிய நண்பரின் முகவரியைத் தெரிந்து கொண்டு, அந்த இடத்திற்கு அருகேயே ஒரு விடுதியில் தங்குவோம். இந்தச் சிறிய தேநீர்க் கடைக்காரர் சரியான வழி சொல்வார்” என்றான் பக்கிரி.



தேநீர்க் கடையில் இரண்டு தேநீருக்குச் சொல்லிவிட்டு, அங்கே போடப்பட்டிருந்த மரப் பெஞ்சில் அமர்ந்தான். பேர்தான் ‘பெஞ்ச்’. ஒருபுறம் ஆடிக் கொண்டிருந்தது. அழுக்கேறியிருந்தது. சந்திரமதி உட்காரவில்லை. அங்குள்ள சூழ்நிலை அவளுக்குப் பிடிக்கவில்லை. டீ அடிப்பவன், மேஜை துடைக்கும் பையன், டீயை உறிஞ்சுபவர், சிகரெட்டை சுவாரஸ்யமாக ஊதியவாறிருப்பவர் ஆகியோரின் விழிகள் எல்லாம் சந்திரமதியையே மொய்த்துக் கொண்டிருந்தன; வட்டமிட்டன.

இன்ஸ்பெக்டர் கொடுத்த முகவரியைக் காட்டி தேநீர்க் கடைக்காரரை விசாரித்தான் பக்கிரி.

தேநீர்க் கடை முதலாளி பரபரப்பாக டீ அடித்துக் கொண்டும், ‘சாய் – ஸ்ட்ராங்கா’ என்று குரல் கொடுத்துக் கொண்டும் இருந்தார். அவர் மலையாளி. பக்கிரி நீட்டிய முகவரிக் குறிப்பைப் பார்க்காமலேயே அருகிலிருந்தவரைப் பார்த்து, “சேட்! அதைப் பார்த்து வழி சொல்லு” என்றார்.

சேட்டு என்பவன், மார்வாடி குஜராத்தி அல்லன். மஞ்சளும் பழுப்பும் கலந்த மேனி. நெற்றியில் வந்து குதிக்கும் உரோமக்கற்றை, கழுத்தில் மைனர் சங்கிலி போட்டுக் கொண்டு, இரவெல்லாம் போதையில் இருந்ததால் சிவந்த விழிகளுடன் காட்சியளித்தான். கூட்டமான நேரங்களில் அங்குதான் இருப்பான்.

சந்திரமதியைப் பார்த்துக் கொண்டே பக்கிரியிடமிருந்த குறிப்பை வாங்கி, “ஊருக்குப் புதுசுங்களா?” என்று நமுட்டுச் சிரிப்புடன் கேட்டான் சேட்.

“ஊருக்குப் புதிசு என்பதால் தானே சேட் உன்னிடம் அவரு வழி கேட்கிறாரு? புச்சா கண்டுபிடிச்ச மாதிரி கேக்கறியே?” என்று டீக்கடை நாயர், நகைச்சுவைத் துணுக்கு ஒன்றைச் சொல்லியது போல் தாமே சிரித்துக் கொண்டார்.

தன்னைப் பல விழிகள் புசிக்கப் பார்க்கின்றன என்பதை அறிந்த சந்திரமதி, வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள். திரும்பிய பக்கத்திலிருந்து, "தமிழ்! சீக்கிரம் டீ சாப்பிட்டு விட்டு வாங்க. எனக்கு வழி தெரியும் போகலாம்" என்றாள்.

"உனக்குத் தேநீர் வேண்டாமா?" என்று பக்கிரி கேட்டுவிட்டு, "நாங்கள் பங்களூரிலிருந்து வருகிறோம். பங்களூர் காவல்துறைக் கண்காணிப்பாளர் இந்த முகவரியிலுள்ளவருக்கு ஒரு கடிதம் தந்திருக்கிறார். சேலம் ஏதோ சிறிய ஊர் என்று நினைத்துவிட்டேன். சேலத்தில் பல பகுதிகள் உண்டென இப்போதுதான் அறிந்தேன்" என்று பேசிக்கொண்டே போனபோது சேட் அருகே இருந்த மற்றொருவன் டீ கிளாஸைப் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் சேட்டிடமிருந்து அந்த முகவரிக் குறிப்பைப் பறித்தான்.

"டேய் சுகவனம்! வேணாம். என் வழியில் குறுக்கிடாதே. எனக்குப் படிக்கத் தெரியாதுன்னு நினைச்சுட்டியா?" என்று அவன் பறித்ததை மீண்டும் சேட் பறித்தான்.

பக்கிரி பதறிப்போய், "ஐயா! உங்கள் பிணக்கினால் அந்தக் குறிப்புக் காகிதம் கிழிந்து விடப்போகிறது" என்று அதைத் திரும்பப் பெறக் கையை நீட்டினான். அவன் கை சுகவனம் டீ கிளாஸின் மீது பட்டதால், டீ சிதறியது. பக்கிரியின் சொக்காய் வேட்டியில் தேநீர் அபிஷேகம்.

"அடடா! - டீ கொட்டிப் போச்சு. பரவாயில்லை. நாயருக்கு நான் காசு தந்துவிடுகிறேன். உங்க வேட்டி பாழாயிடுச்சே?" என்று சுகவனம் பதறினான். பரிதாபப்படுபவன் போல் நடித்தான். பிறகு சந்திரமதியைப் பார்த்து, "இப்படி குந்தம்மா" என்று சொல்லி பக்கிரியைப் பார்த்து "பாப்பா கூச்சப்படுது" என்று காவிப்பல் தெரியச் சிரித்தான்.



"அட்ரஸ் சொல்லத் தெரியல்லே - பேச்சைப் பாரு பேச்சை" சேட் சிரித்தான்.

"இந்தக் காகிதத்தைச் சுக்கு நூறாய்க் கிழிச்சால்கூட பரவாயில்லை. சுவர்ணபுரி இருபதாவது தெரு மூன்றாம் நம்பரு - நம்ம தலைவரு வீடு. ராவுலே எழுப்பிக் கேட்டாக்கூடச் சொல்லுவேன். காகித்தைக் கிழிச்சுப் போட்டுட்டுப் பார்க்காமச் சொல்வேன்" என்று கூறி அந்தச் சிறு குறிப்புக் காகிதத்தைக் கசக்கினான்.

கசக்கிய காகிதத்தைப் பக்கிரி குனிந்து எடுத்தான். "சகோதரர்களே! உங்களுக்கே நன்றாக இருக்கிறதா? சேலம் பண்பு நிறைந்த ஊர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். முதல் வரவேற்பே இப்படி இருக்கிறதே. சே! சே! 'நம்ப தலைவரு வீடுன்னு சொல்கிறீர்கள்' அந்த இடம் எங்கே இருக்கிறது? உங்களைப் பார்த்தாலே உங்கள் தலைவரின் இலட்சணம் தெரிகிறது" என்று சந்திரமதி 'படபட'வென்று பேசினாள்.

அங்கிருந்தவர்கள், ஒரு கணம் திடுக்கிட்டார்கள். பேச்சை இனி அதிகம் வளர்த்தக் கூடாதென்று, "ஸாரிம்மா! சுவர்ணபுரி இங்கிருந்து பத்து கி.மீ. இருக்கும். பஸ்ஸில் போகலாம். ஆட்டோவில போகலாம்" என்றான் சுகவனம். "வேண்டுமானால் ஒரு டாக்சி ஏற்பாடு செய்து தருகிறேன்" என்று ஜோக் அடித்துத் தன் குணம் எப்போதும் மாறாது என்பதை சேட் புலப்படுத்தினான்.

"சேட் சொன்னா ஹெலிகாப்டரே வரவழைச்சுடுவாரு" என்று சொல்லி, 'புடைவையைக் கட்டிக் கொண்டு பளிச்சுன்னு' ஒருத்தரும் சேட் கண்ணிலே படக்கூடாதே?" என்று சேட் காதில் மட்டும் படும்படி சுகவனம் கிண்டலாகச் சொன்னான்.

"டேய், என்ன சொன்னே?" என்ற சேட் டீ கிளாஸை வீசிவிட்டுத் துள்ளி எழுவதற்குள், சந்திரமதி பக்கிரியைப் பிடித்துப் பரபரவெனத் தள்ளியவாறு நகர்ந்தாள்.

"சுவர்ணபுரி – பத்து கி.மீதானாம். இடம் புரிந்து விட்டது. ஆட்டோ ஒன்றைப் பிடித்துக் கொள்வோம். ஆட்டோ ஓட்டுநரிடம் முதலில் நல்ல தங்கும் விடுதிக்கு அழைத்துச் செல்லச் செல்வோம் வாருங்கள்" என்றாள் சந்திரமதி பரபரப்புடன்.

"தேநீருக்குச் சொல்லியிருக்கேனே?" என்று பக்கிரி கேட்கவும் –

"சேலத்தில் இது ஒன்றுதானா தேநீர்க் கடை? வாருங்கள். சற்றுச் சுறுசுறுப்பாக இயங்குங்கள். இன்னும் கொஞ்ச நேரம் இங்கு இருந்தால் என்னை முழுசாக விழுங்கி விடுவார்கள்" என்றாள் சந்திரமதி சற்று எரிச்சலுடன்.

"தமிழ்நாட்டு இளைஞர்களின் பண்பைப் பார்த்தாயா? ஓர் அழகிய பெண்ணுக்கு மதிப்புத் தருவதைப் பார்த்தாயா?" என்று கூறிக்கொண்டே பக்கிரி நகர முற்பட்டான். அங்கிருந்தால் கை கலப்பு ஏற்பட்டு விடலாம்.

ஆட்டோ ஓட்டுநர், சேலம் நகரத்தைப் பற்றிக் கதைகதையாகச் சொல்லி வந்தான். சில சேலம் லாட்ஜ்களில் நடைபெறும் அக்கிரமத்தை விமர்சித்தான். பிறகு திரும்பி அவர்களைப் பார்த்து, "ஏங்க நான் கேட்கிறேனென்று கோபிக்கக் கூடாது. நீங்க எந்த ஊருங்க? வீட்டிலே சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டீர்களா?" என்றான்.

"ஏன் எங்களைப் பார்த்தால் அப்படி எதுவும் தெரிகிறதா?" சந்திரமதிதான் துணிவுடன் கேட்டாள்.

"புதுசா, இப்பத்தான் கல்யாணமானவங்கன்னு தெரியுது. மாற்றுடை – துணிமணி – பெட்டி – சிறிய பைகூட எடுத்துக் கொள்ளமல் ஹனிமூனுக்குக் கிளம்பிட்டீங்களா?" – ஓட்டுநர், திரும்பிப் பார்க்காமலேயே வண்டியிலுள்ள கண்ணாடி வழியே அவர்கள் முகபாவத்தைக் கவனித்தான்.

சந்திரமதி பக்கிரியின் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். 'என்ன பதில் சொல்வது?' என்று இருவருமே யோசித்தனர்.



"சரிங்க – சாரிங்க. சொல்ல வேண்டாம்னா சொல்ல வேண்டாம். தினமும் பல கேசுகளை இதைப் போலப் பார்க்கிறேன். ஊம், உங்க நன்மைக்குத்தான் சொன்னேன். பெட்டி படுக்கை லக்கேஜ் இல்லாம இளம் பெண் – ஆணுக்கு லாட்ஜிலே இடம் தரமாட்டாங்க!" என்றான்.

"ஏன்" – இதைக் கேட்டது சந்திரமதியா பக்கிரியா? – ஓட்டுநர் திரும்பிப் பார்த்தான்.

"லக்கேஜுடன் வந்தா குடும்பம் நடத்தறவங்க, தப்புத் தண்டா செய்ய மாட்டாங்கன்னு ஒரு கருத்து."

"லக்கேஜுடன் வந்து தப்புத் தண்டா செய்தால்?"

ஆட்டோ ஓட்டுநர் ஏதோ பெரிய உண்மை ஒன்றைக் கண்டுவிட்டதுபோல் சிரித்தார்.

"அதுவும் சரிதாங்க" என்றார்.

"எங்களைப் பார்த்தா எப்படித் தெரியுது?" சந்திரமதி கேட்டாள்.

"ஏங்க, இளம் பருவத்திலே, தப்புத் தண்டா பண்ணினா என்னங்க தவறு? ரொம்ப களைப்பா வர்றீங்க போலிருக்கு. எதுக்கும் முயற்சி செய்றேங்க" என்று கூறி ஒரு விடுதியின் வாசலில் ஆட்டோவை நிறுத்தி உள்ளே சென்று தோல்வியுடன் திரும்பினான்.

"இங்கே இடமில்லைங்க. அப்படி இடமிருந்தால் ஒருநாள் வாடகை என்ன தெரியுமா?"

"தெரியாது.

"நானூறு ரூபா."

"நானூறா?" சந்திரமதி திடுக்கிட்டுக் கேட்டாள்.

"சரிங்க – சேலத்துலே எல்லாம் காஸ்ட்லிங்க. நானூறு ரூபா கொடுத்து ரூம் போடறாங்க. அதனாலே எல்லாமே காஸ்ட்லி. 'பலான' சமாசாரத்துக்கு அதிகம் ரேட் கேக்கறதிலே என்ன தவறு?"

27897
4289006

சந்திரமதிக்குப் பாதி புரிந்தது. பாதி புரியவில்லை. ஆக மொத்தம், ஆட்டோ ஓட்டுநர் தங்கள் இருவரையும், 'ஒருமாதிரியான கேஸ்' என்று முடிவு செய்துவிட்டான். அட கடவுளே! வாழ்க்கையின் தொடக்கமே இப்படித் திடுக்கிடும் அத்தியாயங்களா?

"உங்க ஊரு எதுங்க? நீங்க ஏதோ அட்ரசு கேட்டீங்களே?" என்று ஓட்டுநர் கேட்டான்.

"அண்ணா! எங்களுக்கு லாட்ஜும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். நாங்க பெரிய குடும்பத்துக்காரங்க. பங்களூர் இன்ஸ்பெக்டர் ஒரு முகவரி கொடுத்து அங்கே போகச் சொன்னார். சுவர்ணபுரி தலைவர் வீடாம். அவர் வீட்டுக்குப் போகும் முன்பு குளித்துப் புத்துணர்வோடு போகலாம் என எண்ணினோம்" சந்திரமதி பேசினாள்.

"சுவர்ணபுரி தலைவர் வீடா? இதை நீங்க முதல்லேயே சொல்லியிருக்கக் கூடாதா? எதுக்குங்க, லாட்ஜ், ஓட்டல்னு அலையணும்? தலைவருக்குப் பெரிய கெஸ்ட் ஹவுஸ் இருக்குங்க. அங்கேயே போகலாம்" என்று உற்சாகமாய்ப் பேசினான்.

'சுவர்ணபுரி தலைவர்' - என்று சொன்னவுடன் எல்லாரும் புரிந்து கொள்கிறார்கள். நல்ல மரியாதை கொடுக்கிறார்கள்.

"தம்பி! சுவர்ணபுரியில் தலைவர்னா எல்லாருக்கும் தெரியுமா?" பக்கிரி கேட்டான்.

ஓட்டுநர் பெரிதாகச் சிரித்தார்.

"சுவர்ணபுரி தலைவரைப் பற்றி ஊர் உலகம் அதிகமாய்ப் புகழும். பெரிய அறிஞர், தொழில் அதிபர். சிறந்த பேச்சாளர். இந்தத் தடவை எம்.பி. பதவிக்கு நிற்கப் போகிறார். அவங்களுக்குச் சிபாரிசுக் கடிதம் கொடுத்திருக்காங்கன்னா பெரிய விஷயம்தான்!" என்றார் ஆட்டோ ஓட்டுநர்.



# இருபத்தெட்டு

ஆட்டோ ஓட்டுநர், பக்கிரியையும், சந்திரமதியையும் தலைவர் வீட்டிற்குள்ளே அழைத்துச் சென்று, தானே அறிமுகப்படுத்த விரும்பினான். அந்த வாய்ப்பைக் கொண்டு தலைவருடன் சிறிது நேரம் பேசலாம் என்று நினைத்தான். அன்று தலைவர் பங்களாவின் வெளியே கூட்டமில்லாதது வியப்பாயிருந்தது.

வாசலில் நிற்கும் காவலாளியைக் கேட்டான். காவலாளி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "அதுவா? - அது ஒரு வேடிக்கை. இன்று தலைவர் மும்பைக்கும் போயிருக்க வேண்டியவர். கோயம்புத்தூருக்குக் காரில் போய், அங்கிருந்து பிளேனில் மும்பை போவதாக முடிவு. காலையிலேயே புறப்பட்டு விட்டார். தலைவர் ஊரிலில்லை என்றால் இங்கே ஈ காக்கா கூட வராது. ஆனால் எட்டு மணிக்கே தலைவர் திரும்பி வந்து விட்டார். காரில் ஈரோடு போகும் போதுதான் தலைவருக்கு ஏதோ நினைவு வந்திருக்கு. உடனே காரைத் திருப்புன்னுட்டார். தலைவர் வந்தது யாருக்கும் தெரியாது. தலைவருடைய அக்காவும், தம்பி ஊருக்குப் போயிருக்கிற சமயத்திலே, கிராமத்துக்குப் போய் வருவோம்னு ஊருக்குப் போயிருக்காங்க" என்று ஒரு மூச்சு பாடத்தை ஒப்பிப்பது போல் பேசினான்.

ஆட்டோ ஓட்டுநருக்கு அந்த வீட்டில் நல்ல செல்வாக்கு என்பதை,பக்கிரி உணர்ந்தான்.

"பாப்பாவும் நல்ல அதிர்ஷ்டசாலிங்க. எந்தவிதத் தொந்தரவுமில்லாம தலைவரைச் சந்திச்சுப் பேசலாம்" என்றான். அவன் பாப்பா என்று குறிப்பிட்டது சந்திரமதியை!

பக்கிரியையும் சந்திரமதியையும் அறிமுகப்படுத்திவிட்டு, ஆட்டோ ஓட்டுநர் சென்று விட்டான்.

தலைவர், தலைவர் என்று உரிமையுடனும் பெருமையுடனும் அனைவராலும் அழைக்கப்படும் புலவரேறு, செந்தமிழ் மணி, டாக்டர் தமிழ்வேந்தன் தன் தங்க மூக்குக் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டே, பக்கிரியையும் சந்திரமதியையும் உற்றுப் பார்த்து அளவெடுத்து, தலையை அசைத்து உட்காரச் சைகை செய்தார்.

பக்கிரியும் சந்திரமதியும் அதுவரை உட்காராமல் நின்றுகொண்டே இருந்தனர். பங்களூரில் காவல் துறைக் கண்காணிப்பாளரின் அறிமுகக் கடிதத்தை பக்கிரி, தமிழ்வேந்தனிடம் கொடுத்தான்.

மிகவும் அலட்சியமாக இடக்கையால் கடிதத்தை வாங்கிப் படித்தவரின் முகத்தில் மாறுதல் ஏற்பட்டது. நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"அடடா, நிற்கிறீர்களே உட்காருங்கள். உட்காருங்கள். உங்கள் பெயர் பக்கிரியா? – இவங்க உங்க மனைவியா? உட்காருங்க உட்காருங்க" என்று வார்த்தைக்கு வார்த்தை மரியாதைச் சொற்களை அள்ளி வீசினார்.

"உங்க பெயர் பக்கிரியா?" என்று மெல்லச் சிரித்துவிட்டு, "வேறு ஏதாவது சிறப்புப் பெயரிருக்குமே?" தமிழ்வேந்தன் கேட்டார். உடனே மேலும் தொடர்ந்தார்,

"பாருங்க, எனக்கு அப்பா சூட்டிய பெயர் சுகவனேச்வரன். இந்த ஊர்க்காரர்களுக்கு அந்தப் பெயர் பழக்கப்பட்ட பெயர். ஆனால் கல்லூரியில் படிக்கும்போதே தமிழ்வேந்தன் என்று நண்பர்கள் பெயர் சூட்டிவிட்டனர். தமிழ்த் தொண்டன் நான். தேவையில்லாமல் வேந்தன் என்று பெயரிட்டது எனக்குப் பிடிக்கவில்லை என்றாலும், அன்புக்கு அடிமையாகாமலிருக்க முடியுமா? தமிழ்வேந்தன்



என்ற பெயரே நிலைத்து விட்டது. இதெல்லாம் நாடறிந்த உண்மை. உங்களுக்குத் தெரியாது என்பதால் சொல்கிறேன். சுயபுராணம் படிப்பதாக நினைக்காதிர்கள். அடடா – பேசிக்கொண்டே இருக்கிறேனே, உங்களைப் பற்றி, இன்ஸ்பெக்டர் – மன்னிக்கவும், காவல் துறைக் கண்காணிப்பாளர் – நான் புதுமை விரும்பிதான். என் தங்கத் தமிழ்த்தாய் தரணியில் செங்கோலோச்ச வேண்டும் என்ற வெறி கொண்டவன்தான். ஆனால், இந்தச் சொல்லாக்கம் சரியாகச் செய்யப்படுவதில்லை என்பது என் உறுதியான எண்ணம். போலீஸ் இன்ஸ்பெக்டர் – இன்ஸ்பெக்டர் எப்படி கண்காணிப்பாளர் ஆவார்? அது சரியான தமிழ்ச் சொல்லில்லை. காவல்துறையின் தலைவர் என்று சொன்னால் கமிஷனருக்கு என்ன சொல்வது? ஐ.ஜிக்கு என்னவென்று சொல்வது? அடடா எங்கோ போய்விட்டேன். உங்களைப் பற்றி அவர் மிகவும் உயர்வாக எழுதியிருக்கிறார். நீங்கள் தமிழ் பேசினால் இன்றெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கலாமாம்! அரசியல் பேசினால் கனல் கக்குமாம்! – இப்படிப்பட்டவரைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன். உங்களுக்குச் சில தொந்தரவுகள் ஏற்பட்டனவாம். காதல் போராட்டத்தில் பலத்த எதிர்ப்பிலிருந்து ஓரளவுக்கு மீண்டு வந்திருக்கிறீர்களாம். பக்கிரி... இது தமிழ்ப் பெயரில்லை. – உங்களுக்கு வேறு நல்ல பெயர் சூட்ட வேண்டும்" என்றபோது சந்திரமதி குறுக்கிட்டு, "என்னங்க – உங்களுக்குத் தமிழ் என்ற அழகான பெயரிருக்கிறதே, அதைச் சொல்லுங்களேன். சும்மாயிருக்கிறீர்களே?" என்றாள்.

தலைவரின் பேச்சு அவளுக்குப் பிடித்துவிட்டது.

குரல் நயமும், எப்போதும் மெல்லிய புன்முறுவலுடன் கூடிய முகமும், சிவந்த மேனியும், நீண்ட நாசியும், ஒரு நடிகருக்குள்ள கம்பீரமும் சந்திரமதியை ஈர்த்தன.

தமிழ்வேந்தன் சந்திரமதியைப் பார்த்து – இந்த வாய்ப்பில் அவளை நன்றாகவே பார்த்து, "தமிழ் – தமிழ்

ஆகா – என்ன அழகான பெயர்! யார் சூட்டிய பெயர்? முதலிலேயே எனக்குத் தெரியாமல் போய்விட்டதே!" என்று சந்திரமதியைப் பார்த்தபடியே தமிழைப் புகழ்ந்தார்.

சந்திரமதிக்கு ஒரு பக்கம் நாணமும், மறுபக்கம் மகிழ்ச்சியும் கூத்தாட, "நான்தான் ஐயா, இவருக்குத் தமிழ் என்று பெயர் வைத்தேன். பக்கிரி என்ற பெயர் எனக்கும் பிடிக்கவில்லை" என்றாள். பக்கிரியைப் பெருமிதத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

சந்திரமதியின் முகத்தில் ஏற்பட்ட பெரும் மாறுதலைக் கண்டு பக்கிரிக்கு வியப்பேற்பட்டது.

சென்ற இரண்டு நாள்களில் அவள் முகத்தில் இல்லாத தெளிவும் களிப்பும் இப்போது ஏற்பட்டிருப்பதைக் கண்டான்.

"தமிழ் என்று நான் சும்மா வைத்துவிடவில்லை. இவருக்குத் தமிழ்தான் மூச்சு. இவருடைய பேச்சில் நான் மயங்கினேன். தமிழைப் போன்ற இனிய குணத்தில் மயங்கினேன். தமிழுக்காக நான் பெரும் தியாகமே செய்திருக்கிறேன் ஐயா! எங்களுக்கு நீங்கள்தான் உதவ வேண்டும்" என்று உணர்ச்சி பெருக்கெடுத்தோடப் பேசினாள் சந்திரமதி.

"சந்திரமதி!" என்று புலவரேறு தமிழ்வேந்தன் அழைத்தார்.

"சங்க காலப் பெண்போல் தாயைப் பிரிந்து தலைவனுடன் வந்து விட்டாய், அப்படித்தானே? இனிக் கவலையை விட்டு விடுங்கள். எந்தவித அச்சத்தையும் விட்டுவிடுங்கள். இது என் எல்லை. உங்கள் மீது ஒரு துரும்புகூடப் பட விடமாட்டேன். நான் பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் வைத்திருக்கிறேன். அதற்கெல்லாம் எனக்கு உதவ, உழைக்க, உறுதுணையாக இருக்க ஓர் இளைஞனை எதிர்பார்த்தேன். இதோ, தமிழ்த்தாய் 'தமிழை' அனுப்பிவிட்டாள்!" என்று உணர்ச்சி பொங்கப் பேசினார்.



"அடடா – என்ன முட்டாள்தனம் செய்து விட்டேன்" என்று கையை உதறியபடி வருத்தப்பட்டார் தமிழ்வேந்தன்.

"என்ன ஐயா என்ன ஐயா?" என்று சந்திரமதியும் பக்கிரியும் ஒரு சேரக் குரல் கொடுத்தனர்.

"பசியாறினீர்களா – இல்லையா? என்று நான் கேட்கவில்லையே. பயணக் களைப்பு உங்கள் முகத்தில் தெரிகிறது. விருந்தோம்பலை மறந்துவிட்டு என் புகழ் பாடிக் கொண்டே இருந்து விட்டேனே!" என்று வருத்தப்பட்டு, "யாரங்கே?" என்று குரல் கொடுத்தார்.

இரண்டு மூன்று பேர் ஓடி வந்து கைகட்டி நின்றார்கள்.

"இவங்களை நம்ம விருந்தினர் விடுதிக்கு அழைத்துப் போய், மேலாளரிடம் நான் சொன்னதாகச் சொல்லிதக்கபடி கவனிக்கச் செய். நானும் அவர்கிட்டே தொலை பேசியிலே சொல்கிறேன்" என்றார்.

பக்கிரியும், சந்திரமதியும் திகைத்து நின்றனர்.

"தமிழ்! – எங்கள் விருந்தினர் விடுதிக்குச் செல்லுங்கள். எனக்கு இரண்டு நூற்பாலைகள் இருக்கின்றன. ஒரு திரைப்பட அரங்கு இருக்கிறது. உம்,என்னைப் பற்றி நானே சொல்லக் கூடாது. நீயே தெரிந்து கொள்வாய். என்றாலும், தமிழ்த்தொண்டு, அரசியல் பணி, எனக்கு ஒரு மாறுதலுக்காக – போகப் போகத் தெரிந்து கொள்வாய். விருந்தினர் விடுதிக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நான் நாளை மாலையில் வந்து சந்திக்கிறேன். அன்று மாலை தமிழ்ச் சங்கத்தில் இலக்கிய விழா இருக்கிறது. நான் வந்து அழைத்துச் செல்கிறேன்" என்றார்.

மேல்நாட்டுக் கார் ஒன்று – ஏஸி கார் – அவர்களை ஏற்றிக்கொண்டு அன்பானந்தர் நூற்பாலை விருந்தினர் விடுதி நோக்கி விரைந்தது.

விருந்தினர் விடுதி நகர எல்லையில் இயற்கைச் சூழலின் நடுவில் அமைந்திருந்தது. இவர்கள் சென்ற போது விருந்தினர் விடுதியில் யாரும் தங்கியிருக்கவில்லை.

விருந்தினர் விடுதி நிர்வாகி அன்புடன் வரவேற்றார். அதில் பணிவு நிறைந்திருந்தது.

“தலைவர் தொலைபேசியில் எல்லாம் விவரமாகச் சொல்லியிருக்கிறார். உங்கள் சொந்த வீடு போல் இங்கே தங்கலாம். குளிக்க வெந்நீர் இருக்கிறது. அறையில் தொலைபேசி இருக்கிறது. அதை எடுத்துப் பேசினால் பணியாள் வருவார். நீங்கள் கேட்டதை உடனே நிறைவேற்றுவார்” என்று கூறி அவர்கள் தங்குவதற்கான அறைக்கு அழைத்துச் சென்றார்.

அந்த விருந்தினர் மாளிகையின் முதல் தளத்தில் இரண்டே அறைகள். எதிரே பெரிய கூடம்.

சந்திரமதியும், பக்கிரியும் அந்த அறையைப் பார்த்தவுடனே திகைத்து நின்றனர்.

இரண்டு கட்டில்கள் சேர்த்துப் போடப்பட்டிருந்தன. தலையணை – தூய மெத்தை விரிப்பு. சிறு மேஜை. ஓர் ஓரத்தே தொலைக்காட்சிப் பெட்டி. ஒரே ஓர் இயற்கைக் காட்சி ஓவியம் சட்டமிடப்பட்டு மாட்டப்பட்டிருந்தது. கதவைத் தாழிட்டு விட்டால் வெளியே நடப்பது உள்ளே தெரியாது. உள்ளே நடப்பதை வெளியே உள்ளவர்கள் அறிய முடியாது.

“குளித்து முடித்தவுடன் கூப்பிடுங்கள். உங்களுக்குச் சாப்பாடு அறையிலே வேண்டுமானாலும் கொண்டு தருகிறோம். கீழே சாப்பிடும் கூடம் இருக்கிறது. அங்கும் வரலாம்” என்று கூறிவிட்டு மேலாளர் சென்று விட்டார்.

பக்கிரியும் சந்திரமதியும் மெத்தை மீது அமர்ந்தனர். அன்னத்தின் தூவி – அனிச்ச மலரெடுத்து ஆக்கப்பட்ட மெத்தை. கடற்பஞ்சால் ஆக்கப்பட்டதோ என்று எண்ணக் கூடிய தலையணைகள்.



ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

“கனவில்லையே?” என்று இருவரும் ஒரே சமயத்தில் கேட்டனர்.

“நான் உன்னைக் கிள்ளுகிறேன் – நீ என்னைக் கிள்ளிப் பார்” என்றான் பக்கிரி.

சந்திரமதி பக்கிரியின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள். பக்கிரி சந்திரமதியின் வழவழப்பான இடுப்புப் பகுதியை நிமிண்டினான். சந்திரமதி நெளிந்தாள்.

“கனவில்லை – கனவில்லை” என்று இருவரும் கூறிச் சிரித்தனர். மறுகணம் ஆரத் தழுவிக் கொண்டனர்.

“சந்திரமதி!”

“தமிழ்!”

“கனவாக இருக்கக்கூடாது. நீடிக்க வேண்டும். நாம் இரண்டு நாள்களாகப் பட்ட துயரமெல்லாம் பறந்தோடி விட்டன. தமிழை ஆராதித்தவர்களுக்கு உறுதியாக வெற்றி உண்டு என்று தெரிகிறதா?” பக்கிரி கேட்டான்.

“ஆமாம் – ‘தமிழை’ நம்பியவர்களுக்கு – நம்பி ஓடிவந்தவர்களுக்கு — வெற்றி உண்டு என்பது உண்மைதானே?” என்று சந்திரமதி கூறியபோது, அவளை மேலே பேசவிடாமல் அவள் இதழைத் தன் இதழ்களால் தடுத்தான் பக்கிரி. இவ்வளவு காலமாக அடக்கி வைத்திருந்த உணர்ச்சி வெள்ளம் அணையை உடைக்க முயன்ற போது – அறைக் கதவு மெலிதாகத் தட்டப்பட்டதுடன், தொடர்ந்து அழைப்பு மணி ஓசையும் கேட்டது.

பக்கிரியின் அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட சந்திரமதி, “அறைக் கதவைத் தாழிடாமல்...” என்று சிணுங்கிக் கொண்டே எழுந்து கதவைத் திறந்தாள்.

சீருடை அணிந்த ஊழியர் ஒருவர் சிறு பெட்டியுடன் நின்றார். “தலைவர் இதைக் கொடுத்து வரச் சொன்னார்” என்று பணிவுடன் அளித்தார்.

பெட்டியைத் திறந்தார்கள். இரண்டு புடைவைகள். இரண்டு பட்டு வேட்டி - ஒரு ஷர்ட் - இரண்டு டவல் எல்லாம் இருந்தன. அறையிலிருந்த தொலைபேசி ஒலித்தது.

"ஐயா! வணக்கம். தலைவர் பேசினார். குளித்தவுடன் மாற்றுடை அணியத் தேவையான வேட்டி, புடைவைகளை அனுப்பியுள்ளார். மாலை 5 மணிக்கு பட்டு வேட்டி அணிந்து, பளபளப்பு ஷர்ட் அணிந்து தயாராயிருக்கச் சொன்னார்கள்" என்றார் மேலாளர், தொலைபேசியில்.

குளியலறை பிரமாதமாக இருந்தது. நீலநிற மொசைக் கற்கள் சுவரெங்கும் பதிக்கப்பட்டிருந்தன. ஷவர் குழாய். குளிர், வெந்நீருக்குத் தனிக் குழாய்கள். சோப்பு - டவல் - சீப்பு மற்றும் நறுமணப் பொருள்கள்! குளியலறையிலேயே இருக்கலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தின.

குளித்து, உணவருந்தி குளுகுளு அறையில் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த இருவரையுமே இரண்டு நாள்களாகச் சரியான உறக்கமில்லாமையால் - உறக்கம் தழுவிக் கொண்டது. நேரம் போவதே தெரியாமல் உறங்கினார்கள்.

மறுநாள் காலை, மணி என்னவென்று தெரியாது. அன்று மாலை இருவரும் நன்றாக அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த வேளையில் தொலைபேசி மணி விட்டு விட்டு ஒலித்துக் கொண்டே இருந்தது.

கட்டிலிலிருந்தே புரண்டு அருகே இருந்த தொலைபேசியை எடுத்து, "ஹலோ" என்று குரல் கொடுத்தாள் சந்திரமதி.

"யாரு சந்திரமதியா? என்ன இனிய குரல்! இனிய பெயர்." - என்ற குரலை, தொலைபேசியின் மறுபக்கமிருந்து கேட்டவுடனேயே சந்திரமதி திடுக்கிட்டு, கலைந்திருந்த புடைவையைச் சரி செய்து கொண்டு, தலைவர் பேசுகிறார் என்பதைப் புரிந்து கொண்டு, "இருங்கள் இருங்கள். தமிழை எழுப்புகிறேன்" என்று பரபரப்புடன் பேசினாள்.



"வேண்டாம், வேண்டாம். களைப்பு. உண்ட களைப் பாயிருக்கும். நானே இப்போதுதான் எழுந்தேன். மாலை ஐந்து மணிக்குத் தமிழ்ச் சங்கக் கூட்டம் நான்கு மணிக்கே தமிழை ஆயத்தமாக இருக்கச் சொல். நீயும் கூட்டத்திற்கு வர வேண்டும். என்ன?" என்று கூறிய,' தலைவர் குரல் கேட்டு சந்திரமதிக்கு என்ன பதில் சொல்வதென்றோ அடுத்து என்ன முடிவெடுப்பது என்றோ தெரியவில்லை. புதிய வாழ்க்கையே உதயமாகிவிட்டது என்றே எண்ணினாள்.

## இருபத்தொன்பது

**வி**ருந்தினர் விடுதியில், சந்திரமதியும், தமிழும் தங்கியிருந்த அறையின் அழைப்பு மணி ஒலித்தது. அப்பொழுது சந்திரமதி மட்டுமே இருந்தாள். திறக்கலாமா வேண்டாமா என்று தயங்கிய சந்திரமதி திறந்துதான் யாரென்று பார்ப்போமே என்று கதவைத் திறந்தாள். ஒருகணம் வியப்பு மேலிடவே 'வாங்க' என்று சொல்லவும் நாவெழாமல் நின்றாள்.

மறுகணம் பிரமிப்பு நீங்க, "வாங்க, வாங்க" என்று தமிழ்வேந்தனை உள்ளே வரவேற்றாள்.

"இப்போதான் படித்துக் கொண்டிருந்தேன் செய்தித்தாளில், உங்களை டில்லி நாடாளுமன்றத்துக்கு வேட்பாளராகக் கட்சி தேர்ந்தெடுக்க முடிவு செய்திருப்பதாக - ஆ! என்ன நினைவு ஒற்றுமை பாருங்கள். நான் நினைத்தேன். நீங்கள் வந்துவிட்டீர்கள்" என்று சந்திரமதி முகம் முழுவதும் மகிழ்ச்சி கூத்தாடப் பேசினாள்.

“நினைத்தேன் வந்தாய் நூறு வயது!” என்று பாட வேண்டியதுதானே! தமிழ் வேந்தன் திரைப்படப் பாடல் அடியை நினைவுபடுத்திச் சிரித்தார்.

பரபரப்புடன் இங்கும் அங்கும் பார்த்து, “உக்காருங்க; உக்காருங்க” என்று அங்கிருந்த விலை உயர்ந்த சோபாவைச் சுட்டிக் காட்டினாள்.

அந்த அறையைச் சுற்றிக் கண்ணோட்டம் விட்ட தலைவர் “இந்த இடம் வசதியாக இருக்கிறதா?” என்று கேட்டு சோபாவில் உட்கார்ந்து, சந்திரமதியையும் அருகே உட்காரச் சைகை காட்டினார். சந்திரமதி எதிரே அமர்ந்தாள்.

“எங்களுக்கு நீங்கள் மிகப் பெரிய கௌரவம் கொடுத்திர்கள். நேற்றைய கூட்டத்தில் வாய் நிறைய அவரைப் பாராட்டினீர்கள். கூடவே, என்னையும் வானளாவப் புகழ்ந்திர்கள். எங்களை முன்பின் உங்களுக்குத் தெரியாது – ஒரு பாசம், ஓர் அன்பு எப்படி தங்களுக்கு எங்களிடம் ஏற்பட்டது என்பதை நேற்று இரவெல்லாம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார் தமிழ்” என்று தமிழ்வேந்தனைப் புகழ்ந்தும் நன்றி கூறியும் பேசிக்கொண்டே சென்றாள்.

தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியை எடுத்துத் துடைத்துக் கொண்டு தன் அழகிய பல்வரிசை தெரிந்தும் தெரியாமலும் இதழ் மட்டும் சற்றுப் பிரியச் சிரித்த தமிழ்வேந்தன், ‘ஒரு பகல் பழகினார் உயிரை ஈவரால்’ என்று கம்பர் சொல்லியிருப்பதை உண்மைப்படுத்த வேண்டாமா?

“நேற்றுக் கூட்டத்தில் நான் தமிழைப் பாராட்டியது கொஞ்சம்தான். தமிழ் என்று உன் காதலனுக்கு நீ பெயர் வைத்தது முற்றிலும் பொருத்தம். தமிழ் அவனிடம் கொஞ்சி விளையாடுகிறது” என்று அவர் கூறும்போது சந்திரமதி வியப்புடன் அவர் பேசுவதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.



அலட்டிக் கொள்ளாமல் பேசும் அவர் குரலில் கவர்ச்சிச் சக்தி இருந்ததை அவள் கவனித்தாள்.

‘சந்திரமதி’ என்று அவர் பெயர் சொல்லி அழைப்பதுடன் ‘நீ’ என்று உரிமையுடன் அழைப்பதும் அவளுக்கு முதலில் ஒரு மாதிரியாக இருந்தாலும், அந்த வார்த்தைகளில் உள்ள மாய சக்தி அவருடன் சகஜமாகப் பேசச் செய்தது.

முதல்நாள் நடைபெற்ற இலக்கிய விழாவைப் பற்றிப் பேச்சுத் திரும்பியது.

“விழா முடிந்தவுடனேயே இங்கு வந்து தமிழைப் பாராட்ட நினைத்தேன். விடுகிறார்களா என்னை?” குரலில் சலிப்பு இருப்பது போல் புலப்படுத்தினார்.

ஆமாம்; அவரைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டவர்களுள் தொண்டர்கள் அதிகம் என்பதை அவள் கண்டாள்.

தொண்டர்கள் ‘தலைவா’ என்றழைப்பதும், அறிஞர்கள் ‘புலவரே’ என்றழைப்பதும், தொழில் அதிபர்கள் ஏதும் பேசாமல் மௌனமாக, அவர் கட்டளையிடுவதை நிறைவேற்றக் காத்திருக்கும் நிலையிலிருப்பதுமாக அந்தச் சூழலை, தமிழும் சந்திரமதியும் சற்றுத் தள்ளியிருந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

சந்திரமதி கைகளைக் கட்டிக் கொண்டு நின்றாள். தமிழ், ஜிப்பா பையில் கையைப் போட்டுக் கொண்டு தமிழ் வேந்தனுக்குள்ள செல்வாக்கை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று நடுத்தர வயதுடைய ஒருவர் அவர்கள் அருகே வந்து, மெல்லிய குரலில் பணிவுடன், “தலைவர், தங்களை விருந்தினர் மாளிகைக்கு அழைத்துப் போகச் சொன்னார். கார் ஆயத்தமாயிருக்கிறது. அங்கே வந்து சந்திப்பதாகச் சொன்னார். வாருங்கள்” என்றார்.

“தலைவரிடம் சொல்லிவிட்டுப் போகலாமே?” என்று சந்திரமதி கேட்டாள்.

"தலைவர் சொல்லிவிட்டார். அவரிடம் சொல்லிக் கொண்டு போகாவிட்டால் தவறாக நினைக்க மாட்டார் வாருங்கள். சாப்பிட நேரமாகவில்லையா?" என்று பெரியவர் கூறியவிதமே, அவர் சொல்லுக்குக் கட்டுப்படும் விதத்தில் அமைந்தது.

இரவெல்லாம் தமிழும் சந்திரமதியும் அந்தக் கூட்ட நிகழ்ச்சியைப் பற்றிப் பெருமையுடன் பேசிக் கொண்டனர்.

"தமிழ்! நான் பயந்தேன்; உங்கள் பேச்சில் சோர்வு இருக்கப் போகிறதோ என்று. ஆனால், உங்களுக்கேற்ற தலைப்பு. தலைவர் உங்கள் பேச்சை ரசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அடிக்கடி அவர், கீழே அமர்ந்திருக்கும் என்னைப் பார்த்து முறுவலித்தது, 'தமிழ் இன்பம்' கேட்டாயா என்பது போல இருந்தது" என்றாள் பெருமையுடன். சந்திரமதியே தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

தமிழின் சிந்தனை ஓட்டம் வேறு எங்கோ இருந்தது. தமிழ்வேந்தன் அறிவு, ஆற்றல், செல்வாக்கு மூன்றும் உடையவராய்த் திகழ்வதை நினைத்துப் பார்த்தான். அவருடனேயே இருந்தால் மிக விரைவில் முன்னேறலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு உதயமாயிற்று.

அவருடனேயே இருப்பது ஒரு விதத்தில் அடிமை உணர்வை ஏற்படுத்தி விடாதா? நம் உள்ளத்துக்குள்ளே மறைந்திருக்கும் சுதந்தரப் போக்குக்குத் தடை ஏற்படுத்தி விடாதா? எங்கேயாவது வேலை செய்து கொண்டு தலைவருடன் பழகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதுதான் நமக்கு ஒத்து வரக் கூடியது என்று நினைத்தான்.

"நான் பேசிக்கொண்டே இருக்கிறேன், நீங்கள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறீர்களே! இன்று நடந்த கூட்டத்தில் காதல் சக்தியைப் பற்றிச் சொற்பொழிவாற்றிய



உங்களுக்கு என்ன பயம் ஏற்பட்டு விட்டது?" என்று பெருமையுடன் கூறி தமிழைத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டாள். இடக் காலை அவன் மீது போட்டு, 'கால்வலி இப்போது சரியாகியதா?' என்று சிணுங்கினாள்.

சிந்தனையிலிருந்து விடுபட்ட தமிழ் சந்திரமதியின் முகத்தை மிக மிக நெருக்கத்தில் பார்த்தான். இருவர் மூச்சுக் காற்றும் கலந்து, ஏஸியிலிருந்து வரும் குளிர் காற்றுடன் சேர்ந்தது. புத்தம் புதுப் புடைவையிலும், ஒப்பனையிலும் சந்திரமதி மேலும் அழகாகத் திகழ்வதாகத் தோன்றியது.

மிக அருகில் அவள் நெற்றியை, நாசியை, கழுத்தை அவன் தொட்டு ரசித்தான்.

"ஆண் பெண்ணுக்கிடையே முதல் காதல் மலர்வது எப்படி என்ற கேள்வியைக் கேட்டு, அதற்குப் பதிலும் விளக்கமும் சொன்னீர்களே உங்கள் சொந்த அனுபவம் அதில் தாராளமாக இருந்தது என்று நினைக்கிறேன்" என்றாள் சந்திரமதி. தன் மீது தவழும் அவன் கரங்களை மெல்ல வருடியவாறு.

"ஆமாம்,சந்திரமதி! – காதல் கண்ணுக்குப் புலப்படாமல் எங்கும் காற்றைப் போல் வியாபித்துக் கொண்டிருக்கும் சக்தி. திடீரென இரண்டு இளம் உள்ளங்களில் சென்று அமர்வது என்பது எப்படி? முதல் பார்வையில் ஒரே கண நேரத்தில் ஆண் பெண்ணிடம் தோன்றும் உணர்ச்சிதான் காதல்' என்று சொல்வார்கள்!"

சந்திரமதி கைதட்டி, அவனை இழுத்து தன் அன்பின் அடையாளத்தை வேகம் நிறைந்த இதழ்களால் பதித்தாள்.

ஏஸி இயந்திரம் மெல்லிய சுருதியுடன் இயங்கிக் கொண்டிருந்தது.

"குளிர் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது இல்லையா? குளிரைக் குறைப்பது எப்படி? எழுந்து அளவைக் குறைக்கச் சோம்பேறித்தனமாக இருக்கிறது" என்று சந்திரமதி கேட்டாள்.

"உம்.... ஒரே வழி இருக்கிறது. எழுந்து போகாமலே செய்யலாம்."

"எப்படி?"

"இப்படித்தான்" என்று, காலடியிலிருந்த பெரிய போர்வையை இருவருக்குமாகச் சேர்த்துப் போர்த்தி இறுக அணைத்துக் கொண்டான்.

"இதற்கு ஒரு குறள் இருக்கிறது. நினைவுக்கு வருகிறதா? சொல்லுங்கள்" என்று சந்திரமதி கேட்டாள்.

அந்த மங்கிய வெளிச்சத்தில் தமிழ் அவள் முகத்தைப் பார்த்து "எனக்குப் பரிட்சையா? சொல்லட்டுமா?" என்று குறளைக் கூறியவுடன் சந்திரமதி "நீங்கள் மகா மேதைதான். தமிழ்வேந்தனைப்போல் தலைவராக வேண்டும். அதுதான் என் ஆசை" என்று கூறினாள். பிறகு பேச்சு நின்றது, உறக்கம் சூழ்ந்தது.

விடிந்தது தெரியவில்லை. அழைப்பு மணி ஒலித்த பிறகுதான் சந்திரமதி திடுக்கிட்டு எழுந்து, ஆடையைச் சரி செய்துகொண்டு கதவைத் திறந்தாள். ஒரு தட்டில் இரண்டு கோப்பைகளில் காப்பியுடன், விருந்தினர் விடுதிப் பணியாள் நின்று கொண்டிருந்தான். அவனிடம் அசட்டுச் சிரிப்பு வழிந்து கொண்டிருந்தது. "இன்னும் சிறிது நேரம் கழித்துக் கொண்டு வா" என்று அவனை அனுப்பிவிட்டாள்.

களங்கமற்ற முகத்துடன் உறங்கும் தமிழைச் சற்று நேரம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள், 'தமிழுக்குத் தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியை அணிவித்தால், எப்படி இருக்கும்? தலைவருக்கு, கூர்மையான மூக்குக்கு அந்த 'ப்ரேம்' ஒத்து வருகிறது. இவருக்கு வேறு பிரேம் போட்டால்தான் நன்றாயிருக்கும். பட்டு சொக்கா வேட்டி கட்டி மாப்பிள்ளையைப் போலத்தான் இருந்தார். என் அம்மா மாப்பிள்ளைக் கோலத்தில் அவரைப் பார்த்து மகிழக் கொடுத்து வைக்கவில்லை' சந்திரமதி பெருமூச்சு விட்டாள்.



தமிழ் விழித்துக் கொண்டான். தன் அருகே உட்கார்ந்து தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரமதியை இழுத்து அணைத்து "அடடா!– விடிந்து நேரமாகிவிட்டதா? மணி என்ன? நூலகத்திற்குச் செல்ல வேண்டுமே?" என்று பரபரப்புடன் கூறியவாறு எழுந்தான்.

"சில நாள்களில் ஒரு பட்டிமன்றம் நடத்த வேண்டும். தலைவருடைய நூற்பாலையிலுள்ள மனமகிழ் மன்ற ஆண்டு விழா. பல நிகழ்ச்சிகள், அதில் பட்டிமன்றமும் உண்டு தலைப்புக் கேட்டிருக்கிறார்கள்" என்று சொல்லிக் கொண்டே பரபரப்புடன் குளியலறை நோக்கிச் சென்றான்.

அவர்கள் பசியாறிக் கொண்டிருக்கும் போது தமிழ் சொன்னான்: "சந்திரமதி! நூலகத்திற்குச் சென்று வருகிறேன். இங்கிருந்து சேலம் மைய ூலகம் பத்து கி.மீ. தொலைவில் உள்ளது. சில நூல்களைப் படித்துக் குறிப்பு எடுக்க வேண்டும். பட்டிமன்றத் தலைப்பை யோசித்திருக்கிறேன். எந்தத் தலைப்பு சரியாக இருக்கிறது என்று சொல்லு" என்றான்.

ஒவ்வொரு தலைப்பாகச் சொன்னான்.

"இராமாயணத்தில் பிரதிபலன் எதையும் பாராமல் தொண்டாற்றியவர்களுள் மிகச் சிறந்தவர் அனுமனே – கும்பகர்ணனே!"

"இலக்கியக் கதை மாந்தர்களுள் தங்கள் ஏற்றத்தால் அந்தந்த இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்தவர்களுள் முதன்மையானவர் சிதை – கண்ணகி – மாதவி – பாஞ்சாலி."

"வருங்காலத்தில் நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் திறமை படைத்தவர்கள் பெண்களே – ஆண்களே!"

"எப்படி தலைப்பு – நீ யோசித்து வை. நான் நூலகம் சென்று வருகிறேன். கதவை உட்பக்கம் தாழிட்டுக் கொள். கவனமாக இரு." என்று சொல்லிப் புறப்பட்டான்.

"கதவைத் தாழிட்டுக் கொள்" என்ன அன்பு! பிரியமான சொல் என்று எண்ணிக் கொண்டே சந்திரமதி அன்றைய காலை நாளிதழ்களைப் படிக்கலானாள். அப்பொழுதுதான், அழைப்பு மணி அடித்து, தலைவர் அறைக்குள், சுதந்தரமாக வந்தமர்ந்தார். பேசிக் கொண்டிருந்தார்.

தமிழ் இல்லாத போது அவரோடு அமர்ந்து பேசுவது சரியா என்று எண்ணி ஒரு முடிவு எடுப்பதற்குள், தமிழ்வேந்தனின் சுவையான பேச்சு, கண்ணாடி வழியே அவருடைய பார்வை, இலேசான முறுவல், அவருடன் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருக்கச் செய்தன.

இடையே இருமுறை உயர்தரமான குளிர்பானங்கள் வந்தன. தட்டில் பிஸ்கட்கள் வந்தன.

இடையிடையே ஃபோன் ஒலித்தது. பேசினார். பேச்சிலே யாருக்கோ தொழில் சம்பந்தமாக உத்தரவிட்டார். மற்றொருவருக்குத் தில்லிப் பயணம் சம்பந்தமாகத் தன் திட்டத்தைக் கூறினார். கட்சித் தலைவரிடமிருந்து வந்த தொலைபேசி அழைப்புக்கு அவர் பதிலளித்துப் பேசிய விதம், அவருக்குக் கட்சியிலுள்ள மதிப்பைப் புலப்படுத்தியது.

"ஸாரி, சந்திரமதி" – என்று கூறி ஒவ்வொரு முறையும் போன் பேசுவார்.

சில சமயங்களில் தமிழிலேயே பேசுகிறார். சில சமயங்களில் மற்றவர்களைப்போல இனிய ஆங்கிலம் கலந்து பேசுகிறார். சந்திரமதிக்குப் புரியவில்லை. 'இவர் கொள்கை என்ன என்று தமிழ் வந்தால் கேட்கவேண்டும்.'

அடுத்த ஃபோன் அழைப்பு வந்த போது, பேசி முடித்தவுடன், "ஆப்பரேட்டர்! இனி ஃபோன் வந்தால் நான் இங்கு இருப்பதாகச் சொல்லாதே. முக்கியமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது ஃபோன் கால் ரொம்ப 'டிஸ்டர்ப்பாக' இருக்கிறது" என்று தமிழ்வேந்தன் அலுவலகத் தொலைபேசி இயக்குபவரிடம் இனிமையாகவும், அதே சமயத்தில் கடுமை கலந்தும் உத்தரவிட்டார்.



டெலிஃபோன் ஆப்பரேட்டர் சிரித்துக் கொண்டாள். அவள் அருகே இருந்தவர், "என்ன மைதிலி! உனக்குள்ளே சிரித்துக் கொள்கிறாய்?" என்று கேட்டார்.

"தலைவர் ரொம்ப முக்கியமான 'டிஸ்கஷ'னில் இருக்கிறாராம். ஃபோன் கனெக்‌ஷனைக் கொடுத்து டிஸ்டர்ப் செய்யக் கூடாதாம். அதுதான் சிரிப்பு வந்தது."

"முக்கியமான டிஸ்கஷன் யாருடன்?"

மைதிலி சிரித்தாள். கண்சிமிட்டிக் கொண்டு, "விருந்தினர் மாளிகைக்கு ஒரு சிட்டு வந்திருக்கிறது. அதனுடன்தான் முக்கிய டிஸ்கஷன்!"

"ஓ! வலை விரிக்கிறாரா?" என்ற குரலுக்கு மைதிலி குறும்புப் புன்னகை சிந்தினாள்.

## முப்பது

சந்திரமதி இரவு நன்றாகத் தூங்கவில்லை. புரண்டு புரண்டுபடுத்தாள். அருகே தமிழ் மெல்லிய குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருந்தான். மார்பின்மீது கைகோத்து அவன் தூங்குவதைத் திரும்பிச் சற்று நேரம் பார்த்தாள். ஏஸி அறையில் கூட, அவன் நெற்றியில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாய் அரும்பியிருந்தன. சற்று விலகியிருந்த வேட்டியை மெல்ல எடுத்துச் சரி செய்து, அவன் நெற்றி வியர்வையைச் சேலைத் தலைப்பால் துடைத்தாள். இரண்டு நாள்களாக, நூலகத்திற்குப் போய் வருகிறார். அவனுக்கும் இரண்டு நூல்களை எடுத்து வந்திருந்தார்.

"அறைக்குள்ளேயே இருப்பது ஏதோ சிறைவாசம் போலிருக்கிறது" என்று காலையில் அவன் புறப்படும்போது சந்திரமதி சொன்னாள்.

"எனக்கும் அப்படித்தான். தலைவர் ஏதேதோ திட்டம் வைத்திருக்கிறார். நூலகம் விட்டுத் திரும்பி வரும்போது அவருடைய அலுவலகம் சென்று வருகிறேன். அலுவலகத்தில் அவரைச் சந்திக்க எவ்வளவு பேர் காத்திருக்கிறார்கள் தெரியுமா? என்னை உடனே கூப்பிட்டு விடும்போது பெருமையாக இருக்கிறது. அவருடைய நேர்முக உதவியாளருக்குக்கூட என் மீது இலேசாகப் பொறாமை இருக்கும் போலிருக்கிறது. 'ஸார்! இனி நீங்கள் வந்தவுடன் நேரே தலைவர் அறைக்குப் போய்விடலாம்' என்று அவர் சொல்வதில் உள்ளுக்குள் பொறாமை இல்லாமல் என்னவாம்?" என்று கூறிவிட்டு, "ஒரே ஒரு மனத் திருப்தி என்னவென்றால் வருங்காலம் நமக்கு உறுதியாக ஒளிமயமாக இருக்கும் என்ற நம்பிக்கைதான். பாராளுமன்றத் தேர்தலில் தலைவர் போட்டியிடுகிறார். பெரிய தொகுதி. அவருடைய சாதி வாக்குகள் உறுதி. இருந்தாலும் கடுமையாகப் பிரசாரம் செய்ய வேண்டுமாம். ரகசியக் குறிப்புகள் சில சொல்கிறார். அதற்கிடையில், தொகுதியின் முக்கிய ஊர்களில் சமூக விழாக்களை நடத்தி தன் பெயரைப் பிரபலப்படுத்த விரும்புகிறார். பட்டிமன்றம், கருத்தரங்கம் பொறுப்பு என்னுடையது. என் பேச்சுத் திறனை வார்த்தைக்கு வார்த்தை புகழ்கிறார். உன்னுடன் கூடப் பேசிக் கொண்டிருந்தாராம். 'சந்திரமதியின் திறமையை அவள் எதிரிலேயே பாராட்ட எனக்குக் கூச்சமாக இருக்கிறது' என்று அவர் உனக்குள்ளே மறைந்திருக்கும் ஆற்றலைப் புகழ்ந்தார்" என்று சொல்லும்போது சந்திரமதி குறுக்கிட்டு, "ஆமாம், என் எதிரேயே புகழ்கிறார். எனக்கு நல்லதொரு பணியைத் தரப் போகிறாராம். பெண் குலத்துக்கே பெருமை தேடித் தருமளவுக்கு என்னிடம் திறமை இருக்கிறதாம். அவர் புகழும்போது எனக்கே கூச்சமாக இருக்கிறது. ஆனால், ஒன்று மட்டும் என் மனத்துக்குப் பிடிக்கவில்லை. அவருடைய கூர்மையான விழுங்கி விடுவது போன்ற பார்வை. உற்சாகம் மிகுதியாகி வரும் போது தொட்டுத் தொட்டுப் பேசுவது" என்றாள்.



"சந்திரமதி! நானும் கவனித்தேன். அது சிலருடைய பிறவிப் பழக்கம். என் தோளில் கையைப் போட்டு நடந்து வருகிறார். ஆனால், என்னை மற்றவர்கள் தொட்டாலே உடம்பு சிலிர்க்கும், பிடிக்காது" என்றான் தமிழ்.

"நான் தொட்டால் கூடவா?" சந்திரமதி சிரித்துக் கொண்டே அவனை அணைத்துக் கொண்டாள்.

"இதோ பார், ஏன் உடல் சிலிர்க்கிறது. அதிலும் ஒரு பெண் ஸ்பரிசம்" என்று கூறும்போது சந்திரமதி பெருமூச்சுவிட்டு, "மற்றொரு பெண் தொடும்போது அது ஏதோ தேள் பாம்பு ஊர்வதுபோல் இருக்க வேண்டும் என்பது சரிதான். அன்று பட்டிமன்றத்தில் பேசிய பெண் உங்கள் அருகே நெருங்கி உட்கார்ந்து பேசும்போது எனக்கு எரிச்சலாக இருந்தது. அவள் யார்? கல்லூரி மாணவியா? வேலைபார்க்கும் பெண்ணா? சமூக சேவகியா?" என்றாள்.

"ஓ! செந்தாமரையைச் சொல்கிறாயா? அது ஒரு லூஸ் என நினைக்கிறேன்" என்று தமிழ் பேச்சை மாற்ற விரும்பி, "தலைவர் உன்னைப் புகழ்ந்தாரா? உனக்கு ஒரு பெரிய பொறுப்பு தரப் போகிறாராம். ஆலைத் தொழிலாளர் வீட்டுப் பெண்களைச் சந்தித்து அவர்களுடன் மனம் விட்டுப் பேசி, அவர்கள் சுகசௌக்கியங்களைக் கேட்டறிய வேண்டுமாம். உனக்கு உதவியாளர்களாக இரண்டு பெண்கள். உனக்குத் தனி அலுவலகம். ஃபோன்; கார்... அவர் சொல்லிக் கொண்டே போகும் போது எங்கோ வானவெளியில் சஞ்சரிப்பது போன்று பெருமையாக இருக்கிறது" என்றான்.

"இந்த விருந்தினர் விடுதியிலேயே காலம் கழிக்க வேண்டுமா? தனிமை எனக்குப் பயத்தைக் கொடுக்கிறது.. இரவில் ஒருவித ஙொய் சப்தம். சில சமயங்களில் திகிலாக இருக்கிறது. நீங்கள் என் அருகே இருப்பதால் நிம்மதியாக இரவில் தூங்குகிறேன். தலைவர் பேச வரும்போதுகூட யாருமில்லாமல் அவருடன் பேசுவதும் எனக்கு..." என்று

சந்திரமதி சொல்லும்போது, தமிழ் ஏதோ யோசிப்பவன்போல் சில நிமிடங்கள் இருந்து, "ஆமாம், ஆமாம். தனிமை மிகக் கொடிது. நானும் இன்று நூலகத்திலிருக்கும்போது இதைப் பற்றித்தான் சிந்தித்தேன். நானில்லாத போது தலைவர் விருந்தினர் விடுதிக்கு வந்து பேசுவது முறையாக இருக்காது. அவருக்கும் அது தெரிந்திருக்கும். தனி வீடு ஒன்று உடனே ஏற்பாடு செய்யுமாறு, நிர்வாகியிடம் சொல்லிவிட்டார். அவர் உதடு அசைத்தால் போதும் உடனே எப்படி ஆடுகிறார்கள்! இரண்டு மூன்று குடியிருப்புகளை நிர்வாகி என்னை அழைத்துச் சென்று காட்டினார். நான்கு அறைகள், ஒரு கூடம். பெரிய தாழ்வாரம் என்று வீடுகள். நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். நூல்களை வைத்துப் படிப்பதற்கு ஓர் அறை. படுப்பதற்கு ஓர் அறை. சமையல் அறை. வருபவர்கள் உட்கார்ந்து உரையாட ஒரு சிறு கூடம். அது போதும் என்று கூறிவிட்டேன்" என்றான் தமிழ்.

சந்திரமதி சிணுங்கினாள். "வருங்காலத்திலும் நாம் இருவர்தாமா?" என்று கூறிக் குறும்புச் சிரிப்புடன் அவனைப் பார்த்தாள்.

"பாருங்க, குழந்தை விளையாட முன்னால் புல்வெளியிடம், தோட்டம். அவன் பெரியவனானால் அவனுக்கு என்று ஓர் அறை. உறவினர்கள் வந்தால் தங்குவதற்குத் தனி அறை. பிறகு....." என்று மேலே ஏதோ கூற விரும்புபவள் போல் அவன் முகத்தைப் பார்த்தாள்.

"என்னவோ சொல்ல வந்தாயே சொல்லு. ஏன் நிறுத்திவிட்டாய்?"

"நம்முடைய வசதியான இந்த வாழ்க்கையை அறிந்து என் வீட்டிலிருந்து யாரும் வரமாட்டார்கள் என்று நினைக்கிறீர்களா? பாருங்களேன். ஒரு வருடத்திற்குள் அப்பாவோ அம்மாவோ வந்து நம்முடன் தங்குகிறார்களா இல்லையா என்று" என்று சொல்லிவிட்டு தமிழ் முகத்தை நோக்கினாள்.



ஏதோ சிறிது புரிந்து கொண்டவன் போல் சந்திரமதியைப் பார்த்து, "ஆமாம், குழந்தையைப் பார்த்துக் கொள்ள யாராவது துணை வேண்டும். அதற்கு ஒரு வருடமாகுமா?" என்று கேட்டான். அவன் கேள்வியின் உள் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவள் போல் சிரித்தாள் சந்திரமதி.

"ஆமாம் – உங்களிடம் என் மனத்திலிருப்பதைச் சொல்வதற்கென்ன? திருமணமே சந்ததி வளர்க்கத்தான் என்று சொல்வார்கள். சந்ததி பெருக்க மட்டுமா? சில இலட்சியங்களை நிறைவேற்ற என்று என் தோழியிடம் சொல்வேன். அவள் என்னைவிட அதிகமாய் இந்த விஷயங்களில் அறிவு மிகுந்தவள். 'கல்யாணம் செய்து கொண்டவுடன் தேனிலவுக்கு வெளியூர் செல்லும் தேதியிலிருந்து பத்தாவது மாதம் குழந்தை!' என்று வேடிக்கையாகச் சொல்வாள். நான் கேட்பேன் 'தேனிலவுக்குச் சென்றால் குழந்தையை உற்பத்தி செய்ய வேண்டுமா?' என்று. அவள் சிரித்துக் கொண்டே சொல்வாள், 'கணவனும் – மனைவியும் மிகவும் ஆர்வத்துடன் நெருங்கி இருக்கும் சுகத்தை, அந்த இன்பத்தைச் சில ஆண்டுகள் நீடிக்க விடலாம். கடவுள் கொடுப்பதைத் தடுக்கக் கூடாது என்பது பழைய நம்பிக்கை. கடவுள் இப்போது புதிய சாதனங்களை, கருவிகளைக் கொடுத்திருக்கிறார். யோசனைகள் தெரிவிக்கப் புத்தகங்களையும் கொடுத்திருக்கிறார். விரும்பும்போது விளக்கை ஏற்றலாம். வேண்டாதபோது அணைக்கலாம். அதற்கு வேண்டியதை நமக்குச் சொல்லித் தர விளக்கப் படங்கள், புத்தகங்கள் உள்ளன' என்று."

சந்திரமதி, இவ்வாறு பேசியவுடன் தமிழ் அவளைக் கூர்ந்து நோக்கி "சிவப்பு முக்கோணப் பிரச்சார முறைகளிலா?"

"நீங்கள் பார்த்ததில்லையா?"

"மிதிவண்டி நிலையத்தில் எனக்கு ஏது நேரம்? சிந்தனையும் கிடையாது. ஆண் பெண் பாலுணர்ச்சியைப் பற்றிய புத்தகங்களைப் படிக்க மாட்டேன். பக்கத்திலுள்ள வாடகை நூல் நிலையத்தில் ரகசியமாகச் சில புத்தகங்களை வாங்கிச் செல்வார்கள். எப்போதோ பார்த்திருக்கிறேன். 'நலமான வாழ்க்கைக்கு' என்று பெயரிட்டு ஆபாசப் படங்களை அச்சிட்டிருப்பார்கள். நீ படித்திருக்கிறாயா? உன் தோழியும் நீயும் கல்யாணமாகு முன்பே அவற்றைப் பற்றிப் பேசுவீர்களா? உங்களுக்குள் அதுதான் பேச்சா? அதனால்தான் மேகலா உன் நெருங்கிய தோழியாகி விட்டாளா?" என்று கேட்டவாறு தமிழ் அவளை நெருங்கி அணைத்துக் கொண்டான்.

"சிலர் வெளிப்படையாகப் பேசுவார்கள். ஆண் பெண் உறவைப் பற்றி அறிந்து கொள்வதில் எள்ளளவும் வெட்கப்படமாட்டார்கள். சிலர் போலித்தனமாக நடிப்பார்கள். அப்படிப்பட்டவர்கள்தாம் காம உணர்ச்சி அதிகம் உடையவர்களாக இருப்பார்கள்" சந்திரமதி கூறும்போது தமிழ் பிரமிப்போடு அவளைப் பார்த்தான்.

"தமிழ்! நான் அப்போது படித்தது இப்போது உதவுகிறது. இப்படி வசதியாக இந்த இடத்தில் வாழப் போகிறோம் என்று கனவிலாவது கண்டோமா? வசதி இருந்தால் குடும்பத்திட்டத்தை அதற்கு ஏற்றவாறு வகுத்துக் கொள்ள வேண்டும். நான் இந்த நாள்களில் மிகவும் ஜாக்ரதையாக இருப்பதை நீங்கள்கூட கவனித்திருக்கலாமே!"

சந்திரமதி சொல்லும்போது, அவனுக்கு மேலும் வியப்பாக இருந்தது. 'சந்திரமதி ஓர் அப்பாவிப் பெண், அவளுக்கு ஏதும் தெரியாது என்று நினைத்தோமே' என்று எண்ணியவன், "ஆமாம், ஆமாம். தனிமையாக நாமிருந்த நாள்களில் நீ மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டாய். எனக்குப் பெருமையாகவும் இருந்தது. வெறும் காம உணர்வுக்காக மட்டும் என்னை விரும்பவில்லை என்பதைப்



புரிந்து கொண்டேன். உன் இலட்சியம், உன் சிந்தனை எல்லாம் எனக்குப் புரியப் புரிய மிகப் பெருமையாக இருக்கிறது. ஆனால், மக்கட் செல்வமே வேண்டாம் என்று தவிர்க்கவும் கூடாது என்பது என் எண்ணம்."

"குழந்தை கூடாது என்று சொல்லவில்லை. வேண்டும்போது பெற்றுக் கொள்வது. சில காலம் தள்ளிப் போடுவது நம்மிடம்தான் உள்ளது. இதை ஆண்கள் உணர வேண்டும்."

சந்திரமதி பேசப் பேச, அவனுக்குப் பிரமிப்பாகவும் பெருமையாகவும் இருந்தது.

"சரி சந்திரமதி! என்னைப் பொறுத்தவரை சிந்தனையை வேறு நல்லவிதமாகச் செலுத்தினால் கட்டுப்பாடு தானே வந்துவிடும்.மகாத்மாவின் நூல்களைப் படித்திருக்கிறேன்" என்று சொன்னவன் சந்திரமதியைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தான்.

"என்ன அப்படி பார்க்கிறீர்கள்?"

"இலட்சியத் தம்பதியாய் வாழ்வது எப்படி என்ற நூலை நான் இன்றுதான் படித்தேன். அதற்கு எடுத்துக்காட்டாக நாம் ஏன் இருக்கக் கூடாது என்று நினைத்தேன்."

அவர்களுடைய உரையாடல் இரவு நெடுநேரம் நீண்டது. விளக்கை அணைத்துவிட்டு, அவளை அணைக்க தமிழ் முயன்றபோது,

"உம் – புலனடக்கம். சில காலம் நண்பர்களாகவே பழகக்கூடாதா?" என்று கூறிச் சிரித்தாள். தமிழும் உறங்கி விட்டான். படுத்தவுடனேயே தூங்கிவிடும் கலையை அவன் கற்றிருந்தான். ஆனால் சந்திரமதிக்கு உறக்கம் வரவில்லை. 'ஒருவேளை, என்னதான் கணவராயிருந்தாலும் பால் உணர்வு குடும்ப நலம் பற்றி அவரிடம் இப்படி மனம்விட்டுப் பேசியிருக்கக் கூடாதோ?'. என எண்ணினாள். தூக்கம் வராமல் புரண்டாள்.

'இந்த இனிய வாழ்வு இப்படியே நீடிக்குமா? தலைவர் தலைவர் என்று பெருமையாக அழைக்கப்படும் இந்தத் தமிழ்வேந்தன் உண்மையிலேயே நல்ல குணமுடையவரா' என்ற ஐயம் அவளுக்கு ஏற்பட்டது.

பொழுது விடிந்தவுடன் தொலைபேசி ஒலித்தது. "காலை வணக்கம். நான் தமிழ்வேந்தன் பேசுகிறேன். சந்திரமதியா? நன்றாகத் தூங்கினாயா? உன்னைத் தமிழ் தூங்க விட்டானா? பத்து மணிக்குக் கார் அனுப்புகிறேன். என் அலுவலகத்திற்கு வா. தொழிலாளர் குடியிருப்புக்குச் சென்று சமூகக்கூடத்தில் தொழிலாளர் இல்லத்தரசிகளைச் சந்திக்கிறோம். தமிழ் பக்கத்து ஊருக்குச் செல்ல வேண்டும். அவனுக்கும் கார் அனுப்புகிறேன். தயாராயிரு. உனக்குப் பட்டுப் புடைவைகள் பிடிக்குமா அல்லது, 'கார்டன்', 'விமல்' இப்படியா? அல்லது கைத்தறியா? எதற்கும் நல்ல புடைவை ஒன்றை அனுப்புகிறேன். லேட்டஸ்ட்டாக வெளிவந்திருக்கும் மேல்நாட்டு சோப்பு ஒன்றும்அனுப்புகிறேன். நீ மிகவும் ரசிப்பாய். சீக்கிரம் வந்து விடு. அங்கே உன்னைச் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கும் தமிழ் வேந்தன்" தொடர்ந்து ஏதோ 'இச்'சென்ற ஒலி.

சந்திரமதி இந்தப் பேச்சை ரசிக்கவில்லை.

## முப்பத்தொன்று

விருந்தினர் மாளிகையில், சந்திரமதி தங்கியிருந்த அறைக் கதவைத் தமிழ் தட்டினான். அழைப்பு மணி இருப்பதை மறந்தான். சிறிது நேரம் கழித்து, சந்திரமதி எழுந்து வந்து கதவைத் திறந்தாள். தூக்கக் கலக்கத்திலிருந்தாள்.



தமிழ் தன் கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி பத்து. இப்போதுதான் முதன் முதலில் கைக்கடிகாரம் கட்டுகிறான். தலைவர் அன்பளிப்பாகக் கொடுத்தது.

சந்திரமதி அதைக் கவனிக்கவில்லை. தூக்கக் கலக்கம், பசி, களைப்பு, கோபம் எல்லாம் ஒன்று சேர்ந்திருந்தன.

"தூங்கிவிட்டாயா, சந்திரமதி?" என்று தமிழ் அன்புடன் கேட்டவாறு அவளிடம் இனிப்புப் பெட்டியை நீட்டினான். அதை அவள் பெற்றுக் கொள்ளவில்லை. வழக்கத்துக்கு விரோதமாக அவள் முகத்தில் ஏற்பட்டிருந்த கடுகடுப்பைத் தமிழ் கவனித்தான்.

"தமிழ்! நான் ஒருத்தி இந்தத் தீவில் இருக்கிறேன் என்பதையே மறந்து விட்டீர்களா? காலையில் புறப்பட்டவர் எங்கே சென்றீர்கள்? எதற்குச் சென்றீர்கள்?" என்று சற்றுக் கோபத்தையும் குரலில் கலந்து வீசினாள்.

சந்திரமதியின் கன்னத்தை மெல்லத் தட்டி, அவளிடம் தான் கட்டியிருந்த கைக்கடிகாரத்தைக் காட்டியவாறு, "சந்திரமதி, சாப்பிட்டுவிட்டாயா?" என்று கேட்டான்.

சந்திரமதி அவனைக் கோபமுடன் பார்த்தாள். "இப்போதே தலைவராகி விட்டீர்களா? வேளை, நேரம் எல்லாம் மறந்து விட்டீர்களா?" என்றாள்.

சந்திரமதியிடமிருந்து கடுமை நிறைந்த குரலை இதுவரை அவன் கேட்டதில்லை. அவள் கோபிப்பதும் நியாயம்தான். மாலை வேளைகளில் விருந்தினர் மாளிகையிலேயே அடைபட்டுக் கிடந்தால், எந்தப் பெண்ணுக்குத்தான் கோபம் வராது? அவளைச் சமாதானப் படுத்த விரும்பினான்.

"சந்திரமதி!" என்று அன்புடன் எப்பொழுதும் அழைப்பது போல் அழைத்து, இனிப்புப் பெட்டியின் மேல் உறையைப் பிரித்து "இதோ பார்! மிக உயர்வான

இனிப்புகள். இதன் விலை என்ன தெரியுமா? நூறு ரூபாய். இதில் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள். நாமக்கல் வரை தலைவருடன் போயிருந்தேன். அங்கிருந்த லாரி உரிமையாளர்களைச் சந்தித்தேன். அங்கே எனக்கும் தலைவருக்கும் பொன்னாடை அணிவித்து, இந்த இனிப்புப் பெட்டியையும் பரிசாக அளித்தார்கள். தலைவருக்கு நல்ல செல்வாக்கு. காரில் வரும் போது சொன்னார்: 'தமிழ்! உன் பேச்சில் லாரி உரிமையாளர்கள் மயங்கி விட்டனர். நீ அறிமுகமானது எனக்குப் பெரும் அதிர்ஷ்டம்தான்' என்றார்.

"பிறகு என்னென்னவோ பேசிக் கொண்டு வந்தோம். அவருக்கும் இள வயதுதான். அவருடைய தந்தை ஏற்படுத்திய தொழிற்சாலைகளை அவர் நன்றாக நிர்வகிக்கிறார். மேலும் சிறப்பாக வளர்த்து வருகிறார். தந்தையின் செல்வம் செல்வாக்கு, இவருடைய திறமை, புலமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியலில் நுழைந்து இந்த மாவட்டத்துக்கே முக்கிய புள்ளியாகிவிட்டார். உனக்கு ஒரு பெரிய சமுதாயப்பணி கொடுத்திருக்கிறாராம். நேற்று தொழிற்சாலைக் குடியிருப்புக்கு அழைத்துச் சென்றாராமே! அங்கே ஓர் அலுவலகம் போன் வசதியுடன் உனக்குக் கொடுக்க இருக்கிறாராமே!" என்று சொல்லிக் கொண்டே,

"சந்திரமதி! இன்னும் நீ சாப்பிடாதது எனக்கு வருத்தமாக இருக்கிறது. என்னையும் அந்தப் பெரிய உணவு விடுதியில் சாப்பிடச் சொன்னார் தலைவர். நீ காத்திருப்பாய் என்பது தெரியும். அத்துடன் அந்தச் சொகுசு, சூழ்நிலை எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் சாப்பிட்டு முடிக்க எப்படியும் நடுநிசியாகி விடும் என்று புரிந்தது.

"வெளி உலகு - செல்வர், செல்வாக்குள்ளவரின் உலகே தனி என்பதை மெல்ல மெல்லப் புரிந்து கொள்கிறேன். அந்த உணவு விடுதியில் மேல் தளத்தில் உள்ள அழகிய கூடத்தில் சேலத்து முக்கியப் புள்ளிகள் கூடியிருந்தனர்.



விலை உயர்ந்த மது கண்ணாடிக் கோப்பையில். அங்கிருந்தவர்கள் கரங்களில்! தலைவர் என்னைப் பார்த்து அசட்டுச் சிரிப்புடன் 'தமிழ்! இங்கே எனக்கு விருந்து தருகிறார்கள். நீயும் கலந்து கொள்வதென்றால் கலந்து கொள்ளலாம். ஆனால் மரியாதை நிமித்தம் அவர்கள் தரும் உற்சாக பானத்தைச் சாப்பிட்டு மனம் விட்டுப் பேசிய பிறகுதான் விருந்துச் சாப்பாடு. அதுவரையில் நீ சாப்பிடாமல் இருக்க வேண்டாம். மேலும், இந்தக் கேளிக்கை வழக்கத்தை இப்போதே உனக்கு அறிமுகப்படுத்த நான் விரும்பவில்லை. நீ வேண்டுமானால் தேவையான உணவைச் சாப்பிட்டுவிட்டு விருந்தினர் விடுதிக்குச் சென்று விடு. நாளைக் காலையில் ஒரு முக்கியத் திட்டத்தைப் பற்றி விவாதிக்க வேண்டும். ஏழு மணிக்கே கார் அனுப்பிவிடுகிறேன்" என்றார்.

"உயர்தர சாப்பாடு, விதவிதமான உணவு வகைகள், வரிசையாக மேஜையில் அடுக்கி வைத்திருந்தார்கள். எவ்வளவு வேண்டுமானாலும் நாமே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடலாம். நாமெல்லாம் எவ்வளவு சாப்பிட முடியும்? எனக்கு நினைவுக்கு வந்தது. சென்னையில் மிதி வண்டி நிலையத்தின் அருகே ரிக்ஷா ஓட்டுநர் ஒருவர். அவர் மதிய உணவைக் கூடைக்காரி ஒருத்தியிடம் வாங்கிச் சாப்பிடுவார். தட்டு நிறையச் சோறு, அதன்மீது குழம்பை ஊற்றுவாள். சாப்பிட்டு விட்டு மேலும் சோறு போடச் சொல்லுவார். 'எட்டணாவுக்கு இவ்வளவுதான். இதே சோறு பெரிய பெரிய ஓட்டலில் ஐம்பது ரூபா தெரியுமா?" என்பாள். அந்த ரிக்ஷா ஓட்டுநருக்கு அகோரப் பசி. பாவம்! அவரைப் போன்றவர்களை அழைத்து வர வேண்டும். இஷ்டம்போல் சாப்பிடச் சொல்ல வேண்டும். அவ்வளவுதான், அத்தனையும் காலி!" என்று சொல்லி நகைத்தான்.

சந்திரமதியும் தன் கோபத்தையும் பசியையும் மறந்து சிரித்தாள்.

"சரி; சரி சாப்பிடலாம் வாங்க" என்று சாப்பாட்டு மேஜைக்கு அழைத்துச் சென்றாள். டிபன் காரியரில் இரவுச் சாப்பாடு, விருந்தினர் விடுதி உணவுக் கூடத்திலிருந்து வந்திருந்தது.

"இந்த விடுதிச் சாப்பாடு எனக்கு ஒத்துக் கொள்ளவில்லை. நான் நன்றாகச் சமையல் செய்வேன் தெரியுமா?" என்றாள். தொடர்ந்து, "இந்த விடுதியிலேயே எவ்வளவு நாள்கள் இருக்கப் போகிறோம்? எப்போது நமக்குத் தனி வீடு தரப் போகிறார்கள்?" என்று கேட்டாள்.

இருவரும் சாப்பிட்டவாறே பேசிக் கொண்டார்கள்.

தொழிலாளர்கள் குடியிருப்புக்குத் தான் சென்றதைப் பற்றி சந்திரமதி விவரித்தாள்.

"தலைவரே கார் எடுத்துக் கொண்டு இங்கே வந்தார். விலையுயர்ந்த கார் என்று நினைக்கிறேன். காருக்குள்ளே குளுகுளு என்றிருந்தது. வானத்தில் பறப்பது போல் கார் நழுவிச் சென்றது.

"அவர் அருகே அமர்ந்து செல்லக் கூச்சமாக இருந்தது. நெளிந்தவாறு இருக்கை நுனியில் அமர்ந்தேன். 'தைர்யமாக சௌகர்யமாக உட்கார்' என்று என் கரத்தைப் பிடித்து உட்காரச் சொன்னார். முன் இருக்கையில் டிரைவர் அருகே உதவியாளர் ஒருவர் இருந்தார். அவரிடம் என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். என் பெயரைச் சொல்லி எனக்குள்ள திறமை, இல்லாத திறமையெல்லாம் கூறிப் புகழ்ந்தார். 'தொழிலாளர்கள் குடும்ப நலம் காக்க சிறப்பு அதிகாரியாக இன்று முதல் இவர்களை நியமிக்கப் போகிறேன்' என்றார். எனக்குப் பெருமையாக இருந்தது. என்னிடம் நேரில் பேசும்போது ஒருமையில் 'நீ' என்று அழைப்பவர், அந்த உதவியாளரிடம் என்னை மிக மரியாதையுடன் குறிப்பிட்டார். கல்லூரிப் படிப்பையே முடிக்காத என்னை பி.ஏ.பட்டதாரி என்று அறிமுகப்படுத்தினார். தொழிலாளர் நலன் காப்பதுபற்றிய



படிப்பெல்லாம் நான் படித்திருப்பதாகச் சொன்னார். எனக்கு 'திக்' என்றது.

"தலைவர் நடத்தும் பல்வேறு தொழிற்சாலைகளின் தொழிலாளர் குடியிருப்புகளுக்கு அழைத்துச் சென்றார். சில இடங்களில் மாடிக் கட்டடங்கள். சில கூரைக் கட்டடங்கள். தனி அலுவலகக் கட்டடம் மிக வசதியாக இருந்தது.

"என்னை அங்குள்ளோரிடம் அறிமுகப்படுத்தினார். பிறகு நடுத்தர வயதுடைய ஒரு பெண்ணை மிக உரிமையுடன் அழைத்து, "பார்வதி! இவங்களை நல்லாக் கவனிச்சுக்க" என்று சொன்னார்.

"நேற்றும் இன்றும் தொழிலாளர் குடும்பத்துடன் பழகுவதில் தனி மகிழ்ச்சியே ஏற்பட்டது. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு குடும்பப் பிரச்னை; அவர்களுள் சிலர் மனம் விட்டுப் பேசத் தயங்கினார்கள். கூச்சப்பட்டார்கள்.

"தொழிலாளர் நல அதிகாரி அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட வீடு சிறிதாக இருந்தாலும் வசதியாக இருந்தது. வீட்டைச் சுற்றி தோட்டம். குழந்தைகள் விளையாட இடம். ஊஞ்சல், சறுக்கு மரம் போன்ற விளையாட்டுப் பொருள்கள்.

"பார்வதி நடுத்தர வயதுடைய பெண். அவள் நேற்று அதிகம் பேசவில்லை. இன்று அவள் டிபன் காரியரில் சாப்பாடு கொண்டு வந்து வைத்துவிட்டு நின்று கொண்டிருந்தாள். அவளை நாற்காலியில் உட்காருமாறு வற்புறுத்தினேன். முதலில் அவள் நாணப்பட்டாள். பிறகு 'சரி சமமாக உட்காருவது மரியாதை இல்லை' என்றாள். சாப்பாடு பரிமாறும்போது அவள் மெல்லப் பேச்சைத் தொடங்கினாள்.

"என்னைப் பற்றி விசாரித்தாள். உங்களைப் பற்றிக் கேட்டறிந்தாள். என் அழகையும், இளவயதிலும் இவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் பழகுவதையும் பாராட்டினாள்.

"நான் அவளைப் பற்றி விசாரித்தேன். தன்னைப் பற்றித் தெரிவிக்கத் தயங்கினாள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னைப் பற்றிச் சொல்லத் தொடங்கினாள்.

"தலைவரின் தந்தை காலத்தில் சிறு பெண்ணாக அவர்கள் தொழிற்சாலையில் சேர்ந்து பணிபுரியத் தொடங்கியதிலிருந்து விவரமாகச் சொன்னது ஒரு திரைக்கதையைப் போல் இருந்தது. 'தலைவரின் தந்தை வெளி உலகுக்குப் புகழ் வாய்ந்தவர். நல்லவர். பெரிய மனிதர். ஆனால் அவருடைய சொந்த வாழ்க்கையின் மறுபக்கம் பயங்கரமானது' என்று கூறித் தனக்கும் தலைவரின் தந்தைக்கும் ஏற்பட்ட நட்பை அவள் விவரித்தாள்.

அதைக் கேட்கக் கேட்க எனக்கு ஒரு பக்கம் ஆவலும், ஒரு பக்கம் பயமும் ஏற்பட்டன."

சந்திரமதி சொல்லி நிறுத்தியபோது தமிழ் கேட்டான்: "மற்றவர் வாழ்க்கையைப் பற்றி அறிய ஆவல் ஏற்படுவது இயற்கைதான். ஆனால் உனக்குப் பயம் ஏன் ஏற்பட்டது?"

"தமிழ்! நான் எதற்கும் பயப்படமாட்டேன். ஆனால், பசுத்தோல் போர்த்திய புலிகள் நாட்டில் நடமாடுகின்றன என்று கேள்விப் பட்டிருக்கிறேன். நாம் புலியின் குகைக்கே வந்து விட்டோமோ என்று பயம் ஏற்பட்டது" என்றாள்.

அவள் நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்த தமிழ் அவளை அணைத்தபடி சொன்னான்: "யாரோ ஏதோ கற்பனையாகச் சொன்னதை எல்லாம் நம்பக் கூடாது. சந்திரமதி! நம் வாழ்க்கையில் தலைவர் பல உதவிகளைச் செய்யப் போகிறார். தனித்தனியே நாம் இருவரும் பயன் பெற நல்ல திட்டங்களை வைத்திருக்கிறார்" என்றான்.

"தனித்தனியாகவா? சேர்ந்துதான் நமக்கு நல்லது நடக்க வேண்டும்" என்று கூறிய சந்திரமதி – அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சொன்னாள்: "எனக்கு



என்னவோ பயமாயிருக்கிறது. என்னைத் தனியே விட்டுவிட்டு நீங்கள் எங்கும் செல்லக்கூடாது" என்றாள்.

ஆனால், அவளைத் தனியே விட்டு வெளியூர் செல்லும் ஒரு திடீர் வாய்ப்பு தமிழுக்கு ஏற்பட்டது.

## முப்பத்திரண்டு

"தலைவர் டில்லிக்குச் செல்கிறார். என்னையும் அவருடன் அழைத்துச் செல்கிறார்" என்று கூறிக்கொண்டே, தமிழ் அவசர அவசரமாக கையில் ஒரு புதிய பெட்டியுடன் வந்தான்.

சந்திரமதியின் பார்வை புதிய பெட்டியின் மீது விழுந்தது. புதிய பெட்டியை அவள் பார்க்கிறாள் என்பதைக் கண்ட தமிழ், "சந்திரமதி! இது ஃபாரின் பாக்ஸ்! பூட்டு தனியே கிடையாது. பூட்டைத் திறக்க ரகசிய எண்ணைச் சுழற்ற வேண்டும்" என்று கூறி ஒவ்வோர் எண்ணாகச் சுழற்றினான். சற்று யோசித்தே எண்ணைச் சுழற்ற வேண்டியிருந்தது. கடைசியாகப் பெட்டியைத் திறந்தான். அதில் மேலைநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு புடைவைகள்; இரண்டு ஸ்லாக்குகள், பாண்ட்கள், மேல்நாட்டு வகை வாசனைத் திரவியம், சோப்பு இருந்தன.

"இந்தப் பெட்டியில் உள்ள பொருள்களுடன் தலைவர் எனக்கு இந்தப் ஃபாரின் பெட்டியை அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். இதில் உள்ள ஃபாரின் புடைவைகள் விலை மிக அதிகம். டில்லி போவதற்கு, நான் உடுத்தியிருக்கும் டிரஸ் சரியில்லை என்று எனக்குப் புதிய

ஷர்ட், பேண்ட் விலையைப் பார்த்தாயானால் மூர்ச்சையாகிவிடுவாய்" என்று கூறி, வாசனைத் திரவியக் குப்பியை எடுத்து, "இதான் ஃபாரின் ஸெண்ட்" என்று கூறி 'புஸ் புஸ்' என்று அதை அழுத்தி சந்திரமதியின் மார்பு, தோள்பட்டையின் மீது தெளித்தான். அவள் காதுகளில் மட்டும் படும்படி, "எங்கே கையைத் தூக்கு, நாள் முழுவதும் துர்நாற்றத்தினின்று விடுதலை!" என்றான்.

சந்திரமதி அதை ரசிக்கவில்லை. "தமிழ்! இதென்ன விளையாட்டு கதவைத் திறந்து வைத்துக் கொண்டு? எனக்குப் பிடிக்கவில்லை. இந்த நெடி எனக்கு ஒத்துவராது. அது கிடக்கட்டும். நான்கு, ஐந்து நாள்களிலேயே கொஞ்சங்கொஞ்சமாக மாற்றத்தைக் காணகிறேன். அயல்நாட்டுப் பொருள், மேல்நாட்டுப் பொருள் மீது எப்படி மோகம் ஏற்பட்டது? முன்பெல்லாம் அயல்நாடு மேல்நாடு என்று சொல்வீர்கள். இப்போது 'ஃபாரின்' என்ற வார்த்தையை மிகச் சுலபமாக உச்சரிக்கிறீர்கள். ஸெண்ட் என்கிறீர்கள் - எனக்குப் புரியவில்லை. தமிழ்! எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது" என்று கூறி அவன் கரத்திலிருந்து ஸெண்ட் குப்பியைப் பறித்தாள்.

சந்திரமதியின் தோள்களை முகர்ந்த தமிழ், "மாற்றம் என்பது இயற்கையின் கட்டளை. நீ பயப்படும்படியாக ஒன்றுமில்லை. சைக்கிள் கடையில் வேலையாயிருந்தபோது நான் கிணற்றுத் தவளை. மிதிவண்டி என்றேன். இப்போது சைக்கிள் என்கிறேன். இங்கே வந்த பிறகு எவ்வளவோ தெரிந்து கொண்டு விட்டேன். உலகம் என்பது சென்னை மட்டுமா? சேலம் மட்டுமா? தில்லியிலும் இருக்கிறது. தலைவருடன் தில்லி போகிறேன். அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிட அனுமதி கிடைத்து விட்டது. அவருடைய கட்சித் தலைவர் அவரைத் திலலிக்குக் கட்சிச் செலவில் அனுப்புகிறார். அப்படியே அவர் தன் வியாபார விஷயமாக முக்கியமான அதிகாரிகளைச்



சந்திக்கிறார். சந்திரமதி! அவர் என்னை முழுவதுமாக நம்புகிறார். தில்லிக்குச் செல்ல இன்று இரவு சென்னைக்குப் புறப்படுகிறேன். நாளைக் காலை ப்ளேன்!"

சந்திரமதி அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள். "தமிழ்! இன்று இரவே புறப்படுகிறீர்களா? நானும் தில்லிக்கு வருகிறேனே? என்னை விட்டுவிட்டு நீங்கள் மட்டும் போவது நியாயமா? இப்படியே என்னைத் தனியே இந்த அறையில் விட்டுவிட்டுப் போவதற்கு எப்படி உங்களுக்கு மனம் துணிந்தது?" அவள் குரல் தழுதழுத்தது.

"சந்திரமதி! இந்த விருந்தினர் மாளிகையில் உனக்கு என்ன பயம்? நான்கே நாள்களில் நான் வந்துவிடுவேன். உனக்குத்தான் தொழிலாளர் காலனியில் தனி அலுவலகம் தந்திருக்கிறாரே தலைவர்? அங்கே உனக்குச் சிறு சிறு பணிகள் செய்ய, பகல் உணவு பரிமாற உதவிக்கு ஒரு வேலைக்காரியையும் நியமித்துள்ளாரே!"

தமிழ் இப்படிச் சொன்னவுடன் சந்திரமதி சீறினாள்: "ஆமாம் வேலைக்காரி. அவள் வேலைக்காரியா? இன்னொரு தடவை அப்படிச் சொல்லாதிர்கள்."

தமிழ் ஒருகணம் திடுக்கிட்டான். சந்திரமதி இப்படிப் பேசியதை அவன் பார்த்ததில்லை. அவன் மௌனத்தைக் கண்ட சந்திரமதி, "அவள் வேலைக்காரி இல்லை. அவள், தலைவரின் தந்தையின் ஆசைநாயகிகளில் ஒருத்தி. அவரை நம்பி மோசம் போனவள். கதை கதையாக அவள் என்னிடம் சொன்னாள். எனக்கென்னவோ தலைவரிடம் பயமாக இருக்கிறது. நீங்களும் ஜாக்ரதையாக இருக்க வேண்டும். பணக்காரர்கள் சகவாசமே நமக்கு வேண்டாம் என்று தோன்றுகிறது." சந்திரமதியின் குரல் சற்று நடுங்கியது.

அவள் தோள்களை மெல்ல அணைத்துக் கொண்ட தமிழ், "சந்திரமதி! பயப்படாதே. தலைவரிடம் நாம் மிக சீக்கிரத்தில் செல்வாக்குப் பெற்றது பலருக்குப்

பொறாமையாக இருக்கிறது. அதனால் தலைவரிடமிருந்து நம்மைப் பிரிக்கச் சிலர் சதி செய்யலாம். நான் தில்லி செல்லும் போது மகிழ்ச்சியுடன் என்னை வழியனுப்பு. இங்கே இருக்கப் பயமாக இருந்தால், தொழிலாளர் குடியிருப்புக்குச் சென்றுவிடு. சந்திரமதி! உன்னை யார் என்ன செய்து விட முடியும்? உன் துணிவும், திறனும் நான் அறிவேன். கவலை இல்லாமல் இரு. நான்கு நாள்களும் ஓட்டமாக ஓடிவிடும்" என்று சமாதானப்படுத்தினான்.

அறை வாயிலில் யாரோ வருவது நிழலாடியது. தலைவரே வந்து விட்டார்.

"தமிழ்! இன்னும் புறப்படவில்லையா? ஒன்பது மணிக்குச் சேலம் ஜங்ஷனில் ரயில் ஏற வேண்டும். ஆறுமணிக்குச் சென்னை, எட்டு மணிக்கு மீனம்பாக்கத்தில் விமானம். சந்திரமதி என்ன சொல்கிறாள்? அடுத்த முறை சந்திரமதியையும் தில்லிக்கு அழைத்துச் செல்கிறோம். தனி கூபே உங்களுக்கு ரிசர்வ் செய்து விடுகிறேன்" என்றார் உற்சாகமாக. பிறகு ஏதோ யோசித்தவராய், "சந்திரமதி! நான்கு நாள்களும் உனக்குத் துணையாக இருக்க என் பர்ஸனல் ஸெக்ரட்டரியை அனுப்புகிறேன். தங்கமான பெண். அங்கே தொழிலாளர் குடியிருப்பில் உனக்கு உதவியாக இருக்கும் பெண்ணைத் திருச்செங்கோட்டுக்கு மாற்றிவிட்டேன். வேறொருத்தி வருவாள் உனக்கு உதவ, தைர்யமாய் இரு" என்று கூறி அறையைவிட்டு வெளியே வந்தார். தமிழ், காரை நோக்கிச் சென்றுவிட்டான். தலைவர் மீண்டும் திரும்பி அறைக்கு வந்தார். ஏதோ சிந்தனையில் கவலையுடன் இருந்த சந்திரமதியின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டி, "தைர்யமாக இரு. செலவுக்கு இந்த ஆயிரம் ரூபாயை வைத்துக் கொள்" என்று கூறி கண்ணைச் சிமிட்டிவிட்டு, 'வரட்டுமா?' என்றார்.

சந்திரமதி கன்னத்தை மெல்லத் தடவிக் கொண்டாள். அந்த இடம் கம்பளிப் பூச்சி ஊர்ந்தது போல, இருந்தது.



இரவெல்லாம் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. ஊரை நினைத்துக் கொண்டாள். தன் பெற்றோரை நினைத்துக் கொண்டாள். அவளுக்கு ஏனோ அழுகை அழுகையாக வந்தது. பெற்றோரை விட்டு வந்தது பெரிய தவறோ என எண்ணினாள். வாய்விட்டு அழ வேண்டும் போல தோன்றியது. தோழி மேகலாவை நினைத்துக் கொண்டாள். சென்னையில் அவள் சௌகர்யமாக இருப்பாள். அவளுடைய ஊக்கமும், யோசனையும் ஆதரவும் இல்லாதிருந்தால் நாம் சென்னையைவிட்டு பக்கிரியுடன் வந்திருப்போமா? - மேகலா! நீ தவறான யோசனை கூறிவிட்டாயோ?" என்று சந்திரமதி நினைத்தாள். மீண்டும் அழுகை வந்தது. இரவு சாப்பிடாமல் அப்படியே உறங்கி விட்டாள். தலையணை கண்ணீரால் நனைந்திருந்தது.

தொலைபேசி மணி விட்டு விட்டு ஒலித்த பிறகே, அவள் துயிலினின்று விழித்து விரைந்து சென்று தொலைபேசியை எடுத்தாள். தமிழ் பேசினான்:

"என்ன சந்திரமதி! டெலிபோன் எடுக்க இவ்வளவு நேரமா?" என்ற குரல் கேட்டு சந்திரமதி மிகுந்த உற்சாகமடைந்தாள்.

மகிழ்ச்சியும் பரபரப்பும் சேர "எங்கிருந்து பேசுகிறீர்கள்?" என்றாள்.

"தில்லியிலிருந்து - காலையில் சென்னை சென்ற உடனே பிளேன் பிடித்து தில்லி வந்தவுடன் உனக்குப் ஃபோன் செய்யுமாறு தலைவர் சொன்னார். நைட் தூங்கினாயா. காலையில் காபி சாப்பிட்டாயா? தலைவர் அருகேதான் இருக்கிறார். தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட ஃபங்ஷன் ஒன்று நடத்தத் திட்டமிடுமாறு உன்னிடம் சொல்லச் சொன்னார். இன்னும் நான்கு நாள்களில் வந்து விடுகிறோம்" என்று பேசிக் கொண்டே போன தமிழ் பேச்சில் சந்திரமதி குறுக்கிட்டு, "பிளேன் -

டெலிபோன், பங்ஷன், நைட் என்று ஒரே ஆங்கிலமயம்" என்று கூறியபோது, மறுபக்கத் தொலைபேசி தடைப்பட்டது. "ஹலோ ஹலோ தமிழ்! நான் பேசுவது காதில் விழுகிறதா?" என்று சந்திரமதி உரக்கப் பேசினாள். பதிலில்லை. போனை வைத்துவிட்டான். அவரைப் பேச விடாமல் நான் குறுக்கிட்டது தவறோ? தொலைபேசியிலும் அவர் குரல் இனிமையாக இருக்கிறது. 'தமிழ் தமிழ்! – நீங்கள் வர நான்கு நாள்களாகுமா? நாலு யுகமாக அல்லவா அது கழியும்? தமிழ். இனியும் சோதனை வேண்டாம்' சந்திரமதி தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

தட்டில் காபியும், சிற்றுண்டியும் கொண்டு வைத்த பணியாள், "அம்மா! ரொம்ப நேரம் தூங்கிட்டீங்க போலிருக்கு. பலமுறை கதவைத் தட்டினேன்" என்று அசடு வழியச் சிரித்து விட்டுச் சற்று நின்றான். அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தான். "ஐயா ராவு இங்கே வரலீங்களா?" என்று கேட்டுச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் குறும்புத்தனம் இருந்தது.

தேவையற்ற – வயதுக்கு மீறிய – பேச்சு என்று எண்ணிய சந்திரமதி அவனை எரித்து விடுவதுபோல் பார்த்து "கதவை மூடிக் கொண்டு போ" என்றாள் எரிச்சலுடன்.

குளியலறைக்குச் சென்று, கணத்தில் குளித்துவிட்டு மாற்றுடை அணிந்து, அன்று செய்யவேண்டிய வேலைகளுக்கான குறிப்புகளைத் தயார் செய்ய முற்பட்டபோது, மீண்டும் தொலைபேசி மணி ஒலித்தது. தமிழ் பேசுகிறார் என்ற ஆவலில் பாய்ந்து சென்று எடுத்தாள். சந்திரமதிக்கு ஒரு கணம் அதிர்ச்சி! தோழி மேகலா பேசினாள்.

"மேகலா – மேகலா – மேகலா! நேற்று இரவுதான் உன்னைப் பற்றி நினைத்தேன். இன்று நீ பேசுகிறாய். ஆயுசு நூறு."



"சந்திரமதி! நான் வெளியே பிரைவேட் எஸ்.டி.டியிலிருந்து பேசுகிறேன். அதிகம் வம்பளக்க முடியாது. நீ சௌக்யமாக இருக்கிறாயா? ஒரே வார்த்தை, ஆமாம் – இல்லை என்று சொல்."

"மேகலா! உன்னுடன் ஆயிரம் ஆயிரம் வார்த்தைகள் பேச வேண்டும். நீ எங்கிருந்து பேசுகிறாய்? என் இருப்பிடத்தை எப்படிக் கண்டு பிடித்தாய்?"

"சந்திரமதி! உன் பேச்சிலிருந்து நீ மகிழ்ச்சியாக நலமாக இருக்கிறாய் என்று தெரிகிறது. நீ போன பிறகு உன் பெற்றோர் என்னைத் துளைத்தெடுத்து விட்டார்கள். உன்னைத் தேடிச் சென்றதை எல்லாம் சொன்னார்கள். பங்களூர் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து நான் உன் முகவரியை அறிந்தேன். இலேசில் அந்த இன்ஸ்பெக்டர் சொல்லவில்லை. உன் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. அம்மா எப்போதும் அழுதுகொண்டே இருக்கிறாள்."

"மேகலா – நான் என்ன செய்ய? அப்பாவையும் அம்மாவையும் பார்க்க வேண்டும் என்று துடிக்கிறேன். நான் வரட்டுமா?"

"கூடாது. கூடாது. நீ வந்தால் உன்னைப் பலவந்தமாக அந்த வரனுக்குக் கட்டி வைத்து விடுவார்கள். முறையாக நீ கல்யாணம் செய்து கொள்ளாததால் உன்னால் ஏதும் செய்துவிட முடியாது என்ற முடிவுடன் இருக்கிறார்கள். நீ வராதே. நான் விரைவில் வந்து உன்னைச் சந்திக்கிறேன்." டெலிஃபோனை வைத்து விட்டாள் மேகலா.

தந்தைக்கு உடல் நிலை சரியில்லை. தாய் அழுது கொண்டே இருக்கிறாள் என்றெல்லாம் மேகலா கூறிய செய்திகளைக் கேட்டதும் சந்திரமதிக்கு துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

## முப்பத்தி மூன்று

சந்திரமதிக்குத் தூக்கம் வரவில்லை. மேகலா தொலைபேசியில் பேசியதால் ஏற்பட்ட கவலை மட்டும் அதற்குக் காரணமில்லை. அவள் தொலைபேசியை வைத்தவுடன் மற்றோர் அழைப்பு.

"சந்திரமதி மேடமா?" – எதிர்ப்பக்கக் குரல்.

"ஆமாம்."

"போனில் யாரோ நீண்ட நேரம் பேசினார்கள் போலிருக்கிறதே?"

"நீ யார் அதைப் பற்றிக் கேட்க?"

மறுபக்கத்திலிருந்து சிரிப்புக் குரல்.

"யார் நீ? – ஏன் சிரிக்கிறாய்? நான் போனில் பேசியதை ஒட்டுக் கேட்டாயா? நான் நீண்ட நேரம் பேசியது உனக்கு எப்படித் தெரியும்?" சந்திரமதி சற்று அதட்டலுடன் கேட்டாள்.

"சந்திரமதி மேடம்! கோபிக்காதீர்கள். கோபிக்கவும் தங்களுக்கு உரிமை உண்டு. ஏனென்றால்..." – என்று கூறிச் சற்று நிறுத்தியது மறுபக்கக் குரல்.

"ஏனென்றால்... – ஏன் பாதி பேசி நிறுத்துகிறாய்? உன் குரல் எங்கோ கேட்டது போல் இருக்கிறது; ஆனால் நினைவுக்கு வரவில்லை."

அதைக் கேட்டு மறுபக்கம் மீண்டும் சிரிப்பு. பிறகு சற்று மெதுவாகவும், மிகவும் வேண்டியவர் பேசுவது போன்ற அபிமானம் மிக்க குரலில், "சந்திரமதி! உனக்கு வேண்டியவள்தான் பேசுகிறேன். கடந்த சில நாள்களாக



உனக்கு வரும் போன் அழைப்பை, உனக்குக் கொடுப்பவள் நான்தான். மரியா என்று பெயர். நான் இந்துதான். இப்போது மதம் மாறிவிட்டேன். அது வேறு கதை..."

சந்திரமதி இப்போது அவளுக்கு மரியாதை தெரிவிக்க விரும்பி, "வணக்கம் மரியா! கொஞ்சம் சூடாகப் பேசிவிட்டேனில்லையா? மன்னிக்கணும். எனக்கு மனசு சரியில்லை. அதனால், மேலும் இந்த இடத்துப் புதிரெல்லாம் எனக்கு விளங்கவில்லை" – சந்திரமதி குரல் தழுதழுக்கப் பேசினாள்.

"மேடம்! வருத்தப்படாதே. உனக்கொன்றும் ஆபத்து நேராது. நாங்கள் இருக்கிறோம். உங்களை எச்சரிக்க விரும்பியே நான் என் எல்லைக்கு மீறி உங்களுடன் பேச முற்பட்டேன்..."

தொலைபேசி இணைப்புப் பிரிவில் பணியாற்றும் மரியாவுடன் பேசப் பேச, சந்திரமதிக்கு அவளை உடனே பார்க்க வேண்டும் போல் தோன்றியது.

"மரியா! – உன்னை நேரே சந்திக்க வேண்டும்போல் தோன்றுகிறது. உனக்கு என்மீது அளவு கடந்த அன்பும் மரியாதையும் இருப்பதை உணர்கிறேன். எச்சரிக்க விரும்புவதாகக் கூறினாயே, என்னவென்று சொல்ல வேண்டாமா?" – சந்திரமதி குரலில் பரபரப்பும் அவசரமும் அன்பும் கலந்திருந்தன.

"சந்திரமதி, சொல்கிறேன். விருந்தினர் மாளிகைக்கு நீ வந்த அன்றே சொல்லத் துடித்தேன். உன் காதலர் தமிழுக்கும் உனக்கும் தலைவர் – தலைவராம் தலைவர் சுத்தப் பொறுக்கி – செய்த உபசாரத்தைப் பார்த்தவுடனேயே நான் முடிவு செய்து விட்டேன்."

சந்திரமதி குறுக்கிட்டாள்: "மரியா! காதலர் என்று சொல்லாதே. கல்யாணம் ஆகிவிட்டது. என் கணவர் என்று சொல்லு."

“சரி; உன் கணவருடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்ள அந்த ஆள் முயற்சி செய்தது சரிதான். ஆனால் விருந்தினர் மாளிகையில் இடம் கொடுத்ததுதான் சந்தேகத்திற்கு இடமளித்தது.”

சந்திரமதி குறுக்கிட்டாள்.

“விருந்தினர் மாளிகை பிறகு எதற்கு இருக்கிறது மரியா? உனக்குத் தலைவரைப் பிடிக்கவில்லை என்பதற்காகச் சூழ்நிலைகளை உனக்குச் சாதகமான குற்றச்சாட்டுகளுக்குப் பயன்படுத்திக் கொள்வது நியாயமா?”

“உண்மையைச் சொல்கிறேன்.”

“அவர் மோசமானவர்; அயோக்கியர் என்று தெரிந்தும் நீ இந்த அலுவலகத்தில் தொடர்ந்து வேலை செய்வானேன்?”

“அவற்றை எல்லாம் நேரேதான் விவரிக்க வேண்டும். நீ இன்று தொழிலாளர் குடியிருப்புக்குச் செல்கிறாயா?”

“ஆமாம். அங்கே சென்று அந்தப் பெண்களுடன் பேசுவதால் எனக்கு மனநிம்மதியாக இருக்கிறது.”

“வெறும் கண்துடைப்பு. உன்னை ஏமாற்ற அந்த வேலையை உனக்குக் கொடுத்திருக்கிறான்.”

“மரியா! உன் மனத்தில் தலைவர் மீது ஏதோ வஞ்சனை வைத்துக் கொண்டு பேசுகிறாய்.”

“அப்படிச் சொல்லாதே சந்திரமதி! நான் உனக்கு விவரமாகச் சொல்ல வேண்டும்” என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே தொலைபேசியில் மற்றோர் அழைப்பு வந்ததால், “சந்திரமதி! வேறு ஒரு கால் வருகிறது. நீண்ட நேரமாக நான் பேசிக் கொண்டிருக்கிறேன். உன்னை இன்றோ நாளையோ தொழிலாளர் குடியிருப்பில் சந்திக்கிறேன்” என்றாள். அத்துடன் போன் பேச்சு முடிவடைந்தது.

சந்திரமதியின் குழப்பம் மேலும் அதிகமாகியது. ‘தமிழ்வேந்தன் தோற்றத்தையும், பேச்சையும் பார்த்தால்



அவரைத் தவறாக நினைக்க முடியவில்லை. ஆனால் அவர் பழகும் விதம், பார்க்கும் பார்வை பயத்தை ஏற்படுத்துகிறது. அவளுக்கே ஒன்றும் புரியவில்லை. மரியா சொல்வதில் உண்மை இருக்கக்கூடும். அவளிடம் நேரே பேசியபிறகுதான் ஒரு முடிவுக்கு வர வேண்டும். நம்மை விருந்தினர் விடுதியில் ஏன் தங்க வைத்து ராஜ உபசாரம் செய்கிறார்? வேறு வீடு தருவதாகக் கூறி அவர் கூறிய வீடும் பங்களா போல் இருக்கிறது. எதற்காக அவர் எங்களுக்குத் தர வேண்டும். ஏன் தவறாக நினைக்க வேண்டும்? தமிழின் ஆற்றலும் அறிவும் அவரைக் கவர்ந்து விட்டன. அவர் சேவையைப் பயன்படுத்தத் தரும் ஊதியமாக வெகுமதியாக அந்த உபசாரத்தை ஏன் கொள்ளக் கூடாது?’

சந்திரமதி பலவாறு சிந்தித்தாள். அமைதியான சிந்தனை தெளிவைத்தரும்; குழப்பத்தையும் அதிகமாக்கும்.

மணி பதினொன்று ஆகிவிட்டது. கார் வந்து விட்டது. குளித்து விட்டு மிகவும் சாதாரண நூல் புடைவை உடுத்திக் கொண்டு தொழிலாளர் குடியிருப்புக்குப் புறப்பட்டாள்.

சென்ற ஒரு வாரமாக அவளுக்கு உதவியாக இருந்தவளை திருச்செங்கோட்டிற்கு மாற்றி விட்டார்கள். இப்போது வந்திருப்பவள் அதிகம் பேசுவதில்லை.

சந்திரமதி பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். ஏதோ வேண்டா வெறுப்பாகப் பேசினாள். கனிவாகப் பேசிய பிறகு சொன்னாள்: “ஏம்மா உனக்கே நன்னா இருக்கா. நான் பாட்டுக்கு பேக்டரி ஆசுபத்திரியில் இருந்தேன். என்னை இங்கு மாத்திட்டாங்களே? பத்து வருசமா அங்கே இருந்தேன். இந்த மோசமான இடத்துக்கு ஏம்மா மாத்தச் செய்தே?”

சந்திரமதி திடுக்கிட்டாள். கோபத்துடன் கேட்டாள். “நானா உன்னை மாற்றச் செய்தேன்? இதற்கு முன்பு இருந்தவங்களைத் திருச்செங்கோட்டிற்கு மாத்திட்டாங்

கன்னு தலைவர் சொன்னார். உன்னை இங்கே மாற்றும்படி யார் சொன்னார்கள்? ஏன் வீண் பழி சுமத்துகிறாய்?"

"அந்தப் பொண்ணு நல்ல பொண்ணுதான். தலைவருடைய அப்பா அதை வெச்சிண்டிருந்தாரு. அவருக்குப் பிறகு எனக்கு வைப்பாட்டியா இருன்னு தலைவர் கேட்டாரு. அவ சம்மதிக்கலை. இளசா நீ வந்துட்டே; இனி அந்தப் பொண்ணை ஒதுக்கிட வேண்டியதுதானே? பழசாயிடுச்சு. புதுசுபுதுசாப் புடிக்கறதுதான் தலைவர் பழக்கம். அது எதுக்கு?" சொல்லிக்கொண்டே அவள் வெளியே போய்க் கொண்டே இருந்தாள்.

சந்திரமதி அதிர்ச்சியடைந்து அப்படியே உட்கார்ந்திருந்தாள். ஏதோ மர்மமான உலகத்தில் சிக்கிக் கொண்டது போன்ற உணர்வு அவளுக்கு.

சொன்னதுபோல் மரியா வரவில்லை. பகல் மூன்று மணிக்கே விருந்தினர் விடுதிக்குத் திரும்பி விட்டாள். படிக்கட்டு ஏறுமுன்பு, முன் கூடத்தில் இருந்த தொலைபேசி இயக்குபவர் அறையிலிருந்து குரல் ஒன்று கேட்டது.

"சந்திரமதி இங்கே வந்துவிட்டுப் போயேன்" என்று மரியா அழைத்தாள். அந்த இடம் சிறியதுதான். கண்ணாடியால் மூன்று பக்கமும் தடுக்கப்பட்டிருந்தது.

"சந்திரமதி என்னை மன்னிச்சிடு. சொன்னபடி என்னால் அங்கு வரமுடியவில்லை. கார் வேண்டும். நான் கேட்டால் இல்லை என்று சொல்லமாட்டார்கள். ஆனால், ஏன் எதற்கு என்று கேட்பார்கள். தலைவருக்குத் தெரிந்தால், டெலிபோனை விட்டுவிட்டு எங்கே போய்விட்டாய் என்று சார்ஜிப்பார்..."

"அவரைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே? எப்போதும் சிரித்த முகம். தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி, அவருடைய சாந்த முகத்திற்கு மேலும் அமைதியைத் தருகிறது" சந்திரமதி மரியாவின் வாயைக் கிளறினாள்.



"சந்திரமதி! உனக்கு அவர் அப்படித் தெரிகிறார். ஏனென்றால் உன்னை அவர் வலையில் சிக்க வைக்க வேண்டும். அன்பொழுகப் பேசினால்தானே நீ மயங்குவாய்? தலைவர் தலைவர் என்று சொல்கிறார்களே அவர் சுத்தப் பொறுக்கி. பொம்பளைப் பொறுக்கி" என்று சொல்லி நிறுத்தினாள். கோபத்தால் மூக்கு விடைத்து நின்றது. கருமையான முகமும் கோபத்தால் சிவந்தது.

"சந்திரமதி! நான் கடுமையாக விமர்சிப்பதாக நினைக்காதே. உன்னை எச்சரிக்கவே நடந்தவற்றைச் சொல்கிறேன். தமிழ்வேந்தன் என்றழைக்கப்படும் தலைவரின் பசிக்கு இரையானவர்களுள் நானும் ஒருத்தி. பதினெட்டு, இருபது வயதுப் பெண்ணைப் பார்த்து விட்டால் போதும்; சற்று எடுப்பாகவும் கண்ணுக்கு அழகாகவும் இருந்துவிட்டால் போதும். தன் வலையில் வீழ்த்தி விடுவார். பரசுராமன் என்ற பெயருடன் ஒரு கிராதகன் அவருக்கு பி.ஏ.வாக இருந்தான். பெண்களை வசியப்படுத்தி தலைவரின் சயன அறைக்கு அனுப்புவதில் சூராதி சூரன். அவனும் கொஞ்சம் பார்த்துக் கொள்வான். இரண்டாயிரம் கொண்டுபோய்க் கொடு என்றால் ஆயிரத்திஐநூறு அந்தப் பெண்ணுக்குக் கொடுப்பான். தமிழ் வேந்தன் அப்பாவும் பெரிய கில்லாடி. கார் இல்லாத காலத்தில் ஜல்ஜல் என்று ஒலிக்கச் செல்லும் இரட்டை மாட்டு வில் வண்டியில் ஏறி உட்கார்ந்து சுற்றுவாராம். சொல்லவாய் கூசுது. அவருக்கு அன்றலர்ந்த மலர், அப்போது பூப்படைந்த கன்னியாக வேண்டும். அப்படி அவர் அனுபவித்ததால்தான் இளமையாக இருக்கிறார் என்று சொல்வார்கள். ஐயோ, அவர் கடைசி காலத்தில் எப்படிச் செத்துப் போனார் என்று சொல்லவே கூசுது. சிறுநீரகம் சிதைந்து, கால் கை விளங்காமல் போய்ச் சேர்ந்தார். ஆனால் அவருக்குக் கடைசி வரையில் பணிவிடை செய்தவள், நீ சந்தித்தாயே அந்தப் பெண்தான். அவள் உன்னுடன் பகல் வேளையில்

பேசுகிறாள் என்பதைக் கேள்விப்பட்ட தலைவர் அவளைத் திருச்செங்கோட்டிற்கு மாற்றிவிட்டார்"- சற்று ஆசுவாசப்படச் சிறிது நிறுத்தினாள்.

"இன்று நான் ஒருத்தியைச் சந்தித்தேன். கறுப்பாக இருக்கிறாள். ஆனால் முகக் களை அதிகம். என்னை அவள் சாடி விட்டாள். என்னால் தான் அவளை ஆசுபத்திரியிலிருந்து தொழிலாளர் குடியிருப்புப் பணிக்கு மாற்றி விட்டனர் என்றாள். என் செல்வாக்கை இப்போதே தொடங்கி விட்டேனாம். எனக்குப் பயமாக இருக்கிறது மரியா! என்னைப் பற்றியும் தலைவரைப் பற்றியும் அதற்குள் முடிச்சுப் போட்டு விட்டார்களே?" சந்திரமதி அழாத குறையாகச் சொன்னாள்.

"ஆமாம், சந்திரமதி! அதற்குள் பலருக்குச் செய்தி பரவிவிட்டது. இப்போது நீதான் தலைவரின் அந்தப்புர ராணியாம். இனி உன்னிடம் கேட்டுத்தான் எல்லாக் காரியங்களும் அவர் செய்வாராம். ஏதாவது நடக்க வேண்டுமென்றால் உன் தயவுதான வேண்டுமாம். உன் அழகிலும், இளமையிலும் அறிவாற்றலிலும் தலைவர் பெரிதும் மயங்கிவிட்டாராம். உன் கணவருக்குப் பெரிய பதவிகள் தரப் போகிறாராம். தமிழை வெளி ஊருக்கு அனுப்புவதே, பகலில் உன்னுடன் தங்குவதற்காகத்தானாம்... நீயும் அவருக்கு ஒத்துழைப்பதாகப் பச்சைக்கொடி காட்டிவிட்டாயாம்" மரியா சொல்லிக் கொண்டு போகும்போது சந்திரமதி, "நிறுத்து நிறுத்து. பொய்யை நிஜமாக்குவதா? வதந்தியைப் பரப்புபவர்களையும் சொல்பவர்களையும் சும்மா விடமாட்டேன்" என்று ஆவேசம் வந்தவள் போல் அங்கேயிருந்த 'பேப்பர் வெயிட்'டை எடுத்துத் தரையில் வீசினாள். கண்ணாடியால் ஆனதால் அது, தரையில் பட்டுச் சுக்கு நூறாகச் சிதறியது!...

## முப்பத்தி நான்கு

தொழிலாளர் இல்லத்தரசிகளுக்கு உதவ தையல் இயந்திரங்கள் வாங்கப்பட்டன. பூ வேலை, பின்னல் வேலை கற்றுத் தர ஆசிரியைகளை நியமிக்க வேண்டும் என்று திட்டமிட்டாள் சந்திரமதி. தொலைக்காட்சிப் பெட்டி வாங்கவும், தொழிலாளர் நலவாழ்வு அதிகாரி கூறினார்.

"தொலைக்காட்சிப் பெட்டி எதுக்குங்க? இரவில் சமூகக் கூடத்தைப் பூட்டி விடுவோம். பாதிப் பேர் குடித்துவிட்டு வீட்டில் ரகளை செய்வார்கள். அந்த ரகளையைச் சமூகக் கூடத்தில் செய்யத் தொடங்கிவிட்டால் நம் எண்ணமே நிறைவேறாது மேடம்!" என்று தொழிலாளர் நலவாழ்வு அதிகாரி அழுத்தமாக, ஆனால் பணிவாகக் கூறினார்.

"உங்கள் கருத்திலிருந்து மாறுபடுவதற்கு மன்னிக்க வேண்டும். தொலைக்காட்சிப் பெட்டியை அமைத்தால் தொழிலாளர்களும், அவர்கள் குடும்பத்தாரும் மிகவும் ரசிப்பார்கள். தலைவரிடம் நான் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் நல்ல தொலைக்காட்சிப் பெட்டி - அதுவும் வண்ணப்பெட்டி - வாங்குங்கள்" என்று சந்திரமதியும் அழுத்தமாகச் சொன்னாள்.

"தலைவரிடம் இவங்களுக்குச் செல்வாக்கு இருக்கிறது என்பதை என்னிடம் தெரிவிக்க வேண்டும். அதற்காக, என்ன சொல்கிறாள் பார்த்தீர்களா? நாளைக்கு ஜி.எம்.க்கே உத்தரவு போடுவாள்" என்றார் அதிகாரி மெதுவாக அருகில் இருந்த நபரிடம். இன்னும் அவர்களிருவரும் பேசிச் சிரித்தனர். அதில் நையாண்டித்தனம் இருந்தது. சந்திரமதியின் காதில் விழவும் செய்தது.

“என்ன சொன்னீங்க மிஸ்டர்?” என்று சொக்காயைப் பிடித்து உலுக்காத குறையாக, அந்த அதிகாரியின் முகத்தின் எதிரேயே சீறினாள். “ஜி.எம். என்ன உங்க தலைவருக்கே உத்தரவிடுவேன் ஜாக்ரதை. எனக்கு எல்லாம் சரியாக நடக்கணும். தொழிலாளர் நலத்தில் எனக்கு அதிக அக்கறை உண்டு. நிர்வாகத்தையே மாற்றி அமைத்துவிடுவேன் ஜாக்ரதை!” சந்திரமதி பெண் சிங்கம் போல் கர்ஜித்தாள்.

சுற்றியிருந்தவர் நடுங்கி ஒடுங்கினர். ஆனால், அவள் முதுகின் பின்புறம் அசிங்கமாகப் பேசினார்கள். ‘ஓர் இரவு படுத்தவுடனேயே இவ இப்படிப் பேசறாளே? இன்னும் பங்களாவுக்குள்ளேயே போயிட்டா – அவ்வளவுதான்’ என்று அவதூறாகப் பேசினார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டு முதலில் சந்திரமதி ஆவேசப்பட்டாள். புறம்பேசுபவர்களை ஓர் உலுக்கு உலுக்க வேண்டும் என்று ஆக்ரோஷம் கொண்டாள்.

தொழிலாளர் குடியிருப்பிலுள்ள சமூகக் கூடத்தில் கூடியிருந்த தொழிலாளர்கள் மனைவிமார்களிடம் முதல் சில நாள்கள் உற்சாகமாகப் பேசிய சந்திரமதி சென்ற நான்கு நாள்களாகச் சோர்வுடன் பேசினாள். ‘அவள் கணவன் ஊரிலில்லை. அதனால்தான் ஒரு மாதிரியாக இருக்கிறாள்” என்று சிலர் கிசுகிசு பேசினர். ‘அதெல்லாம் இல்லை ‘தலைவர்’ இல்லை. அதான் காரணம்’ என்றனர் சிலர். ‘அதற்குள் தலைவரை வலையில் வீழ்த்திவிட்டாளா? ‘இவள் வீழ்த்துவதா? பாவம்! அவர் விரித்த வலையில் இவள் வீழ்ந்து விட்டாள்’. இப்படியாக மௌனப் பேச்சுகள் ரகசியமாகப் பேசப்பட்டன.

மரியா அவளிடம் மனம்விட்டுப் பேசிய பிறகு சந்திரமதி மேலும், கூனிக் குறுகி விட்டாள். வந்த சில நாள்களுக்குள்ளேயே இப்படித் தாங்க முடியாத அவமானமா என்று மனம் நொந்தாள்.



“அன்பே! என் தமிழே! நீங்கள் தில்லியில் போய் உட்கார்ந்திருக்கிறீர்களே? இங்கே நான் வேடன் கையில் அகப்பட்ட மானாக அல்லவா திண்டாடுகிறேன்? நமக்கு இந்த இடம் வேண்டாம். ஆடம்பரம் வேண்டாம்” என்று தனக்குள்ளேயே புலம்பினாள்.

தமிழ் தில்லி சென்று நான்கு நாள்களாகிவிட்டன. ஒருநாள் இரவு அவனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

“எப்படி இருக்கே சந்திரமதி?” என்று உற்சாகத்துடன் தமிழ் கேட்டான்.

“ஒவ்வொரு நொடியும் போனில் பேசக் காசு ஏறும். பத்து மணிக்குப் பிறகு சலுகைக் கட்டணம். தலைவர் பெரிய தொழிலதிபர் தரும் விருந்தில் கலந்து கொள்ளப் போயிருக்கிறார். எனக்கு அந்த சிகரெட் புகை மண்டலமும், மேல்நாட்டுச் சாராய நெடியும் பிடிக்கவில்லை. ஓட்டல் ரூமிலேயே தங்கிவிட்டேன். ஒருநாள் வாடகை இரண்டாயிரம் ரூபாய். தலைவருக்குத் தனி அறை. நான் தனியாய்த்தான் – உன்னையும் அழைத்து வராமல் போனேனே என்று வேதனைப்படுகிறேன். அடிக்கடி தலைவர் சொல்கிறார்: ‘இதுபோன்ற ஃபைவ் ஸ்டார் ஓட்டலில் தங்கி நீயும் சந்திரமதியும் சுகம் அனுபவிக்க வேண்டும்’ என்று. அவருக்குத்தான் நம் மீது எத்தனை அன்பு! சந்திரமதி! அநேகமாக நாளை மறுநாள் வந்துவிடுவேன். நான் பேசிக்கொண்டே இருக்கிறேன். உம் கூட சொல்லாமல் இருக்கிறாயே – ஏன் கோபமா சந்திரமதி?” தமிழ் பேசிக் கொண்டே போனான்.

மெல்லிய குரலில் சந்திரமதி சொன்னாள்: “தமிழ்! நீங்க சீக்கிரம் வந்துடுங்க. நாம வேறு எங்கேயாவது போயிடலாம். அவ்வளவுதான் இப்போ சொல்வேன்” – மேலே பேசுவதற்குள் தொலைபேசி தடைப்பட்டது.

தமிழ் மீண்டும் தொடர்பு கொள்ள முயன்றான். சந்திரமதியும் காத்திருந்தாள். தமிழ் எப்போது வருவான் என்ற ஏக்கமும் கவலையும் கூடி அவள் அப்படியே உறங்கிவிட்டாள். இரவு ஒரு மணிக்குத் தொலைபேசி ஒலித்தது. விட்டுவிட்டு ஒலித்தது. சந்திரமதி ஆழ்ந்த உறக்கத்திலிருந்ததால் தொலைபேசி ஒலிப்பது அவள் செவிகளில் விழவில்லை.

காலையில் மீண்டும் தொலைபேசி ஒலித்தது. "சந்திரமதி! அநேகமாக இன்று மாலை வந்துவிடுவேன்" என்று தமிழ் பேசினான். மீண்டும் தொலைபேசி தடைப்பட்டது. மரியா கேட்டுக் கொண்டேயிருந்தாள்.

சந்திரமதிக்குப் புதுத் தெம்பு ஏற்பட்டது. மரியா போனில் பேசினாள்.

"என்ன மேடம்! ஒரே உற்சாகம். உன் தலைவர் வரப் போகிறாரா?" என்று கேட்டாள். தமிழிடமிருந்து தொலைபேசி வந்ததையும், இன்று மாலை அவர் வரப்போகிறாரென்றும் உற்சாகமாகக் கூறினாள்.

"அவர் வந்தவுடன் முதல் வேலையாக இந்த நரகத்திலிருந்து விடுபட ஏற்பாடு செய்யப் போகிறேன்" என்று கூறும்போது சந்திரமதி ஏதோ விடுதலையை நோக்கிப் போவது போன்று உணர்ந்தாள்.

"மரியா! நீ சொல்லும்போது உன்மீது கோபப்பட்டேன். அலுவலக நிர்வாகிகள், கிளர்க்குகள் எல்லாம் மோசமானவர்கள் என்று தெரிகிறது" என்றாள் சந்திரமதி.

"ஏன்? - உன்னிடம் யாராவது ஜொள்ளு விட்டார்களா?"

"அப்படியென்றால்?"

"சரி... தெரியாவிட்டால் நல்லது. உன்னிடம் தவறான பார்வையை வீசினார்களா? அப்படிச் செய்தவர்கள் பெயரைத் தலைவரிடம் சொல்லிவிடு. மறுநாளே சீட்டுக் கிழிந்து விடும்" மரியா சந்திரமதியின் ஆத்திரத்தைக் கிளறினாள்.



"மரியா! நீயுமா இப்படிச் சொல்கிறாய்? எனக்கும் தலைவருக்கும் இப்படித் தவறான முடிச்சைப் போட்டு விட்டீர்களே? தலைவராம் தலைவர் - மரியா! இங்கே ஒருநாள்கூட நான இருக்க மாட்டேன். இது உறுதி. தமிழ் இன்று மாலை வருகிறார். வந்தவுடனேயே, நாங்கள் புறப்பட்டு விடுவோம். உன்னிடம் அப்போது சொல்லிக் கொள்ள முடியுமோ முடியாதோ! இப்போதே விடை பெறுகிறேன். நீயெல்லாம் தமிழ்வேந்தன் என்னும் அயோக்கியனுக்குக் கடமைப்பட்டவள். நீ தப்பிக்க முடியாது" - சொல்லிக் கொண்டிருந்த போதே மரியா குறுக்கிட்டு, "சந்திரமதி! ஸாரி, உன் ஆத்திரத்தைக் கிளறிவிட்டேன். நாங்கள் எல்லாம் அவன் பசிக்கு இரையானது அவன் பசப்பு வார்த்தைகளை நம்பி. இந்தச் சிறைச்சாலையிலேயே கட்டுண்டோம். என் இளமையை அந்த அயோக்கியன் நன்றாகப் பயன்படுத்தினான். அவனுக்குப் புதுப்புது இளசுகள் வேண்டும். அது அலுத்து விட்டால் வேறு தேடுவான். பிறகு, எங்களை வெறும் அலங்காரப் பொம்மைகளாக வைத்திருப்பான். நான் ஒன்று சொல்கிறேன் சந்திரமதி! நான் இந்த டெலிபோன் ஆபரேட்டர் வேலையைச் செய்துகொண்டே சமயம் பார்த்திருக்கிறேன். ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அவனை நரகலோகத்துக்கு அனுப்பாவிட்டால் என் பெயர் மரியா இல்லை. ஆனால், நீ ஜாக்ரதை. உனக்குப் பெரிய வலை விரித்திருக்கிறான். உன்னைப் போன்ற அறிவும் அழகும் உள்ளவர்கள் அவனுக்குத் தேவை. அவன் உன்னை விடமாட்டான் ஜாக்ரதை" என்றாள்.

"மரியா - என் தமிழ் சாதாரணப்பட்டவரல்லர். புகழுக்கும் பணத்திற்கும் இப்போது அவர் சற்று மயங்கியிருக்கிறார் என்றெண்ணுகிறேன். தலைவர் என்ற

27897
4289006

போர்வையில் அலையும் அந்தப் பசுத்தோல் போர்த்திய புலியின் சுயரூபம் அறிந்தால், குடலைக் கிழித்து மாலையாகப் போட்டுக் கொண்டு விடுவார். தமிழ் வந்தவுடன் அவருடன் நான் பறந்து விடுவேன். இது உறுதி!'' என்றாள்.

அன்று மாலை தமிழ் தில்லியிலிருந்து வரவில்லை. இரவு தொலைபேசியில் பேசினான். ''சந்திரமதி இன்று மாலை விமானத்தில் நான் வரமுடியவில்லை. ஒரு முக்கிய வேலையை என்னிடம் தலைவர் கொடுத்து விட்டார். நான் வருவதற்கு இன்னும் இரண்டு நாள்கள் ஆகும் போலிருக்கிறது. ஜாக்ரதையாக இரு. விமானத்தைவிட வேகமாகப் பறந்து வந்து விடுகிறேன்'' என்றான்.

''தமிழ்! – உன்னை அந்தத் தலைவர் ஏமாற்றி விட்டான். நீ வராமல் அவன் மட்டும் வருகிறானா? ஏதோ சூழ்ச்சி நடக்கிறது. தமிழ்! எந்த முக்கிய வேலையாயிருந்தாலும், நீ உடனே புறப்பட்டு வந்துவிடு. ஒருநிமிடம் கூட நான் இந்த இடத்தில் இருக்க மாட்டேன்.''

அதற்கு மேல் பேச முடியாமல் தொலைபேசி சதி செய்தது. தமிழ் எங்கிருந்து பேசினான் என அவளுக்குத் தெரியவில்லை.

இரவு ஏழு மணி. எங்கும் இருள் பரவி இருந்தது. விருந்தினர் மாளிகை இருக்குமிடம் வனப்பிரதேசம் போல் காட்சி தரும். இருளின் ஆட்சிக்கு உறுதுணையாக இரவுப் பூச்சிகள். வண்டுகளின் சப்தம், மேலும், பயங்கரத்தை அளித்தது. சந்திரமதி கட்டிலில் சாய்ந்தபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். கதவை மெல்ல 'டொக், டொக்' என்று தட்டும் சப்தம் கேட்டது. கதவை அவள் தாழிடாததால் கதவைத் திறந்து உள்ளே நுழைந்து, கதவைத் தாழிட்டான் தமிழ்வேந்தன்.



''சந்திரமதி! தமிழ் போன் செய்தாரா?'' என்று கேட்டுக்கொண்டே சோபாவில் உட்கார்ந்தான். அவன் பார்வையே ஒருவிதமாக இருந்தது. பார்வை பேச்சு ஏன் முகமே சரியில்லை.

தாழிட்ட கதவைத் திறக்கச் சென்ற சந்திரமதியை, தமிழ்வேந்தன் பாய்ந்து சென்று தடுத்து, ''ஏன் திறக்கிறாய்? சமயம் தெரியாமல் விடுதிப் பையன் உள்ளே வந்து விடலாம்'' என்று அவள் கரத்தைப் பிடித்துக் கொண்டான்.

அவள் கரத்தை அழுத்தமாகப் பிடித்திருந்தான். சந்திரமதி அவன் கரத்தை உதறி, ''விடுதிப் பையன் வந்தால் என்ன வரட்டுமே? கதவு மூடப்பட்டிருந்தால்தான் தவறு'' என்று கூறி அவன் பிடியைத் தள்ளினாள்.

தமிழ்வேந்தன் சிரித்தபடியே – ''சந்திரமதி! தமிழ் நாளைக்கு வந்துவிடுவான். உன்னைப் பற்றித்தான் அவன் எப்போதும் பேசுவான். அவன் உன்மீது உயிரையே வைத்திருக்கிறான். சந்திரமதி! தமிழ் நீ நான் மூவரும் ஒன்று சேர்ந்தால் ஒரு புது உலகையே படைத்து விடலாம். ஏன் பயப்படுகிறாய்? வா, இப்படி உட்கார்ந்து பேசுவோம்'' என்று குரலில் காமம் கொப்பளிக்கப் பேசினான்.

சந்திரமதிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தொலைபேசியை நோக்கி விரைந்தாள். யாரையாவது துணைக்கு அழைக்கலாமா என்று ஒரு கணம் யோசித்தாள். அதற்குள் –

தமிழ்வேந்தன் அவளை நோக்கிப் பாய்ந்தான்.

''சந்திரமதி! – என்னை நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லை. மரியா உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லையா? தமிழ் தவறாக நினைக்க மாட்டான்'' என்று பெரிதாக நகைத்தவாறு அவளை நோக்கித் தாவினான்.

"சொன்னாள் – சொன்னாள். உன் யோக்கியதையை அப்படியே விவரித்து விட்டாள். பாவி! என் தமிழை ஏமாற்றி, தில்லிக்கு அழைத்துச் சென்றுவிட்டு, உன் பசிக்கு என்னை இரையாக்கப் பார்க்கிறாயா? உன்னுடைய காம லீலைகளுக்கு நான் பலியாக மாட்டேன். போ – போய்விடு. இல்லாவிடில் உன் மானம், மரியாதை எல்லாம் தவிடுபொடியாகி விடும்" என்று கூவிக் கொண்டே அவன் பிடியில் சிக்காமல் கதவை நோக்கி ஓடினாள்.

சிறிது நேரம் கழித்து, அந்த அறைக்குள் வந்த விருந்தினர் மாளிகைப் பணியாள், அறையின் உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு 'ஹோ' என்று அலறினான்.

## முப்பத்தி ஐந்து

சந்திரமதி, விருந்தினர் மாளிகையை விட்டு விரைந்தோடி வெளியே வந்தபோது, தலைவரை அழைத்து வந்த காரோட்டி அவளுக்கு வணக்கம் தெரிவித்து, காரில் ஏறி வெளியே செல்லப் போகிறாள் என்று எண்ணி, காரின் கதவைத் திறந்தான். 'இதுவும் நன்மைக்கே' என்று சந்திரமதி காருக்குள்ளே ஏறி அமர்ந்தாள்.

"நேரே பேருந்து நிலையத்திற்கு ஓட்டு" என்றாள். காரோட்டி மறுபேச்சுப் பேசாமல் காரை விரைந்து ஓட்டினான்.

"நாம் விருந்தினர் மாளிகையை விட்டு வெளியேறி எவ்வளவு வேகமாக ஓடி வந்தாலும், தலைவர் தன் அடியாட்களை ஏவித் தன் பசிக்கு விருந்தாகாமல் தப்பிச் செல்லும் என்னைப் பிடித்திருக்க முடியும். நல்ல வேளையாகக் கார் இருந்தது. காரோட்டியும், நாம் எங்கோ



போக விரும்புவதாக நினைத்துக் காரின் கதவைத் திறந்து ஏற்றிச் செல்கிறான். தலைவர் நம்மைத் தொடர முடியாது" என்று எண்ணினாள். பின் பக்கம் வழியாக, காரைப் பின் தொடர்ந்து யாராவது வருகிறார்களா என்ற திகிலுடன் பார்த்து வந்தாள்.

"சற்று முன்புதானே தலைவர் உங்களைப் பார்க்க வந்தார்? நீங்கள் அவரைப் பார்க்கவில்லையா?" என்று காரோட்டி மெல்லப் பேச்சுக் கொடுத்தான். 'ஹூம்' என்று மட்டுமே பதில் கொடுத்தாள் சந்திரமதி.

"டில்லியிலிருந்து வந்தவுடனேயே உங்களைப் பார்க்க வந்துட்டார்!" என்றான் தொடர்ந்து.

'ஆமாம்' என்று மட்டுமே மறுமொழி கொடுத்தாள். அவன் ஏன் அப்படிக் கேட்கிறான்?

"உங்க ஐயா வர இன்னும் இரண்டு நாளாகுமாமே?" என்றான் காரோட்டி.

"உனக்குத் தெரிந்ததுதான் எனக்கும் தெரியும்" என்று மட்டும் பேசினாள் சந்திரமதி.

"அதில்லை அம்மா! கார்லே வரச்சே தலைவர் பேசிக்கிட்டு வந்தாரு. உங்க வீட்டு ஐயா டில்லியில் மிக முக்கிய வேலைக்காகத் தங்கி இருக்கிறதாக. அதான்..."

சந்திரமதிக்கு எரிச்சலாக இருந்தது. தமிழுக்கு டில்லியில் மிக முக்கிய வேலை – அவள் வியப்படைந்தாள். மிதிவண்டி நிலையம் தவிர, பேச்சு மேடை தவிர, வேறொன்றும் அறியாத தமிழ் டில்லியில் என்ன சாதிக்கப் போகிறார்? பொல்லாத தலைவனின் சூழ்ச்சி. என்னிடமிருந்து தமிழைப் பிரித்து, என்னை அடையச் செய்துள்ள சூழ்ச்சி.

'அன்புமிக்க என் தமிழே! நான் போகிறேன். எங்கே போகிறேன் என்று இந்தக் கணத்திற்கு என்னாலேயே சொல்ல முடியாது. நகரச் சந்தடியற்ற இடத்திற்குப் போய்,

அமைதியாக இருக்க வேண்டும். கழுகுப் பார்வைகள் இல்லாத இடம். வீண் படாடோபங்கள் இல்லாத இடம். என்னுடைய சாண் வயிற்றுக்குச் சோறு கிடைக்காமல் போய்விடுமா? அந்த மிருகத்திடம் சிக்கிச் சீரழிந்து, அவர் விருப்பத்திற்குச் சம்மதித்து, சுவர்க்க வாழ்வை அனுபவிப்பதை விட, சாதாரண ஏழைக் குடும்பத்தோடு குடும்பமாக, மதிப்பான வாழ்க்கை நடத்துவோம்.' சந்திரமதி இப்படி எண்ணும்போது நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"அம்மா! எங்கே போறீங்க? தொழிலாளர் காலனிக்கா?" ஓட்டுநர் திரும்பிப் பார்த்துக் கேட்டான்.

"பேருந்து நிலையத்திற்கு என்று முதலிலேயே சொன்னேனே? மறந்து விட்டாயா?" சந்திரமதியின் குரலில் சற்றுக் கடுமை இருந்தது.

"ஸாரி அம்மா! பஸ் நிலையத்தில் யாராச்சும் வெளியூரிலிருந்து வராங்களா? முதலில் என்னிடம் சொல்லியிருந்தால் நான் அழைச்சுக்கிட்டு வந்திருப்பேனே" - ஓட்டுநர் மிகவும் பணிவாக, பரிவுடன் பேசுவதுபோல் பேசினான்.

சில நாள்களுக்கு முன்பு அதே பேருந்து நிலையத்தில் தமிழுடன் வந்திறங்கியது அவள் நினைவுக்கு வந்தது.

"பேருந்து நிலையத்தின் உள்ளே கார் செல்லக்கூடாது. இங்கேயே நிறுத்தி வச்சிடறேன். நீங்க ஜாக்ரதையாப் போயிட்டு வாங்க. எந்த ஊர் பஸ்ஸுங்க? மெட்ராஸ் பஸ்ஸா? கோயம்புத்தூர் பஸ்ஸா?" என்று ஓட்டுநர் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, சந்திரமதி பதில் சொல்லாமல் நடந்தாள். மக்கள் கூட்டத்தில் கலந்தாள்.

சேலத்திலிருந்து உடனே புறப்பட்டு, எங்காவது புதிய ஊருக்குச் சென்றுவிட வேண்டும் என்ற பரபரப்பு.

'அடி பைத்தியமே! - உன்னிடம் காசு பணம் இருக்கிறதா? கட்டிய சேலையுடன் ஓடிவந்து விட்டாயே?' அவள் உள்மனம் கேட்டது.



திடுக்கிட்டாள். அப்படியே நின்றுவிட்டாள். என்ன செய்வது? காரிலேயே திரும்பவும் தொழிலாளர் குடியிருப்புக்குச் சென்று அலுவலக அறையில் வைத்திருக்கும் ரூபாயை எடுத்து வந்துவிடலாமா?

'கூடாது. கூடாது. நீயே வலியச் சென்று மாட்டிக் கொண்டுவிடப் போகிறாய்.' அப்போது -

"ஏ, சந்திரமதி, ஏ, சந்திரமதி" என்று யாரோ கூப்பிடுவது கேட்டது.

சந்திரமதி, பேருந்து ஒன்றின் படிக்கட்டுக்கருகே திகைத்து நின்றபோது, அந்தக் குரல் பேருந்துக்குள்ளிருந்து கேட்டது.

"சந்திரமதி! உன்னைத்தான்! இங்கு ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? ஏறு ஏறு, பஸ் புறப்படப் போகிறது" மேகலாவின் குரல்.

சந்திரமதி ஒருகணம் திடுக்கிட்டு நின்றாள். மேகலா! அவளுடைய ஆருயிர்த் தோழி. நேற்றுத்தான் தொலைபேசியில் பேசினாள். இப்போது இந்த ஆபத்தான நேரத்தில் இங்கே இருக்கிறாள்.

"சந்திரமதி! சந்திரமதி! ஏன் சிலை போல் நின்றுவிட்டாய்? பஸ் புறப்படப் போகிறது" என்று கூறிக் கொண்டே அவள் அருகே வந்து சந்திரமதியைப் பேருந்துக்குள் இழுத்தாள்.

சந்திரமதிக்குத் தான் காண்பது கனவா, நனவா என்று தெரியவில்லை.

பேருந்து புறப்பட்டுவிட்டது. சந்திரமதியின் நிலையைப் பார்த்து ஓரளவிற்கு மேகலா புரிந்து கொண்டாள்.

"சந்திரமதி! என்ன ஆச்சு உனக்கு? பஸ் நிலையத்தில் யாரைத் தேடி நின்று கொண்டிருந்தாய்? உனக்கு ஏதோ நேர்ந்திருக்கிறது என்று பார்த்தாலே தெரிகிறது. நான்இங்கே வந்திராவிட்டால் என்ன செய்திருப்பாய்? தலை வாராமல்,

முகத்தில் பொட்டில்லாமல், கசங்கிய புடைவையுடன் மூச்சிரைக்க வந்திருக்கிறாயே, என்ன நேர்ந்து விட்டது சந்திரமதி?" – மேகலா மெல்லிய குரலில் கேட்டு அவளைப் பரிவுடன் அணைத்துக் கொண்டாள்.

சேலைத் தலைப்பால் சந்திரமதி முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள். நடத்துனர், அவர்களிடம் பயணச் சீட்டைக் கேட்க வந்தார்.

"சந்திரமதி! நான் ஏர்க்காட்டிற்குப் போகிறேன். நான் முன்பே டிக்கெட் வாங்கிவிட்டேன். நீயும் என்னுடன் வருகிறாய். உனக்கு நான் டிக்கெட் வாங்குகிறேன். பிறகு பேசிக் கொள்வோம்" என்று கூறி, ஏர்க்காட்டிற்கு மற்றொரு டிக்கெட் வாங்கினாள்.

ஏர்க்காடு மலையில் பேருந்து வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்தது. அதுவரையில் சந்திரமதி ஏதும் பேசாமல் விழிகளை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தாள். அவள் எதிரே ஒரே இருள். பிறகு மெல்லிய விம்மலுடன் பேசத் தொடங்கினாள். நடந்தவற்றை விவரித்தாள். மேகலா, அவளை மெல்ல அணைத்து ஆசுவாசப்படுத்தி, "சந்திரமதி! தைரியமாக இரு. ஏர்க்காட்டில் என் தாய்மாமன் இருக்கிறார். குடும்ப விஷயமாக அவரிடம் முக்கியக் கடிதம் ஒன்று கொடுத்து விட்டுப் போக வந்தேன். எனக்குக் கல்யாணம் நிச்சயித்திருக்கிறார்கள். நல்லவேளையாக உன்னைப் பார்த்தேன். இரண்டு நாள்கள் ஏர்க்காட்டில் நிம்மதியாகக் கழிப்போம். பிறகு மீண்டும் சேலம் வருவோம். உன் மாஜித் தலைவரைச் சந்திப்போம். நான் அந்த மோசக்காரனின் முகமூடியைக் கிழித்தெறிகிறேன்" என்று கூறி, சந்திரமதியை அமைதிப்படுத்தினாள்.

சற்றுத் தெளிவடைந்த சந்திரமதி கேட்டாள்: "மேகலா! தமிழ் வந்தால் என்னைத் தேடுவாரே?' அதற்குள் தலைவர் என்னைக் காணாததால் ஏற்பட்ட ஆத்திரத்தைத் தமிழ் மீது காட்டுவார். என் இளமைக்காக என் கணவருக்குக் கொடுத்திருந்த மரியாதை, சிறப்பு எல்லாம் ஒரு நொடியில் பறிக்கப்படும். என்னைக் காணாமலும், தனக்குத் தலைவரால் ஏற்பட்டுவிட்ட அவமரியாதையாலும் வேதனைப்பட்டு, தமிழ் சேலத்தில் எங்கே என்று என்னைத் தேடுவார். அதை நினைக்கும்போது எனக்குக் கவலையாக இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது. எனக்கு ஏன் சோதனை மேல் சோதனை வருகிறது? நான் ஆரம்பத்திலேயே செய்தது தவறு என்று இயற்கை என்னை எச்சரிக்கிறதா? பெற்றோர் மனத்தை நோகச் செய்து விட்ட எனக்குத் தண்டனை கிடைக்கிறதா?" – சந்திரமதியின் குரல் தழுதழுத்தது.



"ஏய்! மெல்லப் பேசு. அடுத்த இருக்கையில் இருக்கிறவர்கள் கவனிக்கிறார்கள்" என்று மேகலா எச்சரித்தாள். சந்திரமதி தன்னை அடக்கிக் கொண்டாள். மலை ஏற ஏற குளிர்ந்த காற்று முகத்தில் வீசிச் சோர்வைப் போக்கியது.

மேகலாவின் தாய் மாமன் வீடு, பேருந்து நிலையத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருந்தது. நடந்துதான் செல்ல வேண்டும். வழியில் சிற்றுண்டி அருந்திவிட்டு, இருவரும் நடந்தவாறு பேசிக்கொண்டு சென்றனர்.

சேலம் வந்த சில நாள்களில் தான் அனுபவித்த இராஜ மரியாதையைச் சொல்லி, அவை எல்லாம் பெரும் ஆபத்து வருவதற்கு முன்பு ஏற்பட்ட வசதிகள் என்று தெரிந்து கொள்ளாமல் போனேனே என்று புலம்பி வேதனைப்பட்டாள் சந்திரமதி.

"உன் பக்கமும் சிறிது தவறு இருக்கிறது. நீ தலைவருடன் சிரித்துப் பேசிப் பழகியிருக்கக் கூடாது. பெண்களின் சகஜமான பழக்கத்தை, சிரித்துப் பேசுவதை ஆண்கள் எதற்கோ கொடுக்கப்படும் சமிக்ஞை என்று நினைத்து

விடுகின்றனர். கல்லூரியிலேயே நீ பார்க்கவில்லையா? கொஞ்சம் பேசினால், சிரித்தால், நெருங்கினால் சக மாணவர்கள் அதைத் தவறாகப் புரிந்து கொண்டு விடுவதில்லையா? வரம்பு மீறுவதற்கு அதை ஒரு பச்சை விளக்காக நினைத்துக் கொண்டு தகாத முறையில் நடக்க முற்படுவதில்லையா? ஆதிக்க ஆண் குலத்தின் இயற்கையான செய்கை அது" மேகலா நூற்றுக் கிழவியைப் போல் பெரிதும் அனுபவப் பட்டவள் போல் தள்ளாடும் குரலில் பேசினாள்.

சந்திரமதிக்கு அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது. "மேகலா! மிகவும் அனுபவப்பட்டவள் போல் பேசுகிறாய். முன்பே இதுபோன்ற பேச்செல்லாம் உனக்குப் பிடிக்கும். நான் உன்னைவிட்டுப் பிரிந்த பிறகு, உன் வாழ்க்கையில் ஏதாவது நடந்ததா?" என்று கேட்டாள்.

சந்திரமதியை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்வதற்காக, "அது ஒரு பெரிய கதைடீ, சந்திரமதி! நான் ஏமாந்து விடுவேனா? கல்லூரி மாணவன் ஒருவனைப் பைத்தியம் பிடிக்க வைத்தேன். இப்போ மெண்டல் ஆசுபத்திரியில் இருக்கிறான். நீ போன பிறகு எனக்குப் 'போர்' அடித்தது. வழக்கம்போல் சினிமாவுக்குப் போனேன். அப்போ ஒருத்தன், ஜொள்ளு கேஸ் – வந்து சேர்ந்தான். அவன் கொஞ்சம் நெருங்கினான். பிரதாப் போத்தன் மாதிரி விழிகள். கடிதம் கொடுத்தான். டிபன் சாப்பிட அழைத்தான். ஒருநாள் சினிமாவிற்கு அழைத்தான். போனேன். படம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஐயா தன் விளையாட்டைத் தொடங்கினார். சேப்டி பின் எடுத்து அவனுடைய கையில் நறுக்கென்று குத்தினேன். வலி பொறுக்கமாட்டாமல், வாய் திறந்து கத்தவும் முடியாமல் தவித்தான். இன்டர்வெல்லில் டாய்லெட் போவதாகச் சொல்லி வெளியே வந்து சொல்லிக் கொள்ளாமல் வீடு வந்து விட்டேன். பாவம், அந்த லூஸ், எனக்காகத் தியேட்டரிலேயே காத்திருந்து, காத்திருந்து தியேட்டரையே



சுத்திச் சுத்தி வந்து இரவு பத்துமணிவரை இருந்ததாம். "டாய்லெட்டுக்கு என் காதலி போனாள். திரும்பி வரவில்லை. டாய்லெட்டில் போய்ப் பார்க்கட்டுமா?" என்று தியேட்டர் மானேஜரிடம் அதட்டிக் கேட்கவும், தர்ம அடி கொடுத்து வீட்டிற்கு அனுப்பினார்களாம்!"

"அப்புறம்?" – சந்திரமதி தன் கவலையை மறந்து கேட்டாள்.

"அப்புறம், விழுப்புரம். ஆசுபத்திரியில அது அட்மிட் என்று சொன்னேனே?" என்று கூறிச் சிரித்தாள். சந்திரமதியும் கவலை மறந்து சிரித்தாள்.

மேகலாவின் தாய் மாமன் வீடு பெரிய பங்களா. வீட்டில் இரண்டே பேர். நாலு பணியாட்கள். ஓர் அல்சேஷன். சுற்றிலும் தோட்டம். ஊரே ஏர்கண்டிஷன் செய்தது போன்ற குளிர்ச்சி.

சந்திரமதிக்குத் தமிழ் நினைவு வந்துவிட்டது.

"மேகலா! தமிழ் சேலம் வந்து என்னைக் காணாமல் தவிப்பாரே! என்ன செய்வது?" என்று கவலையுடன் கேட்டாள். மேகலா உடனே பதில் சொல்லவில்லை. அன்று பகல் பொழுது உறக்கத்தில கழிந்தது. மேகலா தன் சொந்த வேலையாக, மாமனிடம் தனியே பேசிக் கொண்டிருந்தாள். இரவு கழிந்தது. மறுநாள் காலையில் செய்தித்தாளில் வந்திருந்த செய்தியுடன், மேகலா சந்திரமதியிடம் பரபரப்புடன் ஓடிவந்தாள்.

"சந்திரமதி! இந்தச் செய்தியைப் பார்த்தாயா?" என்று செய்தித்தாளை நீட்டினாள்.

அந்தச் செய்தித் தாளில் வந்திருந்த செய்தியைப் படித்து சந்திரமதி 'ஹா' என்று அலறிவிட்டாள்.

# முப்பத்தாறு

பகல் ஒரு மணி. கடுமையான வெயில். தனியான வேப்பமரத்திலிருந்து தாகத்தால் தவித்த காகம் ஒன்று கத்த முடியாமல் கத்திக் கொண்டிருந்தது.

வீட்டின் வெளியே மரத்தின் நிழலில், கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த பார்வதி அம்மாள், 'தினமும்தான் கத்துகிறாய் ஒரு செய்தி – ஒரு கடிதமும் வரவில்லை' என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

என்னதான் வீராப்பாக 'நீ எனக்கு மகளுமில்லை; நான் உனக்கு அம்மாவுமில்லை' என்று சொன்னாலும் இதய அடித்தளத்திலிருந்து, பெற்ற பாசம் அவளை அவ்வப்போது தவிக்க வைத்தது.

சந்திரமதியின் தந்தைக்குக் கவலை இல்லாமலிருக்குமா? வெளியே காட்டிக் கொள்ளாமல் 'பெண்ணை எப்போதோ தலை முழுகிவிட்டேன்' என்று, அவ்வப்போது கத்துகிறார்.

அப்படியெல்லாம் தலைமுழுக முடியுமா? நாலுபேருக்குப் பதில் சொல்ல முடியவில்லை – அந்த நாலு பேர் இப்படியும் பேசுகிறார்கள், அப்படியும் பேசுகிறார்கள்.

"இப்படி ஒரு பொண்ணு செய்யுமா? இந்த அதிசயம் எங்காவது நடந்திருக்குமா? பொண்ணை நல்லாத்தான் வளர்த்தே; கட்டிக்காத்தே; பெத்தமனம் பித்து, பிள்ளை மனம் கல்லுன்னு அது சொல்லிக்காமே ஓடிப் போயிடுத்தே" என்று தூரத்து அத்தைக்காரி புலம்பினாள்.

அவள் புலம்ப புலம்ப பார்வதிக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.



அறையில் கொடியில் தொங்கும் சந்திரமதியின் புடைவை, உள் பாவாடை, பிளவுஸ் – இவற்றைப் பார்க்கும்போது அழுகை அழுகையாக வந்தது.

"அதுசரி; அவளுக்கு அவனைப் புடிச்சுப்போயிற்று. காதும் காதும் வெச்சாப்போல அவனுக்கே கட்டி வச்சுடறதுதானே?" இப்படி அந்தரங்கமாய் 'அட்வைஸ்' செய்தவர்களும் உண்டு.

"நம்ம சாதி சனமா இருந்தா, பரவாயில்லைன்னு ஒத்துக்கலாம். ஓடிப் போனாலும் சேத்து வச்சுக்கலாம். அவன் எந்தச் சாதின்னு தெரியலைன்னு சொல்றியே பார்வதி"ன்னு மிகவும் பரிவு பட்டிருப்பவர்போல் தெரிந்தவர்கள் பேசினார்கள்.

"பார்வதி! இனிமே ஒருத்தரையும் வீட்டுக்கு வரச் சொல்லாதே. என்ன வம்புப் பேச்சு வேண்டியிருக்கு? போனவ போயிட்டா. ஒரு பொண்ணு ஓடற ஆற்றிலே போயிட்டதா நினைச்சுப்போமே. அவளைப் பத்தி இனி நீ பேசினாக்கூட நான் சும்மாயிருக்க மாட்டேன். ஜாக்கிரதை."

'அவருக்கென்ன கடுமையாக எச்சரித்து விட்டார்; அவர் ஆண்பிள்ளை, நாலு இடத்துக்குப் போய் மனசை மாற்றிப்பாரு...'

பார்வதி கவலையில், சரியாகச் சாப்பிடாததால் உடம்பு இளைத்தது. டாக்டரிடம் காட்டினால் உடம்புக்கு ஒண்ணுமில்லை என்றுதான் சொல்கிறார். டானிக் சாப்பிட எழுதித் தருகிறார். டானிக் கடையிலா இருக்கிறது, மனசிலே தானே இருக்கிறது!

நடுராத்திரியில் எழுந்து உட்கார்ந்து கொள்வாள். 'அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் இன்னும் கொஞ்சம் பணிந்து பேசி, பெண்ணைக் கையோடு அழைச்சு வந்திருக்கலாமோ?' என்று தன்னையே கேட்டுக் கொள்வாள். சிலருடைய குத்தலான பேச்சுகள்,

நாள்தோறும் சில யோசனைகள் இவற்றைக் கேட்டுக்கேட்டே பார்வதிக்கு மனநலம், உடல் நலம் பாதிக்கப்பட்டன.

அவரிடம் சொன்னால் அவர் எங்கே கேட்டுக் கொள்கிறார்?

ஒருநாள் சொன்னார்: "அடி! உன் மருமகப் பிள்ளை சேலத்திலே பெரிய இடத்தைப் புடிச்சுப்புட்டான். தமிழ் வேந்தன் என்ற பெரிய தொழில் அதிபர். மிகப் படிச்சவர். செல்வாக்கு மிக்கவர். நம் கட்சியின் அந்த வட்டத்திலேயே பெரிய தூண்."

அதுவரையில் விழிகளில் தேங்கி நின்று விழலாமா, கூடாதா என்று தவித்துக் கொண்டிருந்த விழி நீரைத் துடைத்துக் கொண்டு அவர் அருகே காலடியில் வந்து உட்கார்ந்து கொண்டு, மீண்டும் அவர் அந்தச் செய்தியைச் சொல்ல வேண்டும் என்பதற்காக, "என்ன சொன்னீங்க – என்ன சொன்னீங்க? பாழும் காது குப்பென்று அடைத்துக் கொள்கிறது" என்று ஆவலுடன் கேட்டாள்.

"நன்றாகவே அடைத்துக் கொள்ளட்டும். வருவோர் போவோரெல்லாரும் உன் பெண் ஓடிப்போன கதையைப் பேசுவதைக் கேட்கச் சக்தி இல்லாமல் காது அடைத்துக் கொள்ளட்டும்" என்றார்.

"பொறவு வைச்சுக்குங்க கிண்டல் கேலியை. எதோ மருமவப் பிள்ளை – பெரிய இடத்திலே இருக்கார்னு சொன்னீங்களே, அதை விளக்கிச் சொல்வீங்கன்னு கேட்டா குத்திக் குத்திப் பேசுறீங்களே?" – என்று சொல்லும்போது அவள் தொண்டை கம்மியது.

"மருமவப் பிள்ளைன்னு சொன்னது மட்டும் காதிலே விழுந்ததாக்கும்? மருமவப் பிள்ளைன்னு ஒப்புக்கிட்டே இல்லையா? இதுவரை நீ என்ன சொன்னே? எப்படி யாவது நம்ம பொண்ணை அழைச்சுட்டு வந்து, வேறே கல்யாணம் கட்டிக் கொடுத்துடலாம்னு சொன்னே. இப்ப அந்தப் போக்கிரியை மாப்பிள்ளையா ஏத்துக்கிட்டே,



அப்படித்தானே?" பார்வதியின் கணவர் – சந்திரமதியின் தந்தை – வேண்டுமென்றே மனைவியைச் சீண்டினார்.

"சொன்னேன் – அப்ப எனக்கு இருந்த ஆத்திரம், மனவருத்தம் என்னென்னமோ சொன்னேன். பங்களூரிலே தன்னந்தனியா ஒரு பொம்பளை நான், அந்த இன்ஸ்பெக்டர்கிட்ட வாதாடினேன். என் பெண்ணைக் காப்பாத்தப் போராடினேன். இப்ப எனக்குச் சிவனே ஒடுங்கி வருதுங்க – என்னை மேலும் போட்டு வாட்டாதிங்க. எங்கேயாவது சந்திரமதி சௌகரியமா கண்ணைக் கசக்காம இருந்தாப் போதுங்க. செய்தியைச் சொல்லுங்க" என்று துக்கம் தொண்டையை அடைக்க அவர் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்.

"உன் மாப்பிள்ளை – மகாமேதை. பக்கிரிக்கு இருக்கும் ஒரே தகுதி – நல்ல பேச்சாளி. அவனுடைய பேச்சுச்



சாமர்த்தியத்திலே தமிழ் வேந்தன் மயங்கி விட்டார் என்று நினைக்கிறேன். இப்ப தேர்தல் வருகிறது. அவனை உடன் வைத்துக்கொண்டு பிரசாரத்திற்கும் பயன்படுத்தப் போறார். உன் பெண் ஏன் கண்ணைக் கசக்க வேண்டும்? ஒருவேளை அவளும் தேர்தல் வேலையில் பக்கிரிக்கு உதவியா, புத்திசாலியா இருந்தா சம்பாதிக்கலாம். அரசியல்வாதிங்க மூலதனமே மயக்க வைக்கும் பேச்சுதானே?" என்று கூறி ஒரு மாதிரியாகச் சிரித்தார்.

பார்வதி, மீண்டும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு குரலில் சற்றுத் துணிவை வரவழைத்துக் கொண்டு, "ஏதோ அரசியலுக்கும் உங்களுக்கும் சம்பந்தமில்லாதது போல் பேசுகிறீர்களே! நீங்களும் நல்ல மேடைப் பேச்சாளி. நீங்க சம்பாதிக்கிறதுதானே?" என்றாள்.

"ஆங் - எங்க கால அரசியல் வேறு; நான் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவன். மில் தொழிலாளர்களுக்கு நான் பட்டிருக்கும் பாடு தொழிலாளியின் நெஞ்சு கூறும். அப்பொழுது கட்சி அரசியல் கிடையாது. தொழிலாளி - மொழிப் பிரச்னை மட்டுமே. ஒவ்வொரு விஷயத்தையும் பேசித் தீர்த்துக் கொள்வோம். முதலாளி ஒத்து வரவில்லையென்றால் வேலை நிறுத்த ஆயுதம் கடைசியில்தான். திரு.வி. கல்யாணசுந்தர முதலியார், சர்க்கரைச் செட்டியார் போன்ற தன்னலம் கருதாத் தலைவர்கள் வளர்த்த இயக்கமே இது -"

பார்வதி இரண்டு காதுகளையும் மூடிக் கொண்டு "நான் என்ன கேட்டேன்? நீங்க தொழிற்சங்க வரலாற்றை எனக்குப் பாடம் நடத்துகிறீர்கள்" என்று சலித்துக் கொண்டாள்.

"வரேன் - வரேன்; அந்த வரலாற்றைச் சொல்லி, இப்போதைய நிலையை விளக்கத்தான் வரலாறு சொல்கிறேன். கட்சி அரசியல் புகுந்து விட்டது. கட்சிக்குள்ளே கட்சிக் குழப்பம் வேறு. கட்சியில் வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர் என்று பதவியைப் பிடிச்சுக்



கோஷ்டி சேர்த்துக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். மிதிவண்டி நிலையம் பாலன் எனக்கு எதிரா வேலை செய்யத்தானே பக்கிரியைப் பயன்படுத்திக் கொண்டான்? அது வேறு கதை. ரொம்பப் பேசினால் எழுந்து போய் விடுவாய். விஷயத்துக்கு வருகிறேன். சேலத்தில் தமிழ் வேந்தன் என் எதிர்க்கட்சி. அதனால் "

பார்வதி சீறினாள்: "என்ன அதனால்? கட்சிக்குள் கட்சி கூடாது என்று சற்று முன்புதான் சொன்னீர்கள். அந்தத் தமிழ் வேந்தன் நம்ம கட்சியைச் சேர்ந்தவர்தானே? நல்லதுதானே? நீங்களே எதிர் பார்ப்பதுபோல், புத்திசாலி மாப்பிள்ளையா இருந்தா பணம் சேர்த்து வருகிறார் - ஏங்க, சேலத்துக்குப் போய் ஒரு தடவை பக்கிரியைப் பார்த்து வாங்களேன். பொண்ணு - மாப்பிள்ளை எப்படி குடித்தனம் நடத்துகிறார்கள் என்பதைப் பார்த்துட்டு வாங்களேன் - கட்சியிலே எதிரியா இருந்தா என்ன?" என்றாள்.

மௌனம் நிலவியது. பிறகு அவர் பேசினார்: "முடியாது முடியாது. உனக்கு வேண்டும் என்றால் பக்கிரி மாப்பிள்ளையாக இருக்கலாம். எனக்கு அவன் இரண்டு விதத்தில் எதிரி. கட்சியில் எதிரி. குலம் கோத்திரம் தெரியாத பய என் அருமைப் பெண்ணை மயக்கித் தூக்கிட்டுப் போயிட்டானே? அதனால் எதிரி என்பது மாறவே மாறாது" சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

பார்வதி அன்றெல்லாம் அழுதாள். பெண் பாசம் அவள் நெஞ்சை ஆழ்த்தியது. சேலத்தில் தன் மகள் நலமாக இருக்கிறாள் என்ற செய்தி ஒரு விதத்தில் அவளுக்கு ஆறுதலாக இருந்தது. யாரைக் கேட்டால் சரியான முகவரி கிடைக்கும் என்று சிந்தித்தாள்.

அப்படி வேதனையுடன் கழித்த ஒரு நாள் பகல் வேளை வெளியே கயிற்றுக் கட்டிலில் ஒய்வுடன் படுத்திருக்கும்

போது, மேகலா வந்தாள். பார்வதியின் அருகே உட்கார்ந்தாள்.

சிதைந்து போய்க் கிடக்கும் பார்வதியின் கரத்தை மெல்லப் பிடித்துக் கொண்டாள்.

மேகலாவைப் பார்த்தவுடன் பார்வதிக்குச் சோர்வெல்லாம் பறந்து போய்விட்டது. அவள் சொல்வதைக் கேட்கக் கேட்கப் புதிய தெம்பு பிறந்தது.

## முப்பத்தேழு

பார்வதி இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டாள். தன் மகள் சந்திரமதியைப் பற்றி மேகலா விவரிக்க, விவரிக்க, பெற்ற வயிறு கலங்கியது.

"அடி, சந்திரமதி, என் அருமை மகளே! உனக்கு இப்படியெல்லாம் நேரணுமா?" என்று புலம்பத் தொடங்கினாள்.

மேகலா திடுக்கிட்டாள். பார்வதி அம்மாள் இப்படி உணர்ச்சிவசப்பட்டு விடுவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. மகள்மீது ஆத்திரமும், கோபமும் கொண்டிருக்கும் பார்வதியிடம் சந்திரமதியைப் பற்றிய செய்தியைச் சொல்வதால் கலங்க மாட்டாள் என்று எண்ணினாள். கல் மனத்துடன் அவளிருப்பாள்; மெல்லமெல்ல அவள் மனத்தை மாற்றி சந்திரமதியையும், பார்வதியையும் ஒன்று சேர்த்துவிடுவோம் என்ற எண்ணத்தில்தான் மேகலா பகல் வேளையாகப் பார்த்து வந்தாள்.

அவள் எப்போதும், பார்வதியை 'அம்மா' என்றே அழைப்பது வழக்கம்.



"அம்மா! சந்திரமதிக்கு ஒன்றும் நேர்ந்து விடவில்லை. என் உறவினர் வீட்டில்தான் இருக்கிறாள்" என்று சமாதானப்படுத்தினாள்.

பார்வதி சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு, "இன்னும் என்னடி நேரணும்? பெரிய அரசியல் தலைவர் தமிழ் வேந்தன் கொலை செய்யப்பட்டார் என்று சொல்கிறாய். இவளிடம் அவர் தகாத முறையில் நடந்ததாகச் சொல்கிறாய். விருந்தினர் விடுதியிலிருந்து இவள் தப்பி ஓடி வந்ததாகச் சொல்கிறாய். கொலைக் குற்றம் இவள் தலையில்தானே விடியும்? அவர் பெரிய மனிதர். பணக்காரர். ஏழை சொல் அம்பலம் ஏறுமா? இவளைக் கைது செய்து சிறையில் அல்லவா அடைத்து விடுவார்கள்? ஜாமீனில்கூட வெளியே வரமுடியாதே! வழக்கு விசாரணை நடக்கும். தூக்குத் தண்டனை அல்லவா கிடைக்கும்? சந்திரமதிக்கு ஒன்றும் நேரவில்லை என்று சொல்கிறாய். நீங்க இரண்டு பேரும் ஆரம்பத்திலிருந்து செய்வது சரியாக இல்லை. உன் தைரியத்தில்தான், சந்திரமதி வீட்டைவிட்டு, பக்கிரியுடன் வெளியேறினாள்" என்றாள்.

பார்வதி கடுகு வெடிப்பதுபோல் வெடித்தாள். மேகலா ஒருகணம் அதிர்ச்சியடைந்தாள். சந்திரமதி பக்கிரியுடன் வீட்டைவிட்டுச் சென்றதற்கு பார்வதி அம்மாள் தன்னைக் குற்றம் சாட்டுவாள் என்பது அவளுக்குத் தெரியும். இதுவரை அத்தகைய குற்றச்சாட்டு வரவில்லை. இப்போது வந்து விட்டது. மேகலா பேசாமல் இருந்தாள்.

"உன் சொந்தக்காரர் வீட்டில் அவள் இருப்பதாகச் சொல்கிறாயே? – அவளை அப்படியே விட்டுவிட்டு ஏன் வந்தாய்? இங்கே ஏன் அழைத்து வரவில்லை? என் கணவர் சொல்வது போல் அவள் அந்தப் பக்கிரியைத் தலைமுழுகிவிட்டு வந்துவிட இதுதான் சரியான சமயம்" என்றாள்.

மேகலா இதற்கும் பதில் பேசவில்லை. மேகலா மௌனமாக இருப்பதைக் கண்ட பார்வதி மேகலாவின் கரங்களைப் பற்றிக் கொண்டு, "அடி, மேகலா! இப்ப என்னடி செய்யறது? பெத்த மனம் பித்து என்பார்கள். அவள் என்ன தவறு செய்திருந்தாலும் அவள் என் பெண். அவள்மேல் நான் உயிரையே வைத்திருந்தேன். அதிகச் சுதந்தரமும், செல்லமும் கொடுத்தேன். அதனால் வந்த வினைதான்" என்று கூறி நிறுத்தியவள், "மேகலா! இப்ப என்னடி செய்யறது?" என்று கூறி மறுபடியும் கண்ணீர் விடத் தொடங்கினாள்.

மேகலா, நெகிழ்ந்து விட்டாள். பார்வதியின் கரத்தைப் பிடித்துக் கொண்டாள். "அம்மா! நான் முழுதும் சொல்வதற்குள் அதிர்ச்சியடைந்து விட்டீர்களே. சந்திரமதிக்கு ஓர் ஆபத்துமில்லை. நான் சொல்வதை முழுமையாய்க் கேளுங்கள்" என்று கூறி, மிக அமைதியாக சேலத்தில் நடந்தவற்றை விவரிக்கத் தொடங்கினாள்.

சந்திரமதியிடம், தமிழ் வேந்தன் தவறாக நடக்க முயன்றதும், அங்கிருந்து, அவள் தப்பி ஓடிய அந்தச் சில நொடிகளிலேயே அந்த அறைக்குள் பாய்ந்து சென்ற பெண் ஒருத்தி தமிழ் வேந்தன் மண்டையில் ஓங்கி இரும்புக் குழாயால் அடித்திருக்கிறாள். எதிர்பாராத நிலையில் திடீரெனத் தாக்கப்பட்டதால் நிலைகுலைந்து வீழ்ந்தார் தலைவர்.

சிறிது நேரம் கழித்து, விருந்தினர் விடுதியில் உள்ள பணியாள் பதினாறு வயது விடலைப் பையன் சந்திரமதியைப் பார்க்க அங்கு வந்தான். ஒரு நாளைக்கு நாலைந்து தடவையாவது சந்திரமதியைப் பார்க்காவிட்டால் அவனுக்குப் பொழுது போகாது.

'சினிமாக்காரி மாதிரி இருக்காங்க. நம்ம தலைவரு அவளை வச்சிட்டிருக்காரு. அவரு ஜாலியா ஜல்சா செய்யறதுக்காத்தான், அவ புருசனுக்குத் தண்டச்சோறு



போட்டு வச்சிருக்காரு' என்று விருந்தினர் மாளிகை வேலைக்காரர் ஒவ்வொருவரிடமும் சொல்வான். விருந்தினர் மாளிகையில் தங்க வரும் அதிகாரிகளுக்கு விஸ்கி, பிராந்தி வாங்கித் தருவதில் முதலில் நிற்பான். சில அதிகாரிகள் அல்லது முக்கியமானவர்கள் மனைவியுடன் வருவார்கள். சிலர் வேறு விதமாகப் பெண்களை அழைத்து வருவார்கள். தங்கள் பி.ஏ.க்களை அழைத்து வருவார்கள். அந்தப்பையன் அவர்கள் தரத்தைப் புரிந்து கொள்வான். அப்படிப்பட்ட பெண்கள் தங்கும் அறைகளில் அவர்கள் எதிரே அடிக்கடி போய் நிற்பது அவன் இயற்கைக் குணமாகிவிட்டது. பல்லை இளித்துப் பேசுவான்.

அறைகளில் தங்கும் பெண்களைப் பற்றி தோட்டக்காரன், கார் டிரைவர், சமையல்காரர் ஆகியோரிடம் கதை அளப்பதில் அவனுக்குத் தனி ஆர்வம்.

தாழிடப்படாத கதவை மரியாதைக்குத் தட்டாமல் உள்ளே நுழைந்து விடுவான். எசகு பிசகான நிலையில் அறைகளில் பெண்கள் இருக்கும்போது, காபிக் கோப்பையுடனோ, அல்லது தண்ணீர்க் கூஜாவுடனோ நுழைந்து விடுவான் – அசடு வழியச் சிரித்துவிட்டு 'சாரி மேடம்!' என்று சொல்லிவிட்டுப் போய்விடுவான். சிலர் கத்துவார்கள். சிலர் வெளியே சொல்ல முடியாது வெட்கிப் போயிருப்பார்கள்.

தொலைபேசி இயக்கும் மரியா அவனைக் கண்டித்தால், "போங்க மேடம்! உங்க சமாச்சாரம் எனக்குத் தெரியாதா? சில வருடங்களுக்கு முன்பு விருந்தினர் மாளிகையில் தங்க வந்தவங்கதானே நீங்க? தெரியாதா உங்க கதை? என்னைக் கண்டிக்க வந்துட்டீங்களே" என்று கூறி வாயடைத்து விடுவான்.

மரியா கப்சிப், அவன் சொல்வது உண்மைதான். தலைவர் விரும்பி, தன்னைப் போகப் பொருளாகப்

பயன்படுத்தியதும், ஆசை வார்த்தைகள் சொல்லி அவ்வப்போது பசிக்குப் பயன்படுத்தியதும் சிலருக்குத்தான் தெரியும். ஆனால், தலைவர் கைவிட்டு விடவில்லை. ஒரு வேலை என்று போட்டுக் கொடுத்து, கணிசமாக மாதா மாதம் தொகை தருவதும் உண்மைதான். ஆனால், அவர் இப்படி இளம் பெண்களைத் தன் வலையில் விழச் செய்வது மரியாவிற்குப் பிடிக்கவில்லை. சமயம் பார்த்து அவரை வீழ்த்த நினைத்தாள்.

சந்திரமதி தமிழுடன் விருந்தினர் மாளிகைக்கு வந்து சேர்ந்தவுடனேயே மரியாவுக்குத் தலைவரின் நோக்கம் புரிந்து விட்டது. தமிழைத் தில்லிக்கு அனுப்பிவிட்டு, சந்திரமதியைத் தன் பசிக்குப் பயன்படுத்தப் போகிறார் என்பதும் புரிந்துவிட்டது.

தலைவரின் இந்தப் போக்கை எப்படியும் தடுத்துவிட வேண்டும் என்று மரியா முடிவு செய்தாள். அன்று சந்திரமதியின் அறைக்குள் சென்று கட்டிலுக்கடியில் மறைந்திருந்தாள்.

தலைவர் மிருகமாகி சந்திரமதியைத் தன் பசிக்கு இரையாக்கப் போகிறார் என்பது அவளுக்குத் தெரியும். அந்தச் சமயம் அவரைத் தடுத்துவிட முடிவு செய்தாள். ஆனால் –

நடந்தது வேறு. தலைவர் பசிக்கு இரையாகாமல் சந்திரமதி, முன்பே தப்பி ஓடிவிட்டாள். 'ஐயோ' என்ற அலறலுடன் தலைவர் கீழே சாய்ந்தார்.

இந்தச் செய்தியை மேகலா பார்வதியிடம் விவரித்தாள்.

"அம்மா! சந்திரமதியின் மீது எந்தப் பழியும் வராது. தலைவரைச் சந்திரமதி தாக்கவுமில்லை. அவளே சொல்கிறாள்" என்று பார்வதியைச் சமாதானப் படுத்தினாள் மேகலா.

"தான் நிரபராதி என்று அவளே சொன்னால், யார் நம்புவார்கள்? இது பெரிய கொலை வழக்காக ஆகும்



போலிருக்கிறதே. வழக்காட எங்களிடம் சக்தி இல்லையடி" பார்வதி மீண்டும் அழத் தொடங்கினாள்.

"அம்மா! அதற்கெல்லாம் நான் தகுந்த ஏற்பாடு செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன். சேலத்தில் என் நெருங்கிய சொந்தக்காரர் வீட்டில், சந்திரமதியைத் தங்க வைத்திருக்கிறேன். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்" மீண்டும் மேகலா ஆறுதல் சொன்னாள்.

"அடி மேகலா! இவ்வளவு உதவி செய்திருக்கிறாய்; அவளை இங்கே அழைத்து வந்திருக்கக் கூடாதா?" கவலையும் அன்பும் கலந்திருக்கக் கேட்டாள் பார்வதி.

"எவ்வளவோ வற்புறுத்தினேன். நான் அவசரமாகச் சென்னை வரவேண்டியிருந்தது. எனக்குக் கல்யாண நிச்சயதார்த்தம் நடக்க இருக்கிறது. அதைப்பற்றி மிக முக்கியமான செய்தியை என் தாய் மாமனிடம் சொல்லவே ஏர்க்காடு சென்றேன். எதேச்சையாக பஸ் ஸ்டாண்டில் மிகவும் பரபரப்பான நிலையில் சந்திரமதியைப் பார்த்தேன். உடனே என்னோடு அழைத்துச் சென்றுவிட்டேன். அங்கே, செய்தித்தாள் மூலமாக தலைவருக்கு நேர்ந்த கதியை அறிந்தேன். பிறகு சேலம் வந்தோம். அது வேறு கதை அம்மா! நீங்கள் கவலைப்படாதீர்கள். எவ்வளவோ வற்புறுத்தியும் சந்திரமதி சென்னைக்கு வர முடியாது என்று மறுத்துவிட்டாள். 'என் பெண் இல்லை' என்று நீங்கள் கூறி விட்டீர்களாமே! அதைக் கேட்டதிலிருந்து சந்திரமதிக்குத் தணியாத கோபம்" மேகலா மீண்டும் சமாதானப்படுத்த முயன்றாள்.

பார்வதி சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, "மேகலா! அடுத்து என்ன செய்யலாம் சொல்லு. அவ அப்பாவிடம் சொல்லலாமா, சொல்லக் கூடாதா? அவள் ஏன் இங்கே வர மறுக்கிறாள்? ஏதோ கோபத்தில் 'நீ என் பெண் இல்லை' என்று சொல்லிவிட்டேன். என் நிலையில் நீ இருந்தால் அப்படித்தான் சொல்லியிருப்பாய். போலீஸ்

இன்ஸ்பெக்டர் எதிரே எவ்வளவு கெஞ்சினேன்? வக்கில்லாத சைக்கிள் கடைக்காரனுடன் ஓடிப் போனவளுக்குப் பெற்ற அம்மா தாழ்வாகப் போய் விட்டேன் இல்லையா?"

மேகலா இப்போது குறுக்கிட்டாள்: "அம்மா! நீங்கள் சாதாரணமாகப் பேசும் சைக்கிள் கடைக்காரருக்குச் சேலத்தில் எவ்வளவு மரியாதை தெரியுமா? வக்கில்லாத அவருக்கு உள்ள வரவேற்பு உங்களுக்குத் தெரியாது. அந்த சைக்கிள் கடைக்காரரின் பெயர் இப்போது பக்கிரி இல்லை. தமிழ்! தன் கணவர் தமிழ் டில்லியிலிருந்து வரும்வரையில், எங்கும் நகரமாட்டேன் என்று சந்திரமதி பிடிவாதம் பிடிக்கிறாள். தமிழ் மீது அவள் தன்னுடைய உயிரையே வைத்திருக்கிறாள். அந்தப் பாசத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது அம்மா! நான் ஒரு யோசனை சொல்லட்டுமா? நான் இன்று இரவு மறுபடியும் சேலம் போகப் போகிறேன். என்னுடன் நீங்களும் வருகிறீர்களா? தங்களுடன் அவள் வர மறுத்தால் நீங்கள் அவளுடனேயே தங்கலாமே!" என்றாள்.

மேகலாவின் இந்த யோசனைக்குப் பார்வதி உடனே பதில் சொல்லவில்லை. கண்களை மூடிக் கொண்டு சிந்திக்கலானாள். கண்களை மூடியவுடன், மூடிய இமையிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் வெளியே பரவின.

## முப்பத்தெட்டு

சென்னை விமான நிலையத்தில் இறங்கி வாடகைக் கார் பிடித்து, சென்ட்ரல் ரயில் நிலையம் சென்றான் தமிழ்.

சேலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் ஒன்றும் அவனுக்குத் தெரியவில்லை. தில்லியில் தமிழ் நாளிதழ்கள் சரிவரக் கிடைப்பதில்லை. சேலத்திற்குச் செல்ல எந்த வண்டியிலும், முன்பதிவுப் பயணச் சீட்டு கிடைக்க வில்லை. சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இரவு வரையில் காத்திருக்கும் நேரத்தில், தான் பணி செய்த பாலன் மிதிவண்டி நிலையம் சென்று பழைய நண்பர்களைப் பார்த்து வரலாம் என்று நினைத்தான். ஆனால், சந்திரமதியின் தந்தைக்குக் கோபம் இன்னும் தணிந்திராத நிலையில் தான் அங்கு சென்றால் - ஏதாவது விபரீதம் நேரலாம் என்ற எண்ணத்தில், பயணிகள் தங்கும் விசாலமான கூடத்தில் பெட்டியைத் தலைக்கு வைத்துக் கொண்டு காலை நீட்டிக் கொண்டு கண்களை மூடிப் படுத்தான்.



தில்லியில் இருந்த உற்சாகம் அவனுக்கில்லை. தன்னை விட்டுத் தலைவர் திடீரென்று சேலம் புறப் பட்டுச் சென்ற பிறகு தில்லியில் அவனுக்கு உற்சாகம் குறைந்துவிட்டது. சந்திரமதியைத் தனியே விட்டுவிட்டு ஐந்து நட்சத்திர ஓட்டலில் மகிழ்ச்சியாக இருப்பது அவனுக்கு வேதனையை அளித்தது. கண்களை மூடினால் சந்திரமதியின் உருவம்தான்!

பகலில் ஒரு ரயில் சேலம் வழியே செல்வதாக அறிந்தான். முன்பதிவு செய்யாத பயணிகளுக்காக காருண்ய முள்ள நிர்வாகம் ஒரு பெட்டியை அந்த வண்டியில் சேர்த்திருந்தார்கள். எழுபத்திரண்டு பேர் இருக்கக் கூடிய அந்தப் பெட்டியில் இருநூறு பேருக்கு மேல் அடைந்திருந்தனர்.

"இந்தப் பெட்டியில் இடமில்லை: வேறு பெட்டிக்குப் போய்யா" என்று அந்தப் பெட்டியின் வாயிலில் திணறிக் கொண்டிருந்தவர்கள் கூச்சலிட்டார்கள்.

தமிழைப் போல் அந்தப் பெட்டியில் ஏற முயன்றவர்கள் பதிலுக்கு விவாதம் செய்தனர். "இந்த ரயில் உன் அப்பன் வீட்டு ரயிலா?" என்ற கணைகள் பலமாக எழுந்தன. யார் என்ன பேசுகிறார்கள் என்று தெரியாத வசைமொழிகள்

கீழ்த்தரமான பேச்சுகள், பிளாட்பாரச் சந்தடியோடு சேர்ந்து ஒலித்தன.

"நிர்வாகம் இன்னும் இரண்டு பெட்டி கூடுதலாகச் சேர்த்தால் என்ன?" என்ற கேள்விகள்.

"அரசு மாறினால்தான் இது போன்ற தொல்லைகள் குறையும்" என்று தமிழ் முணுமுணுத்தான்.

பெட்டிக்குள் ஜன்னல் அருகே இருந்த ஒருவர் "ஆமாம்; இவரு அரசாங்கம் அமைத்து சொகுசு ரயில் விடப்போறாரு போய்யா வேறு கம்பார்ட்மெண்டுக்குப் போ. இல்லா விடில், முதல் வகுப்புப் பெட்டிக்குப் போ" என்று கூவினார். அவர் வசதியாக உட்கார்ந்திருந்தார். அவர் அருகே அவர் பெண்டு பிள்ளைகள் ஏதோ தின்பண்டத்தைச் சுவைத்துக் கொண்டிருந்தனர்.

"கொஞ்சம் நகர்ந்து உட்காரய்யா. என்னவோ வீட்டிலே இருப்பது போல பரப்பிக் கொண்டு உட்கார்ந்திருக்கியே?" என்று உள்ளே நுழைந்து எப்படியோ முன்னேறி வந்தவர் இருக்கையில் உட்கார்ந்திருப்பவரிடம் கத்தினார்.

"நாலுபேர்தான் உட்காரலாம். ஏற்கெனவே ஆறு பேர் உட்கார்ந்திருக்கோம்" என்று பதிலுக்குச் சற்றுச் சௌகரியமாக உட்கார்ந்திருப்பவர் கத்தினார்.

இந்த நெருக்கடியிலும் தின்பண்டம் விற்பவர், பழைய இரண்டாந்தர சினிமா பத்திரிகைகளைப் புதிய பத்திரிகை போல் அதன் உள்ளடக்கத்தை விவரித்து விற்பவர், இஞ்சி முரபா விற்பவர், வேர்க்கடலை, பட்டாணி என்று ஏழைகளின தின்பண்டம் விற்பவர் என்று நெருக்கடியைச் சமாளித்து, நெளிந்து புகுந்து முகத்துக்கு நேரே விற்றுக் கொண்டே முன்னேறினர்.

பண்டங்கள் வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டமேலிடத்தில் சௌகரியமாக கால் நீட்டி அப்போதே அயர்ந்து தூங்குபவர்போல் படுத்திருந்த பயணியைக் கால்கடுக்க



நின்று கொண்டிருப்பவர் காலைத் தட்டி, "ஐயா இது சாமான் வைப்பதற்கு, படுக்க இல்லை. எழுந்திருய்யா" என்றார்.

உண்மையில் தூங்குபவர் உடனே விழிப்பார்: தூங்குபவர் போல் பாவனை செய்பவர் அசைந்து கொடுக்கவில்லை.

"ஏன்யா தள்ளறே — காலை மிதிக்காதே. இவ்வளவு சாமானுடன் இந்தப் பெட்டியில் ஏறித் தொந்தரவு செய்யறியே, அறிவு இருக்கா?"

இப்படிக் கேட்டவரைப் பார்த்து பெட்டி மூட்டைகளுடன் மனைவி குழந்தைகளுடன் திணறிக் கொண்டிருந்தவர், "யாரைப் பார்த்து அறிவு இருக்கான்னு கேட்கறே? இன்னொரு தரம் கேட்டே நாக்கை அறுத்து விடுவேன்" என்று பதிலுக்குக் கூவினார்.

"இன்னொரு தடவை என்ன? நூறு தடவை கேட்பேன். எருமைமாடு கணக்கா காலை மிதிக்கறே. அறிவு இருந்தா மிதிப்பியா?" என்று பாதிக்கப் பட்டவர் சீறினார்.

'எருமைமாடு என்ன செய்யுது பாரு' என்று அவர் கையை ஓங்கினார். "ஐயோ, சும்மா இருங்க" என்று சிறு யுத்தத்தைத் தடுத்து நிறுத்தினாள் அவருடைய மனைவி.

வாழ்க்கையின் முதல் பயணத்தை மிக சொகுசாக முதல்வகுப்பில் சென்றவனுக்கு, அந்த இரண்டாம் வகுப்புப் பயணம் புதிய அனுபவமாக இருந்தது.

வியர்வை நாற்றமும், மக்களின் தேவையற்ற பொருள்களைப் பயணத்தின் போது கொண்டு சென்று மற்றவருக்கு இடையூறு விளைவிக்கும் போக்கும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத உரையாடல்களும் தமிழை மிகவும் வருந்தச் செய்தன.

'ஆங்கிலேயக் கம்பெனியார் காலத்திலிருந்து ரயில் பயணம் இப்படித்தான் இருக்கிறது. இந்த நாட்டுக்கு

விமோசனமே இல்லையா? ஆளவந்தவர்கள், என்ன செய்கிறார்கள்! என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

தலைவருடைய கட்சி வெற்றி பெற்றால் இந்தப் போக்கை அடியோடு மாற்றலாம். ரயில்வே அமைச்சராகக் கூடிய வாய்ப்பு தலைவருக்கு இருக்கிறது என்பதைத் தில்லியில் கண்டுணர்ந்தான். ஆனால் தலைவருக்கு இதுபோன்ற பயணச் சங்கடங்கள் தெரிய வாய்ப்பில்லையே? மிகவும் சொகுசாக வாழ்க்கையை நடத்துபவர் துன்பங்களை எவ்வாறு உணரப் போகிறார் என்பதையும் நினைத்துக் கொண்டான்.

அமைதியாக இருக்குமாறு அதட்டல் போடுவோமா என்று நினைத்தான். பொதுக் கூட்டங்களில் சளசளவென்று பேசிக் கொண்டிருக்கும் மக்களைப் பார்த்து அமைதியாக இருங்கள் சப்தம் போடாதிர்கள் என்று கூச்சலிடுவது போல் கத்தலாமா என்று நினைத்தான்.

ரயில் புறப்பட்டு காற்று உள்ளே புகுந்தபின் அந்தப் பெட்டியில் சற்று அமைதி ஏற்பட்டது. வண்டியின் குலுக்கலே நெருக்கடியை அவரவர்கள் சரி செய்து கொள்ளச் செய்தது.

“ஐயா, தமிழ் தானே நீங்க?” என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். இளைஞன் ஒருவன் ஜிப்பா அணிந்து துண்டு போட்டுக் கொண்டு, ஒருகையில் சிகரெட்டுடன் அருகே நின்று கொண்டிருந்தான்.

அவனை அடையாளம் தெரியவில்லை. தமிழ் புரியாமல் விழித்தான்.

“நான் உங்க பேச்சை நிறையக் கேட்டிருக்கிறேன். என்னமா பேசறீங்க? இங்க எப்படி நெருக்கடியிலே?” என்று அவன் தமிழின் நலன்களைக் கேட்டான்.



தன் பேச்சுக்கு இவ்வளவு மதிப்பா? முகமறியாதவர்கள் மதிக்கிறார்கள்.

புன்முறுவல் பூத்த தமிழ் பதிலுக்கு வணக்கம் தெரிவித்தான்.

“எப்படி நிலவரம்? முதல்வகுப்புப் பெட்டியிலே போக வேண்டியவங்க இப்படிச் சிக்கிக் கொண்டீங்களே? சேலம் வரை நின்னு போக முடியுமா?” என்று பரிதாபப்பட்டான். அருகே உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்து, “கொஞ்சம் நகருங்க. ஐயா நிக்கறாரு. நாம சொகுசா உட்கார்ந்து போறோம். பொதுக் கூட்டத்திலே மணிக்கணக்கா நின்னு அவர் முழக்கமிடுவாரு. அது வேற கதை. ஆனா இங்கே கால் வலிக்க நிக்கலாமா? ஐயாவின் கட்சிதான் ஆட்சியைப் பிடிக்கப் போகுது. ஐயா ஒரு சட்டமன்ற உறுப்பினராகவும் வாய்ப்பிருக்கு, நகருங்கய்யா” என்று அந்த இளைஞன் நொடியில் இடஒதுக்கிடு செய்து தமிழை உட்கார வைத்தான்.

நன்றி சொன்னான் தமிழ், முன்பின் தெரியாத கட்சித் தொண்டர்களின் பந்த பாசத்தை நினைத்த போது அவனுக்கு மெய்சிலிர்த்தது. கட்சித் தொண்டர்களின் தியாகத்தால் தானே தலைவர்கள் சொகுசாகப் பவனி வருகிறார்கள்? உயர்ந்த பிறகு கால் பூமியில் படுவதில்லை. தொண்டர்களின் நலனைக் கவனிப்பதில்லை. இந்த இளைஞன் கூறுவதுபோல் நாம் எப்போதாவது சட்டமன்ற உறுப்பினரானால், தொண்டர்களை மறக்கக்கூடாது. மதிக்க வேண்டும் என்று உறுதிப்படுத்திக் கொண்டான். தமிழ் அவனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான்.

தமிழும், இளைஞனும் உள்ளூர் அரசியல் நிலவரம் பேசிக்கொண்டார்கள். அந்த இளைஞன் புரட்சிச் சமுதாயம் அமைப்பதில் ஆர்வமாக இருந்தான். அதற்காக அவன் நிமிடத்திற்கு ஒன்றாகப் பிடிக்கும் சிகரெட்டைக் கூடத் தியாகம் செய்யத் தயாராக இருந்தான்.

“தம்பி! உங்க பெயரைக் கேட்டுக்க மறந்துட்டேன்” என்று தமிழ் அவனை விசாரித்தான்.

“என் பெயர் மயில்ராவணனுங்க. அப்பா வைத்த பெயர் கடும்பாடி, அப்பாவுக்குப் புரட்சி இயக்கம்ன்னா பிடிக்கும். பெயரை மாத்திக்கொள்ள அவரே ஆசிர்வாதம் செய்தார். நான் நாமக்கல் வட்டத்தில் ஒரு கட்சித் தொண்டனுங்க. ஐயா, அன்னிக்கு வந்தபோது, நான்தாங்க, கொடியெல்லாம் கூடக் கட்டினேனுங்க” என்று காவிப் பல்லைக் காட்டி சிகரெட்டை மரியாதைக்காகத் திரும்பிப் பிடித்துப் புகையை அருகே இருந்தவர் முகத்தில் படர விட்டான்.

“நல்ல ஊருங்க நாமக்கல், மக்கள் எழுச்சி என்னைச் சிலிர்க்க வைத்தது. சரியான வழிகாட்டி இருந்தால் மக்கள் நாட்டு நிலைமையைப் புரிந்து கொள்வாங்க” என்றான் தமிழ்.

“என்னங்க, என்னை நீங்க வாங்கன்னு. உங்க எதிரே நான் பொடிப் பையனுங்க.”என்னை வாடா போடான்னு கூப்பிடுங்க” என்றான் “நான் நாகபுரிக்குப் போய்ட்டு வரேங்க நீங்க எங்க போயிட்டு வரீங்க?” என்று மயில்ராவணன் சற்று நெருங்கினான்.

வண்டி ஜோலார்ப்பேட்டை தாண்டியிருக்கும். வெளியே வெயிலின் கடுமை சற்றுக் குறைந்து குளிர்ந்த காற்று வீசியது.

வண்டியின் குலுக்கலும், காற்றும் தமிழைச் சற்றுக் கண்ணயரச் செய்தன.

அடுத்து திருப்பத்தூரில் வண்டி நின்றது. மயில்ராவணன் கூட்ட நெரிசலில் முன்னேறினாள். அரை மணி நேரம் கழித்து ஒரு சிறிய ரயில்நிலையம். அங்கே வண்டி நின்றது. ம. ரா. வண்டியினின்று இறங்கினான். சும்மா இறங்க வில்லை.

தமிழின் கைப்பையுடன். இறங்கினான்.



சேலத்தில்தான் விழித்துக் கொண்டான் தமிழ். பரபரப்புடன் ரயில் பெட்டியிலிருந்து இறங்கினான். பெட்டியை எடுத்துக் கொண்டான். கைப்பை இல்லை. “ஐயோ, என் பையைக் காணோம். எங்கே?” என்று கூவினான்.

அந்தப் பையில், செலவு போக ஐநூறு ரூபாய் இருந்தது. சில காகிதங்கள் இருந்தன. அது போக பத்து ரூபாயக்குச் சில்லறைக் காசு டிக்கட் ஜிப்பா ஜேப்பியில் இருந்து. அருகே இருந்தவர்கள் அந்தப் பையைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார்கள்.

“பையில் என்ன வைத்திருந்திர்கள்?”

“பை என்ன நிறம்? தோல் பையா பிளாஸ்டிக்கா?”

“இவ்வளவு கவனக் குறைவு கூடாது ? ம்பி! ஏதோ பெரிய தலைவரா வரப் போகிறதா அந்தத் தம்பி பேசிக் கொண்டாரே?”

“நீங்க வண்டியிலே ஏறும்போது பையைக் கையில் வைத்திருந்திர்களா?”

ஆளுக்கு ஒரு குறுக்கு விசாரணை செய்தனர்.

தன்னிடம் சொல்லாமலே சென்ற அந்த உண்மைத் தொண்டன் மயில் ராவணனைத் தேடினான் தமிழ்.

சேலம் ரயில் நிலையத்தில் இறங்கி, வெளியே வந்தான். தன்னை அழைத்துப் போகக் கார் வந்திருக்கிறதா என்று பார்த்தான். தலைவர் கார் அனுப்பியிருப்பார் என்று சற்று நேரம் காத்திருந்தான். ஈ, காக்கையைக் காணவில்லை. பசியும் தூக்கமும் அவனைச் சோர்வடையச் செய்தன.

விருந்தினர் விடுதிக்குச் சென்ற பிறகுதான் நடந்தவற்றை அறிந்தான். ஒரு கணம் அவன் தலைசுற்றியது. அருகிலுள்ள கம்பத்தைப் பிடித்துக் கொண்டான்.

இவனை 'வா'வென்று அழைக்கக் கூட ஆளில்லை. விருந்தினர் விடுதி பொலிவிழந்து கிடந்தது. காவல்காரனைக் காணவில்லை. வழக்கமாக அங்கே சுற்றித் திரியும் நாயைக்கூடக் காணவில்லை.

தொலைபேசி மூலம் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள மரியா இருக்குமிடம் சென்றான். தொலைபேசி பூட்டப்பட்டிருந்தது.

'தலைவர்' கதி எப்படியாவது ஆகட்டும். என் சந்திரமதி எங்கே? என்று வாய்விட்டுக் கூவினான். அந்த அமைதியான சூழலில் அவன் சோகக் குரல் எதிரொலித்தது.

அங்கே இருந்து என்ன பயன்? சந்திரமதியைப் பற்றி விசாரிப்போம் என்று தமிழ் நடந்தான்–நடந்தான், ஒரு கி.மீ. தூரமாவது நடந்திருப்பான். தொழிலாளர் குடியிருப்பிற்கருகே மரத்தடியில் ஒரு பெரியம்மா, உட்கார்ந்திருந்தாள். அதற்கு முன்பு ஓரிரு தடவை அவளைப் பார்த்திருக்கிறான்; பேசியிருக்கிறான்.

அவள் அருகே சென்று உட்கார்ந்து கொண்டான்.

"பெரியம்மா, சந்திரமதியைப் பார்த்தீர்களா? அவ எங்கே?" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டான்.

பெரியம்மா நடந்தவற்றை விவரிக்கலானாள்.

## முப்பத்தோன்பது

சில நாள்களுக்கு முன்பு மேகலாவுக்குச் சரியான மறுமொழி கூறாமல் அவளைப் போகச் சொன்ன பிறகு



பார்வதி தனக்குத்தானே புலம்பிக் கொண்டிருந்தாள். நாம் பெரிய தவறு செய்து விட்டோம் என்று உறுதியாக நம்பினாள். கணவரிடம் சொல்லிப் பார்த்தாள். அவர் காது கொடுத்துக் கேட்கவில்லை. மேகலா அழைத்தாள், சேலத்திற்கு. அவளுடன் சென்றிருக்கலாம். ஏன் போக மறுத்தோம் என்று அவளுக்கே புரியவில்லை.

குழந்தை குழந்தை என்று பொத்திப் பொத்தி வளர்த்தோம். எவ்வளவு காலத்திற்குத்தான் அவள் குழந்தையாகவே இருப்பாள். குஞ்சுக்குச் சிறகு முளைத்தது. இனியும் தாயின் அரவணைப்பில் இருக்குமா? பறந்துவிட்டது.

கிளைகளில் இளம் பறவைகள் அமர்ந்து காதல் கீதம் பாடுவதை, ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பதைத் தாய்ப்பறவை அருகேயே வந்து கண்டிருக்கிறதா? அது ஒரு பக்கம்; குஞ்சுப் பறவை ஒரு பக்கம்! சுதந்தரமாக அவை திரியும். தடை ஏது?

மேகலா வீட்டிற்குச் சென்று அவ்ளிடம் பேசுவோமா? இன்றே சேலம் போகலாமென்று சொல்வோமா? இரவெல்லாம் அதே சிந்தனை. கண்ணீர். புலம்பல். நாளை எப்படியும் மேகலா வீடு தேடிச் செல்வோம் என்ற உறுதியுடன், சற்று மன நிம்மதியுடன் உறங்கினாள்.

காலையில் ஐந்து, ஐந்தரைக்கெல்லாம் எழுந்து விடும் அவள் கணவன் வேலு, அன்று எழுந்திருக்காமல் கட்டிலில் படுத்திருப்பதைக் கண்டு, அவர் அருகே சென்று குரல் கொடுத்து எழுப்பினாள். வேலுவிடமிருந்து 'அம்மா, அம்மா' என்ற முனகலே வந்தது.

பரபரப்புடன் பார்வதி வேலுவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். கொதித்தது. மார்பு, கைகால்களைத் தொட்டாள். கடுங்காய்ச்சல்.

"ஐயோ! என்னங்க இது? நேற்று இரவு வீட்டிற்கு வரும்போது என்னிடம் சொல்லவில்லையே! இரவு ஒரு

தடவையாவது எழுந்திருப்பவர் நேற்று எழுந்திருக்கவில்லை. என்னைக் கூப்பிட்டிருக்கக் கூடாதா? பாவி, முன் இரவில் நான் ஏதேதோ எண்ணிப் புலம்பிக் கொண்டே, விடிகாலை சமயம் நன்றாகத் தூங்கி விட்டேன் போலிருக்கிறது. டாக்டரைக் கூப்பிடட்டுங்களா?" என்று கவலையுடன் பேசிக்கொண்டே அவர் அருகே உட்கார்ந்தாள். அமிர்தாஞ்சனத்தை எடுத்துத் தலை, மார்பு எல்லாம் தேய்த்தாள்.

"வேண்டாம்; தேய்க்க வேண்டாம்" என்று மெல்லக் கூறிவிட்டு, "இரண்டு மிளகு தட்டிப்போட்டு கஷாயம் போட்டுக் கொடு, சரியாகிவிடும்" என்றான், வேலு.

"நேற்றெல்லாம் அலைச்சல். சரியான வெயில். இரண்டு தடவை ஐஸ் போட்டு சர்பத் சாப்பிட்டேன். அது சட்டென்று சளிபிடித்துக் காய்ச்சலில் கொண்டு விட்டது. சளி வெளியேறினால் சரியாகிவிடும்" என்றான் வேலு மெல்லிய குரலில்.

"ஏங்க இப்படி அலையறீங்க? யாரு ஜெயிச்சு மந்திரியாப் போனா உங்களுக்கென்ன? நமக்கு ஏதாவது அதனால் பலன் உண்டா? நம்மைவிட்டுப் பிரிந்து போன சந்திரமதி நம்மிடம் வந்து சேர்வாளான்னு என்னிக்காவது நினைச்சிருப்பீங்களா? உங்க கவலை அலைச்சலெல்லாம் கட்சிக்குத்தான். நீங்க அலைந்து அலைந்து காய்ச்சலை வரவழைத்துக் கொண்டீங்க. எனக்குப் பயமாயிருக்குங்க. ஆசையாய் நான் வளர்த்த பெண்ணும் சொல்லிக்காம போயிட்டா. நீங்களும் நோயை வரவழைத்துக் கொண்டால் நான் என்னங்க செய்வது?" பார்வதி துக்கம் தொண்டையை அடைக்கப் புலம்பினாள்.

வேலு, தன் மனைவி பார்வதியின் கையைப் பிடித்துக் கொண்டு, "பார்வதி! ஏன் இப்படி வருத்தப்படுகிறாய்? உன் மகளுக்கு உன் நினைவு இருக்கிறதா என்பது தெரியவில்லை. நீதான் இரவு பகலாக அவளை நினைத்து



ஏங்குகிறாய். வருத்தப்படுகிறாய். புலம்புகிறாய். இதனால் உனக்கு மனச் சஞ்சலந்தான். புத்தி தடுமாறிப் போகப் போகிறது. அமைதியாய் இரு. உன் பெண்தானே, உன்னைத் தேடி வருவாள். அவள் ஆசைப்பட்ட பக்கிரியும் ஆட்டுக் குட்டி போல் அவளைத் தொடர்ந்து பின்னால் வருவான், போ – ஒய்வு எடுத்துக்கோ" என்றான்.

கணவன் முகத்தை இமைக்காமல் பார்த்த பார்வதி, "அதெப்படிங்க சந்திரமதி என்னைத் தேடி வருவாள்னு ஆருடம் சொல்றீங்க?" என்றாள் விழிகளைத் துடைத்துக் கொண்டே.

"அதுவா? அடிபட்டு ஆசுபத்திரியிலிருக்கும் அந்தப் போலித் தலைவன் தமிழ்வேந்தன் இனி பிழைத்து எழுந்திருக்க மாட்டான். பிறகு பக்கிரியை ஆதரிக்க அங்கே ஒருவரும் கிடையாது. அரசியல் பக்கம் அவர்கள் குடும்பத்தார் தலை வைத்துப் படுக்க மாட்டார்கள். அந்தப் பயல் பக்கிரிக்கு அங்கே இனி இடமில்லை. விரட்டி விடுவார்கள். சோற்றுக்கு வழியின்றி, சந்திரமதி உன்னைத் தேடி இங்கே வருவாள். அவளை விட்டுப் பிரிந்திருக்க முடியாமல் அவனும் வருவான்" என்றார்.

பார்வதி தன் கணவன் கையைப் பிடித்துக் கொண்டு, "என்னங்க, நிஜமாத்தான் சொல்றீங்களா? என் பெண் வீடு திரும்புவாளா? உங்கள் வாக்குப் பலிக்கட்டும். இங்கே வீட்டிற்கு வராமல் தனியே அவள் இருந்தாலும் சரிதான். என் பெண்ணைப் பார்க்கணுங்க. அவளைப் பார்க்காம ஒருகணம்கூட என்னால் இருக்க முடியாதுங்க. சேலம் வருமாறு மேகலா என்னை அழைத்தாள். நான்தான் முடியாது என்று சொல்லிவிட்டேன். ஏன் அப்படிச் சொன்னோம் என்று இரண்டு நாள்களாக என்னையே நான் நொந்து கொண்டேன்" என்று விழிகளைத் துடைத்துக் கொண்டவள், "ஏங்க மெய்யாத்தான் சொல்றீங்களா? என் மகள் வந்து விடுவாளா?" என்று கேட்டாள்.

"வேறு வழி?" – வேலு கட்டிலை விட்டு இறங்கினான்.

"ஏங்க – நான் ஒரு முறை சேலத்துக்குப் போய் என் மகளைப் பார்த்துவிட்டு வருகிறேனுங்க" என்றாள்.

வேலு மெல்லச் சிரித்தான். "நீ தனியா சேலம் போகப் போறியா?" என்று கேட்டான்.

"ஏன்? நீங்களும் வாங்க. போய்ப் பொண்ணைக் கூட்டியாந்துடுவோம்." பார்வதி தன் மனத்தில் அடக்கி வைத்திருப்பதைக் கொட்டுபவள் போல் கேட்டாள். கெஞ்சும் குரல் அதில் இருந்தது.

"கூடவே அந்தப் பயல் பக்கிரியையுமா?" காய்ச்சல் வேகத்தில் எரிச்சலுடன் கேட்டான் வேலு.

"பயல் கியல்னு கேவலமாப்பேசாதிங்க. எது எப்படி ஆனாலும் சந்திரமதி அவனை விரும்பி ஏற்று விட்டாள். இப்ப பக்கிரி நம் மருமகன்" பார்வதி சற்று அழுத்தமாகவே பேசினாள்.

"ஓ!" என்று வேலு கூறியதில் கிண்டல் இருந்தது. "மாப்பிள்ளையா? பங்களூர் காவல் நிலையத்தில் அன்று நீ கொடுத்த புகாரை, காவல் அதிகாரி ஏற்றிருந்தால், உன் மருமகப் பிள்ளை கம்பி எண்ணியிருப்பார். உன் மகளை மட்டும் இங்கே அழைத்து வந்திருப்பாய். பிறகு நாடகம் எப்படி மாறியிருக்குமோ! உன் பெண்ணுக்குத் தீராத அவப்பெயர் ஏற்பட்டிருக்காதா? சிறை சென்று வந்தான் என்ற பட்டப் பெயருடன்... பக்கிரியும்..." ஏதோ தொடர்ந்தபோது பார்வதி தடுத்து நிறுத்தி, "இதோ பாருங்க! உங்க பொண்ணு மீதும் தவறு இருக்குங்க. அவ மிக சாமர்த்தியசாலி என்பதை அப்போதுதான் தெரிந்து கொண்டேன். ஓடிப் போகும்போது தன்னுடைய பள்ளிக்கூட ஸர்டிபிகேட்டுடன் ஓடியிருக்கிறாளே! தான் மைனர் பெண் இல்லை, விவாக வயது நிறைந்தவள் என்று நிரூபித்து விட்டாள். அதனால் பழைய கதை எல்லாம் பேசாதிங்க.



இப்ப சந்திரமதி ஆபத்தில் சிக்கியிருக்கிறாள். மேகலா வந்து சொன்னாள். அவள் சேலத்துக்கு என்னைக் கூப்பிட்டாள்; வற்புறுத்தினாள். அன்றைய நிலையில் நான் மறுத்துவிட்டேன். இரண்டு நாள்களாக என் மனசு சரியாயில்லை. தூக்கம் வரலைங்க. சேலத்துக்குப் போய்ப் பெண்ணைப் பார்க்கணும்னு துடிக்குதுங்க. பழைய பேச்சுப் பேசாம நடக்கக் கூடியதைச் சொல்லுங்க" என்று பார்வதி அழமாட்டாத குறையாகப் பேசினாள். கெஞ்சினாள்.

வேலு பதில் ஏதும் பேசவில்லை. உள்ளூரக் காய்ச்சலின் வேகம் அவன் கண்களைச் சுழல வைத்தது. இருந்தாலும் கேட்டான்: "என்னை என்ன செய்யச் சொல்றே?" வேலுவுக்குக் களைப்பாக இருந்தது.

பார்வதிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. சற்று மௌனமாக இருந்தாள். பிறகு, "மேகலாவைக் கேட்டுத்தான் சொல்லவேண்டும்" என்றாள். அப்போது வாயிற் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

"வரலாமா?" என்று கேட்டுக் கொண்டே மேகலா உள்ளே வந்தாள். பார்வதிக்கு வியப்புத் தாங்கவில்லை. அவளை வைத்த கண் மாறாமல் பார்த்தாள்.

"மேகலா! வயசிலே நீ ரொம்பவும் சின்னவள். என் மகளை விடவும் ஆறு மாசம் சின்னவள். வயதில் பெரியவளாயிருந்தா கையெடுத்துக் கும்பிட்டிருப்பேன். உன்னைத்தான் நான் நினைத்தேன். நல்லவேளை நீ வந்துவிட்டாய். மேகலா! சேலத்துக்குப் போகலாமா? எப்ப ரயில்? அல்லது பஸ்ஸில் போகலாமா? உன் அப்பாவிடம் வேண்டுமென்றால் நான் அனுமதி கேட்கிறேன்" என்று மேகலாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

மேகலா மௌனமாய் இருந்தாள். பிறகு "அம்மா! சேலத்துக்கு நாம் போக வேண்டிய அவசியமே இல்லை. இதோ பாருங்க சந்திரமதி எனக்குக் கடிதம்

எழுதியிருக்கிறாள். 'பெர்ஸனல்'என்று குறிப்பிட்டிருந்தாள். நீங்க படிக்கத்தான் எடுத்துக் கொண்டு ஓடோடி வருகிறேன்" என்று கூறி, சந்திரமதி தனக்கு எழுதிய கடிதத்தைப் பார்வதியிடம் கொடுத்தாள்.

"பெர்சனல் என்று போட்ட கடிதத்தை நான் படிக்கலாமா மேகலா?" என்று பார்வதி மேகலாவின் முகத்தைக் குழந்தைபோல் பார்த்தாள்.

"உங்களுக்கு இல்லாத பர்சனலா எனக்கு? நான் படித்து விட்டுக் கடிதத்திலுள்ள விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லலாம். ஆனால் நீங்களே படித்தால்தான் நல்லது" என்று வற்புறுத்தினாள். பார்வதி வாங்கிப் படித்தாள்.

"என் ஆருயிர்த் தோழி மேகலாவிற்குச் சந்திரமதியின் நல்வாழ்த்துகள். உன் கல்யாணம் நிச்சயமாகியிருக்கும். தவறாமல் கல்யாண அழைப்பிதழ் எனக்கு அனுப்பு. முகவரி: இப்போதைக்கு நீ என்னை அன்று உட்கார வைத்த அதே வீடு. வீட்டிலுள்ளவர்கள் மிக நல்லவர்கள். ஆனால் அந்த வீட்டிலுள்ள மூத்த பிள்ளையின் பார்வைதான் சரியில்லை. வீட்டைவிட்டுச் சொல்லாமல் வந்த பெண் என்றாலே எல்லாரும் ஒரு மாதிரியாகத்தான் பார்க்கிறார்கள். 'ஓடிவந்தவள்' என்று மறைமுகமாகப் பேசுகிறார்கள். சமூகத்தில் செய்யக் கூடாத செயலொன்றை நான் செய்து விட்டதாக நினைக்கிறார்கள். நாம் தமிழ் படித்திருக்கிறோம். சங்க காலத்தில் காதலனுடன் ஓடிப்போகும் தலைவியைப் பற்றிய பாடல்கள் பல படித்திருக்கிறோம். அதை இலக்கியம் என்று போற்றுகிறோம். நீ நேரில் வந்தபோது நடந்தவற்றையெல்லாம் சொன்னேன், என் காதலை எப்படி முறியடிக்கப் பார்த்தார்கள் என்று. தூய காதல் வெற்றியடைய வேண்டும் என்பது என் இலட்சியம். அதற்காக எந்தவித இடையூறு வந்தாலும் நான் அவற்றிலிருந்து மீளப் போராடத் தயார். ஆனால் மனித வடிவில் மிருகங்கள் சமூகத்தில் நடமாடுகின்றனவே? அவர்களைச் சமாளிப்பது பற்றித்தான் யோசிக்கிறேன். பெண் என்றாலே அவர்களைச் சுலபமாக அனுபவிக்கலாம் என்று நினைக்கிறார்கள். நல்லவேளையாக நான் ஒரு மனித மிருகத்திடமிருந்து மீண்டேன். கடவுள் அந்த மிருகத்திற்குத் தண்டனை கொடுத்துவிட்டார். எதிர்ப்புகளை வென்று என் கணவருடன் இந்த உலகத்தில் வாழவேண்டும். கஞ்சி குடித்தோ, சிற்றாள் வேலை செய்தோ நான் வாழ்வேன்.



ஒரு சந்தோஷ சமாசாரம். என் அன்புக் கணவர் தமிழை நான் சந்தித்து விட்டேன். இங்கு நடந்தவற்றை, நீ என்னைச் சந்தித்த செய்தியை, சில நாள்களுக்குத் தங்க எனக்கு நீ இடம் தேடிக் கொடுத்த செய்தியை, என் தாயாரிடம் நிச்சயம் சொல்லியிருப்பாய் என்பது எனக்குத் தெரியும். தயவுசெய்து என் முகவரியை அவர்களிடம் தந்துவிடாதே. நான் சமூகத்தில் உயர்ந்து நின்ற பிறகு பெற்றோரைச் சந்திக்கிறேன். மறுபடியும் உனக்குக் கடிதம் எழுதுகிறேன்.

உன் அன்புள்ள தோழி

சந்திரமதி".

## நாற்பது

சந்திரமதி மேகலாவிற்கு எழுதிய கடிதத்தில் கூறியிருந்ததுபோல் தமிழை அவள் சந்தித்து விட்டாள். சந்திரமதியின் குடும்பத்தில் 'கடவுள் நம்பிக்கை உண்டு' என்றும் சொல்ல முடியாது. 'இல்லை' என்றும் சொல்ல முடியாது. தேவையான சமயங்களில் கடவுள் துணைக்கு வருவார். வேண்டாதபோது 'மனித முயற்சி' என்று தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்வார்கள். எல்லாம்

இயற்கையின் செயல் என்று இயற்கையைப் பாராட்டுவார் வேலு.

தமிழை சந்திரமதி சந்தித்தாள் என்பதைவிட, தமிழ்தான் சந்திரமதியைச் சந்தித்தான். தில்லியிலிருந்து வந்து இரண்டு நாள்கள் சேலத்தின் முக்கியமான வீதிகளில் அலைந்தான். சந்திரமதியும் தன்னைத் தேடி அலைவாள் என்ற எண்ணத்தில் குறிப்பாகத் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் சுற்றிச் சுற்றி வந்தான். தனக்குத் தானே பேசிக் கொள்வான்; சிரிப்பான். சிறிது அழவேண்டும்போல் தோன்றும். ஆண்பிள்ளை அழலாமா? கண்களில் ததும்பும் கண்ணீரை மட்டும் மெல்லத் துடைத்துக் கொண்டான். இட்லிக் கடை பாட்டி அவனுக்கு நல்ல வார்த்தைகள் கூறுவாள். "சந்திரமதி ரொம்ப நல்ல பொண்ணு. உன்னைத் தேடி அவ சேலத்திலே தான் எங்கோ அலைகிறாள். தம்பி! உனக்கு அரிச்சந்திரன் கதை தெரியுமா? நளதமயந்தி கதை தெரியுமா?" என்று கேட்டாள், இரண்டு இட்லியையும் சட்னியையும் தட்டில் போட்டுவிட்டு, "துன்னு, துன்னாதான் சந்திரமதியைச் சந்திக்கும் வரையில் தெம்பாக இருக்கலாம்; என்ன நான் சொல்றது?" என்று கேட்டுக் களங்கமில்லாமல் சிரிப்பாள். தமிழ் அமைதியாய் இருந்ததைக் கண்டுவிட்டு "நான் என்ன கேட்டேன்? தமயந்தி சந்திரமதி கதை தெரியுமா என்று?" அவன் முகத்தைப் பார்த்தபடி மீண்டும் "ஒரு கரண்டி மீன் குழம்பு ஊத்தட்டுமா?" என்றாள். மீன் குழம்பு வாசனை மணத்தது.

"வேண்டாம் பாட்டி! நான் அதெல்லாம் சாப்பிடற தில்லை. வள்ளலார் படிச்சவன்" என்றான் இட்லியை விண்டபடி.

"இரண்டு நாளா நான் உங்ககிட்ட இட்லி வாங்கிச் சாப்பிடுகிறேனே - இந்த கடனை எப்படி அடைப்பது? என்னிடம் கொஞ்சம் பணம் இருக்கு பாட்டி! சந்திரமதியைப் பார்த்தவுடன் ஏதாவது செலவுக்குத் தேவையாயிருக்கும்னு



வச்சிருக்கேன். உங்க கடனை அடைக்க என்னிடம் பணம் இருக்கு" என்று மேலும் பேசினான்.

"தம்பி! நான் சொல்றேன் பாரு நீ நல்லா இருக்கே. இங்கேயே ஒரு மில்லில் வேலை வாங்கிக்க. தமயந்தி, சந்திரமதி கதை தெரியுமான்னு நான் கேட்டேனே, பதிலைக் காணோம்" பாட்டி விடவில்லை.

புராணக் குப்பைகள் என்று அந்தக் கதைகளை அலட்சியப்படுத்தியவன். என்றாலும் நளனும், அரிச்சந்திரனும் தங்கள் மனைவி மக்களுக்குக் கொடுத்த தொல்லைகளைக் கேள்விப்பட்டிருக்கிறான். புராணம் என்றாலே பழைய கற்பனை என்று ஒதுக்கித் தள்ளியிருந்தான். நாம் அரிச்சந்திரனா? நளனா? இல்லை அப்படி ஆக வேண்டாம். தமயந்தி போல் சந்திரமதி போல் நம் சந்திரமதிக்குத் துன்பம் வர வேண்டாம்.

"சந்திரமதி கதையைத்தான் நான் கண்கூடாகப் பார்க்கிறேனே பாட்டி! வேறு சந்திரமதி கதை வேண்டுமா? என்னை நம்பி, கட்டிய துணியோடு ஓடிவந்தவள் பாட்டி" என்று கூறும் போது தொண்டை அடைத்தது; விக்கியது.

'கொஞ்சம் தண்ணி குடி. துன்னும்போது இப்படியெல்லாம் துக்கப்படக்கூடாது" என்று பாட்டி, அருகில் தவலையிலிருந்து பிளாஸ்டிக் டம்ளரில் தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள்.

"இன்னொரு தடவை அந்தப் பொண்ணு சந்திரமதியை ஓடி வந்தவள் என்று சொல்லாதே. நானும் தான் அந்தக் காலத்தில் ஆசைப் பட்டவருடன் வந்துவிட்டேன். என் புருசனும் நானும் எவ்வளவோ கஷ்டப்பட்டோம். எழுபது வயது அவரு வாழ்ந்தார். போய்ச் சேர்ந்தார். நாங்க நல்லாத்தான் இருந்தோம். பொழுது போகணுமில்லையா? அதான் இட்லிக் கடைவச்சேன். இன்னொரு தடவை ஓடி வந்ததாகச் சொல்லாதே. குடியிருக்க வீடு கொடுக்க

மாட்டாங்க. நான் குடிசை வீடு பார்த்துத் தரேன். சந்திரமதியைக் கண்டுபிடி – என்னு வாயைக் கழுவிட்டு, தெம்போடு போ" என்று ஆறுதலாகக் கூறினாள்.

பாட்டியின் வாக்கு பலித்தது. அந்தத் தெருமுனையில் வரும்போது சந்திரமதி கையில் பையுடன் கடையில் ஏதோ வாங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். சந்திரமதி தான்.. பரபரப்படைந்தான்.

"சந்திரமதி" என்று கூவினான். அந்தக் குரலில் இருந்த தாபம் – வேகம் – பரபரப்பு – எழுத்தில் வடிக்க முடியாது. நல்லவேளையாக அதிக நடமாட்டம் இல்லாத இடமாதலால் யாரும் கவனிக்கவில்லை. சந்திரமதியும் திரும்பிப் பார்த்தாள். கண்ணைக் கசக்கிக் கொண்டாள். தமிழ்.. தமிழ்!

அந்த ஒரு கணம்!

தமிழ் ஓடிவந்து அவளை அணைத்துக் கொண்டான். "சந்திரமதி! சந்திரமதி! உன்னைப் பார்க்க முடியுமா என்று கவலைப்பட்டேன். துடியாய்த் துடித்தேன்" அதற்கு மேல் பேச வரவில்லை.

"கடவுள் அருளாலே நாம் சந்தித்தோம்" என்று முணுமுணுத்த சந்திரமதி விழிகளை மூடிக்கொண்டு கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

"இந்தத் தெருமுனையில், ஓர் அம்மன் கோயில். 'எப்படியாவது என் தமிழை என்னிடம் சேர்த்து விடு. இந்த மாங்கல்யத்தை உனக்குக் காணிக்கையாக்குகிறேன்' என்று வேண்டிக் கொண்டேன். பலித்து விட்டது. இப்போதே கோயிலுக்குப் போவோமா!"

அவர்கள் பேசுவதை ஓரிருவர் கவனித்தனர். சந்திரமதியும் தமிழும் அதற்காக வெட்கமோ கவலையோ படவில்லை.



"சந்திரமதி! – இப்படி ஒரு பிரார்த்தனையா? நீ வித்தியாசமான பெண்ணாய் இருப்பாய் என்று எண்ணினேன். தாலியை உண்டியலில் போட்டுவிட்டால் பிறகு உன் கழுத்தில் தாலி? தாலி இல்லாவிட்டால் நம்மை யாரும் கணவன் மனைவியாக மதிக்க மாட்டார்கள். பார்வையே ஒரு விதமாக இருக்கும்."

சந்திரமதிக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை. உணர்ச்சி மிகுதியால் பேச முடியாமல் தத்தளித்தாள். நடப்பதெல்லாம் நிஜம் தானா என்றுகூடத் தோன்றியது. உணர்ச்சியை அடக்க முடியவில்லை. தேம்பித் தேம்பி அழுதாள். தமிழின் மார்பில் தலை புதைத்துக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"சந்திரமதி! சற்று முன்புதான் இட்லிக்கடைப் பாட்டி என்னை உற்சாகப்படுத்தி அனுப்பினாள். அங்கே போய் பாட்டி காலில் விழுவோம். தெய்வம் வேறெங்குமில்லை பாட்டி வடிவில்தான்" என்று கூறி, சந்திரமதியை அழைத்துக் கொண்டு இட்லிக்கடைக்குச் சென்றான். சென்றான் என்பதைவிட விரைந்தான் எனலாம்.

பாட்டிக்கு வியப்பு தாங்க வில்லை. கண்களை இடுக்கிக் கொண்டு அவர்களைப் பார்த்து, "என்னப்பா இது சினிமாக் கதை போலன்னா இருக்கு. எப்படியோ உன் பெண்சாதி கிடைத்து விட்டாள். இங்கேயே அப்படி திண்ணையிலே குந்துங்க. வியாபாரம் முடிச்சு எங்காச்சும் குச்சோ குடிசையோ பார்த்துத் தரேன்" என்றாள். பாட்டிக்கு எவ்வளவு அன்பு!

தமிழும் சந்திரமதியும் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள்.

"தமிழ்! ரொம்பவும் இளைத்து விட்டீர்கள்" என்று அவன் கரத்தை மெல்ல வருடினாள் சந்திரமதி.

"நீ மட்டும் என்ன? வாடிய மலர் போலாகி விட்டாய், விழிகளின் அடியே கருவட்டம். சரியாக வாரப்படாத

கூந்தல்" என்று பொதுவாகப் பேசியவர்கள் கடந்து போன வேதனை மிகுந்த நாள்களைப் பற்றிப் பேசலானார்கள்.

தில்லியிலிருந்து திரும்பி வந்ததையும், விருந்தினர் விடுதியில் சந்திரமதியைக் காணாமல் திடுக்கிட்டதையும் தமிழ் வேந்தனை யாரோ ஒரு பெண் மண்டையில் பலமாக அடித்து விட்டதையும் தான் கேள்விப்பட்டதை எல்லாம் விவரித்தான்.

விருந்தினர் விடுதியில் தமிழ் வேந்தன் தன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டதையும், அவனிடமிருந்து தப்பி வெளியே ஓடியதையும் சந்திரமதி கூறினாள்.

"பிறகுதான் தெரியும் அந்த அரக்கனை யாரோ மண்டையில் அடித்தார்கள் என்பது. என் மீது பழி வந்துவிடுமோ என்று பயந்தேன். ஆனால், ஆசுபத்திரியில், சற்று நினைவு வந்தபோது தன்னை அடித்த பெண்ணின் பெயரைத் தெளிவாக அந்த அரக்கன் கூறியிருக்கிறான். கொலைக் குற்றம் என்மீது வந்து நான் ஜெயிலில் இருக்க வேண்டுமா? இங்குதான் நமக்குக் கடவுள் துணை இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டேன்" என்று கூறி, சந்திரமதி விழிகளை மூடிக் கொண்டாள்.

"நாம் இப்போது என்ன செய்யலாம்?" என்று கேட்டான் தமிழ்.

"மேகலா நல்ல தோழி. அவள் என்னைச் சந்தித்து, ஆறுதல் கூறி, அவளுடைய உறவினர் வீட்டில் தங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளாள். குடும்பம் நல்ல குடும்பம். நான்கே பேர். அப்பா, அம்மா, மகன் அவன் மனைவி. ஆனால் அந்த 'பிள்ளை'யின் பார்வை சரியில்லை. ஆறுதலாக என் கதையைக் கேட்கிறானே என்று நம் கதையைப் பற்றி விவரித்தேன். மிகவும் அனுதாபப்படுபவன் போல் கேட்டுக் கொண்டான். அவன் மனைவி, அவன், நான் மூவரும் உட்கார்ந்து கொண்டு பேசுவோம். சீட்டு விளையாடுவோம்;



சீட்டு விளையாட்டின்போது ஓரிரு தடவை என் கையைப் பிடித்திருக்கிறான். முதலில் சாதாரணமாக எடுத்துக் கொண்டேன். கள்ளத்தனமிருப்பதைப் பிறகு உணர்ந்தேன். நான் உதறித் தள்ளிவிட்டு அவனைச் சுட்டெரிப்பவள்போல் பார்த்திருக்கிறேன். புன்முறுவல் புரிவான்; சிரிப்பான். குளித்துவிட்டு வரும் போது எதிரே வந்து நிற்பான். என்னையும் அவன் மனைவியையும் ஒப்பு நோக்குவான். என் அழகைப் புகழ்வான். ஒருநாள் அவன் மனைவி அவனிடம் மெல்லிய குரலில் பேசினாள், "ரொம்பவும் அசடு வழிகிறீர்கள். சந்திரமதி நீங்க நினைப்பது போன்ற காரெக்டர் இல்லை."

"ஆமாம்; ஆமாம். ரொம்பவும் பத்தினி. ஓடிவந்தவள். அவன் எங்கே அலைகிறானோ? சும்மா அவளைச் சீண்டுகிறேன்; பலித்தாலும் பலிக்கலாம். உனக்குத் துரோகம் செய்யமாட்டேன்."

"இடியட்" – என்று அவன் மனைவி பல்லைக் கடித்தாள்.

"உங்களுக்குள் இருக்கும் மிருக சபலம் அவ்வப்போது தலைதூக்குகிறது. அதைக் கிள்ளி எறிந்து விடுங்கள் என்று பலமுறை சொல்லிவிட்டேன். இன்னொரு தடவை அவளிடம் தாருமாறாய் நடந்து கொண்டால், அவளிடம் உதை வாங்குவது இருக்கட்டும் நான் பிறந்த வீட்டிற்குப் போய்விடுவேன்" என்றாள். எல்லாம் மிக மெல்லிய குரலில் தான். அந்தப் பெண் கணவனை நாலுபேர் அறியா வண்ணம் கண்டித்ததை நான் பாராட்டுகிறேன். ஆனால், அடுத்து என்ன நேருமோ என்ற கவலையுடன் இருந்தேன். இன்றைக்கு நீங்கள் என்னைச் சந்திக்காமலிருந்தால் நான் அந்த வீட்டைவிட்டு வெளியேறி இருப்பேன்."

சந்திரமதி விவரித்ததைக் கேட்கத்தமிழுக்கு மிகவும் வேதனையாக இருந்து. சந்திரமதியின் கரத்தை அழுத்தமாகப் பிடித்து, "சந்திரமதி! உன்னை நான் பிரியமாட்டேன், உடனே ஏதாவது வேலை தேடிக்

கொள்வோம். எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. மறுபடியும் நாம் சென்னைக்கே போய்விடுவோம். அறிமுகமான பழகிய ஊரில் பிழைக்க வழி தேடிக் கொள்வது சுலபம்'' என்றான்.

சந்திரமதி அதிர்ச்சியுடன் அவனை நோக்கினாள்.

## நாற்பத்தொன்று

பார்வதியின் துயரத்தைக் கண்டு மேகலாவும் கலங்கினாள். தாய்ப்பாசத்துக்கு நிகரே கிடையாது. சந்திரமதிக்கு இவ்வளவு பிடிவாதம் கூடாது. பார்வதியின் கணவனும் மறுமொழி ஏதும் கூறாமல் கட்டிலிலேயே படுத்திருந்தார். படுத்தபடியே அவர் அமைதியாகச் சிந்திக்கலானார்; 'முற்போக்குக் கருத்துடையவர் என்று பலராலும் பேசப்படும் நான், என் சொந்தக் குடும்பத்தில் இவ்வளவு பிடிவாதமாக இருப்பதற்கு என்ன காரணம்?' என்று சிந்திக்கலானார். மகள்மீது வைத்திருந்த பாச உணர்ச்சி தான் அதற்குக் காரணம் என்ற முடிவுக்கு வந்தார்.

'பாசம் வைத்திருப்பது உண்மையானால், மகளுடைய நலனைக் கவனிக்க வேண்டாமா? பறவைகளும் கூட தங்கள் குஞ்சுகள் சிறகு முளைத்துப் பறக்கத் தொடங்கியவுடன், அவற்றைத் தனியே செல்ல விட்டுவிடுகின்றன. குஞ்சுகள் தங்கள் இரையைத் தாங்களே தேடிக் கொள்வதைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றன. சிறிது காலம் கழித்துத் தங்களது இரையைத் தாங்களே தேடிக் கொள்ளும்போது குறுக்கே வருவதில்லை. பார்த்து ஆனந்தப்படுகின்றன. 'பகுத்தறிவு வாதம் பேசும் நாம் மட்டும் ஏன் இப்படி...?'



பார்வதி முடிவு செய்துவிட்டாள் - மேகலாவுடன் சேலம் சென்று மகளை அழைத்து வருவதென்று.

"அம்மா! எனக்கு அவளுடைய முகவரி தெரியும். தங்களிடம் சொல்லக்கூடாது என்று எழுதியிருக்கிறாள். நான் எப்படி சும்மாயிருக்க முடியும்? நான் வருகிறேன். உடனே புறப்படுவோம்: ஆனால் சந்திரமதியின் அப்பாவின் கோபத்துக்கு மீறி ஏதும் செய்வது சரியில்லையே?.." என்றாள். மேகலாவின் துணிவான முடிவு பார்வதிக்குப் பிடித்திருந்தது.

வேலுவிடம் பார்வதி பக்குவமாக எடுத்துக் கூறினாள். வேலு ஏதும் பேசவில்லை. அவர் கோபப்படுவார், சீறுவார் என்று பயந்து பயந்து, பேசச் சென்ற பார்வதிக்கு வியப்பாகவே இருந்தது. பார்வதியைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஏங்க, நம்ம பொண்ணு: அது தவறே செய்திருந்தாலும் எங்கோ ஓர் ஊரிலே கஷ்டப்படுவது தெரிஞ்சும் நாம மனசைக் கல்லாக வைத்துக் கொண்டிருப்பது நியாயமாகப் படவில்லை.." பார்வதி சாதாரண நாளில் இவ்வாறு கூறியிருந்தால் வேலு சீறுவார்.

"ஏதுடி நியாயம்? தர்ம நியாயத்தைக் கண்டுபிடிச்சாப்லே பேசறே. நம்மிடம் ஒரு வார்த்தை அவ சொன்னாளா? காதலாம் காதல் - அதெப்படி காதல் பத்தொன்பது வயதிலேயே வந்துவிடும்? அந்தப் பய பக்கிரி வேறு ஏதோ எண்ணத்தில் திட்டமிட்டு அவளை மயக்கி யிருக்கிறான். இவ்வளவு வருஷங்களாக வளர்த்த நம்மைவிட, நேற்று வந்தவன் அவளுக்கு உயர்ந்தவனாகி விட்டான். என் மானம் மரியாதை எல்லாம் கெடுத்த அவள் இனி என் பெண்ணில்லை. உனக்குப் பெண்தான் உயர்வு என்றால் போ. பொண்ணுடனேயே இரு. நீயும் அவளும் பக்கிரியும் சேர்ந்து ஓரளவுக்குக் கஷ்டப்படாமல் இருக்க வேண்டுமானால் நான் செலவுக்குப் பணம் தருகிறேன்"

என்று அவர் சொல்லி விடுவார் என்று பார்வதி பயந்தாள். தன் கணவரின் குணம் பார்வதிக்குத் தெரியும். அவர் என்ன சொல்வார் என்பதும் தெரியும். அவர் அதுபோல் சொல்லி விட்டால்?

பார்வதி பயந்து பயந்தே பேசினாள். தன் கணவரின் பதிலுக்குக் காத்திருந்தாள். அவர் முகத்தையே பார்த்திருந்தாள். அப்போது அவருக்கிருந்த உடல்நிலையில், தான் இவ்வாறு கேட்பது சரியில்லை என்ற கவலையும் அவளுக்கிருந்தது.

என்ன செய்வது? ஒரு பக்கம் கணவர், மறுபக்கம் மகள்! மகளிடம் பாசம், கணவரிடம் மரியாதை, அதற்கு மேலும் ஒன்று இருக்கிறது. அதுதான், பயங்கலந்த - பண்பாடு மிகுந்த உறவு.

பார்வதி பயந்ததுபோல் ஏதும் நடக்கவில்லை. வேலு அவளையே சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்தார்..அவர் விழிகளில் கண்ணீர் தேங்கியது. அவருடைய மௌனம் பார்வதிக்கு முதலில் ஆறுதலை அளித்தது. துணிவை அளித்தது. அவர் கண்களில் தேங்கியிருந்த கண்ணீர் எந்தச் சமயமும் பெருகிவிடும் என்பதை அறிந்து பார்வதிக்கும் அழுகை வந்தது. கணவர் இயற்கையான குணத்திலிருந்து மாறியதால், அவள் தன் மனத்தில் தோன்றியதைக் கூறலானாள்:

"ஏங்க - உங்களுக்குள்ள இந்த உடல் நிலையிலே நீங்க வருத்தப்படாதிங்க. உங்களுக்குப் பிடிக்காத காரியத்தை நான் செய்ய மாட்டேங்க. என்ன துணிவோடு போனாளோ, அதே துணிவின் துணையோடு நிண்டாடட்டும். ஆனால் இந்த மேகலா அடிக்கடி வந்து, 'இப்படி நீங்களும் சந்திரமதியை ஒதுக்கித் தள்ளலாமா? என்னதான் இருந்தாலும் அவ உங்க ரத்தம் இல்லையா? உங்க சதை இல்லையா?' என்று வசனம் பேசுகிறாள். சந்திரமதியை மிகவும் பாதுகாப்பான இடத்தில் தான் அவள் தங்க



வைத்திருக்கிறாள். மேகலாவும் என்னுடன் வருகிறாளாம். நாங்கள் இருவரும் சேலம் போய் சந்திரமதியை அழைத்து வருகிறோம். சந்திரமதி நல்ல பொண்ணுங்க. உங்க மகள் நல்லவளாக இல்லாமல் எப்படிங்க இருப்பா? சிறு வயதுக் கோளாறு அப்படிச் செய்துட்டாங்க..." என்றாள். பேச்சு சரியாக வரவில்லை.

வேலு பதில் பேசாமல் விழிகளை மூடிக் கொண்டார். இமைகள் அழுந்தியதால், விழிகளில் அடங்கியிருந்த கண்ணீர் மெல்லக் கன்னங்களில் வழிந்தது.

"ஏங்க அழுகிறீங்களா? வேண்டாங்க. உங்க விருப்பத்துக்கு மாறா நான் செய்ய மாட்டேங்க" என்று பார்வதி அவர் கண்ணீரைத் துடைத்தாள்.

வேலு, அவள் கரத்தைப் பற்றித் தன் மார்பின் மீது வைத்துக்கொண்டு மெல்லிய குரலில், "ஜாக்கிரதையாப் போய்வா. உன்னைப்பற்றி எனக்கே பயமாயிருக்கிறது. மார்பை அடைக்கிறது. சிறிது நேரத்துக்கு ஒரு முறை சுற்றிலும் இருள் பரவுவது போல் பிரமை. அவள் தவறு செய்து விட்டாள். நம்மைப் பொறுத்தவரையில் அவள் செய்தது தவறுதான். ஆனால் அவளைப் பொறுத்தவரை, அவள் விரும்பியதைச் செய்துவிட்டதை யாரும் தடுக்க முடியாது. பெற்ற பெண் நன்றாயிருக்க வேண்டும் என்று விரும்பாத தந்தை இருக்க முடியுமா? அந்த முறையில்தான், பிற்காலத்தில் சந்திரமதி கண்கலங்கப் போகிறாளே - சரியான கணவனைத் தேர்ந்தெடுக்கவில்லையே என்றுதான் அவள் போக்கைத் தடுத்தேன். என்னுடைய மானம், மரியாதையைப் பெரிதாக நினைத்தேன். சந்திரமதி வந்தால், அவளுடன் பக்கிரியும் வந்தால், அழைத்து வந்துவிடு. மில்லில் அவனுக்கு ஒரு வேலை போட்டுத் தர ஏற்பாடு செய்கிறேன்" என்றார். இதைச் சொல்லி முடிப்பதற்குள் மூச்சு வாங்கியது.

பார்வதிக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. உடனே மேகலா வீட்டிற்கு விரைந்தாள். இருவரும் அன்றிரவே சேலத்துக்குப் புறப்படத் திட்டமிட்டனர்.

ரயிலில் டிக்கட் கிடைக்கவில்லை. பேருந்தில் புறப்பட்டனர். இரவெல்லாம் பார்வதி தூங்கவில்லை. பஸ் பயணம் அவளுக்குச் சிரமமாக இருந்தது. சேலம் எப்போது வரும், அவள் எங்கே இருக்கிறாள் என்று கேட்டவாறே வந்தாள்.

சேலத்தில் இறங்கி, சிறிதும் தாமதிக்காமல் சந்திரமதி தங்கியிருக்கும் உறவினர் வீட்டிற்குச் சென்றனர்.

சந்திரமதியை, இரண்டு நாள்களாகக் காணவில்லை என்று அந்த வீட்டிலுள்ளவர்கள் வருத்தத்துடன் சொன்னார்கள். மேகலாவின் பெயருக்கு ஒரு கடிதம் எழுதி மேஜை மீது வைத்திருப்பதாகக் கூறி அந்தக் கடிதத்தைக் கொடுத்தார்கள்.

மேகலாவும், பார்வதியும் அடுத்து என்ன செய்வது என்று குழம்பிப் போய் நின்றார்கள்.

கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று கேட்டாள், அந்த வீட்டு அம்மாள்.

"கடிதம் மேஜைமீது தானே இருந்தது. நீங்கள் படிக்கவில்லையா?" என்று மேகலா கேட்டாள்.

"நான் படிக்கவில்லை மேகலா! உன் பெயருக்கு எழுதப்பட்டதை நான் எப்படிப் படிப்பேன்? நீ படித்து விட்டாயல்லவா? என்ன எழுதியிருக்கிறாள்?" அன்று அந்த அம்மா கேட்டாள்.

கடிதத்தில் எழுதியுள்ள செய்தியைச் சொல்ல மேகலா விரும்பவில்லை. சொல்லாமலும் இருக்க முடியவில்லை.

"சந்திரமதியை உங்கள் பாதுகாப்பில் ஒப்படைத்துச் சென்றேன். சொந்தக் காரணத்துக்காக அவள் இந்த வீட்டை விட்டுச் செல்கிறேனாம்.." என்று சுருக்கமாகச் சொன்னாள், அந்த வீட்டுக்காரி. மேகலாவிற்குச் சித்தி உறவு வேண்டும்.



2/10/11 4289006

"சித்தி! இதோ இவர்கள் சந்திரமதியின் அம்மா. சந்திரமதியை அழைத்துப் போக வேண்டும் என்று சென்னையிலிருந்து வந்திருக்கிறார்கள். சந்திரமதி இங்கே பாதுகாப்பாக இருப்பாள் என்ற தைரியத்தில் அவளை இங்கேயே விட்டுச் சென்றேன். இப்படி நேர்ந்துவிட்டதே!" என்று வருத்தத்துடன் கூறினாள்.

சித்தி, மேகலாவைத் தனியே அழைத்தாள், "மேகலா! சொந்தப் பெண்ணைப் போல சந்திரமதியைப் பார்த்துக் கொண்டோம். அவள் நீ நினைப்பது போல் நல்லவளில்லை. ஒருத்தனை எப்போது இழுத்துக் கொண்டு ஓடி வந்தாளோ அதே ருசிதான் கடைசிவரையில் இருக்கும். உன் தோழி என்பதால் அவளுக்கு எல்லா உதவிகளையும் செய்ய நினைத்தேன், இரண்டு நாள்களாக அவள் போக்கே சரியில்லை. யாரோ ஒருத்தனுடன் பேசிக் கொண்டிருந்ததை என் மகன் பார்த்திருக்கிறான். பழைய காதலனை விட்டுப் புதியவனுடன் ஓடிப் போயிருக்கலாம். விட்டுத் தள்ளு கழுதையை. இன்னும் சில நாள்கள் இங்கிருந்தால் என் மகனையும் தன் வலையில் சிக்க வைத்திருப்பாள். பெண்ணும் பாலும் ஒன்று – என்று பெரியவர்கள் சொல்வார்கள். பாவம் அவள் அம்மாவைப் பார்த்தால் மிகவும் நல்லவள் போல் தெரிகிறது. இந்தப் பெண்ணைப் பெற்றது முன் ஜன்ம பாவம். அடுத்த பஸ்ஸிலேயே சென்னைக்குப் போயிடுங்க. இங்கேயே குளித்துச் சாப்பிட்டு ரெஸ்ட் எடுத்துட்டுப் போங்க. அந்த அம்மா எதிரே இவ்வளவும் சொல்ல வேண்டாம் என்று தான் உன்னைத் தனியே அழைத்துப் பேசுகிறேன்" என்று கூறியதைக் கேட்ட மேகலா அதிர்ச்சியடையவில்லை. தன் கடிதத்தில் சந்திரமதி விவரமாக உண்மையை எழுதியிருந்தாள்.

"சித்தி! நீங்க நினைப்பது போல் சந்திரமதி கெட்டவளில்லை. அவளுடைய கணவர் அவளைத் தேடிப் பிடித்து விட்டார். வந்துவிட்டார். அதனால் அவருடன் அவள் சேர்ந்து விட்டாள். உங்க மகன் சந்திரமதியிடம் தவறாக நடந்து கொண்டிருக்கிறான். அதை வெளியில் சொன்னால் உங்க மருமகள் வருத்தப்படுவாள். மருமகள் - மகனிடையே தகராறு வரும். நாங்கள் போகிறோம். சந்திரமதியைச் சில நாள்கள் காப்பாற்றியதற்கு நன்றி" என்று கூறிவிட்டு மேகலா, பார்வதியை அழைத்துக் கொண்டு அங்கிருந்துப் புறப்பட்டாள். அவர்கள் தலை மறைந்தவுடன், அந்த வீட்டு மருமகள் சொன்னாள்:

"நல்ல வேளை, சனி ஒழிந்தது. உங்களிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். உங்க பிள்ளையைப் பித்துப் பிடிக்க வைத்துவிடுவாள். என் புருசனுக்கு எப்போதும் சந்திரமதியைப் பற்றியே பேச்சு. என் வாழ்க்கையில் குறுக்கிட வந்த சனியன், தானே ஒழிந்தது...!"

சாப்பிட்டுவிட்டு ஓர் ஒதுக்குப் புறமாக அமர்ந்து சந்திரமதி எழுதிய கடிதத்தைப் படித்துக் காட்டினாள், மேகலா.

பார்வதியின் கண்கள் கலங்கின. "சந்திரமதி! என் அருமை மகளே! உனக்கு இவ்வளவு சோதனைகளா? மறுபடியும் உன்னை எங்கே தேடுவது!" என்று புலம்பினாள்.

மேகலாவிற்கு உடனே ஒன்றும் தோன்றவில்லை. "கவலைப்படாதிங்க அம்மா, அவர்கள் சென்னைக்குத்தான் போயிருப்பார்கள். அங்கே போய்த் தேடுவோம்" என்றாள்.



## நாற்பத்திரண்டு

மேகலா எதிர்பார்த்ததுபோல் சந்திரமதியும் தமிழும் சென்னைக்குப் பயணமாயினர். இட்லிக் கடைப்பாட்டி வீட்டில் அன்று பகல் முழுவதும் தங்கினர். ஒரு சிறிய வீடு என்றாலும் கூடம், சிறு அறை, சமையல் அறை என்று சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. ஆனால் குளிப்பதற்குத் தனி அறை இல்லை. சிறு முற்றம். அதில்தான் குளிக்க வேண்டும். மறைவாக இருக்கச் சுற்றிலும் துணியால் மறைக்க வேண்டும். அவளிடம் புடைவையைத் தவிர வேறு துணியில்லை. குளிக்கும் முன்பு கட்டிய புடைவையைத்தான் சுற்றிலும் கட்டி மறைக்க வேண்டும்.

உடுத்தியிருந்த புடைவையை அவிழ்த்து மறைவாகக் கட்டும் முன்பு சந்திரமதி தமிழிடம் கேட்டாள்: "நீங்கள் எனக்கு இப்போது மூன்று உறுதி மொழி தர வேண்டும்."

தமிழ் அவளை வியப்புடன் பார்த்தான். சந்திரமதியின் உதடுகளில் குறும்புத்தனமிருந்தது.

"கைகேயி தசரதரிடம் கேட்டது போலவா?" தமிழ் கேட்டான்.

"ஓ! இராமாயணம்கூட படித்து விட்டீர்களா?"

"ஆமாம்; தில்லியிலிருந்தபோது அந்த ஒத்தியான ஓட்டலில் நிறைய அவகாசம் இருந்தது. அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தபோது இரவு பகல் என்ற வித்தியாசமே தெரியவில்லை. தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு ஒரு நாள் போயிருந்தேன், தலைவருடன். செயலாளர் கிருஷ்ண மூர்த்தியிடம் என்னை அறிமுகப்படுத்தினார். என்னுடன் உரையாடுவது செயலாளருக்கும் பிடித்து விட்டது. என்னிடம் ஒரு முறை தமிழ்ச் சங்கத்தில் கம்பர் கவி

நயத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நான் பெரிய புலவர் என்று அவர் நினைத்து விட்டார்!"

"புலவரைவிட நீங்கள் மேலானவர் தமிழ்! கொஞ்சம் கவனம் செலுத்தி அரசியலில் அதிகம் ஈடுபாடு கொள்ளாவிட்டால் தமிழிடம் தமிழ் விளையாடும்" என்று கூறி சந்திரமதி ஆசையுடன் அவன் கன்னத்தைத் தட்டினாள்.

"என்மீது என் சந்திரமதிக்கு எவ்வளவு நம்பிக்கை!" என்று கூறிய அவன், அவள் எதிர்பாராத முறையில் அவளை இழுத்து அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான்.

சந்திரமதி அவனிடமிருந்து பரபரப்புடன் விலகி. அவனைக் கோபத்துடன் நோக்கி "தமிழ்! இது யாருடைய வீடோ? இங்கே இப்படி நடந்து கொள்ளலாமா? நீங்கள் இப்படி நடந்து கொள்ளலாமா? நீங்கள் சிறந்த ஆண்மகன் என்பதை நான் எப்போதோ உணர்ந்து விட்டேன்" என்று அவள் பேசிச் செல்லும்போது தமிழ் குறுக்கிட்டு, "ஐயோ! - நான் இன்னும் முதல் இரவே நடத்தலையே?" என்றான்.

"சீ! நான் என்ன சொல்ல வந்தேன்? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ஆண்மகன் என்பது ஜென்டில்மேன் என்ற பொருளில் - ஓர் ஆண் - தனக்கு வாய்ப்பு ஏற்பட்டாலும் ஒரு பெண்ணை அவள் விரும்பும் வரை அவளைத் தொடக்கூட முயலாமல் இருப்பது தான் ஆண்மை என்று நான் எங்கோ படித்த நினைவு!"

"எங்கும் படிக்கவில்லை. நான் தான் ஒரு தடவை சொல்லியிருக்கிறேன். நாமிருவருமே ஒழுங்கைக் கடைப்பிடிக்கிறோம். ஆனால், கணவன் - மனைவி என்ற உறுதி ஏற்பட்ட பின்னர், அன்பின் அடையாளமாக ஒருவரையொருவர் கட்டியணைத்து, முத்தம் தருவது சிற்றின்பத்தை நாடுவது இதெல்லாம் ஒழுக்கக் குறைவா?"

"நான் சொல்ல வந்தது - மற்றவர் விருப்பம் இல்லாமல் இன்னொருவர் அவரிடம் தன் ஆசையைப் பூர்த்தி செய்ய



முயல்வது தவறு. கணவன் மனைவியாயிருந்தாலும் அது தவறுதான்."

"ஓ! என்று கூறியவன் சந்திரமதியை உற்று நோக்கி, "சற்று முன்பு உன்னைக் கட்டியணைத்ததைச் சொல்கிறாயா? உன் விருப்பமில்லாமல் உன்னைத் தழுவியது தவறுதான் "மேலே ஏதேதோ பேச முயன்றவனை சந்திரமதி தடுத்து, அவன் கரத்தைப் பிடித்துத் தன் நெஞ்சோடு சேர்த்து, "தமிழ்! நான் ஏதோ சொல்ல வந்தால் நீங்கள் ஏதோ தவறான வியாக்கியானம் செய்கிறீர்கள். புதிய இடம். முன்பே நம்மைத் தவறாகப் பார்க்கிறார்கள். பேசுகிறார்கள். திடீரென யாராவது உள்ளே நுழைந்து. நாமிருக்கும் நிலையைப் பார்த்தால் அவர்கள் சந்தேகம் வலுத்து விடும். கணவன் மனைவியைக் கூடப் பொது இடத்தில் சந்தேகப்படும்படியான காலமிது. அதனால் சொன்னேன். கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போய் விடும்? சேலத்தில் நாம் தனியே இருக்கவில்லையா? தொடவில்லையா? கட்டியணைக்கவில்லையா? அதை ஒழுக்கக் குறைவு என்று சொன்னேனா? சென்னைக்குப் போனவுடன் நமக்கென ஒரு வீடு தேடிக் கொள்வோம். அங்கே நாம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்" என்று கூறி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"கன்னத்தில் முத்தமிட்டால் என் நெஞ்சம் கள்வெறி கொள்ளுதடி! நீ பாரதி கண்ணம்மா - நீ பாரதி சந்திரமதி - சரி. நீ ஏதோ மூன்று உறுதிமொழிகள் கேட்டாயே, அவை என்ன?"

"அதுவா! நான் குளித்துச் சேலையைத் துவைத்துக் காய வைக்கப் போகிறேன். அதுவரை நீங்கள் வாசல் திண்ணையில் அமர்ந்து காவலிருக்க வேண்டும்."

"சரி; ஒன்று."

"அதுவரை நான் உங்கள் ஷர்ட்டைப் போட்டுக் கொண்டிருப்பேன். ஷர்ட் போட்டிருக்கும் நிலைகூட பாதி நிர்வாணம்தான். நீங்கள் பார்க்கக் கூடாது."

தமிழ் சிரித்தபடியே, - "சரி, இரண்டு."

"மூன்றாவது - மூன்றாவது ஒன்றுமில்லை. நீங்கள் குளித்துவிட்டு பாண்ட் - ஷர்ட்டைக் கசக்கிக் காயப்போடும் வரை-"

"போடும் வரை?..."

சந்திரமதியின் முகம் சிவந்தது "நான் விவரிக்க மாட்டேன் சரி, போங்க திண்ணைக்கு, சொக்காயைக் கழற்றிக் கொடுத்துவிட்டு" என்றாள்.

"இந்தா, இந்தப் பனியனையும் துவைத்துவிடு. எவ்வளவு நாளாக ஒன்றையே போட்டுக் கொண்டிருப்பது? மனத்தைவிட உடல் அழுக்கை முதலில் போக்க வேண்டும்."

தமிழ், சொக்காயைக் கழற்றி, பனியனைக் கழற்றி அவளிடம் கொடுத்தான்.

மேனியை மறைக்க ஏதுமின்றி வெற்றுடம்போடு காட்சி தந்த தமிழின் அகன்ற மார்பைக் கண்டு சிலிர்த்துக் கொண்டாள் சந்திரமதி. அடர்ந்த ரோமங்களும், திரண்ட புஜங்களும் அவளைத் தவிக்க வைத்தன.

"தமிழ்! ஒன்று சொல்லட்டுமா? ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். இதுபோன்ற நிலையில் ஆண்களால் அடக்க முடியாது. நாங்கள் பொறுமையின் சின்னம்" என்று கூறிக் குறும்புச் சிரிப்பு சிரித்தாள்.

திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்த தமிழ் பல்வேறு சிந்தனைகளில் ஆழ்ந்தான். வருங்காலத்தைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கலானான். சென்னைக்குச் சென்றவுடன் என்ன செய்வது என்பதுதான் அவனுடைய முதன்மையான கவனம்!

சந்திரமதியின் பெற்றோர் ஆள் பலத்துடன் தன்னைத் தேடிப் பிடித்துத் தாக்க வந்தால் என்ன செய்வது என்றும் சிந்திக்கலானான். பல்வேறு கவலைகள், சந்திரமதியின்



அறிவு, ஆற்றல், பெண்மைக்கே உரிய உயர்ந்த பண்பு அனைத்தையும் நினைத்தான்; அவளுக்கு நான் இணையாவேனா? என்றும் எண்ணினான்.

தகுதியற்ற கணவனாக வாழ்க்கையை நடத்தும்படி நேரிட்டால் என்ன செய்வது என்று கவலைப் படலானான். திண்ணையிலிருந்த தூணில் சாய்ந்து கொண்டு கண்ணை மூடிக் கொண்டு சிந்தித்தவன் அப்படியே உறங்கி விட்டான். எவ்வளவு நேரம் தூங்கினானோ - சந்திரமதி அவன் தோளைத் தொட்டு உலுக்கினாள்.

குளித்து, சர்ட்டுடன் சிறிது நேரம் இருந்து புடைவையை உலர்த்தி, அது காய்ந்து, மீண்டும் புடைவையை உடுத்திக் கொண்டு வெளியே வந்தவள், தமிழ் உட்கார்ந்தபடியே உறங்குவதைக் கண்டு அவனைத் தொந்தரவு செய்யாமல் சிறிது நேரமிருந்தாள். ஆனால்நேரமாகி கொண்டிருந்தது. பசித்தது.

இட்லிப் பாட்டி கூடையில் சோறுடனும் குழம்புடனும் வந்தாள். திண்ணையில் உட்கார்ந்து கொண்டே தூங்கும் தமிழைப் பார்த்தவாறு உள்ளே நுழைந்த பாட்டி, "ஏன் கண்ணு, உட்கார்ந்தே தூங்கச் சொல்லிட்டியே? உள்ளே படுக்கச் சொல்லக் கூடாதா?" என்று கேட்டாள்.

"நான் முற்றத்தில் குளித்துக் கொண்டிருந்தேன். காவலுக்கு அவரைத் திண்ணையில் உட்காரச் சொன்னேன். அவரு அப்படியே..." என்ற சந்திரமதி தமிழைத் தட்டி. எழுப்பினாள்.

"நல்ல காவல்!" என்று பாட்டி சிரித்தாள்.

அன்று மாலை: சந்திரமதியும், தமிழும் பாட்டியிடம் விடைபெற்றுக் கொண்டு, பேருந்து நிலையம் நோக்கிப் புறப்பட்டனர். சென்னைக்குச் செல்லும் பேருந்துக்காகக் காத்திருந்தனர்.

## நாற்பத்தி மூன்று

சென்னை, பிராட்வே பேருந்து நிலையத்தில், சேலத்திலிருந்து அவர்கள் பேருந்தில் வந்திறங்கும் போது மழை கசகசவெனத் தூறிக் கொண்டிருந்தது.

அவனிடம் ஒரு பை. அவளிடம் தோளில் தொங்கும் ஒரு பை ஆகிய இரண்டையும் மட்டும் வைத்துக் கொண்டு சென்னையில் புது அத்தியாயத்தை அவர்கள் தொடங்க வேண்டும்.

தமிழுக்கு நல்ல துணிவு. அந்தத் துணிவுக்குக் காரணம் சந்திரமதி கொடுத்து வரும் ஊக்கம்தான். ஆனால், இந்த முறை சந்திரமதி சோர்வுற்றிருந்தாள். பயணத்தின் போது ஒருமுறை தலைசுற்றியது. வயிற்றைக் கலக்கியது. சோடா ஒன்றை வாங்கிக் கொடுத்தான். அப்படியும் அவளுக்கு என்னவோ செய்தது. சென்னைக்குச் சென்று எங்கே தங்குவது? என்ன செய்வது? என்ற கவலை உள்ளூர அவளை வாட்டியது.

“பத்து நிமிஷம் நிற்கும். காபி - டீ - சாப்பிடுபவர்கள் சாப்பிடலாம்” என்று நடத்துநர் சொல்லிவிட்டு அவர் தனிப்பட்ட முறையில் சாப்பிட சிற்றுண்டி விடுதியின் பின்பக்கம் போனார். பேருந்து அநேகமாகக் காலி.

“ஏங்க - அப்படித் தள்ளிப் போவோமா?” என்று இருட்டான இடத்தைச் சுட்டிக் காட்டினாள் சந்திரமதி.

சந்திரமதிக்குத் துணையாகச் சென்றான் தமிழ். சந்திரமதி வாந்தி எடுப்பதன் குரல் கேட்டது.

“சந்திரமதி! என்னாச்சு?” என்று கேட்டுக் கொண்டே விரைந்தான் தமிழ்.



நெற்றியைப் பிடித்துக் கொண்டான். சிற்றுண்டி விடுதிக்குள் சென்று ஒரு குவளையில் தண்ணீர் கொண்டு வந்து, “வாயைக் கொப்பளி” என்றான்.

“சரியாப் போயிடுச்சுங்க. பகல் உணவு செரிமானம் ஆகலைங்க. அவ்வளவுதான்” என்று சொல்லி சந்திரமதி மீண்டும் பேருந்தில் உட்கார்ந்து கொண்டாள்.

பேருந்தின் ஓட்டத்தில், குளிர்ந்த காற்று இதமாக வீசியதால் கண்ணயர்ந்தாள். அவன் தோள்மீது சாய்ந்து கொண்டு அவனுடைய கை விரல்களுடன் தன் விரல்களை அழுத்தமாகக் கோத்துக் கொண்டாள். சிறு குழந்தைபோல் அவளை அவன் அணைத்துக் கொண்டதால் சந்திரமதி நிம்மதியாகத் தூங்கினாள்.

பேருந்து சென்னையை நெருங்கும்போது, சந்திரமதி விழித்துக் கொண்டாள். தமிழ், அப்பொழுதுதான் கண்ணயர்ந்திருந்தான்.

அவனைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. பேருந்து சைதாப்பேட்டையை நெருங்கும்போது தமிழும் விழித்துக் கொண்டான்.

“அடடா, நான் தூங்கிவிட்டேன்” என்று தமிழ், சந்திரமதியைப் பார்த்து மெல்லச் சிரித்தான்.

“இல்லை, இல்லை. நான்தான் தூங்கிவிட்டேன். உங்கள் தோளின்மீது சாய்ந்ததுதான் தெரியும். பாவம் உங்கள் தோள்” என்ற சந்திரமதி மெல்லச் சிரித்தாள்.

“தாங்குவதற்குத்தானே தோள்?” என்ற தமிழ், “இப்போது எப்படி இருக்கிறது தலைசுற்றல்?” என்று கேட்டான்.

“நான் சரியாகிவிட்டேன். ஆனால், சென்னைக்கு வந்து விட்டோமே என்ற கவலைதான், தலை சுற்றலுக்குக் காரணம்” என்று சொல்லிச் சிரித்தாள் சந்திரமதி.

“கவலைப்படாதே. சென்னையில் எனக்கு நன்கு தெரிந்தவர்கள் எத்தனையோ பேர்” என்றான் தமிழ். மழை பெய்து கொண்டிருந்தது.

பிராட்வே நிலையத்தில் பேருந்திலிருந்து அவர்கள் இறங்கினர். மழைக்கு ஒதுங்க இடமில்லை. பேருந்து நிலையம் இப்படி இருக்கக் கூடாது என்பதற்கு பிராட்வே பேருந்து நிலையம் தான் சான்று! விரைந்து சென்று கடை வாசல் ஒன்றில் ஒதுங்கினார்கள்.

"பக்கிரி" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான் தமிழ். 'பக்கிரி' என்றழைத்ததால் அவர் யாராவது பழைய அன்பராயிருக்க வேண்டும்.

கண்ணாயிரம் – கண்ணாயிரம் தான்! எப்படி மாறிவிட்டான் சில நாள்களுக்குள்?

"யாரு கண்ணாயிரமா?" என்று தமிழ் கேட்டான்.

"நானேதான் பக்கிரி. என்னை மறந்துவிட்டாயா?" என்று சொல்லிக்கொண்டே அருகே நிற்கும் சந்திரமதியை ஒரு பார்வை பார்த்தான்.

"இது யாரு? – சைக்கிளுக்குக் காற்றடிக்க வருமே அந்தத் தங்கச்சியா?" என்று கேட்டுவிட்டு, சந்திரமதியின் பக்கம் திரும்பி. "என்ன தங்கச்சி என்னை நினைவில்லையா? சைக்கிள் கடைக்கருகே வாடகை நூலகம் வைத்திருந்தேனே நான்தான்" என்று காவிப் பற்கள் தெரிய அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

பிறகு. "மழை நிற்காது போல இருக்கு. வா, அந்த ஓட்டலில் டீ சாப்பிடுவோம்" என்றழைத்தான்.

சந்திரமதி விழியாலேயே வேண்டாம் என்று சைகை செய்தாள். மழைச்சாரல் அவர்களை முற்றிலும் நனையச் செய்தது. பாவம், நனைகிறாளே என்ற இரக்கமா, அல்லது மழையில் நனைந்தால் உடலோடு ஒட்டியிருக்கும் சேலை செய்துதரும் புண்ணியமா? கண்ணாயிரம் அடிக்கடி சந்திரமதியைத் திரும்பிப் பார்த்தான்.

"வா தங்கச்சி, எப்ப சாப்பிட்டிருப்பீங்களோ? நான் ஒண்ணும் பெரிசா வாங்கித் தரப்போவதில்லை. ஒரு சம்சா – சிங்கிள் டீதான்" என்று வற்புறுத்தினான்.



அந்தக் காலை வேளையில் தமிழுக்கு அது அமுதமாக இருந்தது. சந்திரமதியைக் கல்யாணம் செய்து கொண்டது கண்ணாயிரத்துக்குத் தெரியுமா என்ற கவலை. தெரிந்திராவிட்டால், நாமே வலிய வந்து ஏன் சொல்ல வேண்டும் என்று நினைத்தான். சந்திரமதி வேறு பக்கம் பார்த்தவாறே தேநீரைக் குடித்தாள்.

ஏதாவது பேச வேண்டுமே! "பக்கிரி! எனக்கு எல்லாம் தெரியும். நீ ஊரைவிட்டுப் போனபிறகு இரண்டு மூன்று நாள்கள் இந்தத் தங்கச்சியின் அப்பா வந்து தேடினார். நம்ம பாலன் மீது அவருக்குச் சந்தேகம்..."

"பாலன் எப்படி இருக்காரு?" தமிழ் கேட்டான் அறிந்து கொள்ளும் ஆவலுடன்.

"பக்கிரி! நம்ம கடைத் தெருவே ஒரே நாளில் மாறிப்போச்சு. நம்ம வட்டக் கிளையைத் தலைவரு கலைச்சுட்டாரு. பாலன் கோஷ்டி – மெய்கண்டார் கோஷ்டி தகராறு வலுத்துவிட்டது. ஒருவரையொருவர் அடித்துக் கொண்டார்கள். என் வாடகை நூலகத்தில் ஒரு நாள் போலீஸ் ரைடு செய்தது. ஏதோ ஆபாசப் புத்தகம் இருப்பதாகச் செய்தி வந்ததாம். புத்தகங்களை எல்லாம் தெருவிலே கடாசி சூறையாடிட்டாங்க. பத்துப் பதினைஞ்சு புத்தகங்களை 'ஆபாசம்' என்று சொல்லி எடுத்துக் கிட்டாங்க. எதுங்க ஆபாசம்? நான் வாதாடிப் பார்த்தேன். முடியலை. உம். கடையை மூடினேன். பிறகு, கடையை விற்று விட்டேன். மில் வேலைக்குப் போய்க்கினு இருக்கேன்" என்று மளமளவென்று கதையை நாடக வசனம் போல் ஒப்புவித்தான்.

பக்கிரியாகிய தமிழும் நடந்த காதல் சம்பவத்தைச் சுருக்கமாக விவரித்தான்.

"சபாசு. அப்படிச் சொல்லு. என் அத்தானாயிட்டே பக்கிரி! இல்லை.. இல்லை... தமிழ்!" என்று பலமாகச்

சிரித்து, பக்கிரியின் காதில் படும்படியாக, "பக்கிரினுதான் நான் கூப்பிடுவேன். தமிழாவது இங்கிலீஷாவது! வயித்துப் பொழைப்பைப் பாரு. இனிமே தான் உனக்குப் பொறுப்பு அதிகம்" என்று உபதேசம் செய்யத் தொடங்கினான்.

மழை நின்றுவிட்டது. பனிச்சென்று வெயில் அடித்தது.

"நான் வருகிறேன், கண்ணாயிரம்! பிறகு சந்திப்போம்" என்று கை கூப்பினான். மரியாதைக்குச் சந்திரமதியும் கை கூப்பினாள்.

"ஆ! நல்லாயிருக்குதே நியாயம்! எங்கே போவீங்க? வாங்க நம்ம ஊட்டுக்கு. ஏதாவது வேலை தேடி செட்டில் ஆகிறவரை நம்ப வீட்லே இரு. அங்கே நானும் என் பொண்சாதி மட்டும்தான்" என்று கண்ணாயிரம் வற்புறுத்தினான்.

கன்னித் திவு கதை போல், நொடிக்கு நொடி சஸ்பென்ஸாக நடக்கிறதே என்று சந்திரமதி மனத்துக்குள் நினைத்துச் சிரித்தாள்.

பார்த்தால் கண்ணாயிரம் பொல்லாதவர் போலிருக்கிறது. ஆனால், பேச்சு கண்ணியமாகத் தானிருக்கிறது. ஓரிருமுறை, கண்ணாயிரத்தை மிதிவண்டி நிலையம் அருகே வாடகை நூலகத்தில் பார்த்த நினைவு இப்போது வருகிறது.

"என்னதான் ஆகட்டும் பார்ப்போம்!" என்ற துணிவுடன் ஒருமனதாகச் சம்மதித்து, தமிழுடன் கண்ணாயிரம் வீட்டிற்குச் சென்றாள்.

சேலத்தில் இருந்ததுபோல், தொழிலாளர் குடியிருப்பில் கண்ணாயிரம் குடியிருந்தான். குடிசைகள் நிறைந்த வீடுகளுக்கிடையே அவன் வீடு. கல்வீடு என்று பெயரிட்டு அழைக்கப்பட்ட ஓட்டு வீடு.

ஒருநா ள் தான் சந்திரமதியால் அங்கே இருக்க முடிந்தது. கண்ணாயிரத்தின் மனைவி சிறிது நேரம்தான் இன்



முகத்துடன் பேசினாள். பிறகு ஏதாவது சாக்கிட்டு கண்ணாயிரத்தை வம்புக்கு இழுத்தாள். அந்த வம்பில் தன் பெயரும் சம்பந்தப்படுவதை சந்திரமதி விரும்பவில்லை.

அவள் வசைமாரி பொழிந்த செய்திகளில் ஒன்றைக் கேட்டு சந்திரமதி திடுக்கிட்டாள். காது கொடுத்துக் கேட்ட அவள் பேச்சு காதைப் பொத்திக் கொள்ளச் செய்தது.

"என்னய்யா இது.. என்ன புது கிராக்கி? உன் சுபாவத்தை மாத்திக்க மாட்டியே? அந்தப் பொண்ணப் பார்த்தா பெரிய இடத்துப் பொண்ணைப்போல தோணுது. அதை அந்த ஆளு இஸ்துகினு வந்திருக்காரு. நீ இங்கே இடம் கொடுத்து டாவு அடிக்கப் பார்த்தா நடப்பதே வேறு – ஆமாம் சொல்லிப்புட்டேன்."

சந்திரமதி நடுங்கினாள். இது என்ன உலகம்? ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு விதமாக வக்கிரமாக இருக்கிறார்களே? வீட்டைவிட்டு வந்தவர்களுக்கு இதான் பரிசா?

தமிழை – பக்கிரி பக்கிரின்னு அவன் கூப்பிடுவது சந்திரமதிக்கு எரிச்சலை அளித்தது. மறைமுகமாகச் சொல்லிப் பார்த்தாள்.

"பக்கிரி என்று கூப்பிட்டு பழைய நிலை உண்டாக்காதிங்க. நான் பல காரணங்களுக்காக அவருக்குத் தமிழ் என்று பெயர் வைத்தேன்" என்று சந்திரமதி சொல்லிப் பார்த்தாள்.

கண்ணாயிரம சிரித்தான். "தங்கச்சி! பக்கிரி பக்கிரியா இருக்கணும். எங்க கட்சி வட்டாரங்களில் பக்கிரி என்றால்தான் தெரியும். இனிமே தமிழ்ன்னு சொல்லி அறிமுகப்படுத்தணும் தங்கச்சி! இன்னும் கொஞ்ச நாள்களில் பக்கிரி எங்க கட்சியை ஒரு கலக்கு கலக்கப் போகிறார் பாரு" என்றான்.

"அண்ணா! தயவுசெய்து தமிழைக் கட்சி, – மேடைப் பேச்சு என்று நினைவுபடுத்திச் சிக்க வைத்து விடாதீர்கள்.

ஒழுங்கா அவர் வாழ்க்கை நடத்த வேண்டும். என் நிலைமையையும் நீங்க யோசித்துப் பார்க்க வேண்டும். அப்பா அம்மாவை விட்டுத் தனியே வந்தவள் நான். மனத்தில் பல கனவுகளைத் தேக்கி வைத்திருக்கிறேன். காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர்கள் சமூகத்தில் உயர்வோடு வாழ வண்டும் என்று நினைப்பவள். கஷ்ட காலத்திலும காதலர்கள் பிரியாமல் இருக்க வேண்டும் என்ற நிலை உருவாக வேண்டும் என்று நினைப்பவள். அதனால் அண்ணா, தமிழின் திசையை மாற்றாதிர்கள். அவருக்கு உங்கள் மில்லில் ஒரு வேலை வாங்கிக் கொடுங்கள். வேலையிலிருந்து கொண்டு கூட்டங்கள் பேசட்டும்; பட்டி மன்றத்தில் கலந்து கொள்ளட்டும். ஒழுங்காகஒருவருமானத்துக்கு ஏற்பாடு செய்யுங்க. தயவு செய்யுங்கள் அண்ணா!"

சந்திரமதியின் உருக்கமான வேண்டுகோளைக் கேட்ட கண்ணாயிரமும் கலங்கி விட்டான். லட்சியம் எதுவும் இல்லாமல் இது வரையில், மிக இலேசாக வாழ்க்கையை ஓட்டி வந்தவன். அவன் மனைவியின் வாய்க்கு மட்டுமே பயப்படுவான். அவன் யோசித்தான். பக்கிரிக்கு மில்லில் வேலை வாங்கித் தருவது பல காரியங்களுக்கு உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தில் பக்கிரியைச் சந்தித்தான். தன் யோசனையையும், சந்திரமதியின் விருப்பத்தையும் தெரிவித்தான்.

தமிழ திடுக்கிட்டான். "வேலையா? எனக்கா. சந்திரமதியா சொல்கிறாள்?" என்று வியப்புடன் கேட்டான்.

கண்ணாயிரம் அவனிடம் மெல்லக் கூறினான்: "பக்கிரி! ஆண பிள்ளைங்க வருமானமில்லாமல் வீட்டில் குந்தியிருந்தா, பொண்சாதியின் மரியாதை குறைந்துவரும். அவங்க மனசு மாறி விடக்கூடாது. நாளைக்கே உனக்கு மில்லில் வேலை ஏற்பாடு செய்து வருகிறேன்" என்றான்.

வேலையும் கிடைத்தது. ஒரு வீடும் கிடைத்தது.



## நாற்பத்தி நான்கு

புதுக் குடித்தனம் தொடங்கினார்கள் பக்கிரியும் சந்திரமதியும், 'தமிழ், தமிழ்' என்று – தான் சூட்டிய புதுப் பெயரை நிலைநாட்டப் பார்த்தாள் சந்திரமதி. கண்ணாயிரம் போன்ற பல நண்பர்கள் அவனைப் பக்கிரி என்று அழைப்பதையே விரும்பினார்கள்., சற்று நெருக்கமான விடுகள் நிறைந்த சந்தடி மிகுந்த பகுதியில் குடியிருக்கச் சிறு வீடு கிடைத்தது கண்ணாயிரம் உதவியால். வீடு என்ற பெயர்தானே தவிர, குடிசைதான் அது.

"கண்ணாயிரம்! இதுவரை நீ செலவு செய்ததையெல்லாம் குறித்து வைத்துக் கொள். இப்படி – இதே நிலையில்தானா நான் இருப்பேன்? மாற்றம் வ்ராதா? திருதராட்டிரனுக்குப் பார்வையைக் கொடுத்து மீண்டும் பறித்துக் கொண்டதுபோல், சில நாள்கள் சுகவாழ்வு கிடைத்தது. அதுவே, நீடிக்கும் என்று நினைத்தேன். உழைத்துப் பிழைப்பதே நன்று. கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். உன் உதவிக்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்றே தெரியவில்லை" என்று பக்கிரி கண்ணாயிரத்தின் கரத்தைப் பிடித்துக் கொண்டு சொன்னான்.

சந்திரமதியும் அதை ஆமோதித்தாள். "அண்ணா செய்த, செய்யும் உதவியில் மிகப் பெரியது, உங்களுக்கு ஒரு வேலை வாங்கித் தந்துவிட்டாரே அதுதான், அதற்காக நாம் ஏழேழு பிறவிகளுக்கும் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று கூறும்போது, கண்ணாயிரம சிரித்து, "நீங்க இரண்டு பேரும் நாடக வசனம் மாதிரிப் பேசறீங்க. எனக்கு அப்படிப் பேசவராது. சாதாரணமா பேசுங்க" என்று மட்டுமே பதில் சொன்னான்.

"நாங்கள் தமிழ்தானே பேசுகிறோம்? நீங்களும் முயன்றால் முடியும்" என்றாள் சந்திரமதி.

"தங்கச்சி! நானும் மாலைப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து உங்கிட்டே கத்துக்க வேண்டியதுதான். இப்ப உங்கிட்டே பத்துப் பசங்க சேர்ந்துட்டாங்க இல்லையா? நானும் பதினோராவது ஆளாச் சேர்ந்துடறேன்" என்று கூறிச் சிரித்தான் கண்ணாயிரம்.

சுற்றுப்புறச் சூழல், அசுத்தம். மக்களின் ஆபாசமான பேச்சு, கொசுக்கடி ஆகியவை தவிர வேறு தொல்லை ஏதும் அந்தப் பகுதியில் இல்லை. ஒரு புடைவை ரவிக்கை உள்ளாடைகள் வாங்கிக் கொண்டாள். துவைத்து உடுத்திக் கொண்டாள். பகலெல்லாம் வேலை இல்லை. பக்கிரி மில்லுக்கு வேலைக்குச் சென்று வருவான். மாலையில் வந்தவுடனேயே அவனை அழைத்துப் போக நண்பர்கள் வந்து விடுவார்கள். சந்திரமதியும் அங்கே உள்ள அம்மன் கோயில் மண்டபத்தில் இரவு ட்யூஷன் வகுப்பு நடத்தப் புறப்பட்டு வருவாள். இரவு ஒன்பது ஒன்பதரையாகி விடும். பிறகு, வந்து சமையல் செய்து, ஹரிக்கேன் விளக்கை ஏற்றி வைத்து அதன் அருகே அமர்ந்து புத்தகங்களைப் படிப்பாள். இரவு பத்து பதினொரு மணி ஆகி விடும். பக்கிரி எப்போது வருவானோ? அவன் சந்திரமதியை மெல்ல எழுப்பிப் பார்ப்பான். தூக்கக் கலக்கத்தோடு அவள் எழுந்து புன்முறுவலுடன் அவனுக்கும் அலுமினியத் தட்டில் சோறிட்டு, தானும் எதிரே உட்கார்ந்து கொண்டு குழம்பு, மோர் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கதம்பமாகப் பிடித்தவரை சாப்பிடுவாள். படுத்துத் தூங்கினால் போதும் என்ற அந்த வேளையில் அவளுக்குச் சாப்பாடு பிடிக்காது.

பக்கிரியுடன் நிறையப் பேச வேண்டும் என்று தோன்றும். "மீண்டும் அரசியல் கட்சியில் சேராதீர்கள்" என்று எச்சரிக்கத் தோன்றும். அவன் திருந்த மாட்டான் என்ற முடிவுக்கு வந்துவிட்டாள்.



அந்தப் பேட்டைக்கு வந்து ஒரு மாதம் கழித்து மேகலாவுக்குக்கடிதம் எழுதினாள் சந்திரமதி.

"அன்புள்ள தோழி மேகலாவுக்கு நலம். நலமறிய அவா.. இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் உனக்கு ஏற்படும் உணர்வுகளை நான் இங்கிருந்தே ரசித்துப் பார்க்கிறேன். முதலில் வியப்பு; பிறகு கோபம். பிறகு வருத்தம். உன்னைப் பார்க்காமல் என்னால் இருக்கவே முடியவில்லை.

உனக்கு மிக அருகே வந்துவிட்டேன். என்ன சுற்றுமுற்றும் பார்க்கிறாய்? சென்னைக்கே வந்து விட்டேன் மேகலா!

ஆமாம். சேலத்திலிருந்து புறப்பட்டுச் சென்னைக்கு வந்துவிட்டேன். சென்னைக்கே போய்விடலாம் என்று தமிழ் முடிவு செய்தார். அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புகள் இப்போது ஏற்படுகின்றன.

அதென்ன! கணவனுடன் நெருங்கிப் பழகுவதற்கும் ஒரு வாய்ப்பா என்று கேட்கிறாயா?

நெருங்கி என்றால் என்ன என்று நீ கேட்கிறாயா? சிறிது சிறிதாக அவர் உள்ளத்தைப் புரிந்து கொண்டேன். இப்போதுதான் மற்ற நெருக்கங்கள். ஓ! சிரிக்கிறாயா நுகர்ச்சியே இப்போதுதானா என்கிறாயா?

மேகலா! கடிதத்தில் எல்லாவற்றையும் எழுத முடியாது. என் அனுபவங்களை நான் உன் எதிரே உட்கார்ந்து பேசிப் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன்.

சென்னையில் என்னைப் பார்ப்பதற்கு ஒரு பக்கம் உனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். மற்றொரு பக்கம் மிகவும் வருந்துவாய். சில நேரங்களில் உன்னையே நீ நொந்து கொள்வாய் என்பதை நான் அறிவேன். எப்படி என்று கேட்கிறாயா?

மேகலா! நடந்து போன சம்பவங்களைச் சற்று யோசித்துப் பார். நீயும், நானும் கல்லூரிக்குச் செல்லும்போது பல விஷயங்களைப் பேசிச் செல்வோம்.

கனவுகள் காண்போம். கனவு என்பது என்ன? நமது உள்ளக்கிடக்கை. உள்ளக் கிடக்கையை இலட்சியம் என்கிறோம். இலக்குதான் இலட்சியம். ஆசை என்று சிலர் சொல்வார்கள். ஆசையெல்லாம் இலட்சியமாகுமா? பெரிய பெரிய இலக்குகளை அடைய நினைக்க ஏற்ற வயதுதானா? என்று நாம் யோசிக்க வில்லை. உனக்கு எப்படியோ? எனக்குக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அப்போதே தோன்றிவிட்டது.

நாம் அதைப் பற்றிக் கூடப் பேசிய நினைவு. அதன் விளைவுதான் மிதிவண்டி நிலையத்தில் பக்கிரியைச் சந்தித்தேன். அவர் பெயரைத் 'தமிழ்' என்று மாற்றினேன். ஆனால் அவர் நண்பர்கள் பக்கிரி என்றே அழைக்கின்றனர். ஆனால், நான் நான்கு சுவர்களுக்குள் மட்டும் 'தமிழ்' என்றே அவரை ஆசையுடன் அழைக்கிறேன்.

கணவர் பெயரைச் சொல்வது பாவம் என்றும் மரியாதைக் குறைவு என்றும் சொல்லிக் கொண்டிருந்த காலம் எல்லாம் இன்று மறைந்து விட்டது. மரியாதை என்பது மனத்தில் இருக்க வேண்டும். கணவரை என்ன பெயர் சொல்லி அழைப்பது? அவர் ஓர் அஃறிணைப் பொருளா? 'த' என்று கூப்பிடுவார்கள் சிலர். 'ஏங்க, ஏங்க' என்று நொடிக்கு ஒரு தடவை அழைப்பார்கள். அதில் அன்பும் ஆசையும் இருக்கும். 'ஏன்னா' என்று கூப்பிடுபவர்களும் உண்டு.

'தமிழ்' என்று நான் கூப்பிடுவது பலருக்கு வியப்பாக இருக்கும். என்னைச் சுற்றிலுமுள்ளவர்களைப் பற்றி ஒரு புத்தகமே எழுதலாம்.

மேகலா! இந்த மக்களை எப்படித் திருத்துவது? அவர்கள் தூய்மையாக இல்லை என்று குறைகூறக்கூடாது. அவர்கள் இருப்பிடம் நெருக்கடி மிகுந்தது. காற்றோட்டம் இல்லாதது. காற்று என்பது என்ன என்று கேட்கக் கூடிய நிலை அவர்களுடையது. காற்று இல்லை. தண்ணீர்? ஒரே ஒரு



குழாய். சென்னை மாநகராட்சி குழாயைப் பற்றி உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. நாங்கள் முன்பு இருந்தது மில் தொழிலாளர் குடியிருப்பு என்பது உனக்குத் தெரியும். குடிசைப் பகுதியைவிடச் சற்று உயர்ந்தது. தனித் தனி கல் வீடுகள், சாலை வசதி இருந்தாலும் தண்ணீரைப் பொறுத்தவரை பல வீடுகளுக்கு ஒரு குழாய். குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீர் சொட்டும். எனக்கு விவரம் தெரிந்ததிலிருந்து அந்தக் குழாயடியிலே நானும் என் தங்கையும் தவம் கிடப்போம். பிறகு பூமியில் துளைக்கிணறு போட்டார்கள். கையால் அடிக்கும் தண்ணீர் இறைக்கும் பம்ப். அதை அம்மா, தங்கை, நான் என் தம்பி என்று முறை போட்டு, பம்ப்பிலிருந்து அடித்து பெரிய தகரப்பாத்திரங்களில் நிரப்புவோம். உங்கள் வீடு சற்று வசதியானது. நகராட்சிக் குழாய்த் தண்ணீரைப் பெரிய தொட்டியில் தேக்கி, மின்சாரம் மூலம் நீர்த்தொட்டிகளில் ஏற்றி, வேண்டும்போது குழாயைத் திருப்பிப் பயன் படுத்துவீர்கள்.

தண்ணீரைக் கவனமாகச் செலவு செய்யுமாறு அப்பா – அம்மா எச்சரிப்பார்கள். காலை – மாலை இரண்டு வேளைகளில் குளிக்க வேண்டும் என்று ஆசை எனக்கு. ஆனால் ஒரே வேளை குளிப்பதே பெரும்பாடு!

இங்கே எங்கள் குடிசைப் பகுதியில் தண்ணீர் பெரும்பாடாக இருக்கும் போது அங்கிருப்பவர்கள் எப்படி குளிப்பார்கள்? குழாயடியில் பானைகளை வரிசையாக வைத்திருப்பதைப் பார்க்கும்போது வாழ்க்கையே தண்ணீர் பிடிப்பதில் முடிந்து விடுமோ என்றெண்ணத் தோன்றும். குடி தண்ணீருக்கு இந்தப் பாடு, 'ரேஷன்' கடையில் உணவுப் பொருள் வாங்குவதற்கும் இந்தப் பாடு – என்று தான் விடியுமோ என்றெண்ணத் தோன்றுகிறது.

குழாயடியில் செய்யப்படும் அசுத்தத்தைப் பற்றி நான் எப்படிச் சொல்வேன்? அதற்கு அவர்கள் என்ன

செய்வார்கள்? துணி துவைக்க, குளிக்கத் தனியிடமில்லை. கோழிகளும், பன்றிகளும் சுதந்தரமாக வீதியில் திரிகின்றன. வீதி என்று பெருமையாகச் சொல்கிறேன். சந்தைவிடக் கிழ்த்தரமானது. பிறந்த இருபது வருஷங்கள் எப்படிச் சுகமாக வாழ்ந்தோம் இப்போது இப்படி ஆகிவிட்டதே என்று கவலைப்படுகிறேன் என்று நினைக்கிறாயா?

என்னவோ, அந்தக் காதல் மாயை என்னைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. காதலித்துத் திருமணம் செய்து கொள்பவர்கள் எவ்வளவு இடர்பட்டாலும் காதலை வெறுக்கக் கூடாது. காதல் திருமணம் தோல்வியடைந்தது என்ற நிலை வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் எந்தவிதத் துன்பத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். சகித்துக் கொண்டிருக்கிறேன். தாங்கிக் கொண்டிருக்கிறேன். நான் பாரதியை நிறையப் படிக்கிறேன். காதலைப் பற்றி அவர் பாடியதைப் படித்துப் படித்து வியக்கிறேன். அவர் சொல்கிறார்:

*'காதலினால் மானுடர்க்குக்*
*கலவி உண்டாம்.*
*கலவியிலே மானுடர்க்குக்*
*கவலை தீரும்.*
*காதலினால் மானுடர்க்குக்*
*கவிதை உண்டாம்.*
*கானமுண்டாம், சிற்பமுதற்*
*கலைகள் உண்டாம்.*
*ஆதலினால் காதல் செய்வீர்;*
*உலகத்திரே!'*

இந்தக் கடிதத்தில் இதுவரையில் போதும். பிறகு எழுதுகிறேன். இந்தக் கடிதத்தில் இந்தப் பகுதியைப் படித்து முடித்தவுடன், முதலில் நீ வருத்தப்பட்டாலும் பிறகு நீ



மகிழ்ச்சியுடன் இருப்பாய் என்று நினைக்கிறேன். என் அப்பா - அம்மாவைச் சந்தித்தாயா? என்னை அவர்கள் குறை கூறுகிறார்களா? அப்படியெல்லாம் இல்லையே! நான் மகிழ்ச்சியாக இருப்பதாக அவர்களிடம் சொல்லவும். என் வணக்கங்களையும் அவர்களுக்குச் சொல்லவும். என் அன்பு முத்தங்கள் உனக்கு. சிரிக்கிறாய் அல்லவா? நீ சொல்வது என் காதில் விழுகிறது. முத்தம் ஒருவருக்கு மட்டும் சொந்தமில்லை மேகலா! நம்மீது அன்புடையவர்கள் அனைவருக்கும் சொந்தம். அன்பின் அடையாளம் அது.

உன்னை என்றும் மறக்கமுடியாத
சந்திரமதி"

பி.கு:

என் கையெழுத்து எப்படி இருக்கிறது? மாறிவிட்டதா? மன ஓட்டத்திற்கும் கையெழுத்திற்கும் தொடர்பு உண்டென்று சொல்கிறார்கள். அது சரியா? - 'சந்திரா'

சந்திரமதியிடமிருந்து வந்த கடிதத்தை முதலில் பரபரப்புடன் படித்தாள். பிறகு, ஆவலுடன் படித்தாள் மேகலா. இப்படி ஒரு முறைக்கு இருமுறை படித்தாள். அவள் கண்கள் கலங்கின.

'ஆகா! உன் முகவரி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தேனே சந்திரமதி! நானும் உன் அம்மாவும் சேலத்திற்கு வந்து உன்னைக் காணாமல் தவித்தோம். பிறகு நீ எங்கு சென்றாய் என்ன ஆனாய் என்பது எங்களுக்குத் தெரியவில்லையே சந்திரமதி! இப்படிச் செய்யலாமா?

'நீ சென்னைக்கே வந்துவிட்ட செய்தி, இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. உடனே உன்னை வந்து சந்திக்கிறேன்' என்று முணுமுணுத்துக்கொண்டாள். கடிதத்தை எடுத்துக் கொண்டு பார்வதி அம்மாள் வீட்டிற்கு ஓடினாள். சந்திரமதியின் தந்தை மரணப் படுக்கையில் இருந்தார். இந்தக் கடிதம் அவருக்கு ஆறுதலாயிருந்தது.

சந்திரமதியின் முகவரியைத் தேடினாள். கடிதத்தின் ஆரம்பத்தில், முடிவில், உறையின் பின்புறம், ஊ...ஹூம் சந்திரமதியின் முகவரி எழுதப் படவில்லை!...

## நாற்பத்தைந்து

சந்திரமதியிடமிருந்து வந்த கடிதத்தை, மேகலா இரண்டு முறை படித்துப் பார்த்தாள். அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நேரே கடிதத்தை எடுத்துக்கொண்டு பார்வதியிடம் விரைந்தாள்.

அங்கே பார்வதியின் கணவர். சந்திரமதியின் தந்தை நோயின் உச்சக்கட்டத்தில் பேச முடியாமல் மூச்சு விட முடியாமல் கிடந்தார்.

மேகலா திகைத்து நின்றாள். சந்திரமதியிடமிருந்து கடிதம் வந்ததை அறிந்து நோய் நீங்கியவராக. புதுத் தெம்புடன் இருப்பார் என்று நினைத்தாள்.

பார்வதி சோகமே உருவாய் இருந்தாள். தன் கணவரின் நோயை இனிக் குணபடுத்த முடியாது என்பது தெரிந்து விட்டது.

"மேகலா! சந்திரமதியால் எங்களுக்கு பெரிய சங்கடம். வீட்டை விட்டு அவள் போய்விட்டாள் என்ற செய்தி எங்கள் இருவருக்கும் மிகுந்த அதிர்ச்சியைக் கொடுத்தது. நான் சொல்லும் தைரியத்தில், இவர் இதுவரை உயிருடன் இருந்து வந்தார்.

"அவள் எங்கிருக்கிறாளோ என்ன செய்கிறாளோ என்ற கவலை எங்களுக்கு. அந்த மனக் கவலை அவர் உடலைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து விட்டது இந்த அரசியல்



சாக்கடை வேறு. அவர் பிடிவாதமாக அரசியலில் ஈடுபட்டார். இப்போது புதிய கட்சியில் சேர்ந்திருக்கிறாராம். இந்தக் கட்சி பேரம் நமக்கு உதவாது என்றாலும், எங்கள் பெண்ணின் நிலைமைக்கு வருத்தப்படுகிறேன். அவள் சேலத்திலே இருந்திருந்தால், அவளுடன் சமரசம் செய்து கொண்டிருப்பேன். நாம் தேடிப் போனோம். அவள் கிடைக்கவில்லை. என் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? என்னைவிட அவர்நிலைமை மோசம்.சந்திரமதியிடமிருந்து கடிதம் வந்த செய்தி கிடைத்தால், மிகவும் சந்தோஷப்படுபவர் என் கணவரைத் தவிர வேறொருவரும் இருக்கமாட்டார்கள். ஆனால், சந்திரமதி வரவில்லை, சேலத்தில் அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றறிந்தவுடன் அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி தான் அவர் நிலைமையை மோசமாக்கி விட்டது."

பார்வதியின் வருத்தம் நியாயமானதே. "அம்மா! உங்கள் உணர்வு எனக்குப் புரிகிறது. சந்திரமதியும் அவள் கணவரும் சென்னைக்கே வந்து விட்டார்களாம். உங்கள் மகள் வீட்டிற்கு நான் சென்று பேசி வருகிறேன். அவளது மனத்தை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நான் இரண்டு நாள்களில் சந்திரமதியை இங்கே அழைத்து வருகிறேன். சரிதானே!"

பார்வதி அம்மாள் மேலும், புலம்பினாள். பலமுறை சொல்லிச் சொல்லி வேதனையை அதிகமாக்கிக் கொண்டாள்.

சந்திரமதியைச் சந்தித்து அவளை அழைத்து வந்துவிடுவதாக, மேகலா பார்வதியிடம் உறுதி கூறிச் சென்றாள். சந்திரமதியின் கடிதத்தில் அவளுடைய முகவரியில்லை. மேல் உறையிலும் இல்லை.

'எவ்வளவு கெட்டிக்காரி சந்திரமதி! முகவரியை எழுதவில்லையே? மறந்திருக்கலாம். அல்லது வேண்டுமென்றே எழுதாமல் இருந்திருக்கலாம்.'

மேகலாவின் கடித மேலுறையில் தபால் அலுவலக முத்திரையைத் தேடினாள். அது சரிவரப் பதிக்கப்படவில்லை.

வேலுவின் உடல் நிலை மிகவும் மோசமாகி விட்டது. சந்திரமதியின் பெயரை அவர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

"மேகலா! எப்படியாவது சந்திரமதியைக் கண்டுபிடித்து அழைத்துவா" என்று பார்வதி கேட்டுக் கொண்டாள். "நானே நேரில் வந்து உன் அப்பாவிடம் வேண்டிக் கொள்கிறேன். எனக்காக அலைந்து திரிந்து கண்டுபிடி" என்று அவள் கரங்களைப் பிடித்துக் கேட்டுக் கொண்டாள்.

கலங்கிக் கண்ணீர் விடுவதைத் தவிர, மேகலாவினால் வேறொன்றும் செய்ய முடியவில்லை.

பத்து நாள்கள் ஓடி மறைந்தன. நிலைமையில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. ஒருநாள் மேகலாவின் பெயருக்குக் கடிதம் ஒன்று வந்தது. சந்திரமதியிடமிருந்து தான் வந்திருந்தது.

மேகலா ஆவலுடனும், பரபரப்புடனும் கடிதத்தைப் பிரித்தாள்.

"அன்புள்ள மேகலா!" என்று கடிதம் தொடங்கியது.

"என்னுடைய முதல் கடிதம் கிடைத்திருக்கும். என் அம்மாவிடம் காட்டியிருப்பாய். அம்மா என்ன சொன்னார்கள்? அப்பா வழக்கம் போல் ஆகாயத்திற்கும் பூமிக்கும் குதித்திருப்பார். அவர் மேல் எந்தத் தவறுமில்லை. என் மீதுள்ள பாசத்தால், அப்படிச் செய்கிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். பாசம் – அன்பு – பற்று என்பதை இப்போது நன்றாக உணர்கிறேன். காதலும் அந்த வகையில் சேர்ந்ததே.

காதல் என்ற புனிதச் சொல் இப்போது வெவ்வேறு பொருள்களில் பயன்படுகிறது. காதல் என்பது அன்பை



விட உயர்ந்தது. நேசம் என்கிறோம். ஒருவரையொருவர் நேசிப்பதைவிட சற்று மேலானது காதல். மிகவும் சக்தி வாய்ந்தது. உனக்கும் எனக்கும் உள்ளதும்கூட ஒருவகைக் காதலே. ஆனால், காதல் என்ற சொல்லை இப்போது ஆண்–பெண் இடையிலான உறவிற்கே பயன்படுத்துகிறோம். கால மாறுதலில் அப்படியே இருக்கட்டும். காமம் வயப்பட்ட காதல் நிலைப்பதில்லை.

தமிழுக்கும், எனக்கும் ஏற்பட்ட நட்பு காதலாக மலர்ந்தது. அதில் காம அடிப்படை இல்லாததால், என்னால் எந்தவிதத் துன்பத்தையும் தாங்கிக் கொள்ள முடிகிறது.

இப்போது பாரதியைப் படிக்கிறேன். நான் வசிக்கும் பேட்டையிலுள்ள மக்களைப் பற்றி நான் தனியே எழுதவேண்டும். ஏழைகள் என்று சொல்ல மாட்டேன். பெண்கள் கெட்டிக்காரிகள். ஆனால், அவர்கள் ஏனோ ஆண்களுக்கு பயப்படுகிறார்கள். முதலில் சில நாள்கள் எனக்கு அங்கே வசிப்பது பிடிக்கவில்லை. எப்படியெல்லாம் ராணி மாதிரி எங்கள் வீட்டில் இருந்தேன்? உன் வீட்டைப் பார்க்கும்போது அதைப் போன்ற வீட்டில் வசிக்க வேண்டும் என்று கனவு காண்பேன். எனக்கு வாய்க்கவிருக்கும் கணவரும் என்னைப் போன்று வசதியாக வாழ்க்கை நடத்தும் சக்தி படைத்தவராக இருக்க வேண்டும் என்று நினைத்ததுண்டு. எல்லாம் பொய்யாய், பழங்கதையாய் மெல்ல மெல்லப் போய்க் கொண்டிருக்கிறது.

என் அன்புக்குரிய தமிழைப் பற்றிப் பெரிய கனவுகள் கண்டேன். தமிழ் மாறிக் கொண்டே வருகிறார். இப்போது அவருக்கு இரவு ஷிஃப்ட். தொடக்கத்தில் ஒரு விதத்தில் அது நல்லதாகத் தோன்றியது. ஏனெனில் பகல் நேர வேலையாயிருந்தால் மாலை வீடு வந்தவுடனேயே நண்பர்களைச் சந்திக்கச் சென்று இரவு பன்னிரண்டு மணி, ஒரு மணி என்று வருவார். பிறகு காலை எட்டு மணிக்கு எழுந்திருப்பார்.

மேகலா! அவருடன் சுகம் அனுபவிக்கவே எனக்கு நாட்டம் கொள்ளவில்லை. காரணம், அந்த நெடி எனக்குக் குமட்டுகிறது. குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள விரும்புகிறேன். நான் நினைப்பதற்குள்ளே, என் வயிற்றில் தமிழின் பிரதிபிம்பம் உருவாகிறது. எவ்வளவோ தவிர்த்தும் சேலத்தில் அந்தச் சபலத்திற்கு ஆளாகிவிட்டேன்.

சேலத்திலிருந்து வரும்போதே நான் உணர்ந்தேன். யாரிடம் சொல்லி முறையிடுவேன்? மனத்தைத் திடப்படுத்திக் கொள்கிறேன். குடும்பம் நடத்துவதற்குக் கஷ்டப்படாமல் வருமானம் வருகிறது. இது ஒரு வாழ்க்கையா? நாள்தோறும் இரண்டு வேளை குளித்துக் கொண்டிருந்த நான் குழாயடிகளில் தண்ணீர் பிடித்துக் குளிப்பது என்பது வெறுப்பாகி விட்டது. மணிக்கணக்காகக் குழாயடியில் நிற்க வேண்டியிருக்கிறது. குழாயடியில்லை அது வம்புமடம். பெண்களைப் பூவையர் என்றும், மெல்லியலாள் என்றும், பொறுமையில் பூமிக்குச் சமம் என்றும் கூறுவார்கள். அவையெல்லாம் கவிஞர் கற்பனை! எங்கள் சூலக்காரன் பேட்டைக்கு வந்து பார்.

தாடகை, சூர்ப்பனகை என்று பெண் பாத்திரங்களை வர்ணிப்பார்கள். சீதையையும், மண்டோதரியையும் வர்ணித்த கவிஞர் இப்படிப் பெண்களை அரக்கிகள் என்று கேவலப்படுத்தும் பாத்திரத்தை ஏன் படைத்தார் என்று நினைப்பதுண்டு.

இங்கே குழாயடியில் பார்க்கிறேன். காதில் கேட்க முடியாத பேச்சுகள். நாள்தோறும் யாரைப் பற்றியாவது பேசாவிட்டால், அவர்களுக்குத் தலை வெடித்து விடும். அந்த இடத்திலிருந்து தண்ணீர் பிடித்து விட்டுக் குடத்துடன் செல்லும் மற்றொரு பெண்ணைப் பார்த்து வம்பளக்கத் தொடங்கி விடுவார்கள்.

அவள் கட்டியிருக்கும் புடைவையை, அவள் புதிதாகப் போட்டிருக்கும் காதுத் தொங்கட்டானை, ரவிக்கையை



அவள் நடையை வர்ணிப்பார்கள். இன்னும் பச்சையாகப் பேச்சு தொடரும். கடிதத்தில் எழுதுவதற்கே கூசும் சொற்கள்.

அவர்கள் பேசுவதைப பார்த்தால், ஒரு பெண் கூட கற்புக்கரசியாக, உத்தமியாக அங்கே இல்லை என்பது புலப்படும். ஓர் ஆண், இரண்டு மூன்று பெண்களை வைத்துக் கொண்டிருப்பதைப் பற்றியெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரே பெண் இரண்டு ஆண்களுடன் குடித்தனம் நடத்துவதைப் பற்றிச் சொல்வார்கள். சில அந்தரங்கங்கள் அங்கே அலசப்படும். வீடுகளில் பாத்திரம் தேய்ப்பது, வீடு பெருக்குவது போன்ற வேலைகளைச் செய்பவர்களைப் பற்றிப் பேச்சுத் திரும்பும்.

"அவங்க கொடுக்கற சம்பளத்திற்கா முனியம்மா, அங்கே வேலைக்குக் காலங்காத்தாலே ஓடறா? அந்த வீட்டு எசமானருக்கு இவ வைப்பாட்டி. அப்பப்ப அவங்க கொடுக்கற பணத்திலே மினுக்கிறா" என்று சொல்வதைக் கேட்டவுடன் எனக்குக் காது கூசும். கேட்க முடியாது

'அடப்பாவிகளா? ஒரு பெண்ணே, மற்றொரு பெண்ணைப் பற்றி அவதூறாகப் பேசுவதா?' என்று காதுகளை மூடிக்கொள்வேன். இரண்டு பெண்களுக்குள் சண்டை நடக்காத நாளில்லை. தலைமயிரைப் பிடித்துக் கொண்டு அந்தச் சகதியில் புரள்வார்கள். அவர்களை யாரும் தடுக்க மாட்டார்கள். தெரு நாய் கூட வாலைச் சுருட்டிக் கொண்டு ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கும். சேற்றில புரளும் பன்றிகள் தங்களுக்குப் போட்டியாக வந்தவர்களைக் கண்டு ஓடி ஒளிந்து விடும்.

அதுபோன்ற மோசமான நிகழ்ச்சிகள் என் மனத்தைப் பாதித்தன. அந்தப் பொதுக் குழாயடிக்குச் செல்லவே விருப்பம் இல்லை. அதனால் சற்றுத் தொலைவு சென்று ஒரு பங்களாவிலிருந்து தண்ணீர் பிடித்து வருவேன். பிடித்து வரும் தண்ணீரை, தமிழ் குளிப்பதற்கு வைத்துக் கொள்வேன். குடிக்கவும் கொஞ்சம் வைத்துக் கொள்வேன். நான் நாள்தோறும் குளிப்பதேது?

'முழுகாமல் இருக்கிறாயா?' என்று குழந்தை உண்டாகியிருப்பவர்களைப் பார்த்துக் கேட்பார்கள். நான் முழுகாமல்தான் இருக்கிறேன். இரண்டு அர்த்தம் தான். புரிந்து கொள்.

தமிழிடம் நான் இதுவரையில் ஒருநாளும் கோபமாகப் பேசியதில்லை. பேச வேண்டிய கட்டாயம் வந்தது. கண்ணாயிரம் நண்பரான பிறகு, தமிழின் போக்கு மாறிவிட்டது என்று எனக்குத் தெரியும். அவரை எப்படி மாற்றுவது?

'கல்லானாலும், கணவன். புல்லானாலும் புருஷன்' என்கிற வசனத்தை ஆதரித்திருக்கிறேன். தமிழுடன் அதுபோலவே வாழ விரும்பினேன். ஆனால், நிலைமை மாறுகிறது மேகலா!

கடிதத்திலேயே எல்லாம் கூறுகிறேன். இன்னும் எழுதுவேன். என் கடிதத்தை உடனே நீ என் அம்மாவிடம் காட்டுவாய். அம்மா புழுவாய்த் துடிப்பாள் என்று எனக்குத் தெரியும். அதனால் என் தற்போதைய நிலைமை பற்றி அதிகம் எழுத விரும்பமில்லை. உன்னிடம் நேரே பேச வேண்டும். நான் இருக்குமிடத்திற்கே உன்னை வரவழைக்க வேண்டும் என்று ஆசைதான்!

நான் இருப்பது இடமா? - மேகலா! இது ஒரு நரகம். 'ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு' என்ற வார்யத்தைத் தமிழில் 'குடிசை மாற்று வாரியம்' என்று தவறாக அழைக்கிறார்கள். குடிசை இருக்குமிடமெல்லாம் மோசமாக இருக்க வேண்டும் என்ற பொருளில்லை. ஆனால் அந்தப் பெய்ரைச் சூட்டியவர்கள் யார் என்று தெரியவில்லை. 'ஸ்லம்' - என்பதற்கு நரகம் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். அவலமான சூழ்நிலையில் நெருக்கடி நிலையில் வாழுபவர்களை உயர்த்த வேண்டும். அது நடக்கிறதா?

மேகலா! உன்னைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது. நானே நேரே உன்னைச் சந்திக்க வருவேன். ஆனால், நீ



என்ன சொல்வாய் தெரியுமா? என்னை வீட்டில் உட்கார வைத்து, ரகசியமாக ஆள்விட்டு என் அம்மாவிற்குச் சொல்லியனுப்பி விடுவாய். என் அம்மா பாச உணர்வு டன் கண்ணீர் விடுவாள். என் அப்பா அடியாட்களை அனுப்ப அவர்கள் என்னைக் குண்டுக்கட்டாய்த் தூக்கிப் போய் விடுவார்கள். இத்தகைய அவல நிலையை நான் விரும்பவில்லை! பார்ப்போம், தமிழ் திருந்துகிறாரா என்று. மேகலா! ரகசியமாக ஒன்று எழுதுகிறேன். என்வயிற்றில் உருவாகும் ஜீவனுக்காக நான் சத்துள்ள உணவுகளைச் சாப்பிட வேண்டும். அதற்காக ஓரிடத்தில் வேலை செய்ய எண்ணியிருக்கிறேன். மற்றவை அடுத்த கடிதத்தில்.

உன் அன்புள்ள
சந்திரமதி."

## நாற்பத்தாறு

சந்திரமதியின் தந்தை வேலு இறந்துவிட்டார். பார்வதியின் துயரத்துக்கு அளவில்லை.

சந்திரமதியைச் சூளைப் பகுதியில் பார்த்ததாக யாரோ வந்து மேகலாவிடம் கூறினார்கள்.

மேகலாவும், ஆவலுடன் அவள் சகோதரன், நண்பர்களுடன் சூளைப் பகுதிக்குச் சென்றாள். யார் யாரிடமோ விசாரித்தார்கள். என்னவென்று அடையாளம் கூறுவார்கள்? குடிசைப் பகுதியில் விசாரித்தார்கள். கட்சிக் கொடி பறக்கும் மன்றங்களுக்குச் சென்றார்கள். ஒருவரும் தகவல் சொல்லவில்லை.

ஒரு தேநீர்க் கடைக்குச் சென்ற போது, மேகலா பக்கிரியைப் பார்த்து விட்டாள். யாரிடமோ காரசாரமாக அவன் விவாதித்துக் கொண்டிருந்தான்.

ஐயோ, பழைய பக்கிரியா? ஆள் உருமாறியிருந்தான். கன்னங்கள் குழி விழுந்து காணப்பட்டன. சிகரெட் சங்கிலிபோல் பிடித்ததில் உதடுகள் கருநீலம் பாய்ந்திருந்தன.

"அதோ, அவர்தான் நாம் தேடி அலையும் சந்திரமதியின் கணவர்..." என்று மேகலா தன்னுடன் வந்தவர்களுக்கு அடையாளம் காட்டினாள்.

பக்கிரி சைக்கிளில் ஏறப்போகும் சமயம் மேகலாவுடன் வந்தவர்கள் அவன் அருகே சென்று சூழ்ந்து நின்று வணக்கம் தெரிவித்தனர். பக்கிரியும் பதிலுக்கு வணக்கம் தெரிவித்து சைக்கிளை நிறுத்திட்டு, அவர்கள் யார் என்று தெரியாமல் விழித்தான்.

"நாங்கள் உங்கள் ரசிகர்கள். உங்கள் பேச்சைக் கேட்டிருக்கிறோம்" என்று பேச்சைத் தொடங்கினர்.

"மிகவும் நன்றிங்க. நீங்க என்ன செய்யறீங்க?" என்று பக்கிரி கேட்டான்.

"இவன் படிக்கிறான். நாங்க இரண்டு பேரும் ரயில் பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்கிறோம்" என்றனர். ஒருவன் பேச்சைத் தொடர்ந்தான்.

"நல்ல சம்பளம் கொடுக்கறாங்க? நாலாயிரம் ரூபாய் கொடுக்கறாங்க. அது ஒரு சம்பளமா? நீங்க மில்லிலே வேலை செய்யறதாச் சொன்னாங்க. மில்லிலே நல்ல சம்பளம் இருக்குமே?"

"ஆமாம். பெரிய சம்பளம். எண்ணூறு ரூபா! ஒரு சைக்கிள் கடை வெச்சேன்னா, உட்கார்ந்த இடத்திலேயே இரண்டாயிரம் சம்பாதிப்பேன். அது சரிங்க. உங்க தொழிற்சாலையிலே எனக்கு ஒரு வேலைபோட்டுத் தாங்க.



இரவு ஷிப்டுன்னு போட்டு உயிரை வாங்கறாங்க" என்று சலிப்புடன் கூறிய பக்கிரி, "மன்னிச்சுக்குங்க. புதுசா அறிமுகமான உங்களிடம் என் குறையைப் புலம்பிட்டேங்க" என்றான்.

"பரவாயில்லைங்க. உங்க மாதிரி அறிவாளிங்க நிறைய சம்பாதிக்கணுங்க. புதுசா ஆளுங்க எடுக்கப் போறாங்க. நாங்க தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவங்க. எங்க பேச்சு நிச்சயம் எடுபடும். உங்களை எப்படியும் சேர்த்து விடறோம்" என்றான்.

"ரொம்ப நன்றிங்க. நானும் தொழிற்சங்கம் அமைக்க முயன்று வருகிறேன். நாம சந்திச்சுப் பேசுவோங்க. நேரமாகுது. ஒருவர் காத்திருப்பார். போகணும், பிறகு. சந்திக்கிறேன். உங்க முகவரி கொடுங்க" என்று பக்கிரி, சைக்கிள் பெடலை அழுத்தினான்.

"உங்க முகவரியைக் கொடுங்க. உங்களைச் சந்திக்கணும். நாங்க ரொம்ப நாளா முயற்சி பண்றோம். நாங்க ஒரு ஞாயிற்றுக்கிழமை வரோம்." என்றனர்.

"ஐயோ! எங்க வீடு குடிசைங்க. வர ரொம்ப சிரமமா இருக்கும். உங்க முகவரியையே கொடுங்க." நான் வரேன்" என்றான் பக்கிரி.

"எங்க முகவரியையும் தரோம். குடிசைப் பகுதியா இருந்தா என்னங்க? நாங்களும் குடிசைப் பகுதியிலேதான் இருக்கோம். ரொம்பத் தொலைவுங்க. உங்க முகவரியைக் கொடுங்க, நாங்க வர்றோம்" என்று காகிதம் பேனா எடுத்துக் கொடுத்தார்கள்.

பக்கிரி சென்ற பிறகு மேகலா அவர்களிடம், "நல்ல யுக்தியாகப் பேசினீர்கள். அந்த முகவரிக்கு உடனே செல்வோம்" என்று பரபரத்தாள்.

பக்கிரி எழுதிக் கொடுத்த முகவரிக்கு மேகலாவும், அவள் சகோதரனும் அவனுடன் வந்த நண்பர்களும் சென்றார்கள்.

பக்கிரி சொன்னதுபோல், அந்தப் பகுதி மிகவும் சுகாதாரக் குறைவாக இருந்தது. மேகலா பெரிதும் அதிர்ச்சியடைந்தாள்.

“இவ்வளவு சுகாதாரக் கேடான இடத்திலா சந்திரமதி நீ வாழ வேண்டும்? உன் தலையெழுத்து இப்படியா அமைந்திருக்கவேண்டும்?” வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது.

பக்கிரி குறிப்பிட்ட குடிசையைக் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருந்தது.

இடுப்பில் ஒரு குழந்தையுடன், நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கும் ஒரு பெண், சந்திரமதியை அடையாளம் கண்டு கொண்டாள்.

“ஓ! தலைவர் கண்ணாயிரம் கொண்டு வச்சிருக்கிற பொண்ணா? அதோ, அந்த வீட்டிற்குப் பின்பக்கம் போனால், ஒரு தனி வீடு” என்றாள்.

பிறகு, அவள் கேட்டாள்: “எதுக்குத் தேடறீங்க? எப்பவும் பூட்டியே கிடக்குது வீடு. வசதியான குடும்பத்துப் பெண்போல் தோன்றுகிறது. ஏன் இங்கே நரகத்திலே வந்து குடியிருக்காங்க? நாங்கதான் தலையெழுத்து. வீட்டுக்குச் சொல்லாம ஓடிவந்து அரைவயித்துச் சோத்துக்கு அல்லாடிட்டு இங்கே குப்பை கொட்டறோம்!”

மேகலா, ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தாள். பிறகு, “நீங்க சொல்றது ஒரு விதத்திலே நிஜம்தான். என் சிநேகிதி அவள். நல்ல குடும்பத்துப் பெண். அவளை அழைத்துப் போக வந்திருக்கோம்” என்று கூறிவிட்டு அந்தப் பெண் சொன்ன வீட்டை நோக்கி நடந்தாள். அவளை மற்றவர்கள் தொடர்ந்தனர்.

அதுவரையில் அங்கே வாலைச் சுருட்டிப் படுத்துக்கொண்டிருந்த கறுப்பு நிற நாய் 'உர்' என்று குரல் கொடுத்தது. பிறகு, 'வள்வள்' என்று குரைத்தது. அதனுடைய



அழைப்புக் குரல் கேட்டு, அதன் தோழர், தோழியர் ஓடோடி வந்தன.

மேகலா பயந்து விட்டாள். அவளுடன் வந்தவர்கள் நாயை விரட்ட முற்பட்டார்கள். நாய் குரைப்பது கேட்டு குடிசை ஒன்றிலிருந்து கிழவி ஒருத்தி வெளியே வந்தாள்.

“யாருங்க. என்ன வேணும்? ஆளுபேரு குறிச்சிக்க வந்திருக்கீங்களா? கிரசினாயில் வரும், அரிசி வரும்னு சொல்லிட்டுப் போறீங்க. வர்றத்தைக் காணல, ஏற்கெனவே பேரு சேர்த்துக்கிட்டுப் போனாங்க. ஓட்டுப் போடப்போனா உன் ஓட்டை காலங்காத்தாலே யாரோ போட்டுட்டுப் போயிட்டாங்கன்னு சொல்றாங்க, நீங்க யாரு எதுக்கு வந்திருக்கீங்க?” என்று கிழவி ஒவ்வொருவரையும் எடை போடுவது போல் உற்றுப் பார்த்துப் பேசினாள்.

“நாங்க அது மாதிரி ஆளுங்க இல்லை பாட்டி! இங்கே பக்கிரின்னு ஒருத்தரு. அவரு பொண்சாதி சந்திரமதின்னு பேரு. புதுசா குடிவந்திருக்காங்களே. அவுங்களைத் தேடி வந்தேன்” என்றாள் மேகலா.

“ஓ! கண்ணாயிரம் கொண்டு வச்ச அந்தப் புள்ளையா? நீ யாரு? அதுக்கு உறவுக்காரங்களா? நான் ஒண்ணு சொல்றேன், தப்பா நெனைக்காதே. ஏன் அவங்க இங்க இந்தச் சகதியிலே குடியிருக்காங்க? டீசண்டான பொம்பளை. இங்கே ஏன் வரணும்? அந்தப் பொண்ணு – அந்தப் பக்கிரியோ சிக்கிரியோ வந்த சில நாள்கள் பேச்சு மூச்சு இல்லாமல் இருந்தான். இப்ப சில நாள்கள் அந்தப் பொண்ணு ராவெல்லாம் கூச்சல் போடுது. அதுக்குப் பயந்துட்டு அந்த பக்கிரிராவுலே வரதில்லை. பக்கிரியைத் தேடிட்டு காலங்காத்தாலே யாராவது வராங்க. அவங்களைப் பார்த்து, இந்தப் பொண்ணு கூச்சல் போடறா. எங்க மாதிரி வீட்டுப் பொண்ணுங்க இப்படிக் கூச்சல் போட்டா, ஆம்பளை கத்தி எடுத்து வெட்டிப் போடுவான்.” சரி. நீங்க ஏன் அந்தப் பொண்ணைத் தேடி வந்திங்க?

மூச்சுவிடாமல் கிழவி பேசினாள். பேசும்போது ஒருவர் முகத்தை மட்டும் பார்த்துப் பேசாமல் எல்லாரையும் நோட்டம் விட்டாள். இல்லாடிக் கிழவி. நடுநடுவே வெற்றிலை எச்சிலை "பசக்பசக்" என்று தேங்கி நின்ற தண்ணீரில் துப்பினாள்.

பலமாகக் குரைத்த நாய்கள் அடங்கி விட்டன. பழைபடி கறுப்பு நாய் சுருட்டிப் படுத்துக்கொண்டது.

கிழவியின் குரல் கேட்டு இன்னும் இரண்டு பெண்கள் அங்கு வந்தார்கள். அழுக்கான புடைவை மார்பகத்தைச் சரிவரமூடாத ரவிக்கை, தூக்கக் கலக்கம் தெளியாத கண்கள்.

"என்னவாம் கிழவி?" என்று மாரியம்மா விசாரித்தாள்.

"அதான் புச்சா வந்திருக்குதே சேப்பா ஒரு பொண்ணு, அதைத் தேடி வந்திருக்காங்க" என்றாள் கிழவி.

"கட்சிக்காரரு அவரை அது இஸ்துகினு வந்துருச்சே அதுவா?" தன் கருத்தை ஒளிவுமறைவு இல்லாமல் ஒருத்தி கூறினாள்.

"ஆமாம். இவ பத்தினி. அந்தப் பொண்ணு அவனை இஸ்துக்கினு வந்துருச்சா? அவன் ஏன் இதை இஸ்துகினு வந்திருக்கக்கூடாது? என்ன அடக்க ஒடுக்கமா அந்தப் பொண்ணு காலையிலே எழுந்து, எங்கோ போகுது. நீ திவளிக்குத் திவளி குளிக்கிறே. அது யாரை இஸ்துகினு வந்தா உனக்கென்ன? சின்னப் பையனோட நீ ஓடியாந்தது தெரியாதா?" கிழவி கொக்கரித்தாள். மாரியம்மா வாயைத் திறந்தாலே கிழவி இப்படித்தான் சண்டைக்கு வருவாள்.

"அடிப்பாவி! நான் என்ன சொல்லிட்டேன்? இப்படி அசிங்கமா பேசறியே?" குற்றம்சாட்டப்பட்ட மாரியம்மாள் பேசினாள்.

"என்னடி அசிங்கம்? நேத்தி நல்லா கூச்சல்போட்டு அசிங்க அசிங்கமா அந்தப் பூங்காவனத்தைப் பேசினே. வெக்கமில்லாம அந்தப் பூங்காவனம் இன்னிக்கு உன்னோட குலாவறா..." என்று மாரியம்மாவைச் சாடினாள்.



"ஏ கிழவி! உன் தலையை மொட்டை அடிக்கணும்னு நான் ரொம்ப நாளாக் கருவிட்டிருக்கேன். ஆனா எங்க வூட்டுக்காரருக்குத் துப்பு இல்லை. பார்பரை இழுத்துட்டு வந்து உன் தலையை செரைக்காம, அது பொட்டச்சி போல போவுது" என்று மாரியம்மா சீறினாள்.

அங்கே மகாபாரத யுத்தம் தொடங்கியது. நல்ல நல்ல 'அமுத மொழிகள்' அங்கே உதிர்ந்தன.

மேகலா காதைப் பொத்திக் கொண்டாள். அவர்களுடைய சண்டைக்கு நடுவே, சந்திரமதி குடியிருக்கும் வீட்டை நோக்கிப் போனாள்.

வீடு பூட்டப்பட்டிருந்தது.

பழைய பூட்டு அங்கு தொங்கியது. பூட்டின் இடுக்கில் தன் பெயரைக் காகிதத்தில் எழுதி வைத்து விட்டு, மற்றொரு நாள் வருவோம் என்று புறப்பட்டாள். அங்கே பெண்கள் யுத்தம் நடக்காமலிருந்திருந்தால் அவள் சிறிது நேரம் இருந்திருப்பாள்.

புறப்படும்போது, கிழவியிடம், "பாட்டி! சந்திரமதி வந்தால் மேகலா வந்ததாகச் சொல்லு" என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

## நாற்பத்தேழு

**மே**கலாவிற்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி, சந்திரமதியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விட்டோம் என்பதில், மற்றொரு பக்கம் வருத்தம். எப்படி இருந்த பக்கிரி எப்படி ஆகிவிட்டார்? அவருடைய தோற்றம், பேச்சு,

நடவடிக்கையை நாமும்தான் கூர்ந்து கவனித்து வந்தோம். அதனால்தான் பக்கிரியைச் சந்திரமதி காதலிக்கிறாள் என்பதறிந்தவுடன் ஏற்றுக் கொண்டோம். ஆதரித்தோம், அவர்களிருவரும் வீட்டிலிருந்து வெளியேற உதவினேன். தன் முழுமனத்துக்குப் பிடித்தவனை சந்திரமதி மணக்க வேண்டும் என்ற முடிவுடன் மனத்துடன் ஆதரித்தேன். பக்கிரியின் நிலை இப்படியாகி விட்டதே? அவர் உருவம் எப்படி மாறிவிட்டது? இயற்கையாக அவர் சிவப்பு நிறம் இல்லை. ஆனால், சிவப்பும் பழுப்பும் கலந்த ஒரு நிறம்.

இப்போது கறுத்துவிட்டார். கண்களுக்குக் கீழே கருவளையம். சுருள் சுருளான தலைமுடி. ஒரு பெண்ணை முதலில் கவர்வது, தலைமுடியே. பிறகு கண்கள். முன்பு அவர் பேசும்போது மெல்லத் தெரியும் பல்வரிசைகள் கவர்ந்திழுக்கும். கூட்டத்தில் பேசும்போது புயலாக இருக்கும் குரல். தனிப்பட்டபோது பேசுகையில் அமைதியாக இருக்கும். ஒரு பெண்ணைக் கவர இவை போதாவா? சந்திரமதி அதிர்ஷ்டக்காரி. எனக்குக்கூட சில சமயங்களில் பொறாமை ஏற்படும், அவள் தேர்ந்தெடுத்தவரைப் பார்த்து. நான் மிகவும் கட்டுப்பாட்டுடன் அந்த எண்ணத்தை முளையிலேயே கிள்ளி விட்டேன்.

என் தோழி சந்திரமதி மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். அதனால்தான் அவ்வளவு முனைப்புடன் உதவ முனைந்தேன். சேலத்தில் அவளைச் சந்தித்த பிறகு எனக்குள்ளேயே நடுக்கம் ஒன்று ஏற்பட்டது. சந்திரமதியின் வாழ்க்கை சீராக அமையாதோ என்ற பயம் ஏற்பட்டது.

'ஐயோ, சந்திரமதி! – நீ வாழும் இடம். இப்படிப்பட்ட சேறும் சகதியுமான இடத்திலா அமைய வேண்டும்? சுற்றுப்புறச் சூழ்நிலை எப்படியோ போகிறது. அந்த மக்கள் மக்களா அவர்கள்? வயதான அந்தப் பெண் பேசும் பேச்சைக் காது கொடுத்துக் கேட்க முடியவில்லையே!



பக்கிரியைச் சந்தித்தது சில நிமிடங்கள்தான். நான் நேரே அவருடன் பேசவில்லை. நேருக்கு நேர் சந்தித்திருந்தால் பக்கிரி என்னிடம் மனம்விட்டுப் பேசியிருக்கக்கூடும். என்ன செய்வதென்று தெரியவில்லை. அவர் வீட்டிற்கு வருகிறேன் என்று சொல்லச் சொன்னேன். நான் நேரே சொல்லியிருந்தால், நிச்சயம் ஒப்புக் கொண்டிருப்பார். அவரே அழைத்துப் போயிருப்பார். அவர் தன் நிலையைத் தானே இகழ்ந்து கொண்டார். தானே நேரே வருவதாகச் சொன்னார். தனக்கொரு வேலை பார்த்துத் தருமாறு கேட்டுக் கொண்டார். இப்போதுள்ள மில் வேலையில் எப்போதுமே இரவு ஷிஃப்ட்தானாம். சந்திரமதிக்கும் அவருக்கும் அதனால் தகராறு வருகிறதாம். அவர் சொல்வதைக் கேட்டால், சந்திரமதியும் பக்கிரியும் அன்புடன் வாழவில்லை என்று தோன்றுகிறது.

என்னால் கணநேரம் கூட இருக்க முடியவில்லை. நாங்கள் சந்திரமதியைச் சந்திக்கச் சென்று அவள் வீடு பூட்டியிருந்த விவரத்தை பார்வதி அம்மாளிடம் தெரிவிக்க விரும்பவில்லை. கணவரை இழந்த துக்கத்திலும், தன் மகளைப் பிரிந்த துயரத்திலும் ஆழ்ந்திருக்கும் பார்வதி அம்மாள் இந்தச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்து விடக் கூடும்.

அதனால்தான், இரண்டு நாள்கள் சென்ற பிறகு மீண்டும் சந்திரமதியின் இருப்பிடத்திற்குச் சென்றேன். உடன் என் தம்பியை மட்டும் அழைத்துச் சென்றேன்.

அதே சூழ்நிலை, முதல் நாள் இரவு மழை பெய்து விட்டிருந்ததால் சேறும், சகதியும் அதிகமாயிருந்தன. ஒருவிதத் துர்நாற்றம் எங்கும் சூழ்ந்திருந்தது.

அதே பாட்டி, குளிர் நடுக்கிக் கொண்டிருந்தது. எங்களை நெருங்கி வந்து உற்றுப் பார்த்தாள்.

"நான்தான் பாட்டி! இரண்டு மூன்று நாள்களுக்கு முன்பு தேடிக் கொண்டு வந்தேனே?" என்றாள் மேகலா.

"அதானே! எங்கேயோ பார்த்த மாதிரி இருக்குதேன்னு நெனச்சேன். என்ன விசயம், அடிக்கடி இங்கே வறீங்க!" என்றாள். என் தம்பியைத் திரும்பிப் பார்த்து, "இது யாரு?" என்று கேட்டாள்.

"என் தம்பி"

"புள்ளையாண்டான் வேலையா இருக்குதா?"

"படிக்கிறான் பாட்டி."

"படிப்பா! நல்லாப் படி. ஆனால படிச்சுப்புட்டு ஒழுங்கா வேலை பார்க்கணும். ஊர் சுத்தக் கூடாது ஆமா. நீ என்ன பண்றே?"

"நான் பி.ஏ. படிக்கிறேன்."

"அது என்னவோ பி.ஏ.வோ ஓயேவோ, பொம்பளை படிச்சு என்ன பண்றது? உம்: நான் படிக்காம நல்லா வாழ்ந்து இப்போ இங்கே என் மருமவகிட்ட மொத்துப் படறேன். அதோ போறாளே சிறுக்கி மினுக்கிக் கிட்டு, புருசனைக் கைக்குள்ளே போட்டுக்கத் துப்பில்லாத அவதான் என் மருமக. ஜோரா சிங்காரிச்சுக்கிட்டு வேலைக்குப் போறாளாம்."

எனக்கு எரிச்சலாய் இருந்தது. பாட்டியிடம் கொஞ்சம் வாய் கொடுத்தால் வம்புதான் பிறக்கும் என்று, வந்த வேலையைப் பாாத்துவிட்டுத் திரும்ப எண்ணினேன்.

"சரி பாட்டி! அது உங்க காலம். படிக்காமப் போனா புருசங்க ஏறி மிதிச்சிடுவாங்க" என்றேன். பாட்டி சிரித்துவிட்டு, "ஆமாம், ஏறி மிதிக்கிறதுக்கும் சில பேரு அலையறாங்க தானே? என் புள்ளைக்கும் அவளுக்கும் சரிப்படலை. அதனால, இவ ஊர் மேயறா" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே நல்ல உடையணிந்து சென்ற அந்தப் பெண் சட்டென்று திரும்பி வந்தாள்.



"ஏய், கிழவி! என்ன சொன்னே? பல்லைக் கழற்றிக் கொடுத்துடுவேன். பல்லில்லாததாலே பாக்கறேன். நாக்கைத்தான் அறுக்கணும். உன்னைப் போல நெனைச்சியா? உம் மகனை அடக்க வக்கில்லை. ஊரார் பொண்ணைத் தேவடியாள்னு சொல்ல உனக்கு எப்படி நாக்கு வருது? சோத்துக்கு வக்கில்லாம எங்கப்பன் உங்க மவன் கிட்டே கொடுத்தார் 'பாரு அவரை'.... அடிக்கணும். அவனுக்கும் சேத்துச் சம்பாதிக்கணும்னு எனக்குத் தலையெழுத்தா? பகலெல்லாம் ஊர் மேய்வாரு. இராவுலே எங்கிட்ட படுக்க வருவாரு. நான் சும்மாயிருக்கணுமா? பேடிப் பய,போ. உன் மகனைக் கேளு. இன்னொருதபா இப்படிப் பேசினியானா நாக்கை அறுத்துப் புடுவேன். ஜாக்கிரதை!" என்று வீர வசனம் பேசி விட்டு என்னைப் பார்த்து, "உங்களுக்கு வேற வேலை இல்லையா? இந்தப் பொறுக்கி நாய்கிட்டே வம்பு பேச வந்தியா?" என்று சீறினாள்.

இதுபோன்ற 'தூய தமிழை' எல்லாம் கேட்டு எனக்குப் பழக்கமில்லை. உடனே அங்கிருந்து ஓடிப்போய் விட வேண்டுமென்று தோன்றியது. என் சகோதரன் கரத்தைப் பிடித்தேன்.

என் தம்பி கோபக்காரன். அவன் முகம் சிவந்தது. அவன் ஏதாவது ஏடாகூடமாகச் செய்துவிடப் போகிறான் என்று நான் அவன் கைகளைப் பிடித்து, சந்திரமதியின் குடிலை நோக்கி விரைந்தேன். சந்திரமதியைப் பார்த்தவுடன் என் உணர்வுகள் எப்படி இருக்கும் என்றும், அவள் என்னை எப்படி வரவேற்பாள் என்றும் கற்பனை செய்து கொண்டேன்.

'நிச்சயம் இருவரும் கண்ணீர் விடுவோம். யார் கதறி அழுவார்கள் என்று சொல்ல முடியாது. அவளை வீட்டிற்கு அழைத்துப் போகாமல் நான் அங்கிருந்து அகலுவதில்லை என்று உறுதி செய்து கொண்டேன். தன் வீட்டிற்கு அவள்

வர மறுக்கலாம். ஆனால், அவள் மனத்தை மாற்ற முயல்வேன். இரவு பகல் என்று அங்கேயே தங்குவேன் என்று சத்தியாக்கிரகம் செய்வேன். அப்படியும் அவள் மனம் மாறவில்லை என்றால், அவள் தந்தை சமீபத்தில் காலமானதைப் பற்றியும் அதற்குப் பிறகு பார்வதி அம்மாள் துக்கம் தாங்காமல் கடுமையாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் எடுத்துச் சொல்வேன். "நீ வராவிடில், உன் தாயையும் இழந்து விடுவாய்" என்று கடைசி அஸ்திரத்தைப் பிரயோகிப்பேன். அவள்மனம் கல்லாயிருந்தாலும் என் உருக்கமான வேண்டுகோளுக்குக் கரைந்து விடுமே! சந்திரமதி நிச்சயமாகக் கல் இல்லை. அவள் குழந்தை மனம் படைத்தவள். எனக்கிருக்கும் சிறு துணிவுகூட அவளுக்கு இல்லை. பார்ப்போம்.

இப்படியாக நான் என்னுள் ஒத்திகை பார்த்தேன். அந்தச் சிறிது நேரத்தில்.

சந்திரமதி இருக்கும் இடத்திற்குச் சென்றோம். வீட்டு வாசலில் சிறு குட்டையைப் போல் நீர் தேங்கியிருந்தது. புடைவையைக் கணுக்கால் வரையில் தூக்கிக் கொண்டு, அவள் குடிசையை அடைந்தேன்.

குடிசை பூட்டியிருந்தது.

சற்று தள்ளியிருந்த ஒரு வீட்டிலிருந்து நடுத்தர வயதுப் பெண் எட்டிப் பார்த்தாள். அந்த வீட்டைக் கல்வீடு என்றும், முக்கியப் புள்ளி வீடு என்றும் சொல்வார்களாம்.

பிறகு என்னை அவள் வீட்டிற்கு அழைத்தாள். அவர்கள் வீடு குடிசை வீடுகளிலிருந்து மாறுபட்டிருந்தது. கிழே எல்லாம் செங்கற்களால் கட்டப்பட்டு கூரைக்குச் சிமை ஓடு வேயப்பட்டிருந்தது. நான் தயக்கத்துடன் உள்ளே நுழைந்தேன்.

"வாம்மா!" என்று அந்தப்பெண் வரவேற்றாள். "சும்மா வாங்க, அன்னிக்குக்கூட வந்துட்டுபோனதா சொன்னாங்க" என்று வரவேற்றாள்.



நுழைந்தவுடன் சிறு ஹால். நான்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நீலநிற டிஸ்டம்பர் பூசப்பட்டிருந்தது. பெரிய அளவில் தலைவர்களின் படங்கள். ஒரு படத்தில் கண்ணாயிரம். தலைவர் ஒருவருக்குப் பெரிய மாலை அணிவிக்கிறார். அந்தப் படத்தைப் பார்த்தவுடனேயே, அந்த வீடு வாடகை நூலகம் வைத்து நடத்தியவரின் வீடு என்று தெரிந்து விட்டது.

"என்ன சாப்பிடறீங்க? காபி, டீ,பூஸ்ட்..." என்று அந்தப் பெண் உபசரிக்கத் தொடங்கினாள்.

நான் நெளிந்தேன். "ஒன்றும் வேண்டாங்க. சந்திரமதியைப் பார்க்க வந்தேன். வீடு பூட்டியிருக்கிறது. அவங்க எங்கே?" என்று கேட்டேன்.

அந்தப் பெண், உள்ளே சென்று சிறிது நேரத்தில் இரண்டு கோப்பைகளில் குடிக்க, சூடான பானம் கொண்டு வந்தாள்.

அவளும் எங்கள் எதிரே உட்கார்ந்து கொண்டாள். சந்திரமதியைப் பற்றி அவள் சொன்ன தகவல் என்னைத் திடுக்கிட வைத்தது.

## நாற்பத்தெட்டு

மேகலா ஏமாற்றத்துடனும், அதிர்ச்சியுடனும் கண்ணாயிரத்தின் வீட்டிலிருந்துத் திரும்பினாள். பேருந்தில் ஏறி வீட்டிற்கு எப்படி வந்து சேர்ந்தோம் என்பதே அவளுக்குப் புரியவில்லை. ஒருவித மயக்க நிலை. அவளுடன் அவள் சகோதரன் வந்ததனால் தடுமாறி விழாமல் வந்து சேர்ந்தாள். அவ்வளவு அதிர்ச்சி. வீட்டிற்கு வந்து சோபாவில் சாய்ந்தாள். அவள் தாயார் ஓடோடி வந்தாள். பதற்றத்துடன் விசாரித்தாள்.

“ஒன்றுமில்லை அம்மா!” என்று கூறி ஒன்றுக்கு இரண்டு தம்ளராக தண்ணீர் வாங்கிக் குடித்தாள்.

“இல்லையம்மா – அக்கா பொய் சொல்லுது. சந்திரமதியைத் தேடிப் போய் வந்தபிறகு அக்காவுக்கு அதிர்ச்சி” என்று அம்மாவையும் மேகலாவையும் பார்த்தவாறு தம்பி சொன்னான்.

“சந்திரமதியா?– ஓடிப் போனாளே அவளா வந்துட்டாளா? ஏண்டி அவளுக்காக நீ உயிரை விடறே?” என்று கடிந்து கொண்டாள் தாய்.

தம்பியைக் கோபத்துடன் பார்த்தாள் மேகலா. ‘சந்திரமதி வீட்டை விட்டுப் போய்விட்டாள்’ என்ற செய்தி அறிந்தவுடன் “அப்பாடி, இனி சந்திரமதியுடன் சுற்றமாட்டாள்” என்று தாய் திருப்தி அடைந்தாள். ‘சனி ஒழிந்தது’ என்று சொல்ல வாயெடுத்தாள். ஆனால், ஏனோ அடக்கிக் கொண்டாள்.

ஒரு தடவை –

“பெரிய புள்ளிக்குச் சந்திரமதியின் புருஷன் பி.ஏ. நல்ல வருமானம். நல்லவேளையாக, ஓடிப் போனவள் என்ற அவப்பெயர் பெற்ற சந்திரமதி நல்ல வாழ்வு வாழ வழிதேடிக் கொண்டாள்”, என்று மேகலா, அம்மாவிடம் பெருமையுடன் சொல்லியிருக்கிறாள்.

“ஓகோ அப்படியா! எங்கிருந்தாலும் நல்லா இருக்கட்டும். மறுபடியும் அவனை விட்டு அவள் ஓடிப் போகாம இருக்கட்டும். ஒரு தடவை ருசி கண்ட பூனை சும்மா இருக்காது” என்று தாய் சொன்னவுடன், மேகலா சீறினாள்.

“அம்மா!” என்று கோபமாகக் கத்தினாள்.

“என்ன வார்த்தை பேசுகிறீர்கள்? சிறு வயது முதல் சந்திரமதியுடன் பழகுகிறவள் நான். அவள் குணம் எனக்குத் தெரியும். தன் மனசுக்குப் பிடித்தவரை – மணந்து கொள்ள அவளுக்கு உரிமை இல்லையா? ஏம்மா அவதூறாகப் பேசுகிறீர்கள்? இன்னொரு தடவை அப்படிப் பேசாதீர்கள்.”



மேகலா இப்படிப் பேசி அவள் பார்த்ததில்லை. மௌனமாகப் போய் விட்டாள். பிறகு சந்திரமதியைப் பற்றித் தாய் கேட்பதில்லை. மேகலா தன் தாயிடம் எதையும் ஒளிக்க மாட்டாள். சேலத்துக்குப் போய் வந்தபோது சந்திரமதியைச் சந்தித்ததைப் பற்றிச் சொன்னாள். ‘உம்’ கொட்டிக் கேட்டுக் கொண்டாளே தவிர, கருத்து ஏதும் சொல்லவில்லை.

சந்திரமதியின் அம்மாவுடன் சேலம் போய் வர அனுமதி கேட்டாள். போய் வந்த பிறகு நடந்தவற்றை விவரித்தாள் அப்போதும் மேகலாவின் தாய் ஏதும் பதில் பேசவில்லை. முகத்தை ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டாள்.

பிறகு அவ்வப்போது சந்திரமதியைப் பற்றிச் சொல்வாள்.

“மேகலா! காதல் கல்யாணம் பற்றி இப்போது எல்லாரும் பேசுகிறார்கள். காதல் புனிதமானது என்று, படிக்கும் பெண்கள் சொல்கிறார்கள். நானும் படித்தவள்தான். ரொம்ப பழைமை நான். உலக நடப்பு எனக்கும் தெரியும். மேகலா! காதல் கல்யாணம் எல்லாமே அநேகமாக வெற்றியடைவதில்லை. முளையிலேயே கருகிவிடும். அல்லது துளிர்விட்ட பிறகு பட்டுப்போய் விடும். வளர்ந்தாலோ ஏகப்பட்ட தொல்லைகள், துயரங்கள், கல்யாணத்திற்குப் பிறகு காதல் நல்லதா, கல்யாணத்திற்கு முன்னே காதல் நல்லதா என்று பட்டிமன்றமே நடத்தலாம். ஏன் இப்படிப் பேசுகிறேன் தெரியுமா? காதல் – கீதல் என்று நீ எதிலும் சிக்கிவிடப் போகிறாய். அப்படி ஏதாவது இருந்தால் நான் மனசைத் திடப்படுத்திக் கொள்கிறேன். சந்திரமதியின் அம்மா நேற்று எங்கிருந்தோ போன் செய்தாள்...” என்று கூறி நிறுத்தினாள்.

மேகலா தாயைத் திரும்பிப் பார்த்தாள். அதில் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. “பார்வதி அம்மாள் போன் செய்தார்களா? என்ன சொன்னார்கள்?” என்று பர பரப்புடன் கேட்டாள்.

"சந்திரமதியைப் பற்றி விசாரித்தாள். சென்னையில் எங்கோ இருப்பதாக நீ சில நாள்களுக்கு முன்பு தகவல் சொன்னாயாம். அது பற்றித்தான் கேட்டாள். மேற்கொண்டு ஏதாவது விவரம் தெரிந்ததா? அதனால்தான் நீ சோர்வுற்று இருக்கிறாயா?" என்று கேட்டாள்.

மேகலா என்னவென்று சொல்வாள்? அம்மா சொன்னது சரியாகிவிட்டதே? அதை எப்படிச் சொல்வாள்? இருந்தாலும், மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு நடந்தவற்றை விவரித்தாள். அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. தாயின் கரத்தைப் பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

தாயின் கணைகளை ஏற்று மௌனமாக அடக்கமாக இருந்தாள் மேகலா. காதல் திருமணம் தோல்வியன்று என நிரூபிக்க விரும்பினாள் மேகலா. அதற்காகவே சந்திரமதியின் நடவடிக்கைகளை ஏற்றாள். அதற்காகவே, சேறும் சகதியும் நிறைந்த குடிசைப் பகுதிக்குச் சென்றாள். அந்தக் குடிசைப் பகுதியில் இருந்த மூதாட்டி அவளைப் பல கேள்விகள் கேட்டது ஒரு பக்கம் இருக்கட்டும்; முதல் நாள் உர் என்ற சொறி நாய் கூட மறுதடவை உற்றுப் பார்த்து விட்டுச் சுருண்டு படுத்துக் கொண்டது. ஆனால், குடிசைப் பகுதி நுழைவாயிலில் பெட்டிக் கடையில் 'தம்' அடித்துக் கொண்டு நின்றிருந்த கிருதா மீசைகள், லுங்கிகள் சிழ்க்கை அடித்தன. அவர்களுள் ஒருவன் பின் தொடர்ந்தபோது "என்ன பாப்பா, ஏற்கெனவே இங்கே ஒரு சேப்புக் குட்டி ஒயிலாட்டம் போடுது; நீயும் வர்றியா?" என்று கேட்டபோது தன் உணர்வு இல்லாத மேகலா, சோர்வுடன் திரும்பிப் பாராமல் நடந்தாள். இதுபோன்ற சமயங்களில் பாஞ்சாலங் குறிச்சி முயல்போல் திரும்பி எதிர்த்திருக்கிறாள்.

அம்மா தன் கோபத்தை, அறிவுரைகளை, எச்சரிக்கையை எல்லாம் முடித்த பிறகு மிகவும் அமைதியான குரலில் பேசினாள்:



"அம்மா! நீங்கள் சொன்னவை எல்லாம் நியாயம்தான். வயதின் அனுபவம் உங்களைப் பேச வைக்கிறது. எங்கள் இளம் வயது புரட்சிகரமான போக்கு என்ற பெயரில், உங்களைப் போன்ற பெரியவர்களைப் பத்தாம்பசலி என்று ஏளனம் செய்துவிடக் கூடும். 'ஒல்டு இஸ்கோல்டு' என்பதை நான் உணர்ந்தவள்.

"சந்திரமதியும் நானும் மணிக் கணக்காகப் பேசிக் கொண்டிருந்திருக்கிறோம். தாயிடம் மகள் மறைக்கக் கூடாது. எனக்குக் கல்யாண ஆசை கிடையாது. ஓர் ஆணின் மீது விருப்பம் கொள்ளும் ஆசையே தோன்றியதில்லை. இப்போது ஆண் இனமே சுயநலம் மிக்கது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்."

"ஆனால், சந்திரமதிக்கு பருவ ஆசை முளைவிட்டது என்பது எனக்குத் தெரியும். என்னைத் தொட்டுத் தொட்டுப் பேசுவாள். கை கோத்துச் செல்ல ஆசைப்படுவாள். அதுவே, எனக்குப் பிடிக்காது. காதல் கதைகள் படிப்பாள். கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று சொல்வாள். அவளும் நானும் நேசத்தைப் பற்றிப் பேசுவோம். அன்பு–காதல்–நேசம்–பாசம் என்று பலவிதப் பெயர்களுடைய உணர்வுகளைப் பற்றிப் பேசுவோம்.

"அம்மா, நாங்கள் கல்லூரிக்கு நடந்தே சென்ற காலங்களில் எங்கள் பேச்சு இப்படித் தானிருக்கும். சங்கப் பாடல்களை எங்களுக்குத் தமிழ் வகுப்பில் கற்றுக் கொடுப்பார்கள். சங்ககாலம என்பது என்ன? அதற்கு அப்படி ஒரு பெயரைப் பிற்காலத்தில் கொடுத்தார்கள். தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை அந்தப் பாடல்கள் பிரதிபலித்தன. இப்போது சிறுகதைகள் – புதினங்கள் மூலம் இக்கால வாழ்க்கை பிரதிபலிக்கப்படுவது போல, தலைவி–தோழி–தலைவன். தாய்க்குத் தெரியாமல் தலைவி வெளியூர் செல்லுதல் என்பதெல்லாம் அக்காலத்தில் குற்றமாகக் கருதப்படவில்லை.

"அம்மா! நான் ஏதோ பேராசிரியை மாதிரி பேசுவதாக நினைக்காதீர்கள். நான் அமைதியாகச் சிந்திக்கிறேன். என்னை நானே கட்டுப்படுத்திக் கொள்கிறேன். சைக்கிள் வாங்கிய பிறகுதான் சந்திரமதியின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. சைக்கிள் கடையில் வேலைசெய்த பக்கிரியிடம் தன் மனத்தை எப்படியோ பறிகொடுத்தாள்.

"அவள் மனத்தில் அவர் எப்படிப் புகுந்து கொண்டார் என்பது எனக்குப் புரியவில்லை. அந்த முதல் உணர்வைப் பற்றி அவளைக் கேட்டேன். அவளுக்கே தெரியவில்லை. அவர்கள் நேசம் வளரத் தொடங்கிபோது அவள் என்னை அடிக்கடி சந்திப்பதில்லை. மனம்விட்டுப் பேசுவதில்லை. ஓரொரு சமயங்களில் இருவரும் பேசிக்கொண்டே வருவோம்.."

மேகலா உணர்ச்சியுடன் பேசிக்கொண்டு போகும்போது, அவள் தாய் குறுக்கிட்டு –

"சரிதாண்டி, அந்தப் பக்கிரியோ, கிக்கிரியோ என்ன வேலை செய்கிறான்? என்ன வருமானம் வருகிறது? என்ன படித்திருக்கிறான் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டாளா? யாரையாவது விசாரித்தாளா? என சற்றுக் கோபமாகக் கேட்டாள். சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யும் வக்கிலின் தோரணை அதில் இருந்தது.

"எனக்குத் தெரியவில்லை அம்மா! முதல் பார்வையில் எப்படி அவள் மனசைப் பறிகொடுத்தாள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். விரும்பினேன் என்பதைவிட ஆசைப் பட்டேன். பக்கிரி என்ற பெயர் நன்றாக இல்லையே என்று சொல்லிப் பார்த்தேன். பக்கிரி நன்றாக மேடையில் பேசக் கூடியவர்."

"வர் – என்னடி மரியாதை? 'வன்' என்று சொல்லு."

"சரிம்மா. வார்த்தையிலே என்ன மரியாதை? நம் நடவடிக்கைகளிலே அதுபுலப்பட வேண்டும். இரு அம்மா!



நான் சொல்லி முடித்து விடுகிறேன். சந்திரமதி அவனுடைய தமிழில் மயங்கியிருக்க வேண்டும். பிறகு அவனுடைய் கண்கள், தலை மயிர், சிரிப்பு – இப்படி...."

"ச்சீ.. வர்ணிக்காதே. நீயும் அவளைப் போல் காதலித்துக் குட்டிச் சுவராப் போயிடாதே!..."

"ஒரு சமயம் அப்படி ஒரு காய்ச்சல் எனக்கு ஏற்பட்டது. என்னைப் பற்றி நானே எப்படிம்மா சொல்ல? உன் பெண்ணில்லையா? நான் சுய கட்டுப்பாடு செய்து கொண்டேன்.அம்மா! தயவுசெய்து குறுக்கிடாதே. நான் சொல்வதை முழுசாகக் கேளும்மா. எனக்கும் அவளுக்கும் குணத்தில் பல வித்தியாசங்கள் உண்டு. ஆனால், அவள் ரொம்ப நல்லவள், நேர்மையானவள், காதலனைத் தேர்ந்தெடுப்பதில் தவறு செய்துவிட்டாள். புற அழகில் மயங்கி மனசைப் பறிகொடுத்து விட்டாள்."

"மேகலா – அதைத்தான் நானும் சொல்கிறேன். வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்கி விடக்கூடாது. அதுவும் பெண்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும.பெண்களைப் பெற்றவர்கள் ஒருநிலைக்குப் பிறகு கண்காணிப்புடன் இருக்க வேண்டும். சிலந்தி வலைகளில் சிக்கி விடக்கூடாது. தங்கள் குழந்தைகளின் நலன் பெற்றோருக்குத் தெரியும். மாப்பிள்ளையின் படிப்பை மட்டும் பார்ப்பதில்லை. அவர்கள் குலம் கோத்திரம் பார்க்கிறார்கள். நாலு பேரைக் கேட்கிறார்கள். தங்கள் பெண்கள் கண்கலங்காமல் இருக்க வேண்டும் என்று கவலையுடன், கவனத்துடன் எல்லாக் காரியங்களையும் செய்கிறார்கள். கண்டதும் காதல், அவசரக் கோலம்.."

"நீங்கள் சொல்வதை நான் அப்படியே ஒப்புக்கொள்ள மாட்டேன். பெற்றோர் பார்த்துச் செய்து வைக்கும் கல்யாணங்கள் எல்லாமே வெற்றியடைந்தவையல்ல. அதேபோல, எல்லாக் காதல் கல்யாணங்களும் தோல்வியடைந்தவையுமல்ல. என் அருமைத் தோழி

சந்திரமதியின் காதல் தோல்வியடையக் கூடாது என்பதற்காக நான் பாடுபடுகிறேன. ஆனால், என் முயற்சி தோற்றுவிடும் போலிருக்கிறது.பக்கிரியின் பெயர் எனக்குப் பிடிக்கவில்லை என்றேன்.

“அவளுக்கும் பிடிக்கவிலை.பெயரை மாற்றி விட்டாள். அழகிய பெயராக 'தமிழ்' என்றழைத்தாள். ஆனால், பக்கிரிதான் நிலைத்தது. பக்கிரி அடிப்படையாக நல்ல குணமுடையவன். சூழ்நிலை மாற்றி விட்டது. சமீபத்தில் நான் அவனைப் பார்த்போது, நான் அதிர்ச்சியடைந்தேன். அம்மா - அவன் குடிக்கும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு விட்டான். அதனால் சந்திரமதிக்கும் அவனுக்கும் கடுமையான தகராறு என நினைக்கிறேன். சந்திரமதி எதை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்வாள். அவன் பீடி சிகரெட் பிடிப்பதைக் கண்டித்திருக்கிறாள். குடியை மட்டும் அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மதுவைப் பற்றி நாங்கள் மணிக்கணக்காகப் பேசியிருக்கிறோம்.”

“சரி, சிக்கிரம் சொல்லு. சந்திரமதி என்ன ஆனாள்?”

“நான் குடிசைப் பகுதிக்குச் சென்றேன். அவள் வீடு பூட்டியிருந்தது. அவன் சில நாள்களாகவே அங்கு வருவதில்லை எனத் தெரிந்தது. அவள் ஒரு வீட்டில் ட்யூஷன் சொல்லிக் கொடுக்க ஒப்புக் கொண்டாளாம். அந்த வீட்டிலேயே தங்கியிருக்கிறாள் போலிருக்கிறது.”

“அந்த வீடு எங்கே இருக்கிறது?”

“அந்த வீட்டு முகவரியை வாங்கி விட்டேன். அவளைப் பார்க்கப் போகிறேன். அம்மா அவளை நம் வீட்டிற்கு அழைத்து வரட்டுமா அம்மா?”

மேகலாவின் தாய் சீறினாள். “கூடாது. அவள் வீட்டிற்கு போகக் கூடாது. நீ இனி வெளியே எங்கேயும் போகக் கூடாது. காலை முறித்து விடுவேன்!..” என்று கூறினாள்.



## நாற்பத்தொன்பது

சிறைப்படுத்தப்பட்ட பறவை போல் மேகலா தடுமாறினாள். காதலித்தவனைக் காணச் செல்லக் கூடாது என்று தடுப்பதற்காகத் தாய் தன் மகளை சிறை வைப்பதைக் கண்டிருக்கிறோம். ஆனால், முழுச் சுதந்தரம் கொடுத்திருந்த தன் தாய் இப்படித் தடை உத்தரவொன்றை விதித்திருப்பது மேகலாவிற்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது.

சந்திரமதி என்ன ஆனாளோ, எங்கே தவிக்கிறாளோ என்று எண்ணியெண்ணி வேதனையடைந்தாள். நடந்ததை அப்பாவிடம் விவரித்து அனுமதி வாங்க எண்ணியிருந்த போது, அம்மா முந்திக் கொண்டாள். இரவு, படுக்கை அறையில், தன் தந்தையிடம் சந்திரமதியின் கதை முழுவதையும் கூட்டியும் குறைத்தும் சொல்லியிருக்கிறாள்.

“நீங்கள் கொடுக்கும் இடம்தான், உங்கள் பெண்ணுக்குத் துணிவு ஏற்பட்டது. யாரோ, ஒரு சிநேகிதியாம். அவளுக்காக இவள் உயிர் விடுவது போல் அலைவது சரியாகப்பட வில்லை” என்று முத்தாய்ப்பு வைத்த பிறகு அந்த அறையில் அமைதி நிலவியது. விளக்கு அணைந்தது. அறைக்கு வெளியே மேகலா நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

மீண்டும் விளக்கு எரிந்தது. அம்மா வெளியே வருவதற்குள் அங்கிருந்து சென்றுவிட வேண்டும் என்று பரபரப்புடன் தன் அறைக்கு விரைந்தாள்.

மேகலாவின் காதுகளில் படும்படி அம்மா பேசிக்கொண்டே கூடத்திற்குள் பிரவேசிப்பது தெரிந்தது.

“உங்களிடம் வருவாள் செல்லப் பெண். நீங்கள் கண்டித்துக்கூற வேண்டும். கல்யாணமாக வேண்டியவள் உங்கள் பெண் என்பது நினைவிலிருக்கட்டும்.

சந்திரமதியுடன் சுற்றுகிறாள் என்று வெளியே தெரிந்தால் அவதூறு பரவிவிடும். பிறகு நம்ம பொண்ணுக்குக் கல்யாணம் ஆவது இந்தப் பிறவியில் இல்லை. என்ன நான் சொல்வது? நாளைக்கே நீங்கள் டூர் கிளம்பி விடுவீர்கள். மேகலா நான் சொல்வதைக் கேட்கவே மாட்டாள். அதனாலே நீங்க ஊருக்குப் புறப்படும் முன்பு உங்க பொண்ணைக் கூப்பிட்டு புத்திமதி சொல்லி வையுங்கள். கொஞ்சம் கண்டித்து வையுங்கள், என்ன?" தாயின் குரலில் கண்டிப்பு இருந்தது. மேகலாவின் தந்தை பதில் சொல்லவில்லை.

காலை எழுந்தவுடன் தன் அப்பா தன்னை அழைப்பார், அவரிடம் நிலைமையை விளக்கிச் சொல்ல வேண்டும், சந்திரமதியைத் தேடுவதில் தன் தந்தையின் உதவியை நாட வேண்டும் என்று எண்ணினாள்.

தந்தையிடம் பேசப்போகும் போது அவர் வெளியூருக்குப் புறப்படுவதற்குத் தயாராக இருந்தார். யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். ஒருவர் தொலைபேசியில் பேசும் போது அவர்களுடைய அனுமதி இல்லாமல் அங்கே இருப்பது கூடாது எனும் நற்குணமுடையவள். அதனால் சிறிது நேரம் கழித்து வரலாம் என்று குளியலறைக்குள் சென்று வந்தாள்.

"வாம்மா, மேகலா! உன்னைப் பார்ப்பதற்கு இனி முன் அப்பாயிண்ட்மெண்ட் வாங்க வேண்டும் போல இருக்கிறது!" என்று குறும்புச் சிரிப்புடன் தொடங்கினார்.

மேகலாவும் மெல்லச் சிரித்தாள். அவருடைய பூர்வ பீடிகைக்குள் நூறு அர்த்தங்கள் புதைந்திருக்கும் என்பது அவளுக்குத் தெரியும். அப்பாவின் முகத்தையே பார்த்த வாறு நின்றாள்.

"மேகலா! நான் இன்று ஊருக்குப் போகிறேன். நீ படித்த பெண். நாலும் தெரிந்தவள். கல்யாணம் ஆகவேண்டிய



நிலையில் இருக்கிறாய்" சொல்லிவிட்டு மேகலாவை அவர் மூக்குக் கண்ணாடிக்குள்ளிருந்து நோக்கினார்.

இவ்வளவு நாள்கள் இல்லாத முன்னுரை, முகவுரை ஏன் சொல்கிறார் என்று அவளுக்கே வியப்பாக இருந்தது.

"என்னப்பா! என்னிடம் சுற்றி வளைத்துப் பேசுவது உங்கள் வழக்கமில்லையே! சொல்ல வருவதை நேராய்ச் சொல்லுங்கள் அப்பா! சொல்வதற்கோ என்னைக் கண்டிப்பதற்கோ உங்களுக்குத் தயக்கமாக இருந்தால் நான் சொல்லட்டுமா?" மேகலாவின் இந்த வார்த்தைகள் அவரைத் திகைக்க வைத்தன.

"என்னம்மா?..." என்பது போல் நோக்கினார்.

"அம்மா எல்லாவற்றையும் சொல்லியிருப்பார்கள். நான் வீணாக யாருக்கோ உதவுகிறேனாம். அதனால் சிக்கலில் அகப்பட்டுத் தொல்லைப் படுகிறேனாம். என் தோழி சந்திரமதியைப் பற்றிய செய்தியை எல்லாம் அம்மா உங்களிடம் ஒன்று விடாமல் சொல்லியிருப்பார்கள். நீங்களே முடிவு செய்து எனக்குக் கட்டளையிடுங்கள். சந்திரமதி ஒருவனைக் காதலித்தாள். அவளுடைய காதலுக்கு நான் உதவினேன்.பெரிய மனுஷி போல் ஏன் நீ தலையிட்டாய் என்று நீங்கள் கேட்கலாம். எங்கள் இருவரின் நட்பு அபூர்வமானது. எங்கள் நட்பை விளக்கச் சொற்கள் வரவில்லை மேலும், ஒரு மகள் அப்பாவிடம் சொல்லத் துணிவும் வேண்டும்."

"உம், சொல்லம்மா" என்ற சமிக்ஞை அவரிடமிருந்து வந்தது.

மேகலா சொல்வதைப் புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்தார் அவர். தந்தை வெளியூர் புறப்படும் சமயம் அமைதியாக நாம் சொல்வதைப் பொறுமையாகக் கேட்கிறாரே என்று உற்சாகத்துடன் தொடர்ந்தாள்.

"அவள் தன் காதலனுடன் வெளியூர் செல்ல நான் உதவினேன். அத்துடன் என் பணி முடிந்தது. பிறகு

அவளைப் பற்றிச் சில நாள்கள் எனக்குச் செய்தி ஏதும் தெரியவில்லை. அவள் சௌக்கியமாக இருக்கிறாள் என்றே நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், நிலைமை வேறுவிதமாக மாறியது. நான் நினைத்தபடி, அவள் விரும்பிய படி அவள் வாழ்க்கை அமையவில்லை. கடைசியாக அவள் சென்னையின் அழுக்கும் ஆபாசமும் நிறைந்த பகுதிக்குக் குடி வந்து விட்டாள். அவளை இன்று வரையில் நான் பார்க்க முடியவில்லை. அவள் கணவனை நான் பார்க்க முடியவில்லை. அவள் கணவனை நான் சந்தித்தேன்,” என்று கூறி சற்று நிறுத்தியபோது தந்தை குறுக்கிட்டார்.

“நீ அவனைப் பார்த்துப் பேசினாயா? அவன் என்ன செய்கிறான்?”

“நான் அவனுடன் நேருக்கு நேர் பேசவில்லை. தம்பியும் அவன் நண்பர்களும் பேசினார்கள். தொலைவிலிருந்து அவனைப் பார்த்தேன். அப்பா! எனக்கே சொல்லக் கூசுகிறது. என் அருமைத் தோழி சந்திரமதியின் கணவன் இப்படி மாறி விட்டானே என்று அதிர்ச்சியடைந்தேன். வெளித்தோற்றம் போலவே உள் மனதும் மாறியிருக்கும் என்று உறுதிப்படுத்திக் கொண்டேன். உண்மையிலேயே என் வயிற்றைக் கலக்கியது அப்பா! குலுங்கிக் குலுங்கி அழ வேண்டும் போல் தோன்றியது. அவளைத் தேடிச் சென்றேன். வீடு பூட்டியிருந்தது. கடைசியில் அவளைப் பற்றிக் கேட்டறிந்தேன். சந்திரமதி பக்கிரியுடன் மனத்தாங்கலுடன் வேறு எங்கோ சென்று விட்டதாக அறிந்தேன். இதுதான் நடந்த கதை” என்று சொல்லி நிறுத்தினாள். அப்போதும் அவள் த்ந்தை மௌனமாக இருந்தார். அடுத்து அவள் பேச முற்படும்போது அவர் எழுந்தார். தன் பெட்டியில் பயணத்துக்கு வேண்டிய துணிகளை எடுத்து வைத்துக் கொண்டே மேகலா பேசுவதைக் கேட்கலானார்.



“அப்பா! நான் சந்திரமதியைப் பற்றிச் சொல்பவையெல்லாம் கேட்டறிந்தவை அல்ல. அவள் அவ்வப்போது கடிதம் எழுதினாள். ஆனால் ஒரு தடவை கூட தன் முகவரியைக் கடிதத்தில் கொடுக்கவில்லை. மறந்துபோய் முகவரியை எழுதவில்லை என்று நினைத்தேன். தன் இருப்பிடம் தெரியக்கூடாது என்று வேண்டுமென்றே அவள் எழுதாமலிருக்கிறாள் என்று எண்ணினேன். முதல் கடிதம் வந்தபோதே அவள் முகவரி தெரிந்திருந்தால் நான் அவள் வாழும் நிலையறிந்து அவளைப் பலவந்தமாக அழைத்து வந்திருப்பேன், அப்பா! அவள் இப்போது எங்கிருக்கிறாள் என்றே தெரியவில்லை. அவள் இருக்குமிடம் தெரிந்து நம் வீட்டிற்கு அழைத்து வந்துவிட, அம்மாவிடம் அனுமதி கேட்டேன். அம்மா என்னைச் சிறையில் அடைக்காத குறைதான்!“

மேகலாவின் குரல் தழுதழுத்தது. கலங்கின. விழிகளை மெல்லத் துடைத்துக் கொண்டாள்.

“அப்பா! நீங்களே சொல்லுங்கள். என்னைப் போன்ற வயதுள்ள ஒரு பெண்ணுக்கு உதவுவது தவறா? இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் இருக்கிறோம். பெண் உரிமையைப் பற்றிப் பேசுகிறோம். காதலைப் போற்றுகிறோம். காதல் வாழ்க்கை வெற்றியடைய வேண்டும் என்று சந்திரமதி விரும்பினாள். அதற்காக காதல் என்ற பெயரால் ஆண் ஆதிக்கம் ஓங்குவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. சந்திரமதி எத்தகைய துன்பத்தையும் சகித்துக் கொள்ளக்கூடியவள். அவள் பொறுமையின் எல்லைக் கோடு வரையில் சென்றிருக்கிறாள். காதல் எனும் புனித யாத்திரையைத் தொடங்கி, ஆரம்பம் முதல் கடைசி வரை காதலின் வெற்றிக்காகப் பாடுபட முயன்ற சந்திரமதியைக் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு. சொல்லுங்கள் அப்பா! அவள் எங்கிருக்கிறாள் என்பதை நான் கண்டுபிடித்தாக வேண்டுமா, இல்லையா?”

மேகலா சொல்வதை அவர் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். கேட்டுக் கொண்டே பயண ஏற்பாடுகளையும் கவனித்தார். இரண்டு தடவை மேகலாவை தாய் அங்கே எட்டிப் பார்த்து, தந்தையும் மகளும் பேசுவதைச் சிறிது நேரம் சற்று ஓரமாக நின்று கேட்டுவிட்டு மீண்டும் மீண்டும் வந்தாள்.

“நேரமாகவில்லையா? உங்கள் பெண் காதலுக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவாள். நாளைக்கு இவள் என்ன செய்து விடப் போகிறாளோ? பயமாயிருக்கு. உங்க டூர் பயணத்தோடு பயணமாக கோபிசெட்டிப்பாளையம் சென்று, தர்மராஜனைப் பார்த்துட்டு வாங்க. அவர் மகனுக்கு நம்ம பொண் ஏற்றவ. பொண்ணு ஜாதகத்தைக் கொடுத்தாத்தானே, அவர்களும் கல்யாணத்துக்கு முனைவார்கள்?” என்று சந்தடி சாக்கில், தன் கணவரின் பொறுப்பை உணர்த்தியும், ரயிலுக்கு நேரமாகிவிடப் போகிறது என்பதை எச்சரித்தும், சொல்லிவிட்டுப் போனாள்.

தன் மகள் அருகே வந்த அவள் தந்தை, “மை டியர் சைல்டு! நீ சொல்வதையெல்லாம் நான் ஒன்று விடாமல் கேட்டுக்கொண்டேன். ஒரு பகுதியை உன் அம்மா நேற்றே சொல்லி விட்டாள். காதல் – கீதல் இதெல்லாம் எனக்குப் புரியாது. ஒழுக்கம், கட்டுப்பாடு, நாணயம் ஆகியவைதான் முக்கியம். பெண்களுக்குத் தேவை. உன் சிநேகிதி சந்திரமதியின் துயரக் கதை என் மனத்தையும் உலுக்கி விட்டது. அதிலும் இன்று காலையில் உன் சிநேகிதியிடமிருந்து வந்த போன் என்னை மிகவும் நெகிழச் செய்து விட்டது” என்று கூறியவுடன் மேகலா குறுக்கிட்டுப் பரபரப்புடன் “என்னப்பா என்னப்பா? யாரிடமிருந்து போன்? சந்திரமதியிடமிருந்தா? காலையிலா? நான் எங்கே போய்விட்டேன்? ஏன் என்னிடம் இதுவரை சொல்லாமல் மிகவும் மெதுவாகச் சொல்கிறீர்கள்! அவள் என்ன



சொன்னாள்? எங்கே இருக்கிறாளாம்? அப்பா! அவள் இருக்குமிடம் சொல்லுங்கள். நான் உடன் போய்ப் பார்த்து வர வேண்டும். என்னப்பா, இப்படி செய்துவிட்டீர்களே? என்ன சொன்னாள்?” என்று பதைபதைப்புடன் கேட்டாள். அவள். நெற்றியில் வியர்வைத் துளிகள்.

அவள் தந்தை மிக அமைதியாக, இடுப்பு பெல்ட்டைச் சரிசெய்து கொண்டு, கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு, “மை டியர் டாட்டர், சந்திரமதியே பேசினாள். மேகலா இருக்கிறாளா என்று கேட்டாள். அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாள் என்று கூறி, என்ன சொல்ல வேண்டும் என்று கேட்டேன். பிறகு பேசுவதாகச் சொல்லி விட்டாள். எங்கிருந்து பேசுகிறாய் மகளே என்று வாஞ்சையுடன் கேட்டேன். அவள் பதில் சொல்லவில்லை. ‘ஸ்வீட் வாய்ஸ்’ அவளுக்கு இவ்வளவு தொல்லையா?.. போன் தடைப்பட்டு விட்டது” என்றார்.

மேகலா குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

## ஐம்பது

ஒருவாரம் ஓடி மறைந்தது. மேகலா சரியாகத் தூங்கவில்லை. செய்தித்தாளில், பட்டப்படிப்புத் தேர்வு முடிவுகள் வெளிவந்திருந்தன. முடிவைத் தெரிந்து கொள்வதில்கூட, அவள் ஆர்வம் காட்டவில்லை.

“உன் நம்பர் என்ன மேகலா?” என்று தாயார் கேட்டாள். எரிச்சலாக இருந்தது. மேகலாவுக்கு. வெளியே காட்டிக்கொள்ளாமல், “அதோ!“ என்பதுபோல், நாள்காட்டி அட்டையில் ஒருபுறமாகக் குறிக்கப்பட்டிருந்ததைச் சுட்டிக் காட்டினாள்.

தன்னைப் போல் சந்திரமதியும் தேர்வு எழுதியிருக்க வேண்டும். வாழ்க்கைப் பயணத் தேர்வை எழுதுவதில் திசை திரும்பிவிட்ட சந்திரமதி பட்டப்படிப்பிற்கு எப்போதோ முழுக்குப் போட்டுவிட்டாள்.

காதல் படிப்பில் நன்றாகப் படித்து அதில் பட்டதாரியாக ஆகிவிடுவாள் என்று மேகலா நினைத்தாள். அதிலும், சந்திரமதி தோற்றுவிட்டாள் என்பது இப்போது தெரிகிறது.

உயிருக்குயிராய் நேசித்த காதலனை அவள் துறந்து விட்டாள். எங்கு சென்றிருப்பாள்? தன் காதலனைத் தியாகம் செய்யுமளவிற்கு அவளுக்கு என்ன நேர்ந்திருக்க வேண்டும்? வீட்டைவிட்டு எங்கும் செல்லக்கூடாது என்று நூற்றி நாற்பத்தி நான்கு தடைச் சட்டம் விதித்து விட்டாள் என் தாய். எப்படி மீறுவது? தந்தையும் தாயின் பக்கம். கண்டிப்பாகச் சொல்ல முடியாமல் அறிவுரை கூறுவதாகச் சுற்றி வளைத்துப் பேசி அவரும் எனக்கு மூளைச் சலவை செய்ய முயல்கிறார். பெண்கள் சுதந்தரமாய் இந்த வீட்டில் காதலைப் பற்றியும் பெண் உரிமையைப் பற்றியும் பேசக் கூடாது. தடை உத்தரவை மீறினால்?

சோகமாயிருந்த முகத்தைக் கழுவிக் கொண்டாள். சோர்வாய், கிலி பிடித்தது போல் உட்கார்ந்திருந்த தன் மகள் எழுந்து விட்டதில் தாய்க்கு மகிழ்ச்சிதான்.

தன் எண் வந்திருந்த செய்தித்தாளை அம்மாவிடமிருந்து கேட்டு வாங்கினாள்.

முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தாள்.

“மேகலா! செய்தி அறிந்து பலர் ‘கன்கிராட்ஸ்’ சொல்ல வருவார்கள். அவர்களுக்கு ஏதாவது இனிப்பு தர வேண்டாமா?” என்று அம்மா கேட்டாள்.



ஒரு கணத்தில் அவள் மூளை இயங்கியது. வெளியே செல்ல ஒரு வழி.

“ஆமாம், அம்மா! என்ன ஸ்வீட் செய்யப் போகிறாய்? அப்பா இருந்திருந்தால் நல்ல சாக்லெட் வாங்கி வரச் சொல்வேன்” என்றாள் மேகலா.

“ரேஷன் சர்க்கரை, நாளைக்குத்தான் வாங்கணும். நெய், முந்திரி, திராட்சை எல்லாம் வாங்கி வரணும். வாங்கித் தந்தால் புதுவித ஸ்வீட் ஒன்று செய்வேன். கடைக்குப் போக ஆளில்லையே?” என்று அம்மா கவலைப்பட்டாள்.

“இவ்வளவையும் வாங்கி ஸ்வீட் செய்தாக வேண்டுமா? நல்ல டாஃபியா பார்த்து நான் வாங்கி வரேன். வருபவர்களுக்குக் கொடுக்கலாம். காசு கொடு. நான் தெருமுனை ‘பாய்’ கடையிலிருந்து வாங்கி வரேன்” என்றாள் மேகலா.

மறு பேச்சுப் பேசாமல், ஐம்பது ரூபாய் நோட்டை அம்மா எடுத்து நீட்டினாள்.

சாக்லெட் வாங்கி வர ‘பாய்’ கடைக்குச் செல்லாமல், சந்திரமதி தங்கியிருக்கும் வீட்டு முகவரியை உத்தேசமாகக் கேட்டறிந்ததை வைத்துக் கொண்டு அவளைத் தேட விரைந்தாள். மீண்டும் பேருந்து ஏறிச் சென்றால், நேரம் அதிகமாகும். நுங்கம்பாக்கத்தில் டாக்டர் அறிவொளி வீட்டைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சிரமமாக இராது. அம்மா தந்த ரூபாயுடன், தன் பர்ஸிலிருந்த ரூபாயையும் சேர்த்து எடுத்துக் கொண்டு நுங்கம்பாக்கம் புறப்பட்டாள்.

“வேறு புடைவைகூட உடுத்தாமல், இப்படியே புறப்படுகிறாயே?” என்று அம்மா கேட்டாள்.

“தெருமுனைக் கடைக்குத்தானே?” என்று அம்மா நம்பும்படியாகச் சொல்லிவிட்டு விரைந்தாள்.

ஆட்டோ ஒன்று உடனே கிடைத்தது.

நுங்கம்பாக்கத்தில், பல்பொருள் அங்காடி ஒன்றிற்குச் சென்று டாக்டர் அறிவொளியின் முகவரியைக் கேட்டாள். தெரியாதுஎன்று உடனே சொல்லாமல், இருவர் மூவரைக் கேட்டு விட்டுத் தெரியாது என்று கூறிவிட்டனர். விசாரித்தவர்கள் ஒருவருக்கும் தெரியவில்லை. கடைசியில் ஒரு யோசனை தோன்றியது. மருந்துக் கடை ஒன்றிற்குச் சென்றாள். அவர்கள் சரியான முகவரியைக் கொடுத்தனர்.

மிக மகிழ்ச்சியுடன், துள்ளலுடன் அந்த முகவரிக்குச் சென்றாள்.

'டாக்டர் அறிவொளி' என்ற பெயர் ஒரு பக்கமும் 'தமிழகம்' என்ற பெயர் மற்றொரு பக்கமுமாகத் திகழ்ந்த அந்த வீட்டின் வெளிக்கதவு திறந்திருந்தது. உள் கதவு மூடப்பட்டிருந்தது.

தயக்கத்துடன் சென்று அழைப்பு மணியை அழுத்தினாள். பதில் இல்லை. சிறிது நேரம் தயக்கத்துடன் நின்றிருந்தபோது, வீட்டின் பின் புறத்திலிருந்து பெரியவர் ஒருவர் கையில் ஒரு பையுடன் வந்தார்.

"வீட்டில் யாருமில்லை. ஏன் அந்த அழைப்பு மணியை அலற வைக்கிறாய்?" என்று சற்று அதட்டலுடன் கேட்டார் பெரியவர்.

"எனக்கு எப்படித் தெரியும்? என் தோழி சந்திரமதி வரச் சொல்லி எழுதியிருந்தாள். வந்தேன். வீட்டில் யாருமில்லாதது எனக்கு எப்படித் தெரியும்?" மேகலா ஒரு போடு போட்டாள்.

"ஓ! சந்திரமதியின் தோழியா நீ? உன்னை வரச் சொல்லிவிட்டு அவ, டாக்டர் குடும்பத்தோடு, நேற்றே ஊருக்குப் புறப்பட்டு விட்டாளே?"



மேகலா திடுக்கிட்டு நின்றாள். இதென்ன சோதனை? கதைகளில் வருவதுபோல் எதிர்பாராத திருப்பங்கள்.

"பாப்பா! என்ன வேண்டும்? அப்படியே திகைத்து நிற்கிறாயே? உன்னை என்றைக்கு வரச் சொல்லி அவ கடிதம் போட்டாள்?" என்று பெரியவர் கேட்டார்.

மேகலா தன்நிலை அடைந்தாள். "என் மேல்தான் தவறு தாத்தா! போன வாரமே வரச் சொல்லியிருந்தாள்" என்று சொல்லிவிட்டு பெரியவர் முகத்தைப் பார்த்தாள்.

அவளுடைய சோகமான, ஏமாற்றம் நிறைந்த முகத்தைப் பார்த்து பரிதாபமாய் கிழவர், "ஐயோ பாவம்! எங்கிருந்து வருகிறாய் பாப்பா! எதனாச்சும் சாப்பிடுகிறாயா?" என்று பரிவுடன் கேட்டார்.

வாயிற் படிக்கட்டுகள் அகலமாயும், நீளமாயும் இருந்தன. அவரிடம் பேச்சுக் கொடுத்தால் மேலும், செய்தி அறியலாம் என்று களைப்பாக இருப்பது போல் படிக்கட்டுகளில் அமர்ந்தாள். கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"எங்கிருந்து வர்றே பாப்பா?" என்று அனுதாபத்துடன் கேட்டார் அவர்.

"பல்லாவரம்!" என்று ஏதோ சொல்லி வைத்தாள் மேகலா.

"ஆமாம். பல்லாவரத்துக்கு ஒரு கடிதாசி மேகலான்ற பேருக்கு போடச் சொல்லிச்சு சந்திரமதி. சந்திரமதிக்கு நீ என்னம்மா வேணும்?" என்று அவரும் பேச்சைத் தொடர்ந்தார்.

"என்னுடைய உயிர்த்தோழி. நானும் அவளும் ஒன்றாகப் படித்தோம். நான் பரிட்சை எழுதினேன். பாஸாகி விட்டேன்" அவள் முடிப்பதற்குள்,

"என்ன பெயர் சொன்னே? சந்திரமதியா! அது பரிட்சை எழுதல்லையா? எழுதிப் பாஸாகலையா?" கிழவர் கேட்டார். அது யதார்த்தமான கேள்வியாகப் படவில்லை.

"ஊஹூம்... அவள் பரீட்சையே எழுதவில்லை. நான் பாஸாகி விட்ட செய்தியைச் சொல்ல, வந்தேன். டாக்டர் வீட்டாரோடு அவளும் ஊருக்குப் போயிருக்காளா? எப்ப வருவாங்க?" மேகலா ஆவலுடன் கேட்டாள்.

"பாப்பா! இப்படிக் குந்திக்கினு இரு. நான் ஓடிப் போயி எதனாச்சும் டீ காபி வாங்கி வரேன். வெயில்லே வந்திருக்கே" என்று புறப்பட்ட பெரியவரைத் தடுத்து, "அதெல்லாம் வேண்டாம் பெரியவரே! சந்திரமதியைப் பார்க்க வேண்டும். அவள் ஊருக்குப் போயிருக்கிறாள் என்ற செய்தி எனக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. எப்ப வருவா பெரியவரே?" மேகலா செய்தியை விரைவில் அறியும் ஆவலுடன் கேட்டாள்.

அவர் சிரித்தார். "இப்ப எங்கம்மா வரப் போறாங்க? டாக்டர் குடும்பத்துடன் மேல் படிப்புக்கு அமெரிக்கா போகிறார். இந்தப் பொண்ணு, அவங்க உதவிக்குப் போகுது. அவங்க இந்தியா வரப் போறப்பதான் வருவாங்க" என்று கூறி மேகலாவின் முகத்தைப் பாாத்தார்.

"டில்லிக்குப் போயிருக்கிறதாச் சொன்னீங்க?"

"ஆமாம், டில்லிக்குப் போய் அங்கே ஒரு வாரம் தங்கியிருந்து அமெரிக்கா போயிடுவாங்க" என்று கிழவர் சொல்லச் சொல்ல மேகலாவின் அதிர்ச்சி அதிகமாகியது.



"ஐயோ! சந்திரமதி! இப்படிச் சொல்லாமல் போய் விட்டாயே? அன்று என்னைத் தொலைபேசியில் அழைத்திருக்கிறாய். என்னக் கூப்பிட்டு உன்னுடன் பேசவிடாமல் அப்பாதான் செய்து விட்டார். அப்பா எவ்வளவு பெரிய துரோகம் செய்து விட்டார்? குறைந்த பட்சம் உன் அட்ரஸையாவது அவர் கேட்டிருக்லாம். எல்லாரும் சதிகாரர்கள். இப்ப என்ன செய்வது? மதுரை, கோயம்புத்தூரா டாக்டர் அறிவொளியை எப்படியாவது கண்டுபிடிக்க? என்ன செய்வது?" மேகலா புலம்பினாள். மயக்கமடையாத நிலைதான்.

"பாப்பா! நான் டீ வாங்கி வரேன்" என்றார் பெரியவர்.

சரி என்று தலையை அசைத்தாள் மேகலா.

## ஐம்பத்தி ஒன்று

ஏமாற்றத்தைச் சுமந்த நெஞ்சத்துடன் திரும்பிய மேகலா, வீட்டிற்கு வந்தவுடன் அயர்ந்து போய் வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கவில்லை. கிழவர் கொடுத்த தேநீரை அருந்தும்போதே அவளுக்குத் துணிவு ஏற்பட்டு விட்டது. தில்லியில் டாக்டர் தங்கும் முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். அந்த ஓட்டலின் தொலைபேசி எண்ணையும் கேட்டுப் பெற்றுக் கொண்டாள். அது ஒரு பெரிய ஐந்து நட்சத்திர ஓட்டல்.

வீட்டிற்கு வந்தவுடன் அம்மா. எங்கோ வெளியில் போயிருப்பதையும் மாலையில்தான் வீட்டிற்குத் திரும்புவாள் என்பதையும் அறிந்தாள்.

மாலை வரையில் அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சந்திரமதியுடன் தொலைபேசியில் பேசிவிட்டு, அவளைச் சந்திக்க தில்லிக்குப் போகத் தீர்மானித்தாள்.

'சந்திரமதி, ஏன் டாக்டர் வீட்டிற்குச் சென்றாள்? அவர்களுடன் புறப்பட்டுச் செல்லக் காரணம் என்ன? அவள் விரும்பி ஏற்ற பக்கிரியுடன் அவளுக்கு என்ன தகராறு? இவற்றையெல்லாம் போனில் கேட்க முடியாது. 'சந்திரமதி! நான் நேரே வருகிறேன். பேசுவோம். அவசரச் செய்தி' என்று மட்டும் சொல்லிவிட்டுப் போனை வைத்துவிட்டுப் புறப்படுவோம் என்று முடிவு செய்து கொண்டாள்.

தில்லியில் எங்கு சென்று தங்குவது? அவள் அதைப் பற்றியெல்லாம் யோசிக்கவில்லை. துணிவு அவளுக்குத் துணையாக இருந்தது.

வெளியூர் தொலைபேசி இயங்கும் 'பூத்துக்குச்' சென்றாள். அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலுக்கு 'எஸ்.டி.டி' போட்டாள். நீண்ட நேரம் அவளுக்குப் போன் கிடைக்கவில்லை. ஆங்கிலத்திலும், இந்தியிலும் 'லைன்' முழுமையும் என்கேஜ்டாக இருக்கிறது. மீண்டும் போன் செய்க' என்ற பதிவு செய்யப்பட்ட குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது. அது தெரியாமல் அவள் அந்தக் குரலுக்குரிய பெண்ணுடன் பேச முயன்றாள். பயனில்லை.

சோர்ந்து வீட்டிற்குத் திரும்பிப் பயணத்திற்கு ஆக வேண்டியதை ரகசியமாக ஏற்பாடு செய்து கொண்டாள். அவளுடைய சொந்த சேகரிப்பு ஆயிரம் ரூபாய் இருந்தது. அது போதாது. மற்றோர் உறவினர் வீட்டுக்குச் சென்று ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டாள்.

மறுபடியும் மாலை நான்கு மணிக்கு ஓட்டலுக்குப் போன் செய்தாள். தொலைபேசி இலாகாவில் இந்தியில்



பேசினார்கள். பிறகு, தில்லி ஐந்து நட்சத்திர ஓட்டல்காரர்களும் இந்தியில் பேசினார்கள். அவளுக்குப் புரியவில்லை. ஆங்கிலத்தில் பேசுமாறு கத்தினாள்.

'எஸ்.டி.டி' வைத்திருப்பவருக்கு இந்தி தெரியும். அவர் போனை வாங்கி அவர்களுடன் பேசித் தமிழில் மொழி பெயர்த்தார்.

"அம்மா! நீங்கள் கேட்ட அறை எண்ணுக்குடையவர் அறையைக் காலி செய்து விட்டுச் சென்று விட்டாராம்."

மேகலா திகைப்புடன், பூத்காரரைப் பார்த்து, "சரியாகக் கேளுங்கள் ஐயா" என்று பரபரத்தாள்.

"சரியாகத் தானம்மா கேட்கிறேன். ஒவ்வொரு நொடிக்கும் சார்ஜ் ஏறுகிறது தெரியுமா?" என்றார்.

"எவ்வளவு வேண்டுமானாலும் சார்ஜ் ஆகட்டும் ஸார்! சரியாகக் கேட்டுச் சொல்லுங்கள். மறுபடியும் வருவதாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாரா என்று கேளுங்கள்" என்று பதைபதைப்புடன் கேட்டாள் மேகலா.

"கேட்டேனம்மா. அறையைக் காலி செய்துவிட்டு டாக்டர் லக்கேஜுடன் ஏர்போர்ட்டுக்குப் புறப்பட்டுவிட்டாராம்."

அதற்குள் டெலிபோன் பூத் உரிமையாளருக்கும் பொறுமையில்லை.

"எழுபத்தைந்து ரூபாய் முப்பது காசு" என்று கூறிவிட்டு, "சற்று நகருங்கள். அடுத்துப் பேச வேண்டியவர் காத்திருக்கிறார்" என்றார், மிக நாகரிகமாக.

மேகலா, ஏமாற்றத்துடன் வீட்டை நோக்கிச் சென்றாள். 'சிறிது நேரம் முன்பாகச் சென்றிருந்தால், சந்திரமதியுடன் பேசியிருக்கலாம். ஹூம். நம் சோம்பேறித்தனம் பகலில்

ஒய்வு எடுத்துக் கொண்டது' என்று தன்னை நொந்து கொண்டாள். அன்று முழுவதும் அவள் யாருடனும் பேசவில்லை. இரவெல்லாம் சிந்தித்தாள். மறுநாள் காலையில் அவள் எழுந்திருக்கும்போது பத்து மணியாகிவிட்டது.

"ராத்திரி தூங்கவில்லையா, மேகலா?" என்று அம்மா துக்கம் விசாரித்தாள். மேகலா தலையை மட்டும் அசைத்தாள். குளித்துக் காப்பி மட்டும் சாப்பிட்டு விட்டு, வெளியே புறப்பட்டாள்.

"காலையிலே எங்கேடி போறே?" என்று கேட்டாள் அம்மா.

அம்மாவைக் கோபத்துடன் பார்த்து விட்டுக் கைப்பையை மேஜை மீது வீசிவிட்டு, உட்கார்ந்தாள்.

"தினமும்தான் வெளியே போறே. எங்கே போறேன்னு கேட்டதால் சகுனம் கெட்டுப் போகாது" – அம்மா சொல்லிக் கொண்டே உள்ளே சென்றாள்.

சிறிது நேரம் ஏதோ யோசித்தவாறு உட்கார்ந்திருந்த மேகலா, அமெரிக்கத் தூதரகம் நோக்கிப் புறப்பட்டாள். அங்கே அவளுக்குத் தெரிந்தவர் இருக்கிறார். அவரிடம் கேட்டால், டாக்டர் அறிவொளி அமெரிக்காவில் எங்கே தங்குகிறார் என்பதைச் சொல்லி விடுவார். தொலைபேசி எண்ணும் கிடைத்துவிடும்.பேசலாம்! 'சந்திரமதியை விடுவதில்லை. என்னிடமிருந்து அவள் அவ்வளவு சுலபமாகத் தப்ப முடியாது' என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

அமெரிக்கத் தூதரகத்திற்கு அன்று விடுமுறை.

சந்திரமதியுடன் பேசவேண்டும் என்ற அவளுடைய முயற்சிகள் பலிக்கவில்லை. இரண்டு மூன்று நாள்கள்



சோகமாக நகர்ந்தன. ஒருநாள் தொலைபேசி மணி அடித்தது.அவள் எடுக்கவில்லை. பிறகு விட்டுவிட்டு அடித்தது. எரிச்சலுடன் எடுத்தாள்.

மறுமுனையிலிருந்து பக்கிரி பேசினான். ஒரு பக்கம் ஆத்திரம். மறுபக்கம் சந்திரமதியைப் பற்றி ஏதாவது அறிந்து கொள்வோமென்ற எதிர்பார்ப்பு.

பக்கிரி பேசினான். தொலைபேசியிலே ஒரு குறை அழுதான்.

"தங்கச்சி! உனக்குத்தான் சந்திரமதியின் முகவரி தெரியும்னு சொல்றாங்க" என்றான்.

"யார் சொன்னாங்க?" – மேகலா கண்டிப்புடன் கேட்டாள்.

"யாரோ சொன்னார்கள். சந்திரமதியைத் தேடியலைகிறேன். அவள் வேலைக்குச் சேர்ந்த டாக்டர் வீட்டு முகவரி கிடைத்தது. அங்கு போய் விசாரித்தேன். நீயும் அங்கு சென்று சந்திரமதியைப் பற்றி மிகவும் அக்கறையுடன் விசாரித்ததாகச் சொன்னார்கள். சில நாள்களுக்கு முன்பு நீ அங்கு வந்திருந்தாயா?" என்றான் பக்கிரி.

"ஆமாம். அதற்கென்ன?" – மேகலா சீறினாள்.

"தங்கச்சி! நீ கூட கோபித்துக் கொள்ளக்கூடாது. அந்த டாக்டர் அமெரிக்கா சென்று விட்டாராம். அவர்களுடன் சந்திரமதியும் சென்று விட்டாளாம். உனக்குத் தெரிந்தால் சொல்லு தங்கச்சி! நான் உருக்கமாகக் கடிதமொன்று எழுதுகிறேன்" அவன் பேசி முடிப்பதற்குள், "ஏன் அவள் முகவரி? அமெரிக்காவிற்குச் சென்று, அங்கும் சந்திரமதிக்குத் தொந்தரவு கொடுப்பதற்காகவா? நான்

முகவரி கொடுக்க மாட்டேன். அவள் உன் மனைவி இல்லை!" - மிக ஆத்திரத்துடன் பேசினாள் மேகலா.

பொறுமையைக் கடைப்பிடித்தான் பக்கிரி. என்ன, என்ன பேசுகிறாள்? என்னைக் குற்றவாளியாக்கி விட்டு, சந்திரமதி அமெரிக்கா செல்ல இவள் தான் தூண்டியிருக்க வேண்டும்.

மேகலாவிற்கு ஆத்திரம் தாங்கவில்லை. ஆங்கிலத்திலும் தமிழிலுமாக வசை மொழிந்தாள். 'என் அருமைத் தோழியை ஊரைவிட்டே விரட்டி விட்டாயே?' என்று கூவினாள்.

பக்கிரி கோபப்படவில்லை. அவனுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

"மேகலா! தங்கச்சி, நான் சொல்வதைத் தயவு செய்து கேளு..."

"நான் கேட்கத் தயாராயில்லை. போனை வைத்துவிடு. நேரத்தை வீணாக்காதே. பெண்களை அவமானப்படுத்த உன்னைப் போல் எவ்வளவு பேர் தோன்றியிருக்கிறீர்கள்?" அவள் கத்தியது கேட்டு, அடுக்களையிலிருந்து அவள் அம்மா ஓடிவந்தாள்.

"தங்கச்சி! நான் நேரே வந்து உன்னிடம் விளக்கிச் சொல்கிறேன். பெண்களைப் பெரிதும் மதிப்பவன் என்பது உனக்குத் தெரியும்."

"நம்பி ஏமாந்து விட்டேன்."

"தங்கச்சி! - நான் நேரே வந்து சொல்கிறேன்."

"வராதே. வந்தால், நான் மாகாளியாகி விடுவேன்."

"அப்படியாவது என்னைக் குத்தி மாலையாகப் போட்டுக் கொள். சந்திரமதிக்கு நான் செய்த துரோகத்திற்குப் பரிகாரமாகட்டும்."



"துரோகமிழைத்ததாக இப்பொழுது ஒப்புக் கொள்கிறாயா? அதை அவளிடமே சொல்லி மன்னிப்புக் கேட்டிருந்தால், அவள் இந்த நாட்டைவிட்டே போயிருக்க மாட்டாளே?"

"தங்கச்சி! நான் துரோகம் செய்ததை ஒப்புக் கொள்கிறேன். அதற்காக அவள் அந்த டாக்டரைக் கல்யாணம் செய்து கொண்டு போயிருக்கலாமா?"

பக்கிரி இப்படிச் சொன்னதுதான் தாமதம். மேகலா மெய்யாகவே காளியானாள். பக்கிரிக்கு இதுவரை ஓரளவுக்கு மரியாதை கொடுத்து வந்தவள், இப்போது மிக மோசமாகப் பேசத் தொடங்கினாள்.

"ஏய் துரோகி! பாவி!... என்ன வார்த்தை சொல்லிவிட்டாய்? வா, உடனே இங்கே வா, மெய்யாகவே உன் குடலைக் கிழித்து மாலையாக்குகிறேன். ஆனால் நான் அதை அணிந்து கொள்ளமாட்டேன்" மேகலா சொல்லிவிட்டு விம்மினாள். போன் கீழே விழாமல் ஊசலாடியது. அம்மா அங்கே வந்து போனை வைத்துவிட்டு அவளை அழைத்துச் சென்றாள்.

மேகலாவுக்கு நல்ல காய்ச்சல் வந்து விட்டது. இரவெல்லாம் பிதற்றல்.

"என் அருமைச் சந்திரமதி! உன் வாழ்க்கை பாழாவதற்கு நானும் ஒரு காரணம். உன் காதலுக்கு நான் தூது சென்றேன். பல விதங்களில் உதவினேன். ஆண்கள் எல்லாரும் நயவஞ்சகர்கள் என்பதை அறியவில்லை..." அவள் பேசிக் கொண்டே இருந்தாள்.

அவள் தாய் அவள் அருகேயே இருந்தாள். மறுநாள் காலையில் காய்ச்சல் தணிந்து விட்டது.

பகல் ஒருமணி. வாசலில் இரண்டு பேர் வந்தனர். ஒருவர் தபால்காரர். மற்றொருவர் தன்னை 'தமிழ்' என்று அழைக்கப்படும் பக்கிரி' என்று சொன்னான். தாய்க்கு அவனை அடையாளம் தெரியவில்லை. பக்கிரியை வெளியில் உட்காரச் சொன்னாள்.

தபால்காரர் கொடுத்த பதிவுத் தபாலை வாங்கினாள். அது மேகலாவின் பெயருக்கு இருந்தது. 'தனிப் பார்வைக்கு மட்டும் என்று தமிழிலும் 'ஸ்ட்ரிக்ட்லி கான்பிடென்ஷியல்' என்று ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருந்தது. சந்திரமதி எழுதியிருந்தாள். தில்லியிலிருந்து வந்திருப்பதாகத் தெரிந்தது.

மேகலா அவசர அவசரமாக அந்தக் கடிதத்தை வாங்கினாள். பரபரப்புடன் படித்தாள். மறுமுறை படித்தாள். அவள் வடித்த கண்ணீர், கடிதத்தின் பல எழுத்துகளின்மீது உதிர்ந்து அழித்தது.

*"அன்புள்ள மேகலா!*

'நேசம் மறக்கவில்லை. நெஞ்சம் நினைவு முகம் மறக்கலாமோ!' என்று பாடும் காலம் வந்து கொண்டிருக்கிறது" என்று அந்தக் கடிதம் தொடங்கியது.

அந்தக் கடிதம், மெல்லிய அழகிய பேப்பரில் எழுதப்பட்டிருந்தது. தில்லியிலுள்ள ஐந்து நட்சத்திர ஓட்டலின் பெயரிட்ட லெட்டர் ஹெட்! வேகமாக எழுதியிருந்தது. அந்தக் கடிதத்தை ஒரே நாளில் சந்திரமதி எழுதவில்லை என்பது தெரிந்தது.

"என் உயிருக்குயிரான தோழி மேகலா! உன்னைச் சந்திக்காமல் நான் ஏமாற்றி விட்டேன். ஆம்; உண்மைதான். சந்தித்திருந்தால் என் மனத்தை மாற்றியிருப்பாய்.



சென்னையிலேயே இருக்கச் செய்திருப்பாய். சென்னையில் வாழ்வதை நான் விரும்பவில்லை.

நான் ஆசையாகத் 'தமிழ்' என்று பக்கிரிக்கு வைத்த பெயர், அவருக்கு நிலைக்கவில்லை. இன்னும் அவர் பக்கிரி என்று தான் அழைக்க விரும்புகிறார். அவருடைய உயர் இலட்சியத்துக்காகக் காதலித்தேன். அடுத்ததாக அவர் குணம்.

ஏன் காதலித்தேன்? காதலில் எப்படி அழுத்தமாக இருந்தேன்? என்றே எனக்குப் புரியவில்லை. உம்; அவற்றையெல்லாம் இப்போது நினைத்துப் பயனில்லை.

பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்ல அவை மறையவே விரும்புகிறேன்.

தந்தை இறந்தார்; தாய் இறந்தார்; அவற்றிற்குத் துக்கம் கொண்டாடாத அரக்கி நான். இப்போது நேசத்தை காதலைக் கொன்று குழி தோண்டிப் புதைத்து விட்டேன். அதற்கு நான் வருந்த வேண்டுமா?

பாரதியின் காதல் பாட்டு என்னைப் பொறுத்தவரை பொய்யாகிவிட்டது.

நரகம் போன்ற அந்த இடத்தில் வசிக்க மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன். 'சேரி' என்ற சொல்லால் அழைக்க மாட்டேன். ஆனால், மேகலா! அவருடைய போக்கு மாறுவதைக் கண்டவுடன்தான் இனி நரக வாழ்க்கையை அனுபவிக்கப் போவதாக உணர்ந்தேன்.

இரவுப் பள்ளிக்கூடத்தில் அந்தப் பகுதி சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தேன். அதில் எனக்கு நிம்மதி ஏற்படவில்லை. வருவாயும் வருவதில்லை. மது போதையில் குழந்தைகளின் பெற்றோர்கள் அங்கு வந்து கேலி செய்தனர்.

மில்லில் 'ஷிப்ட்' முடிந்து இரவு வெகு நேரம் கழிந்து வரும் அவரருகே சென்றால் வயிற்றைக் குமட்டும் நெடி. சாராயம் குடிப்பதைப் பழக்கப்படுத்திக் கொண்டார்.

ஓ! நான் அதை மட்டும் பெரிதாக வெறுத்தேன். மதுவுக்கு அவர் ஏன் அடிமையாக வேண்டும்? அவரைக் கேட்டேன். சரியான பதில் இல்லை.

அவருடைய நண்பர்கள் சரியில்லை. அவருடைய சொற்பொழிவில் நான் மயங்கியிருக்கிறேன். நீ கூடப் பாராட்டியிருக்கிறாய். அவருடைய பேச்சு - இப்போது சாக்கடைப் பேச்சாகிவிட்டது. என்ன வந்து விட்டது அவருக்கு? என் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டேன்.

நான் பலமுறை சொல்லிப் பார்த்தேன். விளக்கேற்ற கேவலம் மண்ணெண்ணெய் வாங்கக் காசில்லை. பாட்டில் இல்லை. அரிசியில்லை. பருப்பில்லை. காப்பிப் பொடி - பாலைப் பார்த்துப் பல நாள்களாயின. அருகே இருந்த டீக்கடையிலிருந்து டீ வாங்கி வீட்டிற்கு எடுத்து வந்து குடிப்பேன்.

டீக்கடை நடத்தும் நாயர் என்னைப் பார்க்கும் பார்வை. என் உடலில் கம்பளிப் பூச்சியை மேய விட்டது. அவனுடைய அனுதாபப் பேச்சில் விஷம் இருந்தது. காசில்லா விட்டாலும் கடன் ஏராளமாகத் தரத் தயங்கவில்லை. எனக்கு நன்றாகப் புரிந்தது. இலவசமாகத் தன் விழிகளை என் உடல் முழுமையும் ஒட்டி நாள்தோறும் மேயும் அவன் என்னைப் பூரணமாக அனுபவிக்க விரும்பினான். சீ... - இப்படியும் இராவணர்களா?

பகலிலே, குடிசையைத் திறப்பதில்லை. பூட்டிவிட்டு - ஆ! பூட்டிச் செல்ல குடிசையுள் என்ன இருக்கிறது? என்னுடைய ஒரே ஓர் ஆஸ்தியான மாற்றுப் புடைவையையும் யாரோ களவாடிச் சென்று விட்டார்கள். நீ நினைக்கலாம்.



ஒரு வார்த்தை உன்னிடம் சொல்லியிருந்தால் இந்தக் கஷ்டங்கள் தீர்ந்திருக்கும் என்று... அங்குதான் நான் தவறு செய்தேனா? சரியாக நடந்தேனா என்று புரியவில்லை. எங்கேயாவது வேலை செய்து என் வயிற்றைக் கழுவ முடிவு செய்தேன். ஒரு நல்ல புடைவை, இரண்டு வேளை உணவு அவை போதும். ஆண் - பெண் உறவு பற்றி நிறையப் பேசுவோம். ஆனால், எனக்கு அதில் சில நாள்களிலேயே வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. அதற்காக மட்டும் என்னை நெருங்க விரும்பிய தமிழை உதறித் தள்ளினேன். அப்படித் தள்ளியிருக்கக் கூடாதோ?

அந்த நாயர்தான் ஒருநாள் சொன்னான்: "இனியும் உன்னவருக்காகக் காத்திருக்காதே. அவரு வேறு செட்அப் செய்து விட்டார். அதனால் நாம தைர்யமாக இனி இருக்கலாம்."

அப்போதே அவன் மீது அக்கினித் திராவகம் ஊற்ற விரும்பினேன். அனுடைய காமப் பேச்சிற்காக. அவன் சொன்னது பொய்யில்லை. நான் கண்ணால் கண்டுவிட்டேன். திடீரென்று ஒருநாள் பகல் வீட்டிற்கு வந்தேன். வீடு திறந்திருந்தது. யார் திறந்தார்கள் என்று கண்ணாயிரம் வீட்டிற்குச் சென்று கேட்க விரும்பினேன். அங்கே வீட்டின் உள்ளே தமிழின் குரலும் கண்ணாயிரத்தின் மனைவியின் குரலும்! சந்தோஷமாக அவள் மடியில்.. அவர்.. சீ அதை விளக்க வேண்டுமா?

மது - மாது - சூது - ஒழுக்கமின்மை நிறைந்த ஓர் ஆடவனுக்காக நான் வாழ விரும்பவில்லை. அதனால் தான் என்னை நானே காப்பாற்றிக் கொள்ள இடம் தேடினேன். கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து விடுமாறு ஒரு யோசனை கிடைத்தது. நான் சிரித்து விட்டுச் சும்மாயிருந்தேன். சாதி சமயங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவளாகத் திகழ வேண்டும் என்ற மன

நிலைமையை நான் சில நாள்களாக வளர்த்துக்கொண்டு வருகிறேன். அதற்கு மத மாற்றம் தடையாக இருக்கக் கூடாது என்று எண்ணினேன்.

தமிழ் மற்றொரு பெண்ணின் மடியில் கிடந்து மகிழ்ந்திருப்பதைக் கண்ட அன்றே, அதுவும் திருமணமான மாதின் மடியில் குதூகலிப்பதைப் பார்த்த அன்றே, மீண்டும் என் நரகக் குடிலுக்குத் திரும்புவதில்லை என்று முடிவுசெய்தேன். என்ன தமிழ் படித்தார்கள்? திருக்குறளைப் பற்றி ஆண்கள் வாய்கிழிய மேடை ஏறிப் பேசுவார்கள். நாம் அடிக்கடி பேசிக் கொள்வோமே நினைவிருக்கிறதா? திருக்குறளுக்கு உரை எழுதிய நம் கல்லூரிப் பேராசிரியையின் கணவரைப் பற்றி அவர் சொற்பொழிவாற்றப் போகுமிடங்களிலெல்லாம் ஆசைநாயகி உண்டு என்று! அவர்கள் எல்லாம் யார்? விலைமாதர் தாமா? இல்லை. அவருடைய நண்பரின் மனைவியர். அல்லது அவர் தயவுக்காக எதிர்பார்க்கும் பேராசிரியைகள். 'தமிழும்' அப்படித்தானா? சீ. நான் அப்போதே முடிவு செய்துவிட்டேன். சந்தடியில்லாமல் அங்கிருந்து நழுவினேன். அப்போதே எனக்கு உடல் நிலை சரியில்லை.

மிக அவசரமாக ஒரு டாக்டரைச் சந்திக்க வேண்டி வந்தது. அவர்தான் அறிவொளி. அவர் அப்போது வீட்டில் இல்லை. அவருடைய மனைவி இருந்தார்.

"இப்போதெல்லாம் அவர் பேஷண்ட்டைப் பார்ப்பதில்லையே அம்மா!" என்று கனிவுடன் பேசினார்.

நான் அங்கேயே சோர்ந்து உட்கார்ந்தேன். மேகலா! கடிதத்தில் சம்பவங்கள் அனைத்தையும் விவரிக்க முடியவில்லை. அங்கேயே மயக்கமுற்று வீழ்ந்ததாகப் பிறகு சொன்னார்கள். அங்கேயே அவர்கள் அன்புடன் தங்கச் செய்தார்கள்.



டாக்டர் குடும்பத்தாருக்கு என்னை மிகவும் பிடித்து விட்டது. டாக்டர் மேல் படிப்புக்காக அமெரிக்கா செல்லத் திட்டமிட்டிருந்தார். அவர் மனைவியும் மனநோய் படிப்பில் பட்டம் பெற்றவர். அவரும் உயர்ந்த ஆராய்ச்சிக்காக அமெரிக்கா செல்கிறார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். சென்னையிலேயே அவர்களை விட்டு விட்டுச் செல்ல நினைத்தனர். நான் அறிமுகமானவுடன் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள என்னையும் அவர்களுடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தனர். புறப்பட முடிவு செய்தவுடன் உன்னைத் தொலைபேசியில் அழைத்தேன். உன் தந்தைதான் பேசினார். அவர் பேச்சிலிருந்து வீட்டிலுள்ளவர்களுக்கும், உனக்கும் மனத்தாங்கல் என்பதை உணர்ந்தேன்.

தில்லி போய்ச் சேர்ந்தவுடன் இந்தக் கடிதம் எழுதுகிறேன். ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக எழுதி இதை முடித்தேன். நானே அஞ்சலகம் சென்று பதிவுத் தபாலில் சேர்த்தேன். இந்தக் கடிதம் கிடைக்கும் போது நாங்கள் தில்லி விமான நிலையத்தில் இருப்போம்.

அமெரிக்கா சென்றவுடன் உனக்குக் கடிதம் எழுதுகிறேன். ஆனால், சிறிது காலத்திற்கு நான் தங்கியுள்ள முகவரி எழுத மாட்டேன். ஏனென்றால், என் மீதுள்ள பாசத்தால் நீ அமெரிக்காவிற்குப் புறப்பட்டு வந்து விடுவாய் என்பதை அறிவேன்.

மற்றொன்று: 'தமிழைப்' பார்த்தால் சொல்லிவிடு. அவரைக் காதலித்து அவருடன் வாழ்ந்த நாள்களுக்கு நன்றி சொல்லிவிடு. மற்றொரு பெண்ணை மணந்து கொள்ளப் பிரியப்பட்டால், மணந்து கொண்டு நலமுடன் வாழட்டும். இதன் மூலம் அவருக்கு விடுதலை உறுதிமொழி தருகிறேன்.

எப்போது சந்திப்போம் என்று சொல்ல முடியாது.

மேகலா! உன் அன்பிற்கு விலை கூற முடியாது. சென்று வருகிறேன்.

உன் நேசம் மிகுந்த
*சந்திரமதி!*"

'தமிழ்' வாயில் வராந்தாவில் உட்கார்ந்திருந்தான். அவன் எதிரே வந்து நின்ற மேகலா, அந்தக் கடிதத்தை அவன் முகத்தில் வீசினாள்.

*✪*

27897
4289006